
சைவத்தமிழ் வளர்த்த பண்பாடும் கலைகளும்



ஔவை அடிப்பொடி
முனைவர் மு. கலைவேந்தன்
தொகுப்பாசிரியர்

சைவத்தமிழ் வளர்த்த பண்பாடும் கலைகளும்

"ஔவை அடிப்பொடி"
முனைவர் மு. கலைவேந்தன்
தொகுப்பாசிரியர், தமிழ்ஐயா கல்விக் கழகம்,
திருவையாறு.

அனைத்துலக
16 ஆவது சைவத் தமிழ் ஆய்வு மாநாட்டுக்
கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

தமிழ் ஐயா வெளியீட்டகம்
பதிப்பாசிரியர்: **கண்ணகி கலைவேந்தன்,**
ஔவைக்கோட்டம், **திருவையாறு–613 204,**
தஞ்சாவூர் மாவட்டம்.
கைப்பேசி : **094867 42503**

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	சைவத்தமிழ் வளர்த்த பண்பாடும் கலைகளும்
வகை	:	சமயம்
பதிப்பாசிரியர்	:	க. கண்ணகி (04362 - 260711)
முதல்பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2049 (சூலை, 2018)
பதிப்புரிமை	:	தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு
நூல் அளவு	:	டெம்மி 1x8
I.S.B.N. எண்	:	978-81-930633-3-0(V-4)
எழுத்து அளவு	:	12
பக்கங்கள்	:	488
படிகள்	:	500
கட்டுமானம்	:	சாதாரணம்
விலை	:	ரூ. 600/-
கணினி அச்சு	:	செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி
அச்சாக்கம்	:	செல்வவிநாயகம் அச்சகம், சென்னை

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் இலக்கியத்துறை, மொரிசிய மாணிக்கவாசகர் திருக்கூட்டம் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் இணைந்து **21-07-2018** அன்று நடத்திய **அனைத்துலக 16ஆவது சைவத்தமிழ்** ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

2-6

ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அருந்தமிழ் அன்னையாம் ஔவையைப் போற்றுவோம்!



ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை

ஔவை அறக்கட்டளை,
ஔவைக் கோட்டம்,
திருவையாறு.
தஞ்சாவூர் மாவட்டம்.

மாநாட்டுக் குழு

தலைவர் :	சிவனடியார் **மு.சுந்தரேசன் செங்கப்ராய்டு** மாணிக்கவாசகர் திருக் கூட்டம், மொரிசியசு
ஆலோசனைக்குழுத் தலைவர் :	முனைவர் **க.பாஸ்கரன்** துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
வரவேற்புக் குழுத் தலைவர் :	முனைவர் **செ.தேவி** இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
புரவலர்க் குழுத் தலைவர் :	மதி.முனைவர் **ஆர்.ஆர். கோவிந்தராசன்** தொழிலதிபர், வல்லம்.
அமைப்புக்குழுத் தலைவர் :	வழக்குரைஞர் **கோ.அன்பரசன்** ஔவைக்கோட்ட அறிஞர் பேரவைத் தலைமை அமைச்சர்
காப்பாளர் :	முத்தமிழ் அரசி, முனைவர் **சரசுவதி இராமநாதன்** ஔவைக்கோட்ட மதிப்பியல் தலைவர்
பொதுச் செயலாளர் :	**டத்தோ தான் ஸ்ரீகுமரன்** மலேசிய முன்னை இணை அமைச்சர்
இணைப் பொதுச் செயலாளர் :	மருத்துவர் **சு.நரேந்திரன்** தமிழ் ஐயா கல்விக் கழக மதிப்பியல் தலைவர், தஞ்சாவூர். திருப்புவனம் முனைவர் **வெ.கண்ணன்** ஔவைக்கோட்ட அறிஞர் பேரவைத் தலைமை இணை அமைச்சர்
நிதிக் காப்பாளர் :	திருமதி. **கண்ணகி கலைவேந்தன்** ஔவை அறக்கட்டளைத் தலைவர், திருவையாறு.
பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர் :	முனைவர் **நா.வி.மு. நவரத்தினம்** முன்னை இசைப்புலத் தலைவர் (ப.நி.), யாழ்ப்பாணம்
பன்னாட்டு இணை ஒருங்கிணைப்பாளர் :	முனைவர் **கோ.தெய்வநாயகம்** தலைவர், தஞ்சாவூர் தமிழ்ச் சங்கம்
மாநாட்டு இயக்குநர் :	முனைவர் **மு. கலைவேந்தன்** தமிழ் ஐயா கல்விக்கழகத் தலைவர், திருவையாறு.

நெறியாளர்கள் :

புதுச்சேரி கலைமாமணி **கல்லாடன்**
அந்தமான் முனைவர் **மா.ஐயாராசு**
காரைக்கால் **கி.இராகவசாமி**
மருத்துவர், கவிஞர் **ச.தமிழரசன்**
அரிமா. **வை.கலியபெருமாள்**
ஐயாறு **தங்க கலியமூர்த்தி**
முனைவர் **இரா.குருநாதன்**

முனைவர் **இளமதி சானகிராமன்** புதுச்சேரி
முனைவர் **இரா.இராசாமணி,** கரந்தை
முனைவர் **பா.வேலம்மாள்,** குற்றாலம்
முனைவர் **இள.மேகலா,** நாகை
முனைவர் **வாசுகி கண்ணப்பன்,** சென்னை
முனைவர் **சௌ.கீதா,** கிருட்டினகிரி
வழக்குரைஞர் **வ.அம்பிகா,** சென்னை

ஆய்வுத் தொகுதி வெளியீட்டு ஆலோசனைக்குழு

'ஐயாற்று அடிகளார்'

முனைவர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த அடிகளார்

இளையபட்டம், தருமபுர ஆதீனம், தருமபுரம்.

'தமிழ்மாமணி'

புலவர் மா. கந்தசாமி

ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை அமைச்சர், தஞ்சாவூர்.

'செந்தமிழ்மாமணி'

பெரும்புலவர் பூவை சு. செயராமன்

ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை அமைச்சர்,
செயங்கொண்ட சோழபுரம்.

'சிந்தனைச்சுடர்'

சுழல்நர் குப்பு. வீரமணி

தலைவர், திருமகள் தொழிற்பயிற்சி நிறுவனம், அம்மன்பேட்டை.

'ஔவை அடிப்பொடி'

முனைவர் மூ. கலைவேந்தன்

தலைவர், தமிழ் ஐயா கல்விக்கழகம், திருவையாறு.

பொறிஞர் கவிஞர் மூ.க. முகில்வேந்தன்

ஔவை அறக்கட்டளை, திருவையாறு.

ஆக்கப்பணி ஆளுமை

முனைவர் **சுடலி தியாகராசன்** சென்னை	**உமையாள் இராதா கிருட்டினன்** கல்கத்தா
முனைவர் **வாசுகி இளவரசு** நாகை	முனைவர் **வாசுகி கரிகாலன்** திருவையாறு

புலவர் **அ.வைத்திலிங்கம்**, செயங்கொண்ட சோழபுரம்

தோரணவாயில்



கண்ணகி கலைவேந்தன்
வெளியீட்டாளர்
தமிழ் ஐயா வெளியீட்டகம்
திருவையாறு

சைவ சமயம் தமிழரின் வாழ்வியல் நெறிகளை, பண்பாட்டுக் கூறுகளை, அறச்சிந்தனைகளை ஆக்கமளிக்கும் வகையில் உருவான தொன்மையான சமயம்; இயற்கையை வழிபட்ட தமிழரது வாழ்வில் இன்ப, துன்பங்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கடவுளர் உருவங்களும் குறிப்பாக மலைத் தெய்வமான தமிழ்க்கடவுள் முருகனையும் அன்பே கடவுளான சிவபெருமானையும் முன்னிறுத்தி தமிழர் நெஞ்சங்களில் தமிழ்ச்சமயம் சைவசமயமாக மலரத் தொடங்கியது; இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவ சமயக் கோட்பாடுகளையும் அறநெறிகளையும் உலகவர் அறியும் வண்ணம் சைவத்தமிழ் அனைத்துலக 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கத்தை திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் நடத்த முனைப்பான செயல்களில் ஈடுபட்டது.

குறிப்பாக சைவத்தை உயிர் மூச்சாகக் கருதி இன்றும் வாழ்வியல் அறமாகப் போற்றிவரும் மொரிசியசு நாட்டில் மாணிக்கவாசகம் திருக்கூட்டத்துடன் இணைந்து தொடக்கவிழா நடத்தியது; நிறைவு விழாவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையுடன் இணைந்து நடத்திடவும் கருத்தரங்கப் பயனாக தமிழ் ஆய்வாளர்கள் 320க்கும் மேற்பட்ட ஆய்வாளர்களால் படிக்கப்பட்ட கட்டுரைகள் 4 ஆய்வு மாலை நூல்களாக வெளிவருவதும் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு அரண் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சைவத்தமிழ்க் கருத்தரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பிய உள்நாட்டு, அயல்நாட்டு தமிழறிஞர்கள், பல்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரின் ஆய்வுக் கருத்துக்கள் இவ்வாய்வு மாலையில் பதிவு செய்யப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்தும் பகுத்தும் தலைப்பினைத் தந்தும் அரும்பாடுபட்டு வரும் மாநாட்டு இயக்குநர் முனைவர் மு.கலைவேந்தன் அவர்களுக்கும் பேருள்ளத்தோடு மாநாட்டுப் பணிகளுக்குத் துணை நின்று வரும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க.பாசுகரன், இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் செ.தேவி, மொரிசியசு மாணிக்கவாசகர் திருக்கூட்டத் தலைவர் மு.சுந்தரேசன் செங்கப்பிராய்டு ஆகியோருக்கும் எனது கரம்குவித்த வணக்கங்கள். மாநாடு, நூல் வெளியீடு ஆகியவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வரும் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தற்பொழுது வெளிவந்துள்ள சைவத்தமிழ் ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகளால் சைவமும் தமிழும் தழைத்தோங்கட்டும்; சமரசமான அமைதி வாழ்வு உலகம் முழுவதும் ஒளிரட்டும். நன்றி!

(ஒ.ம்.)
கண்ணகி கலைவேந்தன்

தொலைபேசி : 044-28353689
கைபேசி : 9840203478, 94454 23478

இசைபட வாழ்தல்

**வெள்ளத்தனைய மலர் நீட்டம் - மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு - குறள்**



முத்தமிழ் இசைத்திலகம்
திருக்குறளிசைத் தென்றல்
கலைமாமணி டி.கே.எசு.கலைவாணன்
சென்னை

வாழ்த்துச் செய்தி

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக
இவ்வுலகமெலாம்"**

முனைவர் மு.கலைவேந்தன் அவர்களின் பெருமுயற்சியால் ஒளவை மூதாட்டியின் பெயரும் சைவப் பெருசமயத்தின் மாண்பும் என்றென்றும் போற்றப்பெற்று வருவதைக் கண்டு பேருவகையும், பெருமிதமும் கொள்கிறேன். சைவத்திற்மேல் சமயமில்லை என்பதும் நம் சான்றோர் மொழியாகும்.

எனவே சைவத்தமிழ் மாநாடுகளை நம் நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் இந்தியாவின் வெளிமாநிலங்களிலும் நடத்திப் புகழ்பெற்றவர். நம் முனைவர் மு.கலைவேந்தன் அவர்கள்.

அவர் முயற்சிகள் வெற்றி பெறவும், சைவத்தமிழ் ஆய்வு மாலை நூல்கள் சிறந்த முறையில் வெளிவந்து, சைவத்தமிழின் புகழை உலகெங்கும் பரப்பிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க.

மிக்கநன்றி

(ஒ.ம்.)
டி.கே.எசு.கலைவாணன்

ஸ்ரீ மாருதி நவீன அரிசி ஆலை

திருமலை சமுத்திரம்



முனைவர் ஆர்.ஆர்.கோவிந்தராசன்
தொழிலதிபர்
வல்லம்

வாழ்த்துரை

பெருந்தைகயீர், வணக்கம்

திருவையாறு தமிழையா கல்விக்கழகம், கடந்த 16 ஆண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் சேவையாற்றி வருகிறது. பல்வேறு தலை நகரங்களிலும், பல்வேறு மாநிலங்களிலும், பல்வேறு நாடுகளிலும், பல்வேறு தலைப்புகளிலும், கருத்தரங்கங்களும், மாநாடுகளும், பயிற்சிப் பட்டறைகளும் நடத்தி ஆயிரத்திற்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய 100க்கும் மேலான புத்தகங்கள் அன்பு சகோதரர் முனைவர் மு.கலைவேந்தன் அவர்கள் வெளியீட்டுள்ளார்கள்.

இது மாதிரி மாநாடுகள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் தமிழில் கட்டுரைகள், புத்தகங்கள் எழுதுவதற்கு ஆர்வத்தை திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகமும், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகமும் உற்சாகப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வருகின்றன. மேலும் பல பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள், எழுத்தாளர்கள், புலவர்கள், சமூக ஆர்வலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியவர்களுக்கு விருதுகள், பதக்கங்கள், பட்டயங்கள், பரிசுகள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

25 ஆண்டுகளுக்கு முன்னரே எனக்கு திருவையாற்றில் அறப்பணிச் செம்மல் என்ற விருது வழங்கி சிறப்பித்தவர். சகோதரர் மு.கலைவேந்தன் இதன் ராசியாக எனக்கு மேலும் 16-க்கு மேற்பட்ட பட்டங்களும், விருதுகளும் கிடைத்துள்ளன. சைவத்தமிழ் மாநாடு சிறக்க என்னுடைய நல் வாழ்த்துக்கள்

(ஒ.ம்.)
ஆர்.ஆர்.கோவிந்தராசன்

அணிந்துரை

பண்பாட்டையும் கலையையும் வளர்த்த சைவ சமயம்



அந்தமான் தோழன்
முனைவர் **மா.ஐயாராசு**
கல்வித்துறை முன்னை இணைஇயக்குநர்
அந்தமான்

சைவ சமயம், சிவநெறியினைப் பின்பற்றி, சிவ பெருமானை முழுமுதற்கடவுளாக ஏற்றுக்கொண்டு தெளிவான அடையாளங்களுடன் முழுமையான சமயமாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டது. கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்ட காலங்களில் ''சுவேதாசுவதரம்'' எனும் நூலை முதன்மை நூலாகக் கொண்டு சைவசமயம் செழித்தோங்கி வளரத் தொடங்கியது.

இந்தியப் பெருங்கண்டத்தில் வடமாநிலங்களில் தழைத்தோங்கிய சைவ சமயம் நூற்றாண்டுகளில் தான் தமிழர்களால் பெரிதும் போற்றப்பட்டு வளர்ந்து சிறப்புறத் தொடங்கியது. நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆகியோரால் ஆற்றிய சமயத் தொண்டால் சைவம் தமிழகத்தில் உறுதியாக வேரூன்றத் தொடங்கியது. அறுபத்து மூவருள் முதன்மையானவர்களாய் திகழ்ந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் தேவாரம், மாணிக்கவாசகரின் திருவாசகம், சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் எனும் நூல்கள் சைவ சமயத்தின் வேதநூல்களாகப் போற்றப்பட்டன.

இப்படிச் சைவ சமயத்திற்கென்று பெரிய பாரம்பரியம் இருக்கிறது. ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெரும் சோதியாக விளங்கும் சிவபெருமானே வேத ஆகமங்களைத் தம் திருவாய் மலர்ந்து அருளினார். முத்தமிழும், மறைகள் நான்கும் ஆனவனாகிய சிவபெருமான், மாதவம் செய்த தென் திசையாகிய செந்தமிழ் நாட்டின் மேல் கொண்ட தனிப்பெரும்

கருணையினால் 12 திருமுறைகளையும், 14 சாத்திரங்களையும் தம் அருளாளர்கள் திருநெறிய தமிழில் படைப்பதற்கு அருளிச் செய்தார்.

இதே காலகட்டங்களில் தான் வைணவமும் தழைத்தோங்கத் தொடங்கியது. சைவத்திற்கு வைணவம் போட்டி என்றாலும் இச்சமயங்கள் இரண்டும் இருவேறு கோணங்களில் பயணித்தன. பன்னிரு திருமுறைகளுக்கு ஈடாக நாலாயிரத்திவ்ய பிரபந்தம் வைணவத்தைத் தூக்கிப் பிடித்தது. பன்னிரு ஆழ்வார்களின் சமயப்பணி வைணவத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாக இருந்தது.

வைணவம் ஒரு சில மேல்சாதியினருக்கே உரிமையுடைய சமயமாக இருக்க, சைவம் தான் இந்து தர்மத்தைப் பின்பற்றும் பல்வகையினரின் சமயமாக திகழ்ந்தது; திகழ்ந்து வருகிறது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தீண்டத்தாகதவர்கள் எனக் கருதப்பட்ட எல்லோரும் சைவ சமயத்தைப் பின் பற்றுபவர்களாக இருந்து வந்தனர்; வருகின்றனர்.

இன்றைக்குப் பெருமைகொள்ளும் நிலையில் தமிழர் தம் பண்பாடும் கலாச்சாரமும் மேலோங்கித் திகழ்கிறது என்றால் அவற்றை உருவாக்கி, செம்மைப்படுத்தி வளர்த்த பெருமை சைவ சமயத் திருக்கோவில்களையேச் சாரும். இன்றைக்குத் தமிழ்நாட்டில் 2500க்கும் மேற்பட்ட சிவலாயங்கள் உள்ளதாகக் குறிப்பு ஒன்று கூறுகிறது. அவற்றுள்ளும் 108 சிவாலயங்கள் வடக்கு தெற்காக ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பது ஏதோ ஒரு காரணத்தைக் கருதியே என அறிவியலாளர் கணிக்கின்றனர். இந்த ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள், வழிபாடுகள், பண்டிகைக் காலங்களில் மேற்கொள்ளப்படும் சிறப்புப் பூசைகள், திருமணம், காதுகுத்துதல் போன்ற நிகழ்வுகள் யாவும் தமிழர் தம் பண்பாட்டுக் கலாச்சார முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றியுள்ளன என்பதை மறுப்பதிற்கில்லை.

கோவில்களில் நடைபெறும் இசை, நடன, நாடக நிகழ்வுகள் தமிழகத்தின் பாரம்பரியமிக்க கலைகளை மீட்டெடுக்கவும், வளர்த்தெடுக்கவும் காரணிகளாக அமைந்தன.

இன்றைக்குப் பல்வேறு காரணிகள் தமிழர் தம் பண்பாடு, கலை, கலாச்சாரத்தைத் தகர்த்து சிதைக்க முனைவதோடு தமிழர் தம் பண்பாட்டினைத் திசை திருப்பி விரும்பத்தகாத போக்கிலே, அருவறுக்கத்தக்க வழியிலே இட்டுச் செல்கின்றன என்றால் அதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

இத்தொகுப்பில் சைவத்தமிழ் வளர்த்த பண்பாடும், கலைகளும் சைவத்தமிழ் சிற்றிலக்கியங்களும், தமிழ்ச்சான்றோர்களும், அனைத்தும் சைவ சமயமே போன்ற உட்தலைப்புகளில் தொகுக்கப்பட்டு சைவத்தமிழ் மாண்புகள் 80க்கு மேற்பட்ட ஆய்வறிஞர்களால் படைக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் அந்தப் பொறுப்பினைக் கையில் எடுத்துக் கொண்டு சைவ சமயப் பாதுகாப்பிற்கும், தமிழர் பண்பாடு, கலாச்சாரச் செம்மைக்கும் வழிகோலும் வகையில் ஆய்வு மாநாடுகளை நடத்தி, ஆய்வுக் கருத்துக்களைத் தொகுத்து நூல்களாக பதிவு செய்கிறது என்றால் தமிழ் ஐயா கல்விக் கழகத்தின் இப்பணி பாராட்டத்தக்கது.

தமிழ்ஐயா கல்விக் கழகம் வெளிக்கொணரும் இந்நூல் தமிழர்களின் அறிவுப் புலத்தைத் தட்டி எழுப்பி சைவத்தையும், தமிழர் தம் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாக்கும் கூரறிவு ஆயுதங்களாகத் திகழும் என ஆணித்தரமாக நம்புகிறேன்.

வளரட்டும் சைவம்.

பெருகட்டும் கழகத்தின் பணிகள்.

(ஒ.ம்.)

முனைவர் மா.ஐயாராசு

நன்றி மலர்கள் மணம் வீசட்டும்



முனைவர் **மு.கலைவேந்தன்**
மாநாட்டு இயக்குநர்
தமிழ்ஐயா கல்விக்கழகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு

இயற்கை எழிலும் அமைதியும் செழித்தோங்கும் அறம்வளர்த்த நாயகி உடனாய ஐயறப்பர் திருக்கோயில் அமைந்து, அப்பரடிகளுக்கு கயிலைக் காட்சி நல்கிய திருநகராகவும் நால்வராலும் பாடப்பட்ட திருமுறைத் திருநகராகவும் விளங்கும் திருவையாற்றில் ஔவைக் கோட்டத்தைத் தலைமையகமாகக் கொண்டு தமிழரது அறஞ்சார்ந்த வாழ்வியல் நெறிகளை உலகெங்கும் பரப்பிவரும் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் செந்தமிழரது சீர்மிகு வாழ்வியல் நெறிகளை அடிப்படைகளாகக் கொண்டு, இயற்கையோடு இயைந்த சைவ நெறிகளின் மாண்புகளையும், வரலாற்றுச் சுவடுகளையும் திருக்கோயில்களின் சிறப்புக்களையும் பொருண்மையாக வெளிப்படுத்தும் வகையில் சைவத்தமிழ் அனைத்துலக 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கினை நடத்தத்திட்டமிட்டது; நல்வாய்ப்பாய் பல்துறை ஆய்வாளர்களின் கட்டுரைகள் 4 ஆய்வு மாலைத் தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடுவதற்குத் துணை நின்று தமிழ் நெஞ்சங்களுக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மாநாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறுவதற்குத் துணைநின்று வரும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்து அனைத்துத்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் மொரிசியசு தமிழ்க் கூட்டமைப்புகளுக்கும் ஔவைக்கோட்ட அறிஞர் பேரவையைச் சார்ந்த அமைச்சர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக மாநாட்டுப் பணிகளுக்கு பெருந்துணைப் புரிந்துவரும் முனைவர் சரசுவதி இராமநாதன், தமிழ்ஐயா கல்விக்கழக மதிப்பியல் தலைவர் மருத்துவர் சு.நரேந்திரன், தொழிலதிபர் மதி.முனைவர் ஆர்.ஆர்.கோவிந்தராசன், அறிஞர் பேரவை தலைமை அமைச்சர் கோ.அன்பரசன், தலைமை இணைஅமைச்சர் வெ.கண்ணன், ஔவைக் கோட்ட ஒருங்கிணைப்பாளர் அரிமா. வை.கலியபெருமாள் ஆகியோருக்கும் அணிந்துரை, வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் நன்றி.

மெய்ப்புப் பணியினைத் திறம்பட செய்து கொடுத்த புலவர் மா.கந்தசாமி, புலவர் அ.வைத்திலிங்கம், முனைவர் வாசுகிகரிகாலன், முனைவர் வாசுகி இளவரசு மற்றும் பல்வகை செயல்பாடுகளுக்கும் துணைநின்று வரும் முனைவர் சி.பஞ்சநாதன் ஆகியோர்களுக்கும் கணினி அச்சாக்கிய சிவகாசி செ.நீபா, அட்டைப்படம் ஆக்கிய குடந்தை சனா.சானகிராமன், நூல்களை அச்சாக்கிய சென்னை துரைபாண்டியன் ஆகியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி மலர்களால் இவ்வாய்வு மாலையும் மணம் பெறட்டும்; சைவத்தமிழும் செழித்தோங்கட்டும்.

(ஒ.ம்.)

மு. கலைவேந்தன்

ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அருந்தமிழ் அன்னையாம் ஔவையைப் போற்றுவோம்!



ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை

ஔவை அறக்கட்டளை,
ஔவைக் கோட்டம்,
திருவையாறு.
தஞ்சாவூர் மாவட்டம்.

பொருளடக்கம்

ஆ. சிற்றிலக்கியங்களும் சைவச் சான்றோர்களும்

இ.அனைத்தும் சைவ சமயமே

I. சைவப் பண்பாட்டின் மூலக்கரு நிதியங்கள்



முனைவர் நா.வி.மு. நவரத்தினம்
மேனாள் இசைப்புலத் தலைவர்
யாழ்ப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

முன்னுரை

இறை மருத்துவமாக மிளிரும் பண்சுமந்த பாடல்கள் இசைமருத்துவமாகவும், ஆன்ம ஈடேற்றத்திற்குரியனவாகவும், அற்புதங்களின் உட்கிடக்கையாகவும், பஞ்சபூதங்களை இயற்கையை, இறைவனை, ஆன்மாவை, உயர்வர்க்கங்களை, தேவர்களை ஒரு குடைக்கீழ் கொணர்ந்து சைவத்தின் மேன்மையையும், சைவசின்னங்களது அதி உயர்வையும், சிவனடியார்களது பெருமையையும், போற்றுவார், ஏற்றுவார், புகல்வார் பெருமையையும் உள்வாங்கி, அவைச் சார்ந்த திருத்தலங்களது மகிமை கீர்த்திகளது காண்பியல் முத்திரைகளாக, கவினார் கருநிதியங்களாக பண்பாட்டினதும், பண்பாடல்களதும் முதுநிதியங்களாக, சைவநிதியங்களாக, சிவனைப் போற்றும் அரிய பெரிய நிதியங்களாக விளங்கா நிற்றல் காண்போம்.

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை. சிவமாம் தெய்வத்தின் மேற் தெய்வமில்லை என்பது அறிவார்ந்த மூதறிஞர் தம் வரைவுமுடிபும் வரலாற்று முடிபுமாகும். சிவனென்னும் ஓசையல்லாது அறையோம் உலகில் என்பார் அப்பர். தென்னாட்டு இறைவனை எந்நாட்டவர்க்கும் இறைவனாக ஆற்றுப்படுத்துவது பன்னிரு திருமுறைகளேயாம். இவையே சைவப் பண்பாட்டினதும், சைவத் தமிழிசையின் மூலக்கருநிதியங்களாகக் காணப்படுகின்றன.

காவிரிக்கரை நாகரிகம் என்பது சைவத் தமிழ் பண்பாட்டின் பெருங்களமாகும். காவிரியின் வடபாலும் தென்பாலும் அமைந்திருக்கின்ற 276 சிவாலயங்களின்

பெருமையை அங்கு நமது மக்கள் கைக்கொண்ட கலாச்சாரப் பரிவர்த்தனைகளையெல்லாம் புடமிட்டுக் காட்டும் கலைவடிவங்களே பண்சுமந்த பாடல்களாகும்.

மிடற்றிசை பாடுவோர் மரபு, ஆடல் மரபு, வாத்திய மரபு, இயற்றமிழ் அறிஞர் மரபு, இசைத்தமிழ் அறிஞர் மரபு, பாடல் பெற்ற தலங்களது புராதன பண்பாடு, அவற்றின் ஆளுநர்கள், வழிபாட்டாளர்கள் என இவை விரிந்து பரந்து ஆழமாகச் சென்றிருப்பது காணலாம். அமணர்களால் சிவவழிபாட்டுக்கு ஏற்பட்ட பேரிடர்களை எல்லாம் தவிர்த்து நமது சிவத்தமிழும், சிவச்சமயமும் ஓங்கி நிற்பதற்கு மூலமாகப் பண்பாட்டுக்களமாக இன்றும் என்றும் விளங்குவது பண்பாடல்களேயாம்.

நமது சைவசமயத்தின் தலைவன் சிவன், இவற்றின் மூலவேர் தமிழும், இசையும் அவைசார் பண்பாடுகளுமாகும். பண்பாடுகளுக்கு வளர்க்கப்பட்ட மரபே புராதன மரபாகப் பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது. இவற்றைக் கூறவந்த சிலப்பதிகாரம் கலைபற்றிக் கூறும் போது, ஆடல் பாடல் தமிழே இசையே என்று புடமிடுதல் காணலாம். மேலும்,

''யாழுங்குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுடை ஆடலொடிவற்றின்
இசைந்த பாடல் இசை என்றும் சுட்டும்''

முன்வந்து நம் பெருமை சுட்டும் தொல்காப்பியம் முல்லை முதல் ஐந்து நிலங்களையும், அங்குகண்ட பண்பாடுகளையும் சுட்டுதல் காண்போம். இங்கு ஓர் அரிய உண்மை தொல்காப்பிய சூத்திரத்தால் பெறப்படுகின்றது. இவற்றை நால்வகை உரைகண்ட உரையாசிரியர்கள் எவரும் இவ்வுண்மையைக் கலைபண்பாட்டுடன் இணைத்து தரவில்லை.

''தெய்வமுணாவே மாமரம்புட்பறை
செய்தியாழின் பகுதியொடு தொகை இ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப'' - அகத்.18

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐம்பெரும் பண்டைய பண்புகளையும், அப்பெயர் கொண்ட

யாழ்களையும், ஐவகைப் பறைகளையும் சுட்டுவதாகக் குறிப்பிடும் உரையாசிரியர்கள் தமிழிசை நுட்பங்களது தாயான சூழலைக் குறிப்பிடாதது வியப்பாக உள்ளது.

குறிப்பு : தொல்காப்பியர் சூழலையே முதலில் குறிப்பிட்டுள்ளார். இதைச் சிலப்பதிகாரம் சூசகமாகச் சூழல் வழி நின்றது யாழே என குறிப்பிடுகின்றது. இறைவன் இசையில் நாத வடிவினன். இதைச் சம்பந்தர் பெருமான் நாதன் நாமம் என்றும், மணிவாசகர் நாதன்தாள் வாழ்க என்றும் நாதா எனவும் ஈண்டும் சம்பந்தர் சுட்டுவதைக் காண்கின்றோம்.

இயற்கை வடிவினர் இறைவன். ஐம்பூதங்களில் நாதமூலமாக விளங்குவது காற்று. காற்றின் வழி 96 வகை இசைநுட்பங்களை அளந்து தருவது குழல். இது ஒலிக்கருவி. யாழ் என்பது ஓசைக்கருவி. ஒலிகளின் பண்ணுண்மையாற்றான் இசைநுட்பம் பெறும் தெய்வம் + உள் + நா = தெய்வமுணாவே என்று பொருள்கூட்டி நிற்றல் காண்க. நாதவடிவின் உள்ளாளம் வெளிப்படும். கருவி மாமரப்புள் அதாவது நெடிய மூங்கில் மரப்புள்ளில் இருந்து கிடைப்பது குழல். குழலின்; துளைவழி காற்று நாதமாகப் பன்னுட்பத்தூடு வெளிவருகின்றது. பரம்பொருளை வெளிக்காட்டும் முதல் கருவி புல்லாங்குழல். புல் + ஆம் + குழல் = புல்லாங்குழல் என ஆயிற்று. தெய்வம் வெளிப்படும் நாதரூபம் - புல்லாங்குழல். இது மாமரப்புள் எனத் தொல்காப்பியர் நிலங்களின் கருவைக் குறிக்கும் வகையல் கூறி இருப்பது துணிந்து நோக்கற்பாலது. இக்கருத்தினை உலகில் முதன்முதலாக நாம் இவ்வாய்வின் மூலம் பதிவு செய்கின்றோம்.

தொல்காப்பியர் ஒலிகளின் நுட்பமான குழலையும், ஓசைகளது நுட்பமான யாழ்வகைகளையும், தாளநுட்பங்களான பறைகளையும், ஐந்து தமிழ் நிலப்பண்ணாகச் சுட்டி உள்ளார். இதைப் பின்வந்த சிலப்பதிகாரம் குழல்வழி யாழைக் குறிக்குமாறும் சைவப் பண்பாட்டின் மூலநிதியங்களான சம்பந்தர் பாடல் முதல் ஏனைவர்கள் பாடல்களும் பாடல் வீணை, முழவம், குழல், மொந்தை என்றும், இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் என்பதால் சம்பந்தரும்,

மணிவாசகரும் யாழையும் வீணையையும் குறிப்பிடுவர். எனவே யாழின் பக்திக்காலத் தோற்றமாக வீணை என்ற பதம் யாழுக்குரியதாகின்றது என்பது தாங்கி நிற்கும் பேழையாகப் பண்சுமந்த பாடல்கள் விளங்குவதால் இவை காண்பாம். இது சைவப் பண்பாட்டோடு காணும் அரிய நுட்ப பார்வைகள் எனலாம். சம்பந்தர் பாடல்கள் அனைத்தும் யாழின் நுட்பத்துடன் அருளப்பட்டவை. சான்று திருநீலகண்ட யாழ்ப்பாணர். சைவப் பண்பாட்டில் குழல், யாழ் முழவு தமிழிசையின் மூலக்கருவாகப் பண்களுடன் இயைந்து நிற்பது காண்க.

தமிழர் பண்பாட்டின் அடிநாதம் சிவத்துடன் பண்சுமந்த பாடல்களாகச் சங்கமமாகி நிற்பது காணலாம். பரிபாடல் முருகனைப் பற்றிய பகுதிகள் சிவத்துடன் இயைந்தவை. பண்பாடிய பாணர்கள் வாதிவிடம் பாடுவார்பாக்கம் என்பதால் பெறப்படும். (7:31) தொல்காப்பியர், பரிபாடல், பண்பாடு பற்றிக் கூறுவதால், அவைக் காலத்தால் முற்பட்டதாகக் கருதலாம். தமிழ்ப்பண்பாட்டில் சிவவழிபாடு அதியுயர்ந்ததாகக் கருதப்பட்டதும் (ஆலமர் செல்வன்) குறிஞ்சியில் குமரன் வழிபாடும், பாலையில் கொற்றவை வழிபாடும் பண், தாளம், முழவு முதலியவற்றால் வேறுபடுவதுங் காணலாம்.

அகநானூற்றில் முழுமுதற் கடவுளைப் போற்றும் பண்ணாக முல்லைப்பண் (செல்வழி) செவ்வழி கட்டுப்படுதல் காணலாம். முல்லைப்பண் முருகனுக்கும், திருமாலுக்கும், சிவனுக்கும் உரியதாக நிகண்டுகள் உரைக்கின்றன. நிகண்டுகளில் இவை விரிவாகக் காணப்படுதல் காண்க. மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் திருப்பெருந்துறையில் மேவிய சிவன்மீது பாடப்பெற்றதாகக் காணப்படுகிறன்றது.

பண்டையில் தித்தன் வெளியன் என்ற சோழ மன்னன் காலத்தில் பாணர்கள் மன்னர் துயிலெழ பள்ளியெழுச்சி பாடப்பட்டதாக அகநானூறு சுட்டுதல் காணலாம். மாணிக்கவாசகரால் சிவன்மீது பாடப்பெற்ற 51 பதிகங்களில் 90% மானவை பண்ணிசையினதும், பண்பாட்டிசையினதும்

தொடக்கநிலையில் வழங்கிய பல்வேறு வகைப் பண்பாட்டைச் சுட்டி நிற்கும் பல்வகைப் பாவின்களால் இயன்று நிற்றல் காணலாம்.

உரைகல் திருத்தோணோக்கம், திருவெம்பாவாய், திருவம்மானை, திருப்பொற்றுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், திருப்பள்ளியெழுச்சி, திருப்படையாட்சி போன்றவைப் பழந்தமிழ்ச் சைவப் பண்பாட்டின் கிடைத்திருக்கும் எச்சப் பாடல்களாகும். ''மிடற்று யாழ்'' என்று பாடும் இசைமரபை நால்வர் பெருமக்களுடன் ஏனைய 23 அருளாசிரியர்களும் விரிவாகப் பண்பாட்டினூடாகச் சுட்டுவது காணலாம். சம்பந்தப் பெருமானது திருவாவூர்ப் பசுபதீசுசரப் பதிகத்தூடு முழுமையாகக் காணலாம்.

''பண்ணியல் பாடலறாத ஆவூர்ப்
பசுபதீச்சரம் பாடு நாவே
பக்திமைப் பாடலறாத ஆவூர்ப்
பசுபதீச்சரம் பாடு நாவே
பாவியல் பாடலறாத ஆவூர்ப்
பசுபதீச்சரம் பாடு நாவே''

எனப் பதிகம் முழுதும் கண்டவாறு மிடற்றிசை பாடப்பட வேண்டும் என்ற உயர் பண்பாட்டைச் சுட்டுதல் காண்க. அப்பர் சுவாமிகள், திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருவிருத்தம், திருத்தாண்டகம் என்ற இவ்விசைகள் சந்தப் பண்பாடல்களின் தந்தை. கோயிற் திருத்தாண்டகத்தில் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே எனப் பதிகம் முழுமையும், நாவை ஆற்றுப்படுத்தும் பண்பாட்டைக் காண்கின்றோம்.

புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே எனத் திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகத்தூடு மிடற்றினால் போற்றுமாறு ஆற்றுப்படுத்தும் விரித்த வண்மையைக் காண்க. சுந்தரர் நமசிவாயத் திருப்பதிகத்தில் நற்றவா உனை நான்மறக்கினும்

சொல்லுநா நமசிவாயவே எனப் பதிக முழுமையும், நாவினைப்பாட ஆற்றுப்படுத்தல் காணலாம். மணிவாசகரின் திருவாசகத்தின் அநேக பதிகங்களும் நாவினைப் பாடுமாறு சுட்டும்.

அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் திருத்தெள்ளேணம் ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ என 20 பாடல்களிலும் இதை வலியுறுத்தல் காணலாம். திருப்பொற்சுண்ணம், திருவம்மானை, திருவெம்பாவை, திருப்பொன்னூசல் ஆகிய அனைத்துப் பதிகப் பாடல்களும் சிவனைப் பாடும் பண்பாட்டைப் பணித்தல் காண்போம்.

திருவாரூர் பதிகத் திருத்தாண்டகத்தில் அப்பர் பெருமான் உடலும் உயிரும் நிலை பெறும் மார்க்கம் நம் பண்பாட்டுடன் இயைந்ததாகச் சுட்டுவர். நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா என்று நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பகுதிகள் சிந்தனைக்கும் நீடிய செயற்பாட்டிற்கும் உரியன. சம்பந்தப் பெருமானும் நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பதிகங்களைத் திருவாரூர் பெருமாள்மீது பாடியிருப்பதுங் காண்க.

பவனமாய் என்ற பதிகம் முழுமையும் இவ்வண்ணம் காண்க. பண் நட்டராகப் பதிகமூலம் திருவாரூர் ஆடல் மரபும் அதன் பண்பாடும் சுட்டப்படுகின்றது. நமது பண்பாட்டில் சிவனுக்குக் கந்த திருவாதிரை நன்னாள் திருவாரூரின் சொத்து. அப்பர் சுவாமிகள் முத்துவிதானம் எனத் தொடங்கும் ஒரு பதிகமுழுமையும் திருவாதிரைத் திருநாள் பண்பாட்டின் சிறப்புடன் கூறுதல் காணலாம். அவ்வாறு தனிப்பதிகத்துடன் காந்தாரப் பண்ணில் காணும் பாடிளம் பூதம் என்ற பதிகத்தில் ஆதிரை நாள் உகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மான் எனச் சிவனது பெருமை சுட்டுவார்.

திருப்பல்லாண்டின் இசைமரபு தழைத்திடும் திருக்கோயில்களில் சிதம்பரம், திருவாரூர் முதன்மை பெறுதல் சேந்தனார் தில்லையில் நின்று திருப்பல்லாண்டிசையைப் பாடி திருத்தேரை ஓடவைத்தார். அப்பர் சுவாமிகள்

பண்சீகாமரத்தோடு திருவாரூர் பெருமான் திருப்பல்லாண்டிசையைச் செவிமடுத்த வரலாற்றைப் பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறு பக்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டுகொண்டேன் திருவாரூர் அம்மானே என பண்டை பல்லாண்டிசை மரபின் பண்பாட்டைச் சுட்டுவார். திருவாதிரைப் பதிகத்தை

''ஒரூர் ஒழியாது உலகம் எங்கும் எடுத்து ஏத்தும்
ஆரூரன் தன் ஆதிரை நாளால் அதுடவண்ணம்''

என்று சுட்டுவது அரிய பண்பாட்டின் உயர்க்கருக்களாம். சைவப் பண்பாட்டின் சிறப்பு நாட்களாகக் கருதப்படும் தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிச்சுவாதி, ஆவணி மூலம், புரட்டாதி சனி, ஐப்பசி ஓணம், கார்த்திகைத் தீபம், மார்கழி பாலை நோன்பு, பெருஞ்சாந்தி (குடமுழுக்கு) எல்லாம் சைப் பண்பாட்டின் பெருவிழா நாட்கள், இவற்றையெல்லாம் பண்சுமந்த பாடல்கள் விரிவான கருமூலங்களாகக் கொண்டுள்ளமை காண்போம்.

அன்றியும் 63 மெய்யடியார்கள் சிறப்பு 27 திருமுறை ஆசிரியர்களது சிறப்பு வரலாறு, சிவனது பேரற்புதலீலைகள், தலங்களது வரலாறு, மகிமை, வழிபாட்டின் வகைகள், தொன்மைகள், வழிபாட்டின் பயனும் பதிக இசைகளின் பலன்களும் இப்பாடல்கள் வாயிலாகப் பண்சுமந்த பதிக வாயிலாக மிகச் சிறப்பாக என்றென்றும் தெரிந்து கொள்ளவும், போற்றவும், ஏற்றவும் முடியும். சைவமக்கள் இவற்றை உலகமெங்கும் போற்றிட இம்மாநாடு உதவ வேண்டும். சைவப் பண்பாடு என்பது மிக ஆழமானது, அகலமானது, நீளமானது அதியுயர் சிறப்பின் நுட்பகலமும் கொண்டு பேராட்சியாக உலகமெங்கும் விரிந்து காணப்படுகின்றன. இவை மிக நீண்ட ஆய்வின் பாற்பட்டது. இப்பண்பாட்டின் மூலமாகக் கலை பண்பாடுகள் கவின்பெற்ற மிகச் சிறிய பகுதிகளைப் பார்த்தோம். விரிக்கின் பெருக்கும்.

''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திரு ஐயாறகலாத செம்பொற் சோதி
நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க''

2. அப்பர் பாடல்கள் சுட்டும் சைவ வழிபாட்டு நெறிமுறைகள்



நவரத்தினம் பரந்தாமன்
விரிவுரையாளர், இசைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

முன்னுரை

தேவார மூவர்களில் காலத்தால் மூத்தவரும், நீண்ட காலங்கள் வாழ்ந்து சைவப் பண்பாட்டையும், சிவனின் அரிய பெருமைகளையும் உலகில் எடுத்துக் காட்டியவரும், அப்பர் சுவாமிகள் என்பது அவர் பாடிய பாடல்களது வரலாற்றில் அறியமுடியும். 108 பண்களிற் காணப்பெறாத புதிய இசைவடிவங்களான திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை எனும் தமிழிசை முதுமை வடிவங்களின் சொந்தக்காரர் அப்பர் சுவாமிகளே.

உலகியல் வாழ்வின் பேரனுபவங்களைத் திரட்டி, பண்பாட்டின் மூலங்களைத் திரட்டி அவர் பாடலடிகள் காணப்படுகின்றன. இவர் பாடிய சிவப்பண்பாட்டின் நிலைக்களனான பதிகங்கள் நாற்பத்தொன்பது ஆயிரம். அவை ஐந்து லட்சங்கட்கு கிட்டிய தமிழிசைப் பாடல்கள், கிடைத்திருப்பவை சிறியளவிலான 313 பதிகங்கள் மாத்திரம். பண் கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தார பஞ்சமம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி என்ற 10 பண்களுடன் மேற்கண்ட இயலிசை விகற்பம் நான்கையும் குறித்த 313 பதிகங்களோடு பாடியுள்ளார்.

கோயில்களிற்கெல்லாம் கோயிலான சிதம்பரத்தில் இறைவன் திருநடனம் என்பது பண் உண்ட பாடலுடன் இயைபு பெறுவதாகப் பண்டைப் பண்பாட்டைப் "பண் உண்ட பாடலொடும் பரமநீ ஆடுமாறே" என்று சுட்டுதல் காணலாம். திருக்கழிப்பாலைப் பதிகத்தில் திருநேரிசையில்,

''பண்ணினைப் பாடவைத்தார்'' என்றும்

''பக்தர்கள் பயில வைத்தார்'' என்றும் சுட்டுவர்

தமிழர்கள் சைவர்கள் பண் பதிகங்களைப் பயில வேண்டும். பயின்றுதான் இறைவன் விரும்புமாறு பாட வேண்டும் என்ற அரிய கருத்தை உலகில் வாழும் தமிழ்ச் சைவர்கட்குப் புகட்டுதல் காணலாம். சிவனாம் செல்வனை நம் இறைவனைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாட்கள் என்றும் போற்றாத நாள் எல்லாம் ஆற்றநாள் என்றும் சுட்டுவர். வேளூர் பதிகங்களில் இவற்றைக் காணலாம். வாழ்த்துதல் நமது வாழ்வின் பயன் என்பது சிவனைத் திருமணச்சேரி திருக்குறுந் தொகையாற் பெறப்படும்.

''வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

அன்புக்கு இலக்கணம் கண்ணப்பர் இதை மணிவாசகர்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்''

எனத் திருவாசகத்தில் பின்னாள் பதிவு செய்தார். அப்பரோ திருக்குறுக்கை வீரட்டான நேரிசையில்,

''காப்பதோர் வில்லும் அம்புங்கையதோர் இறைச்சிப்பாரம்

தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க்கலசம் சூட்டித்

தீப்பெருங் கண்கள் குருதிநீர் ஒழுகத்தன் கண்

கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனாரே''

அன்பால் மாத்திரம் இறைவனை அடையலாம் என்ற உண்மையை அப்பர் தெளிவாகக் கண்ணப்பர் மூலம் சுட்டுவர். உண்மை அன்பை உடையவரே உலகை அளந்த பெருமானை அருமையாகக் கண்டிடுவர். அல்லார் காணார் காணாரே என்பது மூதின்வாக்கு. திருநெய்த்தான திருநேரிசையின்கண் ஐயாறுபுக்கார் வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயில் உள்ளார் என்று கூறுவதில் நின்றும், பண்ணொன்ற இசைபாடும் அடியார்களாம் ஓதுவார் மூர்த்திகளது திருவாயில் சதா, சதானந்தத் தாண்டவம் சிவன் புரிவது மேலும் அவரது திருத்தாண்டகத்தின் மூலம், வாயாரத் தன்னடியே பாடும்

தொண்டர் இனத்தகத்தான் என்று அழுத்தமாகச் சுட்டுதல் காணலாம்.

மாயமாம் இவ்வுலகில் இறைவனைச் சிந்தியாது தொண்டரை அவமதித்து நடக்கும் இக்கலியின் கொடுமையை மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே நாட்டும் பொய்யெல்லாம் பேசிடும் நாணிலீர் என இன்றைய சமூகத்தைச் சுட்டும் பாடலைத் திருக்காட்டுப்பள்ளிக் குறுந்தொகை மூலம் சுட்டுதல் இன்றைய சைவப் பண்பாடு என்ற போலித்திரைக்குத் தக்க சான்றாகும். திருநல்லம் திருக்குறுந்தொகை மூலம் சைவர்கள் வாழ்வு எப்படி அமைதல் வேண்டும் என்பதைப் பொக்கம் பேசிப் பொழுது கழியாதே, பிணிகொள்வர் குழற்பேதையர் காதலால், உரை தளர்ந்து உடலார் நடுங்காமனம், பரவுமின், பணிமின், பணிவாரொடு விரவுமின், விரவாரை விடுமின், காலமான கழிவதன் முன்னமே ஏலுமாறு வணங்கி நின்றேத்துமின் என்பது சிவன் அடியார்க்கு உணர்த்தும் பாவுரைகளாகும்.

திருவாரூர் திருத்தாண்டகத்தை நோக்குங்கள் இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா. செடியேறு தீவினைகள் தீரும் வண்ணம் சிந்தித்தே நெஞ்சமே, நிலை பெறாமல் எண்ணுறுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிடுவாய், புண்ணியமும் நன்னெறியும் ஆவதெல்லாம் இது கண்டாய் பொருந்தக் கேள் நீ இழைத்த நாள் எல்லை கடப்பதென்றால் இரவினோடு நண்பகலுமேத்தி வாழ்த்திப் பிழைத்ததெல்லாம் பொறுத்தருள் செய் பெரியோய் என்றும் அழைத்து அலறி ஆரூரனை வேண்டுங்கள் என்பார். மேலும் பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில், பரகதிக்குச் செல்வதொரு பரிசுவேண்டில், சுற்றி நின்ற சூழ்வினைகள் நீக்க வேண்டில் செல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம் உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும், உன்னையல்லால் வேறு தெய்வம் உள்கேனென்றும் புற்றவரக் கச்சார்த்த புனிதா என்றும் பொழில் ஆரூரா ஆரூரா

என்று போற்றுவாயாக என்றும் சுட்டுதல் காணலாம்.

மனித்தற் பிறவியரியது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? என்பர் வள்ளலார். இனித்தமுடைய எடுத்தபொற்பாத தரிசனம் என்பது மனிதப் பிறவியின் வேண்டுகை என்பது குனித்த புருவமும் என்ற கோயிற் திருவிருத்தத்தால் அறியலாம். அப்பர் சுட்டும் உருவ வழிபாடு மானுடர் மூலம் எவ்வாறு பேணப்படல் வேண்டும். அவை வருமாறு,

தலையே நீ வணங்காய்
கண்காள் காண்மின்களோ
செவிகாள் கேண்மின்களோ
மூக்கே நீ முரலாய்
வாயே வாழ்த்து கண்டாய்
நெஞ்சே நீ நினையாய்
கைகாள் கூப்பித் தொழீர்
ஆக்கையாற் பயனென்
கால்களாற் பயனென்
உற்றார் ஆருளரோ
இறுமாந்திருப்பன் கொலோ
தேடிக் கண்டு கொண்டேன்

என்ற பன்னிரண்டு படிகளில் பாடல்கள் வழிபாட்டின் பண்பாட்டை, பயன்பாட்டை, செயற்பாட்டை சுட்டி நிற்றல் காணலாம். நாம் தாங்கி வாழும் இரு விசும்பாகிய பூமித்தாயிடம் நீண்டகாலம் சர்வ சௌபாக்கியங்களோடும் வாழ விழைப்பாவர்க்கு ஓர் அறிவித்தல் அப்பரால் பண்பாடல் என்ற பண்பாட்டோடு தரப்படுகின்றது.

தந்தை யார்? தாய் யார்? உடன் பிறந்தார் யார்?
தாரம் யார்? புத்திரர் யார்? தாம் யாரோ?
வந்தவா றெங்கனே போமாறும் ஏதோ மாயமாம்
இதற்கு ஏதும் மகிழ வேண்டாம், சிந்தையீர்
உமக்கு ஒன்று சொல்லக் கேண்மின்

திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்று எழுவார்க்கு இரு விசும்பில் இருக்கலாமே

இதுவே சைவப் பண்பாட்டின் அப்பர் பாடல் சுட்டும் மூலக்குறியீடாகும். நமது உடல் இரண்டு யாழ்களைக் கொண்டு இயங்குவது. ஒன்று சரீரம் என்ற யாழ் இரண்டாவது சாரீரம் என்ற யாழ். இந்த சாரீர யாழ் என்பது நாதன் தங்கும் கருவறை. இக்கருவறையில் 96 வகை நாதநுட்பங்கள் உறங்கும். இவை மூலாதாரம், மேலாதாரம், உந்தி, இருதயம், கண்டம், உச்சி வரை வியாபகம் கொண்டவை. இந்த சாரீர யாழில் தலை மிகப் பிரதானமானது. ஏழுவாயில்களின் மூலக்கருவிடம், நாதன் நாமம் ஓங்கி ஒலிக்கும் ஓசைகளின் களம் கண்டம் எனப்படும் மிடறாகும். இந்த மடற்றில் உயிர், மெய், உயிர்மெய், ஆயுதம் என்ற தமிழின் 216 எழுத்துக்களும் பண்பாடல்களோடு களிநடம்புரிவதைக் காணலாம். தேவார மூவர் பாடிய பண்பாடல்களும், நமசிவாய பதிகங்களும், உடற்கும், உயிர் வர்க்கங்களுக்கும், உள்ளத்திற்கும் உறுதி பயப்பன. திருமகள், கலைமகள், சயமகள், புவிமகள், புகழ்மகள் மருவும் களமாக ஒவ்வொரு சைவ தமிழர்களதும் மிடறு விளங்கா நிற்றல் தமிழோடிசை பாடுதலாற் பெறப்படும். இவை நாம் கண்ட பேரனுபவமாகும்.

இவற்றை விரிக்கிற் பெருக்கும் தன்மையன. திருவங்கமாலை என்ற பதிகமூலம் சைவமக்கள் ஒவ்வொருவரும் காணவேண்டிய சிந்தித்து செயற்பட வேண்டிய பகுதிகள் இரத்தினச் சுருக்கமாகப் பண்பாட்டில் காணப்படுவது அப்பர் பாடல்களில் மாத்திரம் கிடைக்கின்றது.

3. சைவத்தை வளர்த்த சான்றோர் வாழ்வியல் நெறிகள்

முனைவர் கோ.எவாஞ்சிலின் சோன்சு சாய்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மகளிர் கிறித்தவக் கல்லூரி
சென்னை

முன்னுரை

மனிதனின் வாழ்வை செம்மைப்படுத்த வேண்டும். நல்வழிப்படுத்த வேண்டும், நெறிப்படுத்த வேண்டும் எனும் பயன்கருதிப் படைக்கப்பட்டவைகள் இலக்கியங்கள் அந்நோக்கமின்றிப் படைக்கப்பட்டவைகள் இலக்கியங்கள் ஆகாது. அவைப் பெயரளவில் நூல்வடிவம் பெற்றாலும், காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு அழிந்துவிடும். எனவேதான் சான்றோர் இலக்கியங்கள் என்பவை, நம் வாழ்க்கையைக் கண்முன் காட்டும் காலக்கண்ணாடி என்றனர். நாம் நல்வாழ்வு வாழ, சான்றோர் கூறும் வாழ்வியல் நெறிகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம். நம்மால் இயன்ற அளவு நல் அறங்களைச் செய்து, இறைவன் அகமகிழ நாம் இன்புறுவோம்.

இன்பமே இறைவன்

நாம் உலகத்தில் இன்பமாக வாழவேண்டுமென்றால் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். உலகில் துன்புறுவோர்க்கு இன்பம் கிட்டப் பணிபுரிய வேண்டும். உள்ளமொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், கடுஞ்சொற்கள் பேசுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். குற்றமற்ற செயல்களையே செய்ய வேண்டும். தன்னலத்திற்கான செயல்கள் நம்மை அணுகாதபடி பாதுகாக்க வேண்டும். நாம் இறைவனை எப்பொழுதும் நாவால் துதித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதைத் திருஞானசம்பந்தர்,

> ஒல்லை ஆறி, உள்ளம் ஒன்றிக், கள்ளம் ஒழிந்து, வெய்ய
> சொல்லை ஆறித் தூய்மை செய்து, காமவினை அகற்றி

நல்லவாறே உன்றன் நாமம் நாவின் நவின்றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவல மேயவனே

என்ற இப்பாடல் வாயிலாகத் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனத்தில் இறைவன்

இறைவன் தங்கும் ஆலயமாக, நாம் நமது உள்ளத்தை இறைவனுக்குத் திறந்து கொடுக்க வேண்டும். இறைவனை உள்ளத்தில் நினைப்பார்க்குத்தான் நன்மை உண்டு. அதைத் தவிர்த்து விட்டு, நாம் எவ்வளவு தான் வேதங்களை நாள்தோறும் ஓதினாலும், பல சாத்திரங்களைப் பெரியோர்கள் சொல்லக் கேட்பதாலும், பல நீதி நூல்களையும் தினமும் படிப்பதாலும் நமக்கு எவ்வித பயனும் இல்லை என்பதை,

''வேதம் ஓதில் என்? சாத்திரம் கேட்கில் என்?
நீதிநூல் பல நித்தம் பயிற்றில் என்?
ஓதி அங்கம்ஓர் ஆறும் உணரில் என்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே''

என்று திருநாவுக்கரசர் விளக்கியுள்ளார்.

பசித்தவனுக்கு அன்னம்

நம்மில் சிலர், பசித்தவன் முகம் பார்த்து, மனம் இரங்கி அவன் பசியாற்ற மாட்டார்கள். ஆனால் கோயிலுக்குச் சென்று அங்குள்ள தெய்வத்திற்கு ஆடம்பரமாக அபிசேக ஆராதனை செய்வர். இவர்களது கருத்து யாதெனில் பசித்தவனுக்குச் சோறிட்டு அவன் பசியாற்றுவதால் நமக்கு என்ன பயன்? கடவுளுக்கு (அபிசேக ஆராதனை) வழிபாடு செய்தால் இறைவன் அகம் மகிழ்ந்து நமக்கு நன்மை அளிப்பார் என்பதேயாகும். ஆனால் உண்மையாகச் சொல்லப்போனால் ஏழைகளின் பசியாற்றுவதே இறைவனுக்கு நாம் செய்யும் தொண்டாகும். இவையே அறங்களின் சிறந்த அறமாகும் என்று,

''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்

படமாடக் கோயிற் பகவற்க தாமே''

திருமூலர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஏழைகளுக்கு அறிவுரை

அறம், செல்வந்தர்களால் மட்டுமே செய்ய முடியும் என்றும், நம்மிடம் அறம் செய்ய பொருள் இல்லை என்று எண்ணக் கூடாது. மலர் வாங்கி இறைவனை வழிபட முடியாத ஏழைகளாலும், வில்வம் முதலான பச்சிலைகளைக் கொண்டு வழிபட முடியும் அல்லவா? அன்னதானம் செய்து புண்ணியம் ஈட்டிக்கொள்ள பொருளில்லாவிட்டாலும், பசுவின் பசிக்குப் பக்கத்திலுள்ள புல்லில் ஒரு பிடி பறித்துக் கொடுக்க முடியும் அல்லவா? என்பதை,

''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை''

என்று அடிகளில் திருமூலர், திருமந்திரத்தில் நம்மால் முடியாது என்று சாக்குப் போக்கு சொல்லக்கூடாது. ஏழைகளாலும் அறம் செய்ய முடியும் என்பதை உணர்த்துகிறார்.

மனத்திற்கு அறிவுரை

உலகத்தில் உள்ள செல்வங்கள் எல்லாம் நிலையற்றவை, அழிந்து போகக்கூடியவை. ஆகையால் பசியால் வருந்துபவர் முகம் பார்த்து, இரக்கங்கொண்டு அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். நாம் எப்பொழுதும் உயர்ந்த ஒழுக்கமும், அறிவும் உள்ளவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் நடுவுநிலைமை தவறாமல், வெற்றி, தோல்விகளைக் கண்டு அஞ்சாமல் நமது கடமையைச் செம்மையாய்ச் செய்ய வேண்டும் என்பதை,

ஒன்று என்று இரு; தெய்வம் உண்டு என்று
இரு; உயர் செல்வம் எல்லாம்
அன்றுஎன்று இரு; பசித் தோர்முகம்
பார் நல் அறமும் நட்பும்
நன்று என்று இரு; நடு நீங்காம

லே ; நமக்கு இட்டபடி
என்று என்று இரு; மனமே உனக்கே
உபதேசம் இதே

என்ற பாடல் வாயிலாகப் பட்டினத்தார் கூறியுள்ளார். மேலும் மனிதர்களை நம்புவது வீண். நமது உறவினர் தான் நம்மைக் காப்பாற்றுவார் என்ற உறவின் மீது நம்பிக்கையுடையவராய் இல்லாமல், இறைவனோடு பற்றுடையவராய் இருத்தல் அவசியம். எனவே மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரை, மக்கள் நெருங்கிய சந்தையில் கூடும் கூட்டத்தைப்போல் நினைக்க வேண்டும். இவ்வுறவானது, செல்வத்தைக் குடத்திலிருந்து கவிழ்ந்துவிட்ட தண்ணீரின் ஓட்டம்போல் மறைந்துவிடும் என்பதைப்

''பொல்லா
உடலை அடர்ந்த சந்தைக்
கூட்டம்என் றேஇரு சுற்றத்தை
வாழ்வைக் குடம்கவிழ்நீர்
ஓட்டம்என் றேஇரு நெஞ்சே
உனக்கு உபதேசம் இதே''

என்ற அடிகளின் வாயிலாகப் பட்டினத்தார் குறிப்பிட்டுள்ளார்

செல்வந்தர்க்கு அறிவுரை

பட்டினத்தார், நாம் செல்வம் பெற்றதின் பயன் பிறர்க்கு உதவுவதே என்பதை,

''அன்னம் பகிர்ந்திங்கு அலைந்தோர்க்கு உதவி செய்யும்
சென்மம் எடுத்தும், சிவன்அருளைப் போற்றாமல்
பொன்னும், மனையும், எழில் பூவையரும், வாழ்வும் இவை
இன்னும் சதமாக எண்ணினையே நெஞ்சமே''

என்னும் இப்பாடல் வாயிலாகப் பணத்திலே பற்றுக்கொண்டு, செலவிடாமல் சேர்த்து வைப்போரைத் தட்டி எழுப்புகிறார். செல்வத்தைப் பெற்றிருந்தும் வறியவர்க்கு உதவிசெய்து, இறைவன் அருளைப் பெறாமல் பொன், மனைவி, மண் ஆகிய

இவையெல்லாம் அழியாதவை என்று நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. மக்களுக்குச் செய்யும் உதவிதான் இறைவனுக்கு நாம் செய்யும் மிகப்பெரிய பணி, தொண்டு, உதவி எனலாம். மனிதர்களிடம் இரக்கம் காட்டாமல் கடவுளிடம் அன்பு வைக்கிறேன். கடவுளை வணங்குகிறேன் என்பவர்கள் உண்மையான தெய்வத்தை உணராதவர்கள் ஆவார்.

மகழ்ச்சியான வாழ்வு

நம் மனத்தை அடக்கி ஆளும் ஆற்றல் நமக்கு வேண்டும். நான் என்று அகங்காரம் ஒழிய வேண்டும். இந்த அகந்தையாகிய பிறவிப் பிணியை ஒழிக்கின்றவனே உயர்ந்த மனிதன் ஒருவனால் தனியாக எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எந்த ஒரு காரியத்தையும் பலருடைய உதவியால், கூட்டுறவால் தான் நிறைவேற்ற முடியும். இந்த உண்மையை உணர்ந்தவர் செருக்கடைய மாட்டார்கள். மேலும் தேவையற்ற ஆசையை ஒழிக்க வேண்டும். போதும் என்ற மருந்தே பொன் செய்யும் மருந்து என்பதை உணர்ந்து நிறைமனத்துடன் வாழ நம்மை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் ஒருவருக்கு ஈகைக்குணமும், இரக்க சிந்தையும் மிகவும் அவசியம். இவை இரண்டும் இரட்டைப் பிள்ளைகள் எனலாம். மேலும் ஒழுக்கம், முயற்சி, உறுதி இவை மக்களுக்கு மிகவும் இன்றியமையாதது. பிறருக்கு தீங்கு நேராமல் வாழ்க்கை நடத்துவது ஒழுக்கமாகும். தொடங்கிய செயலை எவ்வித இடையூறுகளுக்கும் அஞ்சாது செய்து முடித்தல் முயற்சியாகும். இன்ன காரியத்தைச் செய்து முடிப்பேன் என்று தீர்மானிப்பது உறுதியாகும். மேலும் பிறர் கேட்கும்படி நல்லுரை கூறுதல், ஆனால் தான் மட்டும் நல்வழியில் நடக்காதிருத்தல், இக்குணமுடையவர் மதிக்கப்படமாட்டாதர்கள். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். வெவ்வேறு செயல் வேறு என்று வாழ்கின்றவர்களைவிடத் தீயவர்கள் வேறுயாரும் கிடையாது என்பதை,

எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என்
இதயமும் ஒடுங்கவில்லை
யான் எனும் அகந்தைதான் எள்அளவும் மாறவில்லை

யாதினும் அபிமானம் தான்
சித்தமிசை குடிகொண்டது; ஈகையொடு இரக்கம் என்
சென்மத்தும் நான் அறிகிலேன்
சீலமொடு, தவம், விரதம் ஒருகனவில் ஆயினும்
தெரிசனம் கண்டும் அறியேன்
பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன்; பிறர் கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்
பொருந்திடாப் பேதைநானே
அதனைக் குணக்கேடர் கண்டதா கேட்டதா
அவனிமிசை உண்டோசொலாய்
அண்டபகிர் அண்டமும் அடங்கஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே

இப்பாடல் வாயிலாகத் தன்னலம் துறந்து, ஒழுக்கமுடன் வாழும் மக்களே ஆனந்த வாழ்வு முடியும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார் தாயுமானவர்.

முடிவுரை

சான்றோர்கள் தாம் வாழ்ந்த வாழ்க்கையைப் படிக்கும் அன்பர்க்கும் எளிதில் புரியும் வண்ணம், எளிமையான வழியல் எடுத்தோதியுள்ளார். படிக்கும் அன்பர்களின் மனத்தைச் செம்மைப்படுத்துவதே அவரின் நோக்கமாக உள்ளது. சான்றோர்கள் வாழ்ந்து வந்த நல்வாழ்வினை இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறியமுடிகிறது.

4. சைவத்தமிழ் நெறி வளர்த்த ஆன்மீக பெண்களின் வாழ்வியல் மாண்புகள்

முனைவர் தெ.வாசுகி
தமிழ்த்துறைத் தலைவர்
அ.து.ம. மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
நாகப்பட்டினம்

முன்னுரை

திருத்தொண்டர் புகழை உலகறியச் செய்த மகான் திருவாளர் அமைச்சர் சேக்கிழார். பக்திச்சுவை மிகச் சொட்ட சொட்ட அறுபத்து மூவர் நாயன்மார்களின் வரலாற்றைப் பன்னிரெண்டாம் திருமுறையாக உலகுக்கு அப்பெருந்தொண்டர் வழங்கினார். உலகெலாம் என தொடங்கும் அந்த அழகிய தமிழ்க் காவியம். உண்மையான . தொண்டின் சுயநலமற்ற சேவையின் ஆக்க சக்திகளுக்கு ஊக்கமளிக்கும் அரும்பணியின் சிறப்பைத் தீந்தமிழ் விருத்தப் பாடல்களால் விரிவாக எடுத்துரைக்கின்றது. அறுபத்து மூவரில் 37 பேர், சோழநாட்டைச் சேர்ந்தவர்கள். மீதி 26 பேரில் மழநாடு-3, நடுநாடு-8, கோனாடு-1, தொண்டைநாடு-7, பாண்டிநாடு-5, மலைநாடு-2 ஆகிய நாட்டைச் சார்ந்தவர்கள். உள்ளனவாகி இவற்றில் சோழநாட்டைச் சார்ந்த வணி குலத்தில் ஆவணி மாதத்தில் மூலம் நட்சத்திரத்தில் பிறந்த புனிதவதி என்ற காலைக்கால் அம்மையார் பற்றியும் நடுநாட்டை சேர்ந்த வேளாளர் குலத்தில், திருவாமூரில் பிறந்த திலகவதியார் வாழ்வியல் பற்றியும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளமையும் பக்திநிலையும்

சோழநாட்டின் கடற்கரையில் கடற்சங்குகளால் வளம் பெற்றுத் திகழும் காரைக்கால் நகரிலே அறநெறி தவறாத வாய்மையிற் சிறந்த பெரும் வணிகர் குலத்தலைவர் தனத்தத்னார். திருமவதி ஆகியோருக்கு மகளாகப் பிறந்தவர் புனிதவதியார். திருமகளைப் போன்ற பேரழகு உடைய தளிர் நடை பயிலும் குழந்தைப் பருவத்திலிருந்தே சிவபெருமானின்

திருவடிகளை வணங்கும் இயல்புடையவள். மனத்தில் எப்பொழுதும் சிவனைப் பற்றியே எண்ணுபவர். தோழிகளுடன் விளையாடும் போதெல்லாம் சிவனைப் பற்றியச் சொற்களையே பேசுவார். அத்துடன் சிவனடியார்களைக் கண்டு விட்டால் உடனே வணங்கி மகிழ்வார்.

''இறைவனே எவ்வுயிருந் தோற்று விப்பான் தோற்றி
இறைவனே ஈண்ட இறக்கம் செய்வான் இறைவனே
எந்தாய் என இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம்
வந்தால் அது மாற்றுவன்''

என இறைவனையே முழுமுதற் கடவுளாகக் காணுபவர். மண்ணின் துகள்களான புழுதியைத் தவிர வேறு துகளான குற்றம் ஏதும் இல்லாத திருமுனைப்பாடி நாட்டிலே இலக்குமி வாழும் திருவாமூரில் வேளாளர் மரபில், குறுக்கையர் குடியில், புகழனார் மாதினியார் இணையருக்கு மகளாகத் திருமகளைப் போன்ற திலகவதியார் பிறந்தார். சீரும் சிறப்புமாக வளர்ந்து பன்னிரண்டு வயதை அடைந்த பிறகு தந்தை புகழனார் வேளாளர் குல தலைவராகச் சிறந்து விளங்கிய கலிப்பகையாருக்கு மனம் பேசி முடித்தார். கலிப்பகையார் சிவபெருமானுக்கு மெய்யடிமைத் தொண்டு புரிபவர்; மன்னரிடம் அன்பு கொண்டவர்; போர் புரிவதில் ஆண் சிங்கத்தைப் போன்றவர்; பேரழகு உடையவர். இத்தகு பேரழகும் பேரன்பும் பெரும் சிவபக்தியும் உடைய கலிப்பகையார் திலகவதியாரை மணம் புரிய விருப்பம் கொண்டார். இச்சமயத்தில் தான் வடபுலத்தில் மூண்ட போருக்கு சேனாதிபதியான கலிப்பகையார் போர்க்களத்திலே இறந்துபோனார். பெற்றோர்களும் இறந்து விட்டார்கள். இந்நிலையில் தம்பியார் மருள்நீக்கியாருக்காகவே தன்வாழ்வை அர்ப்பணித்து சிவசின்னங்களை அணிந்து, அணிகலன்களைத் துறந்து, சிவன் பக்தியால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு அருள் காட்டி மனையிலிருந்தவாறே மாதவம் செய்து வந்தார். மனைக்கு விளக்கு,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை''

என்ற குறளுக்கு ஏற்ப புனிதவதியார் பெற்றோர் நாகப்பட்டினத்தில் இருநிதி செவ்வனாய் விளங்கிய பரமதத்தனுக்குக் கடிமணம் செய்து வைத்தனர். இருவரும் கருத்து ஒருமித்து அறவோர்களித்தலும், அந்தணரோம்பியும் துறவோரைப் போற்றியும் இல்லறத்தை இனிது நடத்தி, கடமைகளைச் செவ்வனே செய்து மனைக்கு விளக்கமாய்த் திகழ்ந்தார். இந்நிலையில் சிவனை நினைப்பது. வழிபடுவது இவரது அன்றாட நிகழ்வுகளாகும். கணவனின் இல்லத்தில் வீட்டிற்கு வரும் சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்து செழும்பொன், பொருள், ஆடை நல்கி, சிவனை நிந்தையில் இருத்தி பக்தி உடையவராய் வாழ்ந்துவந்தார்.

''அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும்
அருள் தாங்கி அருள்தாங்கி இம்பர் மாத்தவம்
புரிந்து திலகவதியாரிருந்தார்''

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப வீட்டில் இருந்தே தொண்டு புரிந்த திலகவதியார். போரிட சென்ற கலிப்பகையாரும் இறந்தார் என செய்தி கேட்டு தானும் உயிர் நீக்க துணிந்தார். தம்பி மருள்நீக்கியார் திருவடியில் அழுது புலம்பவே சிவசின்னங்களை அணிந்து, அணிகலன்களைத் துறந்து, தம்பி உயிர் வாழ வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்டு,

''தம்பியார் உளராக வேண்டுமென வைத்த தய
உம்பர் உலகனைய வுறுநிலை விலக்க உயிர்தாங்கி''

திலகவதியார் உலகின் நிலையாமையை உணர்ந்து நல்லறங்கள் செய்தார். திருமணம் ஆகாமல் இங்ஙனம் திருமணம் பேசி முடித்த கலிப்பகையார் மனைவியாகவே இல்லறம் இன்றி நல்லறம் புரிந்து மனைக்கு விளக்கமாக வாழ்ந்தார்.

இறைத்தொண்டு

புனிதவதியாரின் இறைப்பக்தியை அறிந்த பரமதத்தன் தெய்வத்தன்மை உடைய இவருடன் வாழமுடியாது என எண்ணி

பயந்து மறுமணம் செய்து கொண்டு வாழ்ந்தான். இதனை அறிந்து புனிதவதியார் இறைவனிடம் வேண்டி இப்பூதவுடல் நீங்கிப் பேய் உடல் பெற்று இறைவன் எழுந்தருளியுள்ள சிவன் கோயில்களான திருக்கயிலை, திருவாலங்காடு சென்று இறைவனின் நெருங்கிய உறவினராக சிவகணங்களுள் ஒன்றாய் அருகிலிருந்து இறைவனின் நடன கோலம் கொண்டு இன்புற்று வாழ்ந்தார். இந்நிலையில் கணவனுக்காக தான் தாங்கிய அழகுடன் கூடிய உடலின் தசை நீக்கி வானமும் நிலமும் வணங்கும் பேய் வடிவம் ஏற்று நெருங்கிய உறவினரும் வணங்கி செல்லத்தக்க நிலையில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுபட்டு இறைத்தொண்டர் ஒன்றினையே மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். இதனைக் காரைக்கால் அம்மையார்,

"கொங்கை திரங்கி நரம் பெழுந்து
திணமிடுகள் லென்பற் குழிலயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள் கணைக்காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலகுக்கு நாட்டிலகி
தாழ்சடை எட்டுத் திசைகள் வீசி
அங்கங் குளிர்ந்தலை ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே"

எனப் பாடியுள்ளார். திலகவதியார் தன் தம்பியின் துயரை ஒழித்து உலகின் நிலையாமையை அறிந்து நல்ல அறம் செய்து வாழ்ந்து வந்தார். சிவநெறியை நன்னெறி என்று கண்டு இறைவன் பால் ஆறாத அன்புடையவராகத் திருவதிகை வீரட்டான மென்னும் திருப்பதியை அடைந்து மாசில்லா வெண்ணீறும் கண்மணியும் அணிந்து ஆலயத்தில் தமது கமலமலர் போன்ற கைகளால் தினந்தோறும் திருப்பணி செய்து வந்தார். மேலும் கோயிலில் தினந்தோறும் அலகிட்டு மெழுகிட்டுப் பூமாலை புனைந்து அமைத்து திருப்பணிகள் செய்தார். சமணச்சமயம் சென்ற தம்பியைத் திருந்தச் செய்து சிவநெறியில் வாழச் செய்தார். இதனைக்

"கொல்லாது சூலை நோய் குடர் முடக்கித் தீராமை

யெல்லாருங் கைவிட்டா ரிதுசெயலென் முன்பிறந்த
நல்லாள் பாற் சென்றியம்பி நானுய்யும் படிகேட்டிங்
கல்லாரும் பொழுதனைவா யென்றா ரென்றறிவித்தான்''

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

இரண்டறக் கலந்து இன்பம் எய்தியது

புனிதவதி இறைவனை நினைந்து எந்தாய் என் தலைவன் பொருட்டு இதுகாறும் நான் தங்கிய ஆசையைக் கழித்து பேய் வடிவம் தரவேண்டும் என்று வணங்கி அவ்வடிவம் பெற்றார். கயிலை மலையில் இறைவனை வழிபட புறப்பட்டு வடதிசை நாடுகளை மனத்தில் கடிதிற் கடந்து சென்று கயிலை மலை அடைந்தவுடன் காலினால் நடப்பதை விட்டு தலையால் நடந்து சென்றார். இறைவன் இறைவியிடம் இவ்வாறு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை என்று அறிவாய். பெருமை சேர் பேய் வடிவம் விரும்பி பெற்றனள். அம்மையே என அழைத்தவுடன் அப்பா என்று அழைத்து பாதம் பணிந்தார். இறைவன் அம்மையே நீர வேண்டுவது யாது? என்று கேட்ட போது,

இறவாத இன்ப அன்பு வேண்டி
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க வேண்டும் என்றார்

புனிதவதியார் கேட்டவுடனே அவ்வாறே ஆகுக என்று அருள் செய்ததோடு திருவாலாங் காட்டில் அம்மையாருக்குத் திருநடனம் காட்டுவதாகக் கூறினார். இங்ஙனம் சிவபெருமானின் திருநடனத்தைக் கண்டு ஆனந்த பெருவெள்ளத்தில் மூழ்கி திருப்பதிகம் பாடி இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்பம் எய்தினார். திலகவதியார் தந்தை புகழனார் பிணியால் விண்ணுலகம் அடைய தாய் மாதினியாரும் உடன் உயிர்துறந்தார். சமண சமயம் சென்ற தம்பியைச்

சிவநெறியில் செலுத்தி இறைப்பணி செய்து இறைவனுடன் இரண்டற கலந்தார்.

சோழர்களின் குலக் கொழுந்து

வரி வளையாள் மானிக்கும் அடியேன் என்று சுந்தரமூர்த்தி நாயனரால் பாடியுள்ள மங்கையர்க்கரசியார் இலக்குமி போன்றவர். நின்றசீர் நெடுமாறப் பாண்டியனின் மனைவியாகி கணவரின் சமணச்சார்பால் உண்டான பழியைத் தீர்த்தவர். தெய்வப் பாவையான இவர் தமிழ்நாட்டிற்கு வந்த துன்பத்தினைத் திருஞான சம்பந்தரின் அருளால் போக்கிச் சைவ சமயத் திருநீற்று நெறியைப் பாண்டியநாடு முழுவதும் பரவச் செய்தவர். திருஞான சம்பந்தர் சிவஞானம் உண்டு பொழிந்த தூய திருவாக்கினாலே புகழ்ந்து காட்டப்பெற்ற பெருமையும் முந்தைத் தவமும் உடையவர். சிவநெறியில் நின்று தன் கணவரோடு சிவனின் திருவடி நிழலை அடைந்து திருவருளில் நிலை பெற்றிருக்கும் பெரும் பேறும் பெற்றவர் ஆவார்.

முடிவுரை

கி.பி. 300-600ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார், திலகவதியார் ஆகியோரின் வாழ்வியல் மாண்புகள் பற்றியும், கி.பி. 600-660 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மங்கையர்க்கரசியார், சைவத்தமிழ் வளர்த்தார். சிவச் சின்னங்களை அணிந்து நல்லறம் புரிந்து வாழ்ந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

5. மங்கையர் வாழ்வில் சைவம்



முனைவர் த.கலாசிறிதர்
உதவிப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

சைவம் என்று செந்தமிழ்ச் சொல் சிவம் என்னும் பெயர்ச் சொல்லடியாகத் தோன்றியது. சிவத்தொடர்புடையது சைவம் என்றாகும். பித்தத் தொடர்புடையது பைத்தியம் என்றாவது இதற்கு எடுத்துக் காட்டாகும். மங்கையர் என்னும் சொல் மங்கலம் என்றும் பெயர் அடியாகத் தோன்றிது. மங்கலம் என்பது நன்மை இன்பம் முதலிய பல பொருளைத் தருவது. அவையனைத்தையும் உடையார் மங்கையராவார். வாழ்வு என்பது அனைத்துயிர்க்கும் இன்பம் உண்டாவதற்குரிய துணையாக நிற்பதென்பதாகும்.

ஒருவர் தனித்திருக்கின்ற பொழுது அவர் நிலையை வாழ்வு எனக் கூறார். தனிவாழ்வு எனக் கூறப்படினும் அது பிழைப்பென்றே பொருள்படும். பிழைப்பென்பது சீவனம் என்றும் பொருள் தருவது. மனைவி மக்கள் முதலிய குடும்பத்தோடு வாழ்வதே வாழ்வு எனப்படும். நுணுகி நோக்கின் தனி வாழ்வு எவருக்கும் ஏற்படாது. பெற்றோரைச் சார்ந்தோ பிற உதவியாளரைச் சார்ந்தே ஒருவர் வாழ்வதுதான் இயல்பாகும். அந்த முறையில் நோக்கினாலும் பிறர்க்கு உதவியாக நின்று வாழ்வதே வாழ்வு என்பதாகும். எனவே பிறரைப் பேணுந்தன்மை இயல்பாகப் பிறப்பிலேயே அமைந்த சிறப்பினையுடைய மங்கையர் வாழ்வில் சைவம் எங்ஙனம் நிலைத்திருப்பது என்பதே அச்சொற்றொடரின் பொருளாகும்.

சைவத்திவன் புண்ணியக் கண்

சைவத்திற்குப் புண்ணிய கண் இரண்டெனச் சேக்கிழார் அடிகளார் புகழ்பெற்ற தன்மையினை நோக்கினால்,

''அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புநெறி கடலுமாம் எனவும் ஓங்கும் பொருட்சமய
முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்
கண்ணிரண்டெனவும் புவனம் உய்ய இருட்குவுண்
டவரருளும் உலகம் எல்லாம் ஈன்றாள்தன் திருவருளும்
எனவுங் கூடித் தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே''

ஞானசம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு நாயனாரும் சீர்காழிப் பதியில் இறைவனை வணங்கச் சென்றவிடத்து இருபெருமக்களும் உயர்ந்த சைவநெறி பெற்ற புண்ணியக் கண்ணிரண்டும் போன்று போந்தனர் என்று விளக்கினார்.

சைவம் பரப்ப உதவிய பெண்மணிகள்

சிவபெருமானின் திருவடித் தொண்டாம் சைவம் பரப்பும் சிறப்பினை அவனருளால் நால்வர் பெருமக்களும் பொன்னினாலும், பெண்ணினாலும் இவ்வுலகத்திற்கு உணர்த்தி உலகத்தை உய்வித்தனர் என்பதைப் பின்வரும் திருத்தணிகைப் புராணத் திருப்பாட்டால் அறியலாம்.

''முன்னாலும் துளைக்கரத்தோன் முருகவேள்
பிடித்திழுத்து மொய்ம்பில் தாவப்
பின்னாலும் கதிர்ச்சடிலப் பிஞ்ஞகனார்
திருத்தொண்டின் பெருக்கவீறு
பொன்னாலும் பெண்ணாலும் அறிவுறுத்தில்
வுலகினிடர் பொன்றி ஆண்ட
அந்நால்வர் பதகமலம் புகழ்த்திறைஞ்சி
அரந்தை தீரவாம்''

பெண்ணாலும் என்றதனால் ஞானசம்பந்தப் பெருமான் திருமருகலில் செட்டிப் பெண்ணின் பாம்பு கடித்திருந்த மணவாளனை உயிர்ப்பித்தும், திருமயிலாப்பூரில் பூம்பாவை அம்மையாரை என்பு வடிவத்தினின்றும் எழுப்புவித்ததும் ஆகும்.

அது மட்டுமன்று, மங்கையர்கரசியாரைக் கருவியாகக் கொண்டு சைவம் பரப்பியதுமாகும். திருநாவுக்கரசு நாயனார் வானுலகத்தினின்றும் வந்திறங்கி மயக்கத்திற்குரிய செயல்களைச் செய்த பெண்களால் உணர்த்தினார். அதாவது தன் நிலையில் திரியாது நின்று சைவ உண்மையை நிலைநாட்டினார். அது மட்டுமல்லாது திலகவதியம்மையார் வினை முதலான நின்று அவரைச் சைவத்திற்குப் புகுத்தினமையாலும் உணரலாம். இதுபோல் மங்கையர்க்கரசியாரும் வினைமுதலாக நின்று அவரைச் சைவத்திற்குப் புகுத்தினமையாலும் உணரலாம். இதுபோல் மங்கையர்கரசியாரும் வினைமுதலாக நின்று பாண்டியனையும், பாண்டிய நாட்டையும் சைவத்திற்புகுந்தினர் என்பதை அறியமுடிகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரோடு கூடி வாழ்ந்ததால் அறியலாம்., மாணிக்கவாசகப் பெருமானார் தில்லையின்கண் புத்தரோடு வாதிட்ட இடத்து வந்திருந்த இலங்கை மன்னனின் மகளுடைய ஊமையை நீக்கியமையால் பெறப்படும்.

ஒன்றே குலம்

மங்கையர் வாழ்வினிடத்தில் சைவம் என்பது அன்றும் இன்றும் என்றும் நிலைத்திருப்பதற்குப் பல வரலாறுகள் காணலாம். சைவத்தின் கொள்கை ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை என்பதாம். நமன் என்பது பிறப்பாகிய இருவகைத்துன்பம் என்பதாம் ஒன்றே குலம் என்பது எண்பத்து நான்கு நூறாயிரம் ஆகிய வேறுபாடுகள் உடம்பினைப் பெற்று வாழ்கின்ற உயிர்கள் அத்தனையும் தங்கட்கும் தாங்கள் வாழும் உடல் உலகங்கட்கும் இயற்கை அம்மையப்பராக என்றும் செம்மையோடு பொன்றாது நின்று நிலவும் சிவபெருமான் ஒருவனே ஈன்றவனானான். அம்முறையால் அனைத்துயிரும் சிவனது அடிமையாகிய தொண்டர் குலமாகும். தொண்டக் குலமெனினும் சிவக்குலமெனினும் ஒன்றேயாம். நல்ல குலமெனினும் இப்பொருளையே தரும். இவ்வுண்மை குலம் பொல்லேன் குணம் பொல்லேன் என்னும் அப்பரடிகள் திருப்பாட்டால் உணரப்படும்.

அன்பே சிவம்

குலம் பொல்லேன் என்பது சிவனை நினையாத தாழ்ந்த சூழ்நிலையாகிய சமணத்தில் சேர்ந்து சிவனைப் பழித்து வந்த குற்றத்தை உடையே என்பதாம். சிவனைப் பழிப்பதென்பது அன்பை பழிப்ப தென்பதாகும். அஃது அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் என்னுந் திருமந்திரத் திருப்பாட்டால் உணரலாம்.

அன்பும் அருளும் நிறைந்த சைவம்

அன்பு என்பது பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இன்பம் செய்வதும், இன்பத்திற்குத் துணை நிற்பதும் ஆகும்.

திருநீலகண்டர் பிழை

திருநீலகண்டத்துக் குயவானர், சைவச் செந்நெறியில் உறைந்து நின்றபெருமை அவர்தம் மனைவியாரின் வாழ்வால் வாய்ந்ததாகும். கற்பின் ஆற்றலால் கடந்த இளமையை மீண்டும் பெற்ற கற்பரசியல்லவா அம்மையார். அந்நாயனார். செய்த பிழையின் பொருட்டு அவரை மட்டுமின்றித் தன்னையும் ஒறுத்துக் கொண்டமை செயற்கரிய செயலாகும். உலகியல் முறையில் பரத்தையிற் பிரிந்து வருதல் அல்லொழுக்க வழுவாகாது. நல்லொழுக்க வழுவமைதியாகும். ஆனால் இவ்வொழுக்கம் உடலொடு ஒழிவதொன்றாகும். உயிரோடு பொருந்தி வருகின்ற நல்லொழுக்கமாகிய சமய வாழ்விற்குப் பரத்தையிற் பிரிந்து வருதல் பொறுக்கலாற்றுப் பெருங்குற்றமாகும். அவ்வுண்மை

> ''பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
> ஆயும் அறிவின னவர்''

என்னும் திருக்குறளால் உணரலாம்.

சைவ வாழ்வு

ஆதலின் நா்யனாரின் இக்குற்றத்தைப் பொறுக்காது ஆணையிட்டு அவரைத் தூய்மைப்படுத்தினர். தூய்மையாவது தவறாகக் கொண்ட இன்பத்தை நேர்மையான வழியிலும்

கொள்ளாது அகற்றுவதேயாகும். இந்த முறையில் ஆண்டவனை அடையும் திருநெறியில் ஒழுகுவார். ஒருவனும் ஒருத்தியுமாய் வாழ வேண்டும் என்ற உயர்ந்த உண்மையை நிலைநாட்டி சைவத்தைத் தன் வாழ்க்கையில் கண்டார்.

திருநீல நக்கரின் செயல்

இதுபோல் திருநீலநக்க நாயனாரின் மனைவியார் அவர்தம் இல்வாழ்விற்கும் சிவபூசையாம் சிறப்புத் தொண்டினிற்கும், அகத்தும் புறத்தும் துணைநின்று வந்து தம் வாழ்வில் சைவத்தை நிலைநாட்டினார். புறத்தே திருக்கோயிலில் அந்நாயனார் சிவபூசை புரிவதற்கு வேண்டும் துணையாக ஒருநாள் பணி செய்து கொண்டிருந்தனர். அப்போது சிவபெருமான் மேல் ஒரு சிலந்தி வீழ்ந்தது. அம்மையார் ஆண்டவனுக்கு ஊறு நேராவண்ணம் வாயினால் ஊதி உமிழ்ந்து அதனை அகற்றினார். அதனைக் குற்றமென்றெண்ணி அந்நாயனார் அம்மையாரை விலக்கித் தாம் மட்டும் மனைக்குச் சென்றார். அம்மையார் திருக்கோயிலிலேயே சிவனை நினைந்து அமர்ந்து விட்டார். நாயனார் கனவில் சிவபெருமான் தோன்றி அம்மையாரால் ஊதப்படாத தன் முதுகுப் புறத்தில் கொப்புளங்கள் இருக்கின்றன என்று காட்டினார். உண்மை உணர்ந்த நாயனார் அம்மையாரை அன்புடன் அழைத்து வந்து கூடி வாழ்ந்தனர்.

இளையான்குடி மாறரின் இல்லாள் திறம்

நள்ளிரவில் நம்பனுக்கு அமுதளித்த நங்கையார் இளையான் குடிமாற நாயனாரின் மனைவியார். அவர் வயலில் பகலில் விதைக்கப்பட்ட நெல் முளையை வாரிக் கொண்டு வரும்படி கணவனாருக்கு உற்றுழியுதவும் அறிவுகொளுத்தினர். கொண்டு வந்த நெல்லை, மாரிக் காலத்தில் நள்ளிரவில் வந்த சிவனடியாராம் நல்ல விருந்துக்கு நல்லமுதாக்கிய முறைமையால் தம் வாழ்வில் சைவம் நிலைத்திருப்பதைக் காட்டினார்.

குங்கிலியக் கலையரின் மனைவி

குங்கிலியக் கலய நாயனாரின் மனைவியாராகிய

அம்மையாரும் குடும்பத்தாரின் உணவின் பொருட்டும் ஈகை அரிய இழையாகிய தாலியைக் கொடுத்து நெல் வாங்கி வரும்படி கணவனாரைக் கேட்டுக் கொண்டார். அவர் நெல் வாங்காது எதிரில் கண்ட குங்கிலியத்தை வாங்கி திருக்கோயிலுக்குச் சென்று சிவத்தொண்டு புரிந்தனர். ஆண்டவன் இதுகாறும் பெற்ற நாயனாரின் பொருளாகிய குங்கிலியத்திற்குக் கைம்மாறு செய்யவில்லை. அம்மையாரின் திருத்தாலியின் பொன்னால் பெற்ற குங்கிலியத்திற்கு ஈடு எடுப்பின்மையால் அதனையேற்றுக் கொண்ட ஆண்டவன் அம்மையாரின் பொருட்டு ஈடும் எடுப்புமில்லா எல்லா வாழ்வினையும் மனையகத்துப் பனையளவாகக் குவிந்துக் கொடுத்தருளினை இவ்வரலாறுகளால் மங்கையார் வாழ்வில் சைவம் பொங்கிப் பொலிந்து மிகுந்த தன்மைகளைக் காணலாம்.

அமர்நீதி அம்மையார் அருமை

அமர்நீதி நாயனாரின் மனைவியாரும் கணவனாரின் சிவத் தொண்டிற்கு ஒத்த கருத்தினராய் இருந்து துணை புரிந்தார். ஆண்டவன் கொடுத்து மறைத்த கோவணத்தின் நிறையின் பொருட்டுக் கணவனுடன் துலைமேல் ஏறி நின்றனர். துலைசமமாக நின்று அதுவே விமானமாக மாறி வீடு பேறெய்தினர்.

இதுகாறும் கூறியவற்றால் மங்கையர் தத்தம் கணவன்மார் செய்கின்ற சிவத்தொண்டினிற்குத் துணைநிற்பதும் கணவன்மார் சிவத்தொண்டில் வழுவினால் அவரை அவ்வழுவினின்றும் கைதூக்கி எடுத்துச் சிவத்தொண்டில் நிலை நிறுத்துவதும் பெருங்கடனாக மங்கையர் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

6. சைவத் தமிழ் கூறும் எண்குணங்கள்

ந.கோ.இரா.திருவேங்கடபூபதி
ஆய்வியல் நிறைஞர் முழுநேர ஆய்வாளர்
தமிழிசைக் கல்லூரி
இராசா அண்ணாமலை மன்றம்
சென்னை

முன்னுரை

''சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமயம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே''

மொழிகளுள் தமிழ் மொழி மிகவும் தொன்மையானது. அதைப்போன்று சமயங்களுள் மிகவும் தொன்மையானது சைவ சமயமாகும். பல்லாண்டுகள் இறைவனே மீனாட்சி சுந்தரேசுவரனாகக் கூடல் மாநகரை ஆட்சி செய்துள்ளார் என்பது உலகமறிந்ததே. அத்தகைய இறைவன் எண்குணத்தான் என்று தமிழர்களும் சைவசமய அடியார்களும் போற்றுகின்றார்கள்.

''கோளில் பொறியில் குணமிலதேவ எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

ஆருடத்தில் கூறப்படும் கோள்களினால் ஏற்படும் நன்மை, தீமையெனும் இருவினைகளில் இருந்து கடைதேற ஒருவன் எண்ணினால், இவ்வண்ட பூவணமும் யாரிடத்தில் நிலைபெற்று ஒடுங்குகின்றதோ அவரது தாளை தலைவணங்கிப் போற்ற வேண்டும். அப்பரடிகள், திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியம்மையின் அழைப்பையேற்று பாண்டிய நாடு செல்வதற்கு விடை அளிக்க வேண்டுகையில் அப்பரடிகள் தற்சமயம் நாளும், கோளும் சரியில்லை. ஆதலால் பிள்ளையின் பால் ஆறாத அன்புள்ளம் கொண்ட அப்பர் அடிகள் செல்ல வேண்டாம் என்றார்.

அம்மை அப்பனை என்னும் நல்லடியாரை நாள் என்செய்யும், கோள் என்செய்யும், நாடிவந்த வினைதான்

என்செய்யும் என்று வேயுறு தோளியங்கன் எனத் தொடங்கும் கோளறு பதிகம் பாடி தனது தலயாத்திரையைத் தொடர்ந்தார் என்பது இவரது வரலாறாகும். இன்றைக்கும் சிவனடியார்கள் இப்பதிகத்தைப் பாடியும், செவியால் கேட்டும், வாயார கூறியும், கோள்களின் தாக்கத்தில் இருந்து கடைதேறியவர்கள் பலர் உள்ளார்கள்.

தலைப்பு விளக்கம்

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தான் உணர்ந் தெட்டே''

சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வம் ஒன்றில்லை. சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்னும் கூற்றினைச் சிவனடியார்களின் பதிகங்களின் மூலம் அறியமுடிகிறது. ஆகவே முக்கண் முதல்வனே சிவசக்தி ரூபானாக ஒன்றாய்ப் பலவாகி இருக்கும் கருணாமூர்த்தியே ஒன்று ஆவார். அறக்கருணை, மறக்கருணை என்பது தாயாகவும், தந்தையாகவும் இன்னருள் புரிவது இரண்டாகும்.

பசு, பதி, பாசம் என்னும் முக்குணங்களைக் கடந்தவன் என்றும் ஆனவம், கண்மம், மாயை என்னும் பாசங்களில் இருந்து இயல்பாகவே நீங்கி நின்றவன் ஆவான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கினையும் தானே உணர்ந்து உலகிற்கு உணர்த்தினான் நான்கு. செவி, வாய், கண், காது, மூக்கு என்னும் ஐந்து பொறிகளை வென்றவன். நால் வேதத்திற்கு ஆறு அங்கமாக உள்ளார். பிரமலோகம், விட்ணு லோகம், உருத்திர லோகம், மகேசுர லோகம், சதாசிவ லோகம், சத்தி லோகம், சிவ லோகம் என்னும் ஏழுலகங்களுக்கும் மேற்சென்று தானேயாய் இருந்தான். இதனைச் சுந்தர மூர்த்தி நாயனார் ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளான் என்று பாடுகின்றார். இவ்வரிகளின் மூலம் அறியப்படுகிறது. எட்டாப் பொருளாய், அட்டமா சித்தியாய் அனைத்துமாய் விளங்கும் சிவனே முக்தியையும் அருள்பவர். முத்திநெறி அறியாத

மூர்க்கரொடும் முயல்வேனை என்று நாயன்மார்கள் பாடியுள்ளார். ஆதலால் சைவத் தமிழ் கூறும் எண்குணங்கள் என்ற தலைப்பினை ஆய்வாளர் தேர்ந்தெடுத்துள்ளார்.

திருஞானசம்பந்த நாயனார் கூறும் எண்குணங்கள்

"மொய்தாறு சுவையும் ஏழிசையும் எண்குணங்களும்
விரும்பும்நால்வே
தத்தாலும் அறிவொண்ணா நடைதெளியப் பளிங்கேபோல்
அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன் கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா ரிக்கொழிக்கும் முதுகுன்றமே"

முதல் திருமுறையில் திருஞானசம்பந்தர் ஆறுசுவையாய், ஏழிசையாய், எண்குணத்தை விரும்பும் வேதவடிவினனான சிவசங்கரனே பாரத தேசத்தின் தாய் சமயங்களான சௌரம், காணாபத்யம், கௌமாரம், சாக்தம், சைவம், வைணவம் என்னும் சமயங்களுக்கு ஒரு தலைவன் என்றும் மற்றொரு பதிகத்தில் அம்பாளை முன்னிலைப்படுத்திப் பாடுகின்றார்.

"பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுகு செஞ்சடை
யாருங்
கண்ணமர் நெற்றியி னாருங் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்த நின்றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே"

இத்தகைய ஆணுருவோடு பெண்ணுருவாய் எண்குணங்களும் பொருந்திய சிவபெருமான் பண்ணமரும் வேதத்தின் (சுருதியின்) நடுநாயகமாய் விளங்குபவர் பாண்டிக் கொடுமுடியார் என்று கூறுகின்றார்.

திருநாவுக்கரச நாயனார் கூறும் எண்குணங்கள்

"வெட்டன வுடைய னாகி வீரத்தால் மலையெ டுத்த
துட்டனைத் துட்டுத் தீர்த்துச் சுவைபடக் கீதங் கேட்ட
அட்டமா மூர்த்தி யாய ஆதியை ஓதி நாளும்
எட்டனை யெட்ட மாட்டே னென்செய்வான் தோன்றி
னேனே"

பெருவதற்குரிய வரங்களைப் பெற்ற இராவணன் ஒரு சமயம்

ஈசன் விளங்கு திருத்தலமான கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க எண்ணி ஆணவத்தின் காரணமாகச் செயல்பட்ட போது தாயிற்சிறந்த தயாவான தத்துவரூபன், இராவணனது செருக்கை அடக்க முற்பட்ட போது எவர்க்கும் எட்டா பரம்பொருளான சிவனை நினைந்து பாடினான். அவனது சுவைமிக்க சாம வேதகீதத்திற்கு மனமிறங்கிய அட்டமூர்த்தியாகிய சிவபெருமானின் பெருமைகளைக் கூறி தீயனுக்கும் இரண்டுவிதமான இன்னருள் புரியும் நின்னை அடையும் வழி அறிந்தும் விலகினேனே என்று பிறவிப் பெருங்கடலைக் கடக்க வழி கூறுகின்றார் திருநாவுக்கரச நாயனார்.

சுந்தரமூர்த்தி நாயனார் கூறும் எண்குணங்கள்

தம்பிரான் தோழனான சுந்தரமூர்த்தி நாயனார் தனது திருப்பாட்டில் இறைவனின் எண்குணங்களை இவ்வாறு வரிசைப்படுத்துகின்றார். மறையாய் விரிந்த எண்குணச் சோதியினானைக் கண்டு தொழுதேன் என்று,

"இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறையவனை மறையவனை எண்குணத்தி னானைச்
கானாட்டு முள் ஊரிற் கண்டுதொழு தேனே"

திருநாவுக்கரச நாயனார் இறைவனின் திருவடியை அடைய வேண்டிப் பாடினார். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனின் திருவடியை அடைந்ததால் பாடினார்.

முடிவுரை

பிறவிப் பெருங்கடலைக் கடந்து கடைத்தேற விரும்பினால் சிவனின்றி மற்றோர் தெய்வமில்லை. ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்; ஆசைப் படப்பட வரும் துன்பங்கள்; ஆசை விட விட ஆனந்தமே. எண்குண தத்துவனான ஈசனோடும் ஆசையை அறுக்க சொல்கின்றது திருமுறைகள். ஆதலால் இறைவன் பால் கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாத இவ்வடியார்களின் சைவத் தமிழை உணர்ந்தும், மற்றவர்களுக்கும், பரசமயத்திற்குச் சென்றவர்களுக்கும் உணர்த்தியும் சைவத் தமிழைப் போற்றுவோம்.

7. தொடர்ந்தாட் கொண்ட தம்பிரான் தோழன்



ச.பிரேமகுமாரி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அறஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி
வாலாசாபேட்டை

முன்னுரை

திருத்தொண்டத் தொகையினை அருளியவர் சுந்தரமூர்த்தி நாயனாராவார். இதன் வழி நூலான திருத்தொண்டர் திருவந்தாதியினை இயற்றியவர் நம்பியாண்டார் நம்பியாவார். இவற்றின் சார்பு நூலான சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் எனப்படும். பெரிய புராணம் இறைவனால் சுந்தரர் தடுத்தாட்கொண்ட வரலாற்றினைக் குறிப்பிடுகிறது. இவர் நம்பியாரூரர், வன்தொண்டர், தம்பிரான் தோழர் முதலிய நாமங்களால் இறைதொண்டு புரிந்தும், அற்புதங்கள் பல நிகழ்த்தியும் தாம் விரும்பிய இல்லற வாழ்வினை மேற்கொண்டுள்ளார். இறுதியில் இவ்வுலக உயிர்களின் மீது தாம் கொண்டிருந்த பற்றினை விட்டொழித்து மீண்டும் திருக்கயிலாயம் அடைகிறார். இடைப்பட்ட காலத்தில் இறைவன் சுந்தரருக்குத் தொடர்ந்து அருள்புரிந்துள்ளதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

ஆலால சுந்தரர் (திருக்கயிலாயம்)

திருக்கயிலாயத்தில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டரான ஆலால சுந்தரர், உமையம்மைக்குத் தொண்டு புரிந்த கமலினி, அநிந்திதை என்னும் மகளிரை இறைவன் அருளால் காதல் கொள்கிறார். ஆதலால் அம்மகளிருடன் தென்னாட்டில் பிறந்து திருமணம் புரிந்து வாழ்ந்து மீண்டும் கயிலாயம் வருமாறு இறைவனால் பணிக்கப்படுகிறார்.

தடுத்தாட்கொண்ட அருள் (திருவெண்ணெய் நல்லூர்)

இறைவன் பணித்த வண்ணம், ஆலாலச் சுந்தரர்

திருநாவலூரில் ஆதி சைவ அந்தணராகிய சடையனார், இசைஞானியார் என்பவருக்கு மகனாகத் தோன்றி நரசிங்க முனையரால் வளர்க்கப் பெற்றுப் புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகள் சுகுணவதியை மணக்க முற்படுகிறார். திருமணம் நிகழும் நிலையில் திருவெண்ணெய் நல்லூர் இறைவன் கிழவேதியராய் வந்து சுந்தரராகிய நம்பியாரூரரைத் தடுத்தாட்கொள்கிறார். இதனை,

"முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்பு நம்ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நினைத்துத் தொடர்வு அறத்தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத்து ஆண்டோம் என்றார்"
(தடுத்தாட்புராணம் 67)

என்று இறைவன் சுந்தரருக்கு அருள் புரிந்ததைத் தடுத்தாட்புராணம் குறிப்பிடுகிறது.

தம்பிரான் தோழனாதல் (திருத்தில்லை)

தடுத்தாட்கொண்ட இறைவன், தம்மைச் சொற்றமிழால் பாடுமாறு பணிக்கச் சுந்தரர் பித்தா பிறைசூடி என்னும் திருப்பதிகத்தினைப் பாடிப் பின்பு திருவதிகையில் இறைவனின் திருவடி சூட்டப்பெற்று அருளப் பெறுகிறார். திருத்தில்லையில், தோழமையாக உமக்கு நம்மைத் தந்தனம் என இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுத் தம்பிரான் தோழராகிறார்.

"அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுக"
(தடுத்தாட்.67)

"தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு
தனிப்பெரும் தாண்டவம் புரிய
மடுத்த நீள்வண்ணப் பண்ணை ஆரூரில்
வருக நம்பால்" (தடுத்தாட் 254)

என்பதால் நம்பியாரூரர் தம்பிரான் தோழரானமை அறியமுடிகிறது.

பரவை நாச்சியாருடன் (கமலினி) மணம் (திருவாரூர்)

திருக்கயிலையில் கமலினியான பதியிலார் குலத்துப் பரவை நாச்சியாரை இறைவனது அருளினால் நம்பியாரூரர் திருமணம் புரிந்து கொள்கிறார். இதனைச்

''சேமத் துணையாம் அவர்பேர் அருளைத்
தொழுதே திருநாவலூர் - கோன்மகிழத்
நாமக் குழலாள் பரவை வதுவை
தகும் நீர்மையினால் நிகழச்செய்தார்'' (தடுத்.326)

என்பதால் நம்பியாரூரருக்குப் பரவை நச்சியாருடன் திருமணம் நிகழ்ந்துள்ளமை தெரிகிறது.

திருத்தொண்டத் தொகை அருளல் (திருவாரூர்)

தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று நம்பியாரூரருக்குப் புற்றிடங்கொண்ட பெருமான் அடியெடுத்துக் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டதுடன் திருத்தொண்டர் திருப்பதிகம் பாடும் பேற்றினைப் பெறுகிறார்.

''வீரத்தார் எல்லார்க்கும் தனித்
தனிவேறு அடியேன் என்று
ஆர்வத்தால் திருத்தொண்டத்
தொகைப் பதிகம் அருள்செய்வார்'' (தடுத்.327)

என்றும்,

''தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன் என்று
எல்லை இல் வண்புகழாரை
எடுத்து இசைப்பா மொழி என்றார்'' (தடுத்.345)

என்றும் இறைவன் பணித்துள்ளமை அறியமுடிகிறது.

நெல்லும் பொன்னும் அளித்தல் (திருவாரூர் திருப்புகலூர் திருமுதுகுன்றம்)

தொண்டர் கூட்டத்திற்கு விருந்தளிக்கும் அறத்தினை மேற்கொண்டிருந்த சுந்தரருக்கு இறைவன் குண்டையூர்

வேளாளர் மூலம் நெல் மூட்டைகளை அளித்து உதவிபுரிகிறார். திருவாரூரில் சிவனடியார்கள் கொண்டாடும் பங்குனி உத்தர விழாவில் புகலூர் இறைவன் செங்கல்லைச் செழும்பொன்னாக்கித் தந்து அருள்புரிகிறார். இதனை,

''இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே'' (சுந்தரர் தேவாரம்.105)

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது. திருமுதுகுன்றப்பெருமான் பன்னீராயிரம் பொன் கொடுக்க அதனை மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்துப் பரவையாரித்துக் கொடுக்கச் செய்கிறார். இதனை,

''மின்செய்த நுண்ணிடையாள் பரவையியவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட்ட ளங்கெடவே''
(சுந்.தேவா.415)

என்று திருவாரூர் திருப்பதிகம் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

சோறு அளித்த கருணை (திருக்கருகாவூர் திருக்கச்சூர்)

திருக்குருகாவூரிறைவர் அந்தணராய் வந்து பந்தலமைத்துத் தண்ணீரும் பொதிச்சோறும் கொடுத்து அருளப் பெறுகிறார். திருக்கச்சூர் ஆலயக் கோயில் மதிற்புறத்தே தங்கியிருந்த சுந்தரர் பொருட்டு, இறைவன் வேதியராய் வெற்றோடு கையில்கொண்டு பிச்சையேற்று அவரது பசி தீர்த்து ஆட்கொள்ளப்படுகிறார். இதனை,

''மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய் தலையில் பலநீ கொள்ளக்
கண்டால் அடியார் கலவாரே'' (சுந்.தேவா.586)

என்று திக்கச்சூர் திருப்பதிகம் குறிப்பிடுகிறது.

சங்கிலி நாச்சியாருடன் (அநிந்திதை) மணம் (திருவொற்றியூர்)

திருக்கயிலையில் அநிந்திதையான, ஞாயிறு கிழவர் மகள் சங்கிலி நாச்சியாரைச் சுந்தரருக்குத் திருமணம் நடத்தி வைத்து இறைவன் ஆட்கொள்கிறார்.

கண் இழந்து மீளப்பெறுதல் (காஞ்சி - திருவாரூர்)

சங்கிலி நாச்சியாருடன் சில காலம் இல்லறம் நடத்தி வந்த சுந்தரர் திருவாரூர் பெருமானைத் தரிசிக்கப் புறப்படுகையில் திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும் கண்பார்வை இழக்கிறார். பின்பு திருவெண்பாக்கத்தில் இறைவனால் ஊன்றுகோள் அளித்து ஆட்கொள்ளப்படுகிறார்.

''ஒழுக்க எண்கணுக்கு ஒருமருந்து உறையாய்
ஒற்றி ஊரெனும் ஊர்உறை வானே'' (சுந்.தேவா.688)

என்று திருவொற்றியூர் இறைவனை வேண்டி நிற்கிறார். பின்பு காஞ்சி திருவேகம்ப நாதனை வணங்கி இடக்கண் பார்வை பெறுகிறார்.

''கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்றி வாறே'' (சுந்.தேவா.730)

திருவாரூரை அடைந்து புற்றிடங்கொண்டாரை இறைஞ்சி மீளா வடிமை யுமக்கே யாளாய் என்னும் பதிகம் பாடி வலக்கண் பார்வை பெறுகிறார்.

சேரமான் தோழமை

சேரமானுடன் நட்பு ஏற்பட்டு அவருடன் மலைநாட்டிற்குச் செல்லுகையில் வழியில் காவிரியாறு பெருக்கெடுக்கிறது. அவ்வேளையில் காவிரியாற்றின் நடுவே வழியேற்படுமாறு ஐயாற்றிறைவரை இறைஞ்சி இறைவனின் அருளினைப் பெறுகிறார். இதனைக்

''கங்கை சடைமேல் கரந்தானே
கலைமான் மறியும் கனல் மழுவும்

தங்கும் திரைக்கா விரிக்கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ'' (சுந்.தேவா.956)

என்னும் பதிக வரிகளால் அறியமுடிகிறது.

நிதிக்குவையினைத் திரும்பப் பெறுதல் (திருமுருகன்பூண்டி)

சேரமான் கொடுத்தனுப்பிய பொன் பொருளுடன் சேரநாடாகிய திருவஞ்சைக் களத்திலிருந்து செல்லும் போது திருமுருகன் பூண்டியில் சிவகணங்களானவை வேடுவராகச் சென்று வழிபறி செய்கின்றன. அவ்வேளையில் இறைவனுக்குக் கொடுகு வெஞ்சிலைப் பதிகம் பாடிப் பறிக்கப்பட்ட பொருட்களைத் திரும்பப் பெறுகிறார். இதனைக்

கொடுகு வெஞ்சிலைவடுக வேடுவர்
விரவ லாமை சொல்லித்
திருகு மொட்டெனக் குத்திக் கூறைக் கொண்டு
ஆற லைக்கும் இடம் (சுந்.தேவா.987)

என்னும் பதிக வழி அறியமுடிகிறது.

பாலகனை உயிர் மீட்டல் (திருப்புக்கொளியூர்)

அவிநாசி என்னும் திருப்பதியில் ஐந்து வயதில் முதலையுண்ட பாலகனைச் சுந்தரர் இறையருளால் உயிர்ப்பிக்கச் செய்து உபநயனம் செய்கிறார்.

''பொழிலா ரும்சோலைப் புக்கொளி யூரில் குளத்திடை
இழியாக் குளித்த மாணிஎன்னைக் கிறி செய்ததே''
(சுந்.தேவா.998)

என்பதால் பாலகனை மீட்டுள்ளமை அறியலாகிறது.

தொடர்ந்தாட் கொள்ளல் (திருவஞ்சைக்களம்)

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே என்னும் திருப்பதிகத்தில்,

''வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குழைக் காதுடை வேதியனே'' *(சுந்.தேவா.1014)*

என்று உளமுருகப் பாடித் திருக்கயிலை அடைந்து முன்பு போல் இறைவனுக்கு அணுக்கத் தொண்டராகிறார். உடன் சென்ற சேரமான் சிவகணத் தலைவராகவும், நம்பியாரூரரை மணந்து வாழ்ந்த பரவையாரும் சங்கிலியாரும் திருக்கயிலாயம் அடைந்து கமலினியாகவும் அநிந்திதையாகவும் உமையம்மைக்கு அணுக்கராய்த் தொண்டு புரிகின்றனர்.

தானெனை முன்படைத் தான் அதறிந்து தன்பொன்னடிக்கே
நானென பாடலந் தோநாயி னேனைப் பொருட்படுத்து
எவனென வந்து எதிர் கொள்ளமத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய் தான்நொடித் தான்மலை உத்தமனே
(சுந்.தேவா.1017)

என்னும் பாடல் வழி சுந்தரர் திருக்கயிலையை அடைந்து பதிகம் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

முடிவுரை

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர் தமது வாழ்நாள் முழுவதும் இறையருளைப் பெற்றுள்ளார் என்பதை அவரது ஒவ்வொரு நிகழ்வுகளும் காட்டுகின்றன. ஆதலால் இறைவனால் தொடர்ந்தாட் கொள்ளப்பட்டுள்ளார் என்னும் சிந்தனையை உருவாக்குகின்றன. இவர் இறையருளைப் பெற்றுள்ள தலங்கள் பலவாகும். இத்தலங்களும் நிகழ்வுகளும் இறை பக்தியினை மேலோங்கச் செய்வதால் அவை வாசகர்களுக்குச் சேர வேண்டும் என்னும் விருப்பத்தினால் அவற்றை இக்கட்டுரை தொகுத்தளித்துள்ளது.

8. சைவ சமயமும், நாவுக்கரசரின் கயிலைக் காட்சியும்



புலவர் தி.வே. விசயலட்சுமி
சென்னை

முன்னுரை

சமயம் என்பது இறைவனோடு தொடர்புடையது மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து இயற்கை நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கிய மனிதன் தனக்கு மேலான ஆற்றல் ஒன்று உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தான். கதிரவனையும், திங்களையும் (சந்திரன்) மழையையும், காற்றையும், இடியையும், மின்னலையும் கண்டு தெளிந்த மனிதன் அவை வழிபாட்டுக்குரியன என்று எண்ணினான். அருவ வழிபாட்டிலிருந்து உவரு வழிபாடு என்பது ஏற்பட்டது. இறைவனை வழிபடுவதற்காக ஏற்பட்ட சமயத்தையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் இணைத்துச் செய்யத்தக்கன, செய்யத்தகாதன எவை எவை என்று வரையறுக்கப்பட்டன. உருவ வழிபாடு ஏற்பட்டபின் ஒவ்வொருவரும் தத்தம் சமயமே உயர்ந்தது என்று வாதிடத் தொடங்கினர். எல்லாச் சமயங்கட்கும் சில பொது கூறுகள் உண்டு. சைவ சமயத்தின் சீர்மையையும் அதைப் போற்றி வளர்த்த சமயக் குரவர்களுள் அப்பர் பெருமான் கண்ட கயிலைக் காட்சியும் பற்றிச் சுருங்க இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

சமயங்களின் பொதுவியல்புகள்

ஒவ்வொரு சமயமும் ஒரு கடவுளை முழு முதலாகக் கருதி ஆலயம் அமைத்து வழிபாடு செய்கிறது. சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபடுகிறது. சிவனே ஸ்தாபிதம் சைவம் சைவேன சுதாபிதம் சிவகா என்பது ஆகமக் கூற்று. இன்றை இந்து சமயத்தின் கிளை நெறிகளுள் ஒன்றாக அமைந்து விளங்குகிறது சைவம். திருக்கயிலையில் நந்திதேவர் பணிவிடைசெய்ய, விநாயகரும், முருகனும்

அருகிருக்க, உமையாள் துணையிருக்க வீற்றிருக்கும் சிவபிரானே சைவர்களின் பரம்பொருளாக விளங்குகிறார்.

சைவநெறி ஆப்கானிசுதான் முதல் கம்போடியா வரையிலான தெற்காசியா முழுவதற்குமான தனிப்பெரும் நெறியாக விளங்கியமைக்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இன்றைக்கும் தமிழ்நாடு, கர்நாடகா, நேபாளம், காசுமீர், தமிழ்ஈழம், மலேசியா முதலான பகுதிகளின் முதன்மையான சமயமாகச் சைவமே திகழ்கின்றது.

சிவபெருமான் வடிவம்

சிவபெருமான் வடிவங்கள் ஏராளமானவை. ஆலமர செல்வனாகவும், ஆடல் வல்லானாகவும், உமையொரு பாகனாகவும், பிட்சாடனனாகவும், சோமாசுகந்தராகவும் பல்வேறு வடிவங்களில் வழிபடப்படுகிறார். அருவமாகத் திகழும் இறைவனை உருவமாக வழிபடுவதற்கு இயலாதபோது அருவமும் இல்லாமல் உருவமும் இல்லாமல் அருவுருவமாகச் சிவலிங்க வடிவிலும் வழிபடப்படுகிறார். சிற்பக்கலையில் மனிதன் தேர்ச்சி பெறுவதற்கு முன்பாக அவனுக்குக் கிடைத்த வழிபாட்டு வடிவம் சிவலிங்கமேயாகும். எல்லாவுலகங்களிலும் பலவகைப்பட்ட ஆன்மாக்களிலும் பொருந்தி இரண்டற நிறைந்து ஓங்கி விளங்கும் சிவபெருமானே நம்முடைய இறைவன் என்கிறது. திருஞான சம்பந்தரின் சைவ சமய நெறிப்பாயிரப் பாடல்

> *"உலகமும் பல்லுயிரும் ஒன்றுநிறைந் தோங்கி*
> *யிலகும் சிவனெம் மிறை" (பாயிரம்-1)*

சைவசமய நெறி என்ற நூல் சைவ சித்தாந்த கருத்துக்களைச் செவ்வனே கூறுவதாம். இந்நூலுக்கு யாழ்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் புத்துரை அளித்துள்ளார்

தமிழ் சைவம்

தமிழ் சைவம் சங்ககாலம் தொடங்கி தமிழ்நாட்டில் பயின்று வந்துள்ளமையைச் சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. சைவ மூவர் முதலானோர் அருளிய

தேவாரமும், மணிவாசகர் அருளிய திருவாசகமும், மற்ற அருளாளர்களின் பனுவல்களும் பன்னிரு திருமுறைகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளும் சிவபெருமான் சிறப்பையும், பெருமையையும், வீரச் செயல்களையும் சமயக் கொள்கைகளையும் நவில்கின்றன. தமிழ் சைவம் என்று போற்றப்படும் சைவ சித்தாந்தம் பல நிலைகளில் வேதாந்தக் கருத்துக்களைக் கொண்டுள்ளன.

தென்னகபக்தி இயக்கம்

சமணமும் பௌத்தமும் செழித்திருந்த தமிழகத்தில் சைவ சமயக் குரவர் மூவர் தலைமையில் ஏழாம் நூற்றாண்டில் ஆரம்பித்த பக்தி இயக்கம், சோழப் பேரரசு காலம் வரை நின்று நீடித்து, தென்னகத்தில் சைவ எழுச்சிக்குப் பெரும் உதவி புரிந்தது. அப்பர் முதலானோர் உள்ளமுருகி, உளம் ஒன்றிக் களித்து ஞானப்பிழம்பாய்ப் பாடி அருளியிருக்கும் தேவாரப் பதிகங்கள் சமய நூல்களின் உயிர்நாடி எனலாம். இப்பாடல்களைக் கேட்டு மனம் உருகாதவர் இல்லை. இவற்றை மனனம் செய்து பாடித் துதிப்பவர் உள்ளத்தில் பக்திப் பயிர் வேர்விட்டுச் செடியாகி மரமாகி, தருமக் கிளைகள் விட்டுத் தூய எண்ணப்பூக்கள் பூத்து மலர்ந்து மணம் பரப்பி நல்வழியைக் காட்டும் கனியாகிறது. பக்திநீர் விட்டால் தூய மலர்கள் பூத்துக் குலுங்கும். இதற்குச் சமயநூல்களே துணை. உணர்ந்து, ஊளினை உருக்கி, உள்ளொளிப் பெருக்கவல்ல தேவாரத்தைப் பாடினால், கேட்டால், ஒளியைக் கண்ட இருள்போல் கெட்டவை அகலும். ஞான சம்பந்தரின் தோடுடைய செவியன் என்ற பதிகத்தையும், திருநாவுக்கரசரின் மாதர்பிறைக் கண்ணி யானை என்ற பாடலையும், மாணிக்கவாசகரின் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ என்ற திருவாசகத்தையும் பாடும்போது நம்மெய் சிலிர்க்கிறது. தோடுடைய செவியனுடன் நாமும் ஒன்றி விடுகிறோம். நம் உள்ளம் மாசு நீங்கி மாறுதல் அடைகிறது.

திருவையாற்றில் கயிலைக்காட்சி

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பன்னிரு திருமுறைகளிலுமே கயிலையைப் பற்றிப் போற்றப்பட்டுள்ளது.

ஞான சம்பந்தர் இரண்டு பதிகங்களும் திருநாவுக்கரசர் சேத்திரக் கோவை, திருத்தாண்டகம் உட்பட 5 பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடப்பட்டுள்ளன. சிறப்பு வாய்ந்த கயிலாயத்தை ஆணவத்தின் காரணமாகப் பெயர்க்க முற்பட்ட இராவணனால் பெயர்க்க முடியவில்லை அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே என்பதற்கொப்ப கயிலை மலை தானே பெயர்ந்த வரலாற்றினை அப்பர் வரலாற்றில் காணலாம்.

திருநாவுக்சரசர் திருமுறை

திருமுனைப் பாடி நாட்டில் திருவாமூரில் திலகவதியாரின் தம்பியாக அவதரித்து மருள் நீக்கியார் எனும் பிள்ளைத் திருநாமம் பெற்று சமணம் சேர்ந்து இடுக்கணுற்றார். தமக்கையார் திலகவதியாரின் விண்ணப்பத்தின் பயனாக, சூலை நோய் தவிர்த்துத் திருநாவுக்கரசு என்றும் பெயரை நானிலமெங்கும் நவில, ஞான சம்பந்தரால் அப்பர் என அழைக்கப்பட்டார். திருநாவுக்கரசர் திருவீழி மிழலையில் பஞ்சம் தவிர்த்தும், திருமறைக் காட்டில் கதவினைத் திறப்பித்தும், திங்களூர் அப்பூதியடிகள் மகனை உயிர் பிழைப்பிக்கச் செய்தும் இறையருளைப் பெற்றார். பலதலங்களையும் வழிபட்டு, செஞ்சொற்புனை மாலை புனைந்தேத்தி போற்றி காளத்தி செல்லும் போது கயிலையைக் காணவிழைந்து, கால்தேய, கைசிதைய மார்பு நைய? என்பு முறிய ஊன் கெடப் புரண்டு புரண்டு கைகளை ஊன்றித் தவழ்ந்து மலையேறினார். இடையில் இறைவன் முனிவர் வடிவில் வந்து உம்மால் முடியாது மீள்க என்ற போது ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என்றார். இவரின் மனவுறுதியைக் கண்ட ஈசன் அசரீரி வடிவில் அப்பரே அருகில் உள்ள மடுவில் மூழ்கி (பஞ்சரதிசேத்திரம்) திருவையாற்றில் உள்ள குளத்தில் எழுந்தால், யாம் கயிலைக் காட்சியை அங்கு தருகிறேன் என்றருளினார்.

> தொழுதெழுந்த நற்றொண்டரை நோக்கி விண்தலத்தில்
> எழுபெருந்திரு வாக்கினார் இறைவர் இப்பொய்கை
> முழுகை நம்மை நீ கயிலையில் இருந்த அம்முறைமை
> பழுதில் சீர் திருவையாற்றில் ாண் எனப் பணித்தார்
>
> (பெரியபுராணம்)

அதனால் இத்தலம் தென்கயிலாயமாகப் போற்றப்படுகிறது. அவ்வாறே அப்பரும் கயிலைக் காட்சியைக் கண்டு இறைவனைப் பாடி இறையருளுடன் கலந்தார்.

கண்டறியாதன கண்டேன்

அதாவது வடமலையின் மூழ்கிய அப்பர் தென் வயலில் எழுந்தார். காயங்கள் உடலில் ஆறின. கானங்கள் வாயில் ஊறின. அப்பர் அடிகள் பேரின்ப நிலையில் ஆடினார், பாடினார், அழுதார், தொழுதார்

மாதர் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொரு நீர் சுமந்தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பாடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

என்னும் தீந்தமிழ்ப் பதிகம் பாடித்துதித்தார். பேரின்ப நிலையில் அப்பர் பெருமான் பாடியருளிய பதிகத்தின் முதற்பாடல் இது. அறம் வளர்த்த நாயகி, ஐயாறப்பருடன் அப்பர் பெருமானுக்குக் காட்சிக் கொடுத்தருளும் இந்தப் பக்திப் பரவசமான காட்சியைக் காண கண்கோடி வேண்டும்.

முடிவுரை

சமயம் மக்களை நல்வாழ்வுக்குரியோராகச் சமைத்து வாழ்விற் இன்பத்தை வகையுறத் துய்க்கச் செய்வது. அதனால் சமயநெறியைத் திருநெறி என்றனர். தமிழ் முன்னோர், உடலும் உயிரும் ஒன்றியிருக்க உணவு இன்றியமையாதது போன்று, வாழ்வும் இன்பமும் ஒன்றியிருக்கச் சமயம் இன்றியமையாதது. தமிழையும், சைவத்தையும் ஈடேற்றத் தொண்டர் குழாங்களும், மடங்களும் தோன்றின. தருமை, திருப்பனந்தாள், திருவாவடுதுறை என்னும் மூன்று திருமடங்களும் சமய நூல்களை வெளியிட்டும், தமிழைப் புரந்தும், புலவர்களைப் போற்றியும் சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றி வருகின்றன.

9. வழிபாடு அன்றும் இன்றும்

கு. இராசசேகரி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
சென்னை

முன்னுரை

தமிழ் பக்தி இலக்கியங்களில் மிகுதியும் பேசப்படுபவை சைவம், வைணவம். சமயங்கள் வேறுபட்டிருப்பினும் அவைப் போதித்த கொள்கைகளும் காட்டிய நெறிமுறைகளும் ஒன்றாகவே இருந்தன. பல்லவர் காலத்தில் (கி.பி. 600-850) பல்வேறு வகையான பக்தி இலக்கியங்கள் தோன்றின. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பிற்காலச் சோழர் எழுச்சி பெற்ற 10-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தைச் சமய மறுமலர்ச்சிக் காலம் எனலாம். அக்காலகட்டத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்தனர். அவ்விலக்கியங்களின் (சைவம், வைணவம்) வழி, வழிபாட்டின் முந்தைய மரபு குறித்தும் பின்னாளில் அடைந்த மாற்றம் குறித்தும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்ககாலத்தில் வழிபாடு

சங்ககாலத்தை அறிவதற்கு அக்கால இலக்கியங்களின்றி வேறு சான்றுகள் இல்லை. பிறவாயாக்கைப் பெரியோன் என்று சிவன் சங்க இலக்கியத்தில் முதலில் வைத்துப் போற்றப்படுகிறார். வைணவ இலக்கியத்தில் திருமால் முதல் தெய்வமாகப் போற்றப்படுகிறார். அரியலால் தேவி இல்லை அரியும் சிவனும் ஒன்னு என்னும் நிலையே சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. நிலப்பரப்பின் அடிப்படையில் அமைந்த தெய்வங்களே மக்கள் வழிபாட்டில் நிலவின. இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடுவதாகப் பண்டைய இலக்கியங்கள் இருந்தன.

தீயினுள் தென்றல் நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களும் ஒளியும் நீ
அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ
(பரிபாடல்3)

என்னும் பாடல் வழி காண்பவை எல்லாம் கடவுள் என்ற உயரிய நோக்குடன் தமிழர் வாழ்ந்ததை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்திற்கு முற்பட்ட தொல்காப்பியத்தில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. மாயோன், சேயோன், வேந்தன் வருணன் என்னும் நானிலத் தெய்வங்களே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆரியர் வருகையினால் ஏற்பட்ட மாற்றங்கள்

கலை, நாகரிகம், சமயம், பண்பாடு இவற்றில் தனித்தன்மை பெற்று விளங்கிய தமிழகம் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மாறுதலுக்கு உட்பட்டது. பிறநாட்டவரின் கொள்கைகளும் சடங்குகளும் தமிழகத்தில் புகுந்ததால் அன்பை, அறத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழக சமயங்கள் ஆரவாரம் நிறைந்த போலிச் சடங்குகளுக்குப் புகலிடமாயின. பண்டைய தமிழகத்தை ஆராய்ந்த க.ப.அறவாணன் தமிழகத்தில் சங்ககால கடைப்பகுதியின் தமிழகம் ஆரியமாகத் தொடங்கிவிட்டது. மறத்தினையே பேசிவந்த தமிழினம் கடவுள்களோடு பேரம் பேசத் தொடங்கியது. தமிழ் மன்னர் ஆரியரின் கைப்பாவைகளாகி விட்டனர்; பண்பாட்டிலும் பழக்க வழக்க அளவிலும் வடநாட்டிலிருந்து தென்னாடு போந்த ஆரியரால் தமிழகம் நிலைகுலைந்து விட்டது என்கிறார் (சைனரின் தமிழிலக்கணக் கொடை, பக்.51,52)

கொலை, வேள்வி, உயிர்பலிக் கொடுத்து வேள்வி செய்தல் முதலிய ஆரவாரச் சடங்குகள் தமிழகத்தில் ஏற்பட்டதால் பைரவம், கபாலிகம் காளமுகம் என்னும் வன்முறைச் சடங்குகள் தோன்றலாயின. அக்காலத்தில் வடமொழிச் சொற்கள் பல தமிழில் கலந்து நடைமுறைச் சொற்களாக்கப்பட்டன.

சிவன்-ருத்திரன், மால்-விட்ணு, கொற்றவை - துர்க்கை, அரசு-இராச்சியம், அமைச்சன் - மந்திரி, மன்னன்-இராசா ஆரியர் வருகையினால் ஏற்பட்ட வேள்வி முறைகளையும், உயிர்ப்பலிகளையும் தமிழக மன்னர் வரவேற்றனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (புறநானூறு) முதலிய மன்னர்கள் வடமொழிக்கு ஆக்கம் தந்து வேதவேள்விகளை ஆதரித்தனர்.

சமயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஆகம வழிபாடுகளும் சாத்திர முறைகளும் தோன்றுவதற்கு முன்னர் தமிழக மக்கள் மரங்களையும் மலைகளையும் இயற்கைப் பொருள்களையும் இறைவனாக எண்ணினர். இவர்கள் வழிபாட்டில் வெறியாட்டும் குரவைக் கூத்தும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

வெறி அறி சிறப்பின் செவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தள் (தொல்,பொருள், புறம்5)

என்னும் அடிகள் வெறியாட்டு நிகழ்வை வெளிப்படுத்துகின்றன. இந்நிலை இடைக்காலத்தில் முற்றிலும் மாறுபட்டது. சமயத்துறைகளிலும் பண்டைய தமிழர் வழிபாட்டு முறைகளிலும் ஆரியர்களின் வழிபாட்டு முறையே ஆதிக்கம் பெற்றிருந்தது. கொல்லாமை அறத்தைக் கடைப்பிடித்த தமிழ்ச் சமூகத்தில் வேள்வி முறைகள் தொடங்கலாயின. உயிர்ப்பலி கொடுத்து வேள்வி செய்வதைத் தமிழ் சமயங்கள் வன்மையாகக் கண்டிக்கலாயின. எனினும் சமயத்துறையில் வளர்ச்சி ஏற்படவில்லை. மாறாக அவைப் பிற மதங்களின் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும்

தமிழ்ச் சமுதாயம் புலைவேள்விகளுக்கும் கொலைச் சடங்குகளுக்கும் நிலைக்களனாய் அமைந்ததைக் கண்ட சான்றோர் பெருமக்கள் பக்தி இயக்கத்தை ஏற்படுத்தினர். அவ்வியக்கம் வேள்விபுரிதலைத் தடுத்து, பலியிட்டு படைத்தல்

பூசையாகாது. அர்ச்சனைப் பாட்டேயாகும் என்னும் நிலையை உருவாக்கியது. திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் முதலான சைவசமயக் குரவர்களும் திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் முதலான ஆழ்வார்களும் பல்வேறு வகையான பக்திப் பாடல்களைப் பாடினர். இவர்கள் சடங்குகளும், வேதவேள்விகளும் பயனற்றவை என்பதை எடுத்துரைத்தனர்.

கங்கையாடிலென் காவிரி ஆடிலென்? வேதம்
ஓதிலென் வேள்விகள் செய்யிலெரன்?
துன்பிலாத் தொண்டர்குடித் தொழுதழுது ஆடிப்பாடும்
அன்பலால் பொருளும் இல்லை ஐயன் ஐயனார்க்கே
(அப்.தேவாரம் 509:2,4)

என்னும் பாடலடிகள் போலிச்சடங்குகளையும் ஆரவாரங்களையும் அறவே கண்டிக்கின்றன. இவ்வாறு (நாயன்மார்கள் பாடிய திருமுறைகளும், ஆழ்வார்கள் ஓதிய திவ்யப் பிரபந்தங்களும், பக்தி இலக்கியத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

பக்தி இலக்கியங்களில் வழிபாட்டின் வளர்ச்சி

பக்தி இலக்கியம் சங்க இலக்கியத்தின் வளர்நிலை எனலாம். சங்க இலக்கியத்தில் காணப்படும் அகத்திணை மரபுகள் பக்தி இலக்கியத்தில் ஆண்டான் - அடிமை பாவனையாகி, பின்னர் நாயகன் - நாயகி பாவமாக வளர்ச்சியுற்றது. மனம், மொழி, மெய்களால் இறைவனை அருவமாக இன்றி உருவநிலையிலும் வழிபடலாயினர். இதனால் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்துப் பாடும் மரபு ஏற்பட்டது.

உள்ளம் சிலிர்க்குதே - கண்ணா
உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க
கள்ளங் கரவின்றி யுன்னைக்
காதலிக்க காதலிக்க - என்
உள்ளம் சிலிர்க்குதே - கண்ணா (மீரபாய் பாடல்)

என்னும் பாடலில் மீரா தன்னைத் தலைவியாகவும் கண்ணனைத் தலைவனாகவும் பாவித்துப் பாடுவதை அறியமுடிகிறது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழி தலைவியின் காதல் அவத்தையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்கதிக்கு யாதுமோர் குறைவிலை
(திருநா.தேவாரம்)

என்னும் நோக்கோடு அருட்செல்வர் தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று திருப்பாடல்களைப் பாடினர். அங்ஙனம் சமய ஆசாரியர்கள் நேரில் சென்று தனித்தனியே பதிகங்கள் பாடிய இடங்களும் ஊர்களும் பாடல் பெற்ற தலங்கள் எனவும் அவ்வாறு தனித்தனியே பதிகங்களுள் பாடப்பெறாமல் பாடல்களில் இடையிடையே குறித்து வைக்கப்பெற்ற இடங்கள் வைப்புத்தலங்கள் எனவும் அழைக்கப்பட்டன. அத்தலங்கள் தோறும் சென்று தொண்டர்கள் பல்வேறு திருப்பாடல்களைப் பாடுவதும் வழிபடுவதும் இன்று வழக்கமாகிவிட்டன. சென்னையில் திருவான்மியூர், மயிலாப்பூர் முதலான பல்வேறு பகுதிகளில் நாள்தோறும் சைவ, வைணவ இலக்கியங்கள் குறித்த நிகழ்ச்சிகள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

இன்றைய சூழலில் இறைவனுக்காகப் பணி செய்பவர்களும் உண்டு. இறைவனை வழிபடாதவர்களும் உண்டு. இறைவனிடம் அருள்கேட்ட நிலைமாறி இன்று பொருள் கேட்கும் நிலையே வளர்ந்துள்ளது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பக்தியிலும் பிரதிபலிக்கிறது. கடவுளர்களின் திருக்கோயில்களுக்குச் சென்றால், இன்ன பலன் கிடைக்கும் என்னும் நோக்கிலேயே ஆலயங்கள் செல்வதும் பனுவல்கள் ஓதுவதும் இன்று வாடிக்கையாகிவிட்டன.

ஏர்ஆணைக் காவில்உறை என் ஆனைக் கன்றளித்த
போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால் - வாராத
புத்தி வரும் பக்திவரும்; புத்திஉற் பத்தி வரும்
சத்தி வரும், சித்தி வருந் தான்
(தனிப்பா,பா.1அ.மாணிக்கம்)

என்னும் பாடல் விநாயகப் பெருமானை வழிபாட்டால் ஏற்படும் பலனை விரித்துரைக்கிறது. இக்காலத்தில் பெரும்பாலான ஆடவர், பதவி உயர்வு கருதியும் வாணிக வருவாய் வேண்டுமென்றும் இறைவனை வழிபடுகின்றனர். கன்னிப்பெண்கள் திருப்பாவை, திருவெம்பாவை முதலான நூல்களை ஓதி, நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென்று கூட்டுவழிபாடு செய்கின்றனர். ஔவையார் நோன்பு நோற்கும் வழக்கம் இன்றும் சில பகுதிகளில் இருந்து வருகிறது. பொருள் முதல் வாதத்தையே நோக்கமாகக் கொண்ட இச்சமுதாயத்தில் வணிகமுறை பக்தியே வளர்ந்துள்ளது எனலாம்.

இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் வழிபாட்டுமுறை சங்ககாலம் தொடங்கி இன்றுவரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே பக்தி இலக்கியத்தில் இன்றைய பிரதிபலிப்பு. கால மாற்றத்தினால் தன்நலன் காக்கவே வழிபாட்டு முறையைப் பயன்படுத்திய, மனிதர்களைப் பற்றிய இலக்கியங்களும் எதிர்காலத்தில் வரலாம். இன்று, அறிவியல் முன்னேற்றத்தால் மனிதன் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், ஆன்மாவைப் பற்றி அறியாமையால் வெளிச்சம் தெரியாமல் இருட்டிலேயே பயணிக்கிறான். அறிவியலறிவும் ஆன்மா அறிவும் (இறையறிவு) இணைந்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் வெற்றி என்பது திண்ணம்.

10. திருவையாறு ஔவைத் திருக்கோயிலும் வழிபாட்டு நெறிகளும்



கண்ணகி கலைவேந்தன்
ஔவைக்கோட்டம்
திருவையாறு

முன்னுரை

இயற்கை எழிலும் பசுமைப் பொழிவும் நிறைந்த காவிரிக் கரையோரத்தில் தஞ்சையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சாலையில் 13 கி.மீ. தொலைவில் திருவையாறு திருநகரம் அமைந்துள்ளது. ஊர் நடுவே ஐயாறப்பர் திருக்கோயிலும் கிழக்குப் பகுதியில் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான சற்குரு தியாகராச சுவாமிகள் வாழ்ந்து மறைந்த நினைவிடமும் மேற்குப் பகுதியில் வடக்குப் பெருந்தெருவில் ஔவைக் கோட்டமும் முகப்பு பகுதியில் ஔவைத் திருக்கோயிலும் அமைந்துள்ளது.

ஔவைத் திருக்கோயில் நன்னீராட்டு

ஔவை கோட்ட கால்கோள் திருப்பணிகள் 1993ஆம் ஆண்டு தமிழ்ப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, நிதி நெருக்கடி காரணமாக 10 ஆண்டுகள் கட்டுமானப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 10 இலட்சம் மதிப்புள்ள ஔவைக் கோட்டமும் ஔவைத் திருக்கோயிலும் தமிழர் கலையினைப் பறை சாற்றும் வகையில் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலின் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா 26.05.2003 அன்று சிறப்பாக நடத்தப்பட்டு ஔவைத் தமிழ் ஆய்வு மாநாடும் அறிஞர்களின் கட்டுரைத் தொகுப்புகள் அடங்கிய ஔவைத் தமிழ் ஆய்வு மாலைத் தொகுதிகள் இரண்டும் வெளியிடப்பட்டன.

ஔவைத் திருக்கோயில் அமைப்பு

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற ஔவையாரின் அறமொழிகளை வாழ்வியலாக்க ஔவைக்கோட்ட முகப்பில் கிழக்கு நோக்கிய நிலையில் ஔவைத் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் கூடுதல் உயரம் 15 அடி, கருவறை உயரம் 8 அடி, விமான உயரம் 7 அடி என்ற நிலையில் திருக்கோயில் உருவாக்கப்பட்டுள்ளது. கருவறையின் மூலப்பகுதியில் ஔவையார் திருவுருவம் நின்ற கோலத்தில் 2.25 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஔவையார் திருவுருவத்தின் வலக் கையில் செங்கோலும் இடக்கையில் ஓலைச்சுவடியும் கூனற்ற நிமிர்ந்த கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தலையிலுள்ள கூந்தலைச் சிறுவட்டமாகப் பக்கவாட்டு கொண்டையாக எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் உட்புறமும், வெளிப்புறமுமம் சலவைக்கற்கள் பொருத்தப்பட்டுள்ளன. கருவறையின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விமானப்பகுதி சிற்ப வேலைப்பாடுகளுடன் பல்வகை வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. நான்கு பக்கங்களும் ஔவையார் திருக்கோயில் கோபுரத்தில் நின்ற கோலத்தில் ஔவைச் சுதைச் சிற்பம் காட்சி நல்குகிறது. விமானத்தின் மேற்பகுதி 1.25 அடி உயரத்தில் செப்புக்கலசம் பொருத்தப்பட்டுள்ளது. ஔவை கோட்ட உள்பகுதியில் ஐம்பொன்னலான உலாவரும் திருமேனி 2.5 அடி உயரத்தில் நேர்த்தியான கலை நுட்பத்துடன் அமைக்கப்பட்டு வழிபாட்டில் இடம் பெற்று வருவதும் அறியத்தக்கதாகும்.

வழிபாடு

ஔவைத் திருக்கோயிலின் வழிபாடு தனித்துவம் வாய்ந்தது, சிறப்புமிக்கது. பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சமமானவர்கள் என்பதை மெய்பிக்கும் வகையில் பெண்கள் கோயிலின் கருவறை வரை சென்று நீராட்டும் வழிபாடும் செய்ய தகுதியானவர்கள் என்பதை நிலைநாட்டும் வகையில் பெண்களே நீராட்டு உட்பட அனைத்தும் செய்து வருவது குறிப்பிடதக்கதாகும். குறிப்பாக, இக்கோயிலுக்குத் தொடர்ந்து

வழிபாடும் திருவிழாவும் நடக்க வேண்டும் என்பதற்காக அவர்களே முன்னின்று நீராட்டும், வழிபாட்டு நெறிகளையும் நடத்தி வருவது நல்ல முன்மாதிரி எனலாம். வழிபாட்டு முறைகள் அனைத்தும் தமிழிலேயே நடத்தப்படுவதுடன் தமிழ்நெறி சார்ந்த முறைகளையும் ஔவை அறநெறிகளையும் ஓதும் நிலையில் இத்திருக்கோயில் வழிபாடு அமைந்திருப்பது சிறப்பிற்குரியது எனலாம்.

நாள்தோறும் வழிபாடு

ஔவைத் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள ஔவை மூலவருக்கு நாள்தோறும் சிறப்பு நீராட்டும் வழிபாடுகளும் ஒரு கால பூசையாக நடைபெற்று வருகின்றன. காலைப்பொழுதில் நாள்தோறும் மங்கல மகளிரைக் கொண்டு வழிபாடு தமிழ் முறையில் கண்ணகி அம்மையாரால் மகளிருக்கு மகளிரே வழிபாடு செய்யும் சிறப்பும் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

ஔவை மூலவருக்கு நல்லெண்ணெய் காப்பும் பச்சரிசி மாவு கரைத்து நீராட்டும் செய்யப்படுகிறது. அதனைத் தொடர்ந்து நவதானியங்களை உள்ளடக்கிய சீரகப்பொடி, திராவியப் பொடி, நீராட்டலும் மஞ்சள் நீராட்டலும் நடைபெறுகின்றது. மனித உடலுக்கு ஆற்றலைத்தரும் தேன், இளநீர், பால், தயிர் ஆகியவற்றைக் கொண்டும் ஔவை மூலவருக்கு நாள்தோறும் நீராட்டு வழிபாடு நடைபெற்று வருகின்றது. பின்னர் ஔவை மூலவர் துணியால் துடைக்கப்பட்டு, நெற்றி, செங்கோல், ஓலைச்சுவடி, திருப்பாதங்கள் ஆகிய இடங்களில் குளிர்ச்சி தரும் சந்தனமும் செந்தூள் பொட்டும் வைக்கப்பட்டு, நெற்றியில் திருநீறு பட்டையும் இடப்படுகிறது. அதன் பின்னர் பல்வகையான வண்ண நிறத்திலான புடவைகள் ஒவ்வொரு நாளும் அணிவிக்கப்பட்டு, ஒப்பனை செய்யப்பட்டு வருகிறது. உருத்திராட்ச மாலையும் கழுத்திற்கு அணிவிக்கப்படுகிறது.

நீராட்டலுக்குப் பின் விளக்கேற்றி தீபஒளி வழிபாடும் மலர் வழிபாடும் நிகழ்த்தப்படுகின்றன. ஔவையாரின் பாலும்

தெளிதேனும் ஆத்திசூடியும் போற்றித் திருப்பாடல்களாக இசைக்கப்படுகின்றன. ஔவைத் திருக்கோயில் வளாகத்தில் ஔவைத் தொடக்கப்பள்ளிக் குழந்தைகள் நாள்தோறும் மூலவரை வணங்கி விட்டு உள்ளே செல்வதும் ஔவை மூலவை எண்ணி முற்பகல், பிற்பகல் வகுப்புகள் தியானத்துடன் தொடங்கப்படுவதும் நினைக்கத்தக்கதாகும்.

வாரந்தோறும் வழிபாடு

வெள்ளி தோறும் சிறப்பு வழிபாடும் ஞாயிறு தோறும் இசை வழிபாடும் அறநெறிகள் முற்றோதலும் பள்ளிக்குழந்தைகளுக்குத் திருமுறை இசைப்பாடல்களைப் பயிற்றுவிக்கும் வகுப்புகளும் நடைபெற்று வருவது அறிதற்குரியது.

திங்கள் தோறும் வழிபாடு

திங்கள் தோறும் முழுநிலவு நாளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. ஐயாறப்பர் வார வழிபாட்டுக்கழகத்தின் சார்பில் கிரிவலமாக வரும் அடியார்கள் ஔவைத்திருக்கோயிலில் இசைப் பாடல்களால் ஔவையாருக்கு வழிபாடும் நடத்தி வருவது நினைத்தற்குரியதாகும். பங்கேற்கும் அடியார்களுக்கு பால், பழம் வழங்கி சிறப்பித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். நிறை நிலவொளியில் ஔவையார் என்ற தொடர் சொற்பொழிவு முழுநிலவு நாட்களில் நிகழ்ந்ததும் அறியத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் ஔவையார் திருவிழா

ஆண்டுதோறும் கலைமகள் நாள் அன்று கலைமகளின் மறுபிறப்பாகக் கருதப்படும் ஔவையாருக்கு கலைமகள் ஔவையார் திருவிழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திருவிழாவை முன்னிட்டு மூலவர் ஔவைத் தமிழ் தெய்வத்திற்கு முற்பகலில் சிறப்பு நீராட்டு நிகழ்வும் சந்தனகாப்பு அணிவித்தலும் நடைபெறும். இசைத்தமிழ் வழிபாட்டு நிகழ்வுகளும் அறநெறிகள் முற்றோதுதலும் சிறப்பு வழிபாடாக நிகழ்வுறும். பிற்பகலில் ஔவைக்கோட்ட அறிஞர்

பேரவையின் 49 அமைச்சர்கள் கூடி, உரிய கருத்துப் பரிமாற்றத்திற்குப்பின் தமிழ்மொழி, இனம், பண்பாடு, கல்வி, கலை, தமிழர் அறிவியல் தொடர்பான தமிழர் வாழ்வியலுக்கு வழிகாட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மாநில, நடுவண் அரசுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தொடர்ந்து இசை அரங்கம், கவி அரங்கம், நடன அரங்கம், பாராட்டு அரங்கம் ஆகியவையும் நடைபெற்று வருகின்றன. திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக அறிஞர் பெருமக்களும் சமூகச் சேவையாளர்களுக்கும் ஔவை விருதும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மின் எழில் திருத்தேர் உலா

மாலைப்பொழுதில் ஔவை உலாவரும் திருமேனி வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டு மின் எழில் திருத்தேர் உலா திருவையாற்றின் நான்கு வீதிகளிலும் வலம் வரும். திருத்தேர் உலாவில் மங்கல இசை, சிலம்பாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், பல்லிய இசை, நாட்டுப்புறக் கலைஞர்களின் ஆடல் நிகழ்ச்சிகளும் நடைபெறும். உலாவில் நெல்லிக்கனி அனைவருக்கும் சிறப்பு அமுதாக வழங்கப்படும் இரவில் நல்லுணவு மக்களுக்கு உணவுக் கொடையாகவும் மகளிருக்கு மங்கலம் பொருள்களும் வழங்கப்படும். மறுநாள் வெற்றித் திருமகள் நாளன்று புதியதாகப் பள்ளியில் சேருவதற்கு அரிச்சுவடிச் சொல்லித்தரும் கல்வித் தொடக்கம் நிகழ்வும் சான்றோர்களின் முன்னிலையில் நிகழ்விறும்.

மலர் வழிபாடு

நீராட்டு வழிபாட்டிற்குப்பின் கழுத்தில் மலர் மாலை சூட்டப்படுவதும் திருவிழாக் காலங்களில் திருவாச்சிக் கொண்டு மாலைகள் வரிசையாகக் கோர்க்கப்பட்டு மலர்வழிபாடு செய்யப்பட்டும் வருகிறது. உதிரிப் பூக்களைக் கொண்டு மூலவருக்கும் உலாவரும் திருமேனிக்கும் மலர் வழிபாடு நிகழ்த்தப்படுவதும் உண்டு.

நெல்லிக்கனி வழிபாடு

ஔவையார் நெல்லிக்கனி உண்டு நீண்ட நாள் உயிர் வாழ்ந்தமையை நினைவில் கொண்டு நெல்லிக்கனி மனித உடலுக்கு நோய் அகற்றும் மாமருந்து என்பதை அறிவுறுத்தும் வகையில் நெல்லிக்கனி வழிபாடு நடத்தப்பட்டு வருவது அறியத்தக்கதாகும். கலைமகள் ஔவையார் திருவிழாவின் பொழுது பொதுமக்கள் அனைவருக்கும் நெல்லிக்கனியினை கனிக்கொடையாக வழங்குவதும் நினைக்கத் தக்கதாகும்.

ஒளி, ஒலி வழிபாடு

நன்னீராட்டிற்குப் பின் கற்பூர ஒளி வழிபாடு, மணி ஓசை ஒலி வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு, அனைவருக்கும் செந்தூள், திருநீறு வழங்கப்படும். ஒலிவழிபாட்டின் போது பாலும் தெளிதேனும் என்ற ஔவையாரின் அறநெறிப்பாடல் போற்றி வழிபாடாக நிகழ்த்தப்படும். ஔவை மூலவர் முன் நின்று பள்ளிக் குழந்தைகளும் பெரியவர்களும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற அறநெறிப் பாடல்களை இசைத்து அறநெறி வழிபாடாக நடைபெற்று வருவதும் அறியத்தக்கதாகும். நல்வழி, மூதுரை, தனிப்பாடல்களும் முதன்மையான நாட்களில் முற்றோதும் நிகழ்வாக நடைபெறுவதும் அறநெறி வழிபாடாகக் கருதப்படுகிறது. ஔவை மூலவரிடம் தரமான கல்வி வேண்டியும் திருமணம் வேண்டியும் பிள்ளைப்பேறு வேண்டியும் வேண்டல் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. நோயின்றி வாழ்வதற்கும் கவலைகள் நீங்கி வாழ்ந்திடவும் வேண்டல் வழிபாடு நடத்தப்படுவதும் உண்டு.

தியான வழிபாடு

உலக அமைதிக்கும் வாழ்க்கை அமைதி வேண்டியும் தியானத்தில் ஈடுபட்டு வழிபடுவதும் உண்டு. பள்ளிக்குழந்தைகள் உளத்தூய்மை வேண்டி நாள்தோறும் காலை, நண்பகல் பொழுதுகளில் தியான வழிபாட்டில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உடல் வழிபாடு

உடலைப் பேணுவதை, நிலை நிறுத்தும் வகையில் இருகரம் குவித்து வணங்குதல், தலை குனிந்து வணங்குதல், தரையில் விழுந்து வணங்குதல், கண்மூடி வணங்குதல் போன்ற உடல் வழிபாட்டு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. வழிபாட்டிற்குப் பின் சர்க்கரைப் பொங்கல், சுண்டல் வழங்கல் போன்றவையும் நிகழ்வுறும், வழிபாட்டில் வைக்கப்பட்ட நெல்லிக்கனிகள் மற்றும் இதரக்கனிகள் மற்றவர்களுக்கு கொடையாக வழங்கப்படும். நல்ல நாட்களில் ஔவை மூலவருக்கு வழிபாட்டுப் பொருளாக மருதாணி வைக்கப்பட்டு பின்னர் மங்கல மகளிருக்கும் குழந்தைகளுக்கும் அரைத்த மருதாணி வழங்கப்படும். உடலைப் பண்படுத்தும் வகையில் அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகைத் திருநாட்களில் நோண்பு வழிபாடு நிறைவேற்றப்படும்.

மங்கல மகளிர் வழிபாடு

திருமண வேண்டியும் பிள்ளைப்பேறு வேண்டியும் ஔவையாருக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருமணமான பெண்கள் ஒன்று கூடி தங்கள் கணவன்மார்களும், குழந்தைகளும் நீண்ட நாள் வாழ வேண்டியும் வழிபாடு நடத்தி, மங்கல மகளிருக்கு மஞ்சள், செந்தூள், கண்ணாடி, சீப்பு, மங்கல நாண், மஞ்சள் பூசப்பட்ட தேங்காய், வளையல் போன்ற பொருள்களை ஔவை முன் வைத்து வழிபாடு நடத்தி மங்கல மகளிர் அனைவருக்கும் வழங்கி மகிழ்வர். திருமணமாகாத கன்னிப் பெண்களைக் கிழக்கு நோக்கி அமரச்செய்து, சந்தனம் அணிவித்து விரைவில் திருமணமாக வேண்டி ஔவையாரிடம் வேண்டி மங்கலப் பொருள்களை வழங்குவர். பிள்ளைப் பேறு வேண்டியும் பிள்ளைப்பேறு பெற்று தாயும் சேயும் நலமுடன் வாழ்வும் மங்கல மகளிர் வேண்டி இச்சிறப்பு வழிபாடுகள் இத்திருக்கோயில்களில் நடைபெற்று வருவது சிறப்பிற்குரிய வழிபாடாகக் கருதப்படுகிறது.

உணவுக் கொடை வழிபாடு

ஆண்டுதோறும் திருவையாற்றில் நடைபெறும் ஏழூர்த் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கும், பொது மக்களுக்கும் முக்கனியுடன் கூடிய அறுசுவை உணவுக்கொடை அன்னதான விருந்து வழங்கி வழிபாடு நடத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும். சுந்தரமூர்த்தி நாயனாரையும் ஔவையாரையும் கயிலாயம் அழைத்துக் கொண்டு காட்சி வழங்கிய சிவபெருமானின் ஆற்றலை நினைவு கூறும் வகையில் சுவாதி விண்மீன் நன்னாளில் ஆண்டுதோறும் சிறப்பு வழிபாடும் இசை வழிபாடும் உணவுக் கொடை விருந்தும் நடைபெற்று வருகிறது.

களிறு, பசு வழிபாடு

ஔவையாருக்கு விநாயகப் பெருமானின் மீது கொண்டு ஈடுபாட்டினை உணர்த்தும் வகையில் களிறு வழிபாடும், பசுவழிபாடும் நடத்தப்பட்டு வருகிறது. களிறுக்கு ஆடை வழங்கியும், மாலை அணிவித்தும் பழங்கள் வழங்கியும், களிறு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ் பெயர்சூட்டு விழா

குழந்தைகளுக்குத் தனித்தமிழில் பெயர் சூட்டவும் வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்பெயர்களாக மாற்றுவதற்கான தமிழ் பெயர் சூட்டு விழாவும் தாய்மொழி நாளான பிப்ரவரி 21ஆம் நாள் நடத்தப்பட்டு வருவதும் நினைக்கத்தக்கது.

தமிழர் திருநாள் வழிபாடு

தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ் புத்தாண்டாக நிலைநிறுத்தும் வகையில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்வுடன் கொண்டாடும் வகையில் தமிழர் திருநாள் வழிபாடுகள் முன்கூட்டியே சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. பொங்கல் படையலிட்டு பள்ளிக் குழந்தைகளின் கும்மி, கோலாட்ட கிராமிய நடனங்களுடன் இவ்வழிபாடு நடைபெற்று வருவதும் அறிதற்குரியது. உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம்

நாள் ஔவையாருக்குச் சிறப்பு நீராட்டும் வழிபாடும், சிறந்த மகளிருக்கு விருதும் வழங்கி மலர் வழிபாடு நிகழ்த்தப்படுவதும் சிறப்பிற்குரியது. வழிபாட்டில் பங்கு பெறுவோர்க்கு வேண்டுகோள்.

ஔவையார் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழா நிகழ்வுகளிலும் ஔவைக் கோட்ட அறிஞர் பேரவையில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பணியாற்று விரும்புவோரும், வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் நடத்த விரும்புவோரும் திருவையாறு ஔவை அறக்கட்டளைத் தலைவர் கண்ணகி கலைவேந்தன் அவர்களிடம் முன்பதிவு செய்து கொண்டால் அனைத்து வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கலாம். பங்கேற்க விரும்புவோர் தொடர்பு கொண்டு ஔவையாரின் திருவுருளைப் பெற வேண்டப்படுகிறது.

முடிவுரை

திருவையாறு ஔவை அறக்கட்டளையால் ஔவைக்கோட்டமும் ஔவைத் திருக்கோயிலும் வழிபாட்டு முறைகளும் கலைமகள் ஔவையார் திருவிழாவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. தாய்க்குலத்திற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் மகளிரே கருவறையில் நின்று அனைத்து வழிபாட்டு முறைகளும் சிறப்புற நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருக்கோயில் ஔவையாருக்கென்று தனியாக அமைக்கப்பட்டிருப்பதும் வேறு எந்தக் கடவுளரும் இக்கோயிலில் இல்லாது கூனற்ற நிலையில் நிமிர்ந்த கோலத்தில் ஔவையாரின் மூலவர் சிலையும் உலாவரும் திருமேனியும் அமைக்கப்பட்டிருப்பதும் சிறப்பிற்குரியதாகும்.

11. குங்குலிய கலய நாயனாரின் இல்லற மாண்புகள்

ப.பிரியா
பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை

முன்னுரை

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கு இறைவா போற்றி"

என்பது திருவாசகத் திருமொழி. சைவப் பழம் பதியாகத் திகழும் தென்னாட்டில் தமிழ்நாடு தலைசிறந்த ஞானியர்களையும், அருளாளர்களையும் கொண்டது. சிவனை வழிபடுபவர்கள் சிவனடியார்கள் அல்லது நாயன்மார்கள் என்று அழைக்கப்பட்டனர். பெரிய புராணத்தில் உள்ள 63 நாயன்மார்களும் இப்புண்ணிய பூமியில் அவதரித்து சிவத்தொண்டினை ஆற்றியிருக்கிறார்கள். 63 நாயன்மார்களில் ஒருவரான குங்குலிய கலய நாயனாரின் இல்லற சிறப்பு இயல்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருக்கடவூர்

சோழ வள நாட்டில் திருக்கடவூர் புகழ்பெற்ற திருத்தலமாகும். அபிராமி பட்டருக்கு அன்னை இவ்வூரில் தான் காட்சி கொடுத்தாள். மார்க்கண்டேயருக்குச் சிவபெருமான் அருள்புரிந்ததும் இத்திருத்தலம் தான். இத்திருக் கடவூரிலே அந்தணர் குலத்தில் கலயர் என்பவர் வாழ்ந்து வந்தார். தேவர்களும் அசுரர்களும் ஒன்று சேர்ந்து திருபாற்கடலை கடைந்து அமுதம் எடுத்தபோது தேவர்கள் அமுதத்தைக் குடத்திலிட்டு இத்தலத்தில் தான் வைத்தார்கள். அக்குடம் அமிர்தலிங்கமாய் இங்கே நிலைத்துவிட்டது. அதன் காரணமாக இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் அமிர்தகடேசுவரர் என்ற

திருப்பெயரைப் பெற்றார். இப்பெருமை நிறைந்த ஊரிலே பிறந்த கலயர் என்பவர் சிவபெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராகத் திகழ்ந்தார்.

கலயரின் வறுமைநிலை

கலய நாயனார் அனுதினமும் இறைவனுக்குக் குங்கிலிய தூபமிடும் திருப்பணியை ஆலயத்தில் செய்து வந்தார். கலயர் குடும்பமும் வறுமையில் வாடியது. இரண்டு நாட்கள் தொடர்ந்து உணவில்லாமல் அவருடைய குடும்பம் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தாலியைவிற்று இறைத்தொண்டு

வறுமையைச் சாதிக்காத கலயரின் மனைவி தன் தங்கத் தாலியைக் கழற்றிக் கொடுத்து உணவுப் பொருட்கள் வாங்கி வரும்படி கூறினாள். அதைக் கண்ட கலயர் தயங்கினார். தாலியை ஏன் தருகிறாய்? என்று கேட்டார்.

பசியை விட தங்கம் உயர்ந்தது இல்லை. அதற்குப் பதில் மஞ்சள் துண்டைக் கட்டிக்கொள்கிறேன். நீங்கள் இதை விற்று உணவுப் பொருட்களை வாங்கி வாருங்கள் என்று மறுபடியும் அவள் வலியுறுத்தினாள். வேறுவழியின்றி கலயரும் தாலியை விற்க புறப்பட்டார். அப்போது வழியில் ஒருவன் குங்கிலிய மூட்டையோடு போவதைக் கண்டார். வீட்டில் உள்ள வறுமையை அவர் மறந்தார். மனைவி சொன்ன வார்த்தைகளையும் அவர் மறந்து போனார். இறைவனுக்குக் குங்கிலியம் போட அருமையான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதை எண்ணி மகிழ்ந்தார். தாலியை அவனிடம் கொடுத்து அதற்குப் பதிலாகக் குங்கிலியத்தை வாங்கினார். வழக்கம் போல் இறைவனுக்குக் குங்கிலிய தூபமிடும் பணியை அவர் செய்யத் தொடங்கினார்.

மனைவி மக்களை நினைத்து வீடு திரும்புதல்

இரவு நெருங்கியது. அப்போது தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற நினைவு அவருக்கு வந்தது. அங்கே எல்லாரும் பட்டினியாக இருப்பார்களே என்ற எண்ணமும் அப்போது தான் அவருக்குத் தோன்றியது. தாலியை விற்று உணவுப் பொருட்கள்

வாங்கிவரும்படி மனைவி சொன்னாளே. இப்போது வெறுங்கையுடன் சென்றால் அவள் நிச்சயமாகக் கோபம் கொள்வாள் என்பதை அவர் புரிந்து கொண்டார். ஆயினும் தன்னைத் திடப்படுத்திக் கொண்ட கலயர் வீட்டுக்கு வந்தார். அங்கே அவருக்குப் பேரதிசயம் காத்திருந்தது. மனைவியின் வசை மொழிகளை எதிர்பார்த்து சென்றவருக்கு அங்கே அன்பு கலந்த வரவேற்பு காத்திருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததும் அது நம் வீடுதானா? என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது.

சிவபெருமான் பொருள் அருளல்

அரிசி... பருப்பு... சர்க்கரை ஆகியவை மூட்டை, மூட்டையாக அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நெய்யும், பாலும், வெண்ணையும் பாத்திரங்களில் நிறைந்து இருந்தன. களைத்து வந்த கலயருக்கு அவருடைய மனைவி வெள்ளி கூசாவில் காய்ச்சிய பசும்பாலைக் கொண்டு வந்து கொடுத்தாள். குழந்தைகள் வாழையிலையில் அறுசுவை உணவுகளை சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கொல்லையிலே அழகிய பசுவும் கன்றும் இருப்பதை அவர் கண்டார். எல்லாமே மாயமாக அவர் கண்களுக்கு இருந்தது. மனைவியைப் பார்த்து என்ன இதெல்லாம்? என்று கலயர் கேட்டார். அவள்நடந்தவற்றை அவரிடம் தெரிவித்தாள். சிவபெருமான் என் கனவில் தோன்றி செல்வம், வீடு தேடிவரும். மனம் போல் மாங்கல்யம் என்று ஆசீர்வாதம் செய்தார். அதைத் தொடர்ந்து, ஆட்கள் இவற்றையெல்லாம் கொண்டு வந்தார்கள். கொல்லையிலே பசுவை கட்டினார்கள். நீங்கள் சிவபெருமானின் மீது வைத்த பக்தியே இதற்கெல்லாம் காரணம். இனி நமக்கு வறுமை இல்லை என்று அவள் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டே போனாள். இதையெல்லாம் கேட்ட கலயரால் அதை நம்ப முடியவில்லை.

தன் குடும்பம் பட்டினியால் வாடுவது தெரிந்தும் மனைவி கொடுத்த தாலியை விற்று இறைவனுக்குக் குங்கிலிய தூபம் போட ஆரம்பித்த அவருடைய அன்பு உள்ளத்தை இறைவன் கண்டார். வறுமை வரும் போது சொந்த பந்தங்களையெல்லாம் மறந்து மனம் போன போக்கில் செயல்படும் மக்களை நாம்

கண்டு கொண்டிருக்கிறோம். பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள். ஆனால் கலயர் இதற்கு நேர்மாறான குணம் கொண்டிருந்ததைக் கவனிக்க வேண்டும். சுயநலமில்லாத இந்த அன்பை அறிந்த சிவபெருமான் அவருடைய வறுமையை நீக்க அருள்புரிந்தார். சுயநலத்தை ஒருமனிதன் துறந்துவிட்டால் எல்லா நலனும் அவனைத் தேடி வரும் என்பதற்குக் கலயரின் வரலாறு நமக்குச் சான்றாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

சிவலிங்கச் சாய்வு

கலயரின் பெருமையை உலகுக்கு உணர்த்த மற்றொரு சம்பவமும் நடந்தது. குடந்தைக்கு அருகே திருப்பனந்தாளிலே சிவலிங்கத் திருவுருவிற்குச் சாய்வு நேர்ந்தது. அச்சாய்வைப் போக்கிப் பெருமானை வழிபட மன்னன் விரும்பினான். அவன், தன் சேனை யானைகளையெல்லாம் பூட்டித் திருவுருவை இழுப்பித்தான். இழுப்பித்தும் அவன் விருப்பம் நிறைவேறவில்லை. அவன் துயரக்கடலில் அழுந்தினான்.

சிவலிங்க நிமிர்வு

மன்னன் துயரைக் குங்குலியக்கலய நாயனார் கேள்வியுற்றுத் திருப்பனந்தாள் சேர்ந்தார். அங்கே மன்னன் துயரையும், சேனை யானைகளின் இளைப்பையுங் கண்டார்; யானும் இத்தொண்டில் ஈடுபடுகிறேன் என்று சிவலிங்கத்திற் பூட்டியுள்ள கயிற்றைத் தங்கழுத்திற் பூட்டி இழுத்தார். அன்புக் கயிற்றின் இழுப்புக்குச் சிவலிங்கம் நிமிராதிருக்குமோ? சிவலிங்கம் நிமிர்ந்துவிட்டது. மன்னன், நாயனாரை வணங்கி வாழ்த்தித் திருக்கோயிலில் திருப்பணி செய்து தனது பதியைச் சேர்ந்தான்.

முடிவுரை

தன் குடும்பம் இரண்டு நாட்களாகப் பட்டினி கிடந்த போதும் தன் மனைவி கொடுத்த தங்கத் தாலியை விற்று குங்கிலிய தூபம் போட்டார் கலயர். அவருடைய தூய அன்பை அறிந்து கொண்ட சிவபெருமான் வறுமையை அகற்றினார். மன்னனால் முடியாத காரியத்தைக் கலயனார் செய்தார். சிவலிங்கம் நிமிர்ந்தது. இக்கட்டுரையின் மூலம் கலயனாரின் இல்லற வாழ்வியல் சிறப்புகளை அறியமுடிகிறது.

12. பன்னிரு திருமுறைகளில் மூவர் இசைத்தமிழ்



முனைவர் சிறி நாகபூசணி அரங்கராசு
சிரேசுட விரிவுரையாளர், தரம்-2
இசைத்துறை, இராமநாதன் நுண்கலைப்பீடம்
யாழ்ப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

முன்னுரை

பன்னிரு திருமுறைகளில் மூவர் இசைத் தமிழில் சிவநெறிக்குரிய சமய குரவர் நால்வர் அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போராவர். இவர்களில் சம்பந்தர், அப்பர், சுந்தராகிய மூவரும், இசையூடாகத் தமிழைக் கொண்டு, தமிழர் சமயமாகிய சைவத்தை வளர்க்கத் துணிந்தனர். பன்னிரு திருமுறைகளில் சம்பந்தரின் பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும், அப்பரின் பாடல்கள் தேவாரம் என்றும், சுந்தரரின் பாடல்கள் திருப்பாட்டு என்றும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் மூவர் தமிழும் தேவாரம் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படலாயின. ஞானசம்பந்தரின் பாடல்களைக் கொஞ்சுதமிழ் என்றும், தாண்டக வேந்தராகிய அப்பரின் பாடல்களைக் கொஞ்சு தமிழ் என்றும், தம்பிரான் தோழராகிய சுந்தரரின் பாடல்களை மிஞ்சுதமிழ் என்றும் அறிஞர்கள் போற்றினார்கள்.

குழந்தையானது பெற்றோருடன் கொஞ்சிக் குலாவும் நடையில் அமைந்திருப்பது சம்பந்தரின் பாடல்கள் எனவும், அடிமை ஒருவன் எசமானுடன் பேசுகின்ற பணிவுடைமையுடன் கூடியிருப்பது அப்பர் பாடல்கள் எனவும் தோழமை உணர்வுடனும், உரிமையுடனும் இறைவனோடு தொடர்பு கொள்ளும் பாடல்களாக அமைந்தவை சுந்தரரின் பாடல்களாகும். சைவபக்தி இயக்கத்தை நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என சேக்கிழார் பெரிய புராணத்தில் சம்பந்தரரைக் குறிப்பிடுகின்றார்.

இசைத்தமிழின், களஞ்சியமாகச் சிவனார் பெருமைகளையும், சைவத்தின் மேன்மையையும் கூறுபவை. பன்னிரு திருமுறைகளில் மூவர் இசைத்தமிழ் எனும் தலைப்பினூடாக இவற்றை நோக்கலாம். சிவமும், தமிழும் இரண்டறக் கலந்து ஒன்றாகத் திகழும் காரணத்தினால், தமிழ்மொழி தெய்வத்தமிழ் எனும் திருப்பெயர் பெற்று விளங்குகின்றன. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்கள், நான்காம் திருமுறை முதல், ஆறாம் திருமுறை வரை திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்களாகவும், ஏழாம் திருமுறைப் பாடல்கள், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களாகவும் உள்ளன.

சம்பந்தர் திருப்பதிகம், 384 திருநாவுக்கரசர் திருப்பதிகம், 312 சுந்தரர் திருப்பதிகம் 100 ஆகும். இந்த ஏழு திருமுறைகளிலும் அடங்கியுள்ள மொத்த திருப்பதிகள் 796 அடங்கியுள்ள மொத்த திருப்பதிகம் 8250 ஆகும். திருஞானசம்பந்தர் தமிழ் இன்னிசை *(274:11)* என்பதையும், தமிழ்க்கிளவி இன்னிசை *(334:11)* என்பதனையும் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தர் தாம் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் இசைத்தமிழ்ப் பாடல்களைப் பாடி அச்செயலால் தமிழை வளர்ந்து வந்தார் எனவும், அம்முயற்சிக்கு இறைவனும் உறுதுணையாக இருந்து தாளம் எனும் இசைக்கருவி தந்து உதவி அவர் பாடிய பாடல்களுக்கு இரங்கி அருள் புரிந்தார் என பின்வருமாறு சுந்தரர் பாடுகிறார்.

நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்குவகவர் முன், தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை *(7-62-8)* என்பது அப்பாடலாகும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர் சைவத்தோடு தமிழையும் போற்றிப் பரப்பினார். சமயப் போராட்டம் காரணமாகச் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குச் சமணர்கள் தீயிட, புறநெருப்பு அணைக்கப்பட்டு, அகநெருப்பு பாண்டியன் வயிற்று நோயாயிற்று. (சம் 309 பதிகம்)

அந்நோயைத் தீர்க்கப் போட்டியெழுந்தது அதில் சமணர் தோல்வியுற்று. சம்பந்தர் மந்திரமாவது நீறு (பதி 200) என்னும் திருப்பதிகம் பாடிப் பாண்டியன் நோயைப் போக்கியருளினார்.

சமயப் போட்டி மேலும் வலுத்தது. அதனால் அனல் வாதம் மேலும் பிறந்தது. சமணரும், சம்பந்தரும் எழுதிய பாடல்களை (பதி 345) நெருப்பில் இடப்பட்டன. தமிழின் இனிமையும், நேர்மையும், சுவையும், ஆழமும் பொருந்திய சம்பந்தர் பாடல்களை நெருப்பாலும் எரிக்கவியலவில்லை. சமணர் பாடல்கள் எரிந்தழிந்தன. தமிழுக்கு ஐம்பூதங்களுள் ஒன்றாகிய நெருப்பை வெல்லும் ஆற்றல் இருந்தமை போன்று நீரை எதிர்க்கும் ஆற்றலும் இருந்து சம்பந்தர் வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் (பதி 312) என்னும் திருப்பதிகம் எழுதி வைகையாற்றில் இட, அவ்வேடு எதிர்த்து வந்தது. மூன்றாவது முறையும் சமணர் தோற்றனர். பாண்டியன் உண்மைச் சமயம் உணர்ந்து சைவம் தழுவினான்.

இவ்வாறு சம்பந்தர் சமணரை வென்றமைக்குரிய காரணங்களுள் அவருடைய தமிழுணர்வும், தமிழ்ப்பற்றும் ஒன்றாகும். தமிழ் மீது அளப்பரிய பற்றுக் கொண்டிருந்த சம்பந்தர் சைவத்தோடு தமிழையும் இணைத்து தம் பதிகங்களில் தமிழரின் பெருமையைத் திருவீழிமிழலையில் நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சார்ந்திருந்த காலத்து நாட்டில் வறுமையும், பசிப்பிணியும் ஏற்பட்டதால் இருவரும் பாடி, படிக்காசுப் பெற்று (92) மக்களின் பசிப்பிணியைப் போக்கினார்.

> ''வாசி தீரவே காசு நல்குவீர்
> மாசின் மிழலையீர் ஏச வில்லையே''

தன் தந்தை சிவாதவிருதயருக்கு வேத வேள்வி செய்வதற்குத் திருவாவடுதுறை இறைவனைப் பொற்கிழி நல்குமாறு குறிப்பால் பாட, இறைவன் கொடுத்தான் என்பதை 262 ஆம் பதிகம் உணர்த்தும். பொருள்களைப் பெறுவதற்காகவோ, நன்மைகளையடையவோ அடியார்கள் இறைவனை வணங்கவில்லை. உண்மையை உணர்ந்து, கற்றதன் பயன் இறைவனைப் பணிதல் எனப் பணிந்தார்கள். இறைவன்,

அடியார்கள் நிலையை உணர்ந்து ஆவன செய்கின்றான்.

சம்பந்தர் இலக்கிய இசைநயத்திற்கும், இயற்கை வருணைக்கும் சில பாடல்களைப் பார்க்கலாம். தான் சொல்லுகின்ற ஊரின் இயற்கை வருணனையை இரண்டு வரிகளிலும், இறைவனை இரண்டு வரிகளிலுமாகவே பெரும்பான்மையும் பாடுகின்றார். கடற்கரை அருகே ஒரு சிறு நீர்தேக்கம் அங்குத் தாழை மடல் விரித்து அதன் நிழல் நீரில் குருகு போன்று காட்சியளிக்கின்றது. அங்கு வாழும் கெண்டை மீன் தாழை மடலின் நிழலைக் குருகென அஞ்சி அங்குள்ள தாமரைப் பூவினடியில் தன்னை மறைத்துக் காட்டியது.

''கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையாலும்
பெண்காட்டு முருவானுஞ் பிறைகாட்டுஞ் சடையானும்''

முதல் முத்திருமுறைகள், தமிழ் யாப்பு வரலாற்றில் சில புதுமைகளைத் தந்தன. இத்திருமுறைகளின் இலக்கியச் சிறப்பிற்கு அவற்றின் யாப்பமைப்பும் ஒரு காரணம். மொத்த பதிகங்கள் 385 பாடல்கள் 4162 வரிகள் 16679 அவற்றில் காணப்படும் மிகுதியான பதிகங்கள் கலி விருத்தம் 106 பதிகங்கள் ஆசிரிய விருத்தம் 88 கலித்துறை 79, கொச்சகங்கள் 54, ஆசிரியத்துறை 27, வஞ்சி விருத்தம் 13, வஞ்சித்துறை 9, குறட்டாழிசை 3, நாலடி மேல்வைப்பு 3, ஈரடி மேல் வைப்பு 2, இணைக்குறள் ஆசிரியம் 1, இவை போகச் சித்திரக் கவிதைகள் சிலவற்றையும் தந்துள்ளார். திருவியமகம் 4, திருச்சக்கரமாற்று 2, ஏகபாதம் 1, எழு கூற்றிருக்கை 1, திருகோமுத்திரி 1, திருமாலை மாற்று 2, இவை போக மொழி மாற்றுப் பொருள்கோளிலும் ஒரு பாடல் அமைத்துள்ளார். இவற்றில் மேல் வைப்பும், சித்திரக் கவிகளும் தமிழ் யாப்பு வரலாற்றில் முதல் முதலாக இவர் அமைந்தவையாகும்.

மாலை மாற்று வகைக்கு ஒரு சான்று காணலாம்
தாவாமூவா தாசாகாழீ நாதநீயாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாவா மூவாதா

இலக்கிய மரபபையும், தமிழ் மரபையும் கற்றவர்கள்

மொழிமாற்றுப் பொருள் அறிவர். அருந்தமிழ்-பதி-234:11, ஆரா அருந்தமிழ் - 89:11, இசைமலிதமிழ் -89:11, இன்றமிழ்-56:11, உரவுரும் ஒண்டமிழ் - 214:11, உரைசெய் தமிழ் - 341:11, எழுது மொழி தமிழ் - 325:12, ஏறினார் தமிழ் - 288:11, ஏறு பல்பொருள் முத்தமிழ் - 373:11, ஒண்டமிழ் - 224:11, கலைமலிதமிழ் - 120:11, கலைமுத்தமிழ் -253:10, குன்றாத் தமிழ் - 18:11, சங்கமலி தமிழ் - 332:11, சந்தநிறை தண்டமிழ் - 135:11, சீர் இன்புறுந்தமிழ் - 214:11, செந்தமிழ்-43:11, செப்பரிய தண்டமிழ் - 190-11, குலமார் தமிழ் - 153-113, குலவேந்தர் செந்தமிழ் - 193:11, குற்றமில் செந்தமிழ் -113:11. இவ்வாறாக தமது பதிகங்களூடாகக் குறிப்பிட்டு நாளும் இன்னிசையோடு முழங்கி வந்தார். தமிழின் மேலான சிறப்புக்களைத் தெய்வத்தமிழ் நலன்களை இத்துணையளவிற்குச் சிறப்பித்துப் பாடியருளிய சான்றோர், வேறுயாருமிலர்.

திருநாவுக்கரசர்

அடிகளாருடைய திருப்பாட்டுக்களில் காணப்பெறும் தமிழிசை இலக்கண மாண்புகள் பல. பெயர்சொற்கள், வினைச்சொற்கள், பெயரெச்ச அமைப்பு, வினைச்சொல் அமைப்பு, துணைவினை அமைப்பு, வேற்றுமை உருப்புகள் ஆக்கம், சாரியைகள் ஆக்கம் முதலிய அனைத்து இலக்கணக் கூறுகளாலும் தமக்கென ஒரு தனிப்போக்கை அடிகளார் பாடல்கள் பெற்று நிற்கின்றன. இவற்றைத் தனியே ஆய்ந்து வெளிப்படுத்த ண்டேும் என்னும் விழைவு அறிஞர் உள்ளத்தே எழுந்ததில் வியப்பு இல்லை. இவற்றை ஆய்வது, இடைக்காலத் தமிழின் (கி.பி. 6,7ஆம் நூற்றாண்டுகள்) மாற்றங்களைக் கூர்ந்து நோக்கிடத் துணைபுரிவதுடன், சங்க இலக்கியங்களுக்குப் பிற்காலத்தே செந்தமிழின் கண் விளைந்த மாற்றங்களை நன்கறிந்திட வாய்ப்பாகும் என்பது தெளிவு.

தாண்டகம் - புதிய படைப்பு

தாண்டகம் என்ற புதிய மரபினை அப்பர் தோற்றுவித்துள்ளார். தமிழ் செய்யுள் வகையாகிய இந்த தாண்டகங்கட்கு அடிகளாரே முதலாசிரியர் ஆதலின் தாண்டக

வேந்தர். தாண்டகச் சதுரர் என்ற சிறப்பு பெயர்களுக்கு உரியராயினர். இந்த வகையில் அடிதோறும் நான்கு, எட்டாம் சீடர்கள் தேமாவாகவும், மூன்று ஏழாம் சீடர்கள் பெரும்பான்மை தேமாவாகவும், சிறுபான்மை புளிமாவாகவும் ஏனையவை பெரும்பான்மை காய்சீர்களாகவும் சிறுபான்மை மாச்சீர் விளக்கசீர்களாகவும் அமைந்திருக்கும். எண்சீர் கொண்ட இத்தாண்டகத்தில் அடிதோறும் மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீடர்களை விலக்கிவிட்டு ஏனையவற்றை இணைத்து நோக்கினால் சொச்சகக் கலிப்பா வாக எஞ்சிய பகுதி விளங்கும். இத்தகைய நுட்பமான செய்யுள் வடிவம் ஒன்றை இடைக்காலத் தமிழிலக்கியவுலகிற்கு அடிகளார் படைத்து வழங்கியுள்ளமையைத் தமிழிலக்கிய வரலாறு என்றும் மறவாது போற்றும் கடப்பாடுடையது.

திருநாவுக்கரசரின் இசைத்தமிழ்

திருநாவுக்கரசாருடைய பதிகங்கள், நான்கு, ஐந்து, ஆறு, திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. பண் அமைத்த இசைப்பாடல்களாக நான்காம் திருமுறை அமைகின்றது. நான்காம் திருமுறையில் தரவு, கொச்சகம், கவித்தாழிசை, கலித்துறை, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய இணைக்குறட்டுறை, ஆறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க்கழி நெடிவடி விருத்தம் என்பவற்றை கையாண்டுள்ளன. ஐந்தாம் திருமுறையிலடங்கும் திருக்குறுந்தொகைப் பாடல்களான இவை குறுந்தொகை, எனும் யாப்பு வகையைச் சேர்ந்தாகும். ஆறாந் திருமுறை தாண்டகம் எனும் யாப்பு வகையைச் சேர்ந்தாகும். ஆறாந் திருமுறை தாண்டகம் எனும் யாப்பு வகையிலடங்கும் பாடல்களை உள்ளடக்கியது. இப்பாக்கள் எண்சீர் நெடிலடி ஆசிரிய விருத்தங்களாக அமைகின்றன. திருவிருத்தம் கட்டளைக் கலித்துறையாகும்.

சுந்தரர் இன்னிசை செந்தமிழ்

சுந்தரர் பாடல்களும் பண்ணில் இன் தமிழ் பாடல்களே என்பதை இவருடைய பாடல்களே சுட்டுகின்றன.

''பண்ணார் இன்தமிழாய்ப் பர மால பரஞ்சுடரே''

(7-24-5)

சுந்தரர் அருளிய திருப்பதிக முப்பத்தோராயிரமாகத் திருமுறைகண்ட புராணம் கூறும், இந்நூலே நூற்றினால் வன்றொன்டர் என்று சுந்தரம் பதிகம் நூறே அவர் காலத்துக்குக் கிடைத்தமையும் குறிப்பிட்டுள்ளார். இவரது தேவாரம், பித்தா பிறைசூடி எனும் திருப்பதிகம் தொடங்கி தானெனை முன்படைத்தான் எனும் திருப்பதிகம் ஈறாகப் பாடல்களைப் படைத்துள்ளார்கள்.

''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்'' (7-29,6)

என்று போற்றுகின்றார்.

''இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்'' இவரது திருப்பாடல்கள் தொட்டால் சிவம் மணக்கும். பாடினால் இதயத்தில் தேனூறும், செழுமை கொண்டவை. சுந்தரர் திருப்பாடல்கள் துள்ளுநடையினவாய், எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகள், இயைந்தனவாய், அடுக்குச் சொற்களைக் கொண்டனவாய்ப் பத்திநலம், பாநலம் கொண்டனவனாய் விளக்குகின்றன.

''நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கப்பரெனச் சொல்'' (பெருந்.1802)

என்று கூறிச் சுந்தரர் திருவாக்கை நயத்துக்குச் சுந்தரனர் என்று சிறப்பிக்கிறார். திருநாவுக்கரசரும், தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் எனும் உறுதியினைப் பூண்டவர் பழந்தமிழிசை மாண்புமிக்கவர் இறைவனின் பாக்களை உள்ளுருகப் பாடிப் பரவியர். சிவநெறியே தமிழ்நெறி, தமிழ்நெறியே சிவநெறி எனவே தான் சிவபரம் பொருளாகிய இறைவன், தமிழ் வடிவமாக முத்தமிழ் வடிவாகத் திருக்காட்சியருள்கின்றார். இவ்வாறாகச் சம்பந்தர், அப்பர், சுந்தரர், தேவாரப் பாடல்கள், மூவர்தமிழ் என்று அமைக்கபடலாயின. இம்மூவர் திருமுறைகள், தமிழே வடிவான சிவனை வழிபடுவதற்கான வழிபாட்டுத் தமிழிலக்கியங்களாக அமைகின்றன.

13. காரைக்காலம்மையார் பாடல்கள் சுட்டும் இசைக்குறிப்புகள் ஓர் சமய இசையியலாய்வு

முனைவர் சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை
யாழ்ப் பல்கலைக்கழகம்
இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ப்பண்பாட்டு மரபிலே கலைகளும் சமயமும் மிகவும் இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருப்பதை வரலாறுகள் வாயிலாகத் தெரிந்து கொள்கின்றோம். காலங்காலமாக நிகழ்ந்து வரும் சமய மறுமலர்ச்சியிலே எல்லாப்படி முறைகளிலும் சைவமும் கலையும் ஒன்றில் ஒன்று சார்ந்து வளர்ந்திருப்பதைக் கண்டுக்கொள்ள முடிகின்றது. இந்த வகையிலே சைவத்தின் பொக்கிசமாகத் திகழ்கின்ற தேவார முதலிகளுக்கு முதன்மையாக வைத்தெண்ணப்படும். காரைக்காலம்மையார் அவர்களுடைய பாடல்களில் இசை சார்ந்த குறிப்புகளை இனங்கண்டு வெளிப்படுத்தும் நோக்கிலே இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது.

திறவுச்சொற்கள்

பண், கானகாலம், இசைரூபம், இசைக்கருவிகள், இசையனுபவம்.

அறிமுகம்

காரைக்காலம்மையார் அவர்கள் கி.பி. 5ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வாழ்ந்தவர் என்பதும் தேவார முதலிகளுக்கு மூத்தவர் என்பதும் பொதுவாக வரலாற்றாய்வாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இவர் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் போன்ற பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

இயல், இசைத் தமிழ்பாடலாகிய இவரது திருப்பதிகங்கள் பக்தியிலும் சித்தாந்தத்திலும் சிறந்து விளங்கும்

அதே வேளை தமிழிசை, இசைசார் வடிவங்கள், அவைப் பற்றிய நுணுக்கங்கள் என்பன பற்றியும் மிகத் தெளிவான விளக்கங்களைத் தருவனவாகவும் அமைகின்றன. இது தமிழிசை வளர்ச்சிக்குப் பலம் சேர்த்தது என்றால் மிகையில்லை. இத்தெய்வீகப்பாடல்கள், இசையிலக்கணங்களை முற்றும் அறிந்து, இசை நயத்தோடு தாளக் கூறுகளையமைத்து, எல்லையற்ற கற்பனை நயத்துடன் பாடக்கூடியவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பண்ணியல் வரன் முறைகளுக்கமையவும், அம்மையாரது பாடல்களின் இசையியல் மரபானது வகுக்கப்பட்டுள்ளமை நுணுகிப் பார்க்கும் போது தெளிவாகின்றது. (கர்நாடக இசையியலாளர்கள் இராகங்களை அவற்றின் தன்மைக்கேற்ப பாடப்பட வேண்டிய காலங்கள் குறித்து வரையறை செய்திருக்கின்றார்கள். இது இந்த இராகத்தின் கானகாலம் எனப்படும்)

ஏழிசையாய் இசைப்பயனாய் நிற்கும் இறைவனோடு லயப்படுவதற்கு இசை பெரிதும் பயன்படுவதை அம்மையார் அவர்கள் அனுபவித்து உணர்ந்து தான் இன்பமுற்றதன் வழி சமூகத்தையும் பக்தி இசையின் பேரனுபவத்திற்கு வழிப்படுத்தியிருக்கின்றார் என்று சொல்லமுடியும்.

அம்மையாரின் பாடல்களின் வழி இறைவனை இசையால் அர்ச்சித்து வழிபட்டிருப்பதையும் இறைவனையே இசையாகக் கண்டு அனுபவித்தவாறையும் புரிந்து கொள்ளமுடிகின்றது. இது மட்டுமல்லாமல் இசையியல் பண்புகளையும், நுணுக்கங்களையும் விளக்கி நிற்கின்ற ஒரு இசையியல் பொக்கிசமாகவும் இவரது பாடல்களை நோக்க முடியும். இந்த வகையிலே இசைபாடி இறைவனைத் துதிக்குமாற்றினையும் அதற்கான பாடல்களிலே விளக்கப்பட்ட இசையிலக்கணங்கள் பற்றியும், இசைக்குறிப்புகள் பற்றியும் குறிப்பாக நோக்குவதாக இவ்வாய்வு கட்டுரை அமையும்.

மேற்குறிப்பிட்ட இசையியல் சார் பகுதிகளை இனம் கண்டு வெளிப்படுத்தி நிற்கும் முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது. மேலும் காரைக்காலம்மையார் அவர்கள்

இசையியலை எவ்வாறெல்லாம் கையாண்டிருக்கின்றார் என்பதனை இனங்கண்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் இவரின் வழி பின்வந்த தேவார முதலிகளது திருமுறைகளிலே இந்தக் கருத்து நிலையிலே நின்று ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு முன்னாய்வாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

தமிழ்ப் பண்பாட்டில் இசை

தமிழ்ப் பண்பாட்டிலே இறையும் கலையும் ஒன்றுவொன்று இணைந்து இயங்குபவை. இறைவனை வழிபடுவதற்குப் பல வழிமுறைகளைக் கைக்கொண்டாலும் இறைவனுக்குப் பிடித்ததும், இலகுவானதும் அவன் புகழ் பாடுவதாகும். சிறப்பாகக் குறித்துச் சொல்லப்படுகின்றது. இசையால் இறைவனையே வசப்படுத்தமுடியும் என உணர்ந்து இசையால் இறைவனைப் பாடிப் பரகதி பெற்ற பலரைத் தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றிலே கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையிலே அம்மையார் அவர்களும் அடங்குகின்றார்கள்.

இறைவனைப் போற்றிப் பாடும் போது இசையைப் பல வழிகளிலே இறைவனோடு தொடர்புபடுத்தி இருப்பதை இவரது பாடல் வரிகள் மூலமாக இனம் கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையிலே இவ்வழிமுறைகளை மூன்று விதமாக வகுக்கலாம். காரைக்காலம்மையாரைப் பொறுத்த வரையிலே சுடுகாட்டிலே நின்றாடும் இறைவனைப் பேயுருவிலிருந்து கண்டு வழிபட்டாலும் கூட இசையியலின் அடித்தளத்திலே நின்று பாடல்களை யாத்திருப்பது இசை மரபிற்கு அம்மையார்கள் செய்த திருத்தொண்டாகக் கருதிக்கொள்ள முடிகின்றது. அந்த வகையிலே,

1. இறைவன் ஆடுவதற்காகப் பாடித் தொழுவது.

2. அல்லும் பகலும் இசை பாடிப் பாடி இறைவனை வழிபடுவது.

3. பாடலோடு பக்தி மாத்திரமல்லாமல் இசைக்கலையின் சிறப்பு. இசைக்கருவிகள், அதன் பண்புகள், ஏழு சுவரங்கள், அவற்றின் நிலைகள் எனப் பல இசை சார்

குறிப்புகளையெல்லாம் காரைக்காலம்மையார் அவர்களது பாடல்களிலே ஏராளமாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

இறைவன் ஆடுவதற்காக பாடித் தொழுவது

திருவாலங்காட்டிலே இறைவனாட அம்மையவர்கள் இறையடியிருந்து அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்று வேண்டி இறையருள் பெற்ற நித்திய சுகமடைந்தார் என்பது புராணம். எனவே இறைவனின் ஆடலுக்கான பாடல்கள் பற்றித் தனது பதிகங்களிலே குறித்துச் செல்கின்றார். அம்மையார் அவர்களது பாடல்களிலே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிக வரிகள் பின்வருமாறு உணர்த்துகின்றன.

''முந்தி அமரர் முழவின் ஓசை திகைத்து
அச்சிலம்பு ஆர்க்க ஆர்க்க''

''கொட்ட முழவங் கூவிப்பாட குழகன் ஆடுமே''

''ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப் பப்பினை யிட்டு பகண்டை யாடப் பாடருந் தந்தரி யாழ் அமைப்ப அப்பனை அணி திரு ஆலங்காட்டுன் அடிகள் என்றும் பாடியிருக்கின்றார்.

அதாவது திருவாலங்காட்டுச் சுடுகாட்டப் பேய்களின் பாடலுக்கு இறைவன் ஆடுவதாகத் தனது பாடல்களிலே அம்மையாரவர்கள் விவரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது. இசைக்கலையின் சிறப்பு, இசைக்கருவிகள் இதன் பண்புகள், சப்த சுவரங்கள் பற்றிய குறிப்புகள்.

அம்மையாரது திருப்பதிகங்களிலே பண்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுவது போல இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளும் விரவிக்காணப்படுகின்றன. இசை எனப்படுவது மிடற்றிசை. கருவியிசை என இரு பிரிவுகளாக அவை தோன்றும் அடிப்படையிலே பகுத்து நோக்கலாம். மிடற்றினால் தோற்றுவிக்கப்படுவது மிடற்றிசை எனவும் கருவியினால் கருவியிசை எனவும் குறிப்பிடப்படும். இசையின் தோற்றம் மூலம் வேறுபடினும் இதற்குரிய இயல்பு, பண்பு யாவும் ஒன்றே.

இதனை முற்றுமுணர்ந்த அம்மையார் அவர்கள் தமது பாடல்களிலே இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளையும் சப்த சுவரங்கள் பற்றிய விவரங்களையும் இணைத்தக் கொள்ளத் தவறவில்லை. அம்மையாரது மூத்த திருப்பதிகத்திலே,

''பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பாறைபோல விழி கட்பேய்
கொட்ட முழுவம் கூழி பாடக் குழகன் ஆடுமே''

என்றும், அதாவது பரமன் ஆடல் செய்யும் ஆலங்காட்டிலுள்ள பேய்களது கண்களைப் பறை என்கின்ற இசைக்கருவிக்கு அம்மையார் ஒப்பிடுவது இசையின்பால் அவர் கொண்டிருக்கின்ற ஈடுபாட்டினைக் காட்டி நிற்கின்றது.

''வாளைக் கிளர வளைவாள்...
கூளிகணங்கள் குழலோடியம்பல் குழகன் ஆடுமே''

அதாவது காட்டிலுள்ள கணங்களின் குழலிசைக்கு இறைவன் ஆடுகின்றான் என்றும்,

''முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே''

அதாவது முழவின் ஓசை ஆடலுக்குரிய வரன்முறைகளோடு ஒலிக்க அக்கினியைக் கையிலேந்தி இறைவன் ஆடுகின்றார் என்றும்,

''கடுவன் உகளுங் கழைசூழ்...
கொடு வெண்மரவும் பிறையுந் ததும்பக் கொள்ளென்சைபாடப்
பாடுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே''

அதாவது இறைவன் பறை, துடி என்கின்ற இசைக்கருவிகளாது ஓசைக்கேற்ப ஆடுவதாக அம்மையார் இறைவனின் ஆடலை விபரித்து நிற்கின்றார்.

முடிவுரை

தொகுத்து நோக்கும் போது இறைவனை வணங்கி

அதன்வழி அருட்பேறுபெறல் என்பதே அம்மையாரது ஒரேநோக்காக இருந்தாலும் இறைவன் இசைக்கு இசைபவன் என்கின்ற தமிழ்மரபுக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டமையால் இவர் இறைவனைக் கலைஞனாகப் பார்த்தார். இதன் வெளிப்பாடாக இறைவனை இசையில் இருப்பிடம் காப்பிடம் என்று பல இடங்களிலும் இவரது பாடல் வரிகள் நமக்குணர்த்தி நிற்கின்றன.

இது தவிர இந்த ஆய்வுக்கட்டுரை வாயிலாக இசைக்கலையினை மூன்று விதமாக இறைவனோடு தொடர்புபடுத்தி பக்தியுடன் தமிழிசைக்கும் வளம் சேர்த்திருக்கின்றனர் என்பது அம்மையார் அவர்களது பாடல்களிலே தெளிவாகக் காணமுடிகின்றது.

இறைவனையே கலைஞனாகக் கண்டின்புறுவதாகவும் இசை பாடி இறைவனை வழிபடுவதாகவும், இசைக்கருவிகள் இசைப்பது, பாடுவது இதன்வழி இறைவனைத் துதிப்பது என்கின்ற மூன்று விதமான வழிகளிலே இசைக்கலையினை நாயன்மார்கள் தேவாரங்களிலே தொடர்புபடுத்தியிருக்கின்றார்கள் என்பது இந்த ஆய்வு முயற்சியின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

மேலே இத்தரவு அம்மையாரின் வழிதொடர்ந்த ஒவ்வொரு நாயன்மார்களது பாடல்களையும் தனித்தனியே ஆராயவும் ஒவ்வொரு திருமுறைகளையும் இசையியல் தளத்திலே ஆராய்ந்து விரிவாக நோக்குவதற்கான ஒரு அறிமுகத்தையும் தரவல்ல கட்டுரையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

14. திருஞானசம்பந்தர் பாடல்களில் நாட்டியம்



அ.கேமலதா
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
மீனாட்சி இராமசாமி கலை
அறிவியல் கல்லூரி
தத்தனூர்

முன்னுரை

சைவ சமயம் தழைக்கவும், பிற சமயங்களிலிருந்து சைவ சமயம் மாறுபட்டிருப்பதனைப் பாமரனும் உணர்ந்து கொள்ளும் படியாகவும், தொன்மை மிக்கதும், இனிமையானதுமாகிய தமிழில் பாடல்களைப் பாடி அப்பாடலினால் விளையக் கூடிய அதிசயங்களை அனைவரும் உணரும்படியாகச் செய்தவர் திருஞானசம்பந்தர். அவர் தம் பாடல்களில் இடம் பெற்றுள்ள நாட்டியங்களைப் பற்றிய செறிந்த கருத்துக்களை எடுத்துரைப்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இறைநெறி வழிபாடு

திருஞானசம்பந்தர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து சிவன் தானேயாகி வாழ்ந்தவர். இறைவன் உமையுடன் வந்து ஞானப்பால் தந்து திருஞானசம்பந்தரை ஆட்கொண்டார். அதனால் தான் அவருடைய திருவடியை மறவாமல் வாழ்வதாகக் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தர் உலக மாந்தர்களைப் போன்று உலகியலில் ஈடுபடாது இறைக்கருத்தை முற்றுவிப்பதும், இறைவனுடையத் திருவடிப் பெருமைகளைப் பாடி சொல்மாலைச் சூட்டி வழிபடுவதையே விரும்பினார். இறைவன் இவருடைய தமிழுக்கும் இசைக்கும் கட்டுப்பட்டு பல அற்புதங்களைச் செய்தருளினார்.

கலைகளில் மிகமிக நுண்ணிய தன்மையுடையது நாட்டியக் கலையாகும். உடல் உறுப்புகள் அசைவு பெற நடைபெறுகின்ற ஒன்றாகும். இசை நாடகம் இரண்டு

இணைந்து சிறப்பிப்பது நாட்டியக் கலையாகும். நாட்டியக் கலைக்குக் கண்களின் செயல்களும் மெய்ப்பாடுகளுமே உயிரோட்டமாக இருக்கின்றன. சம்பந்தர் நம்முடைய பாடல்களில் சிவனுடைய நடனம் நடனமாடும் முறைமைகளின் சிறப்புகள் ஆகியவற்றை விளக்குகிறார்.

நாட்டியம்

நாட்டியம் என்னும் சொல் பண்டைய தமிழ் மரபில் கூத்து என்று வழங்கி வந்தது. தொல்காப்பியர் காலத்தில் நாட்டியம் பற்றிய சொற்கள் சில வழக்கில் இருந்தது.

கூத்து - நாட்டியம்

ஆடல் - நிருதயம் நடனம் நிருத்தியம்

புலன் - அபிநயம், கருத்துக்களைப் புலப்படுத்தும் நாட்டியம் என்று குறிப்பிடப்படுகிறது.

நடனக்கலை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பேறுகளையும் நல்கவல்லது. மனவுறுதி, உடல் வளம், இன்ப உணர்ச்சி முதலிய நற்பண்புகளையும் அளிக்கவல்லது. இக்கலை தரும் இன்பம் தவத்தினால் அடையும் இன்பத்திற்கு இணையானது என்கிறார் மா.இராசமாணிக்கனார்.

சம்பந்தர் குறிப்பிடும் நடனங்கள்

சம்பந்தர் தன்னுடைய பாடல்களில் பலவகையான நடனங்களைக் குறிப்பிடுகின்றார். அவை மக்கள் இறைவனைப் பற்றிப் புகழ்ந்து ஆடியவைகளாகும்.

மக்கள் ஆடுவது

மக்கள் ஆடும் நடனங்கள் மூன்று வகைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. 1.மகளிர் ஆடியமை, 2.சித்தர் ஆடியமை, 3.பொதுமக்கள் ஆடியமை.

மகளிர் ஆடியமை

ஆடல் மகளிர் என்னும் தேவரடியவர்கள் முறை நீண்ட நெடுங்காலமாகத் தென்னாட்டுத் திருத்தலங்களில் வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. தேவரடியவர்கள் என்றால் தேவனுக்கு

அல்லது இறைவனுக்குத் தொண்டு செய்யும் மகளிர் என்று பொருள்படுகிறது. ஆடலும், பாடலும் இறைவன் திருவடி நிழலை அடைவதற்குரிய சிறந்த வழியாக நம் முன்னோர்களால் கருதப்பட்டது. இதனைச் சம்பந்தர்,

''பண்ணுனோர் மொழி மங்கைமார் பலர்
பாடியாடி வோசை'' (சம்.2:185:1)

என்கிறார். ஆடல் மகளிர் பல வகைப்பட்டவர்களாக இருந்தனர். இவர்கள் கோயில் பெண்டுகள், தளிச்சேரிப் பெண்டுகள், நாடக மகளிர், கடவுள் கணிகை அல்லது தெய்வமகளிர் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர். நிருத்தம் செய்தும் பண்ணிசையால் பாடிப் பரவியும் இறைத் தொண்டாற்றி சமய வளர்ச்சிக்கு இவர்களது பங்களிப்பு பெரும் துணையாக இருந்துள்ளது.

திருவீதி உலாவில் மகளிர் நடனம்

மகளிர் தேரோட்டம் போன்ற கோயில் திருவிழாக் காலங்களிலும், இறைவன் திருவீதி உலா செல்லும் பொழுதும் உருத்திரக் கணிகையர் என்னும் தேவரடியவர்கள் வலம் வந்து நாற்சந்திகளிலும், இறைவன் திருவீதி உலா புறப்படும் போது கும்மி, கோலாட்டம், அபிநயத்தல் போன்ற நிருத்தப் பணிகள் மேற்கொள்வது இறைவழிபாட்டின் முக்கிய அம்சமானதால் அச்சமயங்களில் மகளிர் நடனமாடுவது மிகவும் சிறப்பாகப் போற்றப்பெற்றது. இதனை,

''வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சித்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாரே'' (சம்:1:130:1)

சதிர் நாட்டியம்

சதிர் என்பது நாட்டியத்தின் ஒரு வகையாகும். இதனைச் சதிராடுதல் என்று குறிப்பிடுவர்.

''விதிவழி முறையவர் முலை ஒளிர்நடம்

சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிருடை யிருமை
அதிகுணர் புகழ்வது மமுதி'' (சம்.3:356:2)

என்று ஞானசம்பந்தர் பாடுவதிலிருந்து முந்தைய சதிர் நாட்டியம் என்பதன் வரையறைக்கு இப்பகுதி நல்லதொரு விளக்கமாய் அமையப்பெற்றுள்ளது. தேவார காலத்தில் கோயில் பெண்கள் எனப்படும் தேவரடியார்கள் பெற்றிருந்த சமூக ஏற்றம், புகழ், அவர்தம் திருத்தொண்டு ஆகியவை இறைவழிபாட்டில் சிறப்புப் பெற்றிருந்தன. இக்காலத்தில் ஆடலும் ஆண்டவனை அடைவதற்குரிய கருவியாகத் திகழ்ந்தன. ஞானசம்பந்தர் காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு மகளிர் பெரும் பங்காற்றியுள்ளனர்.

கால்தூக்கி நடனம்

இறைவன் திருமேனி தீ வண்ணத்தது. அவன் மகிழ்ந்து பாடுவதோ பல வண்ணப் பாடல்கள். தங்கள் திருவடி பற்றியதால் வீழ்ந்தவன் காலன். தாங்கள் உயர்ந்தோங்கித் திருவாடல் புரியும் திருவடிகளைக் கொண்டவர். அவ்விறைவன் எலும்பு மாலை அணிந்து வீற்றுள்ளார்.

''வாய்ந்த மேனியெரி வண்ணமே
மகிழ்ந்து பாடுவது வண்ணமே
காய்ந்து வீழ்ந்தவன் காலனே
கடுநடம் செயும் காலனே
வேய்ந்ததும் மிழலை என்பதே'' (சம்-3:374:6)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றது.

எரிவீசி நடனம்

இறைவன் ஒரு செவியில் தோடும் மற்றொரு செவியில் குழையும் அணிந்துள்ளவர். திருநீறு பூசிய அவர் அனல்வீசும் இடுகாட்டில் கையில் எரியும் தீயின் ஒளி பரவுமாறு ஆடல் கொள்பவர். கடலால் சூழப்பெற்ற இவ்வுலகை உடையவர். அடியவர்களுக்குத் தேவையான பொருளும் இன்பமும் மற்றுமுள்ள நன்மைகள் யாவையும் நித்தமும் விரும்பி அளிக்கும்

பெருமை வாய்ந்தவர். என்பதைத்

''தோடுடையார் குழைக்காதிற் சூடுபொடியார் அனல்ஆடல்
காடுடையார் எரிவீசும் கையுடையார் கடல்சூழ்ந்த
நாடுடையார் பொருள் இனநல்லவை நாடுநயந்த
பீடுடையார் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே''
(சம்.2:203:5)

வீரக்கழல் ஒலிக்க நடனம்

சிவபுரத்தில் பெருமையுடன் உறையும் பதியில் மதிர்ந்த சடையில் இளம்பிறைச் சந்திரனையும், கங்கையையும் கொண்டு வீரக்கழல் ஒலிக்க ஆடல் புரியும் இறைவன் பகைக் கொண்டவர்களின் முப்புரத்தை எரியச்செய்து சாம்பலாக்கி இணையற்றவனாக விளங்குகின்றார்.

''முதிர்சடை இளமதி நதிபுனல் பதிவுசெய்து
அதிர்கழல் ஒலிசெய அருநடம் நவில்பவன்
எதிர்பவர் புரம் எய்த இணையிலா அணைபதி
சதிர்பெறும் உளம் உடையவர் சிவபுரமே''
(சம்-1:123:6)

பேய்க்கூட்டங்கள் நகைக்க நடனம்

சோலைகளில் பூத்து நிற்கும் கொன்றை மலர்களைச் சூடி நெற்றிக் கண்ணனாய்க் கடம்பூரினை இடமாகக் கொண்டு சிவந்த சடை விரியவும் கழல் ஒலிக்கவும் புனைந்து இடங்களிலும் செந்தீ எரியும் இடுகாட்டில் நாக்குகளை நீட்டியும் கூந்தலை விரித்தும் பேய்க்கூட்டங்கள் நகை செய்து மகிழுமாறு ஆடல் புரிபவர் சிவனார்.

''தீவிரி யாக்கழல் ஆர்ப்பச்
சேயேரி கொண்டு காடிட்டில்
நாவிரி கூற்றல் நற்பேய்கள்
நகைசெய்ய நட்டவின் றோன்'' *(சம்-2:204:5)*

கூளிகள் தாளமிட நடனம்

சிவனார் ஒளி பொருந்தியதும் கிறுக்களையுடையதும் கொல்லும் தன்மை வாய்ந்த புலியின் தோலை உரித்து உடையாகக் கொண்டவர். எக்காலத்திலும் மகிழ்ச்சியோடு இருப்பவர். அடியார்களை ஆட்கொள்பவர். கூரிய தந்தங்களை உடைய யானைகளை அடக்கி ஆள்பவர். சிறந்த வில் தாங்கும் தோளினை உடையவர். இப்பெருமைக்குரிய இறைவன் கூளிகள் என்னும் பேய்கணங்கள் தாளமிட நடனம் புரிபவர்.

''வாளவரி கோளபுலி கீளதுரி
தாளின்மிசை நாளு மகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போனயில
கோளிகளிறு ஆளிவரவில்
தோளமர் தாளமதர் கூளியெழு
மீளமிளர் துளிவளர் பொன்
காளமுகில் மூளும் இருள்கிளவரி
தாள கயிலாய மலையே'' (சம்-3:326:1)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

வண்டு பாட நடனம்

பேரழகாக அணி செய்யப்பட்ட சோலையில் தேன் உண்ண வந்த வரி வண்டுகள் நெருங்கி இசையெழுப்ப ஆடல் கொள்ளும் இறைவனின் இடமாவது அனுபட்டானங்கள் செய்யம் அடியவர்கள் பரவி எழ விரும்பும் நான்மறையோர்கள் விளங்கும் புகலியாகும்.

''மைந்து அணி சோலையில் வா; மதுப்பாய வரி
வண்டினங்கள் வந்து
நந்து இசைபாட நடம் பயில்கின்ற
நம்பன் இடம்'' (சம்-1:104:6)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

பாண்டரங்கம்

பாண்டரங்கக் கூத்தினைச் சிவபெருமான் திரிபுரத்தை

எரித்துச் சாம்பலாக்கிய பின்னர் தேர்ப்பாகனாக இருந்த நான்முகன் காணும்படி ஆடியது.

''நெடியானொடு நான்முகனும் நினைவொண்ணாப்
படியாகிய பாண்டரங்களின் நெறிபாடி''

இதனையே

''தேர்முன் நின்று திசைமுகன் காண
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்''

வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரி பூட்டி நெடும்புறம் மறைந்து வார்துகில் முடித்துக் கூர்முட்டிப் பிடித்துத் தேர்முன் நின்று திசைமுன் காணும்படி பாரதி வடிவாய இறைவன் வெண்ணீற்றை அணிந்து தாமாடிய பாண்டரங்கக் கூத்தாகும்.

சொக்குக் கூத்து

தாரனை அழித்து ஊழித் தீ போல் கொதித்திருந்த காளிதேவியின் சினம் இவ்வுலக உயிர்களை அணுகாதபடி அவளைக் குளிரும்படி செய்வதற்குச் சொக்கத்தே நீர்த்தத்தே தொடர்ந்த மங்கையான காளி இறைவனுடன் ஆடியாடி அந்த ஆடல் போட்டியின் விளைவால் வரைவு குறைந்து வெப்பம் தணிந்து தம்மை உணர்ந்த தேவி ஞறிந்து போனால் குணாமானால் என இரா.கலைக்கோவன் குறிப்பிடுகின்றார். இதனைக்

''காளியைக் குணஞ்செய் கூத்துடையாள்
சொக்கம் தாடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும்''
(சம்.3:267:9)

என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

இறைவன் ஆடும் நாட்டியத்தில் கை, கால், முகம், இடுப்பு முதலிய உறுப்புகள் மெய்ப்பாடுகள் தோன்ற இறைவன் ஆடும் முறைமைகளில் இறை நடனத்தின் போது இறைவன் தன் உடற்கூறுகளை அசைத்து ஆடிய முறைமைகளும் உமையுடனும் காளியுடனும் ஆடிய நடனங்களும் பேய் பூதகணங்களுடன் ஆடிய நடனங்களும் சான்றுகளுடன் இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

15. பெரியபுராணத்தில் ஆடல் குறிப்புகள்

க.பவன்
விரிவுரையாளர், நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

முன்னுரை

சித்தத்தைச் சிவன் பால் கொண்ட சைவ நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய நமது சைவநெறி வளர்ச்சி கண்டுள்ளது. அறுபத்து மூன்று தனியடியார் பற்றியும் ஒன்பது தொகையடி யார் பற்றியும், அவர்களது வரலாற்றை எடுத்துக் கூறுகிறது. பெரியபுராணம் சுந்தரமூர்த்தி நாயனாரது திருத்தொண்டர் தொகையை முதல்நூலாகவும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. இரண்டு காண்டங்களைக் கொண்ட இக்காப்பியம் பதின் மூன்று சருக்கங்களையும், நான்காயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களையும் கொண்டமைந்தது. சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகப் பெரியபுராணம் வைக்கப்பட்டுள்ளது.

சைவ இலக்கியத்தில் தமிழ்ப் புராணங்களில் சிறந்து விளங்குபவை மூன்றாகும். அவை முறையே பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் என்பவையாம். புராணங்களில் குறைபாடு யாதும் இல்லாததாய் இறைவன் பால் அன்பு செலுத்தி வீடெய்திய தமிழ் நாட்டு மெய்த்தொண்டர் வரலாறுகளைத் தொகுத்து பெருங்காப்பியங்களோடு செவ்வையுறக் கூறும் புராணம் பெரியபுராணம் ஆகும்.

தேவாரம், திருவாசகம் போலத் தோத்திரப் பாடல்களாக மட்டும் அல்லாமல் நாயன்மாரது வரலாறு மூலம் பக்தி நெறியை வளர்க்கும் பாடல்களாகப் பெரியபுராணம் அமைந்துள்ளது. உலகெலாம் உணர்ந்து என அம்பலவாணன் அடியெடுத்துக் கொடுக்க அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் அருளிச் செய்த பெருஞ் சிறப்புடையதாகும் இப்புராணம். சிதம்பரம்

திருக்கோயிலில் விளங்கும் ஆயிரங்கால் மண்டபத்துள் சேக்கிழார் எழுந்தருளி வந்து நடராசப் பெருமானுடைய திருவருளையும் திருவடிகளையும் தியானித்து விட்டு அமர்ந்து கொண்டு பெரியபுராணத்தைப் பாடத் தொடங்கினார். இவ்வாறு அவர் இப்புராணத்தை ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்துப் பாடியமையும் சிறப்பாகக் கொள்ளப்படுகிறது.

நாயன்மார்கள் தமது தேவாரப் பாடல்களில் ஆடல் குறிப்புகளைக் கூறியதைப் போன்றே சேக்கிழார் பெரியபுராணத்தில் இடம்பெறும் ஆடல்களை இறைவன் ஆடல், மகளிர் ஆடல் எனப் பாகுபடுத்திக் காட்டியுள்ளார். சேக்கிழார் சுவாமிகள் தாம் பாடிய பெரியபுராணப்பாடல்கள் சிலவற்றில் பல்வேறு செய்திகள் பற்றிக் கூறப்பட்ட போதும் தில்லையம்பலத்திலே இருக்கின்ற இறைவனின் நடனத்தோற்றத்தை மிக அழகாகத் தனது பாடல்களின் மூலம் வர்ணித்துப் பாடியுள்ளார். முதல் ஆடல்வல்லானின் தோற்றத்தைக் கூற வந்த சேக்கிழார் ஒளி வடிவான தோற்றத்துடன் திருநடனக்கோலத்தில் இருக்கும் இறைவனைப் பற்றி பாடியுள்ளார். இதனை, அலகிற்சோதியன் அம்பலத்து ஆடுவான் என்றும், போற்றிய பொதுவில் நின்று என்றும், அத்தன் நீடிய அம்பலத்து ஆடும் மற்று என்ற அடிகளின் ஊடாகவும் நடனங்கள் பற்றிய தோற்றத்தினையும் நடராசப்பெருமானின் திருக்கோலத்தினையும் சிறப்பித்துள்ளார்.

ஆடல் வல்லானின் தோற்றம் மட்டுமின்றி இறைவனின் தாண்டவக் கூத்தினையும், தாண்டவம் புரியும் தம்பிரானாரைத் என பேரானந்த பெருங்கூத்தினைச் சுட்டிக்காட்டிய சேக்கிழார் மேலும் தாண்டவம் புரியவல்ல தம்பிரானாருக்கு அன்பர் என அப்பூதியடிகள் நாயனார் புராணத்தினூடாக இறைவன் தாண்டவக்கூத்து புரிந்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இறைவனின் ஏழுவகை தாண்டவத்தினுள் பெரியபுராணத்தில் இருவகைக் கூத்துக்கள் காணப்படுகின்றது. அவை ஆனந்த தாண்டவம், ஊத்துவ தாண்டவம் என்பவையாகும்.

ஆனந்ததாண்டவத்துள் அடியார்கள் தம் வயமிழந்து

நின்று அனுபவித்ததைச் சேக்கிழார் சித்திரிக்கையில் தில்லையில் ஆடிய ஆனந்ததாண்டவமானது அறிவுவெளி தன்னுள் அருள் நாதத்தினின்று பிறந்த ஓசையுள் ஆடப்பெறுவதென்பர். அது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் மாட்சியும் கொண்டிலங்குவதாகும். இது நாதாந்ததாண்டவம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம், சதானந்ததாண்டவம், என பலவாறு அழைக்கப்படும்.

பஞ்சபூதங்கள் எனக் கொள்ளப்படும் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவற்றின் வடிவினனாகப் பஞ்சாட்சரத்தின் உட்பொருளாய் அமைந்து அவரே பரமன், பரப்பிரமன் ஆவான். பஞ்சகிருத்தியத்தைப் புலப்படுத்தும் அவரின் ஆடலான ஆனந்ததாண்டவத்திற்கு ஒப்பான நடனம் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்றே கூறலாம்.

உமையம்மையின் கூறாகத் தோன்றிய காளி முனைந்து ஆடுகையில் சினந்தெழுந்த சிவன் ஒரு காலை உயர்த்தி தூக்கி ஊத்துவத் தாண்டவம் ஆடினான். அன்றியும் சிவனின் ஆடலின் போது குழை ஒன்று நழுவிக் கீழே விழ இதற்காகத் தமது கூத்தை நிறுத்தாமல் இதனைத் தமது திருவடி ஒன்றினால் எடுத்துத் தரித்துக் கொண்ட நிலையே ஊர்த்துவத் தாண்டவம் ஆயிற்று என வள்ளுவர் கூறியுள்ளார்.

இவ்வாடலை சேக்கிழார் மாநடம் எனவும் அருள்நடம் எனவும் குறிப்பிடுகின்றார். இத்தகைய நடனத்தைப் பற்றி காரைக்காலம்மையாருடைய புராணத்தில் பாடப்பட்டிருப்பதைக் காணலாம். நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழிருக்கவென்றார் எனவும், ஆடங்காடதனில் அண்டமுற நிமிந்தாடுகின்ற கோலங்காண்பொழுது கொங்கை என திருவாலங்காட்டில் அமைந்துள்ள ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தியின் கோலத்தில் காரைக்காலம்மையார் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார். இதனை இப்பாடல் மூலம் சேக்கிழார் கூறியுள்ளார்.

மயானமாகிய சுடலையில் பூதகணங்களுடன் சேர்ந்து ஆடிய கடலைக் கூத்தினை இறைவன் ஆடிய காட்சியையும்

பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பானதாகும். ஆடல் வல்லான் காரிருள் நிறைந்த வெண்சாம்பல் நிறைந்த பேய்கள் சூழ மயானத்தினை அரங்காகக் கொண்டு கூடிய கூத்து சுடலைக் கூத்து எனப்படும். மயானத்தில் கூத்தினை நிகழ்த்தும் ஆடவல்லானின் தோற்றத்தினை,

''ஆயினும் பெரியர் ஆவர் என்பது
மேஇவ் வியல்பே அன்றி விண்முதல்
பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
ஏயும் யாவும் இவர் வடிவம் என்றதாம்''

என சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். இறைவனின் காட்சியைப் பெரியபுராணப் பாடல்கள் மூலம் கூறியுள்ளார். இறைவனின் உறைவிடமாகச் சுடலைதான் என்பதனைக் கானிடை ஆடுவாரை என்றும், கானிடை நாட்டம் ஆடும் கண்ணுதல் தொண்டலர் எல்லாம் எனவும் பாடலடிகள் சுட்டுகின்றன.

பெண்பாலினர்க்கே சிறப்பான கலை என நடனத்தைக் குறிப்பிடுகின்றனர். முன்னைய காலங்களில் ஆலயங்களை ஓதுவார்களையும், நடனமாதர்களையும் நியமித்தனர். இந்திய இசை, நடன, அழகியல், சமய, சமூகவியல் மரபிலே தேவரடியார் அல்லது தேவதாசிகள் முக்கியமான ஓரிடத்தை வகித்து வந்துள்ளனர். தேவரடியார் அல்லது தேவதாசிகள் எனும் பதம் தேவனுக்கும் இறைவனுக்கும் தெய்வத்தொண்டு செய்யும் பெண் எனப்பொருள்படும். அடியாள் எனும் தமிழ்ப்பதம் வடமொழியிலே தாசி எனவும் தேவரடியார் எனும் பதம் தேவடியாள் எனவும் வந்துள்ளது.

மக்கள் ஆடல்கள் பெரும்பாலும் குழு ஆடல்களாக அமைந்தன. அறுவடையின் போதும் விழாக்களின் போதும் தெய்வம் தொடர்பாகவும், போர், வெற்றி காரணமாகவும் இன்னபிற உணர்வு வெளிப்பாடுகளின் நிமித்தமாகவும் இவை ஆடப்பட்டன. மக்களால் விரும்பியும் ஒருமித்த உணர்வுடனும் இக்குழு ஆடல்களுள் தலையாயவை குரவையும், துணங்கையும் ஆகும்.

மிகவும் பழமையான கூத்து வகைகளுள் குறிப்பிடத்தக்கது குரவைக்கூத்து ஆகும். நிலம், பால், வயது வேறுபாடின்றி மக்கள் மகிழ்ந்தாடிய ஆடல், குரவை, இக்கூத்தினைப் பற்றிச் சேக்கிழார் பெரியபுராணத்தில் எறிபத்தநாயனார் புராணத்தினூடாகப் போரில் வல்ல நீண்ட வேலேந்திய முருகனுக்குப் புகழ் விளங்கும் பாடல்களைப் பாடிக் குரவைக் கூத்தும் அணங்காடலும் செய்தனர். முருகப்பெருமானுக்குரிய ஆடல் குரவைக்கூத்து என்பதையும் அணங்காடல் என்பதையும்,

''பேரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து''

எனக் குறிப்பிட்டுள்ளார். கண்ணப்பநாயனார் புராணத்தில் மக்கள் தம் எண்ணம் நிறைவேறச் சேவலையும் மயிலையும் நேரத்திக் கடனாகச் செலுத்தி மனிதத்தோரணங்கள் நாட்டிக் கடம்பமலர் மாலைகளைத் தொங்கவிட்டு வெற்றிவேல் முருகனுக்குக் குரவையாடல் புரிந்தனர் என சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

களிப்பு மிகுந்த போது பாட்டுடன் ஆடும் ஒருவனைக் கூத்து குணலைக் கூத்து ஆகும். இதனைச் சேக்கிழார்,

''உலகெலா நிறைந்து விம்மவும் பரு
முனிவர்தாமுநங்
குலவினர் கணங்க ளெல்லாங்
குணலையிட்டன

என இதனை அடியவர்கள் சிறப்பாகச் சிவகணங்கள் ஆடி மகிழ்தலுண்டு என காரைக்காலம்மையார் புராணத்தினூடாகக் குறிப்பிட்டுள்ளார். சேக்கிழார் சுவாமிகள் இப்பெரியபுராணம் எனும் நூலில் ஆடல் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டது போல் ஆடலில் இசைக்கப்படும் இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இறைவன் ஒர் ஆடலான, இசைப்பிரியன், கலைப்பிரியன் என்பதனை எடுத்துக் கூறியுள்ளமை இதன்

சிறப்பாகும்.

இவ்வாடல் செய்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வாத்தியங்களாக முழவு, தாளம், பம்பை, எக்காளமும் தாரையும், வீணை போன்றனவும் பயன்படுத்தினர். இவ்வாறான இசைக்கருவிகள் பற்றி சேக்கிழார் தில்லை திருவீதியிலே இறைவனுடைய ஊர்வலத்தின் போது வாத்திய இசையுடன் கூடியதான நடனம் இடம்பெற்றதனை,

''அங்கன் மாமறை முழங்கும் மருகே
ஆடும் அரம்பையர் அரட்கு முழுங்கும்
மங்குல் வானின் மிசை ஐந்தும் முழங்கும்''

இதில் இசை ஐந்தும் முழங்கும் என்ற தொடரின் ஊடாகத் தோற்கருவி, துளைக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சகற்கருவி என்ற ஐந்துவகை இசைக்கருவிகளை இசைத்து மகளிர் நடனம் ஆடினர் என பெரியபுராணத்தில் சேக்கிழார் வெளிப்படுத்தியுள்ளார். ஆடை ஆபரணங்களாகப் பாம்பணி, சிலம்பும் கழவம், கபாலமாலை, தோடும்குழையும், பிறைச்சந்திரன், கொன்றைமலர் போன்றனவும் பெரியபுராணத்தில் கூறப்படும் ஆடல் செய்திகள் மூலம் இறைவனின் ஒப்பனையாகச் சுடலையில் சாம்பலாக மிஞ்சிய வெண்ணீறே ஒப்பனைப் பொருளாக அமைந்துள்ளதைக் காணலாம். இது ஆன்மாக்களின் தன்மை கெடின் தூய பொருளாய் விளங்கும் நிலையை அறிவிக்கின்றது. இதனை இறைவன் திருமேனியில் தரித்திருப்பது தானும் தன்னைச் சாரும் பொருளும் அநாதி நித்தியமானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறைவன் ஆடலின் போது வெண்ணீறு அணிந்து ஆடியமை பற்றி கூறிய சேக்கிழார் சிவபிரான் அணியப்பெறும் சந்தனக்காப்பினைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதனை,

''நட்டம் புரிவார் அணிநல் திரு
மெய்ப்பூச்சு இன்று
முட்டும் பரிச ஆயினும் தேய்க்கும்

கைமுட்டாது என்று
வட்டம் திகழ் பாறையின் வைத்து
முழங்கை தெய்த்தார்
சுட்டும் புறத்தோல் நரம்பு
என்பு கரைந்து தேய''

எனும் பாடல் மூலம் மிக அழகாகக் கூறியுள்ளார். பேரறிவு சித் எனவும் பெரியளவிலானவெளி அம்பரம் எனவும் அங்கு அக்கூத்தினை ஆடுவதனால் சிதம்பரம் எனப்பெயர் பெற்றது.

''தில்லைத் திருச்சிற்றம் பலத்துள்
ஆடும் கழலே எனத் தெளிந்து''

என்று இறைவன் தில்லையைத் தனது ஆடல் அரங்காகக் கொண்டுள்ளார் என்பதனைச் சேக்கிழார் பெரியபுராணப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சேக்கிழார் பெரியபுராணப் பாடல்கள் ஊடாக ஆடல் வகைகளாகக் குரவைக்கூத்து, துணங்கைக்கூத்து, வெறியாடல், குணலைக்கூத்து போன்றவையும் இவ்வாடலுக்குப் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளாக முழவு, தாளம், பம்பை எக்காளமும்தாரையும், வீணை போன்றனவற்றையும், இவ் ஆடலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆடை ஆபரண ஒப்பனைகளாகச் சிவனின் திருவுருவத்தைச் சித்தரிக்கும் முகமாகப் பாம்பணி, சிலம்பும்கழலும், கபாலமாலை, தோடும்குழையும், பிறைச்சந்திரன், கொன்றை மலர்மாலை போன்றனவும், ஆடல் அரங்கங்களாக இறைவன் ஆடல் புரிந்த அரங்கமாகத் தில்லை ஆடல் அரங்கம், சுடலை ஆடல் அரங்கம் மகளிர் ஆடல் அரங்கங்களும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதையும், அணிகலன்கள் பற்றி நோக்கியுள்ள பகுதியில் இறைவனின் உடலில் உள்ள ஒவ்வொரு ஆடை அணிகலன்களும் உயிர்களை உயிர்விக்கும் பொருட்டு ஏதோவொரு தத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்பதையும் சேக்கிழார் ஆடற்கலையினை ஓர் உன்னத நிலையில் வைத்து நோக்கியுள்ளார் என்பதனையும் பெரியபுராணப் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது.

16. காரைக்கால் அம்மையாரும் இசையும்



முனைவர் கூ.மு. புவனேசுவரி
ஆராய்ச்சி அலுவலர்
கலைப் பண்பாட்டுத் திட்டம்
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை

முன்னுரை

தென்னிந்திய இசையின் தாய் என்றழைக்கப்படும் காரைக்கால் அம்மையார் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சிறந்த இயல் அறிவும், இசை அறிவும் கொண்ட ஒரு பெண்பால் புலவர். 63 நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தில் இருப்பவர். சிவனால் அம்மையே என்றழைக்கப்பெற்றவர். இவர் கையில் தாளமுள்ளது. இசைவல்லார் அனைவருமே கையில் இசைக்கருவியோ அல்லது தாளமோ வைத்திருப்பது வழக்கமென்பது கருதுதற்குரியது. காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள பாடல்கள் 143.

1. அற்புதத் திருவந்தாதி - 101 பாடல்கள்
2. திருஇரட்டை மணிமாலை - 20 பாடல்கள்
3. மூத்த திருப்பதிகம் - 22 பாடல்கள்

அற்புத திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் இயல்வழிச் சிறப்புடையவை. நீதிநூல் காலத்தில் தோன்றியுள்ள வெண்பா என்ற யாப்பினை முதன்முதலில் பக்தி இலக்கியத்தில் பயன்படுத்தியவர்.

காரைக்கால் அம்மையாரின் பதிகங்களில் காணப்படும் பண்கள்

காரைக்கால் அம்மையார் மூத்த திருப்பதிகத்தில் முதன்முதலில் இருபண்புகளைப் பண்படுத்தியுள்ளார். முதன்முதலில் பண்பாடிய இசைப்புலவராவார். தனது திருப்பதிகங்களில் நட்டப்பாடைப் பண், இந்தளப்பண் ஆகிய பண்களைப் பயன்படுத்தியுள்ளார்.

நாட்டைப்பாடைப்பண்ணில் அமைந்த பாடல்

மூத்த திருப்பதிகத்தில் முதல்பதிகம் நட்டைப்பாடைப் பண்ணில் அமைந்துள்ளது.

பண் : நட்டப்பாடை ; பாடியுள்ள தலம் : திருஆலங்காடு

"கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுக்கண் வெண்பற்
குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கண் நீண்டு பரடுயர் நீள்கணக் காலோர்
பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில் தாழ்சடை எட்டுத்திசையும் விசி
அங்கம் குளிர்ந்தன வாடும் எங்கள் அப்பனிடம் திரு அலங்காடே"
(11.1.1)

இப்பண் தற்போது பாடப்படும் கம்பீரநாட்டை இராகத்தையொத்தது. சேய் இராகமாகும். 36வது மேளமாகிய சலநாட்டையில் பிறந்தது. ஐந்திசைப் பண்ணாகும். துத்தம் விளரி ஆகிய சுரங்களில்லை. இப்பண்ணில் திருஞானசம்பந்தர் தன் முதல்பதிகம் தோடுடைய செவியன் இயற்றியுள்ளார். தற்காலத்தில் கோயிலில் சுவாமி புறப்பாட்டின் போது மல்லாரி என்ற இசைவடிவம் இந்த இராகத்தில் இசைக்கப்படுகிறது.

இத்தளப் பண்ணில் அமைந்த பாடல்

மூத்த திருப்பதிகத்தின் இரண்டாம் பதிகம் இந்தளப்பண்ணில் பாடப்பெற்றுள்ளது.

பண் : இந்தளம்; பாடியுள்ள தலம் : திரு ஆலங்காடு

"எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்தெங்கும்
சுட்ட சுடலைச் சூழ்ந்த கன்னி சோர்ந்த குடர் கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே"
(11.2.1)

தற்போது பாடப்படும் மாயாமாளவகௌளை இராகத்தையொத்தது. தாய் இராகமாகும் ஏழு

சுரங்களையுடையது. இதன் சுரத்தானங்களாவன. குரல்(ச) மென்துத்தம் (ரி1) வன்கைக்கிளை (க.2) மென்உழை (ம1) இளி(ப) மென்விளரி (த1) வன்தாரம் (நி2) இப்பண்ணில் தேவார மூவரில் ஒருவராலன சுந்தரர் தன் முதல்பதிகம் பித்தா பிறைசூடி பாடியுள்ளார். அற்புதப் பதிகங்கள் என்றழைக்கப்படும் உயிர் எழுப்பிய பதிகங்கள் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளன. சங்கீதப் பிதாமகரான புரந்தரதாசர் இசைபயில்வோருக்குத் தொடக்க இசைப்பயிற்சிப் பாடல்களைப் பயிற்றுவிக்க இப்பண்ணையே தேர்ந்தெடுத்துள்ளார். நிறைய இசைவடிவங்கள் இப்பண்ணிலமைந்துள்ளது.

காரைக்கால் அம்மையின் பாடல்களில் இசைக் கருவிகள்

காரைக்கால் அம்மை இறைவன் நடனத்தை நேரடியாகத் தரிசித்தார் என்று பாடல்வழி அறியப்படுகிறது. இறைவன் ஆடும்போது எத்தனைக் கருவிகள் முழங்கத் திருநடனமாடினார் என்பதை மூத்த திருப்பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மெந்தோள்
தமருகம் குடமுழா வாசித்து
அத்தனை விரவினோடு ஆடுமெங்கள்
அப்பனிடம் திருஆலங் காடே (11, 1.9)

இப்பாடலில் 12 வகையான இசைக்கருவிகளைக் கூறுகிறார். தவிர, முழவு, யாழ், குழல், துடி, பறை போன்ற இசைக்கருவிகள் பதிகத்தின் பல்வேறிடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

குழல்

தமிழ் மக்களின் இசைக்கருவிகளில் முந்தையது குழல், மூங்கிலில் வண்டு துளையிடுவதும், அதன்வழி காற்று புகுந்தொலிப்பதும் இயல்பு. அதைக்கண்ட மனிதன் குழலமைத்து இசையெழுப்பியுள்ளான் என்பது அறிஞர் பலரின்

கருத்து. குழல் மிகப்பழமையான இசைக்கருவியாகும். சங்கப்பாடல்களில் ஆம்பற்குழல், பெருவங்கியம், கொன்றைக்குழல் ஏழ்புழைக்குழல், ஐம்புழைக்குழல் ஆகிய குழல்களை அறியமுடிகிறது. காரைக்கால் அம்மையாரின் பதிகத்தில் குழல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைக்

''கூளிக் கணங்கள் குழலோடு இயம்பக் குழகன் ஆடுமே'' (11.2.6)

என்ற அடியில் அறியலாம்.

கொக்கரை

கொக்கரை என்பது வலம்புரிச்சங்கு ஊதுகருவி வகையைச் சார்ந்தது என்று தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி 2ல் குறிப்பிடப்படுகிறது. இக்கருவி சங்கஇலக்கியங்களில் இடம்பெறவில்லை. தேவாரம் கொக்கரையைப் பற்றி கூறுகிறது. இக்கருவியைப் பற்றி அம்மையாரின் பதிகத்திலும் அறியப்படுகிறது. இதனைச்

''சச்சரி கொக்கரை தக்கையோடு'' (11.1.9)

எனும் அடியில் அறியலாம்.

வீணை

நரம்புக்கருவி வகையைச் சார்ந்தது. சங்கநூல்களில் இக்கருவி பற்றிய குறிப்பு காணப்படவில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் வீணை பற்றிய குறிப்புள்ளது. தேவாரப்பதிகங்களில் பல இடங்களில் வீணை பற்றிய குறிப்புகளுள்ளன. இக்கருவி பற்றி அம்மையாரின் பதிகத்திலும் கிடைக்கப்பெறுகிறது. இதனைத்

''தருணிதம், துந்துபி, தாளம் வீணை'' (11.1.9)

என்ற அடியில் அறியலாம்.

யாழ்

சங்ககால இசை உலகில் யாழுக்கு மிகச்சிறப்பான இடம்

தரப்பட்டுள்ளதை அக்காலப் பாடல்கள் வழி நன்கறியலாம். நரம்புக்கருவிகளில் மிகச்சிறப்புடையதாக யாழைக்கருதலாம். பழந்தமிழரால் பயன்படுத்தப்பட்ட முக்கியமான கருவிகளுள் ஒன்றாகும். இக்கருவியானது நரம்புக்கருவிகளில் முதலிடம் வகிக்கின்றது. குறிஞ்சியாழ், பாலையாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என நிலங்களின் பெயரோடு யாழ் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. அழகான உருவும் இனிய இசையும் அதன் பெருமைக்கும், சிறப்புக்கும் காரணமாகின்றன. யாழில் பல வகைகளுள்ளன. இத்தகைய யாழினைப் பற்றி காரைக்கால் அம்மையாரின் பதிகத்திலுள்ளது. இதனை,

''பாடியிருந் தந்நரி யாழமைப்ப'' (11.1.11)

என்ற அடியில் அறியலாம்.

சச்சரி

முழக்குக்கருவி வகையாகும். சிறிய நுட்பமான ஒலியுடைய கருவி. அரிப்பறைவகையைச் சேர்ந்த சிறுதோற்கருவி, இக்கருவி குறித்துச் சங்க இலக்கியத்திலும், சிலப்பதிகாரத்திலும் குறிப்பு இல்லை. தேவாரத்தில் இக்கருவி பற்றிய குறிப்புள்ளது. இக்கருவி பற்றி காரைக்கால் அம்மையாரின் பதிகத்திலுள்ளது. இதனைச்

''சச்சரி கொக்கரை தக்கையோடு'' (11.1.9)

என்ற அடியில் அறியப்படுகிறது.

தக்கை

இது தாழ்குரல் தண்ணுமை எனும் பகுதியில் அடியார்க்கு நல்லாரின் மேற்கோளில் வருகிறது. மிகத்தாழ்ந்தொலிப்பதானல் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் கோயிலில் நாள் பூசைக்குப் பயன்படுத்தப்படும் கருவி. இக்கருவியைத்

''தக்கை தண்ணுமை தாளம் வீணை'' (7.36.9)

எனும் அடியில் அறியலாம்.

தகுணிதம்

தோற்கருவி வகையாகும். இது தகுணிச்சம், தகுணிதம் என்ற பெயர்களில் வழங்கப்பட்டுள்ளது. அரங்கேற்றுக் காதையில் பேரிகைபடகம் என்று சுட்டியுள்ள பாடலில் பெரும்பண்கள் தொகுத்துக்காட்டப்பட்டுள்ளன. இதில் தகுணிதம் குறிப்பிடப்பட்டுள்ளதும் இதழ்விரிந்த தாமரைமலரையொத்து இக்கருவி இருந்ததென கல்லாடம் (கல்.85) கூறுகிறது. பல்கலைக்கழக அகராதி இதனைப் பொதுப்பறையென குறிப்பிடுகிறது. இக்கருவியைக் காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகத்தில்,

''சச்சரி கொக்கரை தக்கையொடு தகுணிதம்'' (11.1.9)

எனும் அடியிலும்,

''தக்கை தண்ணுமை தாளம் வீணை தருணிச்சம்''
(7.36.9)

எனும் அடியிலும் அறியப்படுகிறது.

துந்துபி

தோற்கருவி வகையாகும் துந்துபி ஒலிக்குறிப்பினடியாக இப்பெயர் பெற்றிருக்கலாம். இது வானோர் இசைத்த கருவியாகவிருக்கலாம். தேவதுந்துபி, அந்தரத் துந்துபி, அநங்கத்துந்துபி என்றழைக்கப்படுகிறது. இடியைப்போல உரத்தொலியெழுப்பும் கருவி. இதுகுறித்து,

''தகுணிதம் துந்துபி தாளம் வீணை'' (11.1.9)

என்ற அடியில் அறியலாம்.

மத்தளம்

மரத்தால் செய்யப்பட்ட இருமுகத்தோற்கருவி. ஒலி இனிமைத்தரத்தில் வேறான பிறகருவிகளுக்குத் தளமாகவிருப்பதால் மத்தளம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். இக்கருவியை,

''மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்'' *(11.1.9)*
எனும் அடியில் அறியப்படுகிறது.

கரடிகை

தோற்பறை வகையாகும். கரடி என்னும் பெயரும் உண்டு. கரடிகத்தினாற் போல ஓசையுடையதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். கரடிகை அளவுக்கருவியாகிய மரக்கால் போன்றமைப்புடையது. இக்கருவியை,

''மத்தளம் கரடிகை வன்கை மென்தோள்'' *(11.1.9)*
என்ற அடியில் அறியலாம்.

முழவு

முழக்கிடும் தோற்கருவி முழவெனப்பட்டது. முழவு தோற்கருவிகளின் பொதுப்பெயரென்றும் குறிப்பிடப்படுகிறது. பஞ்சமரபின் பெரும்பிரிவுகளில் இரண்டாம் பிரிவான வளர்ச்சியமரபு முழவினைக் குறிப்பிடுகிறது. இக்கருவியை,

முந்தி அமரர் முழவின் ஓசை *(11.1.10)* எனும் அடியிலும்
முழவங்கொட்ட கூழிப்பாடக் குழகன் ஆடுமே *(11.2.1)* எனும் அடியிலும்

முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே *(11.2.6)*
எனும் அடியில் அறியப்படுகிறது. காரைக்கால் அம்மையார் முந்திஅமரர் முழவின் ஓசைவழுவாமே என்று கூறுவதால், ஒரு கட்டுப்பாட்டுடன் முறையோடு வாசிக்கப்பட்ட முழவினோசை அவராடிய அந்திதிருத்தத்தில் ஒலித்ததென்பது புலனாகும்.

முடிவுரை

காரைக்கால் அம்மையார் பக்தி இலக்கிய இசைவளர்ச்சிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்டவர். இவரது பதிகங்களின் வழி பாடும்முறை, பதிகஅமைப்பு, கருத்தமைப்பு, கீர்த்தனையமைப்பு, பண்ணெனும் அடிப்படையில் தேவாரமூவருக்கு முன்னோடியாய்யிருந்தவர் என்பன குறித்தும் அறியப்படுகிறது. தவிர இவரது பதிகத்தில் காணப்படும் இசைக்கருவிகள் குறித்த பதிவின்வழி அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகளையும், அதன் பயன்பாட்டினையும் இசையின் வளர்ச்சி நிலையையும் அறியத் துணைபுரிகின்றது.

17. சைவத் தமிழ் நெறி வளர்த்த சமுதாயக் கலைகளில் ஓவியம்

முனைவர் சு.பிரவீன்குமார்
ஆய்வியல் நிறைஞர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

கலை என்பது மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி, நிரம்பி, அவ்வளவோடு இல்லாமல் வெளிப்படும் ஆற்றல் ஆகும். கண்ணையும், கருத்தையும் கவரும் அந்த அமைப்பு பாராட்டத்தகும் நிலையை அடைகிறது. அப்பொருள் கலை அறிவோடு அமைக்கப்பட்டது என்று நாம் பாராட்டுகின்றோம். கலை என்பது அளவும், பொருத்தமும் தன்னுள் அடக்கி நிற்பது. அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது, உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது.

கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம். கண்ணைக் கவரும் ஓவியமாக வெளிப்படலாம். சிற்பமாக உருக்கொள்ளலாம். கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டமாக வெளிப்படலாம்.

அறுபத்து நான்கு கலைகள்

இவ்வாறு மனிதனுள் இருக்கும் கலை ஆற்றலே உலகத்தார் வியக்கும் சித்தன்ன வாசல் ஓவியங்களையும், தஞ்சை பெரிய கோயில் ஓவியங்களையும் உருவாக்கியது. கிரேக்க நாட்டு சிற்பங்களையும், காந்தாரச் சிற்பங்களையும், கண்ணையும், கருத்தையும் கவரும் தென்னிந்தியச் சிற்பங்களையும், காஞ்சி, அமராவதி முதலிய இடங்களில் உள்ள பௌத்த சிற்பங்களையும் படைத்தது. விழித்த கண் விழித்தபடி பார்க்கத்தக்க பேரழகில் படைத்த தாசுமகால் என்னும் கவினுறு கட்டடத்தை

உண்டாக்கியது. மனத்திற்கு இன்பத்தை ஊட்டும் மலர் சோலைகலையும், பூங்காக்களையும் அமைத்தது. உலக அதிசயங்கள் என்று சொல்லத்தகும் அரிய படைப்புக்களைப் படைத்தது.

வடமொழியில் காம சூத்திரத்தை எழுதிய வாத்சுயாயனர் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். புத்தர் வரலாற்றைக் கூறும் வலித விசுதரம் என்னும் நூலிலும் சமண நூல்களிலும், இந்த நூல்களிலும் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்கள் காணப்படுகின்றன. சமணர் நூல்கள் ஆடவர் கலைகள் எழுபத்திரண்டு என்றும், பெண்களுக்குரிய கலைகள் அறுபத்தி நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன.

ஓவியக்கலை

நாம் கண்ணில் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை. பண்டை தமிழன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினான். பின்பு அறிவு வளர வளர தன் மனத்தால் பல உருவங்களையும், காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான் எண்ணும் ஆற்றலின் சிறந்த புலவர் பெருமக்களுடைய கருத்த ஓவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக் கலையில் காணும் பொருளில் இருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சி பெற்றது. சுருங்கக்கூறின் ஓவியக்கலை வீடுகட்ட அறியாத மனிதன் குகையில் சிறு சிறு ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப்பட்ட மண்பாண்டங்களும் பலவாகும். இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புனித பொருள்களிலும் ஓவியங்கள் காணப்படுகிறது. எனவே ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது தொடக்ககாலத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது என்று கூறுதல் பொருத்தமாகும். சங்ககால நடன மகளிர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலை ஒன்று ஒன்று

சிலப்பதிகாரம் செப்புகின்றது.

> ''நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை''

இவ்வடிகளை நோக்குங்கால் ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று. சங்ககாலத்தில் இருந்தது என்பது தெளிவாதல் ஆகும். மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் கண்கவர் ஓவியங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. அக்கூரை ஓவிய விதானம் எனப் பெயர் பெற்றது. உலோகங்கலான கேடயங்களில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

சித்தன்ன வாசல் ஓவியங்கள்

சங்க காலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி.பி.300-900) குடைவரைக் கோயிலில் பாறைச் சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மாமண்டூர்க் குகைக்கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் முதலியவற்றின் சுவர்களின் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் அழிந்துபட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தகும் நிலையில் இருப்பவை சித்தன்ன வாசல் ஓவியங்களாகும்.

சித்தன்ன வாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்று ஒன்றில் குடைவரைக்கோயில் இருக்கிறது. அதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடனமாதர் இருவரின் உருவங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அவர்தம் கூந்தல் அமைப்பு, ஆடை அமைப்பு, அணி வகைகள்,நடனமாடும் நிலையில் கைகள் வைத்துள்ள முறை முதலியன அவற்றை எழுதிய ஓவியர் திறமையை உலகறியச் செய்கின்றன.

தஞ்சை ஓவியங்கள்

பல்லவர்க்குப் பிறகு வந்த சோழர் கால ஓவியங்களுள்

இன்று நாம் காணுமாறு இருப்பவை. தஞ்சை பெரியகோயில் ஓவியங்களாகும். அவைத் தஞ்சைப் பெரியகோயில் கருவறையின் புறஞ்சுவர்கள் மீது எழுதப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவை மறைக்கப்பட்டு அவற்றின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விரு ஓவியங்களும் நமக்கு கிடைத்துள்ளன.

சோழர் கால ஓவியங்கள் கி.பி. 11ம் நூற்றாண்டில் வரையப் பெற்றவை. சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோயிலில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் வேதியராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிறார். அவரது ஒரு கையில் தாளங்குடையும், மற்றொரு கையில் பனை ஓலையும் காணப்படுகின்றன. மணமண்டபத்தில் மறையவர் பலர் கூடியிருக்கின்றனர். மணமகனாரான சுந்தரர் தமது மனத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடு பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டிலும் ஓவியக்கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகிறது. கோயில் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. தில்லையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முருகன் கோயிலில் எழுதப்பட்டுள்ள ஓவியங்கள் இக்கால ஓவியக்கலை அறிவிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஓவியக்கலை கண்ணையும், கருத்தையும் ஈர்த்து ஒருநிலைப்படுத்துவதாகும். உள்ளத்துக்கு உணர்ச்சி ஊட்டுவதாகும். இத்தகைய சிறப்புடைமையற்றான். இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞர்களால் பாராட்டப்படுகிறது.

18. இறைச்சிற்பங்களில் முத்திரைகளும் நடனமுத்திரைகளும்



சீதாலட்சுமி பிரபாகரன்
முதுநிலை விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

அறிமுகம்

இறைவனைக் கலை வடிவாகக் காண்பது இந்து சமயப் பண்பாகும். கலையும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளன. நடனக்கலையில் காணப்படும் கைமுத்திரைகளின் அழகை சிற்பக்கலையின் ஊடாகக் காலாதிகாலமாகப் பேணப்பட்டு வருவதை நோக்கலாம். நடனக்கலையில் பயன்படுத்தப்படும் முத்திரைகளுக்கும், சிற்பக்கலையில் இடம்பெறும் கை அமைதிகளுக்கும் இடையிலான ஒற்றுமை தன்மைகளை இனம் காண்பதாகவும் இவ்வாய்வு அமைகிறது. ஆற்றுகைகளினால் வெளிப்படுத்தப்படும் செயற்பாடுகளிலும் பார்க்க சிற்ப சான்றுகளினூடாக வெளிக்கொண்டுவரும் ஆதாரங்கள் வலுவானதாகக் காணப்படும். நடனங்களின் ஊடாக முன்னிலைப்படுத்தப்படும் கருத்தியலுக்கு மாறுபடாதவகையில் ஆலயங்களில் காணப்படும் இறை சிற்பங்கள் மிளிர்கின்றன என்பதை நடன முத்திரைகளினூடாக நிறுவுவதாக அமைகின்றது. இவ்வாய்வான ஆலயங்களில் காணப்படும் இறை சிற்பங்களிலும், நடனங்களிலும் முத்திரைகளின் அழகியல், சமய, தத்துவ விடயங்களை இணைத்து நோக்குவது முக்கிய பயன்பாடாக அமையும். இதில் பெயர், அமைப்பு எவ்வகையில் தொடர்புபட்டுள்ளது என இணைத்துப் பார்ப்பது இவ்வாய்வின் பயனாகும்.

இறை சிற்பங்களில் முத்திரைகள்

சிற்பத்தில் கையின் பல்வேறு செயல்நிலைகளைக்

கூறுவது கரலசுணம் அல்லது கசுதலகுணம் எனப்படும். இம்முதிரைகள் முப்பத்திரண்டு வகைகளாக பாகுபடுத்தியுள்ளனர். இதில் கரலசுணங்களோடு, ஆயுதங்களோடு கூடிய லசுணமும் விவரிக்கப்படுகிறது. இவற்றையே கசுதமுத்திரை என்றும் சிற்பக்கை என்றும் கூறப்படும். இது தெய்வ உருவங்களில் ஆயுதங்களை ஏந்திய கையாகவும் காணமுடிகிறது. இக்கைகள் எழிற்கைகள், தொழிற்கைகள் என இருவகைப்படும். எழிற்கைகளை சிற்பத்தில் நாட்டியகரம் என்றும் குறிப்பிடுவர். மேலும் தொழிற்கை எனப்படுவது ஒரு கருத்தை உணர்த்த அசைக்கும், அபிநயிக்கும் கை தொழிற்கை ஆகும். கை எழிற்கை ஆகும் தொழிற்கை இருவகைப்படும். ஒரு கையினால் காட்டும் முத்திரை, இருகைகளையும் இணைத்து செய்யப்படும் முத்திரையும் உண்டு. அவைப் பின்வருமாறு :

''ஒற்றைக்கை முத்திரைகள்'' *(24)*

அபயகசுதம், வரதகசுதம், கடக கசுதம், வியாக்யான கசுதம், சூசி கசுதம், தர்சனி கசுதம், கர்த்தரீ முக கசுதம், அலபத்ம கசுதம், விசுமய கசுதம், பல்லவ கசுதம், நித்ரா கசுதம், அர்த்த சந்திர கசுதம், அர்த்த பதாக கசுதம், திரிசூல கசுதம், முசுடி கசுதம், சிகர கசுதம், பூ சுபரிச கசுதம், ஊரு கசுதம் ஆலிங்கன கசுதம், தனுர் கசுதம், கடி கசுதம், டமரு கசுதம், தாடன கசுதம்.

இரட்டைக்கை முத்திரைகள்

1. அஞ்சலி கசுதம், 2.தியான கசுதம், 3.புசுபபுட கசுதம், 4.தர்மச்சகர கசுதம்

எழிற்கை முத்திரைகள்

1. கச கசுதம், 2.தண்ட கசுதம், 3.டோல கசுதம் (லம்ப சுதம்) 4.பிரசாரித கசுதம்

முத்திரைகள் பற்றிய அறிமுகம்

முத்திரைகள் ஓர் உலகப் பொதுமொழி ஆகும். எனவே இதை ''மொழியா மொழி'' என்று அறிஞர் கூறுவர். இதுவே

ஆத்மாவின் அபிநயங்கள் ஆகும். ''கை அபிநய பேதங்களை முத்திரை அல்லது பிடி அவற்றை வேறுபாடுகளென்று அறிஞர் கூறுவர்'' உணர்வினை வெளிப்படுத்துகின்ற உடலால் காட்டப்படுகின்ற கைகை என்று முத்திரை வரையறுக்கப்படுகின்றது. நாட்டிய இலக்கணத்தில் தனிச் சிறப்பைப் பெறுவது கையால் பிடிக்கப்படும் முத்திரைகளே வெறும் அழகிற்காகப் பிடிக்கப்படும் முத்திரைகளே எழிற்கைகள் எனவும் அபிநயத்திற்கெனப் பிடிக்கப்படும் முத்திரைகளைத் தொழிற் கைகள் என சிலப்பதிகாரம் சுட்டுகின்றது.

நடன முத்திரைகளின் வகைகள்

நாட்டிய முத்திரைகள் பலவகையான நூல்களில், பல்வேறு எண்ணிக்கைகளில் காணப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் பெரும்பாலான நடனக் கலைஞர்கள் அபிநய தர்ப்பண வடமொழி சுலோகத்தினை அடிப்படையாகக் கொண்டு பொதுவாகக் கையாண்டு வருகின்றனர். ஒருகை பிரயோக முத்திரை இருபத்தெட்டிற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளன. இரண்டுகை முத்திரைகள் இந்நூலில் இருபத்து மூன்றிற்கே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவகித்தம் எனும் முத்திரை சேர்த்து தற்காலத்தில் உபயோகித்து வருகின்றார்கள்.

''வடமொழி சுலோகத்தில் கூறப்பட்ட ஒற்றைக்கை முத்திரைகள்'' 28

பதாகம், திரிபதாகம், அர்த்தபதாகம், கர்த்தரீமுகம், மயூரம், அர்த்தசந்திரன், அராளம், சுகதுண்டம், முசுடி சிகரம், கபித்தம், கடகாமுகம், சீசி, சந்திரகலா, பத்மகோசம், சர்ப்பசிரசு, மிருகசீரிசம், சிங்கமுகம், காங்குலம், அலபதுமம், சதுரம், பிரமரம், கம்சாசுயம், கம்சபசம், சந்தம்சம், முகுளம், தாம்ரசூடம் திரிசூலம் என்பன ஆகும். இவற்றுடன் இரண்டுக்கை முத்திரை 23 சுலோகத்தில் கூறப்பட்டவை.

''அஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவசுதிகம், டோலம், புசுபபுடம், உத்சங்கம், சிவலிங்கம், கடகாவர்த்தனம்,

கர்த்தரீசுவசுதிகம், சகடம், சங்கம், சக்கரம், சம்புடம், பாசம், கீலகம், மத்சயம், கூர்மம், வராகம், கருடன், நாகபந்தம், கட்வா, பேருண்டம்'' என்பனவாகும். இவற்றுடன் அவகித்தம்

நடன முத்திரைகளும் இறைசிற்ப முத்திரைகளும்

இந்து சமய மரபிலே வழிபடப்படுகின்ற தெய்வங்கள் பல்வேறு விதமான கையமைதிகளைச் சுட்டி நிற்கின்றன. நடனக்கலையில் இடம்பெறும் முத்திரைகளும் சிற்பக்கலையில் இறைவனது திருவுருவங்களில் காணப்படும் கை அமைதிகளும் எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டும், மாறுபட்டும் காணப்படுகின்றது என்பதை இங்கு வரும் ஒப்பிட்டின் மூலம் நோக்கலாம். இந்திய சிற்பங்களின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலை இலக்கணங்கள் அவற்றின் அளவாய் அமைந்துள்ள நிலையாகும். இரண்டு கலைகளுமே கோயில்களால் வளர்க்கப்பட்டமையாகும். சிற்பிகள் ஆடற்கலை இலக்கணத்தை அறிந்து வேண்டுமளவு அதைத்தழுவி, தம் கலை உணர்வு, கற்பனைத்திறன் ஆகியவற்றைக் கலந்து அமைக்கப்படும் திருமேனிக்கும், நிறுவப்படும் இடத்திற்கும் தக்கவாறு சரிந்து, வளைந்து, நெளிந்த கைகளையும், கால்களையும், பல அமைதிகளில் வடித்துக் காண்பவர் கலையழகை மட்டுமன்றி அவ்வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணருமாறு செய்திருக்கிறார்கள்.

சிற்பக்கலையில் இடம்பெறும் கை அமைதிகள், நாட்டியக் கலையில் பயன்படும் முத்திரைகள் இரு இடங்களிலும் உபயோகத்திலும், பெயரிலும் ஒன்றுபட்டு விளங்குவதுடன், இதே வேளை சில அமைதிகள் மாறுபட்டும் காணப்படுகின்றன. சிற்பத்தில் கையாளப்படும் அமைதிகள் நுட்பமாகக் கையாளப்படுவதே காரணமாகும். நடனத்திலும், சிற்பத்திலும் அழகிற்காகச் சில முத்திரைகள் பிடிக்கப்படும். இதே வேளை தொழிற்பாட்டிற்காகப் பிடிக்கப்படும் முத்திரைகள் சிற்பத்தைப் பொறுத்தவரை தெய்வ செயற்பாட்டுடன் பொருந்தியதாகக் காணப்படும். ஆனால் நடனத்தில் தெய்வ செயற்பாட்டுடன், சமூக செயற்பாட்டைச் சுட்டவும் பிரயோகிக்கப்படும். அதில் ஒரு முத்திரைக்குப் பல பொருளுடையதாகக் காணப்படும்.

ஆனால் சிற்பத்தைப் பொறுத்தவரை ஒரு முத்திரை ஒரு செயலையே சுட்டி நிற்கும்.

நடனத்தில் இடம் பெறும் பதாககுதம், சிற்பத்தில் அபயககுதம் எனஇடம் பெறுகின்றது. இரு இட்ங்களிலும் அருள்பாலிக்கும் கருத்தினைச் சுட்டுகின்றது. ஆகவே பெயரளவிலும் ஒன்றுபட்டுக் காணப்பட்டதுடன் அமைப்பிலும் கருத்திலும் ஒருமித்தாகவே காணப்படுகின்றது. இதைப்போன்றே சிற்பத்தில் வரத கசுதம் அமைகின்றது. நடனத்தில் பதாகத்தை கீழ்நோக்கி உள்ளங்கை வெளியே தெரிய பிடிப்பது பெண் தெய்வங்களைக் குறிக்க பயன்படும். இது சிற்பத்திலும், நடனத்திலும் ஒருமித்த கருத்துடையதாகக் காணப்படுகின்றது.

சிற்பத்தில் இடம்பெறும் கடக கசுதத்தினை ஒத்ததாக நடனத்தில் வரும் கடகாமுக கசுதமும் ஒரே பெயரைக் கொண்டதாக உள்ளது. நடனத்தில் மூன்று கடகாமுக அமைப்பு உள்ளது. அதில் மூன்றாவது கடகாமுகத்தை ஒத்ததே சிற்பத்தில் கடக கசுதம் இருந்தாலும் விரல்களின் அமைப்பிலும், செயலிலும் வேறுபாடு உண்டு. இம்முத்திரை பறவை, பெண் என்பவற்றை நடனத்தில் சுட்டுகின்றது. சிற்பத்தின் தெய்வங்களின் ஆயுதங்களைப் பிடிக்க பயன்படும். இதே வேளை பெண் தெய்வங்களைக் குறிக்கவும் இம்முத்திரை பிரயோகப்பட்டுள்ளது. ஆகவே மாறுபட்ட கருத்தும் ஒருமித்த கருத்தும் உடையதாக இம்முத்திரை விளங்குகின்றது.

நாட்டியத்தில் கர்த்தரீமுக கசுதம் போன்றே சிற்பத்தில் கர்த்தரீமுக கசுதம் இடம் பெறுகின்றது. இங்குப் பெயரிலும், அமைப்பிலும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இம்முத்திரை ஆயுதத்தை இயக்கும் பாவனையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதே கருத்தைச் சிற்பமும் சுட்டகின்றது. அதாவது தெய்வ படிமங்களில் பக்கவாட்டில் உள்ள கரங்களில் கத்தரி அலகுகளுக்கிடையே ஆயுதத்தைப் பிடித்திருக்கும் பாவனையில் காணப்படுகின்றது. ஆகவே மூன்றிடமும் ஒருமித்ததாகக் காணப்படுகின்றது. இதே வேளை ககர்த்தரீமுக கசுதத்தில்

பெருவிரலும் அணிவிரலும் தொட்டுக் கொண்டிருப்பதைச் சிற்பத்தில் மயூர கசுதம் என்று சிற்பநூல் சுட்டுகின்றது. இதே அமைப்பையும் இதே பெயரையும் நடனத்திலும் காணலாம். இம்முத்திரை பல கருத்துக்களைச் சுட்டினாலும், சிவனது உருவத்தில் மழுவிற்குரிய முத்திரையாகப் பிரயோகப்படுகின்றது. ஆகவே ஆயுதங்களைத் தாங்க மயூரமும், கர்த்தரீமுக கசுதமும் இடம் பெறுவதால் ஒற்றுமையான இயல்பும், கருத்தும் உடையதாகத் திகழ்கின்றது.

நடனத்திலும், சிற்பத்திலும் அலபத்ம கசுதம் காணப்படுகின்றது. மலர்ந்த தாமரை மலர் போல் தோன்றும். இது நடனத்தில் பல கருத்துக்களைச் சுட்டி நின்றாலும் சிற்பத்தில் குறிப்பிடும் கருத்தாகி மகிழ்ச்சியையும் இங்கு புலப்படுத்தும். ஆகவே இரு இடங்களிலும் கருத்து, பெயர், அமைப்பு ஒன்றாக விளங்குகின்றது. சிற்பத்தில் காணப்படும் விசுமய கசுதம் அலபத்ம கசுதத்தை ஒத்ததாகக் காணப்படினும் இது நடனத்தில் அலபத்மம் என்றே கூறுவர். சிற்பத்தில் இதற்கு வியப்பை உணர்த்தும் கருத்தைச் சுட்டுகின்றது. ஆனால் இவ்வமைப்பு அலபத்மத்தினுள்ளே அடங்கும். ஆனால் இதில் கருத்து மாறுபட்டுக் காணப்படும். நடனத்தில் ஓர் அமைப்பை உடைய முத்திரை பல பொருள்களைச் சுட்டும்.

நாட்டியத்திலும், சிற்பத்திலும் முசுடி என்று அழைப்பர். சிற்பத்தில் ஆயுதங்களை இறுக்கிப்பிடித்தலை சுட்டும். நடனத்தில் பல பொருட்களை இறுக்கிப்பிடித்தல் அதில் தெய்வ ஆயுதங்களையும் பிடிக்க உபயோகிப்பர். ஆகவே இரு இடங்களில் ஒரே சந்தர்பத்திற்கே பயன்படுகிறது. ஆகவே ஒற்றுமைப்பட்டு காணப்படுகின்றது. சிற்பத்தில் இடம்பெறும் சிகர கசுதமும் விளங்குகின்றது. இதற்குப் பல விநியோகங்கள் காணப்பட்டாலும் விற்பிடியைக் குறித்து நிற்கின்றது. அதாவது வில்லைப் பிடித்து இருக்கும் கரம் ஆகும். ஆகவே இங்கு கூட மூன்று சந்தர்ப்பங்களிலும் ஒருமித்ததாக விளங்குகின்றது. சிற்பத்திலும் நடனத்திலும் புசுபபுடம் உண்டு. இது பல பொருள்களைச் சுட்ட வந்தாலும் மலர்களை ஏந்தும் பாவனைக்கு பிரயோகிப்பர். இதே கை சிற்பத்திலும்

மலர்க்குடலைக் குறிக்கும். அதாவது மலர்களைக் கொண்டு வணங்கும் பாவனையில் அமையும். ஆகவே இரு இடங்களிலும் ஒரு கருத்தினைப் புலப்படுத்துகின்றது. அடுத்து தர்ம சக்ர கசுதம் நாட்டியத்தில் இடம்பெறவில்லை. இதில் வரும் இரு கசுதங்களும் தனித்தனிப் பிரயோகங்களாக இடம் பெறுகின்றது. ஆகவே நடனத்தில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. சிற்பத்தில் வரும் கச கசுதம் நாட்டியத்தில் நிருத்த கசுதங்களுள் கரிகசுதம் எனும் பெயரில் வருகின்றது. கசகசுதத்தினைக் கரி கசுதம் என்றும் கூறப்படும். இது யானையைச் சுட்டிக்காட்ட தும்பிகையாகப் பிரயோகிப்பர். இது நாட்டியத்தில் கணபதியைக் குறிக்கவும் பயன்படும்.

நாட்டியத்தில் இடம்பெறும் டோலகசுதம் சிற்பத்திலும் இடம் பெறுகிறது. இது நாட்டியத்தில் ஆயத்தமான ஒரு நிலையைக் குறிப்பதுடன் பெண்களின் ஒய்யார நிலையைக் குறிக்க பயன்படும். இதே கருத்தமைய சிற்பத்திலும் இடம்பெறுகின்றது. இவற்றுடன் சிற்பத்தில் வரும் தண்ட கசுதம், பிரசாரித கசுதம் என்பன நடனத்தில் டோல கசுதத்தை ஒத்தாகவே காணப்படும். இதில் பிரசாரித கசுதத்தை நாட்டியக்கரம் என்றும் கூறுவர். இவை நாட்டியத்தில் ஒய்யார நடை உருவங்களில் எழிலாக இருப்பதற்குப் பயன்படும்.

ஆகவே இதிலிருந்து நடனமுத்திரையும், சிற்பமுத்திரையையும் ஒப்பிட்டு அடிப்படையில் நோக்கும் போது சிற்பத்தில் இருந்து நடனத்திற்குச் சில முத்திரைகள் எடுத்தாளப்பட்டிருக்கலாம் என்பதை இவ்வாய்வின் மூலம் நோக்க முடிகிறது. அதாவது டமருகம் என்னும் கசுதம் நாட்டியத்தில் தனி முத்திரையாக நூல்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பிரயோகத்தில் இடம்பெறுகின்றது. இதே போன்று தியான கசுதமும் பெயரில் இடம் பெறாவிடினும் பிரயோகிக்கப்படுகின்றது. ஆகவே இதிலிருந்து தெரிவதாவது சிற்பத்தில் இருந்தே அதாவது சிற்ப நூல்களில் இருந்தே இவ்வகையான முத்திரைகள் நடனத்திற்கு எடுத்தாளப்பட்டிருக்கலாம் என்பதை இவ்வாய்வில் இவ்விரு ஒப்பீட்டின் மூலமும் அறியமுடிகின்றது.

19. திருஞானசம்பந்தர் பாடல்களில் சிவ பிரதோச நடனம்

மைதிலி அருளையா
முதுநிலை விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

அறிமுகம்

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தர் வரலாறு மிக விரிவாகப் பாடப்பட்டுள்ளது. சுந்தரர் தேவாரங்கள், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருஉலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருவியலூர் உய்யவந்த தேவரின் திருவுந்தியார், திருக்கடவூர் உய்ய வந்த தேவரின் திருக்களிற்றுப்படியார், ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணி, ஆதிசங்கரரின் சிவானந்த லகரி முதலான நூல்களிலும் சம்பந்தர் பற்றிய குறிப்புகள் உள்ளன.

திருஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகங்களில் ஆடல்பற்றிய கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. ஆடலோடு இசையையும் இணைத்துக்கொண்ட இவ்விரு கலை வடிவங்களையும் ஊடகமாகக் கொண்டு சைவத்தின் மகோன்னத எழுச்சிக்கு வித்திட்டார். காரைகாலம்மையாரால் காட்டிற்குள் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்வழி திருஞான சம்பந்தரால் நாட்டிற்குள் வெற்றி காணப்பட்டது. சமண பௌத்த மதங்களுக்கு எதிராகச் சைவ சமயத்தை மேலோங்கச் செய்யவேண்டிய கட்டாய சூழலில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் ஆடிலின். ஊடாகச் சைவத்தின் பெருமையும் சைவ தத்துவக் கருத்துகளையும் மிகத்துல்லியமாக விளக்க முற்பட்டு அதில்வெற்றியும் கண்டார். அவ்வகையில் சிவனுடைய ஆடலை

மேலெழுந்தவாரியாகச் சொல்வதைத் தவிர்த்துச் சிவனோடும் சைவப் பண்பாட்டோடும் ஆடல்மரபு பின்னிப் பிணைந்திருப்பதை பக்திச் செழுமையுடனும் அழகியல் உணர்வுடனும் காட்டிச் செல்கிறார் அவர்.

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பதினொருவகையான ஆடல்களில் ஒரு ஆடலுக்கு மட்டுமே உரித்துடையவராகக் காண்பிக்கப்படும் சிவபெருமான் ஆடல் நாயகனாக உயர்த்தப்பட்ட காலம் பக்தி இலக்கியக் காலமாகும். காரைக்காலம்மையாரும் திருமூலரும் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒருவரையொருவர் விஞ்சிக்கொண்டு இறையாடல் நிகழ்வுகளைத் தமது பாடல்களில் நிதர்சனபடுத்தினார்கள். அதன்மூலம் சிவபெருமானை ஆடலின் தலைமைப்பீட நாயகனாகக் காட்சிப்படுத்தினார்கள். ஆடல் நாயகனின் தோற்றம் அவரால் ஆடப்படும் ஆடல்வடிககள், ஆடலுக்கான இசை, இசைக்கருவிகள், பாடல்பாடியவர்கள், ஒப்பனைகள், உடன் ஆடியவர்கள், பார்த்து மகிழ்ந்தவர்கள், அதற்கான களம் போன்ற எத்தனையோ தகவல்களை இப்பெருமக்கள் எடுத்துரைத்துள்ளனர். இவர்களால் பாடப்பட்ட ஆடற்காட்சிக் கோலங்கள் இரண்டு நூற்றாண்டுகால ஆடற்கலை வரலாற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சிவ பிரதோச நடனம்

சைவ சமயப் பண்பாட்டு மரபில் சிவநடனம் என்பது தனித்துவமான வழிபாட்டுக் கூறுகளில் ஒன்றாக விளங்குகிறது. சிவநடனம் பற்றிய ஆய்வுகள் அந்நடனத்தைச் சிவ பிரதோச தோத்திரத்தில் விளக்கம்பெறும் நடனம், சிவனுடைய தாமசிக மூர்த்தமான வைரவர் அல்லது வீரபத்திரர் ஆடும் நடனம், தில்லை சிற்றம்பலப் பொற்சபையில் இடம்பெறும் இசையிட்ட அல்லது நாதாந்த நடனம் என மூன்றாக வகைப்படுத்தும்.

சிவனுடைய பலவகையான நடனங்களுள் மேற்கூறப்பட்ட மூவகை நடனங்களுமே விதந்துரைக்கப்படுகின்றன. சிவ பிரதோச தோத்திரத்தில் குறிப்பிடப்படும் நடனம் கைலாய மலையில் மாலைப் பொழுதில்

தெய்விகப் பல்லியத்துடன் ஆடிய ஆடலாகும். மூவகை உலகின் மாதாவைப் பொன் அரியணையில் வீற்றிருக்கச் செய்து சூல பாணியாகச் சிவன் நடனம் ஆடினார். இந்த ஆடலின் போது கலைவாணி வீணை வாசித்தார். இந்திரன் வேணுகானம் இசைத்தார். பிரமன் தாளமிட்டார். பொருளரசி பாடலிசைத்தார். விட்ணு மத்தளமிசைத்தார். இந்த இறை நடனத்தைக் காணவும் இரசிக்கவும் கந்தர்வர், இயக்கர், பதாகர், உரகர், சாத்தியர், வித்தியாதரர், அமரர், அப்சரசுகள் ஆகியோரும் மூவுலக மக்களும் ஒன்று கூடினர் என கோயிற்புராணம் கூறுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க பிரதோச நடனம் திருஞான சம்பந்தர் பாடல்களில் முதன்மைப்படுத்தப்பட்டு உள்ளதை அவதானிக்கலாம். மூவகை உலகின் தாயாகிய அகிலாண்டேசுவரி காணும்படியாகச் சிவன் சூல பாணியாக ஆடிய பிரதோச நடனம்பற்றித் திருஞான சம்பந்தர் பல பதிகங்களில் பாடியுள்ளார். திருவலிதாயம் எனும் தலத்தின் மீது பாடியுள்ள பதிகத்தில் அமரர்கள் சுவைக்கும்படியாகச் சிவனார் ஆடிய ஆடலை கடலில் நஞ்சமமு துண்டிமையோர் தொழு தேத்தநடமாடி (திருமுறை தி.மு.1) பாடல் எண்-பா.எ.30) என்று திருஞானசம்பந்தர் சுட்டுகிறார்.

கொன்றைமாலையைத் தலைக்கணிந்து விரிசடை எல்லாத் திசைகளிலும் பறக்க, ஏந்திய கரத்தில் தீக்கங்குகள் பரவ, சூலப்படை ஒஞ்கி நிற்க, ஆடலின் உக்கிரம் தாங்க மாட்டாமல் கழுத்திலுள்ள பாம்பும் சேர்ந்தாட, உமையம்மையை ஒரு பாகத்திலிருத்தி சிவன் ஆடும் பிரதோச நடனம் திருஞான சம்பந்தரினால் பலபதிகங்களிலும் பதியப்பட்டுள்ளது. திருக்குரங்கணில் முட்டத்துப் பதிகத்தில்,

''வாடாவிரி கொன்றைவ லத்தொரு காதில்
தோடர்குழை யானல பாலன நோக்கிக்
ஆடவரு வாரவ ரன்புடை யாரே''

(தி.மு.1, பா.எ.330)

எனப் பாடி திருஞான சம்பந்தர் திருவேட்களப் பதிகத்தில் பிரதோச நடனத்தைச் சற்று விரிவாகப் பாடுகின்றார்.

''அந்தமு மாதியுமாகிய வண்ண லாரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப மலைமகள் காண நின்றாடிச்''
(தி.மு.1, பா.எ.415)

என்ற அடிகளில் பிரபஞ்சத்தின் ஆதியும் அந்தமுமாகிய சிவபெருமான் மலைமகள் காணும்படியாகப் பிரதோச நடனம் ஆடினார் என்கிறார் திருஞான சம்பந்தர். திருப்பேணு பெருந்துறைப் பதிகத்தில் தேவர்கள், முனிவர்கள் கண்டு மகிழ இந்த ஆடலை ஆடியதாகக் குறிப்பிடுவதும் முக்கியமானது. அதனை,

''விண்ணோர்சாரத் தன்னருள்செய்த வித்தகர் வேத முதல்வர்
பண்ணார்பாட லாடலறாத பசுபதியீசன்''
(தி.மு.1,பா.எ.453)

எனப்பாடியிருப்பது நோக்கத்தக்கதாகும். பிரதோச ஆடல்பற்றிய பாடல்களை அவதானிக்கும் போது வாத்தியங்களின் ஒலிக்கேற்பச் சிவன் லயம் தவறாது ஆடும் விதம் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். திருவையாற்றுப் பதிகத்தில்,

''பாடல் வீணைமுழ வங்குழல் மொந்தைபண்ணாகவே
ஆடுமா றுவல் லானுமை யாறுடை யையனே''
(தி.மு.2, பா.எ.1524)

எனவும் திருப்புகலூர்ப் பதிகத்தில்,

''கழலினோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம் போற்றக் குனித்தார்''
(தி.மு.1; பா.எ.17)

எனவும் திருக்கொள்ளிக்காட்டுப் பதிகத்தில். எனவும் திருஞானசம்பந்தர் பாடியுள்ளமை சில எடுத்துக்காட்டுகளாகும். பறை, முழவு, சல்லரி, யாழ், மொந்தை, குழல், வீணை முதலான இசைக்கருவிகள் தரும் தாளத்திற்கேற்பச் சிவனாடிய ஆடலை

திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளமை பண்பாட்டுப் பதிவுகளில் ஒன்றாக அமைகிறது.

பக்தி இயக்கத்தின் தலையாய நோக்கம் சைவத்தின் பெருமையை நிலைநிறுத்துவதும் சிவபெருமானே முழு முதற்கடவுள் என்பதை நிலைநாட்டுதலும் ஆகும். வைணவ சமயமும் தன் சமயப் பெருமைகளை நிலைநாட்டுவதற்கு முற்பட்ட முன்பின்னான காலப்பகுதிகளில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தர். இதனால் சமண பௌத்த மதங்களை ஓரங்கட்ட முற்படுகின்ற அதேவேளை வைணவ சமயத்தையும் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையும் திருஞான சம்பந்தருக்கிருந்தது. சைவத்தின் பெருமை, சிவபெருமானின் ஒப்பற்ற தனித்துவம், திருமாலும் பிரமனும் சிவனாரை வணங்கும் விதம் என்பவற்றை முன்னிலைப்படுத்துவதற்குத் திருஞான சம்பந்தருக்குச் சிவனது பிரதோச நடனமும் உதவியுள்ளது. திருவீழிமிழலைப் பதிகத்தில் திருஞான சம்பந்தரின் இந்நோக்கம் அற்புதமாகப் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது.

> ''திக்கமர் நான்முகன் மாலண்ட மண்டலந் தேடிட
> மிக்கமர் தீத்தரளாயவர் வீழிமி ழலையார்
> சொக்கம தாடியும் பாடியும்'' (தி.மு.3, பா.எ. 2897)

திசைகள் நான்கிலும் முகம் படைத்த பிரமனும் திருமாலும் அடி முடி தேட முற்பட்டும் காண முடியாத அளவுக்கு அழலுருவாய் நின்று சொக்கம் என்ற கூத்தை சிவனார் ஆடினார் என்பது சைவ சமயிகளுக்கு முக்கியமான செய்தியாக விளங்குகிறது.

சைவ சமயத்தை மக்கள் மத்தியில் மிகநெருக்கமாக இட்டுச் சென்றவர்களுள் திருஞானசம்பந்தரே முதன்மையானவர். சமணரும் பௌத்தரும் துறவை வலியுறுத்திப் பெண்களைப் புறக்கணித்திருந்த் சூழலில் சைவ சமயத்தை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர் திருஞானசம்பந்தர். சைவ சமயத்தை வளர்க்கவேண்டுமெனில் பெண்களையும் உலகியல் வாழ்க்கையும் முதன்மைப்படுத்த வேண்டுமென்ற உத்தியை அவர் உணர்ந்திருந்தார். ஒவ்வொரு

தலத்திலும் சிவனார் உமையம்மையுடன் பெண்ணொருபாகனாக வீற்றிருப்பதைத் திருஞானசம்பந்தர் பாடல்களில் காட்சிப்படுத்தினார். குறிப்பாக உமையொரு பாகத்தனாக உமையாள் காணும்படியாகச் சிவன் ஆடிய ஆடலை மீண்டும் மீண்டும் பாடுவதன் மூலம் சைவ சமயத்தில் பெண்ணிலை முக்கியத்துவத்தை நிரூபணமாக்கினார் திருஞானசம்பந்தர். திருப்பெருந்துறைப் பதிகத்தில்,

''பண்ணார்பாட லாடலறாத பசுபதியீசனோர் பாகம்
பெண்ணாணாய வார்சடையாண்ணல''
(தி.மு.1;பா.எ.453)

என்றும் திருவாலங்காட்டுப் பதிகத்தில்

''நுணங்குமறைபாடி யாடிவேடம் பயின்றாரும்
இணங்குமலைமகளோ டிருகூறொன்றா யிசைந்தாரும்''
(தி.மு.1; பா.எ.487)

என்று சுட்டி காட்டுகின்றார். திருக்கச்சியேகம்பப் பதிகம் சிவபெருமான் நாகத்தை ஆபரணமாக அணிந்தமை, கொன்றைமலர் சூடியமை, பலி எனப்படும் பிச்சை ஏற்கின்றமை என்பவற்றோடு உமையை ஒருப்ாகமாகக் கொண்டு ஆடுகின்ற அழகையும் பின்வருமாறு காட்சிப்படுத்துகிறது.

''நாகம்பூ ணேறதே றல்நறுங் கொன்றைதார்
பாகம்பெண் பலியுமேற் பர்மறை யாடுவர்
ஏகம்ப மேவியா டுமிறை'' *(தி.மு.2, பா.எ.1598)*

திருநாகேசுரப் பதிகத்தில்,

''குரையார் கழலா டநடங் குலவி
வரையான் மகள் காணமகிழ்ந் தவனே
நரையார் விடைய றுநாகேச்சரத்து'' *(தி.மு.2,பா.எ.1725)*

என்று பாடுவதும் கவனத்துக்குரியது. பெண்ணை ஒரு பாகமாகக்கொண்டு ஆடியவர் பெண்மகள் காணும்படியாகவும் அவளை மகிழ்விப்பதற்காதகவும் ஆடியவர் என்றெல்லாம் திருஞானசம்பந்தர் பாடல்கள் குறிப்பிடுவது பெண்ணிலை

முக்கியத்துவத்தையும் அன்றைய பக்திக்கட்டமைப்பில் ஆடற்கலையானது ஆதாரசக்தியாக நிற்பதையும் காட்டுகிறது எனலாம்.

நிறைவுரை

பக்திசெல்நெறியில் வீறுநடைபோட்ட திருஞானசம்பந்தர் அதன் வழிவந்த அமைப்பான பக்தி இயக்கத்தின் தலைவராகக் கடமையாற்றினார். இவ்வியக்கத்தின் இலட்சிய வெற்றி இவரது தலைமத்துவத்தின் திறமையைப் புடம்போட்டுக் காட்டுகிறது. சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக சைவ, வைணவ மதங்களையும் அம்மதங்களின் கடவுளரையும் முதன்மைப்படுத்தி நிலைநாட்டி அதன்வழி சைவ, வைணவ மதங்களை மேலோங்கச் செய்தவர்கள் பக்தி இயக்கத்தினர். இப்பக்தி இயக்கத்தில் முதன்மை பெறும் திருஞான சம்பந்தர் சிவனாரையும், அவர் வீற்றிருக்கும் கோயில்களையும், அவற்றின் இயற்கைச் சூழல்களையும் சிவனது ஆடலையும் பாடுவதன் மூலமாகச் சைவ சமயத்தினைப் பேரெழுச்சி பெறவைத்து வெற்றிகண்டவர் திருஞானசம்பந்தர். ஆடல்வழி சைவ சமயத்தின் அனைத்துக் கூறுகளையும் விளக்கிக் காட்டினார். அந்தவகையில் சுடலைக் கூத்து, தில்லைக்கூத்து, பிரதோச நடனம் என்றெல்லாம் சிவனது ஆடலை வகைப்படுத்தி அதனூடு பக்தி இயக்கத்தின் பணியை முன்னகர்த்திச் சென்றார். திருஞானசம்பந்தரது பாடல்களில் இடம்பெற்றுள்ள பிரதோச நடனத்தின் வழியாகச் சிவனது தனித்துவத் தன்மைகளையும் சைவ சமயத்தின் தத்துவக் கருத்துக்களையும் வெளிக்கொணர்ந்து சைவ சமயத்தை நிலைபெறச் செய்தமையையும், சிவனோடு இணைத்து விட்ணுவின் பெருமைகளைப் பாடி சைவ வைணவ மதங்களை ஒருசேர முன்னிலைப்படுத்தி நிலைநிறுத்தியமையையும், சமண பௌத்த துறவிகளால் வெறுத்தொதுக்கப்பட்ட பெண்களுக்குச் சமூக அந்தஸ்தினை வழங்கியமையையும், துறவினை எதிர்த்து உலகியல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளித்தமையையும் நோக்கும் போது சமண பௌத்த மதங்களின் கொள்கைகளை உடைத்தெறிவதற்குத் திருஞானசம்பந்தர் தம் பாடல்களின் ஊடாகப் பிரதோச நடனங்களை ஒரு கவியாகக் கையாண்டுள்ள முறை போற்றுதற்குரியது.

20. தமிழ் இசையும் காரைக்கால் அம்மையாரும்

எசு.கிருசாந்தன்
முதுகலை (இசை) முதலாம் ஆண்டு
கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி
திருச்சி

முன்னுரை

காரைக்கால் அம்மையார் இன்றைக்கு ஏறத்தாழ கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் காரைக்கால் என்னும் ஊரில் பிறந்தார். இவர் மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவராகவும், மூத்தவராகவும் காணப்பட்டார். இனிய பாடல்களால் இறைவனைப் பாடிப் பரவிய இவ்வம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார். கையிலை மலைக்குத் தலையால் நடந்து சென்றமையால் சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டதாலும், காரைக்காலில் பிறந்ததாலும் காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப்பட்டார்.

தெய்வீக வாழ்க்கை

சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் காரைக்கால் அம்மையாரும் ஒருவராகத் திகழ்கின்றார். புனிதவதி என்ற இயற்பெயருடைய இவ்வம்மையார் சோள நாட்டின் கடற்கரைப்பட்டினமாகிய காரைக்காலில் தனதத்தர் எனும் வணிகர்குலத் தலைவரின் மகளாகப் பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டு சிவ நாமத்தை எந்நேரமும் உச்சரித்தும், சிவனுக்கு அன்பு செய்தும், சிவ அடியார்களைப் பணிந்து தொழுதும் சிவப் பண்பும் சிவ அன்பும் மிக்க மாதரசியாய் வாழ்ந்து வந்தார்.

மங்கைப் பருவம் எய்தியதும் நாகப்பட்டினத்துப் பெருவணிகர் நிதிபதியின் புதல்வன் பரமதத்தனுக்கு இல்லறத் துணைவியாக அமைந்தார். தம் இல்லம் தேடிவரும் சிவ அடியார்களுக்குத் திருவமுதளித்தும் பொன்னும், மணியும்,

ஆடையும் வழங்கி இனிதும் வாழ்ந்தார். ஒரு நாள் இல்லத்துக்கு வருகை தந்த சிவ அடியாருக்குத் திருவமுதளிப்பதற்குக் ககறியமுது ஆக்கபடததால் கணவர் கொடுத்தனுப்பிய இரு மாங்கனிகளில் ஒன்றை கனியமுதாக வழங்கி மனம் மகிழ்ந்தார்.

இந்த நிலையில் இல்லத்துக்கு வருகை தந்த கணவருக்கு இருந்த ஒரு மாங்கனியை சுவைக்க வழங்கினார். அதன் சுவையின் காரணமாக மற்றைய மாங்கனியையும் அருந்தக் கேட்டார். இறையருளால் தெய்வ மாங்கனியொன்றை அம்மையார் பெற்றுக் கொடுத்தார். அமுதினும் இனிய சுவையாக இருந்தமையால் இறையருளால் பெறப்பட்டது என்பதை அறிந்த கணவர் இறைவன் அருளால் இன்னும் ஒரு மாங்கனியை அழைத்தளிப்பாய் எனக்கேட்டார். திருவருளால் மற்றோர் மாங்கனியைக் கணவர் கையில் வைத்தபோது அது மறைந்தது. மனைவியின் தெய்வீக தன்மையைக் கண்டு எவருக்கும் சொல்லாமல் அவரை விட்டுப் பிரிந்தார்.

இல்லறம் நல்லறமாகாத நிலையில் கணவருக்கு வேண்டாத ஊனுடம்பு எதற்கு? என்ற உறுதிப்பாட்டுடன் பேய் வடிவைப் பெற்ற அம்மையார் தன் முழு அன்பையும் இறைவனிடம் செலுத்தலானார். இறைவனின் அற்புதத்தை வியந்து 101 பாடல்களில் அற்புதத் திருவந்தாதி பாடினார். பின்னர் திருவைந்தெழுத்தின் பெருமையைப் புகழ்ந்து 20 பாடல்களில் திருவிரட்டை மணிமாலை பாடினார். சிவபெருமானின் கயிலைக் காட்சியைக் காண்பதற்கு அம்மையார் தலையால் நடந்து கயிலை சென்றார். அம்மையே என்று இறைவன் அழைக்க அப்பா எனப் பணிந்த அம்மையார், பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் என்று உள்ளுருகி வேண்டினார்.

இறைவனால் பணிக்கப்பட்டதற்கமைய திருவாலங்காட்டிற்கு அம்மையார் தலையால் நடந்து சென்று கூத்தப்பெருமானின் ஞானாந்தக் கூத்தைக் கண்ணாரக் கண்டு நைவளம், இந்தளம் ஆகிய இரண்டு பண்ணிசைகளில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் பாடி மகிழ்ந்தார்.

தமிழகக் கோயில்களிலுள்ள 63 நாயன்மார்களின் திருவுருவ படிமங்களில் அம்மையார் ஒருவரே அமர்ந்த கோலத்தில் காணப்படுவது இவரின் தெய்வீக ஆளுமையினை உணர்த்துகின்றது. அத்துடன் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவைப் பதினொராம் திருமுறையுள் போற்றப்படுகின்றன.

அம்மையார் பாடிய இசைப் பாடல்கள்

கவுணியர் நாவுக்கரசர் பேயர் இம்மூவர் கற்கும் இயல் இசை வல்லோர் என்கிறது சேக்கிழார் புராணம். இக்குறிப்பிலிருந்து ஞானசம்பந்தரையும், நாவுக்கரசரையும் போல் காரைக்கால் அம்மையாரும் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர் என்பது தெளிவாகின்றது. துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி இவை இன்றைய ச,ரி,க,ம,ப,த,நி என்ற ஏழு சுரங்களைக் குறிக்கும். பாடலில் சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிதம், துந்துபி, தாளம், வீணை, மத்தளம், கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை ஆகிய பன்னிரண்டு இசைக்கருவிகள் கூத்துப் பெருமானின் ஆடலுக்குப் பக்க இசை வழங்கியதாகவும் அம்மையார் பாடுகிறார். இக்குறிப்பிலிருந்து இசை ஞானத்தோடு பாடும் தகைமை பெற்றுத் திகழ்ந்தவர் அம்மையார் என்பதும் உறுதியாகிறது.

அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றுள் மூத்த திருப்பதிகங்கள் நைவளம், இந்தளம் ஆகிய இரண்டு பண்ணிசைகளில் பாடப்பட்டது.

அம்மையார் பதிக வழியில் இசை உருப்படிகள்

நாளும் இன்னிசையால் தேவாரம் பாடித் தமிழகமெங்கும் பக்திநெறி பரப்பிய ஞானசம்பந்தருக்கும், நாவுக்கரசருக்கும் காலத்தால் மூத்தவர் அம்மையார். பின்பு பாடிய சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் தேவாரப் பாடல்களின் பதிக முறை அம்மையாரைப் பின்பற்றிய வழி என்பது தெளிவாகத்

தெரிகிறது. இந்த இசை வகையை நம்பியாண்டார் நம்பிகள் பதிகப்பெருவழி எனப் பாராட்டுவார். பத்துப் பாடல்களால் தெய்வத்தை இசை கொண்டு பாடும் பதிக முறையைத் திருப்பாசுரம் பாடிய ஆழ்வார்களும் கடைப்பிடித்தனர் என்பதை மாலை பத்தும் பண்ணின்பம் வரப்பாடும் பக்தர் என்னும் பெரியாழ்வார் குறிப்பிலிருந்து தெரியலாம்.

இதே இசைப்பாடல் வகையை மாணிக்கவாசகரும் பயின்றார் என்பதைக் கோயிற் திருப்பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், அச்சோப்பதிகம் உறுதி செய்கின்றது. ஒரு பதிகத்திலுள்ள முதற் பாடல் பாடப்பெறுகின்றதோ அதே இசையமைப்பில் பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களும் பாடுவது மரபு. தமிழர் வளம்படுத்தி பண்ணிசை முறை பிற்காலத்தில் கர்நாடக இசை என்றழைக்கப்பெற்ற போது கீர்த்தனை என்னும் இசை வகை மிகச்சிறப்பு பெற்றது. இதன் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் பாடலில் அமைவது பதிகப் பெருவழியின் இலயரமைப்பை ஒத்துக் காணப்படுகிறது. முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆகிய ஆதி மும்மூர்த்திகளும் சியாமா சாத்திரியார், தியாகைய்யர் முத்துசுவாமி தீட்சிதர் முதலான சங்கீத மும்மூர்த்திகளும் இன்னும் ஏறத்தாழ எல்லாக் கருநாடக இயலிசைப் பேரறிஞர்களும் கர்நாடக இசையின் பல்வேறு இசை வகைகளில் கீர்த்தனை வடிவையே அதிகம் பயன்படுத்தினர் என்பது குறிக்கத்தக்கது.

இசைக்கு முதன்மை அம்மையார்

பழந்தமிழ் மக்கள் மிகத் தொன்மைக் காலத்திலேயே பதினோராயிரத்து தொள்ளாயிரத்துத் தொன்னூற்றொரு ஆதி இசைகளைத் தெரிந்திருந்தனர் எனச் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் அரும்பத உரையாசிரியர் கூறியுள்ளார். காலப்போக்கில் இப்பெருந்தொகையான இசைகள் வாழ்வியலுக்கேற்ப பண்படுத்தப் பெற்று நூற்றுமூன்று பண்கள் என வரையறுக்கப்பட்டன. இப்பண்களில் பழந்தமிழ் மக்கள் தெய்வத்தைப் போற்றி மகிழ்ந்து பரிபாட்டும், தேவ பாணியும்,

முன்னிலைப் பரவலும், படர்க்கைப் பரவலும் பாடியமை குறித்துச் சங்கதொகை நூல்களும் சிலப்பதிகாரமும் சிறக்கக்கூறும்.

இறைவனின் எல்லையில்லா அன்பில் திளைத்து மகிழ்ந்த சுந்தரர் பித்தா பிறைசூடி பெருமானே எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தை இத்தளப்பண்ணில் பாடினார். அம்மையார் திருவாலங்காட்டு அப்பனின் கருணையைப் புகழ்ந்து பாடிய இந்தளப்பண் இசையைச் சுந்தரர் திருவாயிலும் முதன் முதலில் எழுந்தது.

கர்நாடக இசையில் அம்மையார் பண்களுக்கு முதன்மை

தமிழ் பண்ணிசை பின்னர் கர்நாடக இசை என அழைக்கப் பெற்ற காலம் முதல் பண்களின் பெர்கள் இராகப் பெயர்களாக மாற்றி அழைக்கப்பெற்றன. எடுத்துக்காட்டாகச் செந்துருத்திப்பண் மத்தியமாவதி இராகமென்றும், பழம்பஞ்சுரப்பண், சங்கராபரண இராகமென்றும் அழைக்கப்பெறலாயின. இது போன்று அம்மையார் பாடிய நட்டபாடைப்பண் கம்பீரநாடடை இராகமாகவும், இந்தாளப்பண் மாயாமாளவகௌளை இராகமாகவும் மாற்றுப் பெயர் பெற்றன. கம்பீட நாட்டை இராகத்திற்கு அரங்க நிகழ்ச்சிகளிலும் கோயில் வழிபாட்டிலும் முன்னுரிமை கொடுப்பது மரபு. இசைக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி, கதாகலட்சேபம் ஆகிய அரங்க நிகழ்ச்சிகள் களைகட்டி மங்கலகரமாகத் தொடங்கக் கம்பீடநாட்டை மிகப் பொருத்தமான இசையாக ஏற்கப்பட்டு வருகிறது. கோயில் இசையிலும் இந்த இசைக்குத் தனிச் சிறப்புண்டு. சுவாமி புறப்பாட்டின் போது நாகசுர இசையில் மல்லாரி இசைப்பது வழக்கம். இம் மல்லாரிக்குரிய இராகம் நட்டபாடைாகிய கம்பீட நாட்டையாகும்.

அம்மையார் எடுத்துக் கொடுத்த இந்தளப் பண்ணாகிய மாயமாளவகௌளை இராகமும் தென்னிந்திய இசை வரலாற்றில் இற்றளவும் மிகச் சிறந்த இடத்தை வகித்து வருகிறது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் திருத்தணி முருகன் அருள்பெற்றதும் முதலில்

மாயாமாளவகௌளை இராகத்தில் சிறிநாதாதி குருகுக என்னும் கிருதியைப் பாடினார். கர்நாடக இசை மேதை மைசூர் வாசுதேவாச்சாரியார் இயற்றிய முதலாவது கீர்த்தனையை மாயாமாளவகௌளை இராகத்தில் அமைத்து மனநிறைவு கண்டார்.

இசை மேதைகளுக்கெல்லாம் அகத்தூண்டுதலாய் விளங்கிய மாயாமாளவகௌளை இராகத்தில் இன்று கீதம், கரசதி, வர்ணம், பதம், கீர்த்தனை, தில்லானா முதலான எல்லாக் கருநாடக இசை உருப்படிகளும் பயிலப்பெற்று வருகின்றன. தென்னிந்திய இசையாளரிடம் இந்த இராகம் ஏற்படுத்தியிருக்கும் வலுவான தாக்கத்தை இது உறுதிப்படுத்துகிறது.

முடிவுரை

காரைக்காலம்மையாரின் உயர்தனித் தகைமைகள் மறுக்க முடியாத பல சான்றாதாரங்களுடன் நிறுவப்பட்டன. எத்தகைய அளவு கோலைக் கொண்டு கணித்தாலும் இயற்தகைமை, தத்துவப் பொருண்மை, புதிய இசை வளமைகளைத் தோற்றுவிக்கவல்ல ஆளுமை ஆகியவற்றில் அவர் சிறந்து விளங்கக் காணலாம். தொடர்ச்சியான தென்னிந்திய இசையின் நீண்ட வரலாற்றில் அவரவர் இயலிசை ஆற்றலால் தென்னிந்திய இசையை வாழ வைத்த தகைமையாளர். சங்கீத மும்மூர்த்திகள், ஆதி மும்மூர்த்திகள், பதங்களின் சிற்பி, சங்கீதப் பிதாமகர், சந்தப் பாவலப் பெருமான், தேவார மூவர், என்றவாறு பொருத்தமான பெயர்கள் சூட்டிப் போற்றிப் பாராட்டப்பட்டு வருகின்றனர். எல்லா தென்னிந்திய இயலிசை மேதைகளும் இனங்கண்டு போற்றிப் புகழ்ப்படும் போது காலத்தைக் கொண்டு கணிக்கையில் இவர்கள் அனைவருக்கும் காலத்தால் மூத்த அம்மையாரைத் தென்னிந்திய இசையின் தாய் எனப் போற்றிப் பரவுதல் சாலமும் பொருந்தும்.

21. திருவருட்பாவில் ஆடற்கலை



சோபனா தர்மேந்திரா
முதுநிலை விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

அருளாளர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே. ஆனால் திரு சேர்த்து அப்பெயருடனையே விளங்கும் அருட்பா வள்ளல் பெருமான் பாடிய பாடல்களின் தொகுதியேயாகும். திருவருட்பா ஆறு திருமுறைப் பகுதிகள் கொண்டு விளங்குகிறது. 399 பதிகங்களையும் 5818 பாடல்களையும் கொண்டது. எல்லாப் பாடல்களும் இறைவனை முன்னிறுத்திப் பாடப்பெற்றமையேயாகும். இது பக்திப்பா உலகிற்றும் தமிழ்மொழிக்கும் மற்றுமொரு பெரும் படைப்பாக விளங்குகிறது. நுண்கலைகளில் ஒன்றான ஆடற்கலை இறைவன் ஆடியதாகவும், உடல், உள நலம் வேண்டி ஆடப்படும் ஒரு தெய்வீகக் கலையாகவும் விளங்குகிறது. இசையும், ஆடலும் இறைவனை வழிபடுவதற்குரிய வழிமுறைகளாக உள்ளன. இத்தகு சிறப்பு வாய்ந்த ஆடற்கலையைத் திருவருட்பாவில் ஆராய்வதாக இவ்வாய்வுத் தலைப்பு அமையபெறுகிறது.

திருவருட்பாவில் ஆடற்கலை பற்றி வள்ளலர் பாடியதை ஆராய்வதே இவ்வாய்வின் இலக்காகும். திருவருட்பாவில் சிவபெருமான் ஆடிய ஆடல்களைப் பல்வகை கோணங்களில் சித்தரித்துக் காட்டியுள்ளார் என்பதே இவ்வாய்வின் கருதுகோள். இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறை, உற்றுநோக்கல் ஆய்வுமுறை ஆகிய ஆய்வு முறையில் இவ்வாய்வு ஆராயப்படுகிறது. சிவன் ஆடிய ஆடல்கள், ஆடலுக்குரிய சிவபெருமானின் நாமங்கள், இறைவனின் புகழ்பாடும் ஆடல்கள், சிவனாடிய ஆடல் மன்றங்கள், முடிவுரை என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. சிவனாடிய ஆடலும் சிவனுக்காக ஆடப்படும் ஆடல்களை மட்டுமே

இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் இளம் சந்ததியினர் சிவபெருமானின் ஆடல்களை அறிந்து, இவற்றிற்கு ஆடலமைப்புச் செய்வதற்கு இவ்வாய்வு பயனுள்ளதாக அமையப்பெறும்.

அறிமுகம்

19ம் நூற்றாண்டில் சன்மார்க்க நெறிகண்டவர் திருவருட் பிரகாச வள்ளலார் ஆவார். இவர் பாடிய திருவருட்பா ஆறு திருமுறைகளாக வகைப்படுத்தப்பட்டு தொகுக்கப்பெற்றன. முதல் திருமுறை பெரும்பாலும் சிவனைக் குறித்துப் பாடப்பட்டது. இரண்டாம், மூன்றாம் திருமுறை திருவொற்றியூர் தலம் மீது பாடப்பட்டது. நான்காம் திருமுறை தில்லையில் பாடியவை. தில்லையம்பதி நடராசப் பெருமான், சமய குரவர் நால்வர் குறித்துப் பாடியவையாகும். ஐந்தாம் திருமுறை முருகப்பெருமான் குறித்த பாசுரங்கள் தொகுதியாகும். ஆறாம் திருமுறை கருங்குழி, கடலூர், மேட்டூர்குப்பம் முதலான ஊர்களில் இருந்த போது இறைவன் தம்முள்ளிருந்து பாடுவித்தவைகளை அருளியவை. இவ்வகையான திருவருட்பாவில் ஆடலுக்குரிய நாமங்களும், சிவபெருமானது ஆடல்களும் இறைவனைப் புகழ்ந்து ஆடும் ஆடல்கள், இறையாடிய அரங்கங்கள் என்பவற்றைப் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமையப்பெறுகிறது.

ஆடலோடு தொடர்புபடுத்தி இறைவனுக்கு வழங்கிய நாமங்கள்

சிவபெருமான் ஆடிய ஆடல்களோடு தொடர்புபடுத்தி இறைவனுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் திருவருட்பாவில் இயம்பப்பட்டுள்ளன. கருணை நடம்புரிகின்ற கனக சபாபதி, ஞானசபைத் தலைவா, அம்பலவன், சிற்றம்பலத் தென்கோ, நாயகன், ஆடிய பாதத்தழகன், நிருத்தனை, நடராசன், மன்றகத்தே நடிக்கின்றானை. பரிந்த நடத்தரசே, நடராசத் தெய்வம் ஆடுகின்ற அரசே, பரமபதி, நீதிநடத்து அரசே, நடன சிகாமணி என்று பலவாறு வள்ளலார் எம்பெருமானைப் பாடியுள்ளார். அவைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

பாடல் எண்.4004

> "நாட்டார்கள் சூழ்ந்து மதித் திடமணிமேடையிலே
> நடு இருக்க என்றனையே நாட்டியப் பேர் இறைவா
> நீட்டாளர் புகழ்தேத்த மணிமன் றில் நடிக்கும்
> நிதி நடத்தரசே என் நெடுமொழி கொண்டருளே"

நாட்டார்கள் மதித்திட மேடையிலே நடுவிருக்கும் நாட்டியப் பேர் இறைவா என்றும், நீதியிலே உருவாகக் கொண்டு ஆடுபவன், நாட்டிய விதிமுறைப்படி அம்பலத்தில் ஆடுவது பற்றி மேலே உள்ள பாடல் வரி சுட்டுகிறது. பாடல்எண். 4103 மணிமன்றில் நடிக்கும் நீதி நடத்து அரசே என்று சிவனைப் பாராட்டுகிறார்.

சிவபெருமான் ஆடிய ஆடல்கள்

இறைவன் ஆடிய ஆடல்களைப் பல பெயர்களால் வள்ளலார் குறிப்பிடுகிறார். அவை வருமாறு: அம்பலத்தில் ஞான நடம் புரிகின்ற பெருமானே, மேலான ஞான நடனத்தைச் செய்கின்ற அருட்பதினயே என்பதைப் பின்வரும் பாடல் வரி விளங்குகிறது. பாடல் எண்.4123 "பரம நடம் புரியும் பதியை அடைவித்தீரு அம்பதி நடுவே" விளங்கும் எனப்பாடல் வரி விளக்கி நிற்கிறது. மேலும் மைதீட்டிய கண்களை உடைய அம்மையாகிய சிவகாமி கண்டு இன்புறுமாறு திருக்கூத்தாடுகின்ற பெருமானே என்பதில் திருக்கூத்துப் பற்றியும், பாடல்எண். 3789 "பொதுவில் நடம் புரிகின்ற புண்ணியனார்" என்றும், தானே தனக்கு முதலாய் இன்பம் பெருகும் ஒப்பற்ற திருநடனம் புரிகின்ற இரண்டாகிய திருவடிகள் என்பதனைப் பாடல் எண். 3810 "தானே தான் ஆகி இன்பத் தனிநடஞ் செய் இணைத்தாள்" எனும் பாடல் வரியில் தனி நடனமும், அத்தோடு தனிநடம் புரிகின்ற ஒப்பற்ற தலைவனெனவும், நாகர் உலகத்து வேந்தர்களாகிய இந்திரர்கள், தேவர்கள் சூழ்ந்து ஞான சபையில் சிவனின் ஆடல் திருக்கூத்தைக் கண்டு இன்புறுவதைக் கீழ்வரும் வரிகளில் காணலாம். பாடல் எண்.3834 "நாகாதிபர் சூழ் நடராசா" என்றும், தொடர்ந்து உமை காண எம்பெருமான் தனித்து நின்றாடிய கூத்தைப் பாடல் எண்.4180 ஒருமை நடத்தரசே

என்றும் இறைவன் ஆடிய ஆடல்களை வகைப்படுத்தியிருக்கிறார்.

திருச்சிற்றம்பலம் சிவஞான நலம் விளங்கும் அருளிடமாதலால் அதனைச் சிவம் கனிந்த சிற்றம்பலம் என்றும், அதில் எழுந்தருளி ஞானநடம் புரிந்து ஆன்மாக்கட்கு ஞானபோக பெருவாழ்வை அருளுகின்றான் என்பது பற்றிக் கூத்தபெருமானைப் பாடல் எண்.3852 சிவம் கனிந்த சிற்றம்பலத்து அருள் நடம் செய்கின்ற பெருமானே என்று கூத்த பெருமானைப் போற்றுகின்றார். இதில் அருள் நடனமும், மேலும் உயிர்களைப் பற்றியிருக்கும் மனவிருளைப் போக்கி ஆன்மாக்களை உய்விப்பதன் பொருட்டு, நலம் சிறந்ததால் நன்றே தரும் திருநாடகம் என்று குறிப்பிடுகிறார். இங்கு ஆடலை நாடகம் என்றும் குறிப்பிடுகிறார். அவை வருமாறு பாடல் எண்.3862 நன்றே தருந்திரு நாடகம் மேலும் தத்துவ ஞானிகட்கு இன்பம் தரும் பொருட்டுப் பரம்பொருள் கூத்தப் பெருமான் திருவருள் கொண்டு பொன்னம்பலத்தில் ஆடுகிறார். தொடர்ந்து பாட்டின் பொருளும், இசையும் பாடுவோர் உள்ளத்தை மயக்கி ஆடச் செய்வதில் பரமானந்த பெருங்கூத்தாடி என்று பகர்கிறார். இங்கு கூத்து என்று குறிப்பிடுகிறார். திருவருள் ஞானஒளி பரப்பும் திருக்கூத்தாடுவது பற்றிச் சிவனைச் சோதி நடத்தாசே என்றும், ஆகாசமாகிய ஞான மனத்தின் கண் ககனநடனம் ஆடியமையைக் ககன நடனத்தரசே என்று கூறுவதில் இருந்து புலனாகிறது. அடுத்து அம்பலத்தில் ஆடுவது தூய ஞான நடனமாதலால் புனித நடனம் என்றும் வள்ளலார் கூறுகிறார். அன்பில்லாத உள்ளத்தை உடையவர்க்கு அதனைக் காட்டி அன்பு செய்யுமாறு ஊக்குவிக்கின்ற அருள் இயல்பு புலப்பட பரிந்த நடனத்தரசே என்பதைப் பின்வரும் பாடல்வரிகளில் காணலாம்.

> ''பசை அறியா அனத்தவர்க்கும் பசை அறிவித்தருளப்
> பரிந்த நடத் தரசே என் பாட்டும் அணிந்தருளே''

இதில் பரிந்த நடனம்பற்றி எடுத்துக் காட்டுகிறார். அடுத்து துரிய தானத்தில் நின்று சிவன் நடிக்கும் சூக்ம நடனமான துரிய நடனம் பற்றி பாடல்எண்.349 துரிய நடத்தரசே என் சொல்லும்

அணிந்தருளே என்று இவ்வரிகள் பகர்கின்றன. ஐந்தொழில் புரியும் பஞ்சகிருத்தியத்தையும் திருவருட்பாவில் காணலாம். ''ஆக்கி அளித்தல் ஆந் தொழில் ஓர் ஐந்தினையும்'' என்பதில் இருந்து இந்நடனம் புலப்படுகிறது. சிவன் ஆடிய ஆடல் வகைகளில் நாதாந்த நடனமும் ஒன்றாகும். இது ஆனந்த தாண்டவமாகும். இந்நடனத்தை இன்பக்கூத்து என்றும் குறிப்பிடுகிறார். இவற்றைப் பின்வரும் பாடல்கள் மூலம் அவதானிக்கலாம்.

1. நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம்
2. பாடல்எண். 4381 இத நடஞ் செய்கின்றீர் வாரும்
3. பாடல்எண். 3812 ஆண்டவனே தாண்டவனே

இவ்வாறு இறைவனாடிய ஆனந்தத் தாண்டவத்தை வள்ளலார் விவரிக்கின்றார். மேலும் நடனத்தினால் விளங்கும் நலமும் நலம் பெருகும் நடனமும் நனத்தையும் நலன்களையும் திகழ்விக்கும் சிவவெளியும் என்று நடனத்தால் உடல் நலத்தைப் பெற முடியும்.

''நடம் வளர் நலமே நலம் வளர் நடமே
நடதலம் வளர்தரும் ஒளியே''

என்று வள்ளலார் குறிப்பிடுகிறார். அடுத்து நடேசர் கும்மி எனும் ஆடலைப் பற்றி வள்ளலார் குறிப்பிடுகிறார். இளம் பெண்கள் கைகளைக் கொட்டிப் பாடிக் குதித்து ஆடுவது கும்மிப்பாட்டு எனவும் கும்மி ஆட்டம் எனவும் பகவர். இத்தன்மையில் திருவம்பலத்தில் நடம் புரியும் நடராசப் பெருமானை ஏத்தித் துதிக்குமாறு கும்மிப் பாடல் பாடப்படுகிறது. அவை வருமாறு.

''கும்மியடி பெண்கள் கும்மியடி
ஆனந்த தாண்டவ ராசனடி - நமை
ஆட் கொண்டருளிய நேசனடி
அம்பலத்து ஆடல் செய் ஐயன் அடி
அன்புக்கு எளிதகு மெய்யனடி அன்பா''

என்று கிராமிய பாங்கில் கும்மி ஆடலையும், சிவன் ஆடிய ஆனந்த தாண்டவத்தையும் காட்சிப்படுத்துகிறார். எனவே

இறைவன் ஆடிய பஞ்சகிருத்திய நடனம் ஞான நடனம், நாதாந்த நடனம், ஆனந்த தாண்டவம் என்றும் இறைவன் ஆடிய தாண்டவங்கைளயும், தனித்த கூத்து, இன்பக் கூத்து, தூய நடனம், துரிய நடனம், நிருத்தம், கருணை நடனம் பொதுவில் நடம் என்று ஆடல்களை வகைப்படுத்தியிருக்கிறார். நடனத்தை ஆடுவதால் உடல் நலமும், உடல் நலத்தால் நடனமாடி பேரின்பம் அடைவதையும், பெண்கள் ஆடும் கிராமிய நடனமான கும்மியாட்டத்தையும் அந்தக் கும்மிப் பாட்டில் சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தையும் வள்ளலார் பலகோணத்தில் தமது திருவருட்பாவில் தெளிவுறுத்துகிறார்.

ஆடல் அரங்கு

நடராசன் ஆடிய ஆடல் அரங்கு பற்றிப் பல பாடல்களில் கூறியுள்ளதை நோக்கின் பாடல் எண்.3781 ''மணிமன்றில் நடம் புரிவீர்'' பாடல்எண்.3787 ''அம்பலத்தே நடம் புரியும்'' தனித்த சிற்சபை, என்றும் அதாவது ஞான சபைக்கு நிகராக வேறு சபை இல்லாமையால் தோன்ற அதனைத் தனித்த சிற்சபை என்றும் குறிப்பிடுகிறார். ஞானமணி மன்றே விளங்கப் புரிகின்ற ஆனந்த வார், நற்சபையில் ஆடுகின்ற நடராசத் தெய்வம் சிற்சபை, நற்சபை, பொற்சபை, கனகசபை, திருச்சபை, பொன்னம்பலம் என்றெல்லாம் இறைவன் ஆடிய அரங்காகச் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

முடிவுரை

எனவே நடனத்தோடு தொடர்புபடுத்தி எம்பெருமானுடைய பெயர்களும், நடராசன் ஆடிய நடனங்களும், கிராமிய நடனமான பெண்களின் கொம்மியாட்டம், நடனத்தால் பெறும் உடல் நலம் பற்றியும் வள்ளலார் திருவருட்பாவில் பல கோணங்களில் பாடியுள்ளமை தெளிவாகின்றது.

22. சைவத்தமிழ் வரலாற்றில் சீர்காழி அருள்மிகு முத்துத்தாண்டவர்



சு.கானமூர்த்தி
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

நமது இந்திய திருநாட்டில் இசை என்கின்ற தெய்வீகக் கலையானது பாரம்பரியம் முதலாக இன்று வரை பல்வேறு நிலைகளில் பல மாற்றஙங்களைப் பெற்று இன்று பழைமை மாறாமல் மிகச்சிறந்த நிலையில் புகழ் பெற்று திகழ்கின்றது ஆய கலைகள் அறுபத்து நான்கில் இசைக்கலையானது முதன்மை பெற்று உலகம் முழுவதும் சிறப்புற்று அந்தந்த நாட்டின் பாரம்பரியத்துடன் திகழ்கின்றது. என்றாலும் நமது தாய்மொழியாம் தமிழ் மொழியில் இசைக்கலையானது மிகவும் உலகம் முழுமைக்கும் தனிச்சிறப்புடன் திகழ்கின்றது. நாமனைவரும் பெருமைப் படவேண்டிய விசயமாகும். இப்புவியில் எண்ணற்ற இயலிசைப் புலவர்கள் இப்புவியில் பிறந்து தமிழிசை வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றி உள்ளார்கள் இந்த வரிசையில் மிகவும் போற்றப்படும் இயலிசைப் புலவர் கீர்த்தனைப்பாவின் தந்தை எனப் போற்றப்படும். சீர்காழி அருள்மிகு முத்துத்தாண்டவர் ஆவார். இவரால் தான் இன்று கீர்த்தனை என்ற சொல்லே வழக்கில் இருந்து வருகின்றது. போற்றுதலுக்கு உரியதாகும் மனிதனை மயக்கும் இன்பக்கலைகள் அனைத்தும் மனிதனின் நல்வாழ்விற்கு துணை செய்கின்றது. கலைகள் என்பது மனிதனின் உள்ளத்தில் உணர்ச்சியினை எழுப்பி இன்பத்தினையும் மன நிறைவினையும், கற்பனை வளத்தினையும் அளிக்கின்றது. நிதர்சனமான உண்மையாகும். இவ்வரிசையில் சீர்காழி அருள்மிகு முத்துத்தாண்டவரின் இசைப்பணி போற்றுதலுக்குரியது ஆகும். இனி இவரின் வரலாற்றினைக் காண்போம்.

முத்துத்தாண்டவரின் இளமைப்பருவம்

இவர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழியில் கி.பி. 1525ஆம் வருசம் இசை வேளாளர் குடும்பத்தில் மகனாகப் பிறந்தார். குழந்தையில் இவர் தாண்டவன் என்கிற பெயரிலேயே அழைக்கப்பட்டார். இளமையில் குட்ட நோயால் மிகவும் அவதிப்பட்டதால் நாதாசுரக்கருவி இசைக்க இயலாமல் போகவே வாய்ப்பாட்டு கற்றுக் கொண்டார். நாள் தவறாமல் தினமும் சீர்காழி சட்டைநாதர் கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்து வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். குட்ட நோயால் இவரை வீட்டில் உள்ளவர்கள் வெறுத்து ஒதிக்கின்றார்கள். எனவே நாட்டியம் ஆடும் ஒரு மாதின் இல்லத்தில் எப்போதும் தஞ்சம் அடைந்தார். அங்கும் செல்வதால் உறவினர்கள் அறவே வெறுத்து ஒதுக்கினார்கள். குடும்பத்தாரைப் பற்றிக் கவலைப்படாமல், நடனமாது பாடும் பாடல்களைக் கேட்டு இன்பமுடன் பொழுதினைப் போக்கினார்.

குருக்களின் மகள் வடிவில் இறைவன் அருள்

சட்டைநாதர் கோயில் சென்று வரும் வழக்கத்தினைக் கொண்டிருந்த தாண்டவர் இறைவழிபாட்டிற்குப் பின் பசியால் செய்வது அறியாமல் ஊர்திகள் வைக்கப்பட்டிற்கும் அறைக்குள் உறங்கியது தெரியாமல் இரவில் கோயில் நடை சாத்தப்பட்டது. சிறிதுநேரம் சென்றபின் விழித்தெழுந்த தாண்டவன் பசியால் மிகவும் சோர்ந்து இறைவனை நினைத்து தொழுதார். அந்த வேளையில் குருக்களின் மகள் வடிவில் தேவி, தாண்டவன் கண்முன்னே தோன்றி அவரின் பசியினைத் தீர்க்க உணவினை அளித்தார். பின்பு தாண்டவன் அம்மையிடம் தனது குட்ட நோயினைத் தீர்க்க வேண்டிடவே, தேவி அவரை நேராகத் தில்லையம்பதிக்குச் சென்று நடராசப் பெருமானைப் பாடும்படிப் பணித்தார். இதனால் உன் குட்ட ரோகம் நிவர்த்தி ஆகுமெனக் கூறி மறைந்தார். இதனைக்கேட்ட தாண்டவன் நான் பாடும் வகை அறியேன் எனக் கூறவே நீ கூத்தப்பெருமான் சந்ததி முன் கூட்டத்திலிருந்து வரும் முதல் சொல்லினை வைத்துப் பாட, பாடும் ஆற்றலைத் தில்லையம்பலத்தான் அருள்வான் என சொல்லி மறைந்தார். அப்போது தான் தாண்டவருக்குக்

குருக்களின் வடிவில் வந்தது இறைவியே என உணர்ந்தார். பிறகு, பொழுது விடிந்ததும் அனைவருக்கும் நடந்ததைக் கூற, மக்கள் அனைவரும் கேட்டு வியப்புற்றனர். அதன் பிறகு அன்று முதல் தாண்டவனை அனைவரும் முத்துத்தாண்டவன் என்று அழைக்கலாயினர்.

பொற்காசுகள் பெற்ற அதிசயம்

இறைவியின் கட்டளைப்படி சிதம்பரம் சென்று நடராசப்பெருமான் சன்னதிமுன் நின்று தொழுதார். அப்போது பக்தர்களின் கூட்டத்திலிருந்து பூலோக கயிலாச கிரி சிதம்பரம் என்கிற சொல் வரவே அத்தொடர் சொல்லினை வைத்து பூலோக கைலாச கிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ என்ற கீர்த்தனையினைப் பாடினார். பாடி முடித்தவுடன் அவர் முன்னே படியில் பொற்காசுகள் ஐந்தினைக் கண்டார். அதனைக்கண்டு மிகவும் மகிழ்ந்தார். அவரது குட்டரோகம் முழுமையாக நீங்கி முத்தினைப் போன்று பிரகாசமாக விளங்கினார். இவ்வாறாக முத்துத்தாண்டவர் நாளும் நடராசர் சந்நிதி முன் கீர்த்தனைகளைப் பாடிப் பொற்காசுகள் பெற்று விளங்கினார்.

கொள்ளிடம் ஆற்று வெள்ளத்தினைக் கடந்து சென்று நடராசனை வணங்குதல்

சீர்காழி அருகில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து சென்றதால் அக்கரையில் உள்ள வல்லம்படுகை கிராமம் வழியாகத்தான் சிதம்பரம் சென்று நடராசனை வணங்கி பாட இயலும். செய்வது அறியாமல் இருக்கும் வேளையில் கலக்கமுற்றார். அங்கேயே இறைவனை காணாமல், வருத்தமுடன் காணாமல் வீணிலே காலம் கழித்தோமே (தன்யாசி இராகம் மிசுரசாபு தாளத்தில் பாடியவுடன் வெள்ளம் வழிந்து ஆற்றை கடக்க உதவிய அதிசயம் நடந்தது. கடந்தவுடன் தரிசனம் செய்வேனே என்ற வசந்தா இராக கீர்த்தனை ஆதி தாளத்தில் பாடிச் சிதம்பரம் அடைந்து பின்பு சந்நிதி முன் கண்டபின் கண் குளிர்ந்தேன் மலையமாருதம் இராகம், ரூபக தாளத்தில் பாடி இறைவனைக் குளிர்வித்தார்.

நஞ்சு முறிவுக்குப் பாடிய கீர்த்தனை

ஒரு சமயம் சீர்காழியிலிருந்து சிதம்பரம் நடராசர் சந்நிதியில் பாடுவதற்குச் செல்லும் வழியில் முத்துத்தண்டவரை ஒரு பாம்பு தீண்டியது. அதனால் இவர் சிறிதும் உள்ளம் கலங்காமல் தில்லையம்பலத்தானை நினைத்து காம்போதி இராகத்தில் அருமருந்தொரு தனி மருந்திது அம்பலத்தில் கண்டேனே என்ற கீர்த்தனத்தை ஆதி தாளத்தில் பாடியவுடன் உடனே விடம் நீங்கப்பெற்றார். இவ்வாறாகப் பல சமயங்களில் இறைவனை நினைந்து பாடி அற்புதங்களை நிகழ்த்தினார் என்றால் மிகையாகாது. இவர்களைப் போன்றவர்களை மகான்கள் என்றுதான் கூறவேண்டும். பக்தர்க் கூட்டத்திலிருந்து சொல் வராமை ஒரு நாள் சிதம்பரம் நடராசர் சந்நிதியில் பக்தர்களிடமிருந்து எந்தச் சொல்லும் வராததால் மிகவும் வருந்தினார். இருந்தாலும் சொல் வராமையினை வைத்தே தன் கடமையிலிருந்து தவறாதவராய் அந்தப் பேசின்மையையே முதல் சொல்லாக வைத்து சூர்யகாந்தம் இராகத்தில் மிசுரா சம்பை தாளத்தில் பேசாதே நெஞ்சமே என்ற இராகத்தில் கீர்த்தனையினைப் பாடி இறைவனைக் குளிர்வித்தார் என்றால் மிகையாகாது. இதனைப் பாடி முடித்தவுடன் பொற்காசுகளைப் பெற்றார் முத்துத்தாண்டவர்.

இவர் இயற்றிய பாடல்கள்

முத்துதாண்டவர் அறுபது கீர்த்தனைகளை இயற்றி உள்ளார். பதங்கள் இருபத்தைந்து இயற்றி உள்ளார். ஏழு தாளங்களைப் பயன்படுத்தி உள்ளார். இவற்றினைத் தவிர இன்னும் நூற்றுக்கணக்கான இசை உருப்படிகளை இயற்றி உள்ளார்கள். ஆனால், அவைகள் நமக்கு கிடைக்காமலேயே அழிந்து போயின. குறிப்பாகத் தெருவில் வாரானோ என்ற கமாசு இராகம் ரூபக தாளத்தில் அமைந்த சிறந்ததொரு பதம் இவரின் மேதா விலாசத்தினைப் பறை சாற்றுவதாக இன்று வரை இருந்து வருகின்றது.

இவருடைய பாடல்களின் சிறப்புகள்

இவருடைய கீர்த்தனங்கள், பதங்கள் இன்றும் என்றும் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். போலவே இனிமையினை தருவதாகப் பல்லாண்டு காலமாய் இருந்து வருகின்றது. கற்பவர், கேட்பவர் உள்ளங்களில் சிவ பக்தியினை அளிப்பதாக அமைந்துள்ளது சிறப்பாகும். மேலும் சொற்சுவை, பொருட்சுவை, எதுகை, மோனை, இசைநுணுக்கம் முதலிய தொடை நயங்களை உடையதாகவும், பழைய வரலாற்றினைச் சைவ சித்தாந்த கருத்துக்களைப் பறை சாற்றுவதாகவும் அமைந்துள்ளது பெரும் சிறப்பாகும். இவர் பல்லவி, அனுபல்லவி, சரணம் முதலிய உறுப்புகளின் அமைப்பில் முதல்முதலாகக் கீர்த்தனை அமைப்பினை உருவாக்கியவர் இவரே. எனவே இவரை கீர்த்தனைப்பாவின் தந்தை என இசை உலகம் இன்று வரையும் போற்றி பாடல்களைப் பாடி வருகின்றோம். இவர் இயற்றிய ஆடிக்கொண்டார் என்ற மாயா மாளவ கௌளை, ஆதி தாளத்தில் அமைந்த கீர்த்தனை இன்றும் அனைவராலும் மிகவும் விரும்பி இசைக் கச்சேரியிலும், பரத நாட்டிய கச்சேரியிலும் அதிகளவில் இசைக்கப்படுகின்றது. ஆனால் கேட்கக் கேட்க சலிப்பதேயில்லை.

முத்துத்தாண்டவரின் இறுதிப்பயணம்

பல்வேறு கீர்த்தனங்களும், பதங்களும் இயற்றி சிவனைத் துதித்துப் பாடி இறைவனைப் பரவசப்படுத்திய முத்துத்தாண்டவர் இறுதியில் ஆவணித் திங்கள் பூச நன்னாளில் இறைவன் முன் நின்று மாணிக்கவாசகர் பேறேனக்குத்தர வல்லாயோ அறியேன் கோகிலப்பிரியா இராகத்தில் ரூபகதாளத்தில் அமைந்த பாடலைப்பாடி முடித்தவுடன் அதே வேளையில் சிதம்பரத்திலிருந்து ஒரு பேரொளியொன்று வெளிப்பட்டு தோன்றவே அந்த பேரொளிப் பிழம்பில் அவர் இரண்டறக்கலந்தார். இவருடைய பாடல்களில் எந்த முத்திரையும் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் காண முடிகின்றது.

முடிவுரை

இவ்வாறாக எண்ணற்ற இயலிசைப்புவலர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிறந்து தமிழிசையின் வளர்ச்சிக்காகவும், மேன்மைக்காகவும் பாடுபட்டு இருக்கின்றார்கள். இதில் சீர்காழி முத்துத்தாண்டவரின் பங்கு மிகவும் மகத்தானதாக இன்றும் போற்றப்பட்டு வருவது மிகுந்த சிறப்பினை உடையதாகும். இவரோடு தில்லையாடி மாரிமுத்தாபிள்ளை, தில்லையாடி அருணாச்சலக்கவிராயர் ஆகிய மூவரின் சிறப்பினைப் போற்றும் வகையில் சீர்காழியில் தமிழக அரசால் ஆண்டுதோறும் சீர்காழி தமிழிசை மூவர் இசை விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. முத்தாய்ப்பாக விளங்குகின்றது. நமது பாரம்பரியமான தமிழிசை இன்றும் சிறப்பாகத் திகழ்வதற்கு இவரின் பங்கு மிக முக்கியத்துவமாக இன்றும் இருப்பதோடு, என்றும் இருப்பது நிதர்சனமான உண்மையாகும்.

23. பன்னிரு திருமுறைகளிலுள்ள ஆடல் மகளிர் ஆடிய ஆடல்கள்



நிரஞ்சலா அமிர்தலோசனன்
விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

முன்னுரை

தமிழகத்திலுள்ள சைவ நூல்களெல்லாம் மூவகையில் அடங்குவன. சாத்திரம், தோத்திரம், காப்பியம் என்பனவே அவையாகும். இம்மூவகையில் திருமுறைகள் தோத்திரங்கள் ஆகும். இவற்றுள் பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் காப்பியமாக விளங்குகிறது. திரு என்பது தெய்வத்தன்மை எனவும், முறை என்பது நூல், ஒழுங்குவரிசை, உறவு முறையீடு எனவும் பொருள்படும். எனவே திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல் எனப் பலவகையில் பொருள்படும். திரு என்ற சொல் செல்வம் என்ற பெயர்ப்பொருளிலும் சிறப்பு என்ற பண்புப் பொருளிலும் வரும். முறை என்ற சொல் மேற்குறிப்பிட்ட நூலின் படி முறையென்ற கோசமே ஊழ் முறைமை முப்போர் என்பர். செல்வத்தை உணர்த்தும் நூல் என உணரமுடிகிறது. இன்னுமோர் கருத்துப்படி முப்பொருட்களில் சிவமாகிய பொருள் சிறந்ததாகையால் சிவமாகிய தருவை உணர்த்தும் நூலைத் திருமுறை என்று கொள்ளலாம்.

திருமுறை கண்டது, திருநாவலூர் பொல்லாப்பிள்ளையாரை வழிபட்டு அவரருளால் சகல சாத்திர ஞானமும், மெய்ஞானமும் பெற்று விளங்கிய நம்பியாண்டார் நம்பி என்பவரால் பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்டது. அதாவது ஒன்று தொடக்கம் ஏழு திருமுறைகள் தேவாரமாகவும் எட்டாம் திருமுறை திருவாசகம் திருக்கோவையாகவும் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டாகவும் இவ்வாறாகப் பத்தாம், பதினோராம் திருமுறைகள்,

பன்னிரண்டாம் திருமுறையாகப் பெரியபுராணம் அமைந்து காணப்படுகின்றது. பன்னிரு திருமுறை வகுப்பிற்கும் சிவஞானபோதத்து பன்னிரு சூத்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென ஆன்றோர் கூறுவர். சாத்திரங்களைப் படித்த மெய்யுணர்வு பெறுவதிலும் திருமுறைப் பாடல்களை ஓதி இறையருளைப் பெறுவது எளிதென்பர்.

பன்னிரு திருமுறைகளையும் முன் பின் மறை மாற்றாது ஓத வேண்டும். தினந்தோறும் ஆசாலசீலருடையராய்ப் புத்தகத்தை தூபதீபம், மலர் முதலியவற்றால் வழிபாடு செய்து பாராயணம் செய்தல் வேண்டும். திருமுறையை ஓதும் முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்ல வேண்டும். வேதாகமங்களின் வழிநின்று சைவநெறியை உலகம் உய்ய இசைத்தமிழாலும் எடுத்தோதுவன. இத்திருமுறைகள் வான்வெளியிலுள்ள பன்னிரு ராசிகளைப் போல, பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்றன. ஓதுவார் உள்ளத்தையும் கேட்போர் உள்ளத்தையும் உயர்த்தி பக்குவ வெள்ளம் பெருகச் செய்யும் இயல்பு பன்னிரு திருமுறைகளுக்கு உண்டு.

இவ்வாறாக இவ்வியலில் வரலாற்று முறையில் பல்லவர்களின் வரலாறும் அக்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களின் விவரமும், கலை, சமயம், சமூகம் எத்தகைய தன்மை வாய்ந்தது எனவும் கூறப்பட்டுள்ளதுடன் பன்னிரு திருமுறைகளின் சிறப்புகள் அதாவது திருமுறைகள் என்பதன் விளக்கம், பண்ணமைப்பு, தொகுப்பு, திருமுறைகளின் பெருமை என்பன பற்றிய விளக்கத்தோடு பன்னிரு திருமுறைகளின் தொகுப்பு கொண்டுள்ளது.

மேலும், பன்னிரு திருமுறைகளில் மகளிரின் ஆடல் குறிப்புகள் பற்றி நோக்குகின்ற போது பல்லவர் காலத்தில் எழுந்த பன்னிரு திருமுறைகளிலும் ஆடல் மகளிர் ஆடல்களை நிகழ்த்தியுள்ளமை தெளிவாகின்றது. இவ்வாறு அவர்களால் நிகழ்த்தப்பட்ட ஆடல்கள் எத்தகையவை என்பது ஆழ்வார் பாசுரங்களில் நாயன்மார்களால் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருவாசகத்திலே இளமகளிர்கள் திருத்தெள்ளேனம் திருப்பொற்சுண்ணம், திருச்சாரல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருப்பொன்னூசல், திருவம்மானை ஆகிய பாடற் பகுதிகள் மகளிர் பலர் சேர்ந்து இறைவனைப் புகழ் பாடி விளையாடிப் பாடியாடும் விளையாட்டுகளாக அமைகின்றன.

"கருணைக்கழல் பாடி தென்னா தென்னா என்று
தெள்ளேணங் கெட்டோமா
வாயார நாம் பாடி பூரித் தங்குழைத்து
பொன்னூஞ்சல் ஆடோமோ"

அம்மானைக்காய் கொண்டு விளையாடும் இளைய மகளிர் தம்முள் உரையாடும் முறையில் அமைந்த வரிப்பாடலே அம்மானைப் பாட்டாகும். இது கழங்கு ஆட்டம், சுழற்சி ஆட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. தெள்ளேணம் என்பது மகளிர் ஆடி மகிழ்ந்த ஒரு விளையாட்டு ஆகும். இதனை மணலை தெள்ளிக் கொட்டிப் பாடும் விளையாட்டு திருத்தெள்ளேனம் என்றும் கூறப்படுகின்றது.

திருமூலரைப் பின்பற்றி காரைக்கால் அம்மையாரும் தம்முடைய மூத்த திருப்பதிகங்களில் சிவபெருமானின் ஆடல்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். இறைவனை ஆடும் காடரங்கு அணங்கு ஆடும் காடு என்று சுட்டும் அம்மை அங்கு இறைவன் காலியர் வட்டணையிட்டு நடனமாடியதாகக் குறிப்பிடுகின்றார். இந்த ஆடலுக்குரிய இசைக்கருவியாக இன்னியங்கள் இயங்கின. திருமூலரை அடியொற்றிய சம்மந்தர் சொர்க்கத்தே நிருத்தத்தே தொடர்ந்த மகளிர் என்று தமது பதிகமொன்றிலே பதிவு செய்துள்ளார். இதன் மூலம் ஆடல் மகளிர் சொக்கம், நிருத்தம் ஆடல்களை ஆடியுள்ளனர் என்பது தெளிவாகின்றது. பல்லவர் கோயிற் சிற்பங்களைப் பார்க்கும் போது சொர்க்க வகை ஆடலே பிரபலமாக ஆடப்பட்டு வந்ததை அறியமுடிகிறது. வாதூரிலுள்ள சிவன் கோயிலில் காணப்படும் மகளிர் சிற்பங்களின் சுவசுதீகரணங்கள் பலவற்றின் நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆர்த்த சுவசுதிகத்தில் மூன்று

சிற்பங்களும் மண்டல நிலையில் . ஓர் ஆடற்சிற்பமும் காணப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் கீழ் குரலிசைத்துக் கொண்டே ஆடல் ஆடும் பெண் ஒருவரைச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சுவசுதீரண சிற்பங்களில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கரண சிற்பங்கள் சாந்திக்கூத்தின் ஒரு பிரிவான சொர்க்கம் நடனத்தின் செல்வாக்கை உணர்த்துவதாய் உள்ளது.

நிருத்தம் என்பது அபிநயத்தோடு கூடிய ஆடலாகும். சொர்க்கத்தில் அபிநயம் கிடையாது. இதில் ஆடல் அசைவுகளுக்கு முதன்மை, கதை தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்ப கைகொட்டி வல்லபம் செய்யும் கூத்தாக மணிமேகலை சுட்டுவதே சம்மந்தர் குறிப்பிடும் சொர்க்கம் ஆகும். அபிநயத்தோடு கூடிய கூத்தே நிருத்தம். இவ்விரண்டுமே சாந்திக்கூத்தின் இருவகைகளாக அமைந்தன. நிருத்தம் பழம் படி ஆடும் எனும் அப்பர் பெருமானின் பதிக அடியால் அக்காலத்தில் நிருத்தம் பெற்ற உத்திகளை அறியலாம். சொக்கம், நிருத்தம், நாடகம் போல வேறு பல ஆடல் வகைகளும் திருமுறைகளில் சொல்லப்படுகின்றன.

வைகறைப் பொழுதில் எழுந்த மங்கையர் பலர் ஒன்று கூடி நீராடி சடங்குகளை மேற்கொண்டு இறைவனைப் பாடி துதிப்பது பாலை நோன்பு அம்மா ஆடல் எனவும் பெயர் பெற்றது. இப்பாலை நோன்பு மகளிர் நீராடல், தைநீராடல் எனவும் கூறப்படுகின்றது.

"பாரி பறம்பின் பனிச்சுனை தெண்ணீர்
தை இத்திங்கள் தண்ணியம் தரினும்
தை இத்திங்கள் தண்கயம் போலக்
கொளக் கொள குறைவுபடாக் கூழுடை வியனகர்"

குன்றவர்களில் வேட்டுவ ஆடவர்கள் குறிஞ்சிப் பண்களைப் பாடி வரிக்கூத்தாடவும் மகளிர் துணங்கைக் கூத்து ஆடினர் எனவும் கூறியுள்ளார். இவற்றைவிட உறுகடன் வெறியாட்டோடும் இப்பாடலடியின் மூலம் வெறியாட்டு எனும் ஆடலையும் ஆடினர் என கண்ணப்பநாயனார்

குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இவ்வெறியாடலை முழுமையான நாட்டியம் என கூறமுடியாது. அது ஒரு வகை ஆடல் என்ற நிலையில் கருதுவதற்கு இடமளித்துள்ளது.

"குவிகை மேற்கொண்டு மறையார் குணலையிட்டாடப்
புவிகைமாரின்றிப் போற்ற வந்து"

திருஞானசம்பந்தமூர்த்தி தலைக்கு மேல் கைகுவித்து குணலை எனும் ஆடல் ஆடினர் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக பன்னிரு திருமுறைகளிலும் மகளிர் ஆடல் இடம்பெறுகின்றது. இத்திருமுறைகளில் ஆடப்பட்ட ஆடல்களில் தற்காலத்தில் இடம்பெறும் ஆடல்கள் பற்றி நோக்குகின்ற போது பன்னிரு திருமுறைகளில் ஆடல் மகளிர்கள் ஆடிய ஆடல்களாகப் பாடலடியில் கூறப்பட்ட ஆடல்கள் சில இக்காலத்திலும் இடம்பெற்று வருவதைக் காணலாம்.

"கோலாட கோல் வளையார் கூத்தாட
குவிமுலையார் முகத்தினின்று
சிலை பாடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே"

என சம்பந்தர் தனது பாடலடியில் குறிப்பிட்டுள்ளார். தமது கோல்களைத் தாமே மோத சத்த முண்டாக்கி ஆடுதல் சரவை எனப்பட்டது. இது பக்கச் சரவை மேற்சரவை என்றும் கூறப்பட்டது. இவற்றை விட பல்லவர் காலத்தில் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருத்தெள்ளேணத்தில் தற்காலத்தில் இடம்பெற்று வருகின்ற கும்மியின் வடிவமுள்ளது. இது மகளிர் கைகொட்டிப் பாடி ஆடும் கூத்து கும்மி என்றும் கூறுவர். இவ்வாடலை மட்டுமன்றி பல்லவர் காலத்திலெழுந்த தேவாரத்திற்கும் ஆடல் மகளிர் ஆடினர் என தெரியவருகிறது. இவ்வாடல் முறை இன்றும் இடம்பெற்று வருவதைக் காணலாம். குழுவினராகப் பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்ப வாரப்பாடல்கள் திருஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, முதலிய சைவ நாயன்மார்கள் காலத்தில் பெரு வழக்கில் பயிலப்பெற்றன. தெய்வத்தைப் புகழ்ந்து பாடுவதற்கு இசையாலும் கூத்தாலும் இறையுணர்வையும் சமயநெறியையும் மக்களிடையே பரப்புவதற்கு வாரப்பாடல்கள் இவர்களுக்குப்

பெரிதும் பயன்பட்டன. இவர்கள் பாடிய வாரப்பாடல்கள் தெய்வம் சுட்டி பாடியவையாதலால் அவைத் தேவாரம் எனப்பட்டது. இனிய பண்களில் நல்ல தாளலயத்தோடு விளங்கும் தேவாரப் பாடல்கள் பலர் கூடிப் பாடுவதற்குப் பாடற் பொருள் விளங்க பாடி அபிநயிப்பதற்கும் ஏற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

"காந்தாரம் இசையமைத்து காரிகையர் பண்பாட கவினார் வீதியில்
தோம் தோம் என்று அரங்கேறிச் சேயிழையார் நடமாடும்"

என்பது சம்பந்தர் தேவார வாக்கு. இது போன்ற தேவார அச்சான்றுகளாலும் ஆடல் மகளிர் ஆடி அபிநயித்த செய்திகளைப் பெறமுடிகின்றது. சைவ சமயத்தில் இன்றும் சிறப்புற்று பொலிவுற்று விளங்கும் தேவாரங்கள் அக்கால இசை நாட்டிய உலகில் பெரிதும் கையாளப்பட்டு வந்த உருப்படிகளாகும். தேவாரங்களில் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட மூலதான மூர்த்தி தேவாரத் தேவர் என்றும் திருத்தலங்களில் தேவாரம் பாடி பணிபுரியும் இடம் தேவாரச் சுற்றுக் கல்லூரி என்றும் ஆடிப் பணிபுரிவோர் தேவரடியார்கள் என்றும் போற்றப்பட்டனர். தேவாரங்களுக்குப் பாடி பணிபுரியும் மரபு. பண்டைய காலத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தது என்பதை நாம் இன்றும் உணரக் கூடியதாக உள்ளது.

இவை இன்றும் அதே பண்மரபில் பாடி நாட்டிய நிகழ்வுகளில் கையாளப்படுவதைக் காணலாம். சில தேவாரப் பதிகங்கள் தாளலயமின்றி சுத்தாங்கமாகப் பாடப்பட்டவையாகும். இவற்றை நாட்டியத்தில் நாம் கையாளும் போது பாவச் செறிவுடன் கூடிய தேவாரப் பண்ணிசைப் பாடல்களைக் கையாளுமிடத்து அவைப் பண்ணாங்கப் பாடல்களைப் போற்றி அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்ற ஆடல்கள் என்று கூறப்பட்ட அனைத்தும் தற்காலத்தில் இடம்பெறுவதில்லை எனினும் தேவாரம், கோலாட்டம், கும்மி போன்ற ஆடல்கள் இடம்பெற்று வருகிறது என்பதை அறியமுடிகிறது. இதனூடாகப் பன்னிரு திருமுறைகளிலும் ஆடல் மகளிர் ஆடிய வித்தினைச் சிறப்பாக எடுத்தியம்புவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

24. ஆலய வழிபாட்டில் தோற்கருவிகள்



ஆர்.சதீசுகுமார்
ஆய்வியல் நிறைஞர்
இசைத்துறை
தஞ்சாவூர்

முன்னுரை

ஆன்மீகம் என்பது உலகம் தோன்றியது முதல் மக்களிடையே இருந்து வருகிறது. இந்த ஆன்மீக உணர்வின் வெளிப்பாடு ஆலயங்களாகும். ஆலய வழிபாடுகளில் இசையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. இசை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் இசைக்கருவிகள் இறைவனோடு இணைக்கப்பட்டுள்ளது. சான்றாகச் சரசுவதி வீணை, நந்தி மத்தளம், இறைவன் இசைக்கருவியை இசைப்பவனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இசைக்கருவிகள் மனிதனோடு தொடர்ந்து சேர்ந்து நரம்புக்கருவி, காற்றுக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் தோற்கருவிகளின் பங்களிப்பு ஆலயங்களில் இன்றியமையாததாக உள்ளது. அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தோற்கருவிகளின் தோற்றம்

ஆதிகால மனிதன் உணவிற்காக விலங்கினை வேட்டையாடினான். பின்பு அதனை உண்டு காய்ந்த தோலினை மரத்தின் கிளையில் வீசி எறிந்தான். அத்தோலானது இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்துப் பார்க்கும் போது அது உலர்ந்து சுருங்கி மரக்கிளையை இறுகப்பிடித்திருந்தன.

காற்று வீசின பொழுது காய்ந்த மரக்கிளையானது முறித்து விசி எறியப்பட்ட தோலில் விழும் போது தொம் என்ற சத்தம் எழுப்பியது. இதை கூர்ந்து கவனித்த ஆதி மனிதன் விலங்கின் தோலை உலரச் செய்து அதைத் தட்டிப்பார்த்த பின் தோலிலிருந்து ஒருவித நாதத்தை எழுப்பலாம் என்பதை உணர்ந்தான்.

ஒரு ஈரக்களிமண் உருண்டையில் நடுவில் தோண்டி பள்ளம் செய்து மூடித்தட்டினான். மூங்கில் மரத்துண்டிலிருந்தும், குடத்திலிருந்தும் உடைந்து விழுந்த வாயின் மேல் தோலை மூடி அடித்தான். இவ்வாறு பறையைத் தோற்கருவியை உருவாக்கினான். தோற்கருவிகளில் பலவகை என அவை பறை, தவில், சுத்தமத்தளம், பேரிகை, படாகம், நிசாளம், கிணை, துடி, ஆகுளி, டமாரம், மிருதங்கம், முழவு, முரசு, உடுக்கை போன்றவையாகும் என்று அடியார்க்கு நல்லார் 30 வகையான தோற்கருவிகளைப் பஞ்சமரபு நூலில் வகைப்படுத்துகிறார்.

தோற்கருவிகளில் நம் முன்னோர்கள் நகர கோயில்களிலும், கிராமங்களில் சிறு தெய்வ வழிபாடு கோயில்கள் என அதன் வழிபாட்டு முறைகளில் தோற்கருவிகளை இசைத்துள்ளனர். இக்கருவிகளில் பெரிய மேளம் என்பது மங்கள இசைக்கருவியாக ஆலயங்கள் தோறும் இசைக்கப்படுகிறது. இவற்றில் தவில் என்ற வாத்தியம் அடங்கும்.

ஆலய வழிபாடுகளில் தவில்

தவில் என்பது இருமுக பறை ஆகும். இது வலப் பக்கத்தில் கையாலும் இடப் பக்கத்தில் குச்சியாலும் கொண்டு முழக்கப்படும். கோயில்களில் கும்பாபிசேகத்தின் போது பேரிகை தடாகம் என்ற பூசை முறை உண்டு. அப்பொழுது தோற்கருவிகளின் தவண்டை அல்லது தவிலுக்குப் பூசை செய்வர். தவிலுக்குச் சந்தனம், குங்குமம் இட்டு வழிபாடு செய்வார்.

ஒருமுகத்தைச் சூரியனாகவும் மற்றொரு முகத்தை சந்திரனாகவும் நினைத்து மூன்று முறை தட்டுவர். இச்சடங்கினால் துர்தேவதைகள் நீங்கும் என்ற நம்பிக்கை உண்டு. கோயிலில் கொடியேற்றும் போது தவிலுக்குப் பூசை உண்டு பெரிய திருவிழாக்களில் எல்லா நாட்களிலும் தவில் நாககரத்துடன் இணைந்து செல்கின்றது. கோயிலில் தவிலைக் காவி வண்ணத்துணியைக் கொண்டு போர்த்தி வைக்கின்றனர்.

காவி வண்ணம் என்பது புனிதமானது என்பதனை நினைவுபடுத்தும் வகையில் இவை அணிவிக்கப்படுகிறது.

சுத்த மத்தளம்

சுத்த மத்தளம் இன்றைய கர்நாடக இசை அரங்குகளில் இசைக்கப்பெறும். மிருதங்கத்தின் வடிவொத்தக் கருவியாகும். ஆனால் மிருதங்கத்தை விட பெரியதாகவும் நீளமாகவும் காணப்படும். சுத்த மத்தளத்தின் வெட்டு தட்டு, மிருதங்கம் போல இல்லாமல் தபேலா போல் அகலமாகவும் காணப்படும். இதில் தார சட்சத்தின் ஒலி கேட்கும் மையத்தில் காணப்படும் கரணை கருப்புப்பகுதி மிருதங்கத்தை விடப் பெரியதாகக் காணப்படும்.

திருவாரூர் கோயில் திருவந்தி காப்பு ஏனைய தீபராதனைகளில் சுத்தமத்தளம் வாசிக்கப்படுகின்றது. சைவர்கள் என்ற மரபினமே இதனை வாசிக்கும் உரிமை பெற்றுள்ளார்கள். திருவாரூர் கோயிலில் நடராசர் புறப்பாடு வரும்பொழுது தாண்டவ சதிகள் சொல்லப்படும். அதற்கென சதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. சதிகளைத் தத்தகாரமாகச் சொல்லி மத்தளத்தில் வாசிப்பர். பிறகு மீண்டும் சதிகள் செல்லப்படும்.

திருவாரூர் பஞ்சமுக வாத்தியம்

திருவாரூர் பஞ்சமுக வாத்தியம் ஐந்து முகங்கள் கொண்டது. வெளிகாலத்தால் ஆனது. பானை வடிவில் உள்ளது. பானையின் வாய்பகுதியில் ஐந்து முகங்கள் போர்த்தப்பட்டுள்ளது. இப்பஞ்சமுக வாத்தியம் எல்லா நாட்களிலும் சுத்த மத்தளத்துடன் இணைந்து ஒலிக்கின்றது. சோடச உபசாரத்தின் ஆடும் போதும், திருவீதி உலாவிலும் ஒலிக்கப் பெருகிறது. திங்கள், வெள்ளி இருநாட்களிலும் மாலை பூசைகளில் வாசிக்கிறவர்கள் சைவர் என்ற மரபினரே வாசிக்கின்றனர். இவை திருவாரூர் ஆவுடையார் கோயில் திருத்துறைப் பூண்டி மருந்தீசுவரர் கோயில்களில் இதனை வாசிக்கின்றனர்.

தவண்டை

இடையில் தக்கை இருமுகம் கொண்ட தோற்கருவியாகும். உடுக்கை அமைப்பில் தவண்டை உள்ளது. அளவில் பெரியது. இதன் உடல் மரத்தால் ஆனது. மதுரை மீனாட்சி அம்மனுக்கு மார்கழி மாதம் திருவாதிரை நிறைவு விழாவில் எண்ணெய் காப்பு உற்சவம் நடைபெறும். 5.15 மணிக்கு நடைபெறும் தைலக்காப்பில் முடியும் வரை நாகசுரத்திற்கு இசைக்கருவியாகத் தவண்டை தான் முழக்கப்படும். இந்நிகழ்ச்சி புது மண்டபத்தில் நடைபெறும்.

உடல்

தவிலைப் போன்ற அமைப்பைப் பெற்று திகழ்வது உடலாகும். இக்கருவி கோயிலுக்குள் இசைக்கப்படும். ஒருவித இசைக்கருவியாகும் இதன் ஒலி ஓங்காரத் தொன்மையை எழுப்பும் தைப்பூச காலங்களில் மட்டும் இசைப்பர். சிதம்பரத்தில் வீதிகளில் வாசிக்கப்படுகின்றது. உடல் கருவியினை இசைப்பதன் மூலம் இறைவன் புறப்பாடு தயாராகி விட்டதனை அறியமுடிகிறது.

மிருதங்கம்

நட்டு முட்டு என்று அழைக்கப்படும் மிருதங்க தாளமும் அன்றாட வழிபாட்டில் இடம் பெறுவதை முன்பு கோயிலில் காண்கையில் நட்டுவ தாளமும் மிருதங்கம் துணையாக இசைக்கப்பட்டன. இவை இறைவன் வலம் வரும்போது வாசிக்கப்பட்டன. இவை இருமுக கருவியாகும். மிருதங்கம் கோயில்களில் பயன்படுத்திய நிலைமை மாறி பின்பு படிப்படியாக மிருதங்கம் இசையரங்கிலும் பசனைகளிலும் வாய்ப்பாட்டுக்குப் பக்க வாத்தியமாகவும் தாள லயத்திற்கும் நுட்பமான கருதி பேதங்களும் இன்றியமையாத கருவியாகத் திகழ்ந்து வருகிறது.

புசுகரம்

புசுகரம் ஒரு முகவு மூன்று முகங்கள் காணப்படுகின்றன. மூன்று நாத பெருக்கிகள் காணப்படும். ஒவ்வொரு முகமும்

தோலால் போர்த்தப்பட்டுள்ளது. அதனோடு இணைந்த நாத பெருயுடன் வார்களால் இணைந்து இழுத்துக் கட்டப்பட்டுள்ளன.

கிரிக்கட்டி

கிரிக்கட்டி என்ற கூம்பு வடிவமான இரட்டைப் பறையாகும். இக்கருவியை இடுப்பில் கட்டி முழக்குவர். வளைந்த பிரம்பு குச்சிகளைக் கொண்டு அடித்து முழக்குவர். திருவாரூர் கோயில் கருவிகளால் கிரிக்கட்டியும் ஒன்றாகும். திருவாரூர் தேரில் பாரி நாயனமும் கிரிகட்டியும் அமர்ந்து இசைக்கப்படுகின்றன. கிராமிய நடனங்களிலும் இக்கருவி பயன்படுத்தப்படுகிறது. மறைந்து வரும் கருவிகளில் இதுவும் ஒன்றாகும்.

குந்தலம்

மராட்டியர்களால் தஞ்சைக்கு கிடைத்த கருவி குந்தலம் ஆகும். குந்தலம் வெண்கலம் அல்லது மரத்தால் ஆனது. இதன் முகப்பகுதி எருமை தோலினால் போர்த்தப்படுகின்றது. ஆடல், பாடல் கொண்டு இறைவழிபாடு செய்யும்போது குந்தலம் இசைக்கப்படுகிறது.

உடுக்கை

இடை சுருங்கு பறை என்றும் துடி என்றும் கூறப்படும் தோற்கருவியாகும். உடுக்கை நடுவில் சிறுத்தும் ஓரங்கள் பெருத்தும் காணப்படும். இதன் உடல் மண்ணால் அல்லது மரத்தினாலும் அல்லது பித்தளையினால் செய்யப்பட்டிருக்கும். உடுக்கை கிராம தேவன் வழிபாட்.டில் இடம்பெற்றுள்ளன. மாரியம்மன் கோவில் பூசாரி உடுக்கை முழக்க வழிபாடு செய்வார். மேலும் குறி சொல்வோர் இசுடதேவதைகளை வேண்டியும் உடுக்க அடிக்கின்றனர். சிவபெருமான் தாண்டவத்தின் போது உடுக்கை இசைக்கப்படுகிறது.

பம்பை

தோற்கருவி வகைகளில் பம்பையும் ஒன்று. இது நான்கு முகத் தோற்கருவியாகும். நீள உருளை வடிவமுள்ள

இருபறைகள் ஒவ்வொன்றும் ஓரடி நீளமுள்ளது. பம்பை வாசிப்போர் பெரும்பாலும் கிராம தேவதைகளின் வழிபாட்டின் போது நாதசுரத்துடன் இணைந்து வாசிக்கப்படுகின்றது. பூசைகளில் உடுக்கையடிக்கும் போதும் இதனை வாசிப்பர்.

தப்பு

தப்பு என்பது தோற்கருவி ஒரு முக தோற்கருவியாகும். வட்ட வடிமான மரச்சட்டத்தின் கன்றுக்குட்டியின் மென்மையான தோலைப் போர்த்தி தப்பு உருவாக்கப்படுகிறது. தப்பு தேரோட்டம், சிறு தெய்வ வழிபாடுகளில் இடம்பெறுகிறது. காளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களும் பால்குடம் எடுக்கும் போது முன்னாலும் தப்பு ஒலித்தபடியே செல்கின்றனர்.

நகரா

நகரா பெரிய கோப்பை அல்லது அரைகோள வடிவமுடையது. இதன் உடல், மரம், பித்தள இரும்பால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மீது தோல் போர்த்தப்பட்டிருக்கும். இறைவன் ஊர்வலம் வரும்போது இரு சக்கர வண்டியில் இக்கருவியினை வைத்து ஊர்வலத்தின் பின்னால் இழுத்து செல்லப்படுகிறது. வாசிப்போர் வண்டியின் மேல் அமர்ந்து இரண்டு வளைந்த குச்சிகளால் அடித்து முழக்கப்படுகிறது. சில சமயங்களிலும் அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது இக்கருவி ஊர்வலத்தின் முன்னால் செல்லும்.

இக்கருவி பேரி என்றும் பேரிகை என்றும் கூறப்படுகின்றன. வட இந்தியாவில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

டமாரம்

டமாரம் மரத்துண்டினாலும் தோலினாலும் செய்யப்பட்டுள்ளது. குவிந்த வடிவமுள்ள இசைக்கருவியைக் கோயில் ஊர்வலங்களில் எருதின் மேல் வைத்து இரண்டு குச்சிகளால் வாசிப்பர். டமாரம் கூம்பு வடிவமான இரண்டு தோற்கருவிகளாகும். இது மரத்தலானது வலைத்துக்கட்டப்பட்டது.

25. சிறி நீலகண்ட சிவனின் சிவ கீர்த்தனைகள்



ஆர். இராசா
முதல்வர்
பென்னையா இராமசெயங் கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

சங்கீத இசை உலகில் எண்ணற்ற பல வாக்கேயக்காரர்கள் தோன்றி பல இசை உருப்படிகளைப் படைத்து இசைத் தொண்டாற்றியுள்ளனர். சிறிநீலகண்ட சிவன் அவர்கள் தமிழகத்தில் தோன்றிய புலமை மிக்க இசை ஞானிகளுள் குறிப்பிடத்தக்கவர். சிறி நீலகண்ட சிவன் அவர்கள் இசை அறிஞர்களிடமிருந்து வேறுபட்டவர். இவர் ஒரு பெரிய சிவ பக்தர் ஆவார். மகானாக வாழ்ந்தவர். இனிய தமிழ் வார்த்தைகளைக் கொண்டு சாகித்யம் அமைத்தவர். இவரது கீர்த்தனைகள் வைராக்கியமும், பக்தியும் ததும்பும் வகையில் இருக்கும்.

வாழ்க்கை வரலாறு

இசை இறைவனுடன் நம்மை ஐக்கியப்படுத்தும் மாபெரும் உன்னதக் கலையாகும். இக்கலையுலகில் எண்ணற்ற பல வாத்தியக்காரர்கள் தோன்றி இசைத் தொண்டாற்றியுள்ளனர். இவர்களில் பலர் ஞானிகளாகவே தோன்றி பாடல்களைத் தந்துள்ளனர். சான்றாக, ஆழ்வார்கள், நாயன்மார்கள், மீரபாய், சதாசிவ பிரம்மேந்திரர், சத்குரு சிறிபோதேந்த்ர சுவாமிகள் எனக் கூறிக்கொண்டே போகலாம். அவ்வகையில் மகனாக அவதரித்து இவ்வுலகில் இசை உருப்படிகள் பல தந்தவர் சிறி நீலகண்ட சிவனாவார்.

பிறப்பும் இளமையும்

சிறி நீலகண்ட சிவன் அவர்கள் நாகர்கோயிலை அடுத்த வடிவீட்சரம் என்ற தலத்தில் 1839ஆம் ஆண்டு அவதரித்தார்.

இவரது பெற்றோர் திரு. சுப்ரமணிய அய்யர், திருமதி. அழகு அம்மாள், இவரது இயற்பெயர் சுப்ரமணியன். 1839 முதல் 1900 வரை வாழ்ந்த சிறி நீலகண்ட சிவன், இறைவன் திருநீலகண்டர் மீது தான் கொண்டிருந்த தணியாத ஈடுபாட்டின் காரணமாகப் பிற்காலத்தில் அன்னாரது இயற்பெயரான சுப்ரமணியன் என்பது மறைந்து சிறி நீலகண்ட சிவன் என்று அழைக்கப்பட்டார்.

சிறி நீலகண்ட சிவன் பாடல்கள் இயற்றுவதுடன் நில்லாமல் பக்தி அவசியத்தைப் பற்றி சிறந்த உபன்யாசங்களும் வழங்குவதில் வல்லவராவார்.

சிவனும், தெய்வீகமும்

சிறி நீலகண்ட சிவன் தெய்வீக மார்க்கத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் பல்வேறு சமயங்களில் அவருக்கு இன்னல் ஏற்பட்ட போதெல்லாம் இறைவனே முன்வந்து உதவிக்கரம் நீட்டிக் காத்ததுமுண்டு. ஒருமுறை பத்மநாபபுரத் திருக்கோயிலில் சுவாமி பிரகாரத்தில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்த போது, பக்தர்கள் இறைவனின் நாம சங்கீர்த்தனங்களை இசைத்துக் கொண்டிருந்த வேளையில், எண்ணெய் இன்மையினால் தீப்பந்தங்கள் ஒளிக் குன்றத் தொடங்கியது. இதனை எவரும் கவனிக்கவில்லை. இதனைக் கண்ணுற்ற சிறி நீலகண்ட சிவன் அவர்கள் எண்ணெய்க்குப் பதில் நீரை தீப்பந்தங்களின் மேல் ஊற்ற, அத்தீப்பந்தங்கள் இரவு முழுவதும் மிகப் பிரகாசமாக எரிந்து ஒளி கொடுத்தன. ஊர்வலமும் இனிதே முடிந்தது.

சிறி நீலகண்ட சிவனின் இசைத்தொண்டு

சிறி நீலகண்ட சிவன் இயற்றிய உருப்படிகள் அநேகம். இவரின் கீர்த்தனைகளைப் பசனைப் பாடல்கள், பாடல்கள் எனப் பகுக்கலாம். மேலும் சமுதாயக் கிருதியும் இயற்றியுள்ளார். இவரின் பாடல்கள் பற்றி இவ்வியலில் தரப்பட்டுள்ளது.

சிவன் இயற்றியுள்ள பாடல்கள்

சிறி நீலகண்ட சிவன் அவர்கள் ஓர் அருட்கவி ஆவார். குழந்தைப் பருவம் முதலே இறை பக்தியில் ஈடுபட்டவர். பல

தலங்களுக்கும் சென்று பல பாடல்களை அங்கங்குள்ள இறைவன் மீதும் இறைவி மீதும் பக்திப் பரவசத்தால் இயற்றியுள்ளார். சிறி சிவன் அவர்கள் பஞ்சநடனக் கீர்த்தனைகள் என்று தமிழில் இயற்றியுள்ளார். இதில் தில்லை, மதுரை, திருநெல்லை, திருக்குற்றாலம், திருவாலங்காடு போன்ற தலங்களில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானின் கிருதிகள் இடம்பெற்றுள்ளன.

இவரது கீர்த்தனைகளில் தத்துவ கருத்துக்கள் கொண்ட கீர்த்தனைகள் உண்டு. சான்றாக, இகபரம் தரும் பெருமை சிவ தர்மம் என்ற கீர்த்தனை மூலம் உலகில் பெண் பிள்ளைகளுக்குப் பொன், பொருள், வீடு, மனை, பதவி என எது இருந்தாலும் இறுதியில் காலன்கொண்டு போகும் பொழுது எதுவும் வாரா. நாம் செய்யும் புண்ணியங்களும், இறைத் தொண்டுமே நம்மை கரையேற்றும் எனப் பாடுகிறார். மற்றுமொரு பாடலில் உலக வாழ்வியலில் உள்ள சம்சார சாகரக் கடல், நிலையில்லா உடல், அகந்தை, புகழ் ஆகியவற்றில் உழன்றிருந்தால் இறைவனை நாடி நீ தேறுவதெப்படி? என மனத்தை நோக்கி வினாக்களை எழுப்புகிறார் சிவன் அவர்கள்.

மற்றுமொரு கீர்த்தனையில் முக்தி தரும் தலம் சிதம்பரம் என்கிறார். சிதம்பரமே முக்திப் பதம் தரும். திருமாலும், பிரம்மனும் கொண்டாட, முனிவர் கூத்தாட, நான்கு வேதங்களும் பாட, விரிசடை ஆடவும், ஆதியும் அந்தமும் இல்லாத ஏக சோதி ஆகிய சிற்சபையில் யோக பூத சுவரூபன் ஆகிய அரு உருவாய் இருக்கின்ற ஆல கால விடத்தை உண்ட திரு நீலகண்டன் ஆடும் சிதம்பரம் முக்தி தரும்.

சொற்சுவை

சிறந்த சொற்களை அழகுறக் கோர்த்து கவிதை நயம் தொனிக்க அமைப்பது சொற்சுவையின் அழகாகும். சிறி நீலகண்ட சிவனது பாடல்களில் இச்சொற் சுவை மிக அழகாக அமைந்துள்ளது. சிவனின் ஆனந்த நடனத்தைக் கூறுமிடத்து சிறி நீலகண்ட சிவன் சொற்கள் கொண்டு மிக அற்புதமாகப் பாடியுள்ளார். இராகம் : பூர்வி கல்யாணி; தாளம் : ரூபகம்.

பல்லவி

ஆனந்த நடமாடுவார் தில்லை அம்பலந்ததனில்
அடி பணி பவரிக்க சயமில்லை

அனுபல்லவி

தானந்த மில்லாத ரூபன் தச்சனு தகதிமி தகசனு
தளாங்கு தகததிங்கிணதோம் தளாங்கு
தகததிங்கிணதோம்
தகதிமி தகததிங்கிணதோம் மென் (றானந்த நட)

சரணங்கள் :

வஞ்ச கமில்லாத லடியார் குதிக்க
வானவர் முனிவ ரானவர் துதிக்கச்
சஞ்சல விழி மாதுமையாள் மதிக்கச்

மத்யமகாலம் :

தக்கிட தரிகிட தொங்கிட தீத்திமி திமிதக ததீங்கிண
தகதோம் தளாங்கு தக ததிங்கிணதோம் தகதிமி
ததிங்கிணதோம் (மென்-றானந்)
பாக்கிய முயலகன் மீதுதொரு கால்தாக்கீப்
பக்தர் தொழமற்ற வெயற்றைக் காலுந் தூக்கி
ஆக்கி அளீப்போரை மேளக் கார ராக்கி
அம்பர நாத சிதம்பர சம்பு சதாசிவ சுந்தர

மத்யமகாலம்

அரை மணி சலகல சல வென
அணி பணி கல கல கல வென-தக்கிட (மென்றானந்)
பாதி மதிச சோதி பளீ பளீரென்ன
பாதச் சிலம்பொலி கலீர கலீரென்ன
ஆதி கறையுண்ட நீலகண்டம் மின்ன

மத்யம காலம்

அர புர அரசிவ சங்கரவருள் குரு வரபர சுந்தர
அண்டமும் பிண்டமும் ஆடிட

எண்டிசையும் புகழ் பாடிட (ஆனந்த)

இதன் சொல் அமைப்பினைப் பார்க்குங்கால், பல்லவியில் கோபுரத்தின் முதல் வாசற்படி, அநுபல்லவி கோபுரத்தின் இரண்டாவது வாசற்படி, சரணத்தில் மூன்றாவது வாயிற் படியின் மூல சுதான விக்கிரகத்தைச் சரண் அடைவதாக அந்த சொல் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. சிவ விட்ணுவை ஒப்பிட்டு இவர் பாடியுள்ள பாடலில் மிக அழகாக இருவரின் தத்துவங்களையும் கூறியுள்ளார். சான்றாக, நாகத்தினை தரித்திருப்பவர் சிவன். நாகத்தில் படுத்திருப்பவர் விட்ணு எனக் கூறியுள்ளார்.

சிறப்புகள்

சிறி நீலகண்ட சிவன் கீர்த்தனங்களுள் மிகப் பல தமிழ் மொழியில் உள்ளன. அதே அளவில் வடமொழியிலும் காணப்படுகின்றன. சிறப்பாக ரீதிகௌளையில் சிவானந்தம் பிரம்மானந்தம் என்ற கீர்த்தனை அரிய படைப்பு.

காம்போதியில் அமைந்த சிவனை நினைந்து என்ற கீர்த்தனை மூலம் அவர்கள் சிவனே முக்தி தருபவர் வேறு மந்திர சபம் தேவையில்லை என்பதும், என்ன வந்தாலும் என்ற காம்போதி இராகத்தில் அமைந்த கீர்த்தனை மூலம் எத்தகைய இடையூறு வந்தாலும் ஈசனை மறத்தல் கூடாது எனவும் வலியுறுத்துகிறார். முகாரி ராகத்தில் அமைந்த என்றைக்கும் கிருபை என்ற கீர்த்தனையில் காமம், குரோத, லோபங்கள் நீங்கி என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுவது மூலமும் சிவன் அவர்களின் உலக நடப்பு, பக்தர் வேண்டுவது, இறையுணர்வு ஆகியன அறியமுடிகிறது.

முடிவுரை

சென்ற நூற்றாண்டில் திருவனந்தபுரத்தில் வாழ்ந்திருந்து ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்களையும் பல இசை வடிவங்களையும் மழை எனப் பொழிந்து உலகிற்கு வழங்கிய நீல கண்ட சிவன் அவர்கள் தென்னிந்திய வாத்தியகாரர்களுள் மிக உயர்ந்த பதவியை வகிப்பவர். இறைவன் அருள் ஒன்றையே

துணையாகக் கொண்டு மாந்தரை நல்வழிபடுத்தும் ஒரே நோக்கத்தோடு தமது வாழ்நாள் முழுவதையும், பிரபந்தங்கள் புனைவதில் ஈடுபடுத்திக் கொண்ட மாபெரும் மகான் சிவன் ஆவார்.

இவரின் படைப்புக்கள் இறை பக்தியினை மக்கள் மனத்தில் வலியுறுத்தக் கூடியதாக உள்ளன. பொதுவாகவே இசை என்பது மக்களை ஈர்க்கக்கூடிய இறைத்துவம் வாய்ந்த ஒரு கலை. பழங்காலம் முதல் இசை மூலம் இறைத்தவத்தினை வளர்த்தவர்கள் பலர். அவ்வகையில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த மகான் சிறி நீலகண்ட சிவன் ஆவார். இவர் கீர்த்தனைகளை இயற்றியதும் மட்டுமின்றி பாடியக் கலைஞரும் ஆவார். இவரது சீடர்களில் ஒருவர் தான் தமிழ் தியாகைய்யா எனப் போற்றப்படும் பாபநாசம் சிவன் ஆவார்.

இத்தகைய மாபெரும் சிறப்பினைப் பெற்ற சிறி நீலகண்ட சிவன் அவர்கள் அருளிச் செய்த பாடல்கள், தமிழ் உள்ளளவும், தமிழிசை உள்ளளவும் சாகாவரம் பெற்றுத் திகழும் என்பது உறுதி. அவரது படைப்புகள் என்றும் அழியாச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

26. சைவத்தமிழ் சிற்றிலக்கியங்கள்
11-ம் திருமுறை



இர.அருணாதேவி ரவி
மெய்கண்டார் மன்றம்
மதுரை

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச்செய்த சேத்திரத் திருவெண்பா

பல்லவர் குலத்தில் நன்மரபில் தோன்றியவர் ஐயடிகள் காடவர்கோன் நாட்டின் வறுமையும், பகைமையும் களைந்து, சைவநெறி நின்று நாட்டை ஆண்டவர் சடைமுடியடையார் என்ற ஐயடிகள் காடவர் கோன். அயல்நாடு வென்று செங்கோல் அரசு புரிந்தார். பிறநாடுகளை வென்று எங்கும் அறநெறி செழித்து வளர உலக சைவ நெறி விளங்க அரசு புரிந்தார். வடநூலும், தென் தமிழும் ஆகிய கலைகள் பலவற்றை ஆராய்ந்து அறிந்து நாடாளும் ஐயடிகள், என்றும் மன்னராக இருப்பது துன்பமே என்று துணிந்து ஆட்சிப்பொறுப்பைத் தன்மகனிடம் அளித்துவிட்டு எங்கும் திருதொண்டு செய்யும் செயல் செய்யத் தொடங்கினார்.

திருதொண்டிற்குரிய செயல்கள் அனைத்தையும் வழுவாது செய்துவரும் நாயனார் இவ்வுலகில் இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் எல்லாவற்றிற்கும் சென்று கண்டு வணங்கி தாம் மேற்கொண்ட திருதொண்டிற்கேற்ற முறையினைப் பணிவிடைகள் எல்லாவற்றையும் செய்து ஒவ்வொரு பதியிலும் வளமையுடைய தமிழில் ஒவ்வொன்றால் போற்றி வழிபட்டார்.

இவ்வாறு பெருகிவரும் பக்தியால் பெரும் பற்ற புலியூரின் கண் உள்ள சிற்றம்பலத்தில் ஆடல் இயற்றும் கூத்தப்பெருமானின் கூத்தை நேர்பட வணங்கிய நாயனார் தான் விருப்புடன் பாடிவந்த இனிய செந்தமிழில் வெண்பாவாகிய மென்மையான மலர் மாலையை இறைவனுக்கு சூட்டினார். இவர்

அருளியநூல் திருப்பதிக வெண்பாக்கள் சேத்திரத் திருவெண்பா என்று அழைக்கப்பட்டது. 24 வெண்பாக்கள் நமக்கு கிடைத்தது. காஞ்சி மாநகரில் அரசாற்றிய இவர் சிவநெறியில் சிவனடியார்கள் இன்பம் அடையத் தமக்கு இயைந்த தொண்டுகளைப் பல காலமாகச் செய்து இருந்து பின் இறைவன் திருவடிக்கீழ் இவ்வுலகில் வழிவழியாக வாழ்ந்து வரும் அடியார்களுடன் சேர்ந்தார்.

இவர் வெண்பாக்கள் யாவையும் யாக்கையின் நிலையாமையை உணர்ந்து இன்றே இப்பொழுதே தலங்கள் தோறும் சென்று சிவனை வழிபட்டு உய்தல் வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார். சேத்திரம், திருத்தலம், சிவதலம்.

தில்லை

தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தையால் தில்லைவனம். கோயில் என்று வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசர் கோயில் தான் பெரும்பற்ற புலியூர் ஞானாகரம், பூலோக கயிலாயம், புண்டரீகபுரம், சிதகாசத்கலம் என்று பல பெயர்கள் உண்டு. சைமினி வேதபாதசுதவம் அருளி செய்ததும், சேந்தனார் தரைப்பட்ட தேரை ஓட செய்ததும், மாணிக்கவாசகர் திருவாசகமும், திருகோவையாரும் பாடி முத்தி பெற்றதும், ஊமை பெண்ணைப் புத்தருடன் வாதில் வென்று பேச வைத்ததும், சம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டதும், உமாபதி கொடிக்கவிபாடி கொடியேற வைத்ததும், சேக்கிழார் பெருமானுக்குத் திருதொண்டர் புராணம் பாட அடியெடுத்துத் தந்ததும் ஆண்டித்தலம் மூவரால் பாடல் பெற்றத்தலம். இல்லையாடியின் ஆட எடுத்திட்ட குஞ்சிதபாதம் நம் குறைகளைப் போக்கி, நிறைவையும், நல் வாழ்வையும் தரும். இப்படிச் சிறப்பு பெற்ற இத்தலத்தை வணங்கிய ஐயடிகள் காடவர்கோன்.

ஒடுதல் அன்றி நடக்கவும் வலிமை நீங்க, இந்த மூப்பு நம்மை வந்து அடையும். அப்பொழுது நமக்கு உற்றார் போல உள்ள மனைவி, மக்கள் முதலாய சுற்றத்தார்கள் அனைவரும் மனம் மாறிவிடுவர். அதற்கு முன் நம் சேரதக்க இடம்

சிற்றம்பலமே என்று கூறுகிறார். நல்ல வளைந்து கொடுக்கும் உடம்பு இறக்கும் போது சிற்றம்பலத்தைப் போய் சேர் என்கிறார். சிற்றம்பலத்தை நாடினால் மயானம் போக வேண்டியது இல்லை என்று கூறுகிறார்.

குடமுழுக்கு கும்பகோணம்

கோயில் கும்பகோணம் என்ற முதுமொழிக்கு ஏற்ப எண்ணற்ற கோயில்களை உடையது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் மகாமக உற்சவம் இத்தலத்தில் தான் நடக்கும். அர்த்தம் அமுத கும்பம் வழிந்தோடித் தங்கியதால் அமுத சரோருகம் எனப்படுகிறது. அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றத்தலம். மூர்த்த நாயனார் தொண்டு செய்து வாழ்ந்தத்தலம். மொழி பூசித்த பதி, இப்பதியை ஐயடிகள் காடவன்கோன்நாயனார் கடுக்காய்ப் பித்தத்தைப் போக்கும். புனிதநீர், இந்த உணவு, நீர் என்று எல்லாம் குடிக்கும் நிலைமை வருமுன் குடந்தை சென்று திருகுடமுடக்கு சிவனைக் கண்டு அவன் பெருமையைப் பேசிக்கொண்டே இரு என்கிறார்.

திருவையாறு

மூவரால் பாடல் பெற்றத்தலம். இறைவன் அப்பருக்குக் கயிலைக் காட்சியை அருளியத்தலம். சுந்தரர், சேரமான் பெருமான் இவர்களுக்குக் காவிரி வெள்ளம் ஒதுங்கி வழிவிட்டத்தலம். வாலி, இந்திரன், இலக்குமி ஆகியோர் வழிபட்டத்தலம். பஞ்சநதி சேத்திரம் ஐயாறு என்றும் வழிக்கப்படுகிறது. பூசை புரியும் ஒரு சிவாசாரியர் காசிக்குச் சென்றமையால் இறைவர் அவரே வந்து தம்மைத் தாமே அருச்சித்துக் கொண்ட அரியதலம். சுசரிதன் என்ற சிறுவனை எமன் பிடிக்க வந்த போது இத்தல இறைவன் எமனை விலக்கி அச்சிவபக்தியுடைய சிறுவனை ஆட்கொண்டார். இப்படிச் சிறப்புப் பெற்ற இத்தலத்தை நீண்ட தூரம் நடந்து போக இயலாமல் போய், இடையிடையே குந்தி எழுந்து நடக்கும் முன்பும் கோழை அது நுரைத்து மேலே ஏறி வெளிவந்து ஒட்டைக் குத்துவாய் வழியில் வந்து ஒவ்வொரு உறுப்பும் செயல்படாமல் இருக்கும் முன் ஐயாறு அப்பனைக் கும்பிட்டுத்

தொழுது வணங்கு என்கிறார் நாயனார்.

திருவாரூர்

பிறக்க முத்தி என்று புகழப்படும் சிறப்புடையது. திருவாரூர் தேர் மிக அழகுடையது. சுந்தரர் திருத்தொண்டர் தொகையைப் பாட சுவாமி அடி எடுத்து கொடுத்து அடியார்களின் பெருமைகளை விளக்கிய பெருமை இப்பதிக்கு உண்டு. திருமகள், ராமர், மன்மதன், ஆகியோர் வழிபட்ட தலம். இத்தலத்திற்கு 11 பெயர்கள் உண்டு. தியாகராசர் பெருஞ்சிறப்புடன் ஆபாச நடன மூர்த்தியாக நிகழும் தலம். சோமாசி மாற நாயனார் வேள்விக்கு எழுந்தருளி சுவாமி அபிபாகம் ஏற்றார் என்ற வரலாறு உண்டு. தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணை நாயனார், விறன் சப்தவிட தலங்களில் ஒன்று.

தென்னிடைவாய்

இத்தலம் 1917-ல் கண்டுபிடிக்கப்பட்டது. மேடு ஒன்றினை வெட்டி எடுக்கும் போது உள்ளே கோயில் இருந்ததாகவும், அதைத் தோண்டிப் பார்க்கும் போது ஞானசம்பந்தர் தேவார கல்வெட்டு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. சம்பந்தர் பாடல் பெற்றத்தலம். இந்த தலத்தை ஐயடிகள் காடவர்கோன். விரைந்து, விரைந்து சென்று வாய் அகண்டு போகாமல் இருக்கும் முன் அவன் நாமத்தை விரைந்து சொல்லி அகண்ட தென்னிடைவாய் இவனை நினைந்து நினைவில் வை. அவன் நாமம், அவன்பெயர், அவன் தலம் ஆகிய எல்லாவற்றையும் என்கிறார்.

திருநெடுங்களம்

சம்பந்தர் பாடல் பெற்றத்தலம் அகத்தியர் வழிபட்டது. சோழ மன்னனுக்குப் பேரழகுடன் இறைவர் காட்சி அளித்தார். அதனால் நித்திய சுந்தரேசுவரர் சம்பந்தர் இடர்களை எல்லாம் களையும் எம்மான் என்று எல்லாப் பாடலிலும் பாடுவார். இப்படி இடர்களையும் இப்பதியை, அறியாமல் இருக்கும் மடநெஞ்சே இதயதுடிப்பு, நாடித்துடிப்பு, நினைவுகூர்தல் என்று

இவை எல்லாம் போய் பிணம் என்று பெயர் இடுவதற்கு முன் நெஞ்சமே நெடுங்களத்து இறைவனை நினைந்து அவர் பாதம் அடைவாயாக உயர்ந்த இந்த கொள்கையை வைத்து உனக்கு இறைவன் அருள்புரிவார்.

திருமழுபாடி

மூவரால் பாடல் பெற்றத்தலம். நவகிரகங்கள் இல்லாத தலம். நந்தி தேவருக்குத் திருமணம் நடந்த இடம். மார்கண்டேய முனிவருக்குச் சுவாமி கையில் மழுவேந்தி திரு நடனக்காட்சி அளித்த தலம். திருமால், பிரமன், இந்திரன், சந்திரன் வழிபட்ட தலம். சுந்தரரை இத்தலத்து இறைவர் மழபாடி மறந்தனையோ என்று அழைத்தத்தலம். புஞ்சா மிருகம் சிவலிங்கத்தை எடுத்து இங்கு வந்து வைத்து வழிபாடு செய்தது. இதனைப் பிரமன் எடுக்க முயன்ற போது எடுக்கமுடியவில்லை. அப்போது வைரத்தூணோ என்று வியந்தார். அப்படிப்பட்ட சிவலிங்கம் இருக்கும் இத்தலத்தை, இழிவு ஆடுதல், விழா கொண்டாதல் பிணவிழா என்பன எல்லாம் ஆடி கொண்டாடும் முன் மழபாடி தலத்து இறைவனை நெஞ்சே நீ நினைவில் வைத்துக் கொள் என்கிறார்.

திருவாய்ப்பாடி

திருவாய்ப்பாடி என்றும் கூவர். அப்பர் பாடல் பெற்றத்தலம் இடையன் ஒருவன் பாலைக் கறந்து வீட்டிற்கு எடுத்து சென்ற பொழுது வழியில் நாள்தோறும் கால் தடுக்கி பால் கவிழ்ந்து வருவதை கண்டு உணர்ந்து கையில் இருந்த வாளால் அவ்விடத்தை வெட்டினான். அதிலிருந்து இரத்தம் வெளிப்பட்டது. அவ்விடத்தில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். அச்சிறுவனின் பாலைச் சுவாமி ஏற்றார். அதனால் சுவாமிக்கு (பாலுகந்தநாதர்) எனப்படுகிறார். கண்டேசுரர் வழிபட்ட பெருமை பெற்றது. மிகப்பழமையான கோயில் இத்தலத்தை, ஊழ்வினைகள் வந்து கலந்து விடாமல் இருக்க இறைவனை வந்து உள்ளத்தால் வைத்தால் நம்மை வந்து வினை அடையாமல் இருக்கும் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் கூறி நம்மை வழிபாடு பண்ண கூறுகிறார்.

கச்சிரகாம்பம்

காஞ்சிபுரம் என்று வழக்கில் உள்ளது. மூவரால் பாடல்பெற்றத் தலம். முத்தியளிக்கும் ஏழினுள் இதுவும் ஒன்று. இங்குள்ள தலமரம் 3600 ஆண்டுகள் பழமையானது. உமையம்மை இத்தலத்தில் 32 அறங்களைச் செய்தார். நிலமகளின் உந்திதானம் இத்தலம். சிவபெருமான் கொட்டிச்சேதம் என்னும் நடனம் ஆடியத்தலம். சுந்தரர் இடக் கண் பார்வை பெற்றத்தலம். பிரமன், திருமால் வழிபட்டார்கள். இங்கு வெள்ளக்கம்பர், கள்ளக்கம்பர், நல்ல கம்பர் என்ற மூன்று சிவலிங்க திருமேனி உள்ளது. இத்தலத்தை ஐயடிகள் காடவர்கோன், நெஞ்சே உன்னை இறஞ்சுகின்றேன். ஏதேனும் ஒன்று நீ செய்ய இறைஞ்சு. பெரிய கம்பத்து இறைவனை அசை தலையுடைய கச்சி, காஞ்சி, ஏகம்பம் என்ற அத்தலத்தில் உள்ள கோயில் அனைத்தையும் நினை என்கிறார்.

திருப்பனந்தாள்

சம்பந்தரால் பாடல் பெற்றதலம். தாரகை என்ற சிவபக்தியுள்ள பெண்ணுக்காக இறைவன் தன்னையே சாய்ந்து கொடுத்தார். சாய்ந்த அந்தச் சிவலிங்கத்தைக் குங்கிலிய கலைய நாயனார் நிமிர்த்தினார். சூரியன், திருமால், பிரமன், இந்திரன், ஐராவதம், ஆதிசேசன் குங்கலிய கலைய நாயனார் ஆகியோர் வழிபட்ட தலம். பனைதானில் இறைவன் வீட்டிருப்பதால் மனந்தான் இத்தலத்தை முதுமையில் எழும் போது எழுந்திருக்க இயலாமல் கைகளை நிலத்தில் ஊன்றிக்கொண்டு எழுதலும், ஒளியை முற்ற வாங்க இயலாமல் கண் இருக்கிப் பார்ப்பதும் நடக்கமுடியாமல் கால் தள்ளாடுதலும் தள்ளாமையால் கோல் ஊன்றி நடத்தலும் பல் இல்லாமையால் வாய்குதட்டுதலும் இயற்கை.

திருவொற்றியூர்

மூவர் பாடல் பெற்றத்தலம். கலிய நாயனார் திருவிளக்கு தொண்டு செய்ததலம். பட்டினத்து அடிகள் முத்தித்தலம். 27 நட்சத்திரங்கள் வழியாகச் செய்த தலம். சுந்தரர் சங்கிலி நாச்சியாரை மணந்த தலம். நந்திதேவன் வேண்டியதன்

பொருட்டு சுவாமி நித்திய நடனம் ஆடி காட்சி அளித்தத் தலம். முசுகுந்தன் வழிபட்டத் தலம். இச்சிறப்பு பெற்ற இத்தலத்தைத் தஞ்சமாக மூவுலகம் ஆண்டபின்னும் அதைக் காப்பாற்றுதல் இளையாமை அத்தகைய பேற்றினைப் பெற்றாலும் அதனை வேண்டேன் என்று இருந்து நஞ்சுண்ட கண்டார் திருவொற்றியூர் தலத்து இறைவனை இணைந்து இருக்க வேண்டும் என்கிறார் ஐயடிகள் காடவர்கோன்.

கூற்றுதைத்தான் என்று குறிப்பிடுவதால் திருக்கடவூர்

இதுவும் பொது வெண்பா எனலாம். மூவர் பாடல் பெற்றத்தலம். அதிவீரட்ட தலங்களில் ஒன்று. குங்கலிய கலைய நாயனார், காரி நாயனார், அவதரித்ததலம், பிரமன், எமன், பட்டத்தலம், நவகிரகங்கள் இல்லாத பெருமை பெற்றது. யமபயம் போக்க வல்லத்தலம் இத்தலத்தை, நூறு நூறு ஆண்டு பல்லூலி காலம் வைரம் பாய்ந்த மாதிரி வெண்குடை கீழ் இருந்து செழுமையான செல்வம் பெற்றாலும் விழையாதே. கூற்றுகைத்தான் திருக்கடவூரில் இருக்கும் அரவத்தை அரையில் கட்டிய அமிர்தகடேசுவரிடம் கிடைக்கும் செழுமையான செல்வம் போல் ஆகாது. சிந்தனையே நாடி இரு என்கிறார் ஐயடிகள் காடவர்கோன்.

திருக்கடவூர் மயானம்

திருமெய்ஞ்ஞானம், மூவர் பாடல் பெற்றத்தலம். பிரம்மனை நீராக்கி மீண்டும் உயிர்பித்து படைப்பு தொழிலை அவருக்கு மீண்டும் அளித்தார். பிரமன் வழிபட்டு பேறு பெற்றத்தலம். இங்குள்ள தீர்த்த கிணற்றில் இருந்து நாள்தோறும் திருக்கடவூர் அமிர்தகடேசுவருக்கு அபிசேக நீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இத்தலத்தில் பிறந்து, இறந்து என்று கருவயப்படாமல் இருக்க ஏதுவான மருந்து நாம் உய்யும் பொருட்டு சுற்றத்தார் கையைப் பிடித்துக் காட்ட வேண்டிய நிலை. கண் தெரியாமல் வருவது, அதனால் மெல்ல எழுந்து யான் வேண்டேன் என்றால் உண்ணமுடியாமல் இருந்து மயானம் செல்லும் முன் நெஞ்சே திருமயானமே சேர் என்கிறார். திருமாயனம் என்பது கச்சிமயானம், கல்லூர் மயானம், கடவூர் மயானம் எனவாகும்.

27. மதுரைக் கலம்பகத்தில் புராணச் செய்திகள்

முனைவர் த.சிவசுந்தரேசுவரி
தமிழ்த்துறைத் தலைவர்
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
சென்னை

முன்னுரை

மதுரைக் கலம்பகம் குமரகுருபாரால் எழுதப்பட்டது. கலம்பக உறுப்பு நலன்களோடு பாடப்பட்டது. மதுரை மாநகரின் சிறப்பினையும் அங்கு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் பெருமையையும் கூறுவதற்காக எழுதப்பட்டது. மதுரைக்கலம்பகத்தில் குறைமறுத்தல், மடல்விலக்கு, குறைநயத்தல், நலம் பாராட்டல், தோழி ஆற்றாமையும் ஆற்றுவித்தலும், தோழி தலைமகனிடத்தில் துயர்கூறல், தலைமகள் ஆற்றாமை, பருவங்கண்டு ஆற்றாத் தலைமகள், தலைமகள் பாங்கியிடத்தில் துயர் கூறல், தலைமகன் ஆற்றாமை, செவிலி ஆற்றாமை, தூது மடல்மாகூறல், கைக்கிளை, பொருள்வயிற்பிரிவு, பரத்தையற்பிரிவு, மாலை வேண்டல், உலா, குறம் ஆகிய அகப்பொருள் மரபுகள் அமைந்துள்ளன. சிவபெருமானின் பெயர்ச்சிறப்பு, அருட்சிறப்பு, புராணச்சிறப்பு, தலச்சிறப்பு போன்ற சிறப்புக்களைக் கூறுவதற்காக அகப்பொருள் பயன்படுத்தப்படுகின்றன. சிவபெருமானின் புராணச் சிறப்புகளைக் கூறுவதற்காக அகப்பொருள் மரபுகள் பயன்படுத்தப்பட்டுள்ள பாங்கினை இக்கட்டுரையில் அறியலாம்.

திருமாலைப் பெண்ணாக்கி அன்பு செலுத்தியவர்

தலைமகனிடத்தில் குறைமறுக்கும் பாங்கி, தலைமகனின் பெருமையையும், தலைமகளின் அருமையினையும் கூறுகிறாள். உயர்வைத்தரும் கல்வியோடு அறச்செயல்கள் செய்யக்கூடிய, தமிழ் வளர்க்கும் மதுரையில் வீற்றிருக்கும் சிவபெருமான், திருமாலைப் பெண்ணாக்கி அன்பு செலுத்தியவர் என்று தலைமகனின் பெருமையைப் பாங்கி எடுத்துரைக்கின்றமையைக்

காணமுடிகின்றது.

''மேதகைய பலகலை போர்த் தறம்வளருந்
தமிழ்க்கூடல் விகிர்த கேண்மோ
வேதமினின் றிருவுருவொன் றீருருவாய்
நின்றதினு மிறும்பூ தந்தோ
போதலர்வைந் துழாய்ப் படலைப் புயல்வண்ணத்
தொருவனிரு பூவைமார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய்
நிற்பதொரு காட்சி தானே'' (மது.கல.பா.எ.95)

கல்யானைக்குக் கரும்பு கொடுத்தவர்

தலைமகனிடம் பெற்ற தழையினைத் தோழி, தலைமகளுக்குக் கொடுத்ததோடு, பாட்டுடைத்தலைவனாகிய சிவபெருமான், அபிடேகபாண்டிய மன்னனுக்காகச் சித்தராக வந்து கல்யானைக்குக் கரும்பு வழங்கியதையும் எடுத்துரைக்கின்றாள்.

''பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியன்முன்
கல்லானைக்கிட்ட கரும்பன்று காணின் களபக் கொங்கை
வல்லானை ககேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினாய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே''
(மது.கல.பா.எ.20)

மன்மதனை அழித்தவர்

தலைமகள் ஆற்றாமையால், பாட்டுடைத் தலைவனின் தோற்றச் சிறப்பினையும், புராணச் சிறப்பினையும் கூறுவதை அறியமுடிகின்றது. கங்கையினையும், பிறைச் சந்திரனையும் சூடிய சிவபெருமான், உமையை ஒரு பாகமாகக் கொண்டவர். நெற்றிக்கண்ணால் மன்மதனை அழித்தவர். வேறு உருவம் எடுத்த மன்மதன் மலர்க்கணைகளால் தன்னைத் துன்புறுத்துகின்றமையைத் தலைமகள் கூறுவதை,

''ஆறுதலை வைத்த முடிநீணில வெறிப்ப வெமை
யாளுடைய பச்சை மயிலோ
மறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர

மேசரொரு சற்று முணரார்
நீறுபடு துட்டமதன் வேறுரு வெடுத்தலரினீள்
சிலைகுனிந்து வழிதே
னூறுகணை தொட்டு வெளியேசமர் விளைப்பதுமென்
னூழ்வினை பலித்த துவுமே''
(மது.கல.பா.எ.19)

எனும் பாடல்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

வராகமூர்த்தியைத் தழுவியவர்

தலைவனைப் பிரிந்த தலைமகள், பூமியைத் தாங்கி வராகமூர்த்தியைப் பன்றி உருவத்தில் வந்து தழுவிக்கொண்டவர். குட்டிகளை அருளினால் அனைத்துக் கொண்டவர் என்று சிவபெருமானின் பெருமைகளை எடுத்துரைக்கின்றாள். தலைமகனின் பிரிவினால் இரவு, மன்மதன், நிலவு ஆகியவைத் துன்புறுத்துவதாகவும் தன்மேனி பசலையினால் வாடுவதாகவும் வருந்துகிறாள் என்பதை,

''இருநிலன கழ்ந்ததொரு களிறுவெளி றும்படியொ
ரிருளியின ணைந்த ணையுமக்
குருளையை மணந்தருளி னிளமுலை சுரந்துதவு
குழகரிதுணர்த்தி லர்கொலாங்
கருகியது கங்குலற வெளிறியது கொங்கை
சிலகணை மதன்வ ழங்வவைபோ
யுருவிய பசும்புணின் வெண்ணில வனல்கொ
ளூந்தியதெ முயிர்சிறிதி ருந்தரிதே''
(மது.கல.பா.எ. 34)

எனும் வரிகள் புலப்படுத்துகின்றன.

மேருவை வில்லாக்கியவர்

தலைவனை நினைத்து வருத்தமுற்ற தலைமகள், மன்மதனின் மலர் அம்புகளால் வாடுகிறாள். மேருவை வில்லாக வளைத்த தலைவனின் சிறப்பினை எண்ணி மகிழ்கிறாள் என்பதை,

''சிலையோ கரும்புபொரு கணையோ வரும்சிவ

சிவவாவி யொன்று முளதோ
விலையோ வறிந்திலமிம் மதனாண் மையென் புகல்வ
திதுவேத வம்பிறி தெனா
முலையே யணிந்தமுகிழ் நகையீ ரொர்பெண் கொடியின்
முலையோடு முன்கை வளையான்
மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே'' *(மது.கல.பா.எ.83)*

எனும் பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன.

கால்மாறி நடனம் ஆடியவர்

தலைமகளின் ஆற்றாமையை எண்ணிக் கலங்கிய செவிலித்தாய், பதஞ்சலி முனிவருக்காக நடனமாடிய சிவபெருமான், இராசசேகர பாண்டியமன்னனுக்காகக் கால்மாறி நடனமாடிய பெருமையை எடுத்துரைப்பதை மதுரைக் கலம்பகப் பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன.

''அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
வெடுத்த பதஞ்சலியா ரேணுந் - தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனார்
சீறிக் குனித்தார் சிலை'' *(மது.கல.பா.எ.82)*

சண்டிகேசுவரருக்கு அருளியவர்

செவிலித்தாய், தலைமகளின் ஆற்றாமை கண்டு புலம்பும் போது, சிவநிந்தனைச் செய்த தந்தையின் காலை வெட்டிய சண்டிகேசுவரருக்கு அருட் செய்த சிறப்பினை எடுத்துரைக்கின்றாள்.

''அம்ம கோவெனும் விமுமழு மெழுந்துநின்
றருவிநீர் விழிசோரும்
விம்மு மேங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென்
மெல்லிய லிவட்கம்மா
வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு
மணந்தவர் மலர்த் தாமந்
தம்மி னோவெனுந் தவப்பயன் பெரிதெனுந்

தந்தை தாளெறிந்தார்க்கே''

(மது.கல.பா.எ.14)

திரிபுரம் எரித்தவர்

கோட்டைகளின் வடிவமாக நின்ற அரக்கர்கள் மூவரை நெற்றிக்கண்ணால் எரித்தவர். நீதி தவறாமல் நல்லாட்சி செய்து வரும் சிவபெருமான் தடாதகைப் பிராட்டியுருடன் இருக்கின்ற சிறப்பையும், தலைமகளுக்கு அருள்புரிய வேண்டுகின்றமையையும் செவிலித்தாய் கூறுகிறாள்.

''கூடார்புரந்தீம டுக்கின்ற துஞ்சென்று கும்பிட்டதோ
ரேடார் குழற்கோதையுயிருண்ப தும்மையரிளமூரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீரெனக் கன்னி வளநாடெனு
நாடாள வைத்தாளு நகையாதி னிப்போடு நகையாடவே''

(மது.கல.பா.எ.39)

நரிகளைப் பரியாக்கியவர்

தலைமகள் மடலேறத் துணியும் போது, உமையம்மைக்கு இடப்பாகத்தைக் கொடுத்தவர்; விடமுண்ட கழுத்தினை உடையவர்; மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரியாக்கியவர் என்று சிவபெருமானின் செயல்களை விட தன்னுடைய செயல் சிறந்தது என்று மொழிவதை,

''இன்னீ ரமுதுக்கிடமுங் கடுவுக் கெழிலார்
களனுங் களனா வருளா
நன்னீ ரமுதக் கடலா கியுளார் நரியைப்
பரியாக் கிநடத்தினரா
லந்நீர் மையின்மிக் கென்னீர் மையெனா வடன்மா
மடன்மா வரமா றுசெயா
மைந்நீ ரளகத் திளமா னையனீர் வருவேன்
மதுரைதத் திரு வீதியிலே'' (மது.கல.பா.எ.71)

எனும் வரிகள் அறிவுறுத்துகின்றன.

சுடுகாட்டில் நடனம் ஆடுபவர்

தலைமகளின் ஆற்றாமை கண்டு வருந்திய தோழி,

சிவபெருமான் தனது உடம்பின் வலப்பக்கத்தினைத் திருமாலுக்கும், இடப்பக்கத்தினை உமையம்மைக்கும் வழங்கியவர் கயிலாய, மேருமலைகளும், பொன், வெள்ளி சபைகளும் இருக்க சுடுகாட்டில் நடனமாடுபவர் என்று பாட்டுடைத் தலைவனின் சிறப்பினைக் கூறி, தலைமகளிடத்தில் இரக்கம் காட்டுமழறு வேண்டுகிறான்.

''ஒன்றே யுடம்பங்கிரண்டே யிடும்பங் குடம் பொன்றிலர்
றென்றே யறிந்தும் பினின்றே யிரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன் றிவெண்பொன் பசும்பொன்
குயின்றேசெயு
மன்றே யிருக்கப் புறங்கா டரங்கா டவல்லாரையே''
(மது.கல.பா.எ.6)

முடிவுரை

மதுரைக்கலம்பகத்தில் குறைமறுத்தல், குறை நயத்தல், தலைமகன் ஆற்றாமை, செவிலி ஆற்றாமை, மடலேறுதல், தோழி ஆற்றாமையும் ஆற்றுவித்தலும், தோழி தலைமகனிடத்தில் துயர் கூறுதல் ஆகிய அகப்பொருள்கள், சிவபெருமானின் புராணச் சிறப்புகளை எடுத்துரைப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

28. திருக்குற்றாலக் குறவஞ்சி - தலபுராணத்தின் வகைமைச் சிறப்புகள்



முனைவர் வெ.திலகம்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை ஆய்வு மையம்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
குற்றாலம்

நூல் அமைப்பு

குற்றால நாதரின் மேல் பாடப்பட்ட நூல் குறவஞ்சி. இந்நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி எனப் பெயர் பெற்றது. தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் குறவஞ்சி என்பதும் ஒன்றாகும். இது குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி, நாடகம் எனவும் வழங்கப்பெறும். இந்நூல் குறவன், குறத்தி, சிங்கன், சிங்கி, குளுவன், நாவன் முதலிய மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிகம், பண்பாடு முதலியவையும், சுவைபடச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இத்தனைப் புகழ்கொண்ட இந்நூல் திருக்குற்றாலக் குறவஞ்சியின் தலபுராணத்தின் வகைமைச் சிறப்புகள் என்னும் நோக்கில் ஆராயப்படுகின்றது.

வகைமைச் சிறப்புகள்

திருக்குற்றாலக் குறவஞ்சியில் தலபுராண வகைமைச் சிறப்புகள் பத்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1.வான் வகை, 2.வானவர் வகை, 3.ஐயர் வகை, 4.அவனி வகை, 5.ஆடவர் வகை, 6.அனுபோக வகை, 7.பண்பிற் செயின்பகுதி வகை, 8.மாப் பெயர் வகை, 9.மரப்பெயர் வகை, 10.ஒரு சொல் பல்பொருள் வகை. இந்தப் பத்து வகைகளும் முதல் ஒன்பது வகைகளும் ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி என்னும் முதல் இனத்தைச் சேர்ந்தவையாகும். ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி என்னும் இரண்டாவது இனத்தைச் சேர்ந்ததாகும். ஒவ்வொரு வகையும் திருக்குற்றாலக் குறவஞ்சியில் வகைமைச் சிறப்புகள் பற்றி காண்போம்.

1. வான் வகை

ஏழுலகம், வீடு, மழை முதலியவை வான் வகை. மேலுலகம், கீழ் உலகம், நடு உலகம், மலை, நதி, கடல், கோள் என ஏழுலகம் எ குறிப்பிடுவர். ''படியே ழுடையார் திரிகூடப் படைமாமதனைப் பயிற்றிய சொல்'' (பா.35) குறத்தி மலைவளம் கூறும், மலைவளம் காண்மின், குற்றாலக் கொழுவிய காட்சியைக் காண்மின் என,

> ''வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
> மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
> கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
> கானசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்''
> (பாடல்-54)

இப்பாடல் மூலம் குற்றால மலை வளத்தின் சிறப்பினை நயம்பட திரிகூடாரசப்பக் கவிராயர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2. வானவர் வகை

வானவர் வகை என்பது தெய்வங்களையும், தேவர்களையும் பற்றியது திருக்குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் சிவபெருமான். இறைவனின் சிறப்பினைக் குறித்துக் கூறுமிடத்து,

> ''குறும்பலவின் முளைத்தெழுந்த சிவக்கொழுந்து''
> (பா.3)
>
> ''நித்தர் திரி கூட லிங்கர்'' (பா.6)
> ''சீரிய தமிழ் மாலைக்கும் செல்வர்; குற்றாலத்தீசர்''
> (பா.9)
> ''குறு முனிக்கா மறியெழுந்த கரங்காட்டும்'' (பா.12)
> ''மவுன நாயகர், எவன நாயகர், சிவனுமாய் அரி
> அயனும் ஆனவர்'' (பா.13)
> ''வானவர் திருக்குற்றாலர்'' (பா.29)
> ''கல்வித் தமிழுக்குரியர் திரிகூடக்கர்த்தர்'' (பா.101)

என திருக்குற்றாலக் குறவஞ்சியில் சிவனின் பெயர்கள் பல பாடல்களில் காணமுடிகின்றது. முருகன், குழல்வாய்மொழி, திருமால், நான்முகன், கலைமகள், தெய்வங்களின் பெயர்கள்

காணமுடிகின்றது. தெய்வங்களின் பெயர்கள் போன்ற தேவர்கள் குறித்தும் கூறும் திருப்பெயர்களும் அறியமுடிகின்றது.

3. ஐயவர் வகை

முனிவர், கவிஞர் முதலான வரைப் பற்றியது. இப்பகுதியில் உள்ள பலவற்றைக் காணும் பொழுது மக்களின் பழக்க வழக்கங்களையும், பண்பாடு பற்றிக்காணும் பொழுது, குறத்தி தன் குறிசொல்லும் திறத்தனை நம் தமிழ்ப் பண்பாட்டின் சித்தரிப்பை விளக்குவதாகும்.

''நன்னகர் குற்றாலம்'' (62)

''என்னகுறியா கிலுநான் சொல்லுவேன் அம்மே சதுர்
ஏறுவேன் எதிர்த்தபேரை வெல்லுவேன் அம்மே''
மன்னர்கள் மெச்சுகுற வஞ்சிநான் அம்மேஎன்றன்
வயிற்றுத் தனைபோதுங் கஞ்சிவார் அம்மே' (பா.64)

என குறிசொல்லும் முறையிலும் கவிஞர் வரிசையில் பண்பாட்டினைக் காணமுடிகின்றது. பண்பாட்டினை அடுத்து, பழக்கவழக்கங்களையும் குறிசொல்லும் முறையில் ஐயவர் வகையில் காணுமிடத்து, தரையை மெழுகுதல், கோலம் போடுதல், நிறைகுடம் தண்ணீர் வைத்தல், பிள்ளையார் உருவினைப் பிடித்து வைத்தல், வாழை, மா, பலாப் பழங்களைப் பரப்பி வைத்தல், பாக்கு, வெற்றி, வடை, அப்பம், அவல், கடலை. தேங்காய், நிறை நாழியில் நெல் அளந்து வைத்தல் என்பது பழக்க வழக்கங்களில் ஒன்றாகும். இதனை,

'தறைமெழுகு கோலமிடு முறைபெறலே கணபதிவை
அம்மே குடம்
தாங்காய் முப்பழம் படைப்பாய் தேங்காயும் உடைத்து
வைப்பாய் அம்மே
அறுகுபுனல் விளக்கிடுவா யடைச்காய்வெள்ளிலை
கொடுவ அம்யே வுடை'' (பா.66)

இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது.

4. அவனி வகை

அவனி வகை என்பது இடங்களைப் பற்றியது. குறத்தி

மலைவளம், நாட்டுவளம் கூறும் பகுதி மிக்க சுவையுடையன. மேற்குத் தொடர்ச்சி மலையானது இமயமலை தோன்றுவதற்கு முன், இம்மலை தோன்றிய இயற்கையும் மலைமன்றோ, திருஞானசம்பந்தர் கண்ட காட்சியினை,

''பக்கம் வாழை கனியோடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்''

என்றும் குறத்தி நாட்டுவளத்தைப் பற்றி கூறும் பொழுது அகத்திய முனிவர் ஐந்நூறு வேள்விகளைச் செய்து முடித்ததற்கு இடமாயிருந்த நாடு கோடியுகங்களைக் கண்ட மிகவும் பழைய நாடு. தென்றல் உலவும் ஆரிய நாடே எங்கள் நாடாகும். தகுதியான வளமுடைய பூமிக்குள்ளே முதன்மை உடையதாக விளங்கும் நாடு. எங்கள் குற்றாலம் இருக்கின்ற நாடாகும்,

''தக்க பூமிக்கு முன்புள்ள நாடு
சகல தேவர்க்கும் அன்புள்ள நாடு
திக்கெலாம் வளர்ந் தோங்கிய நாடு
சிவத்து ரோகமும் நீங்கிய நாடு
முக்கணான் விளையாடிய நாடு
முதிய நான்மறை பாடிய நாடு
மைக்கணாள் குழல் வாய்மொழி பாகர்
வசந்த ஆரிய நாடெங்கள் நாடே''

என நாட்டு வளம் பற்றி ஆறு பாடல்களில் குறத்தி கூறுவதாக அமைந்துள்ளன.

5. ஆடவர் வகை

ஆடவர் வகை மக்களைக் குறிப்பதாகும். சிங்கன் மூலமாக மக்களின் வகையைக் குறிப்பதாக அமையப் பெற்ற குற்றாலக் குறவஞ்சியில் குற்றாலத்தில் வாழ்கின்ற சிவராமனென்றும், பிச்சைப்பிள்ளை திருப்பணிக்காக விட்ட செல்வப் புதுக்குள வேளாளர் குலத்தவனான சங்கமுத்து என்பவன், காங்கேயன், சிறந்த மன்னன் வைத்தியநாதன், வல்லமணியபட்டனும், சங்குமுத்து நம்பியென்பானும், வேதநாராயணன் மகனும் வெற்றியுள்ள தொண்டை நாட்டினை

ஆள்கின்றவனுமான சீதரன் முத்துமன்னனுக்குரிய, அனந்தபத்மநாபன், சுந்தரத்தோழன், இராமநாயகன், சங்கரமூர்த்தி ஆடவர் வகையில் கட்டளை செய், சித்திரை மண்டபம், படித்துறை படிப்பகம், குளம் என ஆடவர்கள் பெயர்கள் அடைப்பெயரோடு அமைந்திருப்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

6. அனுபோக வகை

இது வாழ்க்கையில் அனுபவிக்கிற பொருள் வகைகளைப் பற்றியது. உணவின் வகை, பூணின் வகை, இரத்தின வகை, உலோக வகை, ஆடை வகை, பூச்சு வகை, சூட்டு வகை, இயல் வகை, இசை வகை, நாடக வகை, மண்டில வகை, படை வகை, காலாள் வகை, தோல் கருவி வகை, குடை வகை, ஆயுத வகை, செய்ற்கை வகை, இல்லணி வகை, அனுபோக வகையில் குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் குறிப்பிட்டுள்ளார்.

7. பண்பின் செயலில் பகுதிவகை

சிங்கன், சிங்கியும் எந்நாட்டுக்கும் போனாலும், திருக்குற்றாலத்திற்கு வந்து இம்மலையின் சிறப்பினை அறியும் வண்ணம் ஆசிரியர் கூறியிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும்.

8. மாப்பெயர் வகை

விலங்கினம் பெயர் தொகுதியைப் போன்றதாகும். இம்மலையில் வாழக்கூடிய விலங்கினங்கள் பற்றி காணமுடிகின்றது.

9. மரப்பெயர் வகை

மரப்பெயர்கள் பொதிகை மலையில் இருக்கக்கூடிய அரியவகை மரங்களும், மூலிகை மரங்களும் காணமுடிகின்றது.

இறுதியாகத் திருக்குற்றாலம் நாதர் இருக்கக்கூடிக மலையும் அருவியும், நாட்டுவளம் பற்றி அறியமுடிகின்றது. அப்பேர்பட்ட மலைதான் மேற்குத்தொடர்ச்சி மலை என்று கூறுவதில் ஐயமில்லை.

29. திருக்குற்றால குறவஞ்சியுணர்த்தும் சைவம்

நாகரத்னம் சுதர்சினி
விரிவுரையாளர், மொழிகள் துறை
சமூக விஞ்ஞானங்கள், மொழிகள் பீடம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

முன்னுரை

உயிருள்ளவை, உயிரற்றவை என இரு பிரிவினர் வாழும் உலகத்தில் பகுத்தறிவுடைய ஆறறிவு படைத்த மனிதன் சமூகத்தோடு ஒன்றி வாழத போது சமூகமயமாக்கப்படாத மனித விலங்கு என்று கூறப்படுதல் மிகப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. இங்கு மனித விலங்கென்று கூறப்பட்ட மனிதனை மனிதப்பண்பு மிக்கவனாகப் பரிணமிக்கச் செய்ய உருவாகியதே சமயம் எனலாம். மனிதனை மனிதனாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே அனைத்து மதங்களினதும் நோக்கம் எனலாம். நன்மை-தீமை, நல்லவை-கெட்டவை என்பவற்றை எடுத்துரைக்க கடவுள் எனும் கருப்பொருளினை மையப்படுத்தி சான்றோர்கள் அமைத்துக் கொண்ட பாதையே சமயம் எனலாம். இத்தகைய நோக்கங்களோடு தோன்றிய எண்ணற்ற மதங்கள் இன்று வரை நிலைத்தும், மாற்றமடைந்தும் சில மறைந்து போயும் உள எனினும் பித்தா என்று சுந்தரரால் அழைக்கப்பெற்றவரும், தோடுடைய செவியன் என்று திருஞானசம்பந்தரால் அழைக்கப் பெற்றவருமான சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவமானது உலகத்திற்தோன்றிய ஆதி சமயமாகத் திகழ்வதோடு இன்றும் மனிதனை வழிப்படுத்தி வருகின்றது. சைவம் என்ற சொல் முதன்முதலில் மணிமேகலையில் பயன்படுத்தப்பட்டு கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் சைவ சமயக்குரவர்களின் அர்ப்பணிப்போடு வளர்ச்சியுற்றது எனலாம். இதன் தொன்மை தொடர்பில் க.வெள்ளைவாரணனார் வருமாறு கூறுகின்றார்.

''நாவலந் தீவில் தோன்றி வளர்ந்த சமயங்களுள் தொன்மையும் முதன்மையும் பெற்று விளங்குகிறது சைவசமயமாகும். சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத நிலையில் விளங்கும் செம்பொருளாகிய சிவபரம்பொருளைச் சிவம் என வழங்குதல் தமிழ் மரபாகும். சிந்தனைக்கரிய சிவமே போற்றி எனவரும் திருவாசகத் தொடர் இம்மரபினை வலியுறுத்தல் காணலாம்'' சைவ சமய வரலாற்றைக் காலமுறைப்படிக் கருதி நோக்குங்கால் கிறித்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிந்துநதிப் பள்ளத்தாக்கிற் சிறந்து விளங்கிய மொகஞ்சதாரோ. அரப்பா ஆகிய நகரங்களில் வாழ்ந்த மக்களின் சமய வழிபாடு இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகுவதாகும். இக்காலத்தில் தமிழகத்தில் நிலவிவரும் இலிங்க வழிபாடு, சக்தி வழிபாடு, பகுபதி வழிபாடு முதலியன இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மையுடையதாகி, சிந்துவெளி நாகரிகத்திற் சிறப்புடைய சமய நெறிகளாகத் திகழ்ந்தன என்பது சர் சான்மார்சல், கராசு பாதிரியார் முதலிய ஆராய்ச்சியாளர்களின் துணிபாகும்.

இவ்வாறாகத் தொன்மையான சமயமாகப் போற்றப்படும் சைவத்தின் கோட்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள எண்ணற்ற இலக்கியங்களில் தெளிவாக விவரிக்கப்படுகின்றன. காலத்தைக் காட்டும் கண்ணாடிகளெனக் கூறப்படும் இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையையும், பண்பாடுகளையும், மாற்றங்களையும், வளர்ச்சியையும் வெளிப்படுத்தவல்லன. இலக்கு+இயம் என விரித்தெழுதும் போது இலக்கியம் எனும் பதத்தின் தார்ப்பரியத்தினை விளங்கிக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். இத்தகைய இலக்கியங்கள் காலத்திற்கேற்றாட் போல வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்டு வளர்ச்சியுற்றன. இத்தகைய வளர்ச்சி தமிழில் பல சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தன. சிற்றிலக்கியங்களின் வகைகளின் எண்ணிக்கை குறித்து பல சர்ச்சைகள் காணப்பட்ட போதிலும் பொதுவாகச் சிற்றிலக்கியங்கள் தொன்னூற்றாறு எனக் கூறப்படுகின்றது. அவற்றுள் குறவஞ்சி இலக்கியமும் ஒன்றாகும். குறவஞ்சி

என்பது குறப்பெண்ணைக் குறிக்கின்றது. திணைநிலை வாரியாக பார்க்கும் போது குறவஞ்சி இலக்கியம் குறிஞ்சி நிலம் பற்றியும் முல்லை நிலம் பற்றியும் பாடுவதாகக் காணப்படுகின்றது. குற்றாலநாதரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திரிகூடராசப்பக் கவிராயரால் பாடப்பெற்ற திருக்குற்றாலக்குறவஞ்சி சிவனது தோற்றம் தொடர்பில் வருமாறு பாடப்பெற்றுள்ளது.

''தவளமதி தவழ்குடுமிப் பணிவரையின்
முளைத்தெழுநந்து தகைசேரா் முக்கண்
தலையிலே ஆறிருக்க மாமிக் காகத்
தாங்குகடலல் ஏழமைத்த திருக்குற் றாலா்''

இறைவனைப் பிறப்பிறப்பு, ஆதிஅந்தம் அற்றவராகப் போற்றுவது சைவ கோட்பாடுகளின் ஒன்றாகக் காணப்படுகின்றது. சிவன் மனிதர்களைப் போல வயிற்றில் கருவாகி, உருவாகி பிறந்தவன் அல்லன். ஏனைய கடவுளர்கள் அவதாரம் என்ற அடிப்படையில் பிறப்பெடுக்கக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும் சிவனோ பிறப்பிறப்பு அற்றவராகக் கருதப்படுகின்றார். தாயின் கருவறைக்கு வராத முழுமுதற் கடவுளாகச் சிவனைச் சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங்கள் போன்றன எடுத்துக்காட்டுகின்றன.

''ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே''

என்றப் பாடலடிகள் இதனை விவரிக்கின்றன. இதே கோட்பாட்டினை விவரிக்கும் பாடலடிகள் திருக்குற்றாலக்குறவஞ்சியில் காணப்படுகின்றன.

''நித்தர்திரி கூடலிங்கர் குறவஞ்சி
நாடகத்தை நிகழ்த்த வேண்டி''

மேற்கூறப்பட்ட பாடலடிகளில் நித்தர் என்பது இறைவன் பிறப்பிறப்பு அற்றவன் என்பதைக் குறிக்கின்றது.

''அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறு அறியேனே''

சிவனை விட மேன்மையான தேவர் யாரும் கிடையாது. அவரை நோக்கிச் செய்யப்படும் தவமே சிறந்தது. அவனன்றி முத்தொழில்களும் இடம்பெறாது. முக்தியைப் பெற்றுத் தருபவரும் அவரே என சிவனை அனைத்துமாக போற்றுவது சைவ மரபாகும்.

''கொலைகளவு கட்காமம் குருத்து ரோகம்
கொடியபஞ்ச பாதகமும் தீர்த்த தாலே
நிலவணிவார் குற்றாலம் நினைத்த பேர்கள்
நினைத்தவரம் பெறுவரது நினைக்க வேண்டிப்''

மேற்கூறப்பட்ட பாடலடிகளில் இறைவன் முக்தியைப் பெற்றுத் தருவது கூறப்படுகின்றது. அதே போல,

''பூமேவு மனுவேந்தர் தேவேந்தர் முதலோரைப்
புரந்திடும் செங் கோலான பிரம்புடையான்''

என்றமையும் பாடலடிகளில் முழுமுதலான சிவனே அனைத்துயிர்களையும் தன் கருணையினாலே காப்பதோடு, அரசர்களையும் தேவர்களையும் வழிபடுத்திக் காப்பவர் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. ''ஏகம் சத் விப்ரா வகிதா வதந்தி'' அதாவது இறைவனை வெவ்வேறு தோற்றங்களில் வெவ்வேறு பெயர் கொண்டு அழைத்தாலும் பரம்பொருள் ஒன்றே எனும் சித்தாந்தத்தைத் தன்னகத்தே கொண்டது சைவம். ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவற்றை முறையே பிரம்மா, திருமால், உருத்திரன், சதாசிவன், மகேசுவரன் எனும் ஐவர் நிறைவேற்றினாலும் சிவனே அவர்கட்குத் தலைவன் என்பது.

''ஐயர் நாயகன் வந்த னன்பல
அமர நாயகன் வந்தனன்''

என்ற பாடலடிகளில் வெளிப்பட்டு நிற்கின்றது.

''அவனி போற்றிய குறும்ப லாவுறை
மவுன நாயகர் எவன நாயகர்
சிவனு மாயரி அயனு மானவர்
கவன மால்விடை அதனில் ஏறியே''

உலகத்திலுள்ளோர் எல்லாம் போற்றும் பெருமான்; குற்றால மலையில் வசிப்பவர்; சிவனாகவும்; அரியாகவும், அயனாகவும் விளங்கும் ஏகமூர்த்தி எருதின் மீது ஏறி பவனி வருகின்றார் என மேற்கூறப்பட்ட பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது.

சைவ சமயத்தின் அடிப்படையில் பூமி இருக்கப்போகும் காலம் மகாயுகம் எனப்படுகின்றது. இம்மகாயுகம் நான்கு யுகங்களாகப் பிரிக்கப்பட்டுள்து. அவையாவன சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இக்கலியுகத்தில் பூமி அழியும் காலமே ஊழிக்காலம் எனப்படுகின்றது. ஊழிகாலத்திற் மழைக்காலம், கோடைக்காலம் எல்லாம் நின்றுபோய், எங்கும் ஒரே பனிமயமாக இருக்க ; நீரும் ஓடாமல் நின்றுவிடும் என்பதனை,

''மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங்கு இளைக்கின்ற காலத்து''

திருமந்திரத்தின் மேற்கூறப்பட்ட பாடலடிகள் விபரிக்கின்றன. இக்கருத்தினை வசந்தவல்லி நாதரை எதிர்கொள்ள வருகின்ற போது,

''வருசங்க வீதி தன்னில் வசந்தபூங் கோதை காலில்
இருபந்து குதிகொண் டாட இருபந்து முலைகொண்டாட
ஒருபந்து கைக்கொண் டாடஒரு செப்பில் ஐந்து பந்தும்
தெரிகொண்டு வித்தை யாடும் சித்தரை எதிர்கண்டாளே''

சங்க வீதியிலே வருகின்ற வசந்தவல்லி குதிக்கால்களில் இரண்டு பந்தும், பந்துகள் போன்ற இரண்டு முலைகளுடனும், கையில் விளையாடிய பந்துடனும் ஐந்து பந்துகள் ஆட சித்தனாகிய சிவனைக் காணவந்தாள் எனக் கூறப்படுகின்றார். அனைத்தையும்

உள்நின்று இயக்கும் கடவுளும் அவனே, அனைத்தையும் ஆடிவரச் செய்து தன்னுள் அடக்கும் சித்தனும் அவனே. அதாவது ஊழிகாலத்திற் பஞ்சபூதங்களையும் மாயையுள் அடக்கும் வல்லமை பெற்றவர் அவர் என்ற தத்துவத்தின் வெளிப்பாட்டினை இங்கு காணலாம்.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களில் பதி தனித்து நிற்கக்கூடியது, சுதந்திரமானது, பசுவானது பாசம் அல்லது பதியை பற்றி நிற்கும். பாசம் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் கொண்டு பசுவை அடிமைப்படுத்தும் இயல்பு கொண்டது. இப்பாசத்தினை விடுத்து இறைவனுடன் சங்கமிக்க சைவசமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிமுறைகளை வகுத்துள்ளது. இம்மார்க்கங்களைக் கொண்டு பற்றற்ற இறைவனைப் பற்றாகப் பற்றுவதே சைவத்தின் நோக்கமாகும். இதனைப்

''பித்தனடித் துணை சேர்ந்த வாதவூ
ரானடிகள் போற்றுவோமே''

அதாவது திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் ஞானமார்க்கம் எனும் பக்திநெறியில் நின்று இறைவனை அடைந்தது போல நாமும் அடைவோம் என்ற சைவத்தின் உயர்நெறியாகிய பக்திநெறியை விவரிக்கின்றது.

''சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோ டொப்பாரிங்கு யாவரும் இல்லை''

என்று கூறப்படும் ஒப்பற்ற முதற் கடவுளினைக் கொண்ட சைவசமயம் பற்றிய கருத்தியல்கள் மேற்கூறப்பட்டவாறு திருக்குற்றாலக் குறவஞ்சியில் விவரிக்கப்பட்டுள்ளன.

30. சைவத் தமிழும் குற்றாலக் குறவஞ்சியும்



த.பிரபாவதி
தலைமைக் காவலர்
வணிக குற்ற புலனாய்வு பிரிவு
கிண்டி, சென்னை

முன்னுரை

தேனருவித் திரையெழுப்பி வான் வழி ஒழுகும் பெருமைப் பெற்ற திருக்குற்றாலமும், அப்பாட்டுடையத் தலைவர் திருக்குற்றால நாதரின் திருவருளும் எங்கும் என்றும் நின்று நிலவும் என்பதற்கொப்ப இக்குற்றாலக் குறவஞ்சி எனும் சிற்றிலக்கியமும் நின்று நிலவட்டும். திருக்குற்றாலப் பதிகம், திருக்குறும்பலா பதிகம், திருவங்கமாலை போன்று பல இலக்கியங்கள் வரிசையில் இக்குற்றாலக் குறவஞ்சியும் நீடித்து நிலைத்து நிற்கும்.

திருக்குற்றால தலப்புராணம், திருக்குற்றாலமாலை, திருக்குற்றால சிலேடை வெண்பா, திருக்குற்றால யமக அந்தாதி, திருக்குற்றால உலா, திருக்குற்றால ஊடல், திருக்குற்றால பரம்பொருள் மாலை, திருக்குற்றாலக் கோவை, திருக்குற்றால குழல்வாய்மொழி மாலை, திருக்குற்றால கோமள மாலை, திருக்குற்றால வெண்பா அந்தாதி, திருக்குற்றாலப் பிள்ளைத் தமிழ், திருக்குற்றால நன்னகர வெண்பா, ஆகிய நூற்களைக் கவிராயர் படைத்திருந்தாலும் அதில் சிறப்பான இடத்தை பிடித்தது இந்த குறவஞ்சி.

திரிக்கூட இராசப்ப கவிராயரின் கைவண்ணத்தில் மிளிர்ந்த இவ்விலக்கியம் சொல்லழகு, பொருளழகு, கருத்தாழம் ஓசையின்பமும் எளிய இனிய நடையும் மிக்கது. சைவ தத்துவத்தின் காத்தற் கடவுளான பிள்ளையார் பெருமானை ஐந்து கைவலான் காவலனே என்று வாழ்த்தி பன்னிருகை என முருக பெருமானை வணங்கி குறும்பலா ஈசர் வணக்கம், குழல்வாய்மொழி அம்மை, வணக்கம், நாமகள் வணக்கம் எனத்

தொடரும் இந்நூற்பயன் கூறுங்கால் காட்டு வேடன் நரி அந்தணன் தேவர்கட்கெல்லாம் நடுநின்று எல்லா பாவங்களையும் நீக்கின இறைவன் உலா வருகின்ற சிறப்பை பவனி வந்தனரே மழவிடைப் பவனி வந்தனரே எனத் தொடங்கி சிறப்பாக பாடியுள்ளார்.

வாய்ப்பாட்டு, நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, மேல்வாய், உதடு, பல், தலை, எட்டுறுப்பு இலக்கணத்தோடு எடுத்தல், படுத்தல், நலிதல், குடியம், தம்பதம், ஒலி, உருட்டுத் தாக்கு எண்வகைச் செயல்கள் வெளிப்படுவதே. வள்ளிக் கொடியிலே துத்திப் பூப்பானேன் சிங்கி காதில் வங்காளத் தாரிட்ட சிங்காரக் கொப்படா சிங்கா அடிசிங்கி வெள்ளிக்கி கொடி மேலே துத்திப் பூப் பூத்தது போல ஏதோ காதில் அணிந்திருக்கின்றாயே அஃதென்னடி வங்களத்தார் இட்ட அழகுள்ள கொப்பு அடா, சிங்கா.

கள்ளிப்பூப் பூத்த ததிசய மல்லவோ சிங்கி தெற்கு வள்ளியூ ரார்தந்த மாணிக்கத் தண்டொட்டி சிங்கா அடி சிங்கி கள்ளிப்பூ பூத்தது போல நீளமாக இருப்பது வியப்புக்குரிய தன்றோ? தெற்கே வள்ளியூரார் என் குறிக்காகச் செய்து கொடுத்து மாணிக்கக்கல் பதித்த தண்டொட்டியடா சிங்கா. வண்ணக் குமிழிலே புன்னை அரும்போது சிங்கி மண்ணில் முந்நீர்ச் சலாபத்து முத்து மூக்குத்திகாண் சிங்கா அடி சிங்கி அழகுள்ள குமிழமலையொத்த உன் மூக்கின் மீது புன்னையரும்புபோல ஏதோ ஒன்று அணிந்திருக்கின்றாயே அஃதென்னடி சிங்கா அது, கடலினடியிலே சலாபத்திலே குளித்தெடுத்த முத்து மூக்குத்தியடா நன்றாகப் பார். சொருகி முடித்ததில் தூக்கணம் ஏதடி சிங்க தென் முருகைபூ ரார்தந்த குப்பியும் தொங்கலும் சிங்கா அடி சிங்கி செருகி முடித்த உன் கூந்தலில் தூக்கணங் குருவிக்கூடுபோல் இருக்கின்றதே அஃது ஏதடி சொல்லு? அழகிய ஆழ்வார் திருநகரிலுள்ளவர்கள் தந்த குப்பி (தலைச்சூளாமணியும், மயிர்மாட்டியுமடா சிங்கா)

பொன்னிட்ட மேலெல்லாம் மின்வெட்டிப் பார்ப்பானேன் சிங்கி இந்த வண்ணப் பணிகளின் மாணிக்கக்

கல்லடா சிங்கா உன்னுடைய பொன்னொளி வீசுகின்ற உடல்பொங்கும் பளிச்சுப்பளிச் சென்று மின்னலொளி வீசுவதற்குக் காரணமென்னடி சிங்கி? நான் பூண்ட இந்த அழகுள்ள நகைகளிற் பதித்த மாணிக்கக் கற்களின் ஒளியடா சிங்கா. இந்தப் பணியை நீ பூணப் பொறுக்குமோ சிங்கி பூவில் ஈசர்க்கும் நல்லார்க்கும் எல்லாம் பொறுக்குங்காண் சிங்கா இத்தகைய அணிகளை நீ அணிவதற்கு உன்னால் தாங்க முடியுமோ சிங்கி? உலகில் திருக்குற்றாலநாதருக்கும் என் போன்ற மங்கையர்களுக்கெல்லாமும் தாங்கத்தக்கது தானடா சிங்கா. குன்றத்தைப் பார்த்தாற் கொடியிடை தாங்குமோ சிங்கி தன் கொடிக்குச் சுரைக்காய் கனத்துக்கிடக்குமோ சிங்கா. மலையை ஒத்த உன் கொங்கைகளின் பெருக்கத்தைக் கண்ணால பார்த்தால் உன் கொடி போன்ற நுட்ப இடை தாங்குமா? (ஒடிந்து போகுமன்றோ?) சிங்கி? கரைக்கொடிக்கு அதன் காய் கனமாகவா தோன்றும்? தோன்றாதடா சிங்கா (கொடிக்குக் காய் கனமா? என்னும் பழமொழி கூட நீ கேட்டதில்லையோ?)

இல்லாத சுற்றெல்லாம் எங்கே படித்தாய் நீ சிங்கி. நாட்டில் நல்லாரைக் காண்பவர்க்கெல்லாம் வருமடா சிங்கா முன் உன்னிடத்தில் காணக்கிடைக்காத வளைத்துப் பேசுகின்ற வெட்டுத் தட்டுப் பேச்சுகளெல்லாம், இப்போது நீ எங்கே படித்துக் கொண்டு வந்தாயடி சிங்கி? நாடுகளில் நல்லோர் பெரியவர்களைக் கண்டு வருபவர் எவர்க்கும் நல்ல தன்மைகளெல்லாம் தானே கிட்டுமடாசிங்கா. பெட்டகப் பாம்பைப் பிடித்தாட்ட வேண்டாமோ சிங்கி. இந்த வெட்ட வெளியிலே கோடிப்பாம் பாடுமோ சிங்கா. கூடையில் அடங்கிக் கிடக்கின்ற நாகப்பாம்பு போன்ற உன் கடிதடத்தைப் பிடித்து ஆடச்செய்ய வேண்டாவோ சிங்கி. வெட்டவெளிப் பொட்டலிலே நல்ல சாதிப்பாம்பு ஆடுமோ அடா? (ஆடலாமா அடா?) சிங்கா

சுட்டிக்கொண்டே சற்றே முத்தம் கொடுக்கவா சிங்கி நடுப்பட்டப் பகலில் நான் எட்டிக் கொடுப்பேனா சிங்கா. என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு சிறிதுநேரம் முத்தங்

கொடுப்பதற்கு வா சிங்கி. நல்ல பட்டப்பகல் நேரத்தில் நான் உன்னிடம் வந்து நெருங்கி முத்தங் கொடுப்பேனா சிங்கா. முட்டப் படாமுலை யானையை முட்டவோ சிங்கி காம மட்டுப் படாவிடில் மண்ணோட முட்டடா சிங்கா. என்னை மோதுவதற்குரிய மேலாடை போர்த்த உன் கொங்கைகளாகிய யானைகளை யான் என் தலையால் மோதவா சிங்கி உனக்குக் காமக்கிறுக்கு அடக்க முடியாவிட்டால் மண்ணில் விழுந்து முட்டடா சிங்கா. சோலை உடைதனைச் சற்றே நெகிழ்க்கவோ சிங்கி சும்மா நாலுபேர் முன் எனை நாணம் குலையாதே சிங்கா. உன் சீலை உடுத்துள்ள கட்டினைச் சிறிது அவிழ்க்க வா சிங்கி. வீண்தனமாக நாலுபேர் போகிற வருகிற இடத்தில் என்மானத்தைக் கெடுக்காதேயடா சிங்கா. பாதம் வருடித் துடைகுத்த வேண்டாமோ சிங்கி மனப் போதம் வருடிப்போய்ப் பூனையைக் குத்தடா சிங்கா உன் கால்களைப் பிடித்து விட்டு உன் தொடைக்குள்ளிடமுள்ள கடிதடத்தை குத்த வேண்டாவா சிங்கி மனவொருமை கொண்டு போய்ப் பூனைகளைப் பார்த்துக் குத்தடா சிங்கா.

நாய்க்குத் துடிக்குதுன் நல்வா யிதழுக்குச் சிங்கி உன்றன் வாய்க்கு ருசிப்பது மாலைக்கள் அல்லவோ சிங்கா உன் நல்ல வாயின் இதழ்களின் சுவைக்கு என் நாக்கு படபடவென்று துடிக்கின்றதே சிங்கி. உன் நாக்குக்கு நல்ல சுவையாக இருப்பது, மாலை நேரத்தில் இறக்குகின்ற கள்ளுதானடா சிங்கா. ஒக்கப்படுக்க ஒதுக்கிடம் பார்க்கவோ சிங்கி பருங் கொக்குப் படுக்கக் குறியிடம் பாரடா சிங்கா நாம் ஒன்றாகத் தழுவிக் கொண்டு படுக்கை கொள்வதற்கு மறைவான இடம் பார்த்துவிட்டு வரவா சிங்கி பெரிய கொக்குகளைப் பார்த்துப் பிடிப்பதற்குக் குறிப்பான (நல்ல) இடத்தைக் கண்டு வா சிங்கா.

வித்தைக் காரியுன்னை வெல்லக் கூடாதடி சிங்கி அது சந்தேக மோவுன் தலைப்பேனைக் கேளடா சிங்கா நீ வியப்பானவள், உன்னை யாராலும் வெற்றி கொள்ள இயலாதடி சிங்கி அதற்கும் ஐயமாகவா இருக்கின்றது? நீ அறிந்து கொள்ள வேண்டினால் உன் தலைப்பேனைக் கேட்டால் கூட உண்மையைச் சொல்லுமடா வேறே யாரிடமுமா கேட்க வேண்டும் சிங்கா?

அதையே கேளடா. தென்னா டெல்லாமுன்னைத் தேடித்திரிந்தேனே சிங்கி அப்பால இந்நாட்டில் வந்தென்னை எப்படி நீ கண்டாய் சிங்கா இந்தத் தென்னாடெங்கும் உன்னைக் காணாமல் தேடித்தேடி அலைந்தேனே (உனக்கு நன்றி இருக்கிறதா? அன்புதான் இருக்கிறதா?) ஏடி சிங்கி அதன்பின் இந்த நாட்டைக் கண்டுபிடித்து என்னை நீ எந்த விதத்தில் கண்டுகொண்டாயடா சிங்கா.

நன்னகர்க் குற்றால நாதரை வேண்டினேன் சிங்கி மணிப்பன்னகம் பூண்டாரைப் பாடிக்கொள் வோமடா சிங்கா இந்த நல்ல நகராகிய திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றால நாதரை (வணங்கி உன்னைக் கண்டு பிடிக்க அருள் தர வேண்டுமென்று) நான் வேண்டிக் கொண்டேனடி சிங்கி அவ்வாறானால் மணியையுடைய நாகப்பாம்பையணிந்த திருக்குற்றாலநாதப் பெருமானைப் பாடி வணங்கிக் கொள்வோமடா சிங்கா.

பார்க்கபொறுக்குமோ பாவியென் ஆவிதான் சிங்கி முன்னே ஆக்கப்பொறுத்தவர் ஆறப் பொறார்களோ சிங்கா. அடிசிங்கி உன் ஆட்டத்தைக் கண்டால் அடி பாவி என் உயிர் தரிக்குமா? சொல்லடி சிங்கி (நீ ஆட்டம் போடுவேன் என்கிறாயே) உலகத்தில் சோறு சமைக்கும் வரை பசியோடு காத்திருந்தவர்கள் அது சூடு ஆறும் வரை பொறுத்திருக்க மாட்டார்களா (இஃது உனக்குத் தெரியாதா?) சிற்றிலக்கிய வகைக் கூறுகளைப் பெற்றுள்ளது. சிலர் ஆற்றுப்படையின் கூறும் இருப்பதாகக் கூறுவர். அது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை.

முதற்பகுதி திரிகூடநாதர் பவனி
இரண்டாம் பகுதி குறிசொல்லும் குறத்தி
மூன்றாம் பகுதி குறவன் அவளைப் பிரிந்து
நான்காம் பகுதி சிங்கன் நிலைக்கு இரங்கிய நூவன்
சிங்கியைத் தேட அடையாளம் கேட்க

பாத்திரங்கள் தலைவன், தலைவி, குறத்தி குறவன் நூவன் கட்டியக்காரன்.

திரிகூட இராசப்ப கவிராயரின் இலக்கியநோக்கு, இயல், இசை, நாடகம் என மூன்று வகை சிறப்புபளும் தொல்காப்பியம் கூறும் வனப்பு எட்டனுள் விருந்து என்பதன் இலக்கணம் விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே

பண்ணிடை தமிழ் ஒப்பாய்
பழந்தினிற் சுவை ஒப்பாய்

என்று சுந்தரர் இறைவனைப் பாடியதைப் போலவே பைந்தமிழ்ப் பாடல்கள் உள்ளன. பாடலோ டியைந்த ஆடல், பண்ணமை கருவி மூன்றும் ஆடுகின்றாள் என்று திருத்தக்க தேவர் பதுமையாரை குறிப்பிடுவதைப் போல இன்னிசயோடு குறவஞ்சி பாடல் வெறும் இசைக்கருவி மட்டுமல்ல குறவஞ்சி மிடற்றிசைக்கே உரியவை. உலகு வழங்கு மொழி பழகு தமிழ் சொற்கள் ஏழிசை விழுமியங்களும் வண்மை கலையைப் பெற்றிருக்கிறார். தொன்மரபுக்கலை சைவ சித்தாந்த கருத்தும், குற்றாலக் குறவஞ்சியில் இயற்கை வளம், ஊர், மலை, ஆறு, காடு பொறுமைகள் இசை மொழியாகவும் தற்சிறப்பு பாயிரத்தில் பல வளஞ்சேர் குறவஞ்சி நாட கத்தைப் படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் பயன் உண்டாமே இளங்கோ பொன்னிலங்கு பூங்கொடி கவிராயர் செங்கையில் வண்டு வசந்த வல்லி விரக வேதனை மோகமென்பது இதுதானோ இதை சிங்கனின் விரக வேதனை கட்டிக்கிற்றையர் னேனிலையே சிங்கன் நோக்கில் சிங்கி மேல் பிரமை கொண்டான் எட்டுக் குரலில் ஒரு குரலில் தென்னகுலாவே வீதி வந்துளாயினாளே *(127 ஆம் பாடல்)*

இறைவன் புகழைக் கற்றாரும், கல்லாரும் கேட்டு பொருளும் இசையும் எளிதாக தெரியும்படி குறவஞ்சியாக அமைத்த புலவர் பெருமகனார் மறைந்தாலும், எழுத்து, அசை சீர், தளை, அடி, தொடை யாப்பு எனும் எழுவகை தாதுக்கள் கொண்ட செய்யுளுரு வெடுத்து நம்மோடு வாழ்கின்றார்.

31. தமிழ்விடு தூது சுட்டும் சோமசுந்தரரின் சிறப்புகள்

முனைவர் செ.கோகிலா
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

முன்னுரை

சிற்றிலக்கிய வகைகள் பல பக்தி இயக்க காலத்தில் உருப்பெற்று வந்தாலும் அவைச் செழித்து வளர்ந்த காலம். நாயக்கர் மன்னர்கள் ஆட்சிக் காலமே ஆகும். கிபி 16-18ஆம் நூற்றாண்டுகளில் தான் புகழ்பெற்ற சிற்றிலக்கிய வகைகள் வளரத் தொடங்கியது. அவ்வாறு வளரத் தொடங்கினாலும் சிற்றிலக்கியத்திற்கான மூலக்கூறுகள் தொல்காப்பியத்திலேயே இடம் பெற்றுள்ளன. அதற்கான சான்றுகள்,

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
குழவி மருங்கினும் கிளவதாகும்"

என்பன போன்ற நூற்பாக்களே சிற்றிலக்கிய வகைகள் 96 என்று குறிப்பிடப்பட்டாலும் கோவை, உலா, தூது, கைக்கிளை, மடல் என்பன போன்ற சிற்றிலக்கிய வகைள் தொல்காப்பிய அகமரபின் நீட்சி என்று குறிப்பிடலாம். எனவே 96 சிற்றிலக்கியங்களுள் பெருஞ் செல்வாக்குப் பெற்றதும், நன்கு அறியப்பட்டதுமான இலக்கியங்களாக 11 மட்டுமே எனக் குறிப்பிடலாம். அவைக் கோவை, உலா, தூது, பரணி, பள்ளு, குறவஞ்சி, அந்தாதி, கலம்பகம் மாலை, பிள்ளைத்தமிழது;, சதகம் போன்றவை.

தூது நூலின் இலக்கணம்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று தூது. காதல் வயப்பட்ட இருவருள் ஒருவர் தனது காதல் வருத்தத்தை மற்றொருவருக்கு இயற்கைப் பொருள் ஒன்றின் மூலம் அறிவித்து மாலை வாங்கி வரச் சொல்லுதல் தூதின் பொது இலக்கணம் இது

கலிவெண்பாவினால் பாடப்படும். தூதுக்குரிய பொருட்களாக அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, வண்டு என்ற பத்தும் அமையும் என்பதனைப் பிரபந்தத்திரட்டு குறிப்பிட்டாலும், இப்பத்துப் பொருட்களையும் தவிர்த்து கால மாற்றத்திற்கு ஏற்ப வேறு சில பொருட்களையும் புலவர்கள் தூதுக்குரிய பொருட்களாக்கியுள்ளார்.

தமிழ் விடுதூது

தமிழ்விடுதூது என்ற நூல். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளிடம் ஒரு பெண் தன் காதல் துன்பத்தைக் கூறித் தமிழ் மொழியைத் தூதாக அனுப்புவதாக அமைந்துள்ளது. இந்த நூலில் தூது பெறுவோர் கடவுள் அதாவது சோமசுந்தரக் கடவுள். தூது அனுப்புபவர் பெண் தூது செல்லும் பொருள் தமிழ்மொழி. இப்பகுதியில் தமிழின் மாண்புகளும், தமிழைத் தூதாக அனுப்புவதன் நோக்கம். சோமசுந்தரரின் பெருமை. மதுரை கோபுரத்தின் சிறப்பு. தூது செல்வதற்குரிய வழிமுறைகள் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு, கலிவெண்பாவால் அமைந்த 268 கண்ணிகளைக் கொண்டு பாடப்பட்டுள்ளது.

தமிழ்விடு தூதில் இடம்பெற்றுள்ள சைவ சித்தாந்தச் சாத்திரக் கருத்துகள்

சைவம் என்பதற்குச் சிவத்தொடு தொடர்புடையது என்று கூறக் காணலாம். சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிபு என்பது பொருள். எனவே சைவ சித்தாந்தம் என்பதற்குச் சிவனே முழுமுதற்கடவுள் என்பது முடிந்த முடிபாகும் என்பது பொருளாகும். இக்கருத்தைப் பல்வேறு அறிஞர்கள் வழியும் அறியலாம். வேத அந்தத்தில் நிகழ்வது சித்தாந்தமாகும். வேதம் என்பது அறிவு விளங்கும் இடம் ஆகும். யாண்டும் நீக்கமற நிறைந்தொளிரும் அருட்சோதியை இரண்டற உணரும் நிலை சித்தாந்தமாகும். எனவே சைவ சித்தாந்தம் என்பது சிவப்பெருமானைப் பற்றிய நிலையையும், சிவனைச் சேர்வதற்குரிய நெறியையும் குறிக்கும்.

சிவனின் அருளிப்பாடுகள்

மதுரை சொக்கநாதர் மேல் கொண்ட காதலால் தலைவி தமிழைத் தூதாக அனுப்பும் பொழுது சிவ பெருமானின் அருட்செயல்களை எடுத்துக்கூறி அனுப்புகின்றாள்.

''மன்னும் மூவாண்டில் வடகலையும், தென்கலையும்
அன்னை முலைப்பாலில் அறிந்தோரும்'' (5-6)

மூன்று வயது வரை பேசாதிருந்த குழந்தைக்கு அன்னை ஞானப்பால் ஊட்டி பேச வைத்தமையால் ஞான சம்பந்தர் என்னும் பேறு பெற்றார்.

''தருமிக்கே
ஏர் வாழ்க்கை வேண்டி உயர்கிழிகொள் வான்கொங்கு
தேர் வாழ்க்கை என்றெடுத்த செய்தியும்'' (115-116)

தருமி என்னும் அந்தணன் வறுமையில் வாடியபோது மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையாகவே மணமுண்டோ என்னும் ஐயத்தை வெளியிட்டு, அதைத் தீர்த்து வைப்போர்க்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு தருவதாக அறிவித்தான். தருமி இறைவனை வழிபட சொக்கநாதர் கொங்குதேர் வாழ்க்கை பாடலைப் பாடித்தர தருமி அதனை அரசவையில் பாடி பரிசில் பெறும் வேளையில் நக்கீரர் பாடலில் பிழை உள்ளது என்று கூறித் தடுத்துவிட்டார் மீண்டும் தருமி இறைவனிடம் முறையிட இறைவன் நக்கீரரை நெற்றிக் கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினார். பின்னர் அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க இறைவன் நக்கீரருக்கும் அருள் செய்து உயிருடன் வரும்படிச் செய்தார்.

''இடம்பவனம் ஈதாக இந்திரன்வந் தேத்துங்
கடம்பவனம் மீதிலுறை காந்தர்'' (138)

இந்திரன் ரம்பை, ஊர்வசியுடன் அத்தாணி மண்டபத்தில் மகிழ்ந்திருக்கும் போது அங்கு வந்த குருவை கண்டுகொள்ளாமையால் அவனுக்கு பாவம் ஏற்பட்டது. அப்பாவத்திலிருந்து விடுபட அசுரர் குருவை வைத்து வேள்வி நடத்தினான். வேள்வியில் அசுரர்களின் நலனுக்கு வழிபாடு

நடைபெற இந்திரன் அசுரகுருவை வாளால் வெட்டினான். அதனால் அவனுக்குப் பாவம் ஏற்பட அவன் பல இடங்களிலும் சுற்றித்திரிந்து இறுதியாகத் தென்திசைக்கு வந்து கடம்பவனத்தில் நுழைந்தான். உடனே அவனைப் பிடித்திருந்த பாவமும் நீங்கியது. அன்று முதல் இறைவன் தந்த அருளோடு இந்திரன் கடம்பவனம் வந்து வழிபட்டு வருகிறான் என்று கூறுகிறது புராணம்.

''பூமன்போல்
காக்கும் அரிபுனைந்த கண்மலரும் கதலொடு'' *(144-145)*

திருமால் அசுரர்களை அழிக்கச் சிறந்ததொரு ஆயுதம் வேண்டி திருமால்பேறு என்னும் தலத்தில் சிவலிங்கம் நாட்டி, நாளொன்றுக்கு ஆயிரம் தாமரை மலர்களால் சிவார்ச்சனை செய்துவந்தார். ஒரு நாள் சிவபெருமான் தாமரை மலர்களில் ஒன்றை மறைத்துவிட, திருமால் தம் கண்களில் ஒன்றை எடுத்துத் தாமரையாக அர்ச்சித்து தவத்தை முடித்தார். இதனைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் திருமாலுக்குச் சக்கராயுதத்தை வழங்கி அருள்புரிந்தார்.

நம்பிக்கை ஊட்டுதல்

''பல நாம்
நின்றவூர்ப் பூசலார் நீடிரவெ லாம் நினைந்து
குன்று போலேசமைத்த கோயிலும்'' *(140)*

திருநின்றவூரில் வாழ்ந்து வந்தவர் பூசலார். இவர் இறைவனுக்குக் கோயில் கட்டி வழிபட விரும்பினார். ஆனால் அதற்கேற்ற பொருள் செல்வம் தன்னிடம் இல்லாததால் தனது மனத்துள்ளேயே கோயிலைக் கட்டி முடித்தார். அதுபோலவே அந்நாட்டு மன்னனும் அழகுற கோயிலைக் கட்டி குடமுழுக்குச் செய்ய எண்ணியிருந்தார். இறைவன் மன்னனது கனவில் தோன்றித் தாம் பூசலார் கட்டியுள்ள கோயிலில் தோன்றுவதால் மற்றொரு நாளில் மன்னன் கட்டியக் கோயில் குடமுழுக்கினை வைத்துக் கொள்ளுமாறு கூறி மறைந்தான்.

''தாயான கங்கைமுடி தான்குளிரக் கண்ணப்பர்

வாயால் உமிழ்ந்த திருமஞ்சனமும்'' *(141)*

திருக்காளத்தி இறைவனை வழிபட திண்ணனார் பொன்முகலியாற்று நீரை கையிலும், வாயிலும் எடுத்து வந்து இறைவன் மீது ஊற்றி வழிபட்டார். மேற்கூறிய செய்திகளின் வாயிலாகச் சிவபெருமான் தன்மீது உண்மையான பக்தி கொண்டு வழிபாடு செய்பவர்களுக்குத் தனது அருளினை வழங்க வல்லவர் என்பது புலனாகிறது.

சைவப் பெருமிதம் கூறுதல்

''ஆண்பனைநல்
பெண்பனை யாக்கினையால்'' *(101-102)*

''சாக்கியர் இட்ட நஞ்சு தன்னைஅமு தாக்கினை இன்று
ஆக்கிய நஞ்சை அமுதாக்காயோ'' *(158)*

அப்பரை
மைக்கடல் கொல்லாதபடி வன்கல் மிதப்பித்தாய்
அக்கடல் கொல்லாமல் உறவாக்காயோ *(161)*

ஆகிய வரிகள் பதிகம் பாடியதால் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிக் காய்த்துக் குலுங்கச் செய்ததையும், பாலில் கடும் விடத்தைக் கலக்கிப் பருகச் செய்த போதும் இறையருளால் மீண்டதையும் கல்தூணில் கட்டிக் கடலில் போடப்பட்ட போதும் கடலில் மிதந்து வந்து கரை சேர்ந்ததையும் சுட்டிக் காட்டி சைவப் பெருமிதம் விஞ்சி நிற்கக் காணலாம்.

ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பு

''பூதர வானவரைப் போற்ற முயன்று ஐயாற்றில்
ஆதரவாய் கண்ட அரசரும்'' *(171)*

திருநாவுக்கரசர் வடகயிலை காண விரும்பி பாதங்களும், கைகால்களும் நோகச் சென்றார். அவரது துன்பத்தைக் கண்ட இறைவன் மானிடராகிய உம்மால் கயிலைக்குச் செல்லமுடியாது எனக் கூறினார். இறைவனும், நாவுக்கரசரைப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து அங்கிருந்தவாறு கயிலைக் கோலத்தைக் காண்பாயாக என்றார். அவ்வாறே நாவுக்கரசரும்

ஐந்தெழுத்து மந்திரத்தினை ஓதி பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் தோன்றி சிவக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து மாதர் பிறைக் கண்ணியானை என்னும் பாடலைப் பாடி வணங்கினார்.

தமிழ்மொழிச் சிறப்பு

''ஆதவனங் கண்டாது அடைத்தகத வம் திறந்தாய்
வேதவனம் கண்டால் விளம்பாதோ'' *(127)*

திருமறைக் காட்டில் உள்ள கோயில் கதவம் வேதம் என்னும் தெய்வத்தின் ஆற்றலால் அடைப்பட்டிருந்தது. அத்தலத்திற்குச் சென்ற நாவுக்கரசர் பண்ணின் நேர்மொழி என்னும் பதிகத்தைப் பாடியதும் கதவம் திறந்தது. வடமொழியால் அடைக்கப்பட்ட கதவம் தமிழ் மொழியில் தமிழ்ப் பாடலால் சிறந்தது.

நிறைவுரை

இவ்வாறாகத் தமிழ்விடு தூது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டாலும் தமிழின் பெருமையைத் தெரிவிக்கும் நூலாகும். மேலும் புராண வரலாற்றுச் செய்திகளைத் தன்னகத்தே கொண்டு சைவ சமய சாத்திரக் கருத்துக்களையும் சிவபெருமானின் பெருமைகளையும் சொற்சுவையுடனும், பொருட்சுவையுடனும் அழகுடன் எடுத்தியம்பியுள்ளது என அறியலாம்.

32. திருக்குற்றாலக் குறவஞ்சியில் சிவனின் பெருமைகள்



செ.போகம்
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

முன்னுரை

சிற்றிலக்கியங்களில் ஒன்றான குறவஞ்சி இலக்கியம் எல்லா மக்களும் படித்து மகிழக் கூடிய இலக்கியம். அதிலும் எளிய மக்கள் படித்து இன்புறத்தக்கது. எளிமையாகவும், இனிமையாகவும் படைக்கப்பட்டிருப்பது குறவஞ்சியின் தனிச்சிறப்பு. குறவஞ்சி என்று சொன்னாலே எல்லார் மனத்திலும் முதலில் தோன்றுவது திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய திருக்குற்றாலக் குறவஞ்சி என்று சொன்னால் அது மிகையல்ல. குறி சொல்வதைக் கேட்பது என்பதே மனிதர்களுக்குச் சுவாரசியமான ஒன்று. திருக்குற்றாலக் குறவஞ்சி சைவ சமயக் கடவுளான சிவனைப் பற்றியே குறி சொல்வது போல படைக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புடையதாகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சி தான் சிவன் குறும்பலா மரத்தடியில் சுயம்புவாகத் தோன்றியதைக் கூறுகின்றது. இத்தகைய பெருமையுடைய சிவபெருமானின் சிறப்புக்களையும், சைவ சமயத்தின் உயர்வையும் திருக்குற்றாலக் குறவஞ்சி மூலம் காண்போம்.

சிவபெருமான் உலா வருதல்

ஓர் இலக்கியமான குறவஞ்சிக்குள்ளே மற்றொரு சிற்றிலக்கியமான உலா இருக்கின்றது. சிவபெருமான் திருக்குற்றால நகரிலே உலா வரும் போது அவருடைய மைந்தர்களான விநாயகரும், முருகனும் உடன் வருகின்றனர்.

“சைவர் மேலிடச் சமணர் கீழிடச்
சகல சமயமும் ஏற்கவே

கைவ லாழியங் கருணை மாலொடு
கமலத் தோன்புடை காக்கவே
ஐவர் நாயகன் வந்த னன்பல
அமரர் நாயகன் வந்தனன்
தெய்வ நாயகன் வந்த னன்னெனச்
சின்னம் எடுத்தெடுத் தார்ப்பவே''

என்ற பாடலடிகளின் மூலம் திருமால், பிரம்மன் போன்ற கடவுளர்கள் எல்லாரும் சிவனுக்குக் கீழே தான் என்பதையும் சமணம் போன்ற பிற சமயங்களும் சைவ சமயத்தை விட உயர்ந்தவைகள் அல்ல என்ற குறிப்புகளையும் காணமுடிகின்றது. மேலும்,

''வனிதை மார்பல குஞ்சம் சாமரை
வரிசை விசிறி சுழற்றவே
தனதன் இந்திரன் வருணன் முதலிய
சகல தேவரும் வழுத்தவே''

என்ற அடிகளின் மூலம் குபேரன், இந்திரன், வருணன் முதலிய சகல தேவர்களும் சிவனின் புகழைப் பாடிக் கொண்டே அவருடன் பவனி வருகின்றனர். இவ்வாறு சிவபெருமானின் சிறப்பை அறியமுடிகின்றது.

பெண்கள் சிவபெருமானிடம் மையல் கொள்ளல்

திருக்குற்றால நாதராகிய சிவபெருமான் உலா வருகின்ற சிறப்பைக் காண பெண்கள் தங்களை ஒப்பனை செய்து கொண்டு வருகின்றனர். ஒப்பனை செய்து வருகின்ற பெண்கள்.

''கருதுமனம் புறம்போக ஒருகண்ணுக்கு மையெடுத்த
கையுமாய் ஒரு கணிட்ட மையுமாய் வருவார்''

தாங்கள் என்ன செய்கின்றோம் என்பது தெரியாமலேயே பாதி ஒப்பனையில் தங்களை மறந்து ஓடி வருகின்றனர். சிவபெருமானைக் கண்டு இவர் திருக்குற்றால நாதர் தானா அல்லது திருமாலா என்று தெரியாமல் மயங்கி நிற்கின்றனர். இதனை,

''புரிநூலின் மார்பனிவன் அயனென்பார் அயனாகில்
பொங்கரவம் ஏதுதனிச் சங்கம் ஏதென்பார்''

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதிலிருந்து சிவபெருமானின் அழகும் சிறப்பும் அறியப்படுகின்றது.

வசந்தவல்லி சிவபெருமானிடம் காதல் கொள்ளல்

திருக்குறள் நாதரைக் காண வந்த பெண்களில் மிகவும் அழகுடையவளான வசந்தவல்லி அவரைக் கண்டதும் மையல் கொள்கின்றாள். திருக்குற்றாலநாதரைக் கண்டு மயங்குகின்றாள். உருகுகின்றாள். இதனைத்

''திங்களை முடித்தார் கண்டாய் திரிகூடச் செல்வர்
கண்டாய்
எங்குள சித்துக் கெல்லாம் இறையவர் இவரே என்று
நங்கைமார் பலரும் கூறும் நன்மொழித் தேறல் மாந்தி
மங்கையாம் வசந்த வல்லி மனங்கொண்டாள் மயல்
கொண்டாளே''

என்னுமடிகள் புலப்படுத்துகின்றன. வசந்தவல்லி குற்றாலநாதர் மேல் காதல் கொள்வதால் அவள் மேனியில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு அவள் தோழிகள் புலம்புகின்றனர். வசந்தவல்லியின் காதல் நோயைத் தணிக்க, வீழ்ந்து கிடக்கும் அவளின் உடலுக்குக் குளிர்ச்சியான கலவைகளைப் பூசுகின்றனர். வாழை இலையில் படுக்க வைக்கின்றார்கள். சந்தனக் குழம்பைப் பூசுகின்றனர். ஆனால் இவைகளெல்லாம் அவளுடைய காதல் தீயை அதிகப்படுத்துகின்றன. அதனால் மன்மதனையும், நிலவையும் பழிப்பதனை,

''தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்த
தண்ணளியை ஏன் மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே-என்றன்
பெணண்மை கணண்டும் காயலாமோ
வெண்ணிலாவே''

என்ற அடிகள் விளக்குகின்றன. குற்றால நாதரைக் கண்டு ஏன் காதல் கொண்டாய் என்று கேட்ட தோழியிடம், வசந்தவல்லி,

''வேரிலே பழம்பழுத்துத் தூரிலே
சுளை வெடித்து வெடித்த தீந்தேன்
பாரிலே பாதாள கங்கைவந்த
தெனக் குதித்துப் பசுந்தேன் கங்கை
நீரிலே பெருகுறும் பலாவிலே
கொலுவவிருகக்குமம் நிமல மூர்த்தி
பேரிலே பிரமை கொண்ட பெண்களிலே
நானுமொரு பெணண்கண்டாயே''

என்று குறும்பலா மரத்தடியில் தோன்றிய குற்றால நாதரிடம் நான் மட்டுமல்ல பல பெண்கள் காதல் கொண்டுள்ளனர் எனக் கூறுகின்றனர்.

தூது அனுப்புதல்

குற்றால நாதரிடம் தான் கொண்ட காதலைச் சொல்லி மறுமொழி வாங்கி வரத் தோழியை அனுப்புகின்றாள். என்னுடைய காதல் நோய்க்கு மாற்று மருந்து முக்கண் மருந்தே மருந்து என்று கூறி எனக்காகத் தூது உரைத்து வா. அவரை வரச் சொல், இல்லையென்றால் அவர் அணிந்துள்ள கொன்றை மாலையையாவது தரச்சொல் அதுவுமில்லை என்றால் என் நெஞ்சைத் திருப்பித்தரச் சொல் எனக் கூறித் தூதுசெல் எனக் கூறுகின்றாள். இதனை,

''தூதுநீ சொல்லி வாராய் பெண்ணே
குற்றாலர் முன்போய்த்
தூதுநீ சொல்லி வாராய்
வந்தால் இந்நேரம் வரச் சொல்லு வராதிருந்தால்
மாலையா கிலுந்தரச் சொல்லு''

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

''கொப்பழகு குழைமடந்தை பள்ளியறை தனிலிருந்து
கோயில் புகும் ஏகாந்த சமயம் சகியே''

என்று அவரைச் சென்று பார்ப்பதற்கு உகந்த நேரம் எது என்பதையும் கூறி அனுப்புகின்றாள்.

குறத்தி குறி கூறுதல்

வசந்தவல்லி உடல் இருந்த நிலையைப் பார்த்துக் குறி

பார்த்துச் சொல்லக் குறத்தியை அழைக்கின்றனர். அவள் குறி சொல்வதற்கு முன் குற்றாலத்தின் மலைவளம், நாட்டுவளம், நகர்வளம் எல்லாவற்றையும் கூறுகின்றாள். குற்றாலநாதரின் சிறப்பினையும் சொல்கின்றனர்.

"குற்றாலர் கிளைவளத்தைக் கூறக்கேள் அம்மே
குலம்பார்க்கில் தேவரினும் பெரியகுலம் கண்டாய்
பெற்றதாய் தந்தைதனை உறறு நீ கேட்கில்
பெண்கொடுத்த மலையரசன் தனைக் கேட்க வேணும்"

என்று சிவபெருமான் சுயம்புவாகத் தோன்றியவன் என்கின்றாள். குறிசொல்வதற்கு முன் என்ன செய்ய வேண்டுமோ அனைத்தையும் செய்கின்றாள் குறத்தி. வசந்தவல்லியின் கையைக் காட்டச் சொல்லி அவளின் சிறப்புகளைச் சொல்கின்றாள். பிறகு வசந்தவல்லி யாரை நினைக்கின்றாள் என்பதைக்

"கடித்திடும் அரவம் பூண்ட
கர்த்தர்குற்றாலர் நேசம் பிடிக்குது"

என்று குறிப்பால் உணர்த்துகின்றாள். ஆனாலும் புரியாதது போல் இருக்கும் வசந்தவல்லியிடம், நீ விரும்புவது திரிகூடநாதர் என்று கூறி, தூதனுப்பிய தோழி மூலம் கொன்றை மாலை வந்து சேரும் என்று சொல்கின்றாள். இதனை,

"நன்னகரில் ஈசருன்னை மேவவருவார்-இந்த
நாணமெல்லாம் நாளை நானும் காணவே போறேன்
கைந்நொடியில் பொன்னிதழி மாலை வருங்காண்"

என்னுமடிகள் உணர்த்துகின்றன.

முடிவுரை

திருக்குற்றாலக் குறவஞ்சியில் திருமால், பிரம்மன் போன்ற கடவுளர்களை விட, சைவ சமயக் கடவுளான சிவபெருமானே உயர்ந்தவர், சிறப்புமிக்கவர் என்கின்றது. மேலும் சைவ சமயமே உயர்ந்தது என்று கூறுகின்றது. சிற்றிலக்கியமான திருகுற்றாலக் குறவஞ்சிக்குள்ளேயே உலா, தூது போன்ற இலக்கியங்களும் இருப்பதனைக் காண முடிகின்றது.

33. தமிழ் விடு தூதும் சைவ சமயமும்



முனைவர் செ.காவேரி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

முன்னுரை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். பிற சில முக்கிய சமயங்களைப் போன்று இச்சமயத்தை ஒரு குறிப்பிட்டவர் தோற்றுவிக்கவில்லை. இச்சமயத்தினை இன்று 220 மில்லியன் மக்கள் பின்பற்றுவதாய்க் குறிப்புகள் சுட்டுகின்றன. இத்தகைய சிவபெருமானை முழுமுதற் கடவுளாய் வழிபடும் சைவ சமயத்தினைப் பற்றிய இலக்கிகயங்கள் சைவநெறி இலக்கியங்களாகும். இசை சைவ நெறி பற்றியும், சிவபெருமான் பற்றியும் புகழ்ந்து பாடவும், சைவ நெறியைப் பரப்பவும் இயற்றப்பட்டன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிற்றிலக்கியம், காப்பியம், சைவப் பனுவல்கள் என்று பல சைவ இலக்கியங்கள் இயற்றப்பட்டன. கி.பி. 650 காலம் தொடங்கி 550 ஆண்டு காலம் தமிழ்மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது எனலாம். நாயன்மார்கள், ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்ற பலர் நூல்களில் சைவ சமயக் கொள்கைகள் விளக்கப்பட்டன. இவைப் போக பல நூல்களும் சிவபெருமானைப் புகழும் வண்ணமும், சைவ சமயத்தைப் பறைசாற்றும் வண்ணமும் அமைந்துள்ளன. அவ்வகையில் மதுரைச் சொக்கநாத்பால் தூது விடுப்பதாய் அமைந்த தமிழ்விடு தூது இலக்கியத்திலும் சைவ சமயம் சார்ந்த கருத்துக்கள் பல காணப்படுகின்றன. அவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சைவ சமயக் கடவுளர்கள்

சைவ சமயத்தின் முழ்முதல் கடவுளாகச் சிவன் சுட்டப்படுகின்றார். சிவனின் மனைவியாகச் சுட்டப்படும்

பார்வதி தேவி, அவரின் புதல்வர்களாகச் சுட்டப்படும் விநாயகர், முருகன் போன்றோரும் சைவ சமயத்தைச் சார்ந்தோராகவே எண்ணப்படுவர். இவர்கள் போக பல சிறு தெய்வங்களும் சைவ சமயத்தில் வைத்து எண்ணப்படுவர். நூல் முழுவதும் எடுத்தோதுகின்றது. அது மட்டுமின்று,

> ''இசையும் தமிழரசு அன்று ஏத்தெடுப்பத் திக்கு
> விசையம் செலுத்திய மின்னு''

என்று எண் திசைகளிலும் பயணம் புரிந்து வெற்றி கொண்ட மீனாட்சியையும், சிவஞான ஏடுகளுள் ஒன்றைக் கையில் வைத்திருக்கும் கணபதியையும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் எதிரில் பாடல்பாடும் முருகன் என்று பிற சைவ சமயக் கடவுள்களும் போற்றப்பட்டுள்ளனர். மேலும் சைவ சமயத்தில் முழுமுதற் கடவுளான சிவனே, திருமால், பிரம்மாவை விட உயர்ந்தவர் என்பதைத்

> ''தேங்கமலத் தேசு தெரிசனம் செய்து அவர்க்கே
> பூங்கமலக் கண் கொடுத்த தத்தேளும் - ஓங்குஅயன்
> மையில் அடியில் வணங்காத் தலை ஒன்றைக்
> கையில் அளித்த கடவுளும்''

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது. மேலும் திருமால் மச்சவதாரம் எடுத்து வரும் முன்னரே மதுரை மாநகரில் மீன் கொடியோடு ஆண்டவர் என்று அனைவரையும் விட சிவனே சிறந்தவர். சைவ சமயமே சிறந்தது என்று நூலாசிரியர் விளக்குகின்றார்.

சைவ சமய நூல்களும் சான்றோர்களும்

தமிழ்விடு தூதில் சைவ சமயச் சான்றோர் பலரும் புகழப்பட்டுள்ளனர். நூலாசிரியர் மனம் எந்நேரமும் சைவ சமயத்தின் பால் பற்று கொண்டிருப்பதனால் அவர் போற்றுபவர் அனைவரும் சைவ சமயச் சான்றோர்களாகவே காணப்படுகின்றனர். மேலும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் பலரைப் போற்றிப் புகழ்கின்றார்.

''மண்ணும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்
அன்னை முலைப்பாலில் அறிந்தோரும்''

என்று சம்பந்தரையும்,

''தேடி முடியா அடியைத் தேடாரே நல்லூரில்
பாடி முடியால் படைத்தோரும்''

என்று அப்பரையும்,

''மூன்று விழியார் முன்முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லி இசைத்தோரும்''

என்று சுந்தரரையும் போற்றிப் புகழ்ந்துள்ளார். மேலும் சேரமான் பெருமாள் நாயனார், மாணிக்கவாசகர், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், கோட்புலி நாயனார், பூசலார் நாயனார், கண்ணப்பர், திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனார், சிறுத்தொண்ட நாயனார், புல்ல நாயனார் போன்ற சைவ சமயப் பெரியோர்கள் பற்றியும் அவர்கள் சிவபெருமான் மீது கொண்டுள்ள பக்தித் திறம் குறித்தும் பாடியுள்ளார். தேவாரம், திருவாசகம், திருக்கோவை, மும்மணிக் கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருவாமத்தூர் கலம்பகம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற பல சைவ சமய நூல்கள் பற்றிய குறிப்புகளும் தமிழ்விடு தூதில் காணப்படுகின்றன.

சிவனின் பெருமையும் தோற்றச் சிறப்பும்

சைவ சமயத்தின் முழு முதற் கடவுளான சிவனின் பெருமைகள் தமிழ் விடு தூது முழுவதும் விரவிக் கமானை காணப்படுகின்றன. இத்தகைய சிவபெருமானை வழிபடுவதால் மனிதன் அடையக் கூடிய நன்மை குறித்தும் சுட்டுகின்ற பொழுது,

''சீபாதம் எண்ணாத தீய வினைப்பாவி செய்த
மாபாதகம் தீர்த்த மாமருந்தை''

என்ற வரிகள் காணப்படுகின்றன. ஒரு மனிதன் பஞ்சமா

பாதகங்களைச் செய்த பொழுதிலும், மனம் திருந்தி சிவனின் பாதத்தைச் சரணடைந்து விட்டால் அப்பாவத்திலிருந்து சிவபெருமான் நம்மைக் காப்பாற்றி விடுவார் என்ற கருத்து இதன்வழி பெறப்படுகின்றது. சிவபெருமான் நம் பாரதத்தின் வடக்கு எல்லையாகிய கங்கைக்குத் தலைவனாகவும், தென் திசையில் உள்ள குமரிக்கு அரசனாகவும் விளங்குகின்றார். ஓரிறைவன் ஒரு கொள்கை எனும் கருத்தும் சுட்டப்பட்டுள்ளது. அவருடைய அழகான பெயராகிய சொக்கலிங்கம் என்பதற்கு விளக்கம் கூற வரும் தூது ஆசிரியர்.

''புக்கு வந்தார் தம்மேல் பொடிபோட்டு உளம்மயக்கில்
சொக்கலிங்கம் என்று எவரும் சொல்லாரோ''

என்று புதுமை விளக்கம் அளிக்கின்றார். சிவன் நம் அனைவர் மனத்தையும் கொள்ளையிட்டு சொக்கு பொடி போட்டு உள்ளத்தை மயக்கி சொக்கலிங்கம் எனும் பெயர் பெற்றுள்ளாராம். இத்தகைய அழகே வடிவான சிவனின் தோற்றப் பொலிவினைச் சுட்டுமிடத்து, தமிழ் விடு தூது ஆசிரியர் பாதாதி கேச வர்ணனை நயத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

''எந்தாய் என்று ஏத்தும் இடைக்காடன் பின்போன
செந்தாமரை போல் திருத்தாளும்''

என்று அவரது அழகிய திருவடிகளைப் போற்றி, அழகிய துடை, படைக் கருவிகளும், உடைவாளும் சேர்த்து அழகிய கச்ச உடுத்திய இடை, பிட்டை, அள்ளி உண்டு பசி நீக்கிய வயிறு, தாய்ப்பன்றியை இழந்த பன்றிக் குட்டிகளுக்குப் பால் ஊட்டிய மார்பு, பாண்டிய மன்னன் ஒருவனுக்காக மாணிக்கம் விற்ற கைகள், சோமசுந்தர பாண்டியனாக மதுரையை ஆட்சி புரிந்தபொழுது, வேப்பம்பூ சூடிய தோள்கள், கரிக்குருவி வாழ்வதற்காகக் காதில் உபதேசம் சொன்ன வாய், தமிழுக்கு இடனாகிய காதுகள், வணிகக் குலப் பெண்ணின் துயரத்திற்காகக் கண்ணீர் சிந்திய கண்கள், பெண்ணாகிய வந்தி தந்த பிட்டுக்காக மண் சுமந்த திருமுடி என்று அவரது அழகிய தோற்றத்தினைப் பாதாதி கேசமாக ஆசிரியர் அழகே உருவாய்

வர்ணித்துள்ளார்.

சிவனை வழிபடும் முறையும், பூசைமுறைகளும்

சிவபெருமானை மனம், மொழி, மெய்களால், ஐம்புலன்களை ஒடுக்கி, மனமுவந்து வழிபட வேண்டும். அவ்வாறு வழிபடுவோர்க்குத் தேவலோகத்தை ஆளும் பதவியையும், மோட்சத்தையும் மேலும் பலவற்றையும் அருள்வார் என்பது ஆன்றோர் தம் வாக்கு. அத்தகைய சிவபெருமானை வழிபடும் முறைகள் குறித்து தமிழ்விடு தூது ஆசிரியர் விரிவாகக் குறிப்பிட்டிருப்பார். அவரை வழிபடுவதற்கு,

''மோதும் சிவஆகமம் போல முக்திக்கு வித்தாக
ஓதுந் திருக்கோயிலுக்குள் புகுந்து''

என்று முதலில் திருக்கோயிலுக்குள் செல்ல வேண்டும் என்கின்றார். அங்கு வரிசையாக உள்ள அறைகளின் ஒழுங்கைக் கண்டு களிப்படைய வேண்டும் என்கின்றார். பின்னால் அவனது பாதம் முதல் திருவடி வரை அவரது அழகிய தோற்றத்தை மனத்தில் கொண்டு, களிப்பு மிகுந்து, அழுதழுது உள்ளம் உருகித் தொண்டு செய்து, அவரது திருவடிகளை மனத்தில் கொள்ள வேண்டும் என்கின்றார்.

மேலும் சிவபெருமானுக்கு நிகழும் பூசை குறித்து சுட்டுகின்ற பொழுது, தங்கத்தீபம், ரிசப தீபம், புருடாம்ருக தீபம் முதலிய தீபங்கள் கொண்டும், பூசைக்குரிய தட்டுகள் அசையா அட்சர ஆலத்தி ஒளியாக விளங்க, கற்பூத தீப ஆரத்தி காட்டப்படும். மேலும் கண்ணாடி, வெண் கொற்றக்குடை, வெண் சாமரம், விசிறிகள் முதலியவை கொண்டு பூசை செய்து,

''மூவர் கவியே முதலாம் கவிஐந்தும்
மூவாறாய் நின்றார்தம் முன்ஓதி''

என்று முதல் மூவர் தேவாரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருவாசகம் ஆகிய ஐந்து நூல்களின் பாடல்கள் ஒலிக்க அவருக்கான கோயில் வழிபாடு நிகழ்கின்றது. இவ்வாறு சிவபெருமானுக்குரிய வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன.

தொகுப்புரை

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான, மதுரை நகரில் வீற்றிருக்கும் சிவபெருமான் மீது ஆறாக் காதல் கொண்ட தலைவியொருத்தி, அவர்பால் தான் கொண்டுள்ள காதலைக் கூறி மாலை வாங்கி வர வேண்டி தமிழைத் தூதாக அனுப்புகின்றாள். இச்செய்தி அமையவே தமிழ்விடு தூது இலக்கியம் அமையப்பட்டுள்ளது. எனவே இந்நூல் முழுவதும் சைவ மணம் கமழத் திகழ்கின்றது. சைவ சமயக் கடவுள்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்நூல் முழுவதும் சிவனின் பெருமைகள் விரவிக் காணப்படுகின்றன. அது மட்டுமின்றி, சைவ சமயத்தையும், சிவனையும் புகழ்ந்து போற்றும் வண்ணம் எழுதப்பட்ட அடியார்களும் அவர்கள் எழுதியுள்ள நூல்களும் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய பெருமை வாய்ந்த சிவபெருமானை வழிபடும் முறையும், அவரது பூசை முறைகளும் சுட்டப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ் விடு என்னும் தூது நூலானது தமிழின் பெருமையைச் சுட்டுவதோடு, சைவ சமயத்தின் பெருமையையும், சிவனின் பெருமையினையும் பறை சாற்றுவதாய்த் திகழ்கின்றது.

34. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை



கி.துரை
முனைவர்பட்ட ஆய்வாளர்
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி)
சென்னை

முன்னுரை

சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருவிடை மருது என்னும் திருப்பதியை அகவற்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறையென முறையாகத் தொகுத்து முப்பது திருப்பாடற்களால் போற்றிப் பரவிய பனுவல் ஆதலின் இது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை எனப் பெயர் விளங்குகிறது. இம்மும்மணிக்கோவையில் இடம்பெற்றுள்ள சிவபெருமானின் திருவுருவத்தினையும் அருட்செயல்களைப் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அர்த்தநாகரீசுரரின் இயல்பு

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் முதற்பாடலில் உமையொருபாகராக விளங்கக்கூடிய (சிவபெருமானின்) அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை சுவைபட அழகாக விரித்துரைக்கிறார் பட்டினத்தடிகளார். இறைவனுடைய திருவடியும் இறைவியினுடைய திருவடியின் பெருமையையும் விளக்கிக் கூறுகிறார். இறைவனுடைய வலத்திருவடி தெய்வத் தன்மையுள்ள தாமரை மலரின் பேரழகினைப் போன்று மலர்ந்திருக்கிறது என்றும் இறைவியினுடைய இடப்பக்கத்தில் உள்ள திருவடி வாடாத குற்றமற்ற கற்பகத்தின் புதுமலர் இதழ்போல் சிவந்திருக்கின்றது என்றும் சுவைபட விளக்கியுள்ளார். வலப்பக்கத்தில் உள்ள இறைவனது திருவடி வலம்புரிச் சங்கை கையிலே ஏந்திய திருமால் பன்றி உருவெடுத்து மண்ணினைத் தோண்டியும் காணாராயினர். இடத்திருவடி கூற்றுவனை மார்க்கண்டேயனுக்காக அருளுடன் கடிந்து நிற்கும். இத்தகைய அருமையுடையவராக இருந்தாலும் அடியார்கள் அன்போடு கூடி பசுமையான இலைகளைக் கொண்டு

வழிபட்டாலும் , அவர்களுக்கு வீடுபேற்றினைக் கொடுத்து முன்னின்று அவை அருள்புரியும் என்று சிவனின் பெருமையை விளக்குகிறார். அப்பாடல்,

''தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்பும் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றாது
வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு
ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பக்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின்று அருளித்
திகழ்ந்துள்ளது ஒருபால்'' (திருவிடை மரு.மும்.1:1-9)

இப்பாடலடிகளின் மூலம் அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை அழகுற விரித்துரைக்கும் பாங்கு படிக்குந்தோறும் இன்பந்தருவதாக அமைந்துள்ளது.

அம்மையின் திருவடி இயல்பு

உமையம்மையாகிய இறைவியின் திருவடிச் சிறப்பினையும் இயல்பினையும் அடுத்த வரிகளில் விரித்துரைக்கிறார். இறைவியின் திருவடியானது அகத்தே சிவந்திருக்கிறது. குற்றமில்லாத கற்பகத் தருவின் தளிர்போல மென்மையுடையது. அத்தளிர்கூட நெய்யில் தோய்த்தாற் போன்ற மெருகு படைத்தது. தேவமகளிர் வணங்கித் தீண்டுதலால் சிவந்து பஞ்சும் அணிச்சமலரும் இடப்பக்க திருவடியிடம் தோற்கிறது என்று கற்பனைக் கலந்து பாடியுள்ள திறத்தை எண்ணி வியப்படையலாம். அப்பாடல் வரிகள்,

''அகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித்தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அணிச்சமும் எஞ்ச எஞ்சாத்

திருவையாடும் பொலிவும் ஒருபால் திருவடி''
(திருவிடைமரு.மும்.1:9-16)

இப்பாடலடிகளின் மூலம் அம்மையின் திருவடி இயல்பினைச் சுவைபட போற்றியுள்ளத் திறத்தினை நம்மால் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

சிவனின் உருவம்

திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் சிவனின் உருவத்தினைப் பல்வேறு வகைகளில் பட்டினத்தார் கூறியுள்ள விதத்தினை எண்ணியெண்ணி மகிழ்வெய்தலாம். இறைவனின் வலப்பக்கத்தில் இடையில் புலித்தோல் ஆடையும் பாம்பாகிய கச்சையும் அணிந்துள்ளார் என்றும் இறைவியது இடப்பாகத்தில் மேனியில் அவர் அணிந்துள்ள சிவந்த ஆடையும், ஒலி செய்கின்ற மணிமேகலையை இடையிலும் அணிந்துள்ளார் என்றும் இறைவரது திருமேனியில் வலப்பக்கம் பாம்பையும் ஆமை ஓட்டையும் பன்றியின் தந்தத்தினையும் சங்கு மணிகளையும் முப்புரி நூலையும் வெண்ணீற்றினையும் அணிந்து விளங்கும் பவளமலை போல ஒளியுடன் திகழும் என்றும் சிறப்புடன் விளங்குகின்ற திருவுருவ மேனியைச் சுவைபட விளக்கியுள்ளார். மேலும் இறைவியது திருமேனியில் இடப்பக்கத்தில் கச்சினையும் முத்துமாலையினையும் பூண்டு, சந்தனச் சாந்தையும் அப்பிக் குங்குமக் குழம்பினால் கோல் எழுதப்பெற்று ஏழுலகங்களையும் ஈன்றும் நிலைதளரா முலையுடன் பொலிவு பெற்று விளங்குகின்றது என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். இறைவனுடைய வலப்பக்கத்தில் கூரிய வாயினையுடைய பாம்புகளை ஆங்காங்கே அணிந்து முத்தலைச் சூலமும், மழுவும், உடுக்கையும் தேவர்கள் தரத்தாங்கிச் சிறப்பாகத் திகழ்கிறது. வலப்பக்கம் உன்று கற்பனைத் திறத்துடன் பாடியுள்ள விதம் போற்றுதற்குரியதாக விளங்குகிறது.

இறைவனுடைய வலக்கண் சூரியனும் அக்கினியும் கலந்த வெப்பத்துடன் விளங்குகிறது என்றும் இறைவியது இடக்கண் பெண்மானின் கண்களைப் போலும்

பொலிவினையுடையதாய்ப் பாலிலே கிடந்த இந்திர நீலத்தையொத்தும் நீரில் உள்ள கருங்குவளை மலரினையொத்தும் குளிர்ந்த நிறம் பொருந்தி எம்மை போன்ற அடியார்கட்குப் பிறவி நோய்க்கிரங்கி ஏழு உலகத்தில் உள்ள உயிர்களையும் பாதுகாக்கும் என்று கூறுவது அடியார்களுக்கு எந்தளவிற்குக் கருணையைக் காட்டியுள்ளார் என்பதை வெள்ளிடைமலையாக விளக்கியுள்ளார். இறைவனது திருமுடி நொச்சிப் பூவையும் ஊமத்தை மலரரையும் கொன்றை மலரையும் தும்பைப்பூவையும் கங்கையாற்றையும் பசிய கண்களையுடைய தலைமாலையையும் பாம்பையும் இளம்பிறையையும் கலந்து தொடுத்துள்ள எலும்பு மாலையையும் சூடி, பெருமையுள்ள தீயில் திரித்தது போன்ற ஒளியுடன் கூடிய சடையோடு நான்கு முகங்களை மறைத்த பால்நிற அன்னமாகிய நான்முகனும் காணாதபடி கருத்தையும் கடந்து அருகே இருப்பது வலப்பக்கம் என்றும் உமையொருபாகனாகிய சிவபெருமானின் உருவத்தை விளக்கும் அப்பாடல்,

> ''நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
> தோலின் கலிங்கம் மேல்விரித்து அசைத்து
> நச்செயிற்று அரவக் கச்சையாப் புறுத்துப்
> பொலிந்துளது ஒருபால் திருவிடை இலங்கொளி
> அரத்த ஆடை விரித்து மீதுறீஇ
> இரங்கு மணிமேகலை ஒருங்குடன் சாத்திய
> மருங்கிற் றாகும் ஒருபால் திரவிடை
> செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்
> கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்''
>
> (திருவிடமரு.மும்.1:17-25)

இப்பாடல் வரிகளில் சிவனின் உருவத்தை நம் கண் முன்னால் படம் பிடித்துக் காட்டியுள்ள விதத்தை எண்ணியெண்ணி மகிழ்வெய்தலாம்.

அறவிலாரின் செல்வம்

பட்டினத்தார் அறிவில்லாத கயவர்களிடம் கிடைத்த செல்வச் சிறப்பின் இழிதகவினை எள்ளி நகையாடுகிறார். யாம்

இப்பொழுது மிகுந்த செல்வ வாழ்க்கை வாழ்கிறோம் என்னும் ஆணவத்தினால் செருக்கினால் வறுமையில் வாடும் தாழ்ந்த நிலையுடையோர்க்கு ஒரு சிறிதும் உதவாமல் தன் உயிர்மேல் வைத்திருக்கும் பற்றினால் தனக்கு வரும் துன்பங்களுக்கு மனம் மிக உருகி கருகி உடைந்தும், பிற உயிர்களிடத்தில் அன்பில்லாமல் அவற்றுக்கு வரும் துன்பங்களுக்கு மனங்கசிந்து இரங்காமலும் உணவு உண்ணுதற் பொருட்டு, கண்ட பொருள்களில் எல்லாம் விருப்பம் கொண்டு சோற்றைச் சமைக்கும் மடையரிடம் பல்சுவையுடைய உணவுகளை எல்லாம் உடையவராய் ஒரு காலத்தும் நிரம்ப முடியாத வயிற்றுக் குழியை ஒருவாறு நிரம்ப செய்தும், மேம்பாடும் நற்குலமும் நல்லொழுக்கமும் கல்வி கேள்விகளிலும் தன்னைவிட மேம்பட்டு விளங்கும் சான்றோர்களைப் பார்த்துக் கூப்பிட்டுத் தன்னெதிரே நின்று தான் சொல்லும் குற்றேவல்களைக் கேட்டுச் செய்து திரியும் அறிவில்லாத ஏவலாயர்களின் கூட்டத்தைப் போலக் கருதி பொருந்தாத பேச்சுக்களைப் பேசி மகிழ்ந்தும், பொய்ம் மொழிகளையும் இழிந்த சொற்களையும் தன்னைப் போலும் புல்லிய அறிவினையுடையார்களிடம் சொல்லிக் களிப்புற்றும் வாழ்பவர் மெய்யுணர்வும், மானமும். கல்வியறிவு ஒழுக்கங்களால் உண்டாகும் மேன்மைகளும் நீங்கப்பெறுவர் என்று அறிவிலாரின் செல்வச் சிறப்பின் இழிதகவினை விளக்கியுள்ள விதம் போற்றுதற்குரியது. இவ்வியப்புமிகு பாடல்.

''வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க்கு உதவாது
தன்னுயிர்க்கு இரங்கி மன்னுயிர்க்கு இரங்காது
உண்டிப் பொருட்டால் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவை பகர்ந்து ஏவி
ஆரா உண்டி அயின்றனராகி''

(திருவிடைமரு.மும்.7:-5)

இப்பாடலில் உள்ள கருத்தை எண்ணும்போது கருமியின் நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இதே கருத்தை வலியுறுத்தும் விதமாக நம் முன்னோர்களும் கூறியுள்ளதை நினைவு கூறமுடிகிறது. ''எட்டி பழுத்தாலென்ன ஈயாதவன் வாழ்ந்தாலென்ன'' என்னும் முதுமொழியையும்,

''செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே''

என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளும் ஒப்பு நோக்குதல் சிறப்புடையதாக அமையும்.

மெய்யடியார் வாழ்க்கைத் திறம்

சிவனின் திருவடிகளையே பற்றுக்கோடாகக் கொண்டு இயம பயம் நீங்கி மக்களும் மனைவியும் உறவினர்களும் பொருட்செல்வமும் உறுதிப்பொருள் என எண்ணாமல் உம்முடையே திருவடிகளையே, திருவருளையே நினைத்து இந்திர போகமாகிய செல்வமும் எண்வகைச் சித்திகளும் கிடைக்குந்தோறும் வெறுத்து ஒதுக்கி கிழிந்த கந்தை துணியும் கோவணமும் அணிந்து பழுதடைந்த ஓடு ஒன்று கைக்கொண்டு பிச்சைப்போடுவோர் உண்டாயின் நின்றபடியே உண்டு தரையாகிய படுக்கையிலே படுத்திருந்து நீங்காத தகுதியென்னும் மங்கையைத் தழுவித்தான் பெற்ற குழவியிடத்தில் காட்டும் அன்பைப் போன்று பல்வகைப்பட்ட உயிர்களையெல்லாம் ஒருசேர நெஞ்சுடனே நோக்கி உதவும் உம்முடைய பேரருள் செல்வத்தைப் பெற்று வாழும் தெய்வத்தன்மை பொருந்திய மெய்யடியார்களின் வாழ்க்கை காணப்படும் என்று விளக்கியுள்ளார். அப்பாடல்,

''தன்னையும் ஒருவராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்;கையும் நனை மலர்ந்து
வந்துழி வந்துழி மறுத்தனர்'' (திருவிடைமரு.மும்.7:32-47)

முடிவுரை

திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் சிவனின் இயல்பினையும், உமையொருபாகராக விளங்கி, ஒவ்வொரு கூறின் சிறப்பையும் ஈயாதவருடைய செல்வத்தின் இழிதகவு நிலையினையும் அப்பெருமானின் திருவடிகளை நினைத்து வாழும் மெய்யடியார்களின் வாழ்க்கைத் திறத்தையும் இந்நூலின் வழி பட்டினத்தார் தெளிவுபடுத்தியுள்ளதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

35. குயிற்பத்து – ஓர் ஒப்பாய்வு (மாணிக்கவாசகர், ஆண்டாள்)

முனைவர் **பா.நாகசோதி**
முதுகலை தமிழ்த்துறைத் தலைவர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

முன்னுரை

ஓதல் பகையே தூதிவைப் பிரிவே என்கிறது தொல்காப்பியம். இந்நூற்பா அகத்திணை இயலில் பிரிவுப் பொருள் குறித்துப் பேசும் பொழுது கூறப்பட்டதாகும். பிரிவுத்துயரில் தலைவி தலைவினிடத்திலும் தலைவன் தலைவியிடத்தும் தூதுவிடும் வழக்கு தொன்மையானதாகும். சங்க இலக்கியங்களில் தலைவி நாரையைத் தூதுவிடுதலைக் காணமுடிகிறது. சிற்றிலக்கியங்களில் தூது என்ற இலக்கிய வகை செழித்து வளர்ந்தது. சிற்றிலக்கியம் என்ற மரம் செழித்து வளர்ந்ததில் பக்தி இலக்கியங்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இச்சிற்றிலக்கிய மரம் செம்மையுற வளர்ந்ததில் முக்கியப் பங்கு வகித்தனர் எனலாம். அவ்வகையில் திருவாசகத்தில் குயில்பத்து என்ற பகுதியும் நாச்சியார் திருமொழியில் குயில்பத்து என்ற பகுதியும் தலைவனிடத்தில் தலைவி குயிலைத் தூது விடுவதாக அமைந்துள்ளன. இவ்விரண்டு பகுதிகளையும் ஒப்பிட்டறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

காமமிக்க கழிபடர் கிளவி

பிரிவுத்துன்பம் ஏற்படும் பொழுது ஆற்றாமையின் காரணமாகக் காதில் உணர்வு அதிகப்பட்ட தலைவி அல்லது தலைவன் உயர்திணைப் பொருள்களிடம் மட்டுமல்லாமல் அஃறிணைப் பொருள்களிடமும் தூது சென்று வருமாறு வேண்டுதல் இயல்பாகும். இதனைத் தொல்காப்பியம் காமம்மிக்க கழிபடர் கிளவி என்கிறது.

"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்"

என வரும் நூற்பா காமமிக்க கழிபடர்கிளவியை விளக்குகிறது. இதற்கு உரைகூறும் இளம்பூரணர். சொல்லாத மரபினையுடையவற்றோடு கெழுமி அவைச் செய்யாத மரபை ஆண்டுப்படுத்தியவற்றையும் நெஞ்சினைப்போல அடக்கியும் என்றவாறு சொல்லா மரபின் ஆவன பபுள்ளும், மாவும், மரனும் கடலும், கானலும் முதலாயின (தொல்.பொரு.இளம்327) காமமிக்க கழிபடர்கிளவியினால் ஏது பயன் என யோசித்தால் மன ஆறுதல் என்ற பதில் மட்டுமே கிடைக்கும். இறையனார் களவியலுரை இதனைத் தலைமகன் கேளாவருமேயெனின் இங்ஙனம் வந்தொழுக இவன் ஆற்றாமை என்று என்கிறது. காமமிக்க கழிபடர்கிளவியால் ஏற்படும் பயன்களை இவ்வுரை எடுத்துரைக்கிறது. தலைவனுக்குக் குயிலினைத் தூதுவிடும் தலைவி இத்தூதின் மூலம் மன ஆறுதல் பெறுகிறாள் என்பதே உண்மையாகும். அவ்வகையில் மன ஆறுதல் பெறுவதற்காக இறைவனைத் தலைவன் நிலையிலும் தன்னைத் தலைவி நிலையிலும் வைத்துக் கொண்ட மாணிக்கவாசகரும், ஆண்டாளும் என்ன பயன் பெறுகிறார்கள் என்பதைக் குயில்பத்து பாடல்கள் மூலம் காணலாம்.

தோற்ற வருணனை

தூது இலக்கியங்களில் தூது யாருக்காக விடப்படுகிறதோ அவர்களின் தோற்றத்தினை வருணிப்பது இயல்பாக உள்ளது. மாணிக்கவாசகர் சிவபெருமானின் பாதங்களைப் பாதாளம் ஏழினையும் கடந்தவை என்கிறார். இறைவனின் திருஉருவம் இந்த உலகம் விளங்கவந்தது எனவும், இருளைப்போக்கும் ஞாயிறு எனவும், செந்தாமரை மலரைப் போன்ற உருவம் எனவும் கூறுகிறார். இதற்கெல்லாம் மேலாக ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருந்தன் உருவாய் என்று இறைவன் அனைத்து உருவமானவன் என்பதையும் மாணிக்கவாசகப் பெருமான் கூறுகிறார். இறைவனின் பாதங்களைச் சிந்தூர்ச்சேவடி, அழகிய சேவடி என்று போற்றியுள்ளார். சிவனுடைய மேனி பொன்மேனி

என்றுள்ளார். மெய்ப்பொருளாகிய இறைவன் வானிற்கும் பூமிக்குமாகிச் சுடராய் விரிந்து நின்றவன் என்றும் கூறியுள்ளார்.

''ஒண்தழல் விண்பிளந் தோங்கு
மேவி அண்டங் கடந்து விரிசுடராய் நின்ற மெய்யன்''

மேலும் இறைவன்,

''ஆதி குணமொன்று இல்லா அந்தமிலான்''

என்று அவனுடைய குணநலன்களையும் ஆதியும் அந்தமுமில்லாதவனென்றும் போற்றியுள்ளார். ஆண்டாள் திருமாலினை மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன் என்றும் வெள்ளை விளிசங்கு இடங்கையிற் கொண்ட விமலன் என்றும், கருமாணிக்கம், கருடக் கொடியுடைப் புண்ணியன், பொன்னடி, சாரங்கம் வளையவலிக்கும் தடக்கைச் சதுரனங, பைங்கிளி வண்ணன், சிரீதரன், சங்கொடு சக்கரத்தான் என்றும் அவருடைய தோற்ற அழகினைப் புகழ்ந்துள்ளார்.

மாணிக்கவாசகர் குயில் தூதின் மூலம் சிவபெருமான் சிவந்த மேனியை உடையவர். அழகிய சேவடிகளை உடையவர் என்றும் முதலும் முடிவும் இல்லாதவர் என்றும் கூறியுள்ளார். அதுபோல ஆண்டாள் திருமாலின் பச்சை வண்ணத்தைப் பாடியுள்ளார். சங்கும், சக்கரமும் திருக்கையில் உடையவர் என்று திருமாலின் தோற்றத்தை வருணித்துள்ளார்.

காதலால் நலனழிதல்

தலைவன் தலைவி காதல் கொண்டபின் ஏற்படும் பிரிவு இருவருக்கும் மிகத் துன்பத்தைத் தருவதாக அமைகிறது.

''உடம்பும் உயிரும் வாடியக் காலும்
என் உற்றன சொல் இவை எனின் அல்லது
கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை''
(தொல்.பொரு.1149)

என்கிறது தொல்காப்பியம். இதன் பொருள், தலைவியது உடலும் உயிரும் மெலியுற்ற போதும், இவ்வுறுப்புகளுக்கு என்ன நேர்ந்தது? மெலிந்துவிட்டன எனக் கூறுவதல்லது. தலைவனைச்

சென்று சேர்தல் தலைவிக்கு இல்லை என்பதாகும்.

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக்கா அங்கு
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
பசலை உணி இயர் வேண்டும்
திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறு.27, வெள்ளி வீதி)

என்று பசலை பாய்தலைக் குறுந்தொகைத் தலைவி குறிப்பிடுகிறாள்.

''பருவரலும் பைதலும் காணான் கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்'' (திரு.1197)

என்கிறது திருக்குறள். இச்சான்றுகளிலிருந்து பிரிவுத்துயரம் என்பது அத்துயரால் உறுப்பு நலன் அழிதல், பசலை பாய்தல், தூதுவிடல் போன்றவைத் தலைவிக்குரியவையாக அமைந்துள்ளதைப் பெறமுடிகிறது. மாணிக்கவாசகரின் குயில்பத்தில் உறுப்பு நலனழிதல் பற்றிய குறிப்புகள் எதுவும் இடம் பெறவில்லை. ஆண்டாள் இதனை மிகுதியாகப் பாடியுள்ளார்.

ஆட் கொள்ளுதல்

''ஊன்பழித்துள்ளம் புகுந்தென் உணர்வது ஆய ஒருத்தன்''

என்ற மாணிக்கவாசகரின் வரிகள் அவருடைய பேரின்பப்பற்றை விளக்கி நிற்கின்றன. இவ்வுலக வாழ்க்கையை விடுத்து இறைவனோடு இறைமை உணர்வோடு இரண்டறக் கலப்பது மாணிக்கவாசகரின் தூதின் நோக்கமாகும். இறைவன் தனக்கு உபதேசம் அளித்து உருக்காட்டிய பொழுதே இவ்வுலக பந்தம் அறுபட்டு விட்டது என்பதை மாணிக்கவாசகர் வெளிப்படுத்துகிறார்.

''பாரிடைப் பாசங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை ஆண்ட'' (கு.9)

மேலும் இவ்வுலகப்பற்றை அறுத்து தன்னை வீடுபேறு பெறச் செய்ய வேண்டும் என்ற மாணிக்கவாசகர் இறைவனிடம் வேண்டுகிறார். அந்தண முதியவராக வந்து சுந்தரரை எவ்வாறு ஆட்கொண்டாரோ அதுபோல தன்னையும் ஆட்கொள்ளுங்கள் என்று இறைவனிடம் வேண்டி நிற்கிறார்.

''அந்தணனாகி வந்திங்கே அழகியசேவடி காட்டி
எந்தமராயிவன் என்றிங்கு என்னையும்
ஆட்கொண்டருளும்'' *(10)*

மாணிக்கவாசகரின் இறைபக்தி பேரின்பத்தைத் தேடி நிற்கும் பக்தி. ஆண்டாள் பெரியாழ்வாரால் துளசிச்செடியருகே கண்டெடுக்கப்பட்ட குழந்தை பெரியாழ்வாரின் நிழலின் கீழ் வாழ்ந்ததால் ஆண்டாளுக்கு திருமால் மீது பக்தி ஏற்படுதல் இயல்பு. சிறு பெண்ணாக இருந்தபொழுது இறைவனிடம் அவளுக்கு ஏற்பட்ட பக்தி நாள் செல்லச் செல்ல காதலாக உருமாற்றம் அடைந்தது. எனவே குயில் பத்தில் இறைவனைத் தனக்காக அழைத்து வரும்படி குயிலிடம் வேண்டுகிறாள்.

''விமலன் எனக்கு உருக்காட்டான்'' *(43)*

என்று ஆண்டாள் இறைவனின் உருவத்தைக் காணத்துடிக்கிறாள்.

''தலைவன் உருவெங்கும் காணேன்'' *(44)*

இறைவன் தனக்கு உரியவனாக வேண்டும் என்பது மட்டுமல்லாமல் தன்னுடைய உருவத்தைக் காட்ட வேண்டும் என்பது குயில்பத்தில் ஆண்டாளின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

நாயகன் நாயகி பாவம்

இறைவனை அடையும் நெறிமுறைகளுள் ஒன்றாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஏற்றுக்கொண்ட ஓர் இலக்கிய உத்தி நாயகன் நாயகி பாவமாகும். இதன் அடிப்படை இறைவன் மீது கொண்ட அன்பாகும். இந்த அன்பு காதலாக மாற இக்காதலை அடிப்படையாகக் கொண்டு நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும்

இறைவனைக் காதலனாகவும் தம்மைக் காதலியாகவும் பாவித்துக் கொண்டு பாடல்கள் புனைந்தனர். அவ்வகையில் மாணிக்கவாசகர், ஆண்டாள் இருவரின் பாடல்களிலும் நாயகன் நாயகி பாவம் வெளிப்படுகிறது.

''ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவும் தன் உருவாய்''

என்று மாணிக்கவாசகர் எல்லா உருவிலும் தன் தலைவன் உருவினைக் காணவிழைகிறார்.

''காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா''

என்ற பாரதியின் வரிகள் இங்கு குறிப்பிடத்தகுந்தது. மேலும் தன்னை ஆட்கொள்ளத் தன் தலைவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் நிலையில் மாணிக்கவாசகர்,

''எந்தமராமிவன் என்றிங்கு என்னையும் ஆட்கொண்டருளும்''

என்கிறார். ஆண்டாள் இங்கு தன் உணர்வுகளையே பாடுகிறார். இவ்வுலகில் பிறந்து இன்பதுன்பங்களில் உழன்று சுழலும் சாதாரணப் பெண்ணாகத் தன் தலைவனைக் காதலனை எதிர்பார்த்திருக்கிறாள்.

''பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்
புணர்வதோர் ஆசையினால் என்
கொங்கை கிளர்ந்து இமைத்துக் குதூகலித்து
ஆவியை ஆகுலம் செய்யும்''

தன் காதலனோடு உடற்புணர்ச்சிக்கு ஏங்குகின்ற ஒரு அறியாப் பெண்ணாக ஆண்டாள் இங்கு காட்சி அளிக்கிறாள்.

''துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறாது உழல்கின்றேன்''

என்று ஒடுக்கப்பட்ட குரலின் சாட்சியாகத் தடைகளைத் தாண்டி ஒலிக்கும் பறையொலியாக ஆண்டாளின் குரல் முழங்குகிறது.

காதலை வெளிப்படையாகச் சொல்லும் பழக்கம் பெண்களுக்கிருப்பதை இச்சமூகம் எதிர்க்கிறது.

> ''கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
> பெண்ணின் பெருந்தக்கது இல்''

என்கிறது வள்ளுவம். இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் கருதிப் பாடுவதில் ஆண்களே தங்களை நாயகியாகப் பாவித்துக் கொள்வதால் காதலை வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு எவ்விதத் தயக்கமுமில்லை. ஆனால் மாணிக்கவாசகர் இவ்வுலகக் காதலுக்காக, சிற்றின்பத்திற்காக இறைவனுக்குத் தூது விடவில்லை என்பது அவருடைய பாடல்கள் மூலம் புலப்படுத்தப்படுகிறது.

முடிவுரை

மாணிக்கவாசகர், ஆண்டாள் இருவரின் தூதுப்பொருளும் குயிலாக உள்ளழது. இருவரும் இறைவனின் தோற்றத்தை வருணித்துள்ளனர். இருவரின் பாடல்களிலும் புராணச் செய்திகள் உள்ளன. மாணிக்கவாசகருடைய பாடல்களில் காதலினால் உடல் அழகு குறைவது பற்றிய குறிப்புகள் இல்லை. ஆண்டாளின் பாடல்களில் இக்குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன. நாயகன் நாயகி பாவத்தில் மாணிக்கவாசகர் பக்திநெறியில் உயர்ந்த நிலையை எண்ணி இறைவனை வேண்டுகிறார். ஆண்டாள் இவ்வுலக இன்பம் அடைய எண்ணி இறைவனைப் பாடுகிறார். இது பக்தி நிலையின் முதல்படி எனலாம். மாணிக்கவாசகர் பாடல்களில் குயில்தூதுப் பொருளாக உள்ளதே தவிர வேறு எந்தப் பரிசும் பொருளும் தருவேன் என்று சொல்வதாக அமையவில்லை. ஆண்டாள் குயிலுடன் தோழமை பேசுகிறாள். மிரட்டுகிறாள். தோப்பை விட்டு விரட்டுகிறாள். மாணிக்கவாசகர் உணர்வோடு கலந்து வீடுபேறு அடைய இறைவனை வேண்டுகிறோம். ஆண்டாள் உடலோடு கலந்து உன்னத நிலைமை அடைய இறைவனை வேண்டுகிறாள்.

36. சைவசமயம் சார்ந்த சதக நூல்கள்

முனைவர் க.மலர்விழி
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
சிறி வாசவி கல்லூரி
ஈரோடு

முன்னுரை

சதகம் என்ற சொல் வடமொழிச் சொல் என்பர். நூறு எண் கொண்டதைச் சதகம் என்று வழங்குதலால் நூறு பாடல்கள் கொண்டு அமையும் இலக்கியத்தையும் சதகம் என்ற வடமொழிப் பெயராலேயே அழைத்தனர். சதகம் என்ற சொல்லோடு கூடிய தலைப்பில் எழுந்த முதல் இலக்கியப்பகுதி மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தின் திருச்சதகம் எனலாம்.

சதகம் என்ற பெயரில் தனியொரு சிற்றிலக்கியம் முழுமையாக வளர்ச்சி பெற்றது. கி.பி. பதினோறாம் நூற்றாண்டாகும். ஏனெனில் முதல் சதக நூலான கார்மண்டல சதகத்தை இயற்றிய ஆசிரியர் அவிநாசி அறைகிழார் என்னும் புலவர் வாழ்ந்த காலம் கி.பி. 1025-1070 ஆகும் என்பர். சதக இலக்கிய வரிசையில் எழுந்துள்ள நூல்கள் அனைத்தையும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1.வரலாற்றினை உரைக்கும் நூல்கள், 2.இறைவனைத் துதிப்பதாக அமைந்த நூல்கள், 3.நீதிநெறியுரைக்கும் நூல்கள். சதகநூல்கள் பல சமயச்சார்பு பற்றி எழுந்தனவாகும். சைவசமயம், வைணவ சமயம், இசுலாமிய சமயம், கிறித்துவ சமயம் போன்ற சமயங்களின் அடிப்படையில் பல சதகநூல்கள் எழுந்துள்ளன.

சைவசமயச் சதக நூல்கள்

சைவசயமம் சார்ந்த சதகநூல்கள் ஏறக்குறைய முப்பது எனலாம். அண்ணாமலையார் சதகம், அருணாசலசதகம், தண்டலையார் சதகம், அறப்பளீசுர சதகம், குமரேசசதகம், செயங்கொண்டார் சதகம், சிங்காரவேலார் சதகம், சிவசங்கர சதகம், சிவகாமியம்மை சதகம், திருச்செந்தில் விநாயக சதகம்,

திருப்போரூர் சதகம் போன்ற முப்பது சதக்ள் சைவசமயம் சார்ந்து எழுந்துள்ளன.

தண்டலையார் சதகம்

தண்டலை நீள்நெறி என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள நீள்நெறிநாதர் மீது நூறு செய்யுட்களால் பாடப்பட்டது. இந்நூலுக்குப் பழமொழி விளக்கம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இச்சதகம் ஈற்றடியில் மகுடம் பெறாது உலகில் வழங்கும் பழமொழியுடன் தொடர்புபடுத்திப் பாடப்பட்டுள்ளது. சதக இலக்கியத்தில் பழமொழி அமைத்துப் பாடப்பட்டுள்ளமுதல் சதகம் இதுவேயாகும். இந்நூலை இயற்றியவர் படிக்காசுப்புலவர்.

உலகியல் நீதியும், கடவுள்வழிபாடும், செய்யுள் தோறும் அமைத்து ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தையும், பக்தியையும் ஊட்டும் நூலாக அமைந்துள்ள இந்நூலில் திருக்குறள் கருத்துக்கள் பல இடங்களில் வெளிப்படுகின்றன. வான் சிறப்பில் வள்ளுவரின் கருத்தை ஆசிரியர் மனத்தில் கொண்டு தம்பாடலில் பாடியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

''ஊன் செய்த உயிர்வளரத் தவம்தானம்
நடந்தேற உதவியாக
வான் செய்த நன்றிக்கு வையகம் என்
செய்யும்? அதை மறந்திடாதே''

கற்புடைய மங்கையர் மாண்பு பற்றி கூறவந்த ஆசிரியர். பண்டு கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா என்றொருத்தி கூறினாளே என்று இந்நிகழ்ச்சியை இணைத்து வள்ளுவர் மனைவியாகிய வாசுகியின் கற்பைப் பாராட்டுகின்றார்.

அறிவுப் புதல்வர்களைப் பெறுதல் , விருந்தோம்பல், மானம், நன்றி, பொறுமையின் பெருமை, வீரம், கல்வி, அடியார்களின் சிறப்பு போன்றவற்றைத் தக்க இலக்கியச்சான்றுகளுடன் பொருத்திக் காட்டியுள்ளார். மேலும் பல பழமொழிகள் இந்நூலில் விரவிக் கிடக்கின்றன. குறிப்பாகச் சொன்னால், குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்தால்போல

என்ற பழமொழி திருமந்திரத்திலும் இடம்பெற்ற பாடல் வரியாகும்.

அறப்பளீசுர சதகம்

அறப்பள்ளி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள அறப்பளீசுரன் மீது பாடப்பெற்ற நூல். இந்நூலில் உள்ள ஒவ்வொரு செய்யுளும், ''சதுரகிரிவளர் அறப்பளீசுர தேவனே'' என்னும் மகுடம் பெற்று விளங்குகின்றது. இந்நூலை இயற்றியவர் அம்பலவாணக்கவிராயர். இவர் அருணாசலக் கவிராயரின் மகன் ஆவார்.

நீதிகூறும் சதக நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது. இந்நூல், நன்மாணாக்கர் இயல்புகள் இன்னவை என்று நன்னூலாசிரியர் பவணந்தியார் தம் பாயிரத்தில் கூறியுள்ளார். அதைப்போல இந்நூலாசிரியரும் நன்மாணாக்கரின் இயல்பு பற்றி எடுத்துரைத்துள்ளார்.

கொடுமையே செய்தாலும் இகழ்ந்தாலும் மனம் கோணாது
மாதாபிதா நீயே என்று பணிவிடை செய்து
பொருளுடலாவி நின்னதே எனப் போற்றப்
பரவுதல் நன்மாணாக்கர் கடன் என்கின்றார்

கவிராயர் பல கருத்துக்களை ஒரே பாடலில் பொதிந்துரைக்கும் புலமை உளம் பெற்றவர். இதனை,

கோவில் இல்லாதவூர் நாசியில் லாமுகம்
கொழுநன் இல்லாத மடவர்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சரம் இலாத சேனை
காவல் இல்லாதபயிர் பாலர்இல் லாதமனை
கதிர்மயி லாத வானம்
கவிஞர் இலாத தனம் நியமம்இல்லாத செபம்
இசைல வணம் இல்லா வூண்
இசையிலாத பெண் போக நலம்...

ஆகிய இவற்றால் பலன் ஏதும் இல்லை என்கிறார். வள்ளுவர்

கருத்துக்களைத் தம் காலத்து வாழ்ந்த பெருமக்களுக்கு உணர்த்த வேண்டும் எனக் கவிராயர் பல இடங்களில் குறள் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். பிறவிகள் ஏழு என்று சொல்லப்படுகின்றன. வானவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன அவை. இவற்றுள் மக்கட்பிறவியே இவ்வுலகத்து உயர்பிறப்பு என்பதை தம்பாடலில் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.

குமரேச சதகம்

சோழவள நாட்டில் புதுக்கோட்டை அடுத்துள்ள திருப்புல்வயல் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள குமரக்கடவுள் மீது பாடப்பட்ட நூல். இந்நூலில் காணப்படும் செய்யுட்களின் இறுதிதோறும்

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே

என்ற மகுடம் காணப்படுகிறது. இந்நூல் ஆசிரியர் குருபாததாசர், மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குப் பயன்படத்தக்க அறவுரைகள் இந்நூலில் உள்ளன. இந்நூலாசிரியர் சிறந்த மருத்துவரைப் போல உடலை நலமாக வைத்திருக்கும் வழியையும் நமக்குக் காட்டுகின்றார். திங்களுக்கு இருமுறை பெண்களைக் கூடுதல், ஆண்டுக்கு இருமுறை வயிற்றுக்கழிவு மருந்து உண்டல் வாரத்துக்கு இருமுறை எண்ணெய் முழுக்காடுதல், தன்னிலும் இளையாளான பெண்ணுடன் கூடுதல், முற்றிய தயிர், காய்ச்சிய பால், நீர் மோர், உருக்கிய நெய், வழுக்கையான இளநீர் ஆகியவை உண்ணுதல், பசித்தபிறகே நீர் பருகுதல், உண்டபின் உலாவுதல் ஆகியவை உடலை ஓம்பும் நன்முறைகள் என்பதைக் கூறுகிறார். இதனை,

''மாதத்து இரண்டு விசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோசனந் தான்
வருடத்து இரண்டுவிசை தைலம்தலைக்கிடுதல்
வாரத்து இரண்டு விசையாம்''

என்ற பாடல் விளக்குகின்றது. மேலும் திருக்குறள்

கருத்துக்களைப் பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். சங்க இலக்கியம், காப்பியங்கள் போன்றவற்றின் கருத்துக்களோடு ஒத்து இந்நூலை எழுதியுள்ளார் ஆசிரியர்.

அண்ணாமலையார் சதகம்

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அண்ணாமலையார் மீது நூறு பாடல்களைப் பாடப்பெற்ற நூல். ஆசிரியர் திருச்சிற்றம்பலநாவலர், இந்நூலுக்கு வசந்தராயச்சதகம் என்ற வேறு பெயரும் உண்டு. இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்றும் கி.பி. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர். இந்நூலில் வள்ளலின் பெயரும் இறைவன் வாழ்த்தும் சேர்ந்து செய்யுள் தோறும் மகுடமாகக் காணப்படுகின்றது.

பாரிமகளிரைப் பற்றிய செய்தியையும், அறுவகைத் தொழில்களின் சிறப்பும் பதினாறு வகைப்பேறுகளும் இந்நூலில் கூறப்படுகின்றன. சைவக்குறவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரங்களின் தொகை இவ்வளவு என இந்நூல் செய்யுள் குறிப்பிடுகின்றது.

பன்னிருந் திருஞான சம்பந்தர் செந்தமிழ்ப்
பதிகம் ரெண்ணாயிரம்
பண்பான சுந்தர ரிசைத்ததே வாரமுப்
பஃதுமே லேழாயிரம்
நன்னுதற்றிலகவதி யாரொடுந்தோன்று திரு
நாவினுக்கரசர் சொன்ன
நற்றமிழ்ப் பதிகநாற் பத்தொன்ப தாயிர
நாடுமிம் மூவர் மொழியுட்
பின்னரெண் ணூற்றாறுபத்துநாற் பதிகமிப்
பேருலகு தனில் விளங்கும்
பேசுமிகு நூற்றெற பத்தைந்து சிவதலப்
பெருமை சேர் பதிகமாகும்.

இந்நூல் பொதுவாக உலகியனுக்குத் தேவையான பல்வகை நீதிகளையும் மக்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத கடவுள் வழிபாட்டின் சிறப்பையும் விளக்குகின்றது.

37. செயற்பாட்டியல் கோட்பாட்டில் பழமொழி திருப்பதிகம்

மா.வள்ளியம்மாள்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை ஆய்வு மையம்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
குற்றாலம்

முன்னுரை

அண்மைக் காலங்களில் தமிழலக்கிய ஆய்வுகளும் விமர்சனங்களும் பரந்துபட்ட தன்மையுடைய வாயும் விரிந்து செல்லும் போக்குடையவாயும் காணப்பெறுகின்றன. ஒரு காலக் கட்டத்தில் சமயம் என்பது இறைவன், இறைவியரைத் தழுவி வீடு அடையும் வழியாகக் கொண்ட நிலைமாறி, சமூக எதார்த்த நிலையின் தலைகீழ்ப் பிம்பமாகச் சமயத்தைக் காணும் போக்கு இன்றுள்ளது. குறிப்பிட்ட சமயநெறிகளின் கீழ்வாழும் மனிதர்களையும், அவர்கள் தம் வாழ்வியல் சார்ந்து வெளிவரும் படைப்புகளையும் கூடச் சிலர் ஆய்வுகளாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அப்படைப்புகள் சார்ந்த சமயநெறிகளின் கீழ்ஒழுகும் ஒருவர் அச்சமயம் குறித்த புரிதல்களோடு, மிகச்சரியான ஆய்வுத் திறனாய்வானராகவும் வீற்றிருக்கும் பட்சத்தில், அவ்வாய்வின் தொடக்கம் புதிராக அமைவதற்தோடு இதுகாறும் காத்து வந்த சமயநம்பிக்கைகளைத் தகர்க்கக்கூடிய விதத்தில் ஆய்வின் ஆற்வின் முடிவும் அமையும் என்பதைச் சிலர் நிருபித்துள்ளனர்.

சான்றாகத் தூய வேரியார் கல்லூரித் தமிழ்த்துறைப் பே:ரா.ஆ.இருதயராச் அவர்களின் விடுதலை இறையியலும் தமிழ்நாவலும் எனும் தலைப்பிலமைந்த முனைவர்பட்ட ஆய்வோடு, கிறித்தவக் கடவுளான இயேசு என்பவர் மானிட மகனா? என்றும், கடவுளின் மகனா? என்றும் இயேசு மதவாதியா? ஆன்மீக வாதியா? மனிதநேய வாதியா? என்றெல்லாம் இறைவனைப் பகுத்தாய்கிறது. ஆக, சமயம்

என்பதை வீட்டையும் பொருளாகக் கொண்டு வலிந்தொழுகும் ஆய்வுகளைச் சிலர் மேற்கொள்கின்றனர். மாறாகச் சிலர், சமயத்தை நிறுவனமாகக் கொண்டு பக்திகள் நிகழ்த்தப்பெறும் சுயசார்ந்த விருப்பு வெறுப்புகளை ஆயும் களமாகவும் சிலர் கொள்கின்றனர். இச்சுய விமர்சனம் சார் திறனாய்வாளர்கள் படைப்பையும் படைப்பாளியையும் சேர்த்து அணுக வேண்டுமென்பதில் கவனக் கட்டுப்பாடு கொண்டவர்களாக இருப்பர். இக்கட்டுரையாளர், சமயம் என்பதைப் பல்வகைமைக்குட்படுத்தி அவற்றின் கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ கவனப்படுத்தாது. சமயம் என்பதை மதநிறவனமாகக் கருத்திற்கொண்டு சைவ அடியார்களுள் ஒருவரான மருணீக்கியாரின் சுயவாழ்க்கை அசையிட்டு, அவர்தம் பக்தி கவிதையான பழமொழி பதிகத்தைச் செயற்பாட்டியல் கோட்பாட்டோடு ஆயப்புகுவதே இக்கட்டுரை.

பக்தி கவிதைகளும் வெளிவந்த சூழலும்

தமிழகத்தின் இருண்டகாலமான களப்பிரர் காலத்தில் சமணமும் பௌத்தமும் சமய உச்சத்தில் கோலோச்சின. பாலியும் பிராகிருதமும் மொழிகளின் உச்சத்தில் அரசு மொழிகளாக விளங்கின. இவ்விரு மதங்களும் தத்தம் மொழிவழி சமூகத்தை மாற்றாமல் மதங்களினால் தமிழகச் சூழலை மாற்றம் செய்தன. இவ்விரு மதங்களும் தங்களின் மதவலிமை மூலம் தத்தம் மொழிகளை நிலைபெறச் செய்யும் நோக்கில் செயல்பட்டன. இத்தகு சூழலை நன்குணர்ந்த அன்றைய தாய்மொழிப் பற்றாளர் இல்வாழ்வு துறந்து நாயன்மார்களாக வெகுண்டெழுத்து தமிழ்மொழி காக்கும் களமாகச் சைவத்தைத் தோற்றுவித்தனர்.

தொல்காப்பியம் சுட்டிய ஐந்திணைத் தெய்வங்களுக்கும் அப்பாற்றின்று, விரிவடைக் கடவுளை முன்னிறத்துகின்றனர். விரிசடைக் கடவளின் குறியீடான அழித்தல் என்பதை மனத்திற் நிறுத்தி, சமண, பௌத்த மதங்கள் எதிர்ப்பு மட்டுமன்றி பிறமொழிகளின் ஆதிக்கங்களிலிருந்து தமிழைக் காக்கவும் வடமொழியாளர்களை எதிர்கொள்ளவும் சைவம் நெறியாகக் கட்டமைக்கப்பட்டது. அறஇலக்கியக் காலத்தினை முடிவாகவும் எதிர்மறை விளையவாகவும் சமயமாற்றங்களால் சமுதாய

மாற்றங்கள் எழவும் பக்தி இயக்கங்கள் தோற்றம் பெற்றன. அவ்வியக்கம் சார்ந்த கவிஞர்கள் தத்தம் மொழிப்பற்றினைப் பிறரிடத்துக் காட்டாது. தமக்குத் தாமே பேசிக்கொள்ளும் புதிய பாங்கினையுடையதாகப் பக்தி கவிதைகள் பிறந்தன. அடிக்கு அடி உதைக்கு உதை என்பதை வீரமனத்திற்கொண்ட நாயன்மார் தமிழர்கள் சமண, பௌத்த நெறிகளினூடே சென்று சைவ நெறியில் நின்றொழுதி தமிழையும் தமிழர் பண்பாட்டையும் காக்கமுனைந்த காலம் பக்தி காலம் பக்தி இலக்கியக் காலமாகும்.

தருமசேனர் நாயன்மாறான வரலாறு

திருவாமூரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் வேளாளர் குடியில் மகனாகப் பிறந்தவர் மருணிக்கியார். இவரது தமக்கையார் திலகவதியார். இவருக்குக் கலிப்பகையார் எனும் படைத்தளபதியை மணம் பேசி நிச்சயிக்கப்படுகிறது. மணம் நிகழும் முன், கலிப்பகையார் பேருக்குச் செல்கிறார். போர் முடிவடைதற்குள் திலகவதியாரின் தகப்பனார் இயற்கை எய்துகிறார். இதையறிந்த தாயாரும் உடன்கட்டை ஏறுகின்றார். இந்நிலையில் போருக்குச் சென்ற கலிப்பகையாரும் போர்க்களத்தில் மாண்டார். பரிசம்போட்டதால் பாதிப் பெண்டாட்டி ஆகிப்போன திலகவதியாரும் உடன்கட்டை ஏறத் தலைப்படவே, மருணீக்கியார் தமக்கையாரின் காலில் வீழ்ந்து கெஞ்ச, தம்பியின் பொருட்டு உயிர்வாழத் தலைப்படுகிறார்.

பெற்றோரை இழந்த மருணீக்கியார் அமைதியை நாடி, சமய நூல்களைப் பயிலத் தொடங்குகிறார். சமணசமயம் அவருள்ளத்தை ஈர்த்து, சமயப்பணியாற்றி தருமசேனர் எனும் பட்டம் பெறுகிறார். தம்பியார் சமணசமய வீச்சில் சிக்கியதையறிந்த தமக்கை கவலைக்கொண்டு, திருவதிகைத் தலத்தை அடைகின்றார். இறைவனிடம் தம்பியார் பொருட்டு முறையிடுகின்றார். இந்நிலையில் மருணிக்கியாருக்கு சூலை நோயுண்டாயிற்று. சமணசமயத்தில் சூலையைத் தீர்ப்பாரிலாமையினால் தம் தமக்கையைத் தேடி வருகிறார். திலகவதியார் திருவதிகைப் பெருமானின் அருளை நினைந்து திருநீற்றில் திருவைந்தெழுந்தோதித் தம்பியாரிடம் கொடுத்துக்

கோயிலுக்குள் அழைத்துச் சென்று, வலம் வந்து தொழுதனர்.

பதிகம் என்பது பத்துப்பாடல்களின் தொகுப்பாகும். பழமொழிப் பதிகமாவது நாவுக்கரசரின் திருவாரூர்ப் (ஐந்து) பதிகமாகும். புதிகப் பாடலி இறுதியில், பக்தி இலக்கியக் காலச் சூழலில் நிலவிய பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார். பழமொழியானது நாட்டார் வழக்காறுகளும் ஒன்றாகும். இந்நாட்டுப் புற வழக்காறுகள் மக்களுக்குப் பொழுதுபோக்குச் சாதனமாகச் செயல்படுகின்றன என்பார் பாசுகம். மாறாக, ஆலன் நாட்டுப்புற வழக்காறுகளில் காணப்படும் பொழுதுபோக்குச் செயல்பட்டு என்பதனுள் ஒரு உள்ளார்ந்த அர்த்தமும் உள்ளது என்பார். இவரது கருத்துப்படி, நாவுக்கரசர் கையாண்ட பழமொழிகள் அனைத்தும் உள்ளார்ந்த அர்த்தத்தில் சைவத்தையும், சமணத்தையும் ஒப்பிடுவனவாக அமைந்துள்ளமையை விளக்கும் அட்டவணை வருமாறு.

பழமொழி	சைவம்	சமணம்
கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே	கனி	காய்
முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே	முயல்	காக்கை
அறமிருக்க மறம்விலைக்குக் கொண்டவாறே	அறம்	மறம்
பனி நீரால் பரவை செயப் பாவித்தேனே	கடல்	பனிநீர்
ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே	-	---
இருட்டறையின் மலடுகறந்து எய்த்தவாறே	---	இருட்டு
விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே	விளக்கு	மின்மினி
பாழூரில் பயிக்கம்புக்கு எய்த்தவாறே	பயிக்கம்	பாழூர்
தவமிருக்க அவஞ்செய்து தருக்கினேனே	தவம்	அவம்
கரும்பிற்காக இரும்பு கடித்து எய்த்தவாறே	கரும்பு	இரும்பு

செயற்பாட்டியல் - ஒன்று

ஓர் அமைப்பிலுள்ள கூறுகள் அனைத்தும் அதன் முழுமைக்குள் ஒன்றியமாகியுள்ளன. அதாவது அக்கூறுகள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து அந்த முழுமையைச் செயல்படுத்துகின்றன என்பது செயற்பாட்டியலின் மையக்கருத்தாகும். சமூகத்தில் அல்லது பண்பாட்டில் எந்தவொரு கூறும் ஏதேனுமொரு செயல்பாடு இல்லாமல் இருக்க இயலாது என்பது செயற்பாட்டியலின்

அடிப்படையாகும்.

வேளாளர் குடியில் பிறந்ததாகச் சொல்லப்படும் மருணீக்கியார் சிறுவயதில் பெற்றோரை இழக்கிறார். தமக்கையாரான திலகவதிக்கு நிச்சயிக்கப்பெற்ற கலிப்பகையாரும் போர்க்களத்தில் மாண்டுவிடுகிறார். மனம் இருந்தால் மலையேறிப் பிழைக்கலாம் எனும் நம்பிக்கையும் தவிடுபொடியாகிறது. மருணீக்கியாரின் குடும்பத்திற்குள் நிகழ்ந்த தொடர் இறப்புக்களும் அவரது அவநம்பிக்கையும் அவரை நிலைகுலையச் செய்கின்றது. தீமை அனைத்திற்கும் மூலக்காணரமாயுள்ள கொடியோர்களால் செய்யப்படும் கொடும்போரில் (பழமொழிப் பதிகம்.05) என்று எடுத்தியம்புவதன் மூலம் தமக்கையாரிடத்தும் கலிப்பகையாரிடத்தும் கொண்ட பேரன்பின் விளைவு - தமிழர்களின் இருகண்களில் ஒன்றான வீரம் சார்ந்த போர்ச்சமூகத்தை வெறுக்க வைக்கின்றது. இத்தகைய நிலையில் அமைதியை நாடிச் சமயங்களைக் காண்கின்றார். அந்நேரத்தில், சமணம் சற்றே இளைப்பாறுதலைத் தந்துதவ, அதை மோட்சமாகக் கருதிச் சமணப் பணியாற்றித் தருமசேனர் நிலைக்கு உயருகின்றார். ஆக, மருணிக்கியாரின் சொந்தவாழ்வில் நிகழ்ந்த தொடர் இறப்புகளும் அமைதியை நாடிய சமயப் பயணமும், அதற்குச் சமணத்தைத் தேர்ந்தெடுத்தலுமாகிய அவரது வாழ்வியலின் பலகூறுகள் சேர்ந்து தோற்றுவித்த விளைவின் பயனாகச் சமணப் பணியாற்றித் தருமசேனரான முழுமையை இங்கு காணமுடிகின்றது.

செயற்பாட்டியல் - இரண்டு

இக்கோட்பாட்டைச் சமுதாய இயக்கவியல் என்றோ, பண்பாட்டு இயக்கவியல் என்றோ கொள்ளலாம். இயந்திரவியலார் எவ்வாறு அடிப்படை விதமுறைகளைக் கொண்டு மிகச்சிறிய இயந்திரம் முதல் இரட்சத இயந்திரம் வரை, அதன் இயக்கப்பாடுகளை ஆராய்ந்து பழுது பார்க்கின்றனர். இயக்கம் தடைபடும் போது அதற்கான காரணத்தைக் கண்டறிகின்றனரோ அவ்வாறே

செயற்பாட்டியலாரும் தனிநபர் மற்றும் சமுதாயத்தின் இயக்கப்பாடுகளையும், தடைபடும் காரணங்களுக்குத் தொடர்புடைய செயல்களையும் ஆராய்கின்றனர்.

செயற்பாட்டியல் மூன்று

மாலினோவ்சுகி, மனித குலத் தேவைகளை முதன்மைத் தேவைகள் என்றும் இரண்டாம் நிலைத் தேவைகள் என்றும் இரண்டாகப் பகுப்பார். முதன்மைத் தேவைகள் என்பது உயிரியல், உளவியல், சமுதாயம் சார்ந்த தேவைகளாகும். அதாவது, உணவு ஈட்டுதல், இனப்பெருக்கம் செய்தல், புறச்சூழலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதலாகும். இரண்டாம் நிலைத் தேவைகள் என்பது எவற்றை உண்பது? யாரிடம் உறவு கொள்வது? எத்தகைய பாதுகாப்பை ஏற்படுத்தி கொள்வது? என்பதாகும்.

இவற்றுள் உளவியல் தேவையான இனப்பெருக்கம் செய்தல் நீங்கலான ஏனைய முதன்மைத் தேவைகளைச் சமணமும், சமணம் சார்ந்த நிறுவனங்களும் தருமசேனருக்குப் பூர்த்தி செய்கிறது. சூலை தாக்கிய போது, சமணம் சார்ந்தோர் தீர்ப்பாரிலாமையால் மருணீக்கியாரின் இரண்டாம் நிலைத் தேவைகள் ரத்தாகி விடுகின்றது. எனவே நோய்க்கான மருந்து எது? எப்படி உண்பது? யாரிடம் கேட்டுப் பெறுவது? மருந்தளிப்பவன் தமது உயிருக்குத் தரும் உத்தரவாதம் யாது? எனும் கேள்வி மருணீக்கி, மனக்கண்முன் நிற்கின்றது.

விடைகாணும் முகமாகத் தமக்கையாரிடத்துத் திரும்புகின்றார். தமக்கையாரோ, தென்னார்க்காடு திருவதிகை வீரட்டானிடம் தஞ்சமடையச் சொல்கிறார். ஆக, மருணீக்கியின் இரண்டாம் நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவராகச் சைவக்கடவுள் விளங்குகின்றார்.

செயற்பாட்டியல் - நான்கு

சமூக அமைப்பால் நிறைவேற்றாமல் விடப்பட்ட விருப்பங்கள், நம்பிக்கைகள், அறியாயங்கள் உருவங்களாகவும் குறியீடுகளாகவும் வெளிப்படுகின்றன என்பார். தமிழ்ச்சமூக

மரபின் போர்சமூகமானது, ஐயமிட்டு உண்டும் அன்னதானச் சத்திரங்கள் எழுப்பியும் பசி ன்பதைக் காணவும் கேட்கவும் கூடாதென அமையப்பெற்றதாகும். அன்பின் ஐந்தினைத் தெய்வங்களுக்குள் இறைநெறி கொண்டயதை இலக்கியங்கள் உணர்த்திய சூழலில், போர் சமூகத்தை வெறுத்த அற இலக்கியவாதிகளும் அவர்களை மொழிந்த சமண, பௌத்தங்களும் இறைநெறிப் பெயரில் அறத்தைக் கருவியாக்கி தத்தம் பண்பாட்டைப் புகுந்த முயலுகின்றனர். எனவே, இறையடியார்களைச் சமணநூல்களைக் கற்க செய்ததோடு, சமயப் பணியாற்றிடத் தத்தம் தலமயிரைத் தாமே பிடுங்கக் கூறல்; ஆடையின்றி ஊர்நடுவே திரிய விடுதல்; அந்நாணத்தால் பெண்களைக் கண்டு குடிசையில் ஓடி ஒளிதல்; பிச்சையேற்று உணவு உண்ணச் செய்தல் (பழமொழிப் பதிகம், 04,08) என்று இறைமார்க்க அடியவர்களின் நிலைமைகள் தமிழர் பண்பாட்டிற்கு எதிராக அமைந்தன.

முடிவுரை

களப்பிரர் காலத்தை எதிர்கொள்ள முடியாத தமிழ் சமூகத்தினரின் வாழ வாழ்க்கையும் நிறைவேறா விருப்பங்களும் பிற சமய, மொழி வெறுப்புகளும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தமக்குத் தாமே பேசிக்கொண்ட பாங்கும் நாவுக்கரசரின் நாவில் பக்தி கவிதைகளாக அவர்தம் வரலாற்று நிகழ்வினோடு இக்கட்டுரை உணர்த்தும் வேளையில், ஏர்த்தொழிலால் நிலத்தைக் கீறியும் போர்த்தொழிலால் பகைவரின் நெஞ்சைக் கீறியும் வாழ்பவனே வேளாளன் ஆவான். இவ்விரண்டில் ஒன்று நீங்கப் பெறினும் வேளாளர் குடிப் புறவாசல் வழியாக வந்தவர்களாகவே தமிழர்குடிகள் கருதும். ஆகவே எத்தகைய நாகரிக சமூகம் உதயமானாலும் ஏரையும் போரையும் ஒழிக்கவியலாது என்பதைக் கவனத்திற்கொண்டு, அவ்விரண்டையும் உயிர்மூச்சாகக் கொண்ட சமூகங்களை வேளாளர்குடிகளாக அடையாளம் காட்ட விரும்புகின்றது.

38. திருவெம்பாவை காட்டும் இலக்கியச் சிறப்பு



கே.பி. கனிமொழி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அக்சிலியம் கல்லூரி
வேலூர்

முன்னுரை

ஓம் நமச்சிவாய, சிவாய நம என்ற திருநாமங்களுக்கு உரியவர் சிவபெருமான். சைவ சமயச் சான்றோர்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றி அவரது சிறப்பியல்புகளையும், அருள் திறத்தையும் மக்களிடையே பரப்பி பக்தி பெருவெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். அத்தகைய சைவ சமய குரவர்களுள் தலைச்சிறந்தவரான மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை சைவ சமய உலகில் தனிப் பேரிடங் கொள்ளும் இலக்கியமாகும். மார்கழித் திங்களில் வைகறை வழிப்பாட்டிற்குத் திருவெம்பாவை ஏற்றம் பெற்றிருப்பது போலவே, இலக்கிய உலகில் பாவை இலக்கியம் என்றொரு புதிய இலக்கிய வகையினைத் தோற்றுவாய் செய்து துலக்கமற விளக்குவதாகவும் திகழ்கிறது. சுருங்கச் சொல்லின் சைவமும், தமிழும் தழைக்கும் இடமாகத் துலங்குவது திருவெம்பாவை எனலாம். இத்திருவெம்பாவையில் உள்ள இலக்கியச் சிறப்புகளை ஆய்ந்து காண்போம்.

திருவாசகம்-திருவெம்பாவை

திருவாசகம் தமிழகத்தின் தவநூல், ஞானப்பனுவல், பக்திப் பெருநூல், தத்துவக் கருவூலம், ஆத்திகக் களஞ்சியம், ஆன்மபோதச் செல்வம், உணர்ந்த உள்ளத்தின் ஊற்றிலிருந்து ஊறி உயர்ந்து வந்த உயர்வான உரை, காதலால் கசிந்து கண்ணீர் மல்கிய வாதவூரரின் வளமை சான்ற வண்மைத் தமிழாம் தன்னருள் தழைத்த திருமொழி எனப் பலவாறு பாராட்டப்படும் பெருமைக்குரிய நூல்.

பிறநாட்டு பிற மதத்துப் பிற மொழியாளரையும் தன் பாலீர்த்து அவர்தம் மதத்தையும் நூலையும் மறக்கச் செய்து தன்னையே நினைந்து உருகச் செய்யும் தகுதி மிக்க திருவாசகம் நம்மையெல்லாம் பக்தி வலையிற் படுக்கும் நூலாக அமைந்திருந்தாலும் தமிழிலக்கியமாகவும் விளங்கி உவமை முதலிய அணிகள் அழகுற அமைந்து புலமை நலன்களெலாம் காட்டும் கண்ணாடியாகவும் விளங்குகின்றது. திருவாசகம் முழுவதிலுமுள்ள எல்லாக் கருத்துக்களையும் சுருக்கமாகவும் செறிவாகவும் புலப்படுத்தியுள்ளது திருவெம்பாவை. இச்சிறப்பு மிக்க திருவெம்பாவையில் திருவாசகம் போல இலக்கியச்சுவை அணிவகுத்து நிற்பதைக் காணலாம்.

உணர்ச்சி

உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதை. எனவே கவிதைக்கு உணர்ச்சி இன்றியமையாதது. மாணிக்கவாசகரின் திருவெம்பாவையில் இவ்வுணர்ச்சி சிறப்பிடம் பெற்றுள்ளது. நீராடும் மகளிர் நீர்நிலையை,

''பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த''
(பா.13)

என அம்மையும் அப்பனுமாகக் கருதிப் பாடுகின்ற பாடலில் மாணிக்கவாசகரின் உணர்ச்சியை அவர் படைத்த கற்பனை மாந்தராகிய பெண்களிடம் கண்டு மகிழ்வதைக் காணலாம்.

கற்பனை

கற்பனையின் ஊற்றே கவிதை. கவிதைக்கு உயிர் உணர்ச்சி, உடல் கற்பனை, உடை ஒலிநலம் என்பர். இலக்கியக் கூறுகள் பலவற்றால் சிறப்புறும் திருவாசகத்தின் பகுதியாகிய திருவெம்பாவை, தங்கைமார் பலர் கூறும் துறையாலமைந்த கற்பனைக் களஞ்சியமாய் விளங்குகிறது. நீராடச் செல்லுகின்ற மகளிர் அம்மையும், அப்பனுமாய்க் காட்சியளிக்கின்ற

பொய்கையில் நீராட பெண்களே, நீர் நிறைந்த இப்பொய்கையில் குதித்துத் தாவித்தாவி நம் முன்கையிலுள்ள சங்க வளையல்கள் ஒலிக்கும் படியாகவும், காலில் அணிந்துள்ள சிலம்புகள் அவ்வொலியோடு கலந்து ஒலிக்கும் படியாகவும், நீர் நிலையிலுள்ள நீர் கரையில் ததும்பி வழியும் படியாகவும் நீராடுவோம் வருக என மற்ற பெண்களை அழைப்பதாகவுள்ளது இப்பாடல். நீரோடுங்கால் நிகழும் பல பண்புகளைத் தேர்ந்தெடுத்து ஒன்றாக இணைத்துக் காட்டுவதால் இது கற்பனையாய் அமைகிறது. அதனைப்

''பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்''

(பா.13)

வருணனை

உடலுக்குக் குருதியோட்டம் போன்று இலக்கியத்துக்கு வருணனை இன்றியமையாதது. திருவெம்பாவையில் வருணனையும் இடம்பெற்று இலக்கியச் சிறப்படையச் செய்கிறது. கோழி கூவ, குருகு இயம்ப தலையும், சங்கு ஒலித்தலையும் உதய ஒளியில் விண்மீன்கள் ஒளி மழுங்குதலையும் இணைத்து வைகறையின் நிகழ்ச்சியாக வருணிக்கப்படுகின்றது. விடியலின் போது,

''கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்'' (பா.8)

என்று கூறுகின்றார். நீர் நிலையை வருணிக்கும் போது எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கமடு வாகவும், மழையை வருணிக்கும் போது அம்மையின் அருள் சுரப்பது போன்றதாகவும் வருணிக்கிறார்.

சொல்லாட்சித் திறன் - அடுக்கு மொழி

வியப்பு, மகிழ்ச்சி, இரக்கம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது அடுக்குத் தொடர்களை

கையாளுகின்றார். விம்மி விம்மி, என்னே என்னே, சிவனே சிவனே என அடுக்குத் தொடர்களைத் திருவெம்பாவையில் அமைத்துள்ளார்.

வினாச்சொற்கள்

ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? ஆருற்றார்? ஆர் அயலார்? ஏதவனைப் பாடும் பரிசு என வினாச்சொற்களை எளிய நடையில் அடுக்கிக் கொண்டு செல்வதும் உண்டு.

உவமை

கவிஞன் தன் உள்ளத்தெழுந்த இதயவுணர்வின் ஊற்றுகளை எழுச்சிகள் நிறைந்த இன்ப துன்ப உந்துதல்களைச் சிதைவின்றித் தன் உள்ளத்து எழுந்தவாறே உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகளே. பொழுது புலர்கின்றது. இருள் விலகுகின்றது. கதிரவன் ஒளியில் விண்மீன்கள் தம் ஒளிகுன்றி மறைகின்றன இக்காட்சியைக் காண்கின்றார் மாணிக்கவாசகர்.

"கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகல" (பா.18)

இவ்வுமையைக் கொண்டு வேறு செய்தியையும் புலப்படுத்துகின்றார். பொழுது புலர்ந்து கதிரவன் ஒளி பரவத் தொடங்கி விட்டது. எனவே நீராடும் பெண்ணே நீராடற்கு விரைக எனக் குறிப்பாக உணர்த்துகிறார்.

தொகுப்புரை

இவ்வாறு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றிற்கு அரிய பெரிய சான்றாய் இருப்பவைத் திருவெம்பாவை. சிறிய அளவில் அமைந்த இவ்விலக்கியம் இலக்கியச்சுவை வடிவச்சிறப்பு முதலியவற்றால் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கென சிறப்பான ஓர் இடத்தைப் பெற்று எழிலுடன் மிளிர்கின்றன.

39. சைவ மேன்மையில் திருக்குற்றால குறவஞ்சி



முனைவர் மா.செல்வத்தரசி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

முன்னுரை

மக்களின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்துவது சமயங்களாகும். தமிழ்மொழி வளர்ப்பதிலும் சமயங்கள் தமது பங்களிப்பைச் செய்துவந்திருக்கின்றன. தமிழர்கள் தங்களது சமயங்களை இலக்கியங்களாகப் பதிவு செய்திருக்கின்றனர். இலக்கிய வகையில் சிற்றிலக்கியங்கள் பெரும்பங்காற்றி இருக்கின்றன. அவற்றுள் திருக்குற்றாலக் குறவஞ்சி இலக்கியம் மக்களை மகிழ்வித்ததோடு சைவ சமய மேம்பாட்டினைப் புலப்படுத்திய பாங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

குறவஞ்சி

குறவஞ்சி குறத்தி என்ற பெண்ணைக் குறிப்பதாக அமைகின்றது. குறவஞ்சி குறப்பெண் · குறமகள் என்ற பொருளினையும் தந்திருக்கின்றது. குறவஞ்சி இலக்கியத்தில் பல்வேறு நயங்கள் காணப்படுகின்றன. அதாவது இலக்கியம் இசை தத்துவம், நாட்டியம், நாடகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. எனினும் சமயக் கலையை, அதன் மேன்மையை விளக்குவதே இலக்கியத்தின் முக்கிய நோக்கமாகவும் இருந்திருக்கின்றது.

திருக்குற்றால குறவஞ்சி

சொற்களின் எளிமையோடு இனிய சந்த நயத்தோட காவியத் தன்மை சிறக்க அமைந்தது. திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். பாண்டிய நாட்டில் திருக்குற்றால நகரில் எழுந்தருளியுள்ள திரிகூட நாதரைப் பாட்டுடைத் தலைவனாகக்

கொண்டு குறவஞ்சி அமைந்துள்ளது. திருக்குற்றாலக் குறவஞ்சி இலக்கியத்தை அருளிச் செய்தவர் திரிகூட ராசப்பக் கவிராயர் ஆவார்.

சைவ சமயம்

சைவம் என்பது உயிர்களிடத்து அன்பாக இருத்தல் என்பது பொருளாகும். சிவம் என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்தது சைவமாகும். உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்பதை வலியுறுத்துவதே சைவத்தின் கோட்பாடாகும். வீடுபேற்றை அடைவதற்கும் இம்மையிலும், மறுமையிலும் நல்லுலகை அடையும் பொருட்டாக வழிப்படுத்துவது சைவ சமயமாகும்.

சுயம்புவாக இறைவன்

திருக்குற்றால நன்னகரில் இறைவன் சிவபெருமான் சுயம்பு மூர்த்தி வடிவில் குறும்பலா மரத்தடியில் எழுந்தருளி இருக்கிறான். இவ்விறைவன்,

''திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து
தேவிபாகம் பொருந்திப் பொருந்தாத
வேடத்தால் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ்
சோலையின் வண்டுயாழ்செய் குருந்த
மணநாலும் குன்றிடஞ்சூழ் தண்சாரல்
குறும்பலாவே''

குறும்பலாவின் அடியில் எழுந்தருளியவன் மதியைத் தன் தலையில் சூடியவன். தேவியை ஒரு பாகத்தில் கொண்டவன். சோலையில் வண்டுகள் யாழ் செய்ய குன்று சூழ்ந்த பகுதியை இடமாகக் கொண்டருளியவன். திருக்குற்றால நாதர் உறையும் இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற பதின்மூன்றாவது தலமாகும். குறும்பலா தல விருட்சமாக மேன்மை பெற்றது. இத்தல மரமான பலாமரம் வருடத்தின் அனைத்து நாட்களிலும் பலாக் காய்கள் காய்த்தவாறே இருக்கின்றது. இதனை யாரும் பறிப்பதில்லை. குறும்பலாவில்,

"கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பெலாம்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலாவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே"

இம்மரத்தில் பலாச் சுளைகள் லிங்க வடிவத்தில் இருப்பது சைவ மேன்மையை வெளிப்படுத்துகிறது. இங்கு இறைவன் மவுன நாயகனாக, புவன நாயகனாக விளங்கக் கூடியவன். மேலும் சிவனாக, அரியாக, அயனுமாக விளங்குகின்றான். மேலும் அவன் பிறை, கங்கை, மான், பாம்பு, மண்டை ஓடு, சுடுகாட்டுச் சாம்பல், புலித்தோல் ஆகியவற்றை அணிந்திருந்து காட்சி தருவது அவனது வீரத்தையும், ஆன்மாவின் மேன்மையினையும் புலப்படுத்துகிறது.

இறைவனின் திருவீதிவுலா

இறைவன் வீதிதோறும் சென்று வருவது திருவீதி உலா எனப்படுகிறது. அன்பர்கள் இறைவனைக் கோயிலில் சென்று தரிசிக்கின்றார். உடலால் இயலாதோர் தம்மை வழிபடுதல் வேண்டும் என்பதற்காகத் திருவிழாக் காலங்களில் இறைவன் வீதி உலா எழுந்தருளல் மரபாகத் நிகழ்ந்து வருகின்றது.

இறைவன் வீதி உலா வருவதும் ஏழு பருவ மங்கையர் மயங்கி நிற்பதும் எடுத்துரைப்பினும், சமயத்தின் மேன்மையினை ஓங்கச் செய்யும் வகையில் வீதி உலாவானது அமைகின்றது. முதலில் மூத்த பிள்ளையாகிய விநாயகர் கசப்படை தாங்கியும் முருகப் பெருமான் வெற்றி வேலைத் தாங்கியும் சிவபெருமான் தன் மார்பில் கொன்றை மாலை அசைந்தாடும் பொருட்டாக வருகின்றான். இவ்வாறு இறைவனது அடையாளங்கள் வெற்றியின் வெளிப்பாடாக அமைகிறது. அவனை வழிபடுபவர்களும் வெற்றியும் வாழ்வில் பல மேன்மையினை அடைவர் என்பதும் எடுத்துரைக்கப்படுகிறது.

அகத்தியர்

கைலாய மலையில் சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடைபெற்றது அதனைக் காண்பதற்குத் தென்னக மக்கள் அனைவரும் வடபுலம் சென்றிடவே தென்புலம் உயர்ந்தது. இதனைக் கண்ட சிவபெருமான் உலகைச் சமன் செய்யும் பொருட்டாக அகத்தியரை அழைத்துத் தென்புலம் செல்லுமாறு பணித்தார் அகத்தியர் பொதிகை மலைக்கு வந்தார் அகத்தியரை அர்ச்சகர்கள் குற்றாலநாதர் கோயிலுள் அனுமதிக்கவில்லை. இவரை விரட்டி விடவே, இலஞ்சியில் உள்ள முருகப் பெருமானிடம் தமிழ்க் கற்று தானும் ஒரு வைணவராக ஆலயத்திற்குள் சென்று அங்கு அருவித் தடாகம் நிறைந்த திருக்குற்றால அருவிக் கரையில் இருந்த கோயிலில் உள்ள விட்ணுவை தலையில் கைவைத்து தாழ்த்திவிட்டு சிவ சமயமாகிய சைவத்தை மேலோங்கச் செய்தார் என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன.

சித்திர சபை

பஞ்ச சபைகளில் ஒன்று சித்திர சபை சித்திரங்களால் (ஓவியத்தால்) ஆகியதால் சித்திர சபை எனப்பட்டது. இது குற்றாலநாதர் திருநடனம் செய்யும் மன்றமாகும். இத்தலத்தில் இருப்பவர்களுக்கு நான்கு யுகங்களும் கூட நான்கு கிழமைகளைப் போல கழிந்துவிடும். இதில் நடராசப் பெருமானே நர்த்தனம் புரிவதைக் காணலாம். கோடான கோடி தேவர்களும் பல கோயிலின் திருநடனங்களும், கதைகளும் காட்சிகளாக இங்கு இடம் பெற்றுள்ளன. இங்கு வேத முரசமானது எப்போதும் மேன்மை ஒலி முழங்கிக் கொண்டிருக்கிறது. இத்தலத்தை வழிபடுபவர்கள் அனைத்துலக தலத்தையும் வழிப்பட்ட பேற்றினை அடைவர். தென் பொதிகையில் பிறந்திட்ட மக்கள் யாவரும் நற்பேற்றினை அடைவதும் இதனாலேயே எனலாம்.

வழிபாட்டுத் தலம்

மக்கள் வழிபடும் தலமாகத் திருக்குற்றாலநாதர் கோயில் இருப்பினும் அன்றைய நாட்களில் மத யானையும் இறைவனை

வழிபட்ட பேறு பெற்றது. புட்பகந்தன் வழிபட்டது. பன்றியுடன் வேடனும் கூடி வலஞ்செய்து முக்தி பெற்ற தலமுமாகும். வெற்றிச்சிறப்புப் பொருந்திய தேவர்களும் கூட குன்றுகளாகவும், மிருகங்களாகவும் உருமாறி வந்து தவஞ்செய்து கொண்டிருக்கும் பெருஞ் சிறப்புடையதாகும். சித்தர்கள் பலர் குற்றால மலையில் தவ வாழ்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

முடிவுரை

தமிழகத்தில் உள்ள ஏனைய தலங்களின் வழிபாட்டை விட இத்தலம் வழிபடுபவருக்கு மேன்மையை விளைவிக்கக் கூடியதாகும். தேவாதி தேவர்களும் வந்து பூசித்த ஒரே இறைவன் திருக்குற்றாலநாதர் மட்டுமே ஆவார். கட்டியங்காரனும் குறமகளும் இனிமையோடு வழிப்படுத்திய சைவ நெறி உடைய முழுமை பெற்ற தலம் திருக்குற்றாலநாதர் உறைந்துள்ள திருக்குற்றாலமே ஆகும்.

40. தேவாரப் பதிகங்களின் அமைப்பு

முனைவர் வாசுகிகரிகாலன்
தமிழ்விரிவுரையாளர்
நல்லிகுப்புசாமி செட்டி கலைக்கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

சங்க காலத்திற்குப் பிறகு இருண்டு கிடந்த தமிழர் தம் இலக்கிய வாழ்வு, சைவ சமயக் குரவர்களால் மீண்டும் எழுச்சியுற்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் போன்ற ஆன்மீகப் பெரியோர்களால் மக்களின் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் ஏற்பட்ட காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பக்தி இயக்கக் காலமாகும்.

மூவர் முதலிகள்

முதல் ஏழு திருமுறைகளைப் பாடியவர்கள் மூவர் முதலிகள் எனப்பட்டனர். இச்செய்தியை,

''மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்''

என்ற பாடல்கள் மூலமாக அறியமுடிகின்றது. தேவாரம் பாடிய மூவர் முதலிகள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் ஆவார்கள்.

திருமுறை பதிகம் - விளக்கம்

இறைவனின் அருளைப் பெற்ற அடியவர்களால் இயற்றப்பட்ட நூல் திருமுறை எனப்பட்டது. மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுகளில் தான் முதன் முதலாக திருமுறை என்ற சொல் காணப்படுகின்றது. திரு என்பது இறைவனது அருளையும், அவ்வருளாதல் கிடைக்கும் இன்ப நிலையையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். இதனைத்

"திருவொளி காணிய பேதுறுகின்ற திசை முகனும்"

என்ற திருஞானசம்பந்தரின் பாடலாலும்,

"திருவே என்செல்வமே தேனே"

என்ற அப்பரின் பாடலாலும்,

"திருநின்ற செம்மை"

என்ற சுந்தரர் பாடலாலும் அறியமுடிகிறது.

திருப்பதிகம்

திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் ஆகிய மூவரும் அருளிய பாடல்கள் திருப்பதிகம் என்ற பெயர்களால் வழங்கப்படுகின்றன. நந்திவர்மனின் திருவல்லம் கோயில் கல்வெட்டில் திருப்பதியம் என்ற சொல் காணப்படுகின்றது. பதிகம் பதிகப் பாடல் என்னும் பெயர் வழக்கு சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இதன் மூலம் பதிகம் என்ற சொல் பழங்காலத்திலேயே வழக்கில் இருந்ததை அறியமுடிகின்றது.

தேவாரம்-விளக்கம்

தேவாரம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. தே+ஆரம் = தேவாரம். தே என்றால் தெய்வம், ஆரம் என்றால் மாலை என்று பிரித்து தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை போன்றது. ஆதலின் இப்பெயர் பெற்றது. தே+வாரம் எனப் பிரித்து தே-தெய்வம், வாரம்-இசைப்பாட்டு எனப் பொருள் கொண்டு தெய்வத்திற்கு இன்றமிழ் இசைப்பாட்டால் பாடப்படுவது என்று கூறலாம். அடுத்து, தே+வாரம் (வாரம்-அன்பு) தேவனிடத்து வாரத்தை அன்பை விளைவிப்பது, அஃதாவது கடவுளிடத்தில் அன்பு காட்டும் நூலே தேவாரமாகும் என்று ச ஆறுமுக முதலியார் விளக்கம் தருகிறார்.

இறைவன் திருவுருவினைத் தேவாரத் தேவர் என்றும், பூசனைப் புரியும் இடத்தைத் தேவாரத்துச் சுற்றிக் கல்லூரி என்றும், இசைத்தொண்டு செய்பவரைத் தேவார நாயகம் என்றும் சோழ மன்னர்கள் தம் கல்வெட்டுகளில் குறித்துள்ளன.

திருஞானசம்பந்தரின் தேவாரத்தைத் திருக்கடைக் காப்பு என்றும், திருநாவுக்கரசர் தேவாரத்தைத் தேவாரம் என்றும், சுந்தரர் தேவாரத்தைத் திருப்பாட்டு என்றும் சிறப்பித்துக் கூறுவதுண்டு.

திருமுறைகளின் பகுப்பு

இராசராச சோழனின் வேண்டுகோளை ஏற்று, தில்லையில் அடைந்து கிடந்த பாடல்களை நம்பியாண்டார் நம்பி திருமுறைகளாகத் தொகுத்த செய்தியைத் திருமுறை கண்ட புராணத்தில் அறியமுடிகின்றது. திருஞானசம்பந்தர் குழந்தைப் பருவத்திலேயே திருப்பதிகம் பாடத் தொடங்கியதாலும் நல்லூர் பெருமணத்தில் இறைவனுடன் இரண்டற கலந்ததாலும் இவரது பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

திருஞான சம்பந்தருக்குப் பிறகு, திருநாவுக்கரசர் திருப்புகலூரில் இறைவனடி சேர்ந்ததால் இவரது திருப்பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறு திருப்பதிகங்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. சுந்தரர் காலத்தால் பிற்பட்டவராதலால் இவரது திருப்பதிகம் ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் பாடியருளிய பதிகங்கள் பதினாறாயிரம் கிடைப்பவை 384 ஆகும். திருநாவுக்கரசர் பாடியருளியவை 49,000 ஆகும். கிடைப்பவை 313 ஆகும். சுந்தரர் பாடியருளியவை 3800 கிடைப்பவை 100 ஆகும்.

திருஞானசம்பந்தர் பதிகம்

பதிகம் எனப்படுவது பொதுவாகப் பத்துப் பாடல்களைக் கொண்டது. சம்பந்தர் பதிகங்கள் பெரும்பாலும் பதினொரு பாடல்களைக் கொண்டவை. பதினோராம் பாடல் பதிகச் சிறப்பு, பதிகத்தை ஓதினால் பெறப்படும் பயன், பதிக ஆசிரியர் பெருமை ஆகியவற்றைக் கூறுவது. எனவே முன் பத்துப் பாடல்களின் வேறாக உள்ள இப்பதினோராம் பாடலைத் திருக்கடைக்காப்பு என்று வழங்குவர்.

திருநாவுக்கரசர்

இவரது பதிகங்கள் பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் திருக்கடைக் காப்பு இல்லை. இவர் பாடிய நான்காம் திருமுறை திருநேரிசை என்றும், ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகை என்றும், ஆறாம் திருமுறை திருத்தாண்டகம் என்று வழங்கப்படுகின்றது. ஞானசம்பந்தர் தமது பாடல்களில் 23 பண்களைப் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் 10 பண்களைப் பாடியுள்ளார்.

இறைவனை முழுமையாக நம்பினால் எந்தத் துன்பமும் இல்லை என்பதை,

> ''நாமார்க்கும் குடியல்லோம் நடனை அஞ்சோம்
> நரகத்தில் இடப்படோம் நடலை இல்லோம்
> ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
> இன்பமே எந்நாளும் துன்பமில்லை''

என்ற பாடலில் அறிவிக்கின்றார். முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள். மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்; பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்; அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார் அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத் தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவனின் தாளே என்ற பாடலில் சிவனைத் தலைவனாகவும், அவன் மேல் காதல் கொண்ட பெண்ணின் உள்ளத்தை அகத்துறைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

சுந்தரர்

சம்பந்தர் பாடல போல் பதினோரு பாடல்களை அமைத்தும், அப்பதினோராம் பாடலைத் திருக்கடைக் காப்பாக அமைத்தும், நாவுக்கரசரைப் போல் பத்துப் பாடல்களை அமைத்து, அதன் பத்தாம் பாடலைத் திருக்கடைக் காப்பாக வைத்துப் பாடியும் உள்ளார். இவரது பாடல்களில் 18 பண்கள் உள்ளது. கலிப்பா வகையில் அடங்கும். அனைத்துப் பாடல்களும் இசைப் பாடல்கள் என்பது சிறப்புமிக்கது.

திருத்தொண்டத் தொகை இவர் பாடியதே.

சிவனை நாடி ஊர் ஊருாகச் சென்றபொழுது மழபாடியுள் இருக்கும் சிவனை மறந்து சுந்தரம் சென்றுவிட சிவன் என்னை மறந்தனையோ என்று கேட்க,

''பொன்னார் மேனியதேன புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே''

என்று பாடி தமது பக்தியை வெளிப்படுத்துகிறார். மூவர் முதலிகள் என்றழைக்கப் பெறும் சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர்களில் பாடல்களின் அமைப்பையும், பகுப்பையும் மேற்கண்ட செய்திகள் வாயிலாக உணரமுடிகின்றது.

41. இராசராசசோழன் உலாவில் புலப்படும் நவரசங்கள்



கலாநிதி, சைலசா குமாரசாமி
விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

முன்னுரை

சிற்றிலக்கியங்களில் சொல்லணி, உவமை, உருவக அணிகளுடன் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகத் திகழ்வது உலா இலக்கியமாகும். அறிவு, செல்வம், ஆண்மை, அன்பு, ஈகை, எழில் போன்ற பண்புகளில் உயர்ந்த ஓராடவனைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய குலம் குடிப்பிறப்பு, பரம்பரை முதலியன விளங்கக் கூறி அவன் முடிபுனைந்தோ மணம் புரிந்தோ, வெற்றிப் பெற்றோ வீதியில் தேர் மீதோ, பிற ஊர்திமீதோ ஒரு நாளோ அல்லது ஏழு நாள்களோ உலாவருங்கால் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு வகைப் பருவமகளிர் காதல் கொண்டதாகக் கலிவெண்பாட்டில் பாடப்படும் நூல் உலா எனப்படுகிறது.

''பேதை முதலா எழுவகை மகளிர் கண்
டோங்கியவகை நிலைக் குரியான் ஒருவனைக்
காதல் செய் தலின் வரும் கலிவெண் பாட்டே''

என்றும், உலாவரும் பாட்டுடைத் தலைவனானவனின் இலக்கணம் கூறும் போது,

''வேந்தர் கடவுளர் விதிநூல் உணர்
மாந்தர் கலிவெண்பாவிற்குரியவர்'' (பன்னிருபாட்டியல்)

எனக் கூறப்படுகின்றது. கடவுள் மீதும் அரசர் மீதும், முனிவர் மீதும் பாடப்பட்டதாக இவ்வுலாக்கள் விளங்குகின்றது. பாட்டுடைத் தலைவனதுமலை, ஆறு, நாடு, நகர், யானை, குதிரை, மாலை, முரசு, கொடி, ஆணை அல்லது செங்கோல்

எனும் பத்து உறுப்புக்களான தசாங்கம் என்பவற்றுடன் அரசன் தனது வெற்றி முடிபுனைவிழா, சிறப்புத் தோற்றம் என்பவற்றினை மக்களுக்கு காட்டி மக்கள் முன் உயர்ந்தோனாகவும், பெருமைகொண்டவனாகவும் உலாவருதலே உலாவாகும். இவ்வுலாவே உலா இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. அந்தக்கவி வீரராகவ முதலியார், ஒட்டக்கூத்தர், சிவக்கொழுந்து தேசிகர், சேறைக் கவிராசபிள்ளை, அருணாசல கவிராயர், தத்துவராயர் ஆகிய புலவர்களே அதிகமான உலாக்களைப் பாடியுள்ளதாக குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்களுள் ஒட்டக்கூத்தரால் பாடியமுன்று உலாக்களான விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராசசோழனுலா வினை என்பன மூவருலா எனப்படுகிறது. உலாபாடுவதில் புலவர் வல்லவர் என்பதனைக் கோவையுலா அந்தாதிக்கு ஒட்டாகக்கூத்தன் என சிறப்பிக்கப்படுகின்றார். சோழர்களின் குலப் பெருமை, வீரம் முதலியவற்றை இம்மூவருலா விரிவாக எடுத்துரைக்கின்றது. இரண்டாம் குலோத்துங்கனின் மகன் இராசராசசோழன் மீது பாடப்பட்ட உலா இராசராச சோழனுலா ஆகும். இரண்டாம் இராசராசன் திரிபுவன சக்கரவர்த்தி, கோநேரின்மை கொண்டான் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்றன. இம்மன்னனின் ஆதன பண்டிதரான ஒட்டக்கூத்தர் இராசராச சோழன் உலாவைப் பாடி அரங்கேற்றியபோது ஒவ்வொரு கண்ணிக்கும் ஓர் ஆயிரம் பொன் கொடுத்தாகக் குறிப்பிடப்படுகிறது.

இராசராசசோழன் காலத்தில் முதுமை பருவத்தை அடைந்திருந்த ஒட்டக்கூத்தரின் அறிவின் வளர்ச்சி மூவருலாவில் ஏனை இரண்டு உலாக்களிலும் பார்க்க ராசராசசோழன் உலாவின் அளவிலும் சுவையிலும் மேலோங்கி உள்ளமையும், உலாவின் இயல்பைக் கடந்து வருணனையுடன் கடினமான நடையில் சிலேடை போன்ற நுட்பங்களையும் கொண்டமைந்துள்ளது. இவ்வுலாவில் 40-48 கண்ணிகளில் வேந்தன் தன் தேவியுடன் வைகறையில் எழுந்து காலைக்கடன் முடித்து வழிபாடுகள் செய்து உலா வருவதற்கு ஆயத்தமானான் என்றும், 49-69 கண்ணிகளினால் வேந்தனின் உலாவரும் சிறப்புக் கோலமும்,

70-144 கண்ணிகளில் உலாவரும் சிறப்பினைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி கொண்ட மெல்லியலாரும், காண்பவர்களும் கூறும் ஒப்பில்லா பாராட்டுரைகளும், 115-391 கண்ணிகளில் பேதை முதல் பேரிளம் பெண் வரையானமாதர்கள் கொண்ட காதலும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அகத்தில் நினைப்பவை முகத்தில் தெரியும் என்பதற்கிணங்க நடனத்தில் அகபாவங்களையும், ஆழமான உணர்ச்சிகளையும், ரசங்களையும் வெளிக்காட்டும் சாதனமாக முகபாவம் விளங்குகின்றது. பாவங்களை வெளிக்கொணர்வது நாட்டியத்தின் முக்கிய நோக்கமாகும். பரத முனிவர் நாட்டிய சாத்திரத்தில் எட்டுவிதமான அகபாவங்களையும் எட்டுவிதமான ரசங்களையும் விவரிக்கின்றார். ரதி-சிருங்காரம், காய-காசுயம், சோக-கருணை, குரோத-ரெத்ரம், உத்சாஹ-வீர.பயா (நக) பயம் சிகுப்ச-பீபத்சம், விசுமயா-அற்புத எனக் குறிப்பிடுகின்றார். நாட்டிய சாத்திரத்திற்குவியாக்கியானம் எழுதிய அபிநவகுப்தர் சாந்த ரசத்தினுயம் சேர்த்து ஒன்பது ரசங்கள் என்கின்றார்.

தொல்காப்பியத்தில் தொல்காப்பியர்

''நகையே, அழுகை, இளிவரல், மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று
அப்பால் எட்டேமெய்பாடு என்ப''

எட்டுவிதமான ரசங்களை (சுவைகளை) எடுத்தியம்புகின்றார். தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய பேராசிரியர் என்பவர் மேற்சொன்ன எட்டு சுவைகளுடன் உருத்திரம் சேர ஒன்பது சுவையென்றும், சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுக் காதைக்கு எழுதிய உரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக எட்டு ரசங்கள் ஒன்பது ரசங்களாகி நவரசங்கள் ஆயிற்று. அகபாவம் உயிராகும். சுவை உள்ளமாகும், மனத்துன்பங்கள் உடலாகும் என்கிறார் சாத்தனார். இவ்வாறு திகழ்கின்ற நவரசங்களினை இராசராசசோழன் உலாவில் வெளிப்படும் சிறப்பினை நோக்குவோம்.

இராசராசனின் திருப்பணிகளையும் தில்லைநகரின் பெருமைகளையும், பேரம்பலத்தில் நடம்புரியும்

கூத்தப்பெருமானின் ஆடலையும் சிறப்பித்து திருநீறு பூசிய சோழன் நடராசனை வணங்கி வேதம் ஓதும் போது யானை மீதேறி, வலம்புரி ஆர்த்தது. மூன்று முரசுகள் முழங்க, கவரி வீசப்பட தொங்கல், பிடிக்க, குடைபிடிக்க, தென்னர், சேரலர், சிங்களர், கொங்கர், மாளவர், மாகதர், காந்தாரர், காலிங்கர், கௌசலர் ஆகியோர் முன் நடக்க மன்மதன் மெய்க்காப்பாளனாக நடக்க உலா ஆரம்பித்தது.

''பாடிக் குழலூதப் பாம்பின் படக்கூத்துமாட
ஆடிக்குடக் கூத்தும் ஆடினார்''

எனவே ஆய்குழல் ஊதும் பாம்பின் படத்தில் ஆடிய கூத்தும் குடங்களை எடுத்தாடிய குடக்கூத்தும் நடித்தனர் என்றும் கூறப்படுகின்றது. இதனூடாகத் திருமாலாடிய காளிங்க நர்த்தனமும், மாதவியாயடிய பதினொருவகை கூத்துகளில் ஒன்றான குடக்கூத்தும் இடம் பெற்றிருப்பதனை அறியமுடிகின்றது. மாளிகை, சாலை, மண்டபம் எங்கும் பெண்கள் குழாம் நிரம்பி வழிந்து மன்னனைக் கண்டுமகிழ்ந்தது. அக்கூட்டத்தில் சக்ரவாள கிரி, மங்கையர், அரம்பையர், வித்தியாதர மகளிர், கோயில் பரம்பரை உரிமை பெற்ற மகளிர் முதலியோர் இருந்தனராம் என்றும்,

''பைந்தோகை
ஆட வதனுடனேயாடினாள்''

எனப் பெதும்பைப் பெண்ணானவள் பாடப்பாடினாள். ஆட ஆடினாள் என்றும் அவளுடைய பார்வைமான் போன்றுமருண்டதாகவும் ஒருவரொருவர் குருகி இருவருமிடழிய நோக்கிய எனுமடியினூடாககாதல் வயப்பட்ட பார்வையால் ஒருவர்க்கொருவர் மனமுருகி நோக்கினர் என்பதினூடாகச் சிருங்கார ரசம் வெளிப்படுவதினையும்,

''வந்திரத்தவானவர்க்குத் தானவர் தம் போர்மாய
இந்திரனை''

துன்பத்தால் வருந்த தேவர்களுக்காக வானுலகம் சென்று அசுரர்களுடன் போர் புரிய இந்திரனை விடை யூர்தியாக்கி

ஏறியவனும், போர் புரிய புறப்பட்டான் எனும் போதும்,

''விருதேரால் வான் பகைமையை மாய்த்தோன்''

வானுலகில் இருந்து வந்த ஒரு தேரினால் பத்துத் தேரினையும் துரத்தி பகைவனாகிய அசுரனை அழித்தவன் எனும் போதும் வீரரசத்தினையும்,

''தன்மீது
கன்மாரி பெய்யும் பிழையான் கடவுளர்கோன்''

எனுமடியினூடாக உக்கிரபாண்டியன் தன் நாட்டில் மழைபெய்யாததால் சினந்து மலையின் அருகில் திரிந்த மேகங்களைப் பிடித்துவிலங்கிட்டு சிறையிலடைத்தான் எனக் கோபத்தின் உச்சக்கட்டத்தினை வெளிப்படுத்துவதனூடாக ரௌத்திர ரசத்தினையும்,

''நாவிற் பழுதஞ்சி நல்கினோன்''

இராசராசனின் புகழை விளக்கவரும் ஆசிரியர் திருமகளையும், பூமிதேவியையும் சொற்குற்றம் வருமெனப் பயந்து வணங்கியவனும் என இராசராசனின் பயத்தை வெளிப்படுத்தும் தருணம் பயனாக ரசத்தினையும்,

''திருமார்பில்
இருப்பது காட்டுமின்னெனபர் சிரித்தெதிரே''

திருமகள் இவன் திருமார்பில் இருப்பதை எமக்கு காட்டுங்கள் என ஒருவரை ஒருவர் கேட்டு நகைத்தனர் எனும் போது காசுய ரசம் புலப்படுவதினையும்,

''வற்றாத மாதை வாவியில் வாடாத
பொற்றமரையே புனைகென்றாள் கொற்றவன்''

பேரிளம் பெண்ணாகிய வேறு ஒரு பெண்ணின் அழகும் குங்குமத்தோடு சந்தனம் மணக்கும் அகன்ற தோள்களும் தாங்கி ஒவ்வொரு நாளும் தன்னுருவம் உள்ளது எனத் தன்னழகில் குறையுள்ளதாக வெறுப்பினைக் கொண்டான் என்றும் இதனூடாகப் பீபசிய ரசத்தினையும்,

''கண்டனைமேதியன்யாள் காந்தனைவந்துய்யக்
கொண்டனையென்று குறுகுவாய் கண்டு''

எவர்க்குமே உவமையாகக் கூற முடியாத வடிவுடையவனும் பூமகள் கணவனை நீ பவனி வந்து எம்மை உய்யும் படி ஏற்றுக் கொண்டாய் இந்நாளில் எனவியந்து துதித்து அணுகி நின்று தலைவனின் அழகைக் கண்டுவியப்புறுகின்றாள். இங்கு அற்புதரசம் வெளிப்படுவதினையும் அறியமுடிகின்றது.

பேதை முதல் பேரிளம் பெண்ணீராக அனைவரையும் உலா மூலம் கவரச் செய்து உலாத் தலைவனைக் கண்டு களித்து காதலுற்றுர சிந்தனையும் புலவர் நவரச வெளிப்பாடுகள் மூலம் புலப்படுத்தியுள்ளமையினை அறியமுடிகின்றது. முன்னூற்று தொண்ணூற்றொன்று *(391)* கண்ணிகளைக் கொண்ட இவ்வுலாவில் முன்னூற்று இருபத்திரண்டு *(322)* கண்ணிகள் பெண்களின் *(7 பருவப்பெண்கள்)* பங்கினைச் சித்தரித்துள்ளது. இவ்வாறாக இராசராசசோழன் உலாவில் நவரச வெளிப்பாடுகள் பாடலடிகளின் மூலம் வெளிப்படும் சிறப்பினைக் காணமுடிகின்றது.

42. அருணகிரிநாதர் பாடல்களில் திருமூலரின் தாக்கம்

முனைவர் க.சேக்மீரான்
தமிழ் இணைப்பேராசிரியர்
மாநிலக்கல்லூரி
சென்னை

முன்னுரை

சேக்கிழாரால் புகழ்ந்து பேசப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராக விளங்கக் கூடியவர் திருமூலர் ஆவார். பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருமந்திரமாகும். இது பத்தாம் திருமுறையாக வைத்துச் சிறப்பிக்கப்படுகிறது.

அருணகிரிநாதர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் திருவண்ணாமலையில் பிறந்தார் எனவும் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து, திருவண்ணாமலை வந்தார் என்றும் கூறுவர். இவர் எழுதிய நூல்கள் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுக் கூற்றிருக்கை, திருவகுப்பு முதலியனவாகும்.

திருமூலர், அருணகிரிநாதர் ஆகிய இருவரும் முருகனையும் முழுமுதற் கடவுளாய்ப் போற்றி சைவநெறி வளர்த்த சான்றோர் ஆவர். இருவரும் இல்லறம் துறந்து துறவரத்தில் ஈடுபட்டவர்கள். இருவரும் கூடுவிட்டு கூடு பாய்தல் போன்ற சித்து விளையாட்டுகளிலும் ஈடுபட்டவர்கள். அருணகிரிநாதர் கந்தனிடம் தான்பெற்ற அனுபவத்தைக் கந்தர் அநுபூதி என்ற நூலாக எழுதி அதில் இறைவன் திருவடியை அடையும் நெறியையும் திசையையும் கூறுகின்றார். இந்தக் கந்தர் அநுபூதியில் பல இடங்களில் திருமூலரின் திருமந்திரக் கருத்துக்களை வாங்கி மொழிகின்றார். அவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முருகப்பெருமானின் ஆறு நிலைகள் குறித்து கந்தர் அநுபூதி இரண்டாம் பாடலில்,

''உல்லாச நிராகுல யோக இதச்
சலலாப விநோதனும் நீ அலையோ
எல்லாம் அற என்னை யிழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே''

என்று பாடுகிறார் அருணகிரிநாதர். இதில் தேவர் தலைவனாக விளங்கும் முருகன் உல்லாச திருப்பரங்குன்றம் - மூலதாரம் - தெய்வயானைத் திருமணம், நிராகுல திருச்செந்தூர் - சுவாதிட்டானம் - சூரன் வதம், யோக, பழனி-மணிபூரகம், ஞானநிலை, இத சுவாமிமலை - அநாதகம் - பிரணவ உபதேசம், சல்லாப குன்று தோராடல் - திருத்தணிகை - விசுத்தி (வள்ளியுடன்) வினோத பழமுதிச்சோலை - ஆக்ஞை - ஔவைக்கு அருளியது என்ற ஆறு நிலைகளை உடையவனாக இருக்கிற முருகப்பெருமானை நோக்கி அருணகிரிநாதர், என் பாசபந்தங்களை எல்லாம் அறுத்து நான் எனது என்ற மாயைகளை அகற்றி, எல்லாம் அற, என்னை முற்றும் இழந்த, யாவற்றினின்றும் விடுபட்ட நிலைக்கு மாற்றி, யான் சீவன் முக்தியடைய நீ ஒரு வழியாகச் சொல்வாயாக என்று வேண்டுகிறார். இந்தக் கருத்துத் திருமூலர் நான் என்னை இழந்தும் என் பந்தப்பாசங்களை அறுத்தும் உன்னுடன் ஒன்றிவிடச் செய். நீயே உப்பாகவும் உப்பே நீராகவும் சிவன் சிவமயமாகவும் சீவன் சிவத்துள் அடங்கும் என்கிற,

''அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர் பெற்றுருச் செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகுமாறு போற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே''

என்ற திருமந்திரக் கருத்துக்களை வாங்கி மொழிந்ததே எனலாம்.

''பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாருமின்றி வெறித்துத் திரிவன

மேய்பாபரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொறியுமே''

''படமாடக் கோயிற் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே''

''யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுரை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே''

என்ற திருமூலரின் மூன்று பாடற் கருத்துக்களையும் வாங்கியே அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி ஏழாம் பாடலில்,

''கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்;
சுடுவாய் நெடுவேதனை தூள்படுவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே''

என்கிறார். இதில் ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றின் வசப்பட்டு அழியும் மனமே முருகனிடம் நற்கதியை அடையும் வழியைக் கேள் இருப்பதை மறைக்காமல் கொடு வேதனைகளைத் தூள் படச் செய். ஒருவன் தன் நிழலில் தானே தங்கி இளைப்பாற முடியாது நாம் சேர்த்து வைத்தப் பொருள் முழுமையும் நமக்கே பயன்படாது என்பதை உணர்ந்து பிறருக்குப் பொருளைக்கொடு, கந்தன் அருளைப் பெறு என்கிறார் அருணகிரிநாதர். இப்பாடல் கருத்து மேற்சொன்ன திருமூலரின் மூன்று பாடல்களின் பிழிவாய் அமைந்துள்ளது எனலாம்.

''செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே''

என்ற இப்பாடல் திருமூலரின்

''தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வதெவ்வாறே''

என்று வாங்கி மொழிகிறார் எனலாம். இதைப் போலவே,

''முருகன் தனிவேல் முனி நம்குரு என்று
அருள் கொண்டு அறியார் அறியுந்தரமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே''

என்ற கந்தர் அநுபூதியில் வரும் அருணகிரிநாதரின் பதின்மூன்றாம் பாடலும்,

''தேனுக்குள் இன்பம் சிவப்போ கருப்போ
வானுக்குள் ஈசனைத் தேடு மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே''

என்ற திருமூலரின் பாடலை ஒத்தே அமைந்துள்ளது எனலாம்.

''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்க வரும் புவியும் பரவும்
குரு புங்கவ எண் குண பஞ்சரனே''

என்ற அருணகிரிநாதரின் பதினைந்தாம் பாடல் கருத்து திருமந்திரத்தில் அமைந்துள்ள,

''அன்பு சிவம் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

சிவ சிவ என்கிலார் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்

சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே''

என்ற இரு பாடல் கருத்துக்களையும் வாங்கி மொழிவதே எனலாம். அருணகிரிநாதர் எழுதிய கந்தர் அநுபூதி மட்டுமல்லது இவர் எழுதிய பிற நூல்களிலும் திருமூலரின் திருமந்திரக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனலாம். இதற்குக் காரணம் இருவரும் ஒன்றுபட்ட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழ்ந்தவர்கள் என்பதோடு திருமூலர் வாழ்ந்த சாத்தனூருக்கு அருகில் உள்ளது. திருவண்ணாமலை, திருமந்திரம் ஆண்டு முதல் பதிப்பைக் கண்டிருந்தாலும் அது பதிப்பிப்பதற்கு முன்னமே திருமந்திர ஓலைச் சுவடிகள் அருணகிரிநாதருக்குக் கிடைத்திருக்க வேண்டும். திருமந்திரக் கருத்துக்களை அருணகிரிநாதர் படித்திருக்க வேண்டும். இக்காரணத்தினாலேயே அருணகிரிநாதர் பாடல்களில் திருமூலரின் கருத்துக்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் எனத் துணியலாம்.

43. ஆறுமுகநாவலரின் சைவத்தொண்டு

சா. இளையராசா
முனைவர்பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூரில் 1822ல் கந்தப்பிள்ளைக்கும், சிவகாமி அம்மையார்க்கும் இறுதி மகனாகத் தோன்றினார். இவரது இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். சுப்பிரமணிய உபாத்தியாரிடம் தமிழ்க்கற்றார். ஒன்பநாம் வயதில் தன் தந்தையை இழந்தார். இருந்த பொழுதும் தன் பன்னிரண்டாவது வயதில் தமிழ், சமசுகிருதம், ஆங்கிலம் மொழிகளைக் கற்று புலமை பெற்றார். சைவ சமயம் தழைத்தோங்க தொண்டு புரிந்தார்.

வரலாற்றுக்கு முற்பட்ட சமயம்

வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகத் திகழும், சைவ சமயம் ஆபத்தை எதிர்நோக்கிய காலப்பகுதியில் தோன்றியவர். ஆறுமுகநாவலர், இவர் அந்நிய ஆட்சியாளர் அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்தும், தற்சமய கொள்கையைப் பரப்பவும், எண்ணங்கொண்டு கல்வி வழிப் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டார். தமது சொல்லாலும், எழுத்தாலும் மக்கள் அகக்கண்களைத் திறந்து அவலநிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்குத் தம்மாலியன்ற அத்தனைப் பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், சைவத்தமிழ்ப் பணிகளையும் பாராட்டித் திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கியது.

ஆறுமுக நாவலரின் சைவத்தொண்டு

சைவ சமயத்தை அழியவிடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒருசிலரிடம்

காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவ பாடசாலைகளை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை இலங்கையில் வண்ணாதர்ப்பண்ண சைவப் பிரகாச வித்தியாசாலையாகும். தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலை யொன்றை நிறுவி, அங்கு போதிப்பதற்குச் சைவ சமய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். அதற்காகச் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடங்களை நிறுவி சைவ வினா விடை, பால பாடம், பெரியபுராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டார். சைவ சமயத்தின் பற்று காரணமாக இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாவினை மறுத்து இது அருட்பா கிடையாது மருட்பா என கூறினார். இதனால் இவரை ஐந்தாம் சமயக் குரவர் என்றும் போற்றப்படுகிறார்.

சைவ சமய சீர்திருத்தவாதி

உயிர் பலியுடன் கூடிய சிறுதெய்வ வழிபாடுகளை கைவிட வேண்டும் என்று பிரசாரம் செய்தார். நாவலர் திருக்கோயில் விழாக்களில் தேவதாசிகள் நடனம், வானவேடிக்கைகள், ஆபாசமான சித்திரங்கள் முதலானவை அகற்றப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். சைவ சமய பிரசாரங்கள் போலன்று பொது அறிவும் சமய அறிவும் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கோயில்களில் நிர்வாகத்தினரின் ஊழல்களையும், அம்பலப்படுத்தினார். சைவர்களிடையே தேசிய உணர்வை வளர்க்க வித்திட்டவர் நாவலர் என்பதும், அவரைப் பற்றிப் பிற்கால மதிப்பீடுகளில் ஒன்றாகும். சைவ சமயத்தைத் தேசிய சமயமாக முதன்மை படுத்தியதால் இந்த மதிப்பீடு தோன்றியது.

தமிழ் மக்களின் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் நிலைநாட்ட நாவலர் பணி பயன்பட்டது. சைவ சமயத்தையும், தமிழையும் வேறுபடுத்திக் காணவேண்டும் எனும் கருத்தை நாவலர் தமது யாழ்பாண சமயநிலை (1872) எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சமய பிரச்சாரம் செய்தல்

நெற்றியிலே நீறும், வாழையிலையிலே அமுதுண்ணவும் கூட நம்மவர்கள் அஞ்சியஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த அவலங்கள் மாறவும், அன்று அந்நியரின் இன்னல்கள் தாங்காது நாட்டை விட்டே வெளியேறிய ஞானபிரகாசர் போன்றோரின் பிரார்த்தனைகள் பலிக்கவும், நாவலர் எழுந்தார். எங்கள் கலாச்சாரம் பிழைத்துக்கொண்டது. சிவநெறி தழைத்து உலகெங்கும் பரவியது. முன்பிருந்த எங்கள் சமயச்சாரியார்கள் தம் தரிசனம் செய்யப்போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தான் சென்ற இடங்களிலெல்லாம் சைவப் பிரச்சாரத்தைச் செய்து வந்தார். அதுமட்டுமின்றி தேவார, திருவாசக திருமுறைகளையும் விளங்கச் செய்தவர். இவரின் இந்தப் பிரச்சாரத்தைப் பார்த்து சைவ தொண்டர்களும் தங்கள் பங்கிற்குச் சைவ சமயத்தின் உயர்ந்த நெறியினை உலக முழுவதும் பிரசாரம் செய்தனர்.

ஆறுமுகநாவலரின் படைப்புகள்

தமிழ் இலக்கியங்களைத் தேடி கண்டெடுத்து அவற்றைச் சிறப்புறப் பதிப்பித்து அச்சேற்றிய ஆசிரியர்களில் ஆறுமுகநாவலர் முதன்மையானவர். இவர் சைவ சமயப் பற்றுடையவராகவும், தமிழ் ஆர்வலராகவும் விளங்கியதற்கு அவரது பதிப்புகள் சான்றாகும். இவர் எழுதியும், பதிப்பித்தும் உரை செய்த நூல்கள் அறுபத்துமூன்று எனத் தெரியவருகிறது. அவற்றுள் நிகண்டுகள், இலக்கிய இலக்கண நூல்கள், நீதி நூல்கள் போன்றவை அடங்கும். 1849ஆம் ஆண்டு முதன் முதலாக நாவலரின் பதிப்பு பணி தொடங்கியது. முதன் முதலிற் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பதிப்பித்தார்.

மேலும் அகத்தியர் அருளிய தேவாரந் திரட்டு, அன்னம்பட்டியம், இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவெளி, இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, கந்தபுராண வசனம், சூடாமணி நிகண்டு, திருக்குறள் மூலம், பரிமேலழகர் உரை, தொல்காப்பிய சூத்திரவிருத்தி, நன்னூல் விருத்தி உரை போன்றவற்றைப் பதிப்பித்தார்.

முடிவுரை

ஆறுமுக நாவலர் தனி ஒருவராக நின்று பல வழிகளிலும் சமயப் பணியினையும் மேற்கொண்டமைக்கு அவரது அஞ்சாமை, நேர்மை, உழைப்பு, ஒழுக்கம் ஆகிய உள்ளார்ந்த பண்புகள் அடிப்படையாக அமைந்தன. இவரின் பணிகள் சைவ சமய நிலைப்பேற்றுக்கும், சைவ சமய வளர்ச்சிக்கும், சைவ சித்தாந்த கோட்பாட்டிற்கும் வழிவகுத்தன. தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் *1879* ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் சிவபாதம் அடைந்தார்.

44. சைவ சமயக் காவலர் ஆறுமுக நாவலர்

முனைவர் சோ. பாண்டிமாதேவி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை ஆய்வு மையம்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

முன்னுரை

"ஆடும் தில்லை அம்பலவன் அடிகள் மறவா
அன்புடையோன்
பீடு பெறவே செந்தமிழைப் பேணி வளர்த்த பெரும்புலவன்
நீடு சைவம் நிலவுலகில் நிலவச் செய்த குருநாதன்
நாடு புகழும் ஆறுமுக நாவலர் பேர் மறவோமே"
-கவிமணி

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (1822-1879) என்ற பெயர் சைவ சமய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பெயராகும். தமிழுக்காகவும் சைவ சமயத்திற்காகவும் உயிர் வாழ்ந்தவர் என்ற கூற்று சற்று மிகையன்று.

நாவலரின் சொற்பொழிவுகள்

கிருத்துவக் கல்விச் சாலையில் பணியாற்றிய நிலையில் இவரது மனம் சைவ சமயத்தின் மீதே பற்றுக் கொண்டிருந்தது. அந்த உந்துதலின்படி சிவஞான போதம், சிவஞான சித்தியார், திருக்களிற்றுப் படியார், திருவருட்பயன், நெஞ்சுவிடு தூது, கொடிக்கவி, சிவப்பிரகாசம் முதலிய நூல்களைத் தாமே கற்றுணர்ந்தார். 1847-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் இவருடைய முதல் சொற்பொழிவு நடந்தது. அன்று முதல் வண்ணார் பண்ணையிலுள்ள வைத்தீசுவரன் கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சொற்பொழிவாற்றினார். மிகச்சிறந்த சொற்பொழிவாளர் என்பதால் இவருக்கு நாவலர் என்ற பட்டத்தை 1849இல் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியது.

திருவாவடுதுறை, திருநாகைக் கோரணம் ஆகிய இடங்களில் தங்கி இருந்து சைவ சமயச் சொற்பொழிவாற்றினார். இவரது பொழிவுகளைக் கேட்டவர்கள் மனம் மாறியதாகவும், நல்வழியில் தம்வாழ்வை அமைத்துக் கொண்டதாகவும் அறியமுடிகிறது. இவரது பொழிவுகள் மதம் மாறுபவர்களுக்கு (கிறித்துவ மதத்திற்கு) தடைக்கற்களாக இருந்தன. சைவ சமயம் சார்ந்த சொற்பொழிவுகள் மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றன. சைவ சமயம், அதன் கொள்கைகள், சைவர் வழிபடும் கடவுளர் இலக்கணம், சைவம் அணிய வேண்டிய சின்னங்கள், அவர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவதீட்சை, இகப்பேறு போன்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றியுள்ளார். சைவ சமயத்தைப் பாதுகாக்கும் காவலராக விளங்கியதோடு மட்டுமின்றி சைவ சமயம் விட்டுப் பிற சமயத்தைத் தழுவ இருந்தவர்களையும் தடுத்தாண்ட பெருமை ஆறுமுக நாவலருக்கு உரியதாகும்.

நாவலரின் சைவ சமயப் பற்று

ஆறுமுக நாவலரின் சைவ சமயப் பற்றுக்கு இவரது வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்று சான்று பகர்கின்றது. ஒரு முறை ஆறுமுக நாவலரின் சைவப் பற்றைச் சோதிக்க எண்ணிய, இவரது சகோதரர் தியாகராசர், தன் நண்பரின் மூலம் பெரியபுராணம் கதைகள் யாவும் கட்டுக்கதைகளே என்று கூறச் செய்தார். இதனால் சினம் கொண்ட நாவலர் அரிவாளைத் தூக்கிக் கொண்டு நமயனாரை வெட்டச் சென்றார். இதனைக் கண்ட உறவினர்கள் நாவலரைத் தடுத்ததாகக் கூறப்படும் செய்தி நாவலரின் சைவ சமய வெறியைக் காட்டுகிறது எனலாம்.

தான் பணி செய்யும் இடம் வேற்று சமயமான கிருத்துவ பள்ளியாக இருந்த போதும் பாதிரியாரிடம், திருநீறு பூசியே எக்காலத்தும் வேலைக்கு வருவேன் என்று நிபந்தனையிட்டார். நாவலரின் தமிழ் இலக்கிய அறிவின் ஆழத்தை உணர்ந்து கொண்ட பாதிரியாரும், இந்நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். ஒரு சிவனடியார் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற

விதிமுறைகளில் பிடிப்புக் கொண்ட இவர் சிவ வழிபாட்டிற்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும், புண்ணியங்களைச் செய்தலும். இவை இல்லாத வழிபாடு பத்தியும் இல்லாமல் உண்ணுகிற மருந்துக்குச் சமம் என்ற கருத்துடையர்.

பிற சமயத் தாக்குதல்களுக்காகவும், தற்காப்பிற்காகவும் சுய மதத் தெளிவிற்காகவும் சைவக் கொள்கைகளை ஆழ்ந்து படித்தார். ஆரிய சமாசம் நிறுவிய தயானந்தர் வேதகாலத்திற்குத் திரும்புங்கள் என்று கூறியது போன்று நாவலர், சிவாகமங்களுக்குத் திரும்புங்கள் என்றார். வேதத்தைக் காட்டிலும் ஆகமம் சிறந்தது என்றார். சிதம்பரத்தில் வேதாகமம் பின்பற்றுவதைக் கண்டித்தார்.

சைவ சமய விதிகளின்படி நடக்காத கோயில்கள் கடும் கோபம் கண்டார். யாழ்ப்பாணத்தில் பல சைவ கோயில்களை நிறுவினார். யாழ்பாண சமய நிலை தனது நூலில் கூறியுள்ளார். இலங்கு நகுலேசுவரம் சிவன் கோயில், போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்ட நிலையில், அக்கோயிலைப் புணரமைத்தனர். புலமைக் காய்ச்சல் கொண்டிருந்த நாவலர், 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக்கல்வி மோகம் மிகுந்திருந்த சூழலில் சமயத் தத்துவம் சார்ந்த புலமை விவாதங்களை அரங்கேற்றினார்.

நாவலரின் சைவ சமயப் பணிகள்

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை என்பதில் ஆழ்ந்த பிடிப்புக் கொண்டிருந்ததன் விளைவாகச் சைவோதய பானு என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிக்கையை நடத்தினார். இதன் மூலம் சைவ சமயத்தை மக்களிடையே பரப்பினர். ஈழத்தின் சைவ ஏழு ஞாயிறு என போற்றப்பட்டார். தமிழகம் போல் ஈழத்தில் சைவ மடங்களும் ஆதீனங்களும் இல்லாத நிலையில் ஒரே ஒரு அமைப்பாக இயக்கமாகத் திகழ்ந்தார்.

சிதம்பரத்தில் 1864-இல் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கி, ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் அங்கேயே தங்கி தமிழையும், சைவத்தையும் பரப்பினார். இவருடைய சைவ சமயப் பணிகள் அளவிடற்கரியன. சைவ

சமயத்தைப் பரப்புவதற்காக, வழிபாடு பற்றி தெளிவு தரல், குருமார்களுக்குப் பயிற்றுவித்தல், விழாக்கள் குறித்து விளக்குதல், இதழ்கள் நடத்துதல், சிவதீக்கை செய்துவித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டார். மேலும் சைவப் பரிகாரம் (கிறித்துவ கண்டனங்கள்) வச்சிரதண்டம் (கண்டன நூல்கள்) சைவ மித்தியாவத நிரசனம், சுப்பிர போதம் போன்ற துண்டு அறிவிப்புகள் மூலம் புற சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டார்.

தமிழ் மொழியின் மீதான பற்றின் காரணமாகப் பல்வேறு நூல்களைப் பிழையின்றி பதிப்பித்தார். தனது இல்லத்திலேயே ஓர் அச்சுக்கூடம் (வித்தியானுபாலனயந்திரசாலை) நிறுவி தமிழ் இலக்கியங்களையும், சைவ நூல்களையும் பதிப்பித்தார்.

மருட்பாவும் வழக்கும்

வள்ளலாரின் அருட்பா வெளியானது. அதற்கு மறுப்பாக மருட்பா என்ற நூலை எழுதி வெளியிட்டார். வள்ளலாரின் பாடல்கள் சமய மீறல்; தேவாரத்திற்கு இணையானது இல்லை ; இவை அருட்பா அல்ல. மருட்பா என்று தனிப்பட்ட சொல் தாக்குதல்களை வெளியிட்டார். இதன் அடிப்படையில் இரு அணிகள் உருவாகின. வள்ளலார் அமைதி காத்ததால் நாவலர் மிகவும் கோபம் அடைந்தார். அடிகளாரின் மீது அவமதிப்பு வழக்கு தொடுத்தார். ஆனால், ஆதாரம் இல்லை என தள்ளுபடி செய்யப்பட்டது.

அருட்பா மருட்பா போர் 20-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. பல ஆவணங்களைத் திரட்டி 1190 பக்கங்களில் அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு என்னும் நூலை ப.சரவணன் வெளியிட்டார். சாதியும் மதமும் சமயமும் பொய் என்ற வள்ளலாரின் கூற்று சைவ சமயத்தாரிடையே கடும் கண்டனத்தை ஏற்படுத்தியது.

சாதி சமய விகற்பங்கள் எல்லாம் தவிர்த்தே எவ்வுலகமும் சன்மார்க்கம் பொதுவடைதல் என்பதையும் வள்ளலார் வலியுறுத்தினார். வள்ளலார் எழுதிய பாடல்கள் அருட்பா என்பதற்குப் பதிலாக இராமலிங்கம் பிள்ளை பிரபந்தத் திரட்டு

என்றோ, இராமலிங்கம் பிள்ளை பாடல் திரட்டு என்றோ தான் கூறவேண்டும் என்று ஆறுமுகநாவலர் அறிக்கை வெளியிட்டார்.

போலி அருட்பா மறுப்பு என்ற பெயரில் 1868இல் அருட்பாவைத் தூற்றியும் ஆறுமுகநாவலர் எழுதினார். 1869-இல் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வள்ளலாரின் மீது வழக்கும் தொடர்ந்தார். இது இலக்கிய உலகில் மட்டுமல்லாது சமய உலகிலும் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழ், சைவம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள் அவ்விரண்டின் ஒளி குன்றாமல் இறுதி வரைக் காத்து பயன் கொள்வதே என் கடன். அவை ஆழப் பணி புரிவதே என் வாழ்வின் குறிக்கோள் என்று கூறியவர் ஆறுமுக நாவலர்.

பல சைவ நூல்களைப் படித்து அதன்மூலம் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கியுள்ளார். சொற்பொழிவாற்றும் திறனாலேயே நாவலர் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார். கிருத்துவ நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் திருநீறு பூசுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். வேதத்தைக் காட்டிலும் ஆகமம் சிறந்தது; சிவாகமங்களுக்குத் திரும்புங்கள் என்றார். சிவன் கோயிலைப் புணரமைத்தார். சைவோதய பானு என்ற பெயரில் பத்திரிக்கை நடத்தினார். சிதம்பரத்தில், சைவப் பிரகாச வித்தியாசாலை தொடங்கி அதன் மூலம் சைவத்தையும் தமிழையும் பரப்பினார். சைவ சயமத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டதோடு, புறச் சமயக் கண்டனங்களையும் வெளியிட்டார். வித்தியானுபால யந்திரசாலை நிறுவி தமிழ் இலக்கியங்களையும், சைவ நூல்களையும் பதிப்பித்தார். வள்ளலாரின் அருட்பாவை மறுத்து, அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு என்ற நூலையும் போலி அருட்பா மறுப்பு என்ற பெயரில் படைப்பையும் வெளியிட்டார் போன்ற செய்திகள் இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றன. இவரைச் சைவ சமயக் காவலர் என்பதை விட சைவ வெறியர் என்றே கூறலாம் என்ற கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது.

45. இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல்



க. வீரத்தமிழன்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

முன்னுரை

அழகிய கொன்றை மாலை அணிந்தவனும், திருநீலகண்டத்தை உடையவனும் இடப் பாகத்தில் உமையம்மையைக் கொண்டவனும், பிறை நிலவைச் சூடியவனும் தலையில் கங்கையைத் தரித்தவனும், புலித்தோலை அணிந்தவனும், இடபவாகனத்தை உடையவனுமாகிய எம்பெருமான் சிவபெருமானின் அடியவர்களுக்கு உணவளிக்கும் பெருந்தொண்டை இளையான்குடி மாறநாயனார் ஆற்றினார். அத்தகைய அடியாரின் விருந்தோம்பும் தொண்டு இங்கு மையப்படுத்தப்படுகிறது.

இளையான்குடி என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் மாறனார். இவரது மனைவி புனிதவதியார். சிவபெருமானின் அடியவர்கள் யாவாராயினும் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் பணியைத் தொண்டாகச் செய்து வந்தார். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை என்ற முதுமொழிக்கு ஏற்ப அவரது மனைவியும் சேர்ந்தே தொண்டாற்றினார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினை எழுதிய சேக்கிழார் அழகு விளங்கும் பொன்னம்பலத்தில் திருநடனம் புரியும் நடராசப் பெருமான் திருவடியை வணங்குபவராயும், சிவபிரான் அடிமைத் திறத்தில் விளங்கும் பண்பில் உண்டாகும் மேன்மையைக் கொண்டாடுபவராயும் நம்புவதற்கு உரிய தொன்மை மிகு வேளாளர் குலம் செய்த தவத்தின் பயனாய் இவ்வுலகின்

பெருமைக்குரியவராயும், இளையான்குடி என்னும் நகரில் மாறனார் விளங்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

அடியவர்களை வரவேற்கும் முறை

மாறநாயனார் சிவபெருமானின் அடியவர்களை எதிர்வந்து இருகைகளையும் கூப்பி வணங்கி அவர்களின் செவி குளிர இனிமையான சொற்களைக் கூறி வரவேற்று இல்லறத்திற்குள் அழைத்து அமருவதற்கு இருக்கை அளித்து பாதபூசை செய்து கனிவன்புடன் அர்ச்சனை செய்து பசியாறுவதற்கு அறுசுவை உணவைப் படைத்தருளினார் என்பதனைப்

"பத்திமுன் கூர வந்தெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென்மது ரப்பதம் பிரிவு
எய்த முன்னுரை செய்தபின் (பெரியபுராணம்-442)
கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துள்ளார்"
(பெரியபுராணம் 443)

என்ற பாடல் வரிகளின் மூலம் காணமுடிகிறது.

குபேரன் போன்ற செல்வத்தையுடைய மாறானார்

அழகிய திருவருள் நிறைந்த பொன்னம்பலத்தில் ஆடும் எம்பெருமானின் அடியவர்களுக்கு நாள்தோறும் அவர்கள் மனம் மகிழ்ச்சியை அடையுமாறு அமுதளித்து பேரருட் செல்வத்தைப் பெற்ற மாறநாயனார் ஈசனார் தோழனான குபேரன் போன்று விளங்கினார் என்பார் சேக்கிழார். இதனை,

"ஆளும் நாயகர் அன்பர் ஆனவர்

அளவி லார்உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
தோளினார் அளகைக்கு இருத்திய தோழனார்''
(பெரியபுராணம் 444)

என்ற பாடல் வரிகளில் குறிப்பிட்டுள்ளார். அடியவர்களுக்கு விருந்தோம்ப வேண்டும் என்னும் பண்பினைத் திருமூலர் ஓவியம் போன்று காட்சியளிக்கும் மாடங்களையுடையக் கோயில்களில் இறைவனுக்கு ஏதேனும் படையல் செய்தால் அது நடமாடும் மாடக் கோயிலாக விளங்கும் சிவனுடைய அடியார்க்கு வந்து சேராது ஆனால் நடமாடும் கோயிலாக விளங்கும் சிவனடியார்க்கு ஏதேனும் ஒன்றைக் கொடுத்தால் அது படமாடக் கோயிலில் உள்ள இறைவனுக்கு சேரும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனைப்

படமாடக் கோயில் பகவற்கொண்டு ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயின்
படமாடக் கோயில் பகவற்க தாமே (திருமந்திரம் 1857)

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது.

மாறநாயனாரின் வறுமை நிலை

ஆடியவர்களுக்கு விருந்தோம்பும் மாறநாயனாரைச் சோதிக்கும் பொருட்டு சிவபெருமான் அவருடைய செல்வம் மெல்ல மெல்ல குறைந்து வறுமை நிலை அடையுமாறு செய்தார். எத்தகைய வறுமை நிலையடைந்தாலும் மனத்தினால் தளர்வுறாத வராகிய மாறநாயனார் விருந்தோம்பும் பண்பை கைவிடவில்லை. கடன் வாங்கியும் வீட்டில் இருந்த பொருட்களை விற்றும் எம்பெருமானின் அடியவர்களுக்கு விருந்தோம்பினார். இதனைக்

கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறுஇல் திருப்பணிக்கண்
முதிர்ந்த கொள்கையர் ஆயினார்
(பெரியபுராணம் 446)

என்ற பாடல்வரிகளின் மூலம் சேக்கிழார் எடுத்துரைக்கிறார்.

தவவேடம் கொண்ட சிவபெருமான்

திருமாலும், பிரம்மனும் காணமுயன்றும் காண இயலாத திருவடியையும் முடியையும் உடைய எம்பெருமான் இடப வாகனமின்றி உமையம்மையும் இன்றி தவவேடம் பூண்டு மாறநாயனார் வீட்டிற்கு அடியவர் போல் எழுந்தருளினார் என்பதைக் கீழ்காணும் பாடல்வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

பேற்றம் ஊர்வதும் இன்றி நீடிய
பேதையாள் உடன் இன்றியோர்
நற்ற வத்தவர் வேடமே (பெரியபுராணம் 447)

அடியவராக வந்தவர் என்னப்பன் சிவபிரான் என்றறியாத மாறநாயனார் இரவுப் பொழுதில் தான் பசி உற்றிருந்த பொழுதும் வந்தவரை மனைக்குள் அழைத்து மழையில் நனைந்தபடி இருந்தவரின் மேனியைத் துடைக்க செய்து, அமருவதற்கு இருக்கை தந்தார்.

காதலன் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கை கொடுத்தே என்றார் பாரதியார். அதற்கு ஏற்றார் போல் மாறநாயனாரின் உற்ற துணையாகிய புனிதவதியார் இன்று பகல் வயலில் விதைத்த முளையுடைய நெல் மணிகளை வாரிக்கொண்டு வந்தால் நல்ல அமுது செய்விக்க முடியும் என்று கூற, நாயனாரும் அவ்வாறே கார் இருள் சூழ்ந்திருந்த பொழுதும் தலையில் கூடையைக் கவித்துக் கொண்டு தன் கால் அறிந்த வழி சென்றுநெல்மணிகளைச் சேறுடன் வாரிக் கொண்டுவர சிறந்த இல்லாள் ஆன அவரின் துணைவியார் நெல்மணிகளைச் சேறு நீக்கி, சமைப்பதற்கு அடுப்பு மூட்டுவதற்கு விறகு இல்லாத நிலையில் தன் வீட்டுக் கூரையாகிய மரச்சட்டங்களை வைத்து நெல் மணிகளை நல்ல அரிசியாகப் பக்குவப்படுத்தி சோறு சமைத்தாள் அக்கற்புகரசி.

மேலும் கறியுணவு சமைப்பதற்கு ஏதும் அற்ற நிலையில் தன் மனையில் பயிர் செய்த குரும்பயிர்களை நாயனார் பறித்து

வந்து தர, அவற்றையும் பக்குவப்படுத்தி வேறு வேறாகக் கறியமுது செய்தார் அவ்வம்மையார். இதனைப்

''பகல் வித்திய செந்நெல்
முல்லில் நீர்முளை வாரிக்கொடு வந்தால்
வல்லரவாறு அமுது ஆக்கிலும் என்றார்''
(பெரியபுராணம் 452)

அந்தமில் மனையில் நீடும்
அலக்கினை அறுத்து (பெரியபுராணம் 458)

என்ற பாடல் வரிகளின் மூலம் அவ்வமையின் இறையன்பை விளக்குகிறார் சேக்கிழார். செல்வம் இருக்கும் பொழுது விருந்தோம்பல் செய்வது சிறப்பு. அதனை விட வறுமையுற்ற போது செய்யம் விருந்தோம்பல் இன்னும் சிறப்பாகும். அப்படித் தாங்கள் பசியுற்ற பொழுதும் அடியவர்களுக்காக விதைத்த நெல்மணிகளைச் சமைத்து அமுது விருந்தோம்பிய மாறநாயனாரையும் அவர் துணைவியாரையும் கண்டு எம்பிரான் சிவபெருமான் உமாதேவியோடு காட்சியளித்து முக்தி வழங்கினார் என்பர். இத்தகைய விருந்தோம்பும் பண்பும், அடியவரை வணங்கும் பண்பும் நம் அனைவர் மனத்திலும் விளங்கட்டும்.

46. சைவத் தமிழ் வளர்த்தப் பெண்புலவர் காரைக்காலம்மையார்

நாகரத்னம் சுதர்சினி
விரிவுரையாளர், மொழிகள்துறை
சமூகவிஞ்ஞானங்கள், மொழிகள் பீடம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

முன்னுரை

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களின் அடிப்படையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் சைவசமயம் வேதநாகரிகத்திற்கும் முற்பட்டது. இறைவன் ஒருவரே, அவர் ஆதியும், அந்தமும் அற்றவர்; பிறவிப் பெருங்கடலில் அல்லலுறும் ஆன்மாக்களைக் காத்து முக்தியளிக்கும் மூத்தவன்; அவரே சிவன் என்று சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு உதித்தெழுந்த சைவமானது சங்ககாலத்திற் தமிழகத்திற் வளர்ச்சியுற்றது எனலாம். தமிழரின் நாகரிகம் சிந்துசமவெளியோடு தொடர்புடையத் திகழ சைவசமயம் வேத நாகரிகத்திற்கு முற்பட்டதாகத் திகழ்கின்றது. எனினும் தமிழரின் வாழ்வில் சைவமும் தமிழும் சைவமும் இணைந்தே பேசப்படுகின்றன. தமிழின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் முதன்மையான கடவுள் படைப்புக் கொள்கையும் தமிழைச் சைவத்தோடு தொடர்பு படுத்தி விளக்கி நிற்கின்றது.

"ஆதி சிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்"

மேற்கூறப்பட்ட பாரதியின் தமிழ்த்தாய் என்ற தேசிய கீதத்தின் அடிகளும் அதனையே விபரித்து நிற்கின்றன. அதாவது தமிழ்மொழி சிவனால் தோற்றுவிக்கப்பட்டு அகத்தியனால் இலக்கணம் கூறப்பட்டு வளர்ச்சியுற்றதாகக் கூறப்படுகின்றது.

ஆகவே தமிழும் சைவமும் நெருங்கிய தொடர்புடையவை எனலாம்.

தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் பாடுவனவாகத் தொகுக்கப்பெற்று பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வகைப்படுத்தப்பட்ட சங்ககாலத்திலே தமிழினதும் சைவத்தினதும் வளர்ச்சி செம்மையாகக் காணப்பட்ட போதிலும் தமிழகம் அந்நியரின் ஆட்சிக்குட்பட்ட இருண்ட காலமென அறிஞர்களால் வர்ணிக்கப்படும் சங்கமருவிய காலத்திலே தமிழ் வடமொழியோடும், சைவம், சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய மதங்களுக்கு இணையாகவும் போட்டியிட வேண்டிய சூழ்நிலையேற்பட்டது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டுத் தொடக்கம் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழகம் களப்பிரர் எனும் அந்நியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தமிழும் சைவமும் நலிவுற்றிருந்த இத்தகைய காலப்பகுதியில் காரைக்காலில் தனதத்தன் எனும் வணிகனுக்கு மகளாகப் பிறந்தவர் காரைக்காலம்மையார். இவரது இயற்பெயர் புனிதவதியாகும். இவர் வணிகர் குலத்தில் தோன்றியவர் என்பது பெரியபுராணத்தில் கூறப்படுகின்றது.

பரமதத்தன் என்பரை மணம் முடித்து இல்லற வாழ்வில் ஈடுபட்ட இவர் இறைபக்தியிலும், பதிபக்தியிலும் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார். இல்லறத்தின் இனிய பண்புகளில் ஒன்றாகப் போற்றப்படும் விருந்தோம்பற் பண்பிலும் சிறந்து விளங்கினார்.

“இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு”

என்ற வள்ளுவரின் கூற்றிற்கிணங்க அடியார்களின் பசி தீர்ப்பதையே வாழ்வின் தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர். கணவன் அளித்த இருமாங்கனிகளில் ஒன்று தனக்குரியது என்றெண்ணி வந்த சிவனடியார்க்கு அதனை வழங்கி மகிழ்ந்தவர். கணவனுக்குரியதை வழங்கிய போது அதன் சுவையில் கவரப்பட்டு மற்றொன்றையும் கொண்டு வரச் சொல்ல அம்மையார் முன்செய்தது போல இறைவனிடமிருந்து கனியொன்றைப் பெற்றுக் கொடுக்கின்றார். அக்கினி

பரமதத்தன் கைகளைச் சென்றடைந்ததும் காணாமற் போய்விடுகின்றது. அன்னை சாதாரண மனிதப் பிறவியல்ல அவர் போற்றி வணங்குதற்குரியவர் என்றெண்ணி அன்னையை விட்டுச் சென்று மறுமணம் புரிந்து இல்வாழ்க்கையைத் தொடர்ந்த பரமதத்தன் தன் மனையாளோடு அம்மையாரின் பாதம் பணிந்து அவ்விருவருக்கும் பிறந்த பெண் சிசுவிற்கு போற்றுதற்குரி தங்களின் பெயரையே சூட்டியுள்ளேன் எனக்கூறி பாதங்களில் வீழ்ந்து வணங்கியது மட்டுமின்றி உறவினர்களையும் வணங்கச் செய்கின்றார். தன்னிலையுணர்ந்த தாய் மானுட நிலையிலிருந்து வேறுபட்டு பேய்நிலையினை விரும்பிப் பெற்றுத் தலையால் நடந்து இறைவனைத் தரிசித்ததாக கூறபபடுகின்றது.

''பெறினும் பிறிது யாதும் வேண்டேம்; நமக்குஈது
உறினும் உறாது ஒழியுமேனும் சிறிது உணர்த்தி
மற்றொரு கண் நெற்றிமேல் வைத்தான் தன் பேய் ஆய
நற்கணத்தில் ஒன்றாய நாம்''

என்ற பாடலினூடாக அன்னை சிவனது நற்கணங்களில் ஒன்றான பேய் வடிவத்தை விரும்பிக் கேட்பதைக் காணலாம். இவரது எற்புடம்பான பேய் வடிவம் இறைவனால் பெருமை சேர் வடிவு என்றழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பக்திநெறி, இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டமைந்த நாயகி - நாயக பாவனை, ஆண்டான் அடிமை முறையாகிய தாசமார்க்க முறை, மகன்மை முறை, நண்பர்கள் முறை, குருசீடன் முறை என பல முறைகளில் வெளிப்பட்டு நிற்க அன்னை தாய்மை - மகன்மை நெறியில் இறைவனை அடையும் புதியநெறியின் பூர்வாங்கத் தோற்றுவிப்பாளராகத் திகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருண்ட காலப்பகுதியிலே ஆட்சியாளர்களின் துணையின்றிப் போனாலும் சைவமும் தமிழும் தலைத்தோங்கப் பெரும்பாடுபட்ட அறிஞர்களுள் மிகவும் முக்கியமானவராக இவர் கருதப்படுகின்றார். திருத்தொண்டர் தொகையிலே,

''பெருமிழலைக் குறுப்பார்க்கும் பேயார்க்கும்

அடியேன்''

என்று சுந்தரால் போற்றப்படும் காரைக்காலம்மையார் அந்நியரின் ஆட்சியிலே நலிவுறுற்றிருந்த சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டவராகத் திகழுகின்றார். இவரது பணிகள் தொடர்பில் சுப்புலெட்சுமி மோகன் வருமாறு கூறுகின்றார். தென்னிந்திய இசையின் தாய் எனப் போற்றப்படும் காரைக்காலம்மையார் 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் பக்தி இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்ட பெருமை இவரையே சாரும். இவருக்குப் பின் தோன்றிய தேவார முதலிகள் எனப்படும் மூவரும் எண்ணிக்கை அளவில் அதிகமான பாடல்களைப் பாடி இருந்தாலும், அவர்களுக்குப் பாடும் முறை, பதிக அமைப்பு, கருத்து அமைப்பு, பண் முதலியவற்றிட்கு வழிகாட்டியாக இருந்துள்ளவர் இவரே. ஒரு சிறந்த இயல் அறிவும், இசை அறிவும் கொண்ட இசை இயல் புலவராக உள்ள காரைக்கால் அம்மை ஒரு பெண்புலவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவள் நம்மைப் பேணும் அம்மை என சிவன் கூறியதாகப் பெரியபுராணத்திலே கூறப்பட்டுள்ளமையானது அம்மையார் சைவம் போற்றப் பிறந்தவர் என்பதைத் தெளிவுறுத்துகின்றது. இவ்வாறு சைவத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு அதனை அழிவுப்பாதையிலிருந்து சீர்தூக்கியவராக அம்மையார் காணப்படுகிறார். அதேபோல் தமிழ் இலக்கியத்துறைக்கு இவர் ஆற்றிய சேவைகளும் அளப்பரியன. வடிவமாற்றம், பாடுபொருளில் மாற்றம் என அம்மையார் செய்தவை ஏராளம். பதிகத்திலிருந்து கீர்த்தனை எனும் நீண்டதோர் மரபிற்கு வழிவகுத்தவராகக் காணப்படுகின்றார். சங்க இலக்கியங்கள் அனைத்தும் குறைந்த பாடலடிகளைக் கொண்டவையாகவும் இசைப்பாடல்கள் அல்லாதவைகளாகவும் காணப்பட்டன. எனினும் காரைக்காலம்மையாரின் பாடல்களில் தான் முதன்முதலில் இசைப்பாடல் வடிவம் தோற்றம் பெற்றது. எனவே தான் தமிழ் இசையின் தாய் என்று அழைக்கப்படும். காரைக்காலம்மையார் முதன் முதலில் எமக்குப் பண் தந்தவர் என்று கூறப்படுகின்றார். இவ்வாறாக இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 143, அற்புத திருவந்தாரி -101, திருவிரட்டை

மணிமாலை-20, மூர்த்த திருப்பதிகம்-22. மேற்கூறப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதும், அம்மையாரைவிட சிறப்பான பல பாடல்களைப் பாடிய நாயன்மார்கள், புலவர்கள் பலர் இருக்க அம்மையார் மட்டும் தனிச்சிறப்புடையவராகத் திகழுவது பற்றிச் சிந்தித்தோமானால் அதற்குப் பல காரணங்கள் காரணமாய்த் திகழுகின்றன. தென்னாட்டிற்கு மட்டும் என்றிருந்த சிவனை எந்நாட்டிற்கும் இறைவனாகப் போற்றிப்பாடியது.

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

இவை மாணிக்கவாசகரின் அடிகளாகக் காணப்பட்ட போதிலும் இச்சிந்தனையின் வித்துக்களை விதைத்த பெருமைக்குரியவராக அம்மையார் காணப்படுகின்றார். சமயம் என்பது அறிவைச் சார்ந்தது அல்ல. அது இதயத்தோடு தொடர்புடையது என்று கூறி மக்களிடையே பரந்த மனப்பாங்கு வளர அடித்தளமிட்ட இவரின் மேற்கூறப்பட்ட சிந்தனையின் தார்ப்பரியமே பக்தி இயக்கங்களின் பரிணாமத்திற்கு வழிகோலியது எனலாம். அற்புதத்திருவந்தாதியிலே,

''பிறந்து மொழிபயின்ற பின் எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்''

அதாவது மழலை பேசியதிலிருந்தே பலன் எதுவும் எதிர்பாராது இறைவன் மீது அன்பு செலுத்தியவர். இறைவனின் திருப்பாதங்களினைச் சரணடைவதை மட்டும் நோக்கமாகக் கொண்டவர். இறை அருளை அடைதல் எல்லோர்க்கும் எளிது என்பதை, பெண் என்ற தடையினைத் தாண்டியும் இல்லறமெனும் நல்லறத்தில் ஈடுபட்ட இல்லத்தரசி என்ற இடரினைத் தாண்டியும் இறை அருளைப் பெற்று நிதர்சனமாக்கினார்.

இரட்டைமணிமாலை, வெண்பா, கலித்துறை எனும் இருவகை யாப்புவகைகளைக் கொண்டு இருபது பாடல்கள் உள்ளடங்கலாக ஒரே பொருளினை அல்லது ஒரே கருத்தினைப்

பாடப்படும் சிற்றிலக்கிய வகையாகும். அதாவது இருவேறு மணிகளால் தொடுக்கப்பட்ட மாலையைப் போல் அழகு தருவது அம்மையார் இவ்வடிவத்தினைக் கொண்டு திருவிரட்டை மணிமாலை எனும் இலக்கியத்தினைப் படைத்ததோடு மட்டுமல்லாது,

> ''வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்
> இந்த இருபதிரட்டை மணிமாலை''

என்ற பன்னிருபாட்டியலின் இலக்கணத்தினை மீறி கலித்துறை முதலாக வெண்பா தொடர்ந்து வருமாறு பாடி திருவிரட்டைமணி மாலையினைச் சைவத்துக்கும் தமிழுக்கும் வழங்கியுள்ளார். மேலும் திருக்கோவையார் எனும் நூலினைக் கட்டளைக் கலித்துறையில் பாடி நாயன்மார்கள் பல பதிகங்கள் பாட வழிகோலியவராகத் திகழுகின்றார். தெய்வத்தைப் பாடுப்பொருளாகக் கொண்டு பக்திநெறியில் பாடப்படுகின்ற பத்துப் பாடல்கள் கொண்ட பதிகம் என்ற அமைப்பிற்கு முன்னோடியாகத் திகழ்ந்த இவரது படைப்பு மூத்த திருப்பதிகம் ஆகும். அம்மையே என்றழைத்த இறைவன் வேண்டுவன கேள் என்றுரைக்க,

> ''பிறவாமை வேண்டும் மீண்டும்
> பிறப்புண்டேல் உன்னை என்றும்
> மறவாமை வேண்டும் ''

எனவும் அவர் சிவன் ஆடுகின்ற போது தான் மகிழ்ந்து பாடி அவர் திருப்பாதங்களின் கீழ் இருக்கவேண்டும் எனவும் இறைவனிடம் வேண்டிப் பெற்றதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. பிறவிப் பெருங்கடல் எனும் துன்பத்தில் மூழ்கித் தவிக்காது இறைவனையே சரணாகதியாக எண்ணி அவரின் திருப்பாதங்களில் இருக்கும் பேறுபெற்ற இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் உள்ள மூன்று பெண் நாயன்மார்களுள் ஒருவராகவும் ஏனைய நாயன்மார்களைவிட வேறுபட்ட நிலையில் அதாவது அமர்ந்த நிலையில் இருக்கும் பெருமைபெற்றவராகவும் திகழ்கின்ற அம்மையார் சைவம் வளர்த்தவர் என்ற வகையிலும் தமிழ் இலக்கிய கருவூலத்திற்கு வளம் சேர்த்தவர் என்ற வகையிலும் போற்றிப் பாடத்தக்கவராகத் திகழுகின்றார்.

47. சைவத் தமிழ் வளர்த்த சிற்றிலக்கிய வேந்தர் குமரகுருபர அடிகள்

புலவர் மா.கந்தசாமி
தஞ்சாவூர்

தோற்றமும் இளமைப் பருவமும்

தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்து சிற்றிலக்கியங்கள் செல்வாக்குடன் வளரத் தொடங்கின. கம்பர், ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் போன்றோர் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குத் துணைநின்ற பெரும் புலமையாளர்கள். இவர்களுக்கு முன்னரே கலம்பகம், பாவை போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் பிற்காலத்தில் தான் பல சிற்றிலக்கிய நூல்கள் தோன்றின ; சிற்றிவலக்கியச் செம்மல்கள் போற்றப்பட்டனர். அவர்களுள் நெஞ்சில் நிற்கும் பேரருளாளராக விளங்கியவர் குமரகுருபர அடிகளும் ஒருவராவர். தமிழ்த்திரு அருமறைகளை வழங்கிய அடிகள் தமிழன்னையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடிய புலமையாளர்.

தென்பாண்டியத் தமிழ்நாட்டில் திருவைகுண்டத்திற்கு வடபாலுள்ள கயிலாபுரத்தில் சைவ வேளாளர் மரபில் சண்முகசிகாமணி கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் அருமை மகனாகக் கி.பி. 1625ஆம் ஆண்டு ஆனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் குமரகுருபரர் தோன்றினார். இளமையில் 5 ஆண்டு காலம் பேசுகின்ற ஆற்றல் இல்லாதவராகவிருந்தார்; பெற்றோர் பெரிதும் துன்புற்று வருந்தினர். திருச்செந்தூர் சென்று, செந்திலாண்டவர் முன்னிலையில் பிள்ளையைக் கிடத்தி இறைவனின் திருவருளை வேண்டினர். அவ்வேளைதனில் திருமுருகன் திருவருளால் பேசுகின்ற ஆற்றல் மட்டுமின்றி, கவிபாடும் ஆற்றலும் இவருக்குக் கிடைத்தது. முருகனின் திருவருள் பேற்றினை நினைந்து அவர்மீது கந்தர் கலிவெண்பா பாடினார்.

''பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்த்த
போதமுங் காணாத போதமாய்...''

எனத் தொடங்கும் கந்தர் கலிவெண்பா பாடினார்.

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்த னென்று சொல்லக் கலங்குமே செந்தினகர்ச்
சேவகா வென்று திருநீ றணிவார்க்கு
மேவ வாராதே வினை''

என்று உள்ளம் உருகப் பாடினார். பின்னர் தாம் தோன்றிய திருவூரில் எழுந்தருளியிருக்கும் கயிலாசநாதர் மீது கயிலைக் கலம்பகம் பாடியருளினார்.

பாண்டியநாடு செல்லல்

இவர் பாண்டிய நாடு செல்லுங்கால் திருமலை நாயக்க மன்னர் ஆட்சியில் இருந்தார். மதுரைக்குச் சென்ற குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடினார். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேறுங் காலத்தில் மீனாட்சி அம்மையே குழந்தை வடிவாக அமர்ந்திருந்துக் கேட்டு மகிழ்ந்தாள். முத்தப்பருவம் அரங்கேறும் போது, தம் திருக்கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றை குமரகுருபரர்க்கு அணிவித்து விட்டு அம்மை மறைந்ததாகக் கூறுவர். அதனைத் தொடர்ந்து மீனாட்சி அம்மை கலம்பகம், மீனாட்சி அம்மை குறம் பாடினார். திருமலை மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கத் திருக்குறளின் பிழிவாக நீதிநெறி விளக்கம் என்னும் அறநூலைப் பாடியருளினார். திரிசிரபுரம் வித்துவான் சி.தியாகராச செட்டியார் இந்நூலைப் பற்றிக் கூறும்போது, ''திருக்குறள் பருவத்திலே பெற்ற பிள்ளை'' என்பார்.

''தெய்வத் தமிழ்க்கூட றழையத் தழைத்தவள்
திருப்பவள முத்தமருளே''

என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடலும் மக்கள்

நலங்காக்கும் இயல்பினை,

"வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பில்
தூங்குங் களிறோ துயறோ - ஆங்கது கொண்டு
ஊரும் எறும்பிங்கு அருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோடு அயின்று"

என்று நீதிநெறி விளக்கப்பாடலும் சிறப்பித்துக் கூறும்.

காவிரி வளநாடு சேர்தல்

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறைாய்த் தரிசிப்பின்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்னும் அருள்மொழிக்கேற்பச் சோழநாட்டுத் திருக்கோயில்களைக் கண்டு வழிபட்டு வருங்கால் திருவாரூர் சென்றார். அப்பெருமான் மீது திருவாரூர் நான்மணிமாலை பாடினார். அறிவாசான் திருவருள் பெற்று உய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்ற, தருமபுரம் திருமடத்திற்குச் சென்றார். அங்குத் தவத்திரு. மாசிலாமணி தேசிகரைக் கண்டு வணங்கி, துறவுநிலை அருளவேண்டினார். தேசிகரும் காசிக்குச் சென்றுவரப் பணித்தார். காசிக்குச் சென்றுவரக் காலந்தாழ்க்குமே என்று தயக்கத்தை வெளிப்படுத்தி பணிந்து நின்ற வேளையில், "அப்படியாயின் தில்லை சென்று, ஈசனிடம் திருவருளை வேண்டி வா" என்றார். குருவருளைச் சிந்தையில் தேக்கியவராய்ச் செல்லும் வழியில் புள்ளிருக்கு வேலூரில் குடிகொண்ட இறைவனை வணங்கி, அவர்மீது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடினார்.

தொடர்ந்து, தில்லைக்குச் சென்று வழிபாடு செய்தார். ஈசன் மீது சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை பாடினார். பின்னர் தருமபுரம் வந்து குருமூர்த்தி மீது பண்டார மும்மணிக்கோவை பாடிக் குருவருளைப் பெற்றார்.

காசிக்கரையில் அடங்குதல்

வடநாடு சென்று காசியில் தங்கினார். தம்

அறிவாற்றலாலும் தவச் சிறப்பினாலும் தில்லியை ஆண்ட பாதுசாவின் உள்ளத்தைக் கவர்ந்தார். இந்துத்தானி மொழியைக் கற்றுப் புலமை பெற்றார். புலமை மிக வேண்டி சகலாகலா வல்லிமாலை பாடினார். மன்னரின் ஆதரவுடன் அங்கேயே திருமடம் எழுப்பித் தங்கினார். காசிக்கலம்பகம், காசித்துண்டி விநாயகர் பதிகம் போன்ற நூல்களை எழுதினார். மடத்திற்கு வந்தனைந்த மெய்யன்பர்களுக்கு உணவும் அறநெறியும், அருள்நெறியும் வழங்கி உணர்வு பெற அருளினார். இவ்வாறு அறிவுச் செல்வத்தை வரையாது வழங்கிய குமரகுருபர அடிகள் கி.பி. 1688ஆம் ஆண்டு வைகாசித் திங்கள்; கிருட்டினபட்சத்து திருதியில் 63-ஆம் அகவையில் இறைவன் திருவடியின் கீழ் அடங்கினார்.

சிற்றிலக்கிய வேந்தரின் நூற்றிறன்

''அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன் மையுங்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலும்
இன்னோர் அன்ன தொன்னறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்
அறனே பொருட்பயன் இன்பெறு மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலை''

என நன்னூல் சிறப்புப் பாயிரத்தில் கூறுவது போல, தனது விரிந்த தன்மையாகிய அருளினாலே உயிர்களின் மனத்தீது இருளாகிய அவ்விய நெஞ்சத்தில் தோன்றும் எண்ணங்கள் கெடும்படியாக, மாட்சிமைப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பொருளையு;ம் தாமெழுதிய நூல்களில் விருப்புடன் அருளிச் செய்தார்.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅர் எனின்''

என்ற தமிழ்மறையின் கருத்தினை நெஞ்சில் தேக்கியவராய் அனைத்து நூற்களையும் சிறப்புடன் எழுதினார்.

''அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே''

என்ற நன்னூல் நூற்பாவின் பாடி, இந்நான்குமே பயனாகும் படி நூற்களைப் படைத்து அருளினார்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுபா னாகு - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

தமிழுலகிற்குப் படைத்தளித்த நூற்கொடைகள்

குமரகுருபர அடிகள், தாம் வாழ்ந்த 63 ஆண்டுகளில் 16-க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தளித்திருப்பதாக அறியமுடிகின்றது. அவரது பிரபந்த திரட்டு என்பது முதற்பதிப்பாகக் கி.பி. 1889ஆம் ஆண்டு (விரோதியில்) சிதம்பரம் ஈசானிய மடம் தவத்திரு. இராமலிங்கசாமி அடிகள், சீமான்பூண்டி அரங்கநாத முதலியார் பொருளுதவியால் வெளியிட்டார் என்று உ.வே.சா அவர்கள், 1939-ல் குறிப்புரை ஆராய்ச்சி உரையுடன் பதிப்பித்த குமரகுருபர சாமிகள் பிரபந்தர் திரட்டு நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். அந்நூல் தரும் விளக்கங்களுடன் அடிகளின் படைப்புகளைக் கீழே காணலாம்.

1. கந்தர் கலிவெண்பா - 122 கண்ணி
2. கயிலைக் கலம்பகம் - 103 உறுப்பு
3. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் - 103 செய்யுள்
4. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை - 20 செய்யுள்
5. மதுரைக் கலம்பகம்
7. நீதிநெறி விளக்கம் - 102 வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை - 40 உறுப்பு
9. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 100 செய்யுள்
10. சிதம்பர மும்மணிக்கோவை - 30 உறுப்பு
11. சிதம்பேரச் செய்யுட்கோவை - 83 உறுப்பு
12. தில்லை சிவகாமியம்மை இரட்டை மணிமாலை - 20செய்யுள்
13. பண்டார மும்மணிக்கோவை - 32 உறுப்பு
14. காசிக்கலம்பகம் - 100 உறுப்பு
15. சகலாகலா வல்லிமாலை - கட்டளைக் கலித்துறையில் 10 செய்யுள்

16. காசித்துண்டி விநாயகர் பதிகம்

முடிவுரை

தமிழோடு வடமொழி புலமையும் உருது, இந்துத்தானி ஆகிய பிறமொழிப் புலமையும் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். சைவத்தையும் தமிழையும் தம்மிரு விழியாகக் கொண்ட பெருமான். மாற்றுச் சமயத்தாரின் மனங்கவர்ந்து காசியில் மடம்சமைத்த செந்தமிழ் அந்தணர்; சமயப்பொறை உடையோர்; யாப்பின் சிறப்பறிந்து நூல்களை யாத்த பெருமான். அடிகளின் திருவடி வணங்கி அவர்தம் நூல்களை ஓதியுணர்வோம்! பயன்பெறுவோம்!

''தமிழ்மணங் கமழும் மகலையம் பதிவாழ்
ஞானசம் பந்தனை வணங்கின்
ஈசனம் பந்த மில்லைவீ டெளிதே''

(பண்டார மும்மணிக்கோவை)

48. சைவத்தமிழ் நெறி வளர்த்த அறிஞர் யாழ்ப்பாணம்-தென்கோவை பண்டிதர் ச.கந்தையபிள்ளை



முனைவர் நாக.செங்கமலத்தாயார்
ஆராய்ச்சி உதவியாளர், பொறுப்பாளர் (பணிநிறைவு)
மகாகவி பாரதியார் நினைவு
அருங்காட்சியகம் - ஆய்வு மையம்
புதுச்சேரி

முன்னுரை

தென்னிந்தியாவின் தென்கீழ்த் திசையில் உள்ள ஒரு தீவு இலங்கை. இதற்கு ஈழநாடு என்னும் பெயரும் உண்டு. கடைச்சங்கப் புலவருள் ஒருவரான மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் இவ்வீழத்து மரபினராவார். ஈழநாடு பண்டுதொட்டு முத்தமிழுக்கு உறைவிடமாய் விளங்கி வந்துள்ளது. இந்நாட்டின் பெருமைக்குக் காரணமாய் விளங்கிய புலவர் பெருமக்களுள் தமிழையும், சைவத்தையும் ஒருங்கே வளர்த்த பெருமைக்குரியவர் யாழ்ப்பாணம் தென்கோவை பண்டிதர் ச.கந்தையபிள்ளையவர்கள்.

ஈழநாட்டின் வடபாகத்தில் உள்ள நாடு யாழ்ப்பாணம். இதற்கு மணற்றி என்பது முற்பெயர். யாழ்ப்பாணத்தில் உள்ள கோவையம்பதியைச் சார்ந்த இருபாலை என்னும் ஊரில் வாழ்ந்த பெரும்புலவர் நெல்லைநாத முதலியாரின் புதல்வரே பெரும்புலவர் சேனாதிராய முதலியார். சேனாதிராய முதலியாரின் மகள் வழிப் பெயர்த்தி காமாட்சியம்மையாருக்கும் கோப்பாய் என்னும் ஊரில் வாழ்ந்த சபாபதியாருக்கும் 1880 ஆம் ஆண்டு பிறந்தவரே பண்டிதர் ச.கந்தையபிள்ளை (பிறந்த தேதி தெரியவில்லை) இதனைப்

''புண்ணியம் ஒருங்கே நண்ணிய ஈழ
மண்டலம் அதனில் ஒண்தல மாம்யாழ்ப்
பாணம் என்னும் மாணமர் நாட்டிற்
பல்வகை வளனும் மல்கிய கோவைப்
பதியினிற் புலவனாய் வதிந்த சேனாதி
ராய முதலியின் தூய மரபினைக்

கிளத்த உதித்த களங்கமில் பண்டிதன்
உமாபதிக் கன்பனாஞ் சபாபதி செய்தவம்
திறங்க உதித்த அறங்கிளர் புதல்வன்''

என்ற திரு. கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை இயற்றிய நினைவுப் பாமாலையால் அறியலாம். கந்தையபிள்ளை சிறுவயதில் தென்கோவை சின்னப்பா பிள்ளையிடத்தும் உதயபானு பத்திராதிபர் க.சரவண முத்துப்பிள்ளையிடத்தும் இலக்கண, இலக்கியங்களையும், சமய நூல்களையும் பயின்றவர் என்று கலாநிதி, க.கைலாசபதி குறிப்பிடுகின்றார். இவர் தமிழ்மொழி மட்டுமின்றி வடமொழி, ஆங்கில மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். பின்னர் மட்டக்கிளப்பில் வாழ்ந்து வந்த வெள்ளியந் திருமலைக்கிழார் என்ற புனைப் பெயரையுடைய கைலாயப் பிள்ளையவர்களிடம் இலக்கண, இலக்கிய நூல்கள் மட்டுமின்றி தருக்க நூல்களையும் பயின்றார். மட்டக்கிளப்பில் கைலாயப் பிள்ளையவர்களால் அமைக்கப்பட்ட சைவ வித்யாசாலைக்குத் தலைமை ஏற்று மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவதில் சிறந்து விளங்கி அனைவரின் பாராட்டைப் பெற்றார்.

இவருடைய புலமைத் திறத்தைக் கண்ணுற்ற கைலாயப் பிள்ளையவர்கள் இவரை உயர்கல்வி அடையச் செய்ய வேண்டும் என்று விரும்பி யாழ்ப்பாணத்திற்குச் சென்று சுன்னாகம் அ.குமாரசாமிப் பிள்ளையவர்களிடம் கல்வி கற்கும்படிப் பணித்தார். அதன்படிக் குமாரசாமிப் பிள்ளையிடம் தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம், இராமாயணம், கந்தபுராணம், தருக்க சாத்திரங்கள் முதலானவற்றை முறையாகக் கற்றுணர்ந்து பண்டிதரானார். அன்று முதல் பண்டிதர் ச.கந்தையபிள்ளை என்று அனைவராலும் அழைக்கப்பெற்றார். திருமண வயது அடைந்தவுடன் கந்தரோடை க.தியாகராசப் பிள்ளையின் மகளார் செல்லம்மாளைத் திருமணம் செய்து கொண்டார்.

திருமணத்திற்குப் பின்னர் பண்டிதர் கொழும்பு ஆங்கில ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக

நியமிக்கப்பட்டார். இங்கு இவரிடம் கல்வி கற்றுச் சிறந்தவர்களுள் ஒருவர் பண்டிதர். ச.மயில்வாகனனார் (சுவாமி விபுலானந்தர்) மற்றொருவர் முதுதமிழ்ப் புலவர், மு.நல்லத்தம்பியவர்கள். மேலும் கொழும்பு விவேகாநந்த சபையின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வகுப்புகளையும் நடத்தினார்.

1922 ஆம் ஆண்டு உடல் நலமின்மையால் பணியினின்று விடுபட்டு தமிழகம் வந்த பண்டிதர் சென்னையில் இருந்த காலத்தில் தமிழ் பேரறிஞர்கள் உ.வே.சாமிநாதய்யர், திரு.வி.க. சி.கந்தசாமி முதலியார், க.நமச்சிவாதய முதலியார் ஆகியோருடன் நட்புறவு கொண்டார். ஈசன் திருவடியில் நாட்டம் ஏற்பட்ட போது திருக்கழுக்குன்றம் சென்று அங்கு மாணவர்களுக்குத் தமிழ்ப் பயிற்றுவித்தார். இவரது மாணவர் கனவில் கண்டபடி திருக்கழுக்குன்றத்தில் இருந்து புறப்பட்டுப் புதுச்சேரி வந்தடைந்தார். புதுச்சேரி அம்பலத்தாடையர் மடத்து வீதியில் வந்த பொழுது இலக்கம் 4இல் வசித்து வந்த இரா.நாகரத்தினம் பிள்ளை தன் கனவில் கண்டவர் இவரே என்று வியந்து, தன்னுடைய இல்லத்திற்குப் பண்டிதரை அழைத்துச் சென்றார். அங்குச் சாந்தமூர்த்தி என்றழைக்கப்படும் சபாபதி முதலியாரைக் கண்டு அவரைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டார். அங்குதான் உடல் பிணமாக வீழாது, ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு, உள்ளமும் போய், தானும் கெட்டு சோதியில் இரண்டறக் கலப்பதே மீண்டும் வாரா நெறியாகிய உண்மை முத்திநிலை என்பதை உணர்ந்தார்.

இரா.நாகரத்தினம்பிள்ளை அவர்களின் இல்லத்தில் ஆறு மாதம் தங்கியிருந்து யாழ்ப்பாணம் சென்று தன் குடும்பத்தாரோடு மகிழ்ந்து வந்தார். தன் குருநாதன் பணித்தபடி 1934ஆம் ஆண்டு வரை திருவாசக உண்மை, உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி, புதுவை சிறிமணக்குள விநாயகர் ஒருபா வொருபது உள்ளிட்ட சிறு நூல்களை வெளியிட்டார். அது மட்டுமின்றி வித்தகம் என்னும் இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று அரிய கட்டுரைகளை அதில் எழுதினார். அவ்விதழின் பத்திராதிபர் புதுச்சேரி இரா.நாகரத்தினம் பிள்ளையவர்களின் நந்தி

வெளியீட்டு மன்றத்தின் மூலம் வித்தகம் இதழ் 30.11.1933இல் தொடங்கப்பெற்று முன்றாண்டுகள் உண்மைச் சைவ முத்தியை உணர்த்தும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டது. வித்தகம் முதலாம் ஆண்டு இதழ்களில் இந்துமதம், சைவ சமயம், குருநெறி, விதேகமுத்தி, சதேகமுத்தி உள்ளிட்ட 51 தலையங்கக் கட்டுரைகளும், தலையாய அறம், உடம்பின் அருமை பெருமை, உயிர் வருக்கம், உடலுயிர்ச் சம்பந்தம் போன்ற தொடர்கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. இரண்டாம், மூன்றாம் ஆண்டு இதழ்களில் முதலாம் ஆண்டில் விரிவுற விளக்கிக் கூறாத அம்சங்களும் இவற்றோடு தொடர்புடையனவாய் இவற்றில் கூறப்படாத வேத உண்மைகளும் பண்டிதர். ச.கந்தைய பிள்ளையவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

பண்டிதர் தன் துணைவியாரின் மறைவிற்குப் பின்னர் நோய்வாய்ப் பட்டார். தன் மறைவிற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் தன் இறுதிக்காலம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்தார். 18.11.1958 அன்று இல்லத்தில் உள்ள அனைவரையும் அழைத்து அறுபத்து மூவர் என்னை அழைக்கின்றனர் நான் அவர்களுடன் செல்லப்போகிறேன் என்று கைகூப்பி வணங்கி கண்களை மூடினார். அவர் மறைவிற்குப் பின்னர் அவரது விருப்பப்படி அவருடைய உடல் எரியூட்டப்பட்டது.

உண்மை முத்தி தங்களுக்குக் கிடைக்குமா? என்ற அறிஞர்களின் கேள்விக்கு நான் உண்மை முத்திநிலையை உண்மை முத்தியடைந்த உண்மைப் பெரியார்களின் அனுபவ வாக்குகளைக் கொண்டு விளக்கினேன். தென்கோவை கந்தையபிள்ளை என்று அழைக்கப்படும் நான் அந்நிலையை அடைவேன் என்று கூறவில்லையே என்று விடையளித்துள்ளார். உண்மை முத்திநிலையை உலகிற்கு உணர்த்திய சைவத்தமிழ் நெறி வளர்ந்த பண்டிதர் ச.கந்தையபிள்ளை அம்முத்திநிலையை அடைவதற்கு முன்னரே மறைந்துவிட்டார். அவரது தூல உடல் மண்ணில் கலந்தாலும் அவர் காட்டிய உண்மைச் சைவ நெறி நின்று வாழ்ந்தால் உண்மை முத்திநிலையை அடையலாம் என்பதே உண்மை.

49. கா.சுப்பிரமணிய பிள்ளையின் சைவ சமயச் சால்பு



முனைவர் கடவூர் மணிமாறன்
முதல்வர் (ப.நி)
குளித்தலை

கா.சு என அழைக்கப்பெறும் கா.சுப்பிரமணியபிள்ளை கல்வியில் ஆழ்கடல், சீரிய புலமையாளர்; நேரியமாந்தர்; முதன் முதலாகத் தமிழ்இலக்கிய வரலாறு எழுதிய ஏந்தல்; தாகூர் சட்டவிரிவுரையாளர்; சைவத்தையும் தமிழையும் இருகண்களெனப் போற்றியவர்; அறிவால் உயர்ந்த அவரிடம் எளிமை, அடக்கம், பணிவு ஆகிய அரும்பண்புகள் நிறைந்திருந்தன. தமிழ் அறிஞர்களுள் தலையாயவர்; தமிழால் வாழாமல் தமிழுக்காக வாழ்ந்தவர்; அதனால் அல்லலுற்றவர். வாழ்வில் செல்வவளம் பெறாத நிலையிலும் மன அமைதியோடுஅன்னைத் தமிழுக்கு ஆக்கம் சேர்த்தவர். திருவாசகத்திற்கு முதலில் உரை எழுதியவர்; திருக்குறளுக்குத் தெளிந்த உரை எழுதியவர். தமிழ்வளம், தமிழர்வளம், தமிழ்நாட்டு வளம் பற்றி எப்போதும் சிந்தித்து இயன்றாங்கு பணிகளைச் செய்து வந்த பெருமகன் கா.சு.பிள்ளையின் சைவ சமயச் சால்பினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கா.சு.பிள்ளையின் ஆழ்ந்த புலமையும் ஆய்வு நோக்கும் தெளிந்த அறிவும் தேர்ந்த சிந்தனையும் ஆய்வுகருத்துகள் பல வெளிவர உதவின. அவர்தம் ஆங்கில அறிவும் சட்டத்துறை அறிவும் அற்புதமான சில மொழிபெயர்ப்பு நூல்கள் உருவாக வழிகோலின. அறிஞர்க்கு ஆசிரியராகவும் புலவர்கட்குத் தலைவராகவும் தன்னுணர்வாளர்கட்கு அன்பராகவும் இருந்தவர் கா.சு. என்று அவர் மறைந்தபோது அறிஞர் அண்ணா இரங்கல் தெரிவித்தார். கா.சு.பிள்ளயைப் பல்கலைக் புலவர் என்றே பலரும் அழைத்து வந்தனர்.

கலப்பு மணமே நாட்டு முன்னேற்றத்திற்கு நல்வழி என்றும் கைம்பெண் மறுமணம் செய்து கொள்வதில்

தடைஇருக்கக் கூடாதென்றும் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்து முதலான எல்லா வகையான உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் கோயில்களிலும் மடங்களிலும் வறிதே முடங்கிக் கிடக்கும் பெருந்தொகைப் பொருள்களையெல்லாம் முடியுமானால் சட்டவாயிலாகவேனும் எடுத்து ஏழைகளின் கல்வி நலன்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும் பலமுறை எழுதியும் பேசியும் வந்த முற்போக்குச் சிந்தனையாளர் கா.சு.பிள்ளை

தந்தையறிவு மகனறிவு

கா.சு.பிள்ளை தந்தையார் சைவத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவர். சைவத்துறவிகள் பலரை வீட்டுக்கு அழைத்து வருவார். உரையாடி மகிழ்வார். காலை சிவபூசை செய்வார். மாலையில் நெல்லையப்பர் கோயிலில் வழிபாடு செய்து வருவார். தந்தையாரின் இந்தப்பழக்கம் கா.சு.பிள்ளைக்கும் ஏற்பட்டது. தேவாரத்திருவாசகப் பாடல்களைப் பாடுவதிலும் அவரின் மனம் ஈடுபட்டது. பள்ளியில் இருந்து வீடு திரும்புகையில் வகுப்பில் நடைபெற்ற பாடல்களைச் சிந்தித்து அறிவைப் பெருக்கிக் கொள்வார்; ஏனைய நேரங்களில் பெரும்பகுதியில் சிவபூசை, கோயில்வழிபாடு, பெரியோர்களுக்குத் தொண்டு செய்வதுமாக இருந்து வந்தார். அவரின் தோழர்கள் அவரைப் பூசைப்பிள்ளை என்று அழைப்பர். பின் அவர் செப்பறைத் திருமடத்தில் தீக்கை பெற்றார். முறைப்படி பூசை செய்யவும் கற்றுக்கொண்டார்.

சைவ சித்தாந்த சங்கம்

கா.சு.பிள்ளை இளமையிலேயே சங்கங்கள் அமைத்துத் தமிழ்ப்பணியும் சைவ ஆய்வும் மேற்கொண்டு வந்தார். இந்த பயிற்சி அவருக்குப் பிற்காலத்தில் பெரும் அமைப்புகளை ஏற்படுத்தவும் தலைமையேற்று நடத்தவும் வழிவகுத்தது. உயர்வகுப்புகளில் பயிலுங்கால் இச்சங்கத்தைத் தம் நண்பர்களோடு நிறுவி, அதன் தலைவராக இருந்து செயல்பட்டார். ஞாயிறுதோறும் நெல்லையப்பர் பெருங்கோயிலில் இச்சங்கம் கூடிச் சித்தாந்தக் கருத்துக்கள்

பற்றி ஆராயும்,. அச்சங்க உறுப்பினர்கள் ஒத்த அகவையினராக இருப்பினும், அவர்கள், இவர்கள் என்று மதிப்பளித்தே ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்வர். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்தனர். 1906 முதல் 1908 வரை அச்சங்கம் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்தது.

திருநெல்வேலி தென்னிந்தியச் சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில் 1928 ஆம் ஆண்டு நடைபெற்ற குமரகுருபர அடிகள் விழாவுக்குத் தலைமையுரையாற்றி அரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கினார். அவர் எப்பொருள் பற்றிப் பேசினாலும் தமிழ் பற்றிப் பேசாது விடுவதில்லை. அடிகள் தமிழ்ப் புலமையையே இறைவன் பால் வேண்டினர். அன்றிப் பிறமொழிப் புலமையைச் சிறப்பாக வேண்டிற்றிலர். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் காப்பில், சொற்றமிழ் தழையவே என்பதுங்காண்க எனச் சான்று காட்டிக் குமரகுருபரரின் தமிழ்ப்பற்றை எடுத்துக்காட்டி மற்றவர்களுக்கும் தமிழ்ப்பற்றை ஊற்றினார்.

கடவுள் வழிபாட்டைப் பலர் இக்காலத்தே குறைகூறுவதற்குக் காரணம் இப்பொழுதுள்ள சமயக்கிரியா நூல்கள் செம்மையில் அமைக்கப்படாமையேயாகும். ஆதலால் அவற்றை ஒழுங்குபடுத்துகின்ற முயற்சிகளை நம்மவர்கள் விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்று 1929இல் திரு.வி.க தலைமையில் நடைபெற்ற திருநெல்வேலி தென்னிந்தியச் சைவ சித்தாந்த சங்கத்தில் ஏழு, எட்டாம் ஆம் ஆண்டு விழாவில் கா.சு.பிள்ளை உரையாற்றினார்.

சைவத்திலே எவ்வுயிர்க்கும் இரக்கம் வைத்தல் சிறந்த கொள்கையாகத் தழுவப்படுவலானும் ஒழுக்கம் பற்றியே உயர்வு என்பது தமிழ் கொள்கையாதலானும் சைவ இளைஞர் யாவரும் அருள் ஒழுக்கமும், விரிந்த நோக்கமும், குற்றம் பொறுக்கும் குணமும், ஒற்றுமையும், விடாமுயற்சியும் உடையவர்களாய்த் திகழ்தல் வேண்டும் என்று 1930இல் நடைபெற்ற சைவ இளைஞர் மாநாட்டில் பங்கேற்று சைவ சமயச் சால்பு குறித்துப் பேருரையாற்றினார் கா.சு.பிள்ளை

குழந்தை மனம்

குழந்தை மனம் படைத்தவர். எல்லாரிடமும் அன்பு செலுத்துபவர். யாரையும் எளிதில் நம்பும் பண்புடையவர்; காய்கறி விற்பவளிடமும் மோர் விற்பவளிடமும் தன் பணப்பையைக் கொடுத்து எடுத்துக் கொள்ளச் செய்வார்; உரியது எடுத்துக் கொண்டாயா என்று கேட்டுப் பையை வாங்கிக் கொள்வார் என்று கா.சு.பிள்ளையின் அரிய குணங்களைப் பாராட்டி மகிழ்கிறார் வ.சுப.மாணிக்கனார்.

சீர்திருத்த நோக்கினர்

தம் மகனுக்கும் தமிழ்த் திருமணமே நடத்தி வைத்தவர் கா.சு.பிள்ளை. அந்தத் திருமண இறைவழிபாட்டில் தேவாரம் ஓதப்பெற்றது. திருவிளக்கு முன்னால் தாலிகட்டி மாலை மாற்றிடச் செய்தார். நெல்லையப்பர் கோயிலில் பல சீர்திருத்தங்கள் செய்தார். கோயிலில் வடமொழி மந்திரம் ஓதியவுடன் பூசை முடிந்துவிட்டதாகக் கருதி தேவாரம் ஓதும்போதே திருநீறு தருவதை மாற்றி ஒழுங்குபடுத்தினார். சாதி வேறுபாடு, செல்வ மாறுபாடு ஏதும் இல்லாது ஒரே இடத்தில் மக்கள் யாவரும் நின்று வழிபட ஏற்பாடு செய்தார். நெல்லையப்பர் கோயிலில் சிவலிங்கமாக எழுந்திருக்கும் மண்டபத்தின் இடப்புறம் திருமால் பள்ளி கொண்ட இடத்தில் யாரும் அருகில் சென்று வழிபட முடியாத நிலை இருந்தது. அதற்கு உரிய வழி செய்து அனைவரும் அருகில் சென்று வணங்கிட வழி வகுத்தார்.

கா.சு.பிள்ளையின் கொள்கைகள்

வடமொழியின் கலப்பால் தமிழின் சிறப்புக் குன்றியது. எனவே தமிழை வடமொழி நீக்கி எழுதுவதும் பேசுவதுமே தமிழுக்கு ஆக்கம் சேர்ப்பதாகும். தமிழர்கள் தென்னாட்டின் தொல்குடிமக்கள், ஆரியர்கள் இந்தியாவில் காலூன்றுவதற்கு முன்னரே நானிலம் போற்றும் நாகரிகத்துடன் வாழ்ந்தவர்கள். தமிழ்ச் சொற்கள் பல வடமொழியில் சென்றேறியுள்ளன. அவையே பின்னர் தமிழ்மொழியில் கலக்குமிடத்து அந்த

வடசொற்கள் துணை கொண்டே தமிழ் வழங்குவதாக ஒரு தவறான எண்ணம் வளர்க்கப்படுகிறது.

தமிழர்களின் சமய, தத்துவங்களும் சிந்தனைகளும் தனித்தன்மையுடையவை. ஆரியர்களிடையே வளர்ந்த சமய, தத்துவங்களின் மூலம், வேர், தமிழர் சிந்தனையே தென்னாட்டவரின் சிவ வழிபாட்டு வழி வளர்ந்த சைவமோ, மால் வழிபாட்டு வழி வளர்ந்த வைணவமோ, வடமொழி வழிவந்த வைதிக, சுமார்த்த மதங்களைச் சார்ந்த நிலையில் புரோகித ஆதிக்கத்தின் மறுபெயராக உள்ள இந்துமதம் என்று கொள்வது அறியாமை.

ஒரு மதத்திற்கு உரிய இலக்கணப்படி இந்து என்பது ஒரு மதமல்ல. இந்தியாவில் வாழ்ந்த மக்களைக் குறிப்பதாக ஐரோப்பியரால் வழங்கப்பெற்ற சொல்லே. இந்த விளக்கத்தால் தமிழர்களைச் சைவர் வைணவர் என்னும் மதம் உடையவர்களாக் குறிப்பிடாமல் இந்து என்று குறிப்பது உண்மைக்கு மாறானதாகும். ஆரியர்களின் வல்லாளுமையால் வடபுலத்தில் வடிவு கொண்ட பிறவியில் வேறுபாடு கற்பிக்கும் நால்வருண, சாதிமுறையும் அதனை என்றும் நிலைநிறுத்துவதற்கென வரையப்பட்ட மனுதருமமும் தமிழர் நாகரிகத்துக்கு மாறுபட்டவை. தமிழர்களிடம் புகுத்தப்பட்டவை ; தமிழர்களை அடிமைப்படுத்தியவை.

சாதி வேறுபாடுகள் உண்மையுமல்ல ; நியாயமும் அல்ல. பிறப்பினால் உயர்வு, தாழ்வு கொள்ள இடமாற்ற குலவேறுபாடுகளும் நீங்கித் தமிழர்கள் ஓர்குலமாக உயர வேண்டும். சமுதாயப் பழக்கங்களில் உள்ள வேறுபாட்டில் உணவுப் பழக்கமே வலிவுடையது. எனவே உணவுப் பழக்க அடியாகப் புலால் உண்பவர்களும் உண்ணாதவர்களும் தம்மிடையே குல வேறுபாடு கருதாது உறவு கொண்டிட வேண்டும். அந்த உறவு வளரக் கலப்பு மணம் பெருக வேண்டும்.

வடமொழி வேண்டா

கோயில் வழிபாட்டுக்கோ, திருமணச் சடங்குக்கோ

வடமொழியைப் பயன்படுத்தல் ஆகாது. வடமொழி நுழைப்புக்கு முன்னர் அடியார்கள் தமிழில் வழிபட்டது போன்று தமிழ்ப்பண் பாடியே வழிபாடு நிகழ வேண்டும். வடமொழிச் சாத்திர வழிபட்ட சடங்கு எதுவும் தமிழர்களின் திருமண நிகழ்ச்சிகளில் இடம்பெறக் கூடாது. தமிழ் மரபுக் கொத்த வகையிலேயே தமிழர்கள் தங்கள் குடும்ப சடங்குகளை நடத்த வேண்டும். திருமணங்களை நடத்தப் புரோகிதர்களை அழைப்பது தமிழர்க்கு இழுக்கு; சைவனோ, வைணவனோ, சுமார்த்தம் என்னும் வேற்றுமதத்தானும் வைதிகனுமான புரோகிதனை அழைப்பது தமது மதக் கொள்கைக்கே மாறுபட்டது.

சைவ, வைணவத் தத்துவத்தின் மூலம் தமிழர் மெய்யுணர்வே, அந்தக் கொள்கைகளை வடமொழி வேதங்களில் தேடுவதும் வேதவாக்கியங்கட்குச் சைவ வைணவத்திற்கு ஒத்தபொருள் காண முயல்வதும் சைவ வைணவக் கொள்கைகளை விவிலியத்திலும் திருக்குரானிலும் தேடும் முயற்சியோடு ஒக்கும். பண்டைத் தமிழரிடம் வளர்ந்திருந்த பலதுறைக் கலை அறிவையும் கூத்து, இசை, (சித்த) மருத்துவம் முதலான துறைகளைப் பற்றிய திறனையும் தமிழர்களிடம் பயின்ற வடவர் அவற்றைத் தம்மொழியில் எழுதி வைத்துக் கொண்டனர்.

அவ்வாறு தமிழ்மொழியில் நூல்களாக இயற்றிக் கொண்டதனாலேயே அவை எல்லாம் ஆரியரிடம் இருந்து தமிழர்கட்கு வடபுலத்தில் தென்னகத்திற்கு வழங்கப்பட்ட கலைகள் ஆகா. கருநாடக இசை என்பது தமிழிசையே, வழி வழி வந்த தமிழ் பண்களே இன்று பிறமொழிப் பெயர் கொண்டு வழங்கப்படுகின்றன. இசைத்தமிழ், முத்தமிழில் ஒரு கூறாக வளர்ந்து நின்றும் இன்று கருநாடக சங்கீதம் என்று பெயரிட்டுத் தெலுங்கில் கீர்த்தனங்கள் இசைப்பதும் அதைத் தமிழர்களிடையே பாடுவதும் தமிழரிடம் பல்வகையால் வடிவு கொண்ட தாழ்வு மனப்பான்மையின் விளைவே, தாய்மொழி தாழ்ந்தது என்னும் எண்ணம் - தமிழில் பாட்டுக் கேட்கும் ஆர்வத்தையும் ஒழித்துவிட்டது. தமிழ்மக்களிடையே

தமிழ்ப்பண்களுளே பாடச் செய்வது நமது உரிமை.

இந்தியும் வேண்டா

இந்தியாவின் பொதுமொழியாக இந்தியை ஏற்க வேண்டும் என்பது அறிவுக்கு ஒவ்வாது. வடநாட்டினர் பேசும் மொழிகளுள் ஒன்றைத் தென்னாட்டினர் மீது திணிப்பது நியாயமன்று. இந்தித் திணிப்பு மூலம் ஆரிய வடமொழி ஆதிக்கம் மேலும் வலுப்பெறும் என்பதும் தமிழ் அழியும் என்பதும் வரலாற்று அறிவுடையோர்க்கு விளங்கும். எனவே இந்தியை எந்நாளும் நாம் ஏற்றிடலாகாது. தமிழ்மொழியின் உரிமையைக் காத்து அதை உயர்த்தினாலன்றித் தமிழரின் இழிநிலையை மாற்ற முடியாது. உலக மாந்தர் அனைவரையும் ஒரு குடும்பமாகக் கருதக்கூடிய அளவுக்கு விரிந்த நோக்குடையவர் தமிழர். சமய நோக்கிலும், சமன்மைக் கொள்கையைக் காத்தவர் தமிழர். எல்லாருக்கும் ஒத்த நீதியைத் தெளிந்தவர் தமிழர்.

ஆனால் தமிழர் என்பதையே மறந்து, தமிழையும் துறந்து, தம் சமய நெறியையும், தெளியாது, வடமொழி வேத சுமார்த்த புரோகித ஆதிக்கத்தை ஏற்கும் அடிமை என்பதற்கான குறியீடாக வழங்கும் இந்து என்று தம்மைக் கருதிக் கொண்டதுடன், உண்மையல்லாத சாதி எண்ணத்திற்கு இடம் தந்து தமது இனத்தைப் பிளவுபடுத்தி, வேற்றின மேலாண்மை நிலைக்க வழி செய்து தம்மை ஒரு அடிமைக் கூட்டமாக வைத்து, கண்டவர்கள் மேய்ந்திட வாய்ப்பை அளித்து விட்டோம்.

இனியேனும் தமிழர்கள் உண்மை உணர்ந்து தமது உரிமை காத்திடும் உறுதி கொண்ட அயராது செயற்பட்டு ஓரினமாக ஒன்றுபட்டவராக உருக்கொண்டு தாழ்வகற்றித் தலைநிமிர்ந்து ஆதிக்க அமைப்புகளைத் தகர்த்து உலகோர் மதிக்கும் மக்களாக வாழ்த்தலைப்பட வேண்டும்.

தமிழர் சமயம்

உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் தமிழர் நெறியானது விரிந்த நோக்கமும் அமைப்பும் உடையது. பிறப்புத்தடை,

நூற்கட்டுப்பாடு, மணத்தடை, சடங்கு முறைக்கட்டுப்பாடு என்பனவற்றுள் ஒன்றும் அதற்கில்லை. மொழிப்பற்றும் கொள்கையுமே இன்றியமையாதன. ஆதலின் தமிழர் சமயம் உலகப் பொது நெறியாய் விளங்கும் தகுதியுடையது என்பதைத் தமது தமிழர் சமயம் நூலில் தெளிவுபடுத்தியுள்ளார் கா.சு.பிள்ளை. இருபது நூல்களை வழங்கிய பெருமைக்குரியவர் இவர்.

மொழியாக்க நூல்கள்

சிவப்பிரகாசம், நீதிநெறிவிளக்கம், திருமந்திரப் பாடல்களில் சில இவரால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்றன. சைவ சித்தாந்தத்தின் இயற்கைத் தத்துவம், இந்து சமயங்களின் சுருக்க வரலாறு, இந்து அறநிலையச் சட்டத் தொகுப்பின் மேல் ஒரு குறிப்பு. தமிழ்மலர்கள் ஆகிய நான்கு ஆங்கில நூல்களை எழுதியுள்ளார். சட்ட நூல்கள் இரண்டை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். 56 ஆண்டுகளே வாழ்ந்த இப்பெருமகன் சைவ சமயச் சடங்கு என்னும் அரிய நூலை நெல்லை சைவருக்கு விட்டுச் சென்றுள்ளார்.

முடிவுரை

சைவ சமயமே ஒப்பற்ற சமயம் என்பதைத் தமது நூல்களில் நிறுவியர் கா.சுப்பிரமணியபிள்ளை, மறைமலையடிகளால் பெரிதும் மதிக்கப்பெற்றவர் இவர். யான் பேசும் மேடையில் தலைமை யேற்கும் தகுதி மறைத்திரு ஞானியார் சுவாமிகளுக்கும் கா.சு.பிள்ளை அவர்களுக்குமே உண்டென்பதை மறைமலையடிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாம். இலக்கியம், இலக்கணம், வரலாறு, உளநூல், சமயநூல்கள் பலவற்றையும் தெள்ளிதின் கற்றுணர்ந்த கா.சு.பிள்ளை கூர்த்த நினைவாற்றல் மிக்கவராய் இயங்கினார். சைவத்தின் திருவுருவாயும் நுண்ணறிவின் கொள்கலமாயும், மெய்நெறியின் காவலராகவும் தனித்தமிழின் வழிகாட்டியாகவும் திகழ்ந்த கா.சுப்பிரமணியபிள்ளை தமிழறிஞராயும் சைவ சமயச் சார்பினராயும் விளங்கித் தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர் ஆவார்.

50. சைவ நெறி வளர்த்த மறைமலை அடிகள்

க.சுகந்தியா
ஆய்வியல் நிறைஞர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

தமிழ்ப்பற்றால் வேதாசலம் என்ற தனது பெயரை மறைமலை என மாற்றிக் கொண்ட தமிழ் பற்றாளர். சென்னைப் பல்லாவரத்தில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தொடங்கி அதன் பெயரைப் பொதுநிலைக் கழகம் என மாற்றினார். மாணிக்கவாசகர் வரலாறும், காலமும், திருக்குறளாராய்ச்சி தமிழர் தம் வேதாந்த மதவிசாரம் பல நூல்களைப் படைத்தார். இலக்கியம், மருத்துவம், சங்க இலக்கிய ஆய்வு தோற்றுவித்தவர். கோயில்கள் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு சம உரிமை வழங்க வேண்டும் என குரல் கொடுத்தார். இறுதி எதிர்ப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

வடமொழியை எதிர்காமல் வடமொழிக் கலப்பை மட்டுமே எதிர்த்து, கடவுளை எதிர்க்காமல் மூடத்தனமான சடங்குகளை மட்டுமே எதிர்த்து நடுநிலை தவறாமல் வாழ்ந்த பண்பாளர். தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்பட்ட மறைமலை அடிகள் 74 வயதில் 1950 ஆம் ஆண்டில் மறைந்தார்.

குறிப்பு

இயற்பெயர் : சாமி வேதாசலம், ஊர் : நாகை மாவட்டம் காடம்பாடி பெற்றோர்; சொக்கநாதப்பிள்ளை, சின்னம்மா அம்மையார். மகள் : நீலாம்பிகை அம்மையார்

வேறுபெயர்கள்

தனித்தமிழ் மலை, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை. தன்மான இயக்கத்தின் முன்னோடி இவரின் புனைப்பெயர் முருகவேள்.

உடைநடை நூல்கள்

பண்டைத் தமிழரும் ஆரியரும், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், வேளாளர் யாவர், சைவ சமயம், தமிழர் மதம், அம்பலவாணர் கூத்து, தமிழ்த்தாய், தமிழ் நாட்டவரும் மேலை நாட்டவரும், அறிவுரைக்கொத்து, மக்கள் நூறு ஆண்டு வாழ்வது எப்படி, மரணத்தின் பின் மனிதனின் நிலை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம், தென்புலத்தார் யார், சாதி வேற்றுமையும் போலிச் சைவமும் தொலைவில் உணர்தல்.

செய்யுள் நூல்கள்

திருவெற்றியூர் முருகர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சி

ஆய்வு நூல்கள்

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, சிவஞான போத ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி.

நாடகம்

சாகுந்தலம் (மொழிப்பெயர்ப்பு) குமுதவல்லி அம்பிகாவதி, அமராவதி.

நாவல்

கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதினி அல்லது நாகநாட்டு இளவரசி.

இதழ்

அறிவுக்கடல் (ஞானசாகாரம்)

குறிப்பு

தமிழ், ஆங்கிலம், வடமொழி என மும்மொழியிலும் வல்லவர். சைவத்தையும், தமிழையும் தம் உயிராகக் கொண்டவர். சென்னை கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். சாமி வேதாசலம் என்ற தன் வடமொழிப் பெயரை மறைமலை அடிகள் என தமிழில் மாற்றிக் கொண்டார். ஞானசாகரம் என்ற இதழுக்கு அறிவுக்கடல் என்று பெயர் மாற்றம் செய்து நடத்தினார்.

சிறுவர்க்கான செந்தமிழ் என்ற தலைப்பில் பாடநூல்களையும் வரைந்துள்ளார். அடிகளின் அறிவுக்கொத்து என்ற நூலே கட்டுரை என்ற தமிழ்ச் சொல்லையும், கட்டுரை எழுதும் முறைகளையும் மாணவர்களிடையே பரப்பினார். சமரச சன்மார்க்க சங்கம் போன்றவற்றை ஏற்படுத்தினார்.

சிறப்பு

தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்தவர். திரு.வி.க. மறைமலை ஒரு பெரும் அறிவுச்சுடர், தமிழ் நிலவு, சைவவான். தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெறுமை அடிகளாருக்கே சேரும் சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்பியவர்.

நாகப்பட்டினம் அடுத்த காடம்பாடியில் (1876) பிறந்தார். நாகப்பட்டினம் உயர்நிலைப்பள்ளியில் படித்தார். சிறந்த மாணவராக விளங்கினார். அறுவை சிகிச்சை நிபுனராக இருந்த தந்தையின் மறைவால் கல்வி தடைப்பட்டது. தாயின் வழிகாட்டுதலால் பல நூல்களைக் கற்றார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். நாராயணசாமி பிள்ளையிடம் இலக்கியங்களையும், சோமசுந்தர நாயக்கரிடம் சைவ சித்தாந்தமும் கற்றார். மாதந்தோறும் ரூ.50-க்கு புதிய நூல்கள் வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வார இதழ்களில் முருகவேள் என்ற புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார். 16 வயதில் இந்து மத அபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். சென்னை கிருத்துவத் தமிழ்பற்றால்

வேதாசலம் என்ற தனது பெயரை மறைமலை என்று மாற்றிக் கொண்டார். சென்னை, பல்லாவரத்தில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தொடங்கி அதன் பெயரைப் பொது நிலைக் கழகம் என மாற்றினார்.

மும்மணிக்கோவை

அடிகளே தென்னாடு தென்னாடே அடிகள் என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களால் புகழப்பட்ட மறைமலை அடிகள் தமிழ், ஆங்கிலம், சமசுகிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமை பெற்றவர். நாலாயிரம் நூல்களுடன் தன் வீட்டிலேயே நூலகம் ஒன்றை அமைத்தவர். தமிழையும், சைவத்தையும் இருகண்களாகக் கொண்டவர். சிறுவயது முதல் பழகிய சௌந்திர வள்ளியம்மை என்ற பெண்ணை இளம்வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன.

தன்னுடைய 22-வது வயதில் கடும்சூலை நோயால் பாதிக்கப்பட்டார். அப்போது திருவெற்றியூர் முருகன் மீது பக்தி கொண்டு மும்மணிக்கோவை பாடினார். அதன் பயனாக முருகப் பெருமான் அவர் நோயை குணமாக்கினார்.

பரிதிமாற் கலைஞன் கேட்ட கேள்வி

மறைமலை அடிகள் சென்னை கிருத்துவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுவதற்காக அந்தக் கல்லூரியில் பணிபுரிந்த பரிதிமாற்கலைஞரைச் சந்திக்கச் சென்றார். அப்போது அவர் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டு சொல்லுங்கள் என்று கேள்விகேட்டார். அஃது எனக்கு தெரியாது என்றார் மறைமளை அடிகள். நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள் என்றார் பரிதிமாற்கலைஞர். தெரியாது என்று சொல்பவரை எப்படித் தேர்வு செய்யலாம் என்று மற்ற உறுப்பினர்கள் கேட்டபோது அஃது என்பது ஆயுதத் தொடர் குற்றியலுகரம். எனக்கு என்பது வன்தொடர் குற்றியலுகரம். தெரியாது என்பது உயிர் தொடர்க் குற்றியலுகரம் என்று பரிதிமாற்கலைஞர் வேலை கிடைத்துவிட்ட போதிலும்,

பரிதிமாற்கலைஞரையே கேள்வி கேட்டு வியக்கவைத்தவர் மறைமலை அடிகள்.

மாநாட்டில் கலந்து கொள்ள மறுப்பு

1933-ல் சென்னைப் புத்தலாயப் பிரசார சங்கத்தார் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர். அதில் கலந்துகொள்ளுமாறு மறைமலை அடிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு மறுப்புத் தெரிவித்துக் கடிதம் எழுதினார் அடிகள். தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு எமது மனம் இடம் தரவில்லை. 16.09.1943 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றிய போது ஒருவர் திராவிட நாடு பற்றி தங்கள் கருத்து யாது எனக் கேட்டார்.

தனித்தமிழ் இயக்கம்

ஆங்கிலமும், சமசுகிருதமும் கட்டாயம் படிக்க வேண்டும். தாய்மொழிப் பாடத்தை விருப்பப்பாடமாகப் படித்தால் (கற்றால்) போதும் என்று சென்னைப் பல்கலைக் கழகம் தீர்மானம் போட்டபோது 11 ஆண்டுகாலம் பணியில் இருந்த மறைமலை அடிகளார் அதை எதிர்த்துத் தன்னுடைய பணியில் இருந்து விலகினார். ஆங்கிலம், சமசுகிருதம் போன்ற மொழிகள் தமிழில் பரவிக் கிடந்ததை உணர்ந்து வருந்திய மறைமலை அடிகள் (வேதம்மறை, அசலம் -மலைசுவாமி) என்று மாற்றிக் கொண்டார்.

முடிவுரை

தமிழில் பிறமொழிக் கலப்பை ஒதுக்கித் தள்ளுங்கள். தமிழின் சுவையை மாற்றாதீர்கள். வல்லோசைகளைப் பெருக்காதீர்கள் என்கிற மறைமலை அடிகளாரின் கூற்றுப்படித் தமிழை வளர்ப்போம்.

51. சைவத்தமிழ் இலக்கியங்கள் அன்றும் இன்றும்



முனைவர் கா.செல்வகோதை நாச்சியார்
உதவிப்பேராசிரியர், இயற்பியல் துறை
து.கோ. வைணவக் கல்லூரி
சென்னை

முன்னுரை

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. சமூகத்தின் கலாச்சாரத்தை மக்களின் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவதும் இலக்கியங்கள் தான் சங்ககாலத்திற்கும் நீதி நூல் காலத்திற்கும் பிற்பட்டதே பக்தி இலக்கிய (இயக்க) காலம் என்று கொள்ளலாம். கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சைவசமயப் பெரியவர்களான நாயன்மார்களும் வைணவப் பெரியோர்களான ஆழ்வார்களும் தோன்றினர்.

பௌத்த சமண சமயங்களை எதிர்த்து மக்களை ஒன்றுபடுத்தி இசையோடு பாடல்களைப் பாடி கோயில்தோறும் இறைவனை வழிபட்டார்கள். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று சம்பந்தர் போற்றப்பட்டார். இறைவன் ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ளவன் என்றார் சுந்தரர். தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன் என்கிறார் திருநாவுக்கரசர். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கச் செய்ய நாயன்மார்களின் பணி சைவத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அளப்பரியது; அவ்வழியே சற்று சிந்திப்போம்.

உள்ளம் பெருங்கோயில்

எந்தத் தொழிலைச் செய்தாலும் இல்வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்தாலும் உள்ளத்தை இறைவனுக்கு அர்பணிப்பதையே அறமாகப் போற்றினர் நாயன்மார்கள். பல்வேறு கலைகளையும் போற்றி வளர்க்கும் இடமாக ஆலயங்கள் விளங்கின. மக்களிடம் பக்தி இயக்கத்தை

இனியதமிழ் இசைப் பாடல்களால் அறிமுகம் செய்தனர் நாயன்மார்கள்.

திருமூலர் போதித்த அன்பு நெறி

திருமூலர் தமது திருமந்திரத்தால் பக்தியின் சிறப்பைக் கூறுமிடத்தே அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர்களே ஞானிகள். அவர்களே கடவுள் தன்மை பெற்றவர்கள் என்கிறார். இறைவனிடம் செலுத்தும் அன்பை மட்டும் அல்லாமல் மனிதனுக்குத் தொண்டு புரியும் அன்பையும் திருமூலர் அறிவுறுத்துகிறார். நடமாடும் உயிர்களிடத்தில் உள்ள இறைவனுக்கு ஒன்று தந்தால் படமாக உள்ள இறைவனையும் அது சென்றடையும் என்பதை,

''நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவதற்கு அது ஆமே''

என்கிறார் திருமூலர். அகத்தில் பார்வையைச் செலுத்தி மனத்தை ஆராயச் சொல்லும் திருமூலர். அங்ஙனம் உள் ஆராய்ச்சி செய்பவரே அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தி இறையனுபவம் பெறமுடியும் என்றும் வழிகாட்டுகிறார்.

''மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய் சொரியுமே''

என்பதே அப்பாடல். இதனையே ரமண மகரிசியும்,

''திரும்பி அகந்தனை தினம் அகக்கண்காண்
தெரியும் உந்தனை என் அருணாசலா''

என்கிறார். வாழ்க்கையை நெறிப்படுத்தும் வாழ்வியல் உண்மைகளைத் தெளிவுபடுத்தும் செய்திகள் சைவ இலக்கியங்களில் மிகுந்து காணப்படுகின்றன. மரணம் பற்றிய நிலையாமையை உண்மையைத் திருமூலர் உணர்த்தும் முறை மிக எளிது.

''ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கி பிணம் என்று பேரிட்டுச்

சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே''

என்ற அப்பாடல் வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்த்துகிறது. சைவ இலக்கியங்கள் இவ்வாறாகப் பக்தி யோகம், தவம், ஞானம் போன்ற உயர்ந்த நெறிகளை எக்காலத்திற்கும் எடுத்துயம்புகின்றன.

சைவ இலக்கிய வளர்ச்சி

ஆறாம் நூற்றாண்டுகளில் சமயச் சான்றோர்கள் விதைத்த விதை ஆல்போல் சைவ சமய இலக்கியமாக, பக்தி இயக்கமாகப் பரிணாமம் பெற்று இந்தியா முழுவதும் வளர்ந்தது. மக்களின் உள்ளத்திலும், அரசர்களின் உள்ளத்திலும் செல்வாக்குப் பெற்றது. தமிழ் (இன்னிசை) பக்தி பாடல்களால் கோயில்கள் பெருமை பெற்றது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடிய பாடல்கள் பக்தி இலக்கியம் வளர்வதற்குப் பேருதவி புரிந்தது.

தேமதுரத் தேவாரம்

ஏழாம் நூற்றாண்டில் சைவசமயப் பெரியோர்களான திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பாடிய பாடல்கள் பக்திப் பெருக்கைப் பரிணமித்தது தமிழ்நாட்டில் சிவன் கோயில்கள் பலவும் இவர்களின் பாடல்பெற்ற அற்புதத் தலங்களாக உள்ளன. அடுத்த நூற்றாண்டில் தோன்றிய சுந்தரமூர்த்தி நாயன்மாரின் பாடல்களும் சேர்ந்து இந்த மூன்று நாயன்மார்களின் பாடல்கள் எண்ணாயிரமும் தேவாரம் என்ற பெயரால் சிறந்த சைவ சமய பக்தி இலக்கியமாக விளங்குகின்றன. திருஞானசம்பந்தர் கையில் தாளம் ஏந்தி பாடியும், ஆடியும் சிவனை வழிபட்டவர். அவருடன் யாழ் என்னும் கருவியை வாசிப்பதில் சிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் பல ஊர்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்ததை இலக்கிய வரலாறு பேசுகிறது.

எனவே தேவாரம் பழப்பெருமை வாய்ந்த பக்தி பாடல்களை மட்டுமின்றி பண்டைய இசை மரபுகளைக் காத்துவரும் இசை பொக்கிசமாகவும் உள்ளது.

இயற்கையை போற்றிய ஞானசம்பந்தர்

சங்க இலக்கியத்திற்கு இணையாக இயற்கையை அதன் அழகை போற்றிப் பாடியிருப்பதைத் திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் காணலாம். திருவையாறு என்னும் தலத்தைப் பாடும்போது,

''கோயிலை வலம் வரும் மகளினர் நடனமாடும்
ஓசையை மழைபெய்யும் மேகத்தின் முழக்கமாக
அம்முழவு ஒலியை அதற்கு அஞ்சி குரங்குகள்
மரங்களில் மேல் ஏறி வானத்தை நோக்கும் திருவையாறு''

என்று இயற்கையோடு இணைந்து பாடுகிறார். மலைக்குன்றுகளில் குயில் கூவ, தேன் மலர்களில் நிறைந்து இனிய தென்றல் காற்றின் வருடலை, வயல்களின் செழுமையான கரும்புகள் என்று ஒரு தலத்தில் இயற்கை அழகான கற்பனை நயத்தோடு போற்றுகிறார். இயற்கையில் இறைத்தன்மையைப் போற்றியவர்கள் நம் சமய அருளாளர்கள் என்பதை இச்செய்தி கூறுகிறது.

திருஞானசம்பந்தர் போற்றிய வாழ்வியல் சிந்தனை (புரட்சி சிந்தனை)

சைனரும் பௌத்தமும் துறவத்தையே போற்றி வந்த அக்காலத்தில் திருஞானசம்பந்தர் பெண்மையைப் போற்றுவதிலும் போலித்துறவை வெறுத்தும் பேசினார். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து சமூக நல்லிணக்கத்திற்கான சிந்தனைகளும், திருஞானசம்பந்தரின் பாடல்களில் நிரம்பியுள்ளன. ஆய்வு நோக்கில் எடுத்துக் கொண்டால், தாம் பாடல்களுக்கு யாழ் இசைப்பதற்காக நீண்ட குடும்பத்தைச் சார்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரைப் பல்வேறு சிவத்தலங்களுக்கு அழைத்துச் சென்ற செய்தி முக்கியத்துவம் பெறுகிறது. பிரமனும், திருமாலும் தேடிக்காண முடியாத பெருமை உடைய சிவபெருமான் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை நிலைக்கச் செய்த பெருமை

திருஞானசம்பந்தரையே சாரும். சைவ சமய பக்தி இலக்கிய வரலாற்றில் இவரின் பாடல்கள் புரட்சியைத் தன்னகத்தே கொண்டுள்ளதே அவர்தம் பாடல்களோடு பயணிக்கும் போது நாம் உணரலாம். தீண்டாமை போன்ற மூட நம்பிக்கைகளுக்கு அவர் வாழ்வியல் பாடல்களில் இடமே இல்லை.

யான் உரைப்பன சிவன் உரையே என்பார் ஞானசம்பந்தர் அஞ்சாமை, தெளிவு, ஆர்வம் ஆகியவற்றில் திருஞானசம்பந்தரை ஒரு குழந்தை ஞானியாக ஆதிசங்கரர் போற்றுகிறார். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற பாடல் இறைவனைப் பெண் ஒருபாகமாய் விளங்கும் கோலத்தைக் காட்டி இவ்வுலகில் நற்கதி அடைய எந்தக்குறையும் இல்லை என்று நம்பிக்கை ஊட்டுகிறார். திருஞானசம்பந்தப் பெருமான் அவர்தம் பாடல்களில் சோர்வோ, கலக்கமோ காண்பது அரிது சைவர்களின் திருமணங்களின் போது மகிழ்ச்சியுடன் ஓதப்படும் மண்ணில் நல்ல வண்ணம் என்ற பாடலே சிறந்த உதாரணம். நாளும் கோளும் எந்தத் தீங்கும் செய்யாது. அவை நல்லவைகளே என்று அஞ்சாமையும் ஊக்கமும் கொள்ளுமாறு ஒரு பதிகம் பாடினார் திருஞானசம்பந்தர். அதுவே,

“வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே”

என்ற அற்புதப்பதிகமாகும்.

திருநாவுக்கரசர் போற்றிய சமயநெறி

எல்லாம் இறைவன் செயலே என்பதை ஒரு திருத்தாண்டகப் பாடலில் அழகாகக் கூறுகிறார் திருநாவுக்கரசர். நீ ஆடச் செய்தால் அதற்குத் தகுந்தபடி ஆடாதார் யார்? என்பதே அப்பாடல். அவர்தம் பாடல்களின் பக்தியின் உருக்கம் மிகுந்து காணப்படும் பணிவும் குழைவுமே பேசப்படும். கல்விஞானம் மிகுந்திருந்தும் அவருடைய பக்திநெறி கையால் தொண்டு

செய்வதையே போற்றியது. கோயில்களில் தூய்மைப் பணிகளை முன்னெடுத்த அவர்

"உண்மை என்னும் உழவைச் செய்து
விருப்பம் என்னும் விதையை விதைத்து
பொய் என்னும் களையை நீக்கி
பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சி
தம்மை உணர்ந்து தக்க சன்மார்க்க நெறி
என்ற வேலி அமைந்தால் சிவகதி நிச்சயம்"

என்கிறார். திருநாவுக்கரசரின் நாம் ஆர்க்கும் குடியல்லோம் என்ற பாடல் நாட்டு விடுதலை போராட்ட காலத்தில் மக்களுக்கு அச்சமின்மையையும் , துணிவையும் நம்பிக்கையையும் போதித்தது என்றால் மிகையில்லை. எனவே தான் பிற்காலத்தில் பாரதியும்

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே என்று பாடினார் போலும்"

திருவாசகம் எனும் தேன்

"எட்டாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் சிவபெருமானைப் போற்றிப்பாடிய பக்திப்பாடல்கள் திருவாசம் எனப்படும்"

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. சமயத்தொண்டாற்ற வந்த சி.யு.போப் என்ற கிறித்துவப் பாதிரியாரையும் திருவாசகம் என்ற சைவசமய பக்தி இலக்கியம் காந்தம் போன்று கவர்ந்து இழுத்தது. அதை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பாண்டிய அரசனிடம் அமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர் சிவபக்தியில் திளைத்து நெஞ்சம் நெக்குருகி பாடிய பாடல்கள் இன்றும் சைவநெறியைக் குன்றின் மேலிட்ட விளக்கமாக மிளிரச் செய்கிறது. கோயில்கள் தோறும், இல்லங்கள் தோறும் போற்றிப் பாடப்படுகிறது அவற்றுள் ஒரு பாடல் இதோ,

"வெள்ளம்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்

பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்'' இத்தகைய உருக்கமான பக்தியூட்டும் பாடல்களை மாணிக்கவாசகர் சில நாட்டுப்பாடல் வடிவங்களாகப் பொருத்தியிருப்பது மிகச்சிறப்பு இளம் பெண்கள் ஆடிப்பாடும் விதமாக விளையாடல்களோடு திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி திருச்சாழல் என்று அமைத்திருப்பது வியப்பிற்குரியது.

''ஆதியும் அந்தமும் இல்ல அரும்பெரும் சோதியை'' என்ற மாணிக்கவாசகர் திருவெம்பாவை தனிச்சிறப்புமிக்கது.

முடிவுரை

இன்றைய காலச்சசூழலில் சைவத்தமிழ் இலக்கியங்கள் காட்டிடும் பக்திநெறி சங்க இலக்கிய மரபு. சமூக ஒற்றுமை இவற்றை இளைய தலைமுறையினருக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு மிகுதியாக உள்ளது. இயந்திரங்களுக்கு (தொலைக்காட்சி, அலைப்பேசி, முகநூல்) அடிமையாகி மனித மாண்பையும், பண்பையும் மறந்து போனதால் எங்கும் வன்முறைச் சம்பவங்கள் கலாச்சார சீரழிவிலிருந்து இவர்களைச் சீர்படுத்த வேண்டிய பணி பெற்றோருக்கா? ஆசிரியருக்கா? சமூகத்திற்கா? என்பது கேள்வி?

''ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு
சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன''

என்பது செய்தி. நல்ல நல்ல சைவசமய நெறிகள். பேசும் இலக்கியங்கள் நூல்களை நாளும் நாளும் பயில இன்றைய தலைமுறை முன்வருமேயானால்...

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை''

மேன்மைகொள் சைவ இலக்கியங்களை இளம் உள்ளங்களில் பதியச்செய்வோம்.

52. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற நோய் தீர்க்கும் தலங்கள்

முனைவர் இரா.சுதேசி
உதவிப்பேராசிரியர்
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
கொரட்டூர், சென்னை

முன்னுரை

உலக மக்களை உய்வித்தல் பொருட்டு பாற்கடலில் அமுதம் கண்டெடுத்த போது முன் தோன்றிய நஞ்சினைத் தான் உண்டு நீலகண்டனாக விளங்கிய எம்பெருமானின் திருவடிகளைப் பாடி சமயக்குரவர்கள் திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டு தலங்களில் நோய் தீர்த்ததும் பதிகம் பாடி இறைவன் அருளால் நோய் தீர்த்ததும் எனும் வகையால் கண்டாலும் நோய் நீக்கி இறுதியில்,

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயமே"

என்று தனது திருமணத்தில் வந்தோர் யாரையும் இம்மணத்தில் வந்தோர் யாவரும் இழிதகைப் பிறவி நோய்தீர இச்சோதியினுள்ளே புகுமின் என்று திருஞானசம்பந்தர் அழைத்தது போல இறைவனது திருவடிப்பேற்றை அடையும் விதத்தைக் காணலாம்.

தோணிபுரம் என்னும் சீர்காழிப்பதி

திருஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயார் அகமருட் மந்திரத்தை ஓதுவதற்குப் பிரம்மத் தீர்த்தத்திலே சிறிது நேரம் மூழ்கியிருந்த போது குளத்தங்கரையில் அமர்ந்திருந்த திருஞானசம்பந்தர் உள்ளேயிருக்கும் அம்மையே அப்பா என்று உள்நோக்கி அழுது கொண்டிருந்தார். உடனே அம்மையும்

அப்பனும் தோன்றி உமையம்மை தனது பாலினைக் கிண்ணத்தில் ஊற்றிப் பார்த்த போது வாயின் ஓரத்திலே சோறானது ஒட்டிக் கொண்டிருக்க, இது ஏது என்று கேட்க, பின்பு திருஞானசம்பந்தர் உள்ளிருக்கும் அம்மை அப்பனைக் காண்பிக்க, ஞானப்பால் உண்ட வாயால் முதல் தேவாரப் பாடலை இறைவன் ஞானப்பால் உண்ட பெண்பாகமாகிய,

''தோடுடைய செவியன் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி
என் உள்ளம் கவர்கள் வன் ஏடுடைய மலரான்
உனைநான் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரம்மாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே''

என்று பாடத் தொடங்கினார். இவ்வாறு பசிநோய் நீக்கிய தலமாகிய பிரம்மாபுரம் என்ற சீர்காழி விளங்குகிறது. முற்பிறவியிலேயே சிவனடியாராகப் பிறந்து பாசத்தளையற்று வாழ்ந்தார் என்பது விளங்குகின்றது.

திருநனிப்பள்ளி

தனது தந்தையாரின் திருத்தோளிலே அமர்ந்து சென்ற ஆளுடை பிள்ளையார் திருநனிபள்ளி என்று தந்தையார் கைகாட்ட நானியோர் பாகம் வைகும் நனிபள்ளியை நினைந்து போற்றுவாரது பேரிடம் கெடுதற்கு ஆடினை நமது என்று பேரிடர் தீர்க்கும் தலமாகத் திருநனி பள்ளியைக் கூறச் சென்றார்.

''காரைகள் கூகை முல்லை களவாகை யீகை
படர்தொடரி கள்ளி கவினிச்
நாரைகள் ஆரல்வாரி வயன் மேதி வைகு
நனி பள்ளி போலு நமர்கள்''

என்று பாலைவனமாக இருந்த நனிபள்ளியைப் பதிகம் பாடி நெய்தல் நிலமாக மாற்றிய அற்புதமும் அங்கு நிகழ்ந்திருக்கின்றது. கொல்லி மழவன் என்பானின் மகள் முயல்கள் எனும் நோயால் பாதிக்கப்பட்டு திருப்பாச்சிலாச் சிராமத்து இறைவா முன் இட்டு வைக்க திராவிட சிசு அங்கு வந்து உணர்வற்று கிடந்த அப்பெண்ணின் நோயினை அறிந்து

முயலகன் எனும் நோய் தீர்வதற்காகப் பாச்சிலாச் சிராமத்து இறைவனைப் பணிந்து,

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
ஆச்சிராமத்து துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயில் செய்வதோ இவர் மாண்பே"

இதனை,

"மழவன் சிறு மதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோன்"

என நம்பியாண்டார் நம்பி உளமுருகிப் போற்றியுள்ளார்.

திருமருகல்

திருமருகல் எனும் ஊரில் கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்கிய போது அங்கு கோயிலின் ஒரு புறத்தே வணிகனோடு வந்த கன்னி ஒருவள் வணிகன் விடம் தீண்டி சோர்ந்து வீழ்ந்தனன் விடம் தீர்க்கும் மந்திரம் கூறியும் வணிகன் விடம் தீர்ந்திலது. ஞானசம்பந்தர் அவளின் பால் இரக்கம் கொண்டு ஒள்ளிழையாள் உளம் நொந்து வருந்துதலால் அத்துயர் நீங்கும் பொருட்டு நெஞ்சம் நெக்குருகி இறைவன் பால் முறையிட்டு,

"சடையா யெனுமால் சரண் நீ எனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்"

எனும் பதிகம் பாடி வணிகன் விடம் நீங்கி உயிர்த்தெழுமாறு செய்தார். இதனை நம்பியாண்டார் நம்பியும் ஆளுடை பிள்ளையார் திருவந்தாதியில் போற்றிப் பாடியுள்ளார். இது மேலும் மருகற் பெருமானைக் காதலித்த மங்கையொருத்திப் பாடுவதாக அமைந்த அகப் பொருட்துறையமைந்த பாடலாகும். இது ஆனால் ஞானசம்பந்தர் பாடிய விடம் நீக்கும் திருமந்திரப் பாடலேயாகும்.

திருவீழிமிழலை

திருவீழிமிழலை இறைவனைப் பாடி ''வாசி தீரவே காசு நல்குவீர்'' என்று திருப்பதிகம் பாடி வாசியில்லாத காசினைப் பெற்று அடியார்களின் பசி நோய் நீங்குமாறு செய்தார். பஞ்ச காலத்தில் பசிநோய் நீக்கலே சாலச் சிறந்த பணியாகும்.

திருவாலவாய்

நாவுக்கரசர் மதுரைக்குச் செல்ல வேண்டாம். கோள்களின் நிலை சரியில்லை என்று கூறியும் திருஞானசம்பந்தர் மங்கையர்கரசியாரின் வேண்டுகோளின் படி மதுரை வந்து சமணர்களால் நீங்க முடியாத வெப்பு நோயாகிய சுரநோயினை ஆளுடை பிள்ளையார் திருவாலவாயானை நிலை பெற்ற துணையாய்க் கொண்டு திருவாலவாய் அண்ணல் திருநீரை மருந்தும் மந்திரமாகிய எல்லாப் பிணிகளையும் நீக்கவல்லது எனக்கூறி,

''மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தலுள்ளது நீறு''

என்ற திருப்பதிகம் பாடி கூன்பாண்டியனைச் சுரநோயினை திருவாலவாயுடையானால் தீர்த்தருளப் பெற்றார். ஆனால் அதே திருவாலாவாயுடையானை நினையுங்கால் சமணரை வாதில் வெல்வதற்காகத் தீயில் வேகாத ஏட்டினையுடை சமயமே மெய்ச்சமயம் என்றுணர்த்தினார்.

திருநள்ளாறு

போகமர்ந்த ஆண், முலையாள் தன்னோடும் என்ற பெண்பாகமாகிய உமையம்மையின் ஒளி வீசும் பாகமோடு திருவருள் ஒளிவீசும் நள்ளாற்றீசரைப் பாடி, அதனைப் பச்சைப் பதிகமாகவே விளங்கினார். ஏனென்றால் பாண்டியன் பேரவையில் திருவாலவாயானை நினைக்க அங்கே நள்ளாற்றீசனாக வந்து அருளி வினைதீர்த்த எம்பெருமானைப் பின்பு நள்ளாற்றிலே வந்து எங்ஙனம் நள்ளாற்றிறைவனாக

ஆலவாயில் காட்சி தந்தருளினார் என்று பாடுகிறார். இப்பதிகம் பாடினால் நோய் தீர்வதோடு நம் வினையும் நம்மை விட்டகலும் என்பது நமது கண்கூடாக இன்றளவும் விளங்குகின்றது.

திருவேடகம்

சமணரை வாதில் வெல்லும் போது வைகை ஆற்றில் இடப்பட்ட ஏடுகள் நீரினை எதிர்த்து மேலேறி வந்து புனல் வாதத்திலே வென்றார். அதோடு மன்னனுக்கு சைவ நெறியினையும், உலகியலையும் கற்பித்து இருவினையொப்புடையவாய்ப் பழவினை நீங்கி திருநீறு பூசப்பெற்று சைவ நெறிச் செல்வனாக மாற்றினார். ஏனென்றால் சமண சமயத்தின்படி மறு பிறப்பு என்பதில்லை. எனவே இருவினையொப்புடையன் என்பது கூறப்படுகிறது.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக''

வேந்தனும் ஓங்குக என்று பாடியதால் கூன்பாண்டியன் நின்றசீர் நெடுமாறனாக மாறினார். ஏனென்றால் அவ்வேடு வடகரையில் இருந்த திருக்கோயிலின் அருகே தேங்கியிருந்த நீரிலே,

''வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்''

என்று பாடியளவே, கரை ஒதுங்கியது. குலச்சிறையார் அதனை வைகைக் கரையில் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமானை வணங்கி, அதனைத் தலைமேல் கொண்டருளினார். இதன் அற்புதப் பாங்கு வைகை ஆற்றில் கோயில் கொண்டுள்ள திருவேடகத்திறைவனையே சாரும், பதிகத்தின் திருக்கடைக்காப்பில் ஏடு சென்று அணைத்தரும் ஏடகத்திறைவனை என்று பாடுவதால் அறியலாம். இங்கு நோய் என்பது பிறவிநோயாகிய கூன் நீங்கிய அற்புதம் ஏடகத்திறைவனாலே என்ப நன்கு விளங்கும். மக்களுக்கேற்பட்ட நோய்மட்டும் நீங்கவில்லை. இத்திருத்தலங்களை வணங்கலால், மரத்திற்கேற்பட்ட மலட்டுத் தன்மையும் நீங்கியது.

திருவோத்தூர்

திருவோத்தூரிலே சமணர்கள் ஆண்பனைகளாக குருத்தீன்றாமல் இருந்த பனை மரங்களைச் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா என இகழ்ந்துரைக்க இறைவனுக்கு அடித்தொண்டனாக விளங்கக்கூடிய ஒருவர் திருவோத்தூருக்கு வந்த திருஞானசம்மந்தரிடம் கூற பிள்ளையார் அத்திருக்கோயிலின் உள்ளே புகுந்து,

"குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
விரும்புவார் வினை வீடே"

என்று பாடி முடித்த உடனே ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாக மாறிக் குரும்பையீன்று காய்த்தன. இதனைக் கண்ட பலரும் அதிசயித்து இத்திருவருள் நிகழ்ச்சியில் பிறசமயத்தாரும் சிவநெறியை மேற்கொண்டு திருஞானசம்பந்தரை வணங்கினார்கள்.

"திருவோத்தூர் ஆண்பனையைப் பெண்பனையாகென்னும் பெருவார்த்தை தானுடைய பிள்ளை" என்று ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில் நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்.

திருமயிலைக் கபாலீச்சரம்

எலும்பை கூட்டுவித்து மீண்டும் உயிர்பெற்றெழச் செய்தல். ஆளுடைய பிள்ளையார் கூன் பாண்டியனை நின்ற சீர் நெடுமாறானாக மாற்றி சைவ நெறியை உலகறியச் செய்ததோடு தென்நாட்டில் சைவ நெறியாளராக மக்களை மாற்றி சைவ நெறி பரப்பிய அற்புதச் செயலை அறிந்த மயிலாப்பூரில் உள்ள வணிகர் தன்பெண்ணும், பணமும், தானும் ஞானசம்பந்தர் கடிமை என்றார். அவள் பாம்பு தீண்டி இறக்க அவளைத்தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் குடத்திலிட்டுக் காக்க திருஞானசம்பந்தர் வந்து மயிலாப்பூர் காலீச்சரத்தின் புறவாயிலில் கொணர்ந்து வைக்குமாறு கூற அவ்வளவில் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தலும், திருவிழாக் காணுதலுமே உண்மை அன்றி வேறேதுமில்லையானால்

பூம்பாவாய் உலகத்தார் முனி உயிர் பெற்று வருக எனக்கூற,

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம மர்ந்தான்"

எனும் பதிகத்தைப் முதல் பாடலிலே எலும்பு ஒன்று கூடி ஒருருவமாக மாற இரண்டாவது பாடலிலிருந்து எட்டு பாடல்கள் பாடிய அளவில் பன்னிரண்டு வயதுடைய பெண்ணாகப் பூம்பாவையாக மாறி உயிர் பெற்று எழுமாறு செய்ததால் மகள் முறையாவாள் எனக்கூறி, பிறர் எவர்க்கும் மணம் முடித்துக்கொடுக்க விரும்பாதலால் கன்னி மாடத்திலே இருந்து சிவனருளையே சிந்தித்து சிவனடியாராக மாறி சிவத்தைச் சேர்ந்தாள். இறந்த பெண்ணின் எலும்பை ஒன்றாகச் செய்து மீண்டும் அவளை உயிர்பெற்று வருமாறு செய்தல் என்பது கபாலீச்சரத்தின் அறை அருளால் மட்டுமே முடியும் என்பது அடியாராகிய திருஞானசம்பந்தரால் இயலும் என்பதனையும் மக்கள் கண்கூடாக நிகழ்ந்த ஒரு நிகழ்வு. இது எவரும் காணாத ஒரு அற்புதம் அல்லவா?

இது போன்று இன்னும் பிற அடியார்களின் நோயினையும், இறைவன் மீது ஆணை வைத்து மக்களின் நோய் தீர்த்த நிகழ்வுகளும் திருத்தலங்களும் பலவாகவே உள்ளன. மக்களின் நோய் தீர்த்தாலும் இறுதியாக மக்களின் பிறவாகிய நோய் தீர்த்து அவர்களை யாவரும் அறிதற்கு அறியாதவன் நமக்கெளியனாக உள்ள இறைவன் இறுதியாக அவனை நாம் ஏற்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் போது கலப்பவராக ஏற்றுக் கொள்கிறான்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி போற்றி"

என்று இறைவனைப் பாடிப் பரவுவோமாக.

53. அருளியற் புலவர் மாணிக்கவாசகர்



முனைவர் செ.போ.சாந்தித்தேவி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

முன்னுரை

பண்டைக் காலந்தொட்டே தமிழகம் தமிழினம் சமயநெறியைக் கண்டும், அறநெறியில் நின்று பண்பட்டும் வந்துள்ளது. வாழ்க்கைக்கு நெறியும், முறையும் சாம்பலுக்கே. குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையே குவலயம் போற்றும் வாழ்க்கை என்று வாழ்க்கைக்கொரு சிறப்பான குறிக்கோளைச் சமயநெறி வழியாகத் தந்து மனித வாழ்க்கையை வளப்படுத்திய மொழியும் தமிழே என்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார். விழுமிய பக்தி நெறியில் தலைநின்று, வாழ்க்கையின் குறிக்கோளைச் செம்மையாக நிறைவேற்றியவர்கள் இறையடியவர்கள்.

''நாலு பேர் நடந்த வழியில் நட'' என்பது இன்றும் பேச்சுவழக்கில் வழங்கும் சொலவடை. நாலுபேர் என்பது சைவ சமயத்தின் தூண்களாக விளங்கிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இவர்களில் மாணிக்கவாசகருடைய வரலாறு இரண்டு பெரும் பிரிவுகளில் கருதப்பெறலாம். ஒன்று அருள்நெறி வாழ்க்கை மற்றொன்று உலகநெறி வாழ்க்கை. முன்னையரைத் தெரிந்து கொள்வதற்கு மாணிக்கவாசகரே தெளிவான குறிப்புகள் கொடுத்துள்ளார்.

உயிரின் பலதிறப்பட்ட உள்ள நிலைகளையே, இறை அனுபவங்களையே மாணிக்கவாசகர் பாடியுள்ளார். உயிரின் பத்து வளர்ச்சி நிலைகளைத் திருச்சதகத்தில் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

சைவ சமயத்தின் அடிப்படை

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையை விளக்குகிறார் திருமூலர்.

“அன்பும் சிவமும்
இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது
ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது
ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருப்பாரே”

என்று திருமூலர் சுட்டுகிறார். இதனையே மாணிக்கவாசகர்.

“என்புறைந் துருகி நெக்குறக் ரேங்கி
அன்பெனும் ஆறு கரையாது புரள
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளந்ததனை போற்றி”

என்கிறார் இருவரும் அன்பே சிவம் என்னும் கருத்தினையே கொண்டுள்ளனர். இருப்பினும் இருவர் தம் படைப்பு முறையில் வேறுபாடு உள்ளது. திருமூலர் திருமந்திரத்தில் இக்கொள்கைக்குப் பாட்டு உருவம் கொடுக்கிறார். பாட்டு அவருக்கு எண்ணங்களைக் கருத்துக்களை வெளியிடப் பயன்படும் ஒரு கருவியாக அமைகிறது மாணிக்கவாசகருக்கோ, பாட்டு அனுபவமாக அமைகிறது. மாணிக்கவாசகர் தம் இளையனுபவங்களை எண்ணங்களாகப் படைக்காது அனுபவங்களின் உணர்வு மொழியில் படைக்கிறார்.

சமயத்தின் முடிவாய் இறைவன் இல்லை. ஒரு பரந்த, சிறந்த விழுமிய வாழ்க்கையே உள்ளது. அன்பு வாழ்க்கையே சமமத்தின் உயிர்த்துடிப்பாய் உள்ளது. மாணிக்கவாசகர் வாழ்க்கையின் பல்வேறு நிலைக்ளைப் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகரின் உவமை நயம்

மாணிக்கவாசகர் கையாளும் உவமைகள் முற்றிலும் புதியவை. பொலிவும், பொருத்தமும் கொண்டவை. இடத்திற்கும் கூறிய பொருளுக்கும் ஏற்ற அழகிய உவமைகளை, பொருண்மை மிக்க உவமைகளை அமைக்கிறார் மாணிக்கவாசகர். பெரிய நீர்நிலையில் அறவே நீர் வற்றிப் போக அங்குள்ள சிறு மீன்கள் துடித்து, வாடிக் கிடந்தாற் போன்று, நின்னைப் பிரிந்து அச்சத்தோடு வாடிக்கிடக்கிறேன்.

"ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புலனால் அலைப்புண்
டேனை"

என்றும் உள்ளே துளையுள்ள மூங்கிலின் நடுவே எறும்பு ஒன்று அகப்பட்டுக் கொண்டது. அம்மூங்கிலின் இரு பக்கங்களிலும் தீப்பற்றி எரிகின்றது. அந்நிலையில் அவ் எறும்பு போக்கிடமின்றித் துன்புறும் அல்லவா? அது போல் அடியேனும் நின்னைப் பிரிந்து உலகிடை உழன்று தலைவிரி கோலமாய்த் துன்புறுகின்றேன்.

"இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு
ஒத்து நினைப் பிரிந்த
விரிதலை யேனை"

கடவுளின் அருளை அளந்து காட்ட மாணிக்கவாசகர் அன்பை வளர்க்கும் அரிய உவமைகளை எடுத்தியம்புகிறார்.

மாணிக்கவாசகர் படைக்கும் உருக்காட்சி

மாணிக்கவாசகர் படைக்கும் உருக்காட்சிகள் உணர்வு மிக்கவை. உணர்வுக் காட்சிகளுக்கு அருளியலில் பெரும் பங்கு உண்டு. அவரது உருக்காட்சியில் அவரது உணர்வே மேலோங்கி உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு உருக்காட்சியைக் காணலாம்.

"அமுதே என்றுன் அருணோக்கி
இரைதேர் கொக்கொத்து இரவுபகல்

ஏசற்றிருந்தே வேறுற்றேன்''

என்ற பாடலில் இரைவரும் அளவும் வாடிக் காத்து நிற்கின்றது. ஒரு கொக்கு இரவு பகலாக இடைவிடாது காத்திருந்து அது சோர்வுறுகின்றது. அதுபோல மனமார நினைத்து வாயார வாழ்த்தி உன் திருவருளையே நோக்கி நிற்கின்றேன் இடைவிடாது இரவு பகலாகக் காத்திருந்து வாடும் கொக்குப் போல நானும் கவலையுற்று மனம் இளைத்தேன்

அருளியற் புலவர்

ஓர் உயிர் மெய்யுணர்வு பெற்ற இறைவனுடன் கலத்தலைப் பாடுவதே அருளியல் அருளியலின் முடிவு இறை இன்பத்தை நுகர்தல். அவ்வின்பத்தை நுகர உயிர் தன் கட்டுக்களின்று நீங்கி முழுத்தூய்மை பெறல் வேண்டும். பலவகையான தளைகளால் கட்டுண்டு அறியாமையாகிய திணிந்த காரிருளில் மூழ்கிப் போக்கிடம் காணாது திகைத்து நின்ற மாணிக்கவாசகர் திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்த மர நிழலில் பேரருள், ஒளிப் பிழம்பால் ஈர்த்து ஆட்கொள்ளப்படுகின்றார். இந்நிகழ்ச்சியே இறை அனுபவமே மாணிக்கவாசகரின் அருளியலுக்குத் தோற்றுவாயாக அமைந்தது. இந்நிகழ்வை மாணிக்கவாசகர் திருவாசகத்தின் பல பாடல்களில் குறிக்கின்றார் பேரின்பம் பெருகியது. எவ்வாறு இது நிகழ்ந்தது எனப் பார்த்தேன். என்னோடு இடையீடின்றி தொடர்ந்து வந்த துன்பம் அறவே தொலைந்துவிட்டது. இது என்ன நிகழக் கூடாதது நிகழ்ந்துள்ளதே எனப் பார்த்தேன். என் வலிய உள்ளமாகிய இருட்டறை அன்பு மலர்ந்த அருப்பேரூராக மாறிவிட்டது. குருத்தமர்ந்த பெருந்துணைப் பெருமான் திருவருளால்,

''இன்டம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து''

என்றும் இறைவன் தம்மை ஆட்கொண்டு அருளியதன்

விளைவாகப் பேரின்பத்தையும் அப்பேரருளுக்கு எவ்வாறு கைம்மாறு செய்யப் போகின்றோம் என்ற ஏக்கத்தையும், மாணிக்கவாசகர் பல பாடல்களில் பாடுகின்றார்.

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதருமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாகு முயிர்வாழ்க்கை ஏறுத்தன்றே வெறுத்திடவே''

உயிருக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள தடைகளை எல்லாம் வெற்றி கொள்ளுதல் அருளியலில் சிறந்த நிலை ஆகும். தடைகள் நீங்கப் பெற்ற அருளியற் புலவர் இறைவனோடு ஒன்றாய்க் கலக்கின்றார். பேரின்பத்தில் அழுந்துகின்றார் எல்லா அருளியல் நூல்களும் இவ்வின்ப நிலையினையே பாடுகின்றன. ஓர் உயிர் தூய்மை பெற்று இறைவனை அடைதலையே அருளியல் நூல்கள் கூறுகின்றன. திணித்த இருளில் கட்டுண்டு புரளும் உயிர் தூய்மை பெற்று இறையுடன் கலத்தலையே மாணிக்கவாசகர் படிப்படியாகக் கூறியுள்ளார்.

இறைவன் அருள் இயல்பினைப் பொலிவும், பொருத்தமும் தோன்றத் திருவாசகத்தின் பல பாடல்களிலும் மாணிக்கவாசகர் வியந்து பாடுகின்றார். திருவடி, சேவடி, எந்தையடி, பூங்கபுல், அருட்கபுல் போன்ற சொற்றொடர்கள் இறையருளைத் தெள்ளதின் புலப்படுத்துவனவாய் உள்ளன.

இறை, உயர், உலகு இம்மூன்றுக்கும் இடையே ஊடாடும் சரியான தொடர்பு முறைகளைப் பாடுகின்றார். மாணிக்கவாசகர் அருளியற் புலவரின் சமய கொள்கைகளை, தத்துவக் கருத்துக்களைக் கவிதை வடிவில் யாத்துள்ளார். இத்திறம் போற்றுதற்கு உரிய தொன்றாகும். உயிர் இறைவனுடன் ஒன்றிக் கலந்து இன்பம் துய்க்கும் இறை அனுபவத்தின் முடிந்த நிலையினைச் சிறப்பும் செம்மையும்பட, ஆற்றலும், ஆழமும், நுட்பமும், தெளிவும் வாய்ந்த விழுமிய உணர்வு மொழிகளால் பாடியுள்ளார் மாணிக்கவாசகர்.

54. மாணிக்கவாசகரின் பக்தி உணர்வு

இர.தெரசா
உதவிப்பேராசிரியர்
செயராசு அன்னபாக்கியம் கல்லூரி
பெரியகுளம்

முன்னுரை

சமயம் என்பது சமைக்கப் பெற்றது. பக்குவமாகச் செய்யப் பெற்றது என்பது பொருள். வகுக்கப்பட்ட கொள்கைப்படி வாழ நன்னெறிகள் அளிப்பது இறைவனோடு ஒன்றுச் சேர்வது. மக்கள் தொண்டும் இறைத்தொண்டும் செய்ய வற்புறுத்துவது. சைவத்தின் மேற்சமயம் வேறில்லை என்பது ஆன்றோர் வாக்கு. சாத்திரமும், தோத்திரமும் சமயத்தின் இருகண்கள் சைவமும், தமிழும் தழைத்தினி தோங்குக என்ற தத்துவத்திற்கு ஏற்ப ஆதிசைவர்கள் சைவசமயத்திற்கும் தமிழ் பக்தி இலக்கியங்களுக்கும் செய்த தொண்டு அளப்பரியதாகும்.

திருவாசகம், மாணிக்கவாசகர்

பன்னிரு திருமுறைகளுள் ஒன்றானதும், சைவ சமயத்தின் உயிர்நாடி இலக்கியங்களுள் ஒன்றானதுமான திருவாசகம் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட நூலாகும். மாணிக்கவாசகர் அரிமர்த்த பாண்டியனின் அமைச்சராக இருந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியார் ஆவார். தன்னுடைய ஆன்ம வெளிப்பாடாகவும், ஆன்ம தேடலாகவும் அவர் உணர்ச்சி ததும்ப திருவாசகத்தை எழுதியுள்ளார்.

ஆன்மீக உணர்வு

தனிமனிதனை நெறிப்படுத்தவும், சரியான வழிகாட்டவும், பக்தி மிக அவசியமாகிறது. அந்தப் பக்தி உணர்வு குறைகின்ற போது குற்றங்களும் அங்கே அதிகரிக்கிறது. நம்மை ஏதோ ஒரு சக்தி, நம்மை மீறிய சக்தி, ஆற்றல் கவனிக்கின்றது என்ற எண்ணம் வரும் பொழுது இயல்பாகவே மனிதன் குற்றங்களைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

எனவேதான் மாணிக்கவாசகர் திருவாசகம் முழுவதும் மனித இனம் நல்வாழ்வு வாழ, ஆன்ம ஈடேற்றம் பெற பக்தி, இறையுணர்வு மிகவும் முக்கியம் என வலியுறுத்துகின்றார்.

''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடி யோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்'' (திருவாசகம்-திருவெம்பாவை)

எனும் பாடலின் பணியின் பெருமை கூறப்படுகிறது.

"பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடித்
சித்தங் களிப்பத் திகைத்தேறி''
(திருவாசகம்-திருப்பொற்சுண்ணம்)

எனும் பாடலில் இறைவன் ஆன்மாக்களை ஆட்கொண்டு இறைப்பணியில் நிற்கச் செய்கிறான் என்று கூறப்பட்டுள்ளது.

திருச்சாழல்

திருச்சாழல் என்பது மகளிர் ஆடும் விளையாட்டு வகையைக் குறிக்கும். இது மகளிர் பாடியவாறு வினா விடையாக அமையப்பெற்றது. இப்பகுதி திருவாசகத்துள் தனிச்சிறப்பையுடையதாகக் கருதக்கூடியது. சைவத்தை நிறுவ வந்த மாணிக்கவாசகர், தில்லையில் புத்தமதத் தலைவரோடு வாதம் செய்து வெற்றி பெற்றார். அப்போது புத்தமதத்தைச் சேர்ந்த ஈழநாட்டுஅரசன் வேண்டுகோளுக்கு இணங்கி அவன் பெற்ற பிறவி ஊமைப் பெண்ணைப் பேசுமாறு செய்து அடிகள் அருள்புரிந்தார். இப்பகுதியானது மாணிக்கவாசகப் பெருமான் எழுப்பும் வினாவுக்கு ஊமைப்பெண் பதில் கூறுவதாக அமையப்பெற்றுள்ளது.

உயிரைக் காக்கும் இறைவன்

பெண்ணே சிவபெருமான் பூசுவது திருவெண்ணீறு ஆபரணமாகப் பூண்பதும் சீறிவரும் பாம்பு அப்பெருமாள் திருவாயால் பேசுவதும் வேதம் போல் ஆகுமோ? என்று வினா எழுப்பும் நிகழ்வை வெளிப்படுத்தியுள்ளார்.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவது திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கு இயல்பானான் சாழலோ"

சிவபெருமான் திருமேனியில் திருநீறு பூசுவதும் அப்பெருமான் மறையெனப் பேசுவதும் ஆபரணமாகப் பாம்பை அணிவதும் கொண்டு இருந்தால் என்ன? அப்பெருமானே எல்லா உயிர்களிலும் இயல்பாகப் பொருந்தி உள்ளவர் என்று பக்தி உணர்வோடு வெளிப்படுத்தியுள்ளார்.

வேதத்தின் சிறப்பு

பெண்ணே ஏன் தந்தையாகிய தலைவன் எல்லாருக்குமே ஈசன் ஆவர். அவர் கிழித்த ஆடையைத் தைத்துக் கோவணமாகக் கொள்ளும் தம்மை தான் யாது? என்ற வினாவிற்கு.

"எண்ணப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம் பெய் கோவணமாகக் கொள்ளுவது என்னேடீ?
மண்ணுகலை துன்னு பொருள் மறை நான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன் சாழலோ"

என்ற பாடல் அடியில் சிறப்பின் மிக்க அரும்பொருளைச் சாற்றுவது வேதம். அதனையே மேலான கயிறாகக் கொண்டு அரையில் கட்டி அப்பொருளையே கோவண ஆடையாக ஈசன் அணிந்தார் என்று பதிலளிக்கிறாள்.

தாயும் தந்தையும்

பெண்ணே சிவபெருமான் கோயில் கொண்டு இருப்பது

சுடுகாடு அப்பெருமான் உயர்ந்த ஆடையாகக் கொள்வது கொல்லும் தன்மையுடைய புலியின்தோல். அப்பெருமானுக்குத் தாயும் இல்லை தந்தையும் இல்லை. அவர் யாரும் அற்ற தனியனாக உள்ளதனைக் காணாயோ? என்று கேட்கும் நிகழ்வைக்

''கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் காயேடீ
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகு அனைத்தும் கற்பொடிகாண் காழலோ''

என்ற அடியில் சிவபெருமானுக்குத் தாயும் இல்லை தந்தையும் இல்லை. அவர் தனியராக இருப்பவரே. ஆனாலும் அவர் சினம் கொண்டு எழுந்தால் முன்னே எஞ்சி நிற்பது எதுவும் இல்லை. உலகம் முழுவதும் கற்பொடிபோல் ஆகிவிடும் என்கிறாள். சிவபெருமான் யாவர்க்கும் அம்மையும் அப்பனுமாக விளங்கினும் தான் தனியவனாகவும் தாயும் தந்தையும் இல்லாத தன்மையுடையவராகவும் சாற்றப் பட்டுள்ளது. இத்தன்மையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருப்பாசுரத்திற்கும் விளக்கம் சாற்றும் வகையில் சிவபெருமானுக்குத் தந்தை தாய் இல்லை என்பது தாமே யாவற்றுக்கும் நிலைகளனாக நிற்றல் செய்தியை வெளிப்படுத்தியுள்ளார். இதனைச் சேக்கிழார் பெருமான் திருப்பாடல் 2733இல்,

''தமக்குத் தந்தையர் தாய் இலர் என்பதும்
அமைத்திங்கு யாவையும் அங்கவை வீந்த போது
இமைத்த சோதி அடக்கிப்பின் ஈதலால்
எமக்கு நாதர் பிறப்பிலர் என்றதாம்''

-திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் (புராணம் திருப்பாட்டு எண் 830)

என்று அருளிய நிகழ்வைப் பாடலின் மூலம் அறியப்படுகிறது.

நயனங்கள் மூன்றுடைய நாயகன்

பெண்ணே சிவபெருமான் பிரம்மன், மன்மதன், இயமன், சந்திரன் ஆகியோரை வகையாய் மறையாத வடு உண்டாகுமாறு செய்தவர். இவற்றைக் காணாயோ? என்பதை,

''அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ் குழலாய்ச் சாழலோ''

என்ற அடியில் நீண்ட கூந்தலை யுடையவளே. மூன்று கண்ணுடைய தலைவனே குற்றப்பாங்கு உடையவர்களைத் தண்டிப்பது அத்தகையோர்க்கு வெற்றியல்லவோ இறைவன் என்று கூறுகிறார்.

முடிவுரை

தனிமனிதனை நெறிப்படுத்தியும், சரியான வழிகாட்டியும், பக்தி உணர்வு மக்களிடையே வெளிப்படுத்தும் விதமாகத் திருச்சாழல் என்ற பகுதியை அமைந்துள்ள செய்தியை இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

55. திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் படைப்பு நலன்கள்



ப.செல்லியம்மாள்
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்
கென்னடி பதின்ம மேனிலைப்பள்ளி
இரட்டணை

முன்னுரை

இறைத்தொண்டில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அடியவர்கள் பலர். அவர்களுள் வாதவூரில் பிறந்தமையால் வாதவூரார் என்ற பெயர் பெற்ற மாணிக்கவாசகர் ஏனை அருளாளர்களைக் காட்டிலும் இவர் பாடல்களைப் படிக்கும் போது தனித்தன்மையும் உள்ளத்தை உருக்கும் புதுமையையும் கண்டு இன்புறலாம். இவர் திருவாசகத்தில் பெரும்பான்மையான தலைப்பின் பத்து என்ற எண்ணுப்பெயரைச் சேர்த்தே வழங்கியிருப்பார். சைவ சமயக் குரவர்களில் ஒருவராகிய இவர் இளமைக்காலம் முதலே சிவபெருமான் மீது பேரன்பு கொண்டவர். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தான் பெற்ற இறையனுபவத்தைப் புறத்தே நின்று விளக்கும் படைப்பு நலன்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

வருணனை திறன்

இலக்கியங்களில் பொதுவாக வருணனைகள் மிளிர்ந்து காண்பது இயற்கை ஆயினும் பக்தி இலக்கியத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்ததைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பொற்புடை புண்ணியமோ கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ என வருணனையை மிகுவிக்கிறார்.

குமரகுருபர் தன் இறை இயல்பையும், இறை தத்துவத்தையும், சுந்தரர் கலிவெண்பாதவில் முதல் 36 கண்ணிகளில் வருணனை மிகுந்திருப்பதைக் காணலாம். படைப்பாளியின் கற்பனை உச்சநிலையை அடைவதே

வருணனை என்ற நிலையில் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் ஒப்பில்லாதவனும் உவமைக் கூறமுடியாதவனுமாகிய இறைவனை சேமநிதி, மாணிக்கம் என மனமுருகும் பான்மையை,

"வைப்பு மாடு என்றும் மாணிக்கத்து ஒளி என்றும்"

திருவாசம் -1

விளக்குகிறார்.

சொற்களை ஆளும் திறன்

படைப்பாளி தன் படைப்பைச் செம்மைப்படுத்தும் செம்மாந்த நிலையே சொற்களை ஆளும் திறன் குமரகுருபர் இறைவன், இறைவி இருவரையும் ஒரே நேரத்தில் அழைத்தல் பொருட்டு எந்தாய் என்ற சொல்லைச் சிலேடை நயத்தில் எம்தாய் என்று இறைவியையும் எம்தந்தை என்று இறைவனையும் அழைத்து மகிழ்வார். மாணிக்கவாசகர் உவமையைக் கையாளும் சொல்லாட்சித் திறன் மிக்கவராக விளங்கும் தன்மையை நெசவு நெய்பவர்கள் பாவு என்ற ஊடுநூலைக் கொண்டு இடப்புறமும், வலப்புறமும் சென்று நெய்யப்படும் காட்சியை மனித ஆசையாகிய மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவை மூன்றும் பாவு நூல்போல் குறுக்கும் நெடுக்குமாகப் பரவி மனிதனின் வினையானது நெய்யப்படுகிறது என உவமைக் கூறி, இதிலிருந்து விடுபட மாவடு கண்களை உடைய சிவபெருமானை வணங்கினாலன்றி வேறு வழியில்லை என்கிறார்.

"மாவடு வகிர் அன்னை கண்ணி பங்க நின் மலர் அடிக்கே" *(திருவாசகம் -6)*

புராணச் செய்திகள்

பண்டு இறைத்தன்மைகளை விளக்குவதே புராணங்கள் இவை மக்களுக்கு நல்லறிவு புகட்ட வந்தவை இறை உணர்வைத் தூண்டிச் சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்தவன. திருமால் நரசிங்கவதாரம் எடுத்து இரணிய கசிபு என்னும் அரக்கனைக் கொன்று, குருதி முழுவதையும் குடித்து மயங்கி செருக்குற்றச் செய்தியை அறிந்த சிவபெருமான் சாப உருவம் கொண்டு

நரசிங்கத்தை அழித்து அதன் தோலை ஆடையாக்கினார் என்பதைக் குமரகுருபரர்,

''புலவிய றயிறகு குருதியொ டுலவு
முடங்கலின் வீரமொடுங்கத் துறந்தன''
(மதுரை கலம்பகம்-11)

என்றார். மாணிக்கவாசகர் சிவபெருமானின் திருக்கரமும் திருவடியும் ஆணவத்தை அழிக்கவே எழுந்தன. மேருமலையை வில்லாகக் கொண்டு தன் கையால் திருபுரத்தை அழித்தார் என்றும், மார்க்கண்டேயனைக் காத்தல் பொருட்டு காலால் உதைத்தார் என்றார்.

''மெய்யனே விகிர்தா மேருவ வில்லா
வேலவர் புரங்கள் மூன்றும் எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
கடும் தழல் பிழம்பு அன்னமேனி'' (திருவாசகம்-464)

கல்வியின் சிறப்பு

கல்வி என்பது அறியாமையாகிய இருளைப் போக்கி அறிவுடையவனாக மாற்றும் தன்மைப் பெற்றது. மேலும் செல்வத்தைக் கல்விச்செல்வம், பொருட்செல்வம் என இருவகையாகப் பகுக்கலாம். இதில் கைப்பொருளாகிய பொருட்செல்வம் நம்மை விட்டு ஒழிந்தாலுய் கல்விச் செல்வம் நம்மை விட்டு ஒழியாது பின்தொடரும் என்பதை வள்ளுவர்,

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து'' (குறள்-398)

மாணிக்கவாசகரோ கற்பு என்பது கல்வி என்ற பொருளைத் தரும். கல்வி என்பது எளிமையாகத் தொடங்கி ஆழமாகச் செல்லச் சொல்லப் பெருகி விரிவன இத்தகைய கற்றவர் நட்பும் வேண்டேன். இறைவா உன் நட்பு போதும் என்றார்.

''உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்'' (திருவாசகம் -558)

புலால் மறுத்தல்

சைவ சித்தாந்தத்தின் முக்கிய நோக்கம் புலால் மறுத்தல், உலகின் புண்ணிய நாடு தென்னாடு. அதன் காரணமாகவே தென்னாடுடைய சிவனே போற்றி என்கிறார் மாணிக்கவாசகர். திருமூலர் கொலை, களவு, கள், காமம், பொய்யுரை ஆகியவை மறக்க வேண்டிய பெரும் பாவங்கள் மனித பிறவியின் முதன்மை நோக்கம் இறைவனாகிய சிவனை அடைதல்.

''கொலையே களவு கள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானானந்தத் திருத்தலே''
(திருமந்திர விளக்கம்)

மாணிக்கவாசகர் உடலையே புன்புலால் என்கிறார்.

''வன் புலால் வேலும் அஞ்சேன்
வளைக் கையார் கடைக்கண் அஞ்சேன்''
(திருவாசகம் - 58)

இங்கு புலால் என்பது உடலையும், புண்ணையும் குறிக்கின்றார். கொலை செய்கின்ற வேலுக்கும், பெண்களின் கூர்மையான பார்வைக்கும் அஞ்சேன் என்கிறார். உடல் என்பது எல்லா உயிர்களையும் பற்றி நிற்கும் இவ்வுடலை நீக்குதல் என்பது கடினம். ஆனால், மாணிக்கவாசக அடிகளார் இறைவனாகிய சிவபெருமான் தன்னுள் புகுந்தவுடன் புலாலாகிய உடலை நீக்கினார் என்கிறார்.

உயிரிரக்கம்

சைவ சமயத்தின் உயரிய நோக்கம் உயிரிரக்கம்

''உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்''
இராமலிங்க அடிகளாரர்

உலக உறவுகளில் தாய் சேய் உறவுக்கு மேற்பட்ட உறவு இல்லை.

குழந்தைகளுக்காகத் தாய் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பாள். அதற்கும் மேலாக இறைவன் அனைத்து உயிர்களையும் காப்பதால் தாய்மை உள்ளம் கொண்டவன்.

''தாயினும் சாலப்பரிந்து'' என்கிறார். கன்றாவின் மனம் இதனை கன்று+ஆவின் மனம் எனப்பிரித்து கன்றை இழந்த பசுவின் நிலையை விளக்கி எனக்கு மிக நெருங்கிய உறவுடைய குருநாதராகிய இறைவன் இல்லை. எனவே பசுவின் நிலைப்பெற்று தான் உருகவேண்டும் என்கிறார்.

''குரைகழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' (திருவாசகம் 0 558)

சமூகநலன் பேணுதல்

தான்பெற்ற இறை அனுபவத்தைப் புறத்தே நின்று விளக்கும் வகையில் அனைத்து அடியவர்களாலும் முன்நிற்பவர் மாணிக்கவாசகர். மனித மனமானது ஒன்றை விரும்பிவிட்டால் அதனால் ஏற்படும் நன்மை, தீமைகளை உணராது அடைந்தே தீரவேண்டும் என வேண்டி பெற்றுப் பின்னர் மனமானது உண்மையை உணருகின்றது.

''வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுவதும் தருவாய் நீ'' (திருவாசகம்-501)

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டையும், பேதமையையும் நீக்கி யான், எனது என்ற செருக்கைப் போக்கும் இறைவனை வணங்கி இன்பம் பெற வேண்டும் என்பதை,

''சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
பேதை குணம் பிறர் உருவம் யான் யுனது
என் உரை மாய்த்து'' (திருவாசகம்-479)

நல்வினை, தீவினை ஆகிய இருவினையும் அறுக்கும் திறன் இறைவன் அடிக்கே இருப்பதால் திருவடியைச் செந்தீ என்கிறார். மனிதர்கள் அகப்பட்டுக் கொள்ளும் சுழல்கள் இரண்டு அதில் ஒன்று நீர்ச்சுழல் கரையேறுவது எளிது. மற்றொன்று தையலாகிய பெண்ணின் சுழல் கரையேறுவது கடினம் இரண்டிலிருந்தும்

என்னைக் காத்தாய் அனைவரையும் காக்கும்படி வேண்டுகிறார். மனிதர்கள் விருப்பத்தையும், கோபத்தையும் நீக்க வேண்டும் என்பதை வெகுளி விடுமின் (569) என்றார். மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை மூன்றையும் நிக்கி திருவருளாகிய தேனைப் பாய்ச்சுபவன், உள்ள மலம் மூன்றும் மாய உருபெருந்தேன் (629)

பற்றற்ற நிலை

யாக்கை செல்வம், இளமை மூன்றும் நிலையற்றது.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'' (குறள்-350)

எல்லா வினைகளுக்கும் முழுமுதற் காரணமான மெய்ப்பொருளே இந்த உடம்பு அழிந்த பிறகு மற்றொரு உடம்பைப் பெற்று சீரழியாமல் காக்கவே உன்னை வேண்டுகிறேன். ''இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'' (திருவாசகம் -537) மத்து, தயிரில் கடையப்படுமுன் அதில் வெண்ணெய் மறைந்திருப்பது போல் ஆன்மா, உடலைப் பற்றிய கருவி கரணங்களால் மறைந்துள்ளது. பற்றற்ற இறைவனாகிய மத்து உடலுள் புகுந்து ஆன்ம முன்னேற்றத்தைத் தருகிறது. எனவே சிவனைப் பற்றுதல் வேண்டும்.

நிறைவுரை

சைவ நெறிகளைப் போதித்து இறைவனை அடைந்த அருளாளர். இறைவனே கேட்டுக் கொண்டதற்கு இணங்க பாவை பாடிய வாயால் கோவை பாடியவர். எச்சூழலிலும் இறைவன் பால் அன்பு கொண்ட அடியவர்களுள் மிகச் சிறந்தவர். இவரது பாடல்கள் உடலும் உள்ளமும் எலும்பும் உருகச் செய்தன. மாணிக்கவாசகர் பொருட்டு சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கினார்.

56. திருவாசகமும் திருவருட்பயனும்

முனைவர் சு.பார்வதி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை ஆய்வுமையம்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

சைவத்தின் வரலாறு

சைவம் என்பது சிவலிங்க வழிபாடாகும்.

''தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே''

தூங்குதல் நிலையாகத் தங்குதல். சிவச்செய்யூறுதல் என்றுச் செந்தமிழாகமத்தால் உணரமுடிகின்றது. சிவவழிபாடு என்பது சிவநெறி ஆகும். இதனைச் சைவநெறி என்றும் கூறலாம். சைவம் சிவனும் சம்பந்தாமாவது (திருமந்திரம், 1486) என்றுக் கூறுகின்றது. இச்சைவம் தக்கணத்தை உள்ளடக்கியும் அதனைச் சேர்ந்தும் நெடுந்தொலைவிற்கு மேற்கே மடகாசுகர் வரையிலும் கிழக்கே ஆசுதிரேலியாவிற்கு அப்பாலும் ஒரே நிலப்பரப்பாக இலெமுரியாக் கண்டமென ஒன்றிருந்தது என்றும் அங்குதான் மக்களினம் முதலில் தோன்றியது என்றும் அவர்கள் பேசத்தொடங்கிய மொழியே தமிழ் என்றும் சிவனே அவர்கள் தெய்வம் என்றும் சொல்லுவர். இலம் - கை (பகுதி) இலம்பகுதியே இலங்கை என்றும் சுமேரியாவிலும் இலம் என்பது உண்டு என்றும் பெறப்படுகின்றது. பெரும் அழிவு தோன்றிய காலத்தில் அக்கண்டத்தின் பெரும்பாகம் கடலில் அமிழ்ந்துவிட்டது. அதனின்றும் தப்பியவர்கள் பல நாடுகளுக்குச் சென்று குடியேறினர். அப்போது அவர்கள் சென்ற வழிகளில் சிவலிங்கமும் எருது வாகனமும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இராமேசுவரத்தில் இராமன் பூசித்த இலிங்கம் சிவலிங்கம்.

மிகப் பழங்காலத்தில் மிகமிகச் சிறந்த நாகரிகத்தோடு

வாழ்ந்தவர்களை மூன்றாகப் பகுக்கலாம். 1.சீனாவில் வழங்கிய சீனநாகரிகம், 2.தென் அமெரிக்காவின் பெருவில் பெரிதும் இங்கா வழங்கிய நாகரிகம், 3.பெருவில் சிவலிங்கமும் எருது வாகனமும் பெருவாரியாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகம் சுமேரியாவிலிருந்து மத்திய தரைக்கடல் தீவுகளில் தங்கிப்பனி மொகஞ்சதரோவிலிருந்து நேராகத் தமிழகம் வந்து குடியேறியவர்கள் என்றும், சுமேரியாவின் தலைநகர் பெயராகிய ஊர் என்பதே தமிழகக் குடியிருப்புகளுக்குப் பெயராக வழங்கி வருகிறதென்றும் தமிழகத் திராவிடர்களுக்கும் மொகஞ்சதரோத் திராவிடர்களுக்கும் நெருங்கிய தொடர்பு முத்துவாணிகம் ஒன்றிலே இருந்தது என்றும் கூறப்படுகிறது. ஆரியர் நம்நாடு புகுவதற்கு முன்னரே தமிழகத் திராவிடர் பேல் இருப்பாயுதங்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். பிறகடவுள் சமயங்கள் எல்லாம் கடவுளைத் தகப்பனாக மட்டும் சைவசமயம் மட்டும் கடவுளை அம்மையப்பனாகவும் தாயப்பனாகவும், தையல்பாகனாகவும் மாதொருபாகனாகவும் கொள்கின்றது. அவரை ஒரே ஆண் பெண் உருவத்தில் வணங்கினர். அரி என்பது அரணின் பெண்பாலே, பழங்காலத்தில் சுமேரியாவிலும் எகிப்திலும் மத்தியதரைக்கடல் தீவுகளிலும் கிரீசிலும் கடவுள் அம்மையாகவும் அப்பனாகவும் வணங்கப்பட்டு வந்துள்ளனர்.

கிரீசிலும் கடவுள் அம்மையாகவும் அப்பனாகவும் வணங்கப்பட்டு வந்துள்ளனர். இக்கூற்றை நோக்க, திராவிடர்கள் சுமேரியாவிலிருந்து வந்தவர்கள் என்பதும் அவர்களுக்கு முன் நாகர்கள் நம்நாடு முழுவதும் பரவியிருந்தனர் என்பதும் கூறப்படுகின்றன. தமிழகத்தில் வாழும் மலைப்பளியரும் நாகர் இனத்தைச் சேர்ந்தவர் என்பர். அவர்கள் தாய் மொழியும் தமிழே அசாமில் நாகமலை குன்றுகள் இருப்பது போல் தமிழகத்திலும் நாகமலை இருக்கின்றது. நாகர்கோயில், நாகூர், நாகப்பட்டினம் ஆகிய ஊர்ப் பெயர்களும்நாகவணக்கமும் மத்திய இந்தியாவிலுள்ள நாகப்பூரும் வங்களாத்திலுள்ள சோட்டா நாகப்பூரும் இதனை மெய்ப்பிக்கின்றன. திராவிட இனமொழிகளாகிய காண்டு, முண்டா முதலியன பேசும்

மக்களும் நம் நாட்டின் பல பாகங்களில் மத்திய இந்தியா, பலுச்சித்தானம், சோட்டா நாகப்பூர் பகுதிகளில் இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றனர். திராவிடர்களின் இந்நாட்டு வருகை ஆரியர் வருகைக்கும் முன் என்பது தெளிவாகின்றது. 3000 ஆண்டுகளுக்கு முந்தியது என்றுக்கூறும் தொல்காப்பியம் சிவன், திருமால், முருகன் ஆகிய தெய்வங்களின் வழிபாட்டினைக் கூறுகின்றது. திருமால் எனும் முல்லை நிலத் தனித்தெய்வம் சிவசக்தியாக வணங்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் சிவனைப் பிறவாயாக்கைப் பெரியோன் எனக் கூறுகிறது. சிவவழிபாட்டிற்காகச் சிவாகமங்கள் கி.மு. 1600 ஆண்டுகளுக்கு முன் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்கு முன்னும் சிவவழிபாடு இருந்திருக்கலாம். வைணவமென தமிழக மறுமலர்ச்சிக் காலத்தில் தான் திருமால் வழிபாடு தனிச் சமயமாகச் சைவத்திலின்றும் பிரிந்துள்ளது. இப்பொழுதும் இரண்டிற்கும் பரத்துவம் ஒன்றில் தான் பெரிதும் வேறுபாடாக உள்ளது. கொள்கைகளின் இரண்டும் ஒன்றே. சிவகாமங்கள் ஊன் உணவையும், மதுக் குடியையும் விலக்கியவை. சைவம் பிற்காலத்தில் முறைமுறையே திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். மனிதப்பிறவியும் வேண்டுவதே எனவும் பாடியது போல நம் வாழ்க்கையைப் போற்றினர். சிவனின் நெறிகளைப் பாடினர். சோழர், பாண்டியர்களின் காலங்களில் சிவ ஆலயங்கள் எழுப்பப்பட்டன. அரசர்களின் பணியும் அடியார்களின் பணியும் ஆலயங்கள் வழி பல்வேறு முறைகளில் சைவத் தமிழை வளர்த்தனர். (செந்தமிழ் செல்வி, 1963:228) சைவம் உள்ளது போகாது இல்லது வாராது என்ற சத்காரிய வாதத்தினைக் கொண்டது. இப்படி மறைகள் கூறும் முதல் சைவ நூல் திருமந்திரம் ஆகும். திருமூலரே முதல் சைவநூலைப் படைத்துள்ளார். திருமூலருக்கு முன் தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் சைவசித்தாந்த நூல் இல்லை.

திருமூலர் காலத்தில் ஆடல் பாடல்களில் வல்ல கணிகையர் இருந்தனர். அவர்கள் கோயில்களில் ஆடல் பாடல் நிகழ்த்தினர். இவர் காலத்தில் 7 சன்மார்க்க மடங்கள்

சைவத்தைப் பின்பற்றி ஏற்பட்டன. சைவப்பிரச்சபாரம் செய்த முதல் நூல் திருமந்திரமே ஆகும். சைவ சித்தாந்த சாத்திரங்கள் 4 அல்லது 5ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றன. பத்தாம் திருமுறையாக மூவாயிரம் மந்திரங்களையும் 9 தந்திரங்களாக உள் நிறுத்தி பிரச்சாரம் செய்தவர் திருமூலர்.

சக்கர வழிபாடு

சக்கர எழுத்துக்கள் ஒன்பது இதனை,

''சௌமுதல் அவ்வொடு வெறளவுடன் ஆம்கீரீம்
கௌவுகளும் ஐயுளம் கலந்திரீம் கிரீம் என்று
ஒவ்வில் எழுங்கிலி மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென'' *(1320)*

சௌமுதல் ஔ, வெற, கிரீம், கௌ, ஐ, கிரீம், சிரீம், லீம் ஆகிய ஒன்பது அட்சரங்களையும் மந்திரமாகக் கொண்டு, உள்ளம் ஒத்து நிற்கச் சிவாயம என்றுத்தியானம் செய்து தொடங்க வேண்டும் என்றுக்கூறுகிறார்.

நால்வகை பூசை வழிபாடு

நான்கு வகையான சைவ முறைகளில் வழிபடக் கூறிய திருமூலர் நான்கு வகையான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை பூசைகளையும் கூறுகின்றார்.

''பக்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள் வேடத்தாகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்று எய்துவோர்களே'' *(1446)*

என்ற நால்வகை பூசைகளில் பணிபவர் உள்ளம் பரம்பொருள் இல்லமாகும். சரியை என்பது ஆலய வழிபாடு. சைவருக்கு உயிர் போன்றது இந்தச் சரியை நெறிதான். மலர் இட்டுச் செய்யும் இறை வழிபாடு கிரியை ஆகும். யோகம் தியானம் செய்து வழிபடும் முறை ஞானம் உண்மைப் பொருள் அறியும் மெய்ஞ்ஞானமாகும். ஞானத்தை விட உயர்ந்ததான சமயம் உலகில் இல்லை தருமநெறியில் நின்று முக்தி அடைதல் ஆகும்.

இப்படி நான்கு வகையான பூசை முறைகளை மேற்கொண்டு பரமனை அடைய வேண்டும் என்கின்றார்.

நால்வகை மார்க்க வழிபாடு

மார்க்க வழிகளில் இறைவனை அடைய வேண்டும் என்பதை சன்மார்க்கம், சகமார்க்கம், சதபூத்ரமார்க்கம், தசமார்க்கம் என்ற நால்வகை மார்க்க வழிபாடுகளைக் காட்டுகின்றார். சன்மார்க்கம் நல்லநெறியில் வணங்குவது கோபத்தை விட்டொழித்து, வெறுப்பை விட்டொழித்து சிவயோகத்தில் தன்னை மறந்த சித்தம் உடையவராய் இருப்பவர்கள் சன்மார்க்கர்கள் என்றும், சன்மார்க்கத்தில் இறைவனைத் தோழனாக நினைத்து வீடுபேற்றையும் சித்தியையும் தரவல்லது என்றும் சத்புத்திரமார்க்கம் தந்தை மகன் என்று சிவ பூசையாகியக் கிரியை சிவயோகத்தைத் தரும் என்றும் தாசமார்க்கம் ஆண்டவன். அடிமை என்றத்தொண்டு நெறியில் குறைவினை வழிப்டுதல் வேண்டும் என்றும் *1487, 1488, 1495, 1502* ஆகிய பாடல்களில் எடுத்துரைக்கின்றார்.

வேடமுறைகள்

அவ்வேடம் *(1655)* தவவேடம் *(1661)* ஞானவேடம் *(1668)* சிவவேடம் *(1676)* நான்கு வகையான வேடமுறைகளைக் குறிக்கின்றார் திருமூலர். அவ்வேடம் என்பது பகட்டான தோற்றம், சடைமுடி, ஆரவாரமான வெளிவேடம் தாங்கிச் சோறுண்டு வயிறு வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு திரியும் போலி வேடதாரிகள். இவர்கள் பரமன் அருளைப் பெற வேண்டும் என்றார். பரமன் புகழைப் பாடிப் போற்றி, ஆடிப்பாடி அழுது அழுது தொழுதால் தான் திருவருள் கிட்டும் என்கிறார். சிவவேடம் சிவப்பரம் பொருளுக்கு அடிமையாகி மெய்பொருளாம் சிவப்பரம்பொருள் தனது உடம்பாகிய கோயிலிலே எழுந்தருளியிருப்பதை உணர்ந்து அறியாமையாகிய மனவிருள் நீங்கப் பெற்றுத் தம் செயல் அடங்கிப் புலனடங்கி இருப்பவர்களே, தெளிந்த நிலையில் உள்ள சிவவேடத்தவர் ஆவார்கள்.

''அருளால் அரசனுக்கு அடிமையதாகிப்

பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி
இருள் ஆனது இன்றி இடுஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத்தோரே'' (1676)

என்று சிவவேடம் தரித்தவர் பற்றிக் கூறுகின்றார்.

இலிங்க வகை வழிபாடுகள்

அண்டலிங்கம் (1712) பிண்டலிங்கம் (1726) சதா சிவலிங்கம் (1730) ஆத்துமலிங்கம் (1753) ஞானலிங்கம் (1763) சிவலிங்கம் (1773) ஆகிய அறுவகை இலிங்கவழிபாட்டு முறைகளைப் பற்றித் திருமூலர் எடுத்துரைக்கின்றார். அண்டலிங்கம் என்பது உலக முழுவதும் இலிங்கம் அடையாளக் குறியீடாக இருப்பதையும், 64 கலைகளும் சிவவடிவம் என்பதையும், பிண்டலிங்கம் மனிதர்கள் உடம்பு சிவலிமங்க வடிவமாகும், கோயிலாகும் சிவனும் சத்தியும் சேர்ந்த சதாசிவமாகும். சைவ உலகில் கோயில் என்றால் சிதம்பரம் என்பதையும் குறிப்பிடுகின்றார். சதாசிவலிங்கம் என்பது, பாதங்கள் இரண்டும் திருக்கரங்கள் படித்தும் பத்து திசைகளிலும் வணங்கித் தொழத்தேடும் திருமுகங்கள் ஐந்தும் கண்கள் பதினைந்தும் கொண்டு பக்தி செய்வாருக்குத் தேடிப்பணிவார் உள்ளத்துள் முத்தொளியாய் விளங்குவார் என்று கூறுகின்றார். ஆத்துமலிங்கத்தை,

''அகாரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்
ஊகார முதலாய் உயிர்ப்பெய்து நிற்கும்
அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கம் அதாமே'' (1753)

என்ற பாடலில், ஆன்மாவையே லிங்கமாகக் கொள்வது ஆத்துமலிங்கம் என்றும் அகரம் சிவம், உ கரம் சக்தி என்றும் அகர உகரம் இலிங்கமாகும் என்றும் கூறுகின்றார். ஞானலிங்கம் வேண்டியதைத் தரும் வானுலக விருட்சம் விருட்சமாகும் என்று சிவலிங்கம் என்பதனை,

குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பர்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்

நிரைக்கின்றவாறு இவை நீண்டு அகன்றானை
வரைத்து வலம் வெய்யுமாறு அறியேன் *(1773)*

என்று ஒரு வரையறைக்குள் அடையாளத்துக்குள் வைத்து வழிபடுவது ஆகும். எப்படி என்பதுதான் தெரியவில்லை. உருவத்துள் அடங்காதவன். உள்ளத்துள் உணர்ந்து வழிபட வேண்டும் என்றும் கூறுகின்றார். ஓம் குறிப்பிட்ட வடிவில் கண்டு வழிபாடு செய்தலாகும்.

சிவதீட்சையின் சிறப்பு

சிவபூசை முறையாகச் செய்பவர்கள் தீட்சை பெற்றவராக இருக்க வேண்டும் என்பது நியதி. சிவதீட்சைப் பெறுவது மன அழுக்கைப் போக்கி, சுத்தி செய்யும். ஆணவ, கன்ம மலங்கள் போக்கும் சமயதீட்சை உடலைத் தூய்மை செய்வது விசேட தீட்சை.

குருபூசை

குருபூசை சிவனைக் குருவாக ஞானாசிரியனாக வழிபடுதல் நந்திப்பெருமானைத் துணையாகக் கொண்டு செய்கின்ற உபதேசமும் செய்கின்ற பூசையும், குருபூசையாகும் *(1847)* என்று நவில்கின்றார்.

முடிவுகள்

சைவம் என்றால் சிவமாகும் தமிழகத்தில் திராவிடர்களின் வருகையும் சைவம் உலகமெல்லாம் பரவியிருக்கும் தன்மையினையும் திருமந்திரம் சைவ நெறிகளை எடுத்துரைக்கும் முதல் நூலாகத் திகழ்வதையும் சைவமார்க்கங்களையும் சைவம் பூசை முறைகளையும் அடையாளக் குறியீடுகளாக இலிங்க வழிபாடு இருப்பதையும் குரு செய்பவர் தீட்செய் பெற வேண்டும் என்பதையும் சைவ நெறிக்கட்டுக்களோடு திருமூலர் கூறுகின்றார். பூசை கோடி நன்மை தரும் என்பதனையும் சைவமடங்கள், கணிகையர் வழி ஆடல், பாடல் போன்ற பல்வேறு வகைகளிலும் திருமூலர் சைவத்தை வளர்த்துள்ளார் என்பதாகும்.

57. திருவாசகமும் திருவருளும்

முனைவர் நி.நந்தியா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
சென்னை

முன்னுரை

சங்ககாலம் பொற்காலம் என்பர். களப்பிரர்களின் வருகையில் மொழியும் சமயமும் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஆட்சி மொழியாகப் பாலிமொழியும் சமண, பௌத்த சமயங்கள் தமிழகத்தில் தழைத்தோங்கின. இக்காலத்தைச் சங்கம் மருவிய காலம் என்பர். மொழியையும், சமயத்தையும் மீட்டெடுக்க முயன்றனர். இக்காலக்கட்டத்தை மொழிவழியே சமயப் பற்றை உணர்த்த முற்பட்டவர்கள் சமயக்குரவர் என்றழைக்கப்பட்டனர். சிவனை வழிபட்டோரைச் சைவ சமயக்குரவர் என்றும் திருமாலை வழிபட்டோரை வைணவ சமயக்குரவர் என்றும் பின்னாளில் பாகுபடுத்தி அழைத்தனர். இவ்வாறு சமயத்தையும், மொழியையும் மீட்டெடுக்கப் போராடிய காலத்தைப் பக்தி இயக்கக் காலம் என்றார்கள். தமிழக மன்னர்கள் சைவத்தையும் வைணவத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டிருந்தனர். இதனை வளர்த்தெடுக்க கலைகளை வளர்த்தனர்.

சமயங்களின் வேறுபாடு

சைவ, வைணவ சமயங்கள் இல்லறத்தைப் போற்றின. கலைகளை வளர்த்தன. பெண்மையைப் போற்றின. இயற்கை வழிபட்டது நம் சமயங்கள். சமண, பௌத்த சமயங்கள் துறவறத்தைப் போதித்தன. கலைகளை உடல் புணர்ச்சிக்கு வித்திடும் போகப்பொருளாகக் கொண்டன. பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்றும் பெண்ணாகப் பிறப்பது பாவத்தின் அடையாளம் என்று கூறுகின்றனர். இயற்கைக்கு மாறான ஒன்றினை இச்சமயங்கள் போதித்த தன் விளைவே இச்சமயங்கள் தேய்வுற்றதெனலாம்.

கலைகளைகளின் தாயகமாய்க் கோயில்கள் விளங்கின என்பதை, விழாக்காலங்களிலும், பிற காலங்களிலும் பண்ணிசையுடன் சிவபெருமான் ஆடிய பலவகை நடனங்களையும், பிற நடனவகைகளையும் நடன மாந்தர் நடித்துக் காட்டினமைக்கட்குச் செவிவிருந்தும் விழிவிருந்தும் அமைந்தன. இவ்விருகலைகளும் காம இன்பத்தைப் பயப்பவை என்று சமண பௌத்தரால் விலக்கப்பட்டவை அம்மை அப்பனா மாதொருபாகனை வழிபட்ட சைவர் கட்கு இவை வெறுப்பைத் தராது. இன்பத்தையே தந்தன. இசையும் நடனமும் பொதுமக்களைக் கோயில் கட்கு இழுத்தன. உள்ளங்களை குழைவித்தன ; கலைகளின் அருமையை உணர்த்தின ; கலையே உருவான கடவுளிடம் மனத்தைச் செலுத்தின ; தம்மை மறந்து ஆடவும் பாடவும் செய்தன (ப.45) என்று சவைசமயம் என்ற நூலில் டாக்டர் மா.இராசமாணிக்கனார் கூறுவது மேற்கூறிய கருத்து வலு சேர்ப்பதாய் அமைந்துள்ளது. இவ்வாறு சமயக்குரவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உத்தி முறைகள் வேறாயினும் கருத்துக்கள் ஒரு மித்ததாய் இருப்பதைக் காணமுடிகிறது. கொற்றவன்குடி உமாபதி சிவாசச்சாரியார் அருளிய திருவருட்பயனில் மாணிக்கவாசகர் திரு வாசகத்தின் கருத்தும் ஒன்றுபட்டள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பற்றற்ற நிலை

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய எம்பெரியோனே. என்னை வந்து நீ அடிமைகொண்ட அந்நாளிலேயே என் ஆவியும் உடலும் உடைமையுமாகிய அனைத்தையும் குன்றே அனையாய் நீயும் ஏற்றுக் கொள்ளவில்லையோ? இன்று எனக்கு ஓர் இடையூறு என்பது உள்ளதோ? நன்மையே செய்தாலும் தீமையே செய்தாலும் இந்தக் காரியத்திற்குத் தலைவன் நானோ என்ற கருத்தினை,

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே
செ.ாண்டிலையோ

இன்றோர் இடையூறெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே

நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே''

என்ற திருவாசக (பா.502) கருத்தினை உமாபதி சிவாச்சாரியார்

''கிடைக்கத்தகுமே நற்கேண்மையார் கல்லால்
எடுத்துச் சுமப்பானையின்று'' (பா.65)

என்ற திருவருட் பயன்பாடலில் சிவபெருமானின் அருளுடைய கேண்மையுடையார்க்குத் தன்னை அடைந்தார் வினைகளெல்லாம் அவரைத் தொடராது. சிவன் செயலாகக் கொள்ளும் நேயம் வெளிப்படுதல் என்று மாணிக்கவாசகரின் கருத்தை அடியொற்றி விளங்குகின்றது.

சிவனின் பெருமை

திருத்தில்லையில் அருளப் பெற்றதே சிவபெருமானின் பெருமையினையும் வியாபக நுட்பத்தினையும் பாராட்டியதாக அமைந்த திருவண்டப் பகுதியில்,

''தடக்கையின் நெல்லிக்கனியெனக் காயினன்
சொல்லுவதறியேன் வாழி''

என்றும்,

''எனைநானென்பதறியேன் பகலிராவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான் எனை மத்தோன் மத்தனாக்கிச்
சினமால்விடையுடையான் மன்னுதிருப்
பெருந்துறையுறையும்
பனவன் எனைச்செய்தபடி றறியேன் பரஞ்சுடரே''

என்று குழைத்தப் பத்திலும் மாணிக்கவாசகர் கூறிய கருத்து,

''மூன்றாய தன்மையவர் தம்மின்மிகமுயங்கித்
தோன்றாதவின் பமதென்சொல்'' (பா.79)

என்ற பாடலில் உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார். இப்பாடல் கருத்தாவது, ஞாதுரு, ஞானஞேயம் என்னும் மூன்று

வகைப்பட்ட தன்மையும் சிவசீவ பாவங்கள் இரண்டும் தம்மின் மிகவும் கூடிய கலப்பினாற் தோன்று தலைச் செய்யாத இன்பம். அவ்விடத்து வேறுவார்த்தையேது. அந்த ஆனந்த மிகுதியின் அதிசயம் கூறப்பட்டது. சிவானு பவமாகிய பேரின்பத்தின் மிகுதியினை உணர்த்துகின்றது என்பதாகும்.

இன்பநிலை

இறைவன் பால்மெய்யன்புடையோர் இப்பிறவிலேயே வீடு பேற்றின்பத்தை அடைந்தின் புறுவர் என்ற கருத்தை உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில்,

''இன்பைலினி தென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்
அன்புநிலையேது'' *(பா.80)*

என்று குறிப்பிட்டுள்ளார். முன்னரே இக்கருத்தைத் திருவாசகத்தில்,

''ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடையயன்பே''

(கோயில் திருப்பதிகம், 389)

என்றும்,

''பெறவே வேண்டும் மெய்யன்பு
பேராஒழியாப் பிரிவில்லா
மறவாநினையா அளவிலா
மாளாஇன்பமா கடலே'' (குழைத்தப்பத்து, பா.490)

என்றும் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். ஒரு சில பாடல்களை மட்டும் சான்றுகளாக இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. திருவாசகக் கருத்துக்கள் திருவருட் பயன் என்ற நூல் முழுமையும் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன. இவற்றை நோக்க சிவனடியார்கள் கூறும் கருத்துக்கள் ஒருமித்தே காணக்கிடக்கின்றன என்பது புலப்படுகின்றது.

58. கலித்தொகை காட்டும் சிவனின் பெருமை

முனைவர் ஆ.பாக்கியலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
சென்னை

முன்னுரை

தமிழ் மக்கள் என்றும் இறைபக்தி உடையவர்களாகவே விளங்கினர். சங்க காலத்திலும் இறைநெறியுடன் மக்கள் வாழ்ந்தனர் எனலாம். கலித்தொகையில் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்வழிச் சிவன் பற்றிய செய்திகளை அறிதலே இக்கட்டுரையின் நோக்கம்.

கலித்தொகையுள் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடலில், சிவபெருமானின் மறைவெளிப்பாடல், திரிபுர அழிப்பு, வடிவம், சிறப்பு, கையில் ஏந்தும் ஆயுதங்கள் ஒலித்தல், புலித்தோல் அணிதல், திருநீற்றினை அணிதல், கபாலத்தைக் கையில் ஏந்தி ஆடுதல், உமையோடு இருத்தல், பாணி, தூக்கு சீர் போன்ற தாளங்கள் முதலிய செய்திகள் பேசப்படுகின்றன.

மறை வெளிப்பாடல்

ஆறு அங்கங்களையும் அறிந்த அந்தணர்களுக்கு அரிய வேதங்கள் பலவற்றையும் அறிவித்தது. ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து என்பதற்கு நச்சினார்க்கினியர் நிருத்தம், வியாகரணம், கற்பம், கணிதம், பிரமம், சந்தம் எனும் வேதாகமங்கள் ஆறனையும் அறிந்த அந்தணர்க்கு வேதங்கள் பலவற்றை இறைவன் அருளிச் செய்தான் என்று விளக்குகிறார். வீட்டு நெறியை அறிகின்ற அந்தணர் என்னும் சான்றோர்களுக்கு அரிய நுட்பங்களைப் புலப்படுத்தினார். சிவபெருமான் என்பார் ஒரு சாரார். அந்தணர் சாதிப் பெயரன்று. செந்தண்மை பூண்டொழுவோர் அந்தணர் என்றழைக்கப்பட்டனர் என்கிறார்.

திரிபுரம் அழித்தல்

வித்துமன், தாரகாசூரன், கமலாட்சன் ஆகிய மூன்று அசுரர்கள் முறையே பொன் வெள்ளி, இரும்பு கோட்டைகளைத் தவமிருந்து பெற்றனர். அம்மூவரும் தேவர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தொல்லைக் கொடுத்து வந்தனர். சிவன் மூன்று அசுரர்களின் கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கினான். சிவன் திரிபுரத்தை எரித்த சாம்பலை அணிந்து கொடுகொட்டி, பாண்டரங்கம் என்ற கூத்துக்களை ஆடினான் என்றொரு சாராரும் பிற்காலத்தில் சிவநெறியைப் பின்பற்றுவோர் ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைச் சிவன் அழித்து அருள்புரியும் செயலாகவும் இதனை விளக்குகின்றனர். மற்றொரு சாரார் சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றனையும் மும்மலங்கள் என்று கூறுகின்றது.

சிவன் முப்புரம் எரித்த வரலாற்றை, வீரசைவம் (பக்.164-165) என்ற நூலில் மனித உடம்பில் 360 நாடிகள் உள்ளன. அதை ஒட்டியே ஓர் ஆண்டு அமைகிறது. அவைகள் பலவாகப் பிரிந்து சென்றாலும் மூன்று இடங்களில் இணைகின்றன. இணையும் இடத்திற்கு முடிச்சு என்ற பொருள் தரும் கண்டம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறே அக்கினி கண்டம், சூரிய கண்டம், சந்திரகண்டம் என்ற மூன்று இணைப்புகள் உள்ளன. மூலாதாரத்தையும் மணிபூரத்தையும் இணைப்பது அக்கினி கண்டம், அதற்குத் தெய்வம் நான்முகன், சுவாதிட்டானம் அநாகதம் இணைந்த இடம் சூரிய கண்டம். அதற்குத் தெய்வம் திருமால், விசுத்தி ஆக்ஞை என்ற இரண்டும் இணைந்த இடம் சந்திர மண்டலம். அதற்குத் தெய்வம் உருத்திரன். இம்மூன்று முடிச்சுகளிலும் உள்ள அழுக்குகளை நீக்கி ஆன்மீகத் தன்மையுடையனவாக அவைகளை மாற்றிய செயலே திரிபரம் எரித்த செயல் என்று வை.இரத்தின சபாபதி கூறுகிறார்.

சிவன் வடிவம்

தெளிந்த நீரினைக் கொண்ட கங்கையின் வேகத்தைத் தன் சடையின் ஒரு பகுதியில் அடக்கிக் கொண்டவன். கடிதாகிய

கூளியினது முதுகிடாத போரினையும் நீலமணி போன்ற கழுத்தினையும் எட்டுக்கைகளையும் உடையவன் சிவன் என்ற செய்தி,

> ''கூறாமல் குறித்த தன் மேல் செல்லும் கடுங்கூளி
> மாறாபோர் மணிமிடற்று, வண்கையாய்க் கேளினி''
> *(கலித்தொகை,பா.எண்.1:3-4)*

என்று கலித்தொகையில் பேசப்படுகின்றது. சிவபெருமான் இமயமலையினை வில்லாகவளைத்தவன் அவன் சடைமுடியுடன் உடையவன் என்ற செய்தியை,

> ''இமைவயலில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
> உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக''
> *(கலித்தொகை, பா.எண். 38:1-2)*

என்றும்,

> ''தேறுநீர் சடைக்கரந்து''

என்றும் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

கையில் ஏந்தும் ஆயுதங்கள் ஒலித்தல்

கொடிகொட்டி, துடி, மழு, சூலம், கபாலம் ஆகியவற்றைச் சிவன் கையில் ஏந்துவதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கொடுகொட்டி, பாண்டரங்கம் என்கின்ற திரிபுர தாண்டவங்கள் காத்தல் செயல் ஆகும். என்றும் மறைத்தல் செயலாகிய திரோபவம் ஆகும் என்றும் மயிலை சீனி.வேங்கடசாமி, இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம் *(ப.62)* என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

> ''படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
> கொடுகொட்டி ஆடுங்கால், கோடு உயர் அகல் அல்குல்
> கொடி புரை நுசுப்பினாள் சொண்ட சீர் தருவாளோ?''
>
> *(கலித்தொகை, பா.எண்.1:5-7)*

கபாலம் என்பது மண்டை ஓடு. புலித்தோலை இடையில் கட்டிக்கொண்டு, தலையில் சூடிய கொன்றை மலர் தோளில்

அசைந்தாட கையில் மண்டை ஓட்டை ஏந்திக்கொண்டு சிவபெருமான் (வீடு தோறும் பிச்சை எடுத்து) ஆடினாராம். இப்படிப்பட்ட ஆட்டத்தை அரங்கில் ஆடிக் காட்டுவது கபாலம் என்னும் ஆட்டம் என்றும் பிரமகபாலம் (பிரமன் தலை ஓட்டை) எலும்பு ஆகியவற்றை அணிந்து ஆடுவது கபாலம் என்று கூறப்படுகிறது. இதனை,

''கொலை உழுவைத் தோல் அசைஇ, கொன்றைத்தார், சுவற்புரள,

தலை அங்கை கொண்டு நீ கபாலம் ஆடுங்கால்''

(கலித்தொகை,பா.1:11-12)

என்று கலித்தொகைப் பாடல் காட்டி நிற்கிறது. இறைவன் நடம்புரிந்து அகிலங்கள் அனைத்தையும் அழித்தலைச் செய்யுங்கால் கைகொட்டி ஆடும் கூத்துக் கொடுகொட்டி ஆடல் என்றும் ஆடும்போழ்து அழிந்தவரின் சாம்பலினை மெய்யெல்லாம் பூசி ஆடுங்கூத்துப் பாண்டரங்கம் என்றும் பிரமகபாலம் (பிரமன் தலை ஓட்டை) எலும்பு ஆகியவற்றை அணிந்து ஆடுவது கபாலம் என்றும் கூறப்படும். இவை சிவனுக்குரியனவாகும். காடுகொட்டி, பாண்டரங்கம் ஆகிய பதினோராடல் வகையுள் அடங்கும் என்று சிலப்பதிகார உரை கூறுகின்றது.

புலித்தோலாடை அணிந்தமை

புலித்தோலாடையைச் சிவன் உடுத்தியிருந்தமையை,

''கொலை உழுவைத் தோல் அசைஇ''

(கலித்தொகை,பா.எண்.1:11)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

திருநீற்றை அணிதல்

சிவன் தனது திருமேனியில் திருநீறு அணிகிறான். திருஞானசம்பந்தர், பராணமாவது நீறு என்று கூறுவதால், திருநீறு பராசக்தியின் வடிவமாக இறைவனின் திருமேனி முழுவதும் பிரிவின்றிக் கூடியிருத்தலைக் காட்டுகிறது. அகத்திய தேவார திரட்டில் பதிகத்தின் கருத்து வரும் இடத்தில் மலராத

நீற்றுக்கொடியை நேர்பட எடுத்தும் என்னும் பகுதி உயிர்களின் பாசவினையை நீக்க இறைவன் மேனிமுழுவதும் திருநீறு அணிந்திருக்கிறான் என்று குறிக்கிறது. இதனை உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தன்னுடைய கோயிற் புராணத்தில், பாசமும் அங்கது, அழியப்பண்ணும் திருவெண்ணீறும் என்று கூறுகிறார்.

அழித்தல் தொழிலைச் செய்யுங்காலத்தே ஆடும் கூத்தினைத் தாளத்திற்கேற்ற பாணி, தூக்கு, சீர் என்ற இவற்றை மாட்சி பொருந்திய அணிகலன்களை அணிந்த இறைவி காத்து நிற்கின்றாள். அம்மையின் அருட்செயலினாற் போலும் நின்வெம்மையை ஒடுக்கி, ஓர் உருக்கொண்டு அன்பற்ற பொருளாகிய எம்மிடத்து வந்து பொருந்தி நின்றாய், என்பதைப் பற்றி,

''முலை அணிந்த முறுவலாள் முன் பாணி தருவாளோ?
என் ஆங்கு
பாணியும், தூக்கும் சீரும் என்று இவை
மாண் இழை அரிவை காப்ப
ஆணம் இல்பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி''

(கலித்தொகை, பா.எண்.1:13-17)

என்ற கலித்தொகை வரிகள் குறிப்பிடுகின்றன. முத்தொழில் இயற்றும் இறைவன், அகிலங்கள் அனைத்தையும் அழிக்க முற்படுங்கால் ஆடுங்கூத்து ஊழிக்கூத்து என்றும் கூறப்படும். அனைத்தையும் தன்னுள் அடக்கித் தானும் உமையுமாக இருந்து ஆடும்போது, அருளே வடிவாகிய உமையம்மை, இறைவனது அழித்தல் நடனத்திற்குப் பாணி, சீர், தூக்கு என்னும் தாள அறுதிகளை வழங்கமாட்டாளே ; அதனைச் செய்யப் பிறர் எவரும் அங்கில்லையே என்று வினவுனவாகத் தாழிசைகள் அமைகின்றன. எனினும் அழிப்புச் செயலும் (சங்காரம் இறைவனது அருள் காரணத்தால் நிகழ்வதாதலின், உமையம்மை தாள அறுதிகளை வழங்க இறைவன் ஆடினான்) என்று ஆசிரியர் குறிப்பிடுவதாக முனைவர் அ.விசுவநாதன் தம் உரையில் கூறுகிறார். ஒரு தாளத்தின் தொடக்க நிலை பாணி என்றும்

இடைநிலை தூக்கு என்றும் இறுதிநிலை சீர் என்றும் கூறப்படும்.

ஆலமர் கடவுள்

தலைவன் பரத்தை காரணமாகப் பிரிந்து, பின்னர்தன் விட்டிற்கு வந்தான். தலைவி தன் மகனைத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தாள். தலைவன் தன் வரவைத் தலைவி அறியாதவாறு மறைந்து நின்றாள். தலைவியின் ஊடல் உணர்வை உறழ்ந்து சொல்லியதைக் கேட்டான். மகனை முன்னிட்டுத் தலைவன் ஊடல் தீர்ந்ததாக அமைந்த இப்பாடலில்,

''ஆல் அமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும் என் உயிர்'' *(கலித்தொகை,பா.எண்.1:11)*

என்று ஆலமர் செல்வனின் அழகிற் சிறந்த முருகனைப் போலே வரும் மகனாகிய என் உயிர் என்று தலைவி கூறுகிறாள். இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆலமர் செல்வன் எனச்சுட்டப்படுவது சிவனையே.

சிவன் மகன்

சிவனைத் தலைவனுக்கு உவமையாகவும் சிவன் மகன் முருகனைத் தன் மகனாகவும் தலைவி உவமையாகக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தோழி, ஆயர் ஏறுதழுவுவதைக் கண்டு தலைவி, தலைவனை எண்ணி வருத்தப்படாமல் இருக்க தோழி நன்னிமித்தங்களைக் கூறுகிறாள். மேலும் ஏறு தழுவும் காட்சியைச் சந்திரனைப் போன்ற நெற்றிச் சுட்டியை உடைய கரிய எருது குடல் சரியக் குத்திக் குலைப்பது ஊழி முடிவிலே பசிய நிறத்தைத் தன் பாகத்தே உடைய கடவுள் உயிரினங்களை அழிக்கும் எருமைக்கடாமீது ஏறிவரும் கூற்றுவனுடைய நெஞ்சைப் பிளந்து குடலைக் கூளிக்கு இட்டு அதன் வயிற்றை நிரப்புவதைப் போலிருந்தது என்று,

''சுடர் விரிந்தன்ன சுரி நெற்றிக் காரி
விடரி அம் கண்ணிப் பொதுவனைச் சாடி
குடர்சொரியக் குத்தி குலைப்பதன் தோற்றம் காண்
படர் அணி அந்தி, பசுங் கட் கடவுள்
இடரிய ஏற்று, எருமை நெஞ்சு இடந்து இட்டு,

குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்''
கலித்தொகைப் பாடல் (101:21-26)

என்ற கலித்தொகை அடிகள் குறிப்பிடுகின்றன.

திருவாதிரை

சிவனுக்குரிய நட்சத்திரமாகத் திருவாதிரை கூறப்படுகிறது. இதனை,

''அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல, ஒருங்கு அவர்
பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்
மைஈர் ஓதி மடமொழியோயே'' (கலி.150:20-23)

என்ற அடியில் கருமையினையும் நெய்ப்பினையுமுடைய ஓதியினையும் மடப்பத்தையுமுடைய மொழியினையும் உடையாய், பெறுதற்கரிய ஆதிரை நாளையுடைய இறைவன் திருமேனி அழகைப் பெறும்படி மலர்ந்த பெரிய குளிர்ந்த இச்சண்பகம், பருவம் பொய்யாதவாறு போல அவர் கூறிய பருவத்தைப் பொய்யாராய் வருதலை அவர் கூறிய கூற்றால் நீயும் யானும் ஒருங்கு தெளிந்தோம் என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

பண்டைத்தமிழர் சிவன் பற்றிய செய்திகளை நாட்டுப்புறப் பாடல்களில் இருப்பினும் சங்க இலக்கியப் பாடல்கள் வழிச் சிறக்க அறியமுடிகின்றது. பின்னாளில் விரிவடைந்த சைவசித்தாந்தக் கருத்துகளுக்கும் சான்று பகர்வனவாய்ச் சங்க இலக்கியங்களில் சிவன் பற்றிய செய்திகள் பரக்கக் காணப்படுகின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல கடவுள் வாழ்த்துப்பாடலில் அமைந்துள்ள சிவனின் வரலாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

59. திருக்குறளின் இறைக்கொள்கை



சா.செல்வக்குமார்
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழாய்வுத் துறை
உருமு தனலெட்சுமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி

முன்னுரை

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" *(குறள்:322)*

இக்குறள் மூலம் இவ்வுலக உயிர்கள் அனைத்தும் மகிழ்வுடன் வாழ வலியுறுத்தும் ஒப்பற்ற வாழ்வியல் வழிகாட்டியாகத் திருக்குறள் திகழ்கிறது. பழங்காலத் தமிழர்களின் வாழ்வியல் முறை இயற்கையோடு இணைந்த அறவாழ்வாக இருந்ததென சங்ககால இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. மேலும், இவ்வுலக இயக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களைத் தங்களின் நுட்பமான அறிவுக்கண் கொண்டு தெளிந்தவர்களாய் இருந்துள்ளனர். பழந்தமிழரின் இறைக்கோட்பாடு என்பது இயற்கையின் படைப்புகளை இயக்கும் ஒரு பேராற்றிலின் அடிப்படையிலும், அறிவாற்றலின் அடிப்படையிலும், அறத்தின் அடிப்படையிலும் இருந்து வந்துள்ளன. அவற்றைத் திருக்குறளின் தொடக்கத்தில் இறைவணக்கம், வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்களுமே சிறந்த சான்றுகளாகும். திருக்குறள் இறைக்கோட்பாட்டிற்கு முதன்மையிடம் தரும் விதமாக கடவுள் வாழ்த்து என்ற முதல் அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் கடவுள் என்ற சொல் எந்த குறட்பாவிலும் இல்லை. ஆனால், இறைவன் பகவன் போன்ற சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இதில் இறைவன் பொதுமையாகவே காட்டப்பட்டுள்ளார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" *(குறள்:1)*

இக்குறளில் தமிழ் எழுத்துக்களுக்கெல்லாம் அகரமே

முதன்மையாய் இருப்பது போல இவ்வுலக உயிர்களுக்கெல்லாம் இறைவனே தலைவனாக உள்ளார் என்கிறது. திருக்குறளின் இறைக்கொள்கை என்ற இக்கட்டுரை, திருக்குறளில் கூறப்பட்டுள்ள இறைக் கருத்துக்களை ஆராய முற்படுகிறது.

இறைக்கொள்கையை முன்னிறுத்தும் அதிகாரங்கள்

தெய்வம் என்பது மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து பெறும் இடம். கடவுள் என்பது எந்த மனிதனும் பெற முடியாத இடம் என்று பேராசிரியர் மு.சிவச்சந்திரனின் வள்ளுவம் தந்த வாழ்வியல் அறத்துப்பால் என்னும் நூலில் (பக்கம்-6) குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்குறளின் பாயிரவியலில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தின் மூலம் இறைவனின் முதன்மையான இடம் குறித்தும், மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வான்சிறப்பு என்ற அதிகாரத்தின் மூலம் மழையின் சிறப்பினையும், மழையின் முதன்மை இடத்தையும், மழை இல்லாமல் போனால் இறைவழிபாடுகள் கூட இல்லாமல் போய்விடும் என்ற வகைகளிலும் விளக்கப்பட்டுள்ளது. இறைவனுக்கு ஏற்ற வகையில் ஒரு மனிதன் வாழ வேண்டுமென்றால் அவன் எவ்வாறு ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நீத்தார் பெருமை என்ற அதிகாரம் வலியுறுத்துகிறது. அதன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தின் மூலம் இறைத்தன்மையின் அடிப்படைக் கருப்பொருளாக மனிதன் செய்ய வேண்டிய அறச்செயல்களை வலியுறுத்துகிறது. மேலும், இறைக்கொள்கைக்கு அடிப்படையாக விளங்கும் அறத்தினை அடிப்படையாகக் கொண்டே அனைத்து அதிகாரங்களும் இயற்றப்பட்டுள்ளன.

திருக்குறளின் காலமும் சமயமும்

திருக்குறளின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று சில அறிஞர்களால் கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பெரும்பாலான தொகை நூற்பாக்களிலும் குறட்பாக்களின் சொற்களும் தொடர்களும், கருத்துகளும் ஆளப்பட்டிருத்தலின்

அப்பாக்களுக்கும் (கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகட்கு) முற்பட்டது திருக்குறள் என்பது தெளியலாம். தெளியவே வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ கி.மு. 1 முதல் 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும் என மா.இராசமாணிக்கனார் தமது தமிழ்மொழி இலக்கிய வரலாறு என்னும் நூலில் திருக்குறளின் காலம் என்னும் கட்டுரையின் முடிவுரையில் (பக்கம்-106) குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழகத்தை ஆண்ட சேர, சோழ பாண்டியர் என்ற ஆற்றல் மிக்க மூவேந்தர்களும் இயற்கைக்குத் தங்களை உட்படுத்தியும் தங்களது பேராற்றல்களினால் இயற்கையைக் கட்டுப்படுத்தியும் மிகச் சிறப்பாக ஆட்சி நடத்தி வந்துள்ளனர். எனவே பழந்தமிழர்களின் இறைக்கோட்பாடு இயற்கையைப் போற்றியும், இயற்கையோடு இணைந்ததாகவும் காணப்பட்டது. தொல்காப்பியர் காலத்திற்கு முற்படவே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலமக்களால் முறையே, மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன் வழிபாடு நிகழ்ந்தமை அறிய வாய்க்கின்றது என்று இரா. இளங்குமரனார் திருவள்ளுவர் கண்ட சமயப்புரட்சி என்னும் நூல் வாயிலாக (பக்கம்-2) குறிப்பிடுகிறார். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து திருக்குறள் இயற்றப்பட்டுள்ளதால் தொல்காப்பியர் காலத்தில் காணப்பட்ட திணை அடிப்படையில் அமைந்த மெய்யியல் இறைக் கோட்பாடே திருக்குறள் காலத்திலும் தொடர்ந்திருக்க வேண்டும். இக்காலக் கட்டத்திற்குப் பிறகே படிப்படியாக வெளியாரின் பண்பாட்டுத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு பல்வேறு சமய முறைகள் வளர நாடுகளில் முழு வீச்சில் பரவிய பௌத்தம், தமிழகத்தில் அவ்வாறு பரவியிருக்கவில்லை. ஏனென்றால் பழந்தமிழகத்தில் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உயிர் நேயத்துடன் கூடிய அறத்தினையும், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்ட மெய்யியலே இறைக்கோட்பாடாகத் திகழ்ந்ததாக, அக்காலத்தில் ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்ற பௌத்தக் கோட்பாட்டின் தேவை இல்லாமல் போனது.

சமயங்களும் சமய முரண்களும் இல்லாத காலம்

திருக்குறள் தோன்றிய காலக்கட்டத்தில் தமிழர்களின்

மெய்யியல் தன்மையுள்ள இறைக்கோட்பாடே தலைச்சிறந்து விளங்கியிருக்க வேண்டும். மேலும் நிறுவனமயமாக்கப்பட்ட சமயங்களோ, பிற சமயங்களின் தாக்கமோ, சமய மோதல்களோ இல்லாத காலக்கட்டமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் திருக்குறள் மனிதனின் எல்லா விதமான வாழ்வியல் சிக்கல்களையும் சொல்லி, அவற்றின் தீர்விற்கும் வழிகாட்டுகிறது. ஆனால், சமயங்களைப் பற்றியோ, சமய ஆதிக்கங்களைப் பற்றியோ, சமய மோதல்களைப் பற்றியோ திருக்குறளில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. எனவே திருக்குறள் தோன்றிய காலக்கட்டம் சமயங்களோ, பிற சமயத் தாக்கங்களோ, சமய மோலதல்களோ இல்லாத காலம் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. ஒருவேளை கி.மு. 1 முதல் 300 வரையிலான காலக்கட்டத்தில் சமய மோதல்கள் நடந்திருப்பது மெய்ப்பிக்கப்பட்டால், திருக்குறளின் காலம் முன்னோக்கிச் செல்ல வாய்ப்பு உள்ளது. திருக்குறளின் காலம் கி.மு. 300ஐ விட முன்னோக்கிச் செல்லுமானால் தொல்காப்பியத்தின் காலமும் இயல்பாகவே முன்னோக்கிச் செல்லும். இதன் மூலம் தமிழர்களின் இலக்கிய வரலாறு திருத்தப்படவும் வாய்ப்புள்ளது.

உயிர் நேயமும் புலால் மறுத்தலும்

''மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை'' (குறள் :244)

இவ்வுலக உயிர்களைக் காத்து நிற்பவர்கள் நலமுடன் வாழ்வார்கள் என்கிறது இக்குறள். எனவே இவ்வுலகில் அனைத்து உயிர்களும் நலமுடன் வாழ மனிதர்கள் வழிவகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் திருக்குறள் என்னும் இவ்வுலகப் பொதுமறை அனைத்து உயிர்களுக்குமானது. எனவே புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தின் மூலமாக உணவிற்காகப் புலால் உண்பதையும் வேள்விகளுக்காக உயிர்கள் கொல்லப்படுவதையும் திருக்குறள் மிகக்கடுமையாகக் கண்டிக்கிறது.

''படை கொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்

உடல்சுவை யுண்டார் மன்'' - குறள் : 253

ஓர் உயிரின் உடலை சுவைத்தவரின் மனமும், கொலை ஆயுதம் எடுத்தவரின் நெஞ்சமும் ஒன்றுதான். இரண்டிலும் அருள் இராது என்கிறது இக்குறள்.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்'' - குறள் :260

உயிர்களைக் கொல்லாதவனையும் புலால் உண்ணாதவனையும் எல்லா உயிரும் வணங்கி வாழ்த்தும் என்கிறது இக்குறள்.

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'' - குறள் : 259

உயிரினங்களைப் பலியிட்டு ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட, ஒரே ஒரு உயிரைக்கூட உணவுக்காகக் கொல்ல மறுப்பது, பல மடங்கு மேலானது. இக்குறள் மூலம் இறைவனை மகிழ்விக்க வேள்விகள் செய்துள்ளனர். அவ்வேள்விகளின் போது உயிர்ப்பலிகளும் செலுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது. திருக்குறள் தோன்றிய காலத்தில் ஊண் உணவும், ஊண் அல்லாத உணவும், உயிர் பலியிட்டு வேள்வி செய்யும் முறைகளும், உயிர் பலியற்ற உணவு முறைகளும் இருந்துள்ளன என்பதைக் காணமுடிகிறது. எனினும் ஊண் இல்லா உணவையும், உயிர் பலியற்ற வேள்விகளையுமே பல மடங்கு உயர்ந்தது என்று திருக்குறள் வலியுறுத்துகிறது.

முடிவுரை

திருக்குறளின் இறைக்கொள்கை என்ற இக்கட்டுரையின் மூலம் கீழ்க்கண்ட உண்மைகள் புலப்படுகின்றன. திருக்குறள் இறை நம்பிக்கைக்கு மிக முதன்மையான இடத்தினைக் கொண்டுள்ளது. மேலும், இறையாற்றலே இவ்வுலகிற்குத் தலைமை வகிக்கின்றது என்பதை வலியுறுத்துகிறது. எனினும் சமயம் குறித்தோ, சமய மோதல்கள் குறித்தோ கருத்துக்கள் ஏதும் காணப்படவில்லை. எனவே திருக்குறள் தோன்றியக் காலக்கட்டத்தில் சமயமோ, சமய மோதல்களோ இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அல்லது சமயமும், சமய மோதல்களும்

தோன்றுவதற்கு முன்பே திருக்குறள் தோன்றியிருக்க வேண்டும். அதாவது திருக்குறளின் காலம் கி.மு. 300 க்கும் முற்பட்டதாக கொண்டுச் செல்லப்பட வேண்டும். எனவே, திருக்குறளின் காலம் குறித்து மீண்டும் புதியக் கோணத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டியத் தேவை இருக்கிறது என்பதையுதம் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. மேலும், உலகெங்கும் குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்தில் சமயக் காழ்ப்புணர்ச்சிகளும், சமயத்தின் பெயரால் நடத்தப்படும் வன்முறைகளும் பெருகிவரும் இக்காலச் சூழலில் திருக்குறள் வலியுறுத்தும் அறத்தினையும் அறிவியலையும் அடிப்படையாகக் கொண்ட பொதுமையான மெய்யியல் இறைக்கொள்கையே தேவைப்படுகிறது. எனவே, இம்மனிதகுலம் இதனை உணர்ந்து, திருக்குறளைப் படித்து, திருக்குறளின் இறைக்கொள்கையைப் பின்பற்றி அறத்துடன் வாழ்ந்தால், இப்பூவுலகில் மனிதகுலம் மட்டுமல்லாது. அனைத்து உயிர்களும் சார்புத்தன்மையுடன் வளமுடனும் நலமுடனும் வாழ வழிபிறக்கும்.

60. திருவாசகத்தின் வெளிப்பாட்டு உத்திகள்



முனைவர் பெ. இந்துராணி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

முன்னுரை

பக்தி இலக்கியம் வாழ்வொடு இணைந்து எழுவது; வாழ்வைச் சார்ந்து இயங்குவது; வாழ்வை வளப்படுத்தவும் நெறிப்படுத்தவும் நினைப்பது. மறைபொருளை உள்ளுறுத்துவது, பண்பைப் புலப்படுத்துவது, நாகரிகத்தை நிலைநாட்டுவது. அறிவுப் பசிக்கும் ஆன்மீகப் பசிக்கும் உணவாவது. நெஞ்சிற்கு மருந்தாவது. மானுடத்தின் வாழும் குரலாவது. இத்தகு பல்வகைச் சிறப்புடைய பக்தி இலக்கியம் ஆக்குவோரின் படைப்பாற்றலும் தனித்தன்மையும் ஒவ்வொரு கூற்றிலும் வெளிப்படும்போது புலமை வன்மை தெரிகின்றது. அதனை நுனித்து உணர்ந்து கொள்ள உத்தியாய்வு உதவுகின்றது.

திருவாசகத்தின் உத்திநிலை

திருவாசகத்தின் சிறப்பியல்புகளுள் மிகவும் முதன்மையானது அன்பும், உருக்கத் தன்மையும் ஆகும். அன்பு என்பது இறைவனிடத்தில் ஏற்படுகின்ற பற்றாகும். அன்பு மிகுதியால் உருக்கத் தன்மை ஏற்படுகிறது. திருவாசகத்தில் குறிப்பிடற்பாலது அதன் கனிவும், கசிவும் மிக்க உருக்கத் தன்மையாகும்.

"மனங்கரைந்து மலங்கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்
கனம் சடை என்று உருவேற்றிக்
கண் மூடிக் கதறுவரோ?"

எனப் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் அருளிச் செய்திருக்கும் பொருளுரையும் இவ்வுண்மையினை

இனிது வலியுறுத்தும்.

நாயகி நாயகி பாவ நாடக உத்தி

இறைவன் திருவருள் நோக்கத்தாலும் ஊற்றினாலும் வார்த்தைகளினாலும் அடிகள் செவ்வி முற்றித் தாம் தலை மகளாகவே கருத்துலகில் அமைத்துவிட்டனர். அங்ஙனம் அமைந்தவர் இறைவனோடு ஊடியும், உணர்ந்து உணர்ந்து கூடியும் களிப்புற்று வருகின்றனர். இந்நிலையில் தலைவன் தலைவி என்னும் தொடர்பு நெறிகழப் பெறாதே அத்தகுதியோடு ஆண்டான் - அடிமை இயல்போடும் ஆசிரியன் மாணவன் இயல்போடும் பொருத்தி இறைவனது கடமை புரிந்து இன்புற்று வருகின்றனர். இவற்றைக் களவியல், கற்பியல் என்ற அகத்திணை மரபொற்றி நாயக - நாதயகி பாவ நாடக உத்தியில் அமைத்துப் பாடுவதை மதுர பாவத்தில் இறைவனின் முன்னிலையில் ஆண், பெண் என்கிற பேதமற்ற நிலை காணப்படும். வலிய உயிர்கள் எல்லாம் பெண்ணாகவும் இறைவன் மட்டுமே ஆணாகவும் கருதப்படுகிறது. இதனையே இறைவனைப் புருசோத்தமனாகவும் மற்றைய உயிர்களைப் பெண்ணாகவும் நாயக நாயகி பாவத்தில் உணரப்படுகிறது. இது தெய்வீக நிலையின் மிக உயர்ந்த நிலையில் உள்ளதாம். இந்நிலையில் இறைவனின் மேல் உள்ள மாறா பிரேமையின் காரணமாய்ப் பக்தன் நாயகியாக மாறுகிறான்.

திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேனம், திருச்சாழல், திருப்பூவல்லி திருப்பொன்னூசல் அன்னைப் பத்து ஆகிய நிலைகள் களவியல் நாடக உத்திகள் பாடப்பெற்றுள்ளன. குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளிஎழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம் ஆகிய கற்பியல் நிலைகள் நாயக நாயகி பாவ நாடக உத்தியில் அமைந்துள்ளன. மாணிக்கவாசகர் தம் சார்பிலும் உயிர்கள் இறைவனின் நாயகியாகின்றாள். அவருடைய மாபெரும் நூலில் படிப்படியாக ஆடிப்பாடிச் சென்று இறைவனின் உள்ளத்தில் புகுந்து விடுகிறார்.

திருவெம்பாவை உரையாடல் உத்தி

திருவெம்பாவை மாணிக்கவாசகப் பெருமான் திருவண்ணாமலை அருணாசலேசுரரைத் தரிசிக்கச் சென்ற பொழுது அங்கு பாடியது. கன்னிப் பெண்கள் தம் கட்டுப்பாட்டில் யாராவது துயில் எழாமல் பிற்பட்டு விட்டால் மாற்ற அனைவரும் அவளை நோக்கி தோழியானவள் நீள்துயிலுடன் இருத்தலாகாது என்பதையும் புலப்படுத்தியிருக்கிறார். சிவனின் பறை கேட்டவுடனேயே சிவன் என்றே வாய் திறப்பாய் துயில் எழுப்புதலும், இறைவன் புகழைப் பாடும் முறையும், இறைவனையும், இறைவியையும் வேண்டிக் கொள்ளும் முறையும் எல்லார் உள்ளங்களையும் உருக்கும் தன்மையதாய் இப்பதிகம் அமைந்துள்ளது.

"அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றால் போல
கண்ணார் இரவிக்கதிர் வந்து கார் காப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆண்ஆய் அலியாய் பிறங்கு ஒளி சேர
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறு ஆகிப்
பண்ணார் அமுதமும் ஆய், நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேோர் எம்பாவாய்"

(திருவாசகம் 7-திருவெம்பாவாய் 18)

மாணிக்கவாசகப் பெருமான் இறையுணர்வு கொண்டு கன்னிப் பெண்கள் வாயிலாகச் சிவனுடைய பெருமைகளையெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருச்சாழல் வினா - விடை உத்தி

திருச்சாழல் என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. மணிவாசகப் பெருமான் சிவபெருமானைப் பற்றி வழங்கும் பல புராணக் கதைகளின் உட்கருத்துக்களை வினாவிடையாக அமைத்து ஒரு பெண் சிவபெருமானின் செயல்களை இழந்து இசையுடன் வினா எழுப்பிக் கூறுவதாகவும் மற்றொரு பெண் பெருமானின் செயல்களின் உண்மைகளை எடுத்து இசையுடன்

விடையளித்துப் புகழ்ந்துப் பாடுவதைத்

''திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உரு நாம் அறியவோர் அந்தனையாய் ஆண்டுகொண்டான்
ஒரு நாடம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ''

(திரு.11, திருத்தெள்ளேணம்)

திருவம்மானை

அம்மானை என்பது மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. அம்மானைக் காய்கொண்டு வளையாடும் இள மகளிர் தம்முள் உரையாடி மகிழும் முறையில் அமைந்த வரிப்பாடல்களே இலக்கியங்களில் அம்மானை என்ற பெயராற் சிறப்பித்து வழங்கப் பெற்றுள்ளன.

''அம்மானை தங்கையிற் கொண்டங் கனியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலே ரம்மானை''

(சிலப்.வாழ்த்துக்காதை)

என வரும் சிலப்பதிகாரத் தொடரால் இனிது விளங்கும். திருவாசகத்துள்ளும் ஆனந்தக் களிப்பாய் அமைந்திருப்பது அம்மானை பாடல்கள், அம்மானைப் பாடல்கள் முழுதும் சிவபெருமான் தனக்குத் தீக்கை செய்து இரட்சித்த முறைமைகளால் ஏற்பட்ட இன்ப அனுபவங்களைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. இந்த அம்மானை பகுதி முழுவதிலும் சொல்லுதற்கரிய இறை இன்ப உணர்வுகள் குறித்து அடிகளார் கூறுகிறார். திருவம்மானையில் இறுதி மூன்று பாடல்களும் படிப்படியாக ஆன்மீக வளர்ச்சியைச் சுருக்கமாக ஒளி, அமிழ்தம், இன்பம் என்பதை விளக்குகின்றன.

''ஒளிவந்து என் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ்
என்னானை என் அப்பன் என்பார்கட்கு இன்அமுதை
பற்றிய இப்பாகத்தைப் பற்றுஅற நாம் பற்றுவான்
பற்றியபேர் ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய்''

(திரு.8, திருஅம்மானை 18-20)

இப்பாடல் வரிகள் மூலம் மாணிக்கவாசகப் பெருமான் பெற்ற பரமானந்தப் பயன் பத்திமைக் களியும் தத்துவத் தெளிவும், இலக்கிய நோக்கும், வரலாற்றுச் சுவடும், உடையதாய தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்து கல்லான நெஞ்சைக் கனிவிக்கின்றதாய் அமைகின்றது.

தூது உத்தி

சைவத் திருமுறைகளில் இறைவனிடத்துத் தூது விடுவதற்காகப் பறவை முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை அன்றில், அன்னம், கிள்ளை, குயில், குருகு, தும்பி, கொண்டல், தென்றல் போன்றவையாகும். மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பி, அஞ்சுகம், குயில் போன்றவற்றை இறைவனிடத்துத் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தவும் இறைவனின் பெருமைகளைக் கூறவும் தூதுப் பொருள்களாகப் பயன்படுத்துகிறார்.

முடிவுரை

தனிச் செயல்முறைத் திறம் உத்தியாக அயரா அன்பு என்னும் உத்தி, முன்னிரக்க நிலை உத்தி, உருக்கத் தன்மையெனும் உத்தி - நாயக நாயகி பாவ நாட உத்தி, பெண்கள் விளையாட்டு உத்தி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருப்பொன் ஊசல், அன்னைப் பத்து போன்ற மகளிர் விளையாட்டுக்கள் மூலம் மக்கள் மனத்தில் இறையுணர்வு ஊட்ட அவர் கையாண்ட உத்தித் திறம் ஆராயப்பட்டுள்ளன. தூதின் மூலம் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தவும், இறைவனின் பெருமைகளைக் கூறவும் உத்தி நிலை ஆராயப்பட்டுள்ளது.

61. மதுரை மீனாட்சி அம்மை வரலாறு, திருவிளையாடல் புராணம்



பி. நளினா
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
மதுரை

முன்னுரை

கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் என்று திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் மதுரை மாநகரில் சங்கம் இருந்து, சிவபெருமானின் தலைமையில் தமிழ் ஆய்ந்த சிறப்பைக் கூறுகிறார். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில். அன்று தொடங்கிய தமிழ்ப் பணியை இன்று வரை தொடர்ந்து செய்துவருகிறது. பழமையின் புதையலாகவும் புதுமையின் பொலிவு மலராகவும் விளங்கும் தமிழ் இலக்கியங்களைக் காலத்திற்கு ஏற்ப நன்முறையில் வெளியிடும் பணியை இத்திருக்கோயில் செய்துவருகிறது.

மதுரையின் சிறப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினாலும் சிறந்து விளங்கும் சிவதலம் யாது? என்ற கேள்வி பிறந்தபோது அகத்திய முனிவர் கூறியதாவது சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்ததும் பூலோகம் சிவலோகம் என்றும் அழைக்கப்படுவதுமாகிய திருவாலவாய் என்றும் மதுரை தலம் ஆகும் என்று கூறினார். சிவ பக்தியும் மெய்யன்பும் சைவ விளக்கமும் குன்றாமல் அறஞ்செய்யப் பெறுவதுமாகிய பாண்டிய நாடு உமாதேவியும் சிவபெருமானும் முருகக்கடவுளும் செங்கோல் செலுத்திய நாடாகும். புண்ணியத் தலங்களுள் சிவத்தளங்களே சிறந்தது. அவைச் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் (மதுரை) என்பனவாம். திருவாலவாயோ தன் பெயரைக் கேட்ட பொழுதே போகத்தையும் பேரின்ப வீட்டையும் அளிக்கும் வையை நதி சூழ்ந்த திருவாலவாய் தன்னிடத்தில் வசிப்பவர்க்கு இம்மையில்

சிவன் முத்தியையும் மறுமையில் பரமுக்தியையும் கொடுக்கும். அசுவ மேதயாகம் போன்ற பல யாகங்களால் செய்த பயனும். புண்ணிய நதிகள் பலவற்றில் நீராடினால் வரும் பயனும் திருவால வாயில் எந்நாளும் வாழ்பவர்க்கு எளிதில் உண்டாகும். திருவாலவாயின் வேறு பெயர்களாவன. சிவநகரம், கடம்பவனம், சமட்டி விச்சாபுரம் நான் மாடக்கூடல், துவாத சாந்தத் தலம் பல பெயர்களால் அழைப்பர். திருவாலவாயில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுள் இப்பதியில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நடத்திக் காட்டியுள்ளார்.

மதுரையை ஆண்ட மலையத்துவசன் அவனது துனைவியார் காஞ்சனமாலை இருவரும் புத்திர மேசுடியாகம் செய்த பொழுது சிறி மீனாட்சி அம்மை அவதாரம் செய்தார். அவரைத் தடாதகை பிராட்டியார் எனப் பெயரிட்டு அழைத்து, மீனாட்சி அம்மை மூன்று தளங்களை உடையவராகப் பிறந்தார். அவர் அப்பா மலையத்துவசன் மிகவும் வருத்தம் அடைந்தார். தனக்கு பையன் இல்லை என்ற குறையை, மீனாட்சி அம்மையை ஒரு ஆண்பிள்ளை போல் வளர்த்தார். எல்லா கலைகளையும் கற்றுக் கொடுத்தார். வில்,வாள், அம்பு எல்லா கலைகளிலும் நன்றாகத் தேர்ச்சி பெற்று வெற்றி அடைந்தார். தடாதகை பிராட்டியார் திக்கு விசயம் செய்து மண்ணுலகில் எல்லாத் தேவர்களையும் வெற்றி கொண்டார். கயிலை சென்ற போது பூதகணங்களையும் நந்தி தேவரையும் வெற்றி கொண்டார். இறுதியில் சிவபெருமான் தோன்றிய பொழுது தனது அவதாரம் உணர்ந்தார்.

செழியர் பிரான் திருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோலோச்சி முழுதுல குஞ்சாயங் கொண்டு நந்திகண முனைப்போர் சயத்துக் தொகன வந் கனிமணமாலிகை சூட்டித், தன் மகுடம் சூட்டிச் செல்லந் தழைவுறு தன்னரசளித்த பென்னரசியடிக் கமலந்தலைமேல் வைப்பாம்

மதுரை மீனாட்சி கல்யாணத்தின் போது வெள்ளியம் பலத்திரு கூத்து குண்டோரதனுக்கு அன்னமிட்டது. அன்ன குழியையும் , வையையும் அழைத்தது ஆகிய

திருவிளையாடல்களைச் சிவபெருமான் நிகழ்த்தினார்.

சிவபெருமான் சுந்தரபாண்டியராகத் திருக்கோலம் தாங்கி மதுரையை அரசாட்சி செய்துவரும் பொழுது ரிசிகளும் தூய முனிவர்களும் அவரைச் சந்திக்க வருவார்கள். ஒரு நாள் வேதங்களை முழுவதும் உணர்த்த கெளதம முனிவர் இறைவனைச் சந்தித்தார். அப்பொழுது காஞ்சனமாலை கௌதம முனிவரிடம் முக்தி அடைய வழி கூறி அருள்க என்று விண்ணப்பித்தாள். அதற்கு அவர் மலையத்துவசனுக்கு மனைவியாகிய கற்புடைய காஞ்சனமாலையே நீ முற்பிறவியில் செய்த தவத்தின் பயனாய் உலகம் அனைத்தையும் ஈன்ற தடாதகை பிராட்டியாருக்குத் தாய் ஆனாய். சிவபெருமானே உனக்கு மருமகன் எனக்கூறும் சிறப்பினைப் பெற்றாய் இருந்தாலும் கூறுகிறேன் என்றார். முக்தியடைய மூன்று வழிகள் உண்டு. அவை மானதம், வாசிகம், காயிகம் மானதமாவது மனத்தால் செய்யப்படுவது சிவபெருமானைச் சிந்திப்பது. உண்மை பேசுவது, தான தருமங்களில் கருத்து வைப்பது

''அப்பா இம்முத்திக்கு அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாளலே செப்பக்கேட ஒப்பு இல்
குருலிங்க வேடம் எனக்கூறில் இவை கொண்டார்
கருஒன்றி நில்லார்கள் காண்''

முருக வழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு ஆகிய இம்மூன்று திருவருள் நிலைகளே முக்தி உரிய வாயில்கள் ஆகும். இவ்விடங்களில் இறைவனை இடைவிடாது நினைந்து தொழுது இறைஞ்சுபவர்கள் மீண்டும் பிறக்கமாட்டார்கள். திருவைந்தெழுத்தைச் செபித்தல், உருத்திர மந்திரங்களை ஓதுதல், தோத்திர பாடல்களைப் பாடுதல், காயிகமாவது சிவபெருமானைப் பூசித்தல், திருக்கோயிலை வலம் வருதல், பல தலங்களுக்குச் சென்று வணங்குதல், திருப்பணி புரிதல்.

மதுரையில் சிவபெருமான் தடாதகை மீனாட்சி அம்மையைத் திருக்கல்யாணம் முடித்து மதுரையில் சில திருவிளையாடல்களைச் செய்தார். வைகையில் வெள்ளம் வாதவூரருடைய துன்பம் துடைக்க எண்ணிய பெருமான் ஆற்றில்

வெள்ளம் பெருகச் செய்தருளினார். விரைந்து பரவ தொடங்கியது பெருவெள்ளத்தைக் கண்ட ஊர்மக்கள் ஊழிக்காலமே வந்துவிட்ட தென்று அஞ்சி மன்னனிடம் சென்று முறையிட்டனர். பாண்டியனும் ஆற்று வெள்ளத்தை தணிக்க பூ.பொன் பட்டு முதலிய அணிகலன்களை ஆற்றில் விட்டு வெள்ளம் தணியுமாறு ஆற்றை பணிந்தனன். வெள்ளம் மேலும் பெருகியதே யல்லாமல் சிறிதும் குறையாதது கண்டு அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்து சிவனடியராகிய வாதவூடிைரத் துன்புறுத்தியதன் விளைவே என்று நன்கு தெளிந்து அவரை விடுவித்து மதுரை மாநகரை இவ்வெள்ள நீர் அழிக்காதவாறு காப்பாற்ற வேண்டும் என் வேண்டிக் கொண்டார். வாதவூரரும் திருவருளை எண்ணி வருந்தினர். வெள்ளத்தின் வேகம் சிறிது குறைந்தது. இருப்பினும் முற்றும் வெள்ளம் குறையவில்லை அதைக்கண்ட பாண்டியன் மதுரை மக்களையெல்லாம் ஒருங்கு கூட்டி ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பங்கு என்று அளந்து கொடுத்து ஆற்றின் கரையை அடைக்கும்படி ஆணையிட்டான்.

வந்திக் கிழவிக்காக எம்பெருமான் மண்சுமந்து பிரம்பு அடி வாங்கியது. அரசன் ஆணையைக் காவலர் ஊர்முழுவதும் முரசறைந்து அறிவித்தனர். மதுரை மாநகரில் பிட்டு வந்து வாழ்க்கை நடத்தும் வந்தி என்னும் மூதாட்டி தனக்கு அளவு செய்துவிட்ட ஆற்றின் பங்கை அடைக்க ஆள் கிடைக்காமல் வருந்தினாள். நாள்தோறும் ஆண்டவனிடம் அவளிடம் கூலி ஆள்போல் தோன்றினான் யாரேனும் கூலி கொடுத்து என் வேலை கொள்வார். உண்டோ? என்று கூவிய வண்ணம் தன்னை வந்தடைந்த அப்பணியாளனைக் கண்ட வந்தி மகிழ்ந்து நீ எனக்கு அடைத்துத் தருவாயானால் நான் விற்கும் பிட்டை கூலியாகத் தருகிறேன். அதற்கு இசைந்த அக்கூலியாள் அவள் கொடுத்த பிட்டைக் கூலியாகத் தருகிறேன் என்று கூறினாள். அதற்கு இசைந்த அக்கூலியாள் அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு தாயே என் பசி தீர்ந்தது. இனி நீ ஏவிய பணியை நான் செய்து முடிப்பேன் என்று அவன் பங்கை அறிந்து அதை அடைப்பதற்கு முற்பட்டான்.

“பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்

பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்திவியன் மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக்கடவுள், கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோலால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்
பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே''

வேலையைத் தொடங்கிய வந்தியின் ஆளாகிய சிவபெருமான் மண்ணை வெட்டித் தன் திருமுடியிலர் எடுத்து சென்று கரையில் கொட்டி விட்டுக் களைப்படைந்தவன் போல ஓய்வு எடுத்துக் கொள்வதும் வந்தி அளித்த பிட்டை உண்பதும் ஆடுவதும் பாடுவதும் செய்து பொழுதுபோக்கினான். வேலை செய்து களைத்தவன் போலக் கூடையைத் தலையனையாக வைத்து உறங்கவும் செய்தான். ஆற்றின் கரை அடைபட்டதா என்பதைப் பார்வையிட வந்த மன்னனிடம் காவலர் ஊரில் உள்ளோர் ஒவ்வொரு வரும் தத்தம் பங்கை அடைத்து முடித்தனர். பிட்டு வந்தியென்னும் கிழவியின் பங்கு மட்டும் அடைபடாமல் கிடக்கிறது. வந்திக்கு ஆளாய் வந்த ஒருவன் சரிவரத் தன் பணியைச் செய்யாமல் பொழுதைக் கழிக்கிறான். அதனால் அப்பகுதி நூற்றைக் கொடுத்து குறுணி என்பது போல ஒருத்தி பங்கு ஊரார் பங்கையும் கரைக்கிறது என்று கூறுகிறார்.

உடனே அப்பகுதியைப் பார்வையிட வந்த பாண்டியன் அக்கூலியாளை அழைத்து வரச் செய்து தன்னுடைய கைப்பிரம்பால் முதுகில் அடித்தான். அடித்த அளவில் கூலியாளாக வந்த பெருமான் ஒரு கூடை மண்ணை உடைப்பிற் கொட்டி மறைந்தான். பாண்டியன் அடித்த அப்பிரம்படி அசன், அரசி, அமைச்சர், காவலர்கள் முதலிய எல்லோர் மேலும் பட்டது. அண்ட சராசரப் பொருள் அனைத்தின் மேலும்பட்டது. அப்போது வாதவூரர் இறைவன் தன் அடியவர் பொருட்டு கூலியாளாக வந்த திருவருளை எண்ணி வியந்தார். பாண்டிய மன்னன் வாதவூரர் பெருமையை நன்கறிந்து இருந்து அமர்ந்து எம்குல தெய்வத்தை என் கண்ணாரக் காட்டி மாசை ஒழித்த

பெரியவரே, என்னை மன்னித்தருள வேண்டும் தங்கள் பெருமையை இறைவன் நன்குணர்த்தினான். என் அரசுரிமையை இன்று முதல் தாங்கள் எற்றருளல் வேண்டும் என்று வேண்டினான். வாதவூரர் பாண்டியனிடம் இறைவனுடைய திருவடித் தொண்டு செய்ய உரிமையாக்குவதே இவ்வுலக ஆட்சியை எனக்கு தருவதற்கு ஒப்பாகும் என்றார். மன்னனும் அவர் விரும்பியவாறு அவரைச் செல்ல விடுத்துத் திருவருள் உணர்வோடு தம் அரன்மனைக்கு சென்றான். அமைச்சியலைத் துறந்து தவவேடம் தாங்கிய வாதவூரடிகள் இறைவன் திருவிளையாடல்களை எண்ணி மகிழ்ந்தவராய்த் திருப்பெருந்துறையை அடைந்தார். இப்படியாக இறைவன் மதுரையில் 64 திருவிளையாடல்களைச் செய்துள்ளார். மீனாட்சி அம்மையைத் திருமணம் செய்து மதுரையில் அரசாட்சி செய்தார். மதுரையில் கோயிலில் கார்த்திகை சோமவாரம் நடைபெறும் விழாவில் மீனாட்சி அம்மையும் சொக்க நாதரும் அம்மாவினுடைய சடை அலங்காரமும், நகை அலங்காரமும், பட்டு சேலை அலங்காரமும், கண்கொள்ள காட்சியாகும். கடைசி நாள் மீனாட்சி அம்மை சொக்கநாதர் திருக்கலியாணம் நடக்கும் மதுரை நகரே கலியாணக் கோலம் பூண்டு மதுரை நகர் மக்கள் கலியாணத்தைப் பார்ப்பதற்குச் செல்வதும், பட்டாடை உடுத்தி செல்வார்கள். சொக்கர் மீனாட்சிக்குத் திருமாங்கல்யம் கட்டும் போது சுமங்கலிப் பெண்கள் அனைவரும் தங்களுக்குத் தாலிக் கட்டி கொள்வார். மீனாட்சி, சொக்கர் கல்யாணத்திற்கு வந்தவர்கள் அனைவருக்கும் விருந்து சாப்பாடும் உண்டு. மதுரை மக்கள் மதுரையில் பிறந்தவர்கள், வந்தவர்கள் அனைவரையும் மீனாட்சி அம்மையும், சொக்கநாதரும் நன்றாக வாழ வைப்பார்கள். திருச்சிற்றம்பலம்.

62. சுந்தரரும் தோழமையும்

இரா.கல்பனாதேவி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இராணி மேரி கல்லூரி
சென்னை

முன்னுரை

சைவ சமயத்தின் முழு முதற்கடவுளான சிவபெருமானைப் போற்றிப் பறைசாற்றுகின்ற வகையில் அமைந்தவை பன்னிரு திருமுறைகள். பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையைப் பாடியவர் சுந்தரர். இவர் இறைவனுடைய தோழமையைப் பெற்று அடியாருக்கு அடியாராய்ப் பாடித் தோழமையாகநின்று இறைவனை வழிபட்டவர். யோக நெறியில் நின்று யோகத்தால் சிவன் தாளை அடைந்தவர். சுந்தரர் தேவாரத்தில் சுந்தரர் சிவபெருமானைத் தோழனாகக் கண்டு பாடிப் புகழ்ந்து தனக்கு வேண்டிய யாவற்றையும் அவரிடமே பெற்றுக் கொண்ட தோழமை இயல்பை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோழமை நெறி

உண்மையானத் தோழர்களின் இயல்பு தங்கள் உள்ளத்தை மறைக்கமாட்டார்கள். ஒருவருக்கொருவர் தங்கள் கருத்தையும், தங்களுக்கு வேண்டியவைகளையும் தங்கள் துன்பத்தையும் வாய்விட்டுச் சொல்லி உதவி பெற்று ஒத்துப் பழகுவார்கள். இந்த இயல்பினைச் சிவபெருமானிடம் தோழமை கொண்ட சுந்தரரிடமும் காணமுடிகின்றது. தோழமை என்பது நட்பு. இதைத் திருவள்ளுவரும்,

> ''நட்பிற்கு வீற்றிருக்கை யாது எனின் கொட்புஇன்றி
> ஒல்லும்வாய் ஊன்றும் நிலை'' (குறள்:789)

என்று தெளிவுறுத்துகின்றார்.

தம்பிரான் தோழர்

சிவபெருமானுக்குத் தம்பிரான் தோழராக விளங்கியவர்

சுந்தரர். தம்மை ஆட்கொண்ட சிவபெருமானைத் தலைவனாக மட்டுமின்றி தூதனாகவும், தோழனாகவும் கொண்டு தமக்கு வேண்டிய எல்லாவற்றையும் சிவபிரானிடமே கேட்டுப்பாடிப் பெற்றார். இதனைத்

''தூதனை என்தனையாள் தோழனை நாயகனை
தாழ்மலரக் குழையும் தோடும் அணிந்த
காதனை நாயடியேன் எய்துவது என்றுகொலோ?''
(7:78:9)

என்று திருக்கானப்பேர் பதிகத்தில் பாடியிருப்பதைக் காணலாம்.

திருவடித் தோழமை

சுந்தரர் திருவதிகை அடைந்து அவ்வூர் திருநாவுக்கரசர் உழவாரம் செய்த தலம் என அறிந்து அவ்வூரை மிதிக்காமல் ஊரின் புறத்தே தங்கினார். நள்ளிரவு நேரத்தில் சிவன் வயோதிக வேடம் கொண்டு மடத்தினிலே வந்து சுந்தரர் தலை மீது கால் வைத்துப் படுத்தார். கண் விழித்த சுந்தரர் வேறுபுறம் தம் தலையை வைத்துப் படுத்தார். மீண்டும் பெருமான் அவ்வாறே செய்ய, கோபமுற்ற சுந்தரர் யார் என்று வினவ, எம்பெருமான் தன் வீரட்டானேசுவரர் கோலத்தைக் காட்டி அவரை ஆட்கொண்ட தோழமை உணர்வு போற்றுதற்குரியது. இதனை,

''தம்மான்தன் அடிக்கொண்டேன் முடிமேல் வைத்திடும்
என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்'' (7:3:1)

என்னும் சுந்தரரின் பாடல் வரிகளே இதனை உணர்த்துகின்றது.

மணமகன் தோழமை

கயிலையிலே இறைவன் கொடுத்த ஆணைப்படி கமலினியார் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்ற நாமத்தோடு இறைவனுக்குத் தொண்டு புரிந்து வாழ்ந்து வந்தார். காதல் கொண்டு இறைவனிடம் உரையிட்டு திருவாரூர் அடியார் தம் கனவில் தோன்றி நம்பி ஆரூரானுக்குப் பரவையாரை மனம் செய்து வையுங்கள் என்று

கட்டளையிட்டார். அவ்வாறே திருமணம் நடந்தேறியது. இதனை,

''மாழை ஒண்கண் பரவையத் தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையோன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே''
(7:527:2)

என்று பாடியுள்ளார்.

தொண்டர் தம் தோழமை

குண்டையூர்க் கிழார் என்னும் பெரியவர் ஓராண்டின் தேவையான நெல்லை, சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அனுப்பி வந்தார். மழையின்மை காரணமாக நெல் இல்லாமல் வருந்தினார். சிவபெருமான் அவர் கனவில் தோன்றி உமக்குத் தேவையான நெல்லினை அளித்தோம் என்று கூறி குபேரனிடம் தேவயைான நெல் அளிக்கும்படி கட்டளையிட்டார். ஊரில் நெல் குவியல் குவியலாகக் குவிந்ததைக் கண்ட கிழார் ஆரூரரிடம் சென்று கூற அவர் அதனைக் கண்டு களித்து இறைவனை வேண்டி, பூத கணங்களின் உதவியால் நெல்லினைத் திருவாரூர் எடுத்துச் சென்றார்.

''ஆளில்லை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே''

என்ற பாடல் இதனைச் சுட்டும்.

இல்லறத் தோழமை

கயிலையின் ஆணைப்படி திருவொற்றியூரில் சங்கிலியாரை மணம் செய்து கொள்கின்றார். உறுதி கொடுப்பதற்குச் சுந்தரர் இறைவனை மகிழ மரத்தடிக்குச் செல்லுமாறு வேண்ட அவ்விறைவனோ, சங்கிலியாரை மகிழ மரத்தடியில் உறுதிமொழி வாங்கிக் கொள் என்று கூறுகின்றார். இறுதியில் உன்னைப் பிரியேன் என்று உறுதிமொழி கொடுத்தவுடன் திருமணம் முடிகிறது. இதனை,

''மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்கள் எல்லாம்

தோன்ற அருள் செய்தளித்தார்'' (7:582:4)

''சங்கிலியோடு எனைப் புணர்த்து தத்துவனை'' (7:589:3-4)

என்னும் வரிகள் தெளிவுறுத்தும்.

தூதுத் தோழமை

சங்கிலியாரை மணம் புரிந்து வாழ்வதறிந்து பரவையார், நாயனாரை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார். மனம் நொந்த சுந்தரர் இறைவனிடம் சென்று பரவையுடன் என்னைக் கூட்டவில்லை. இறைவன் மீண்டும் மீண்டும் தூதாகச் சென்ற இருவரையும் இணைத்து வைக்கிறார். இவ்வாறாக பரவையாருக்கும் இறைவன் காட்சித் தருகின்றார்.

''தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்'' (7:708:2)

என்னும் வரிகளால் இதை தெளியலாம்.

தொகுப்புரை

சிவபிரானிடம் தோழமை கொண்ட இவரது பண்பு நலன்களையும் பக்தியின் சிறப்புகளையும் இவர் தோழமையுணர்வுடன் கருத்தினைப் பரிமாறிக் கொண்டதையும் துன்பத்தையும் இன்பத்தையும் வாய்விட்டுப் பகிர்ந்துக் கொண்டமையையும் உணர்த்துகிறது. வறுமை நிலையிலும் திருமண நிகழ்விலும், திருவடித் தொழுகின்ற சமயங்களிலும், பசிப்பிணியிலும், தூதிலும், இல்லற நிலையிலும், நம்பிலும் இறைவனிடம் கொண்ட தோழமை உணர்வுகளையும், அடியார்களின் துன்பத்தைப் போக்கும் இறைவன் தன் அன்புத் தோழராகக் கிடைத்தமையைச் சுந்தரர் தம் பாடல்களில் எல்லாம் உணர்த்தியமையையும் விளக்குகிறது.

63. சைவத்தமிழ் இலக்கியங்களில் பெரியபுராணம்

சண்டேச நாயினார் வரலாறு



க.ஞானபிடேகம்
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
சென்னை

முன்னுரை

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க, வெகுண்டெழுந்த தாதை தாள் மழுவினாள் எறிந்த அம்மையான் அடி சண்டி பெருமானுக்கு அடியேன், திருத்தொண்டத்தொகை.

''குலமேறிய சேய்ஒலூரி குரிசிப் குரைகடல் சூழ்
தலமேறி விறய் சண்டி கண்டீர் தந்தை தாள் இரண்டும்
வலமேறிய மழுவால் எறிந்த ஈசன் பணி முடிமேல்
நலமேறிய பால் சொரிந்தவர் சூட்டிய நன்னிதியே''
திருத்தொண்டத் திருவந்தாதி

திருமறையோர் வாழும் பழைய ஊரே செல்வம் மிகு சேய் ஓலூராம், எச்சதத்தன், பவித்திரை என்பவர்களுக்குத் திருமகனாக வீசாரசருமர், திரு அவதாரம் செய்தார்; மறை ஓதுதலுக்கு உரிய செயலைச் செய்வித்தனர். ''யாவும் தெளிந்த பொருள் நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால் ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற்கு அருள் செய்வார்'' என்று சேக்கிழார் கூறுகிறார். ஆக்களின் பெருமையை உள்ளபடி அறிந்தவரோடு வீசாரசருமரும் இடையனுக்கு அருள்புரிவாராய் நீலகண்டர் செய்யசடை நீருத்தா சாத்தும் நீறுதரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவு என்னோ? கோமளம் எனப்படும் மூலத்தினைத் தருகின்ற மூர்த்தங்கள் ஆவே (பசுவே) என்றால் முடிவு வேறு என்ன? தூய்மையான இடத்திலிருந்து விழும் ஆவின் சானத்தை எடுத்து, பிசைந்து சேமித்து மாசி சிவராத்திரி அன்று இவ்வுருண்டைகளை அடுக்கி நெல் உமியை அதன்மேல் பரப்பி சூளையிட 3 நாள் கழித்து பார்த்தால், வெந்து வெண்மையாகக் காட்சி தரும், இதுவே

மெய்யான திருநீறு, மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு, சுந்தரமாவது நீறு, துதிக்கப்படுவது நீறு, தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு செந்துவர்வாய் உமைபங்கன் திருவாலவாய் திருநீறே - திருஞானசம்பந்தர்பாடல்

கோமயம் தருகின்ற ஆநிரைகளை மேய்ப்பவன் சின் கொண்டான். அப்போது விசாரசருமர் தாமே மேய்த்தும் காத்தும் கடமையைச் செய்வோம் என்று வினவி இச்செயல் அம்பலவாணரின் திருவடிகள் போற்றிடும் செயல் எனக் கொண்டு ஆயனை நோக்கி இனி நீ ஆநிரை மேய்க்கும் தொழிலைத் தவிர்க எனக் கூறினார். அநிரைகளை மேய்த்தும், காத்தும் அமுதாகிய இனிய சுவை கொண்ட பாலினைத் தரும் காலத்தில் அவற்றினை மறையோர் மனைகள் தோறும் செலுத்தினார். (பா) தம்மை அணைந்த ஆன் முலைப்பால், தாமே பொழிய கண்டு உவந்து, செம்மை நெறியே உறு மனத்தில், திருமஞ்சனம் ஆம் குறிப்பு உணர்ந்தே, எம்மை உடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்து அதனில், மெய்ம்மை சிவனார் பூசனையை, விரும்பும் வேட்கை விரைந்து எழவும் கறவாமல் தாமே பொழிய கண்டு மகிழ்ந்த செம்மை வழியிலே திருமஞ்சனம் ஆகும் குறிப்பினை உணர்ந்து சிவனாரின் உண்மையான பூசையை விரும்பிடும் ஆசை எழுந்ததால் விரும்பியதால் அன்பினால் மன்னியாற்றின் மணத்திடலில் அத்திமர அடியில் (திருவாய்ப்பாடி கோயிலின் தென் மேல் பாகத்தில் உள்ளது) சிவலிங்கத்தை மணலினாய் ஆலயத்தையும் வகுத்து அருளினார். ''வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப் போதத்தால் வழிபட்டாள் புள்ளிருக்கு வேளூரே'' திருஞானசம்பந்தர்.

அம்மை எப்படி காஞ்சிபுரத்தில் சிவபூசை செய்தாரோ அதுபோல விசாரசருமரும் எண்ணினார். எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை எனவுரைத்து அருள, அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தார். பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து - 12ம் திருமுறை.

கொண்டு மடுத்த இடம் நிறையக் கொணர்ந்து விரும்பும் கொள்கையினால், அண்டர் பெருமான் வெண்மணல், ஆலயத்துள் அவை முன் தாபித்து, வண்டு மருவும் திருப்பள்ளிதாபம் கொண்டு வரண் முறையே, பண்டை பரிவால் அருச்சித்து, பாலின் திருமஞ்சனம் ஆட்ட, ஆள உடையார் தம் அன்பர் அன்பின்பால் உந்தாய் கோளம் அதனில் உள் நிறைந்து, குறித்த பூசை கொள்கின்றார். மீண்டும் மீண்டும் வெண்மையான பாலினால் திருமஞ்சன் நீர் ஆட்டி தன்னை ஆட்கொண்ட பெருமானுக்குத் தம் அடியாரின் அன்பினால் உண்டாகும் உள்ளாந்த அன்பு பெருகி நின்ற முதிர்ச்சியால் மணலால் ஆலி வட்ட வடிவமான லிங்கத்தின் உள்ளே நிறைந்து, நின்ற அவர் குறிப்பில் கொண்ட பூசையை ஏற்றுக் கொண்டார். ஒருமை நினைவால் உம்பர் பிரான் உவக்கும் பூசை உறுப்பான திருமஞ்சனமே எனக் கொண்டு அன்பால் நிரப்பிக் கொண்டு அந்நெறியில் அர்ச்சனை செய்து வணங்கி மகிழ்ந்தார்.

இந்நிலையில் பல நாள்கள் பூசை சிறப்பாக நிகழ்வுற இந்நிலையைத் திருவிளையாட்டாக நிகழ, அயலொருவன் விசாரசருமர் செயல்களை அந்தணர்களுக்கு தெரிவிக்க அந்தணர்கள் தந்தையை அழைத்து சொல்ல, அவரும் விசார சருமருக்குத் தெரியாமல் சென்று பார்த்து, பால் நிறைந்த திருமஞ்சன குடங்கள் கண்டு அறிவு அழிந்து மிகச் சினந்து குடங்களைக் காலால் இடறினார் அந்நொடியில் நோக்கிய, சிறுவன் தந்தையென அறிந்து அவனின் கால்கள் பொல்லாங்குச் செய்ததை எண்ணி தண்டிக்க முன் கிடந்த கோலினை எடுக்க அது மழுவாகிட அது கொண்டு அவன் தாள்கள் மீது எறிய மறையோனும் மண்ணில் வீழ்ந்தான். தம் பூசையில் இடையூறினைப் போக்கியவராய் முன்பு போல் வழிபடத் தொடங்கினார்.

"அறிந்த இடையூறு அகற்றினராய்
முன்போல் அர்ச்சித்திட புகலும்
செறிந்த சடை நீர் முடியாகும்
தேவியோடும் விடை ஏறி" - 12ஆம் திருமுறை

மனம் களிப்படைந்த விசாரசருமர் தாமரை மேல் விளங்கும் அவர் திருவடிகளில் வீழ்ந்தார்,

சிவஞான சித்தியார்

''சிவனுக்கு செய்தது என்றும் பாவம் அகல
உடனாகிய நின்று கொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமோ''

அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமாகும்
அரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரீனிற் பாலன் செய்த பாதகமும் நன்மையாய்த்தே

இரும்பு பிடித்தானுக்கு அருள் செய்தார்
கரும்பு பிடித்தவனைக் காய வைத்தார்

என்று ஓர் வழக்குண்டு. இரும்பு பிடித்தவன் சண்டேசன், கரும்பு பிடித்தவன் மன்மதன்.

''கோதனங்களின் பால் கறந்து ஆட்டக்
கோல வெண்மணற் சிவன் தன் மேல் சென்ற
தாதை தாள் அற எறிந்த சண்டிக்கு உன்
சடைமிடை மலர் அருள் செயக் கண்டு''
திருப்பூங்கூர் சுந்தரர் தேவாரம்

''தாதையைத்தார் அற வீசிய
சண்டிக்கு இவ் வண்டத்தொடு உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொன்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு
வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே''
சேந்தனார் அருளிய - திருப்பல்லாண்டு

64. பக்தி இலக்கியத்தில் இயற்கைப் புனைவுகள்



முனைவர் மு.மகேசுவரி
தமிழ்த்துறை ஆய்வு மையம்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

முன்னுரை

பக்தி இயக்க சான்றோர்களின் பணிகளுள் தமிழ் இலக்கியப் பணி மிகப்பெரியது. அவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் எண்ணற்றவை. எனினும் திருஞான சம்பந்தர் முதலிய நாயன்மார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும், பன்னிரண்டு ஆழ்வார்களின் பாசுரங்கள் அடங்கிய திவ்யப் பிரபந்தங்களுமே பக்தி இலக்கியம் என்ற சிறப்புக்குரியவை ஆகின்றன. அந்த வரிசையில் பக்தி இலக்கியத்தில் காணப்படும் இயற்கைப் புனைவுகள் குறித்த செய்திகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

இயற்கை புனைவுகள்

நாயன்மார்களும் இம்முறையில் தாங்கள் தெய்வத்தைக் கண்டு அருள் பெற்றனர் என்பதற்கு அவர்தம் பாடலே சான்று (ஞானவைத்தியநாதன் இலக்கிய இன்பம் ப.எ.30)

தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரில் திருஞான சம்பந்தரின் தேவாரத்தில் இயற்கை நலம் மிகுந்திருப்பதைக் காணலாம். திருவலிதாயம், அவூர், பசுபதீச்சுரம், திருவையாறு, குற்றாலம், பொருனைக் கரைச் சிந்துபூந்துறை போன்ற இடங்களில் குரங்குகள், மந்திகள் செய்யும் குறும்புச் செயல்களை இயற்கை காட்சிகளாகத் தேவாரத்தில் படைத்தளித்துள்ள சிறப்பை ஞான சம்பந்தர் பாடல்களில் காணமுடிகிறது. ஞானசம்பந்தர் இயற்கை எழிலில் ஒன்றிப்போன தம் இதயத்தை மீட்டு, இறைவனின் அருள் விளையாடலோடு இணைத்து தேவார காவிய தேன்

அளித்தது போன்று திருநாவுக்கரசரிடமும் இயற்கையின் கருப்பொருள்கள் ஏவல் செய்யக்காணலாம்.

இயற்கையின் பிடியில் சிக்குண்டு கிடைக்கும் இறைவனைப் பாடி மகிழ்கிறார் திருஞானசம்பந்தர். இறைவன் திருநீழலின் சிறப்பை இயற்கைச் சிறப்புடன் ஒப்பிட்டுப் பாடினார் நாவுக்கரசர். குற்றாலம், திருவண்ணாமலை, திருநின்றவூர், இராமேசுவரம் ஆகிய இடங்களில் முறையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலைகளையும் குறிப்பிட்டு அவற்றின் இயற்கை எழிலையும் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ள சம்பந்தர் பாசுரங்கள் குறிப்பிடத்தக்கன. சம்பந்தர் போலவே சமையக் குரவர் பிறரும் இயற்கைப் பாடியுள்ளமையை அவர்தம் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

பாரிடை ஐந்தாய்ப் புராணத்தைப் போற்றி எனத் தொடங்கும் பாடலில் இறைவன் அட்டமூர்த்தி வடிவினனாய் விளங்குபவன். ஐம்பெரும் பூதங்களான வான் முதலாக எண்ணப்படும் ஐம்பெரும் பூதங்களில் ஐந்தாவது பூதமாக விளங்கும் நிலப்பரப்பாகயும், நான்காவது பூதமாகிய நீர்ப்பரப்பாகியும், மூன்றாவது பூதமாகிய தீயாகியும், இரண்டாவது பூதமாகிய காற்றுகியும், முதலாவது பூதமாகிய வான்வெளியாகியும் விளங்கும் பரன் என்கிறார். இதனால் இறைவன் ஐம்பூத வடிவினன் என்பதை அறியலாம். இவ்வாறு திருவாசகத்தில் பெரும்பாலான இடங்களில் இறைவனையும், ஐம்பூதங்களையும் ஒப்பிட்டுக் கூறும் வழக்கம் காணப்படுகிறது.

வள்ளார் பெருமானும் இயற்கையாகிய சோதியை, உள்ளத்திலே ஆடுகின்ற அருள்வடிவை இயற்கையோடு சேர்த்து அகம் களித்துப் பாடுகின்றார். அதில் இயற்கை சிறப்பு மிளிர்கின்றது. இயற்கையில் இறைவனைக் கண்ட வள்ளலாரின் இத்தெய்வ பாடலை எத்தனை முறை படித்தாலும் சுவை குன்றுவதில்லை.

வைணவ இலக்கியங்களில் இயற்கை புனைவுகள்

சைவ இலக்கியங்கள் காணப்படுவது வைணவ

இலக்கியங்களிலும் இயற்கை பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆழ்வார்கள் தங்கள் இறை அனுபவங்களை உணர்த்த இயற்கைப் பொருள்களைத் துணையாகக் கொள்கின்றனர். ஞாயிறு, நிலா, மேகம், வான், மலை, அருவி, மலை, கடல், ஒளி, திங்கள், விதை, கொழுந்து, மலர்கள் ஆகியவற்றைக் கொண்டு இறை உருவக்காட்சியினைப் பாசுரங்களில் படைக்கின்றனர்.

ஞாயிறு

உயிரினங்களையெல்லாம் வாழ்விக்கும் சக்தியாக விளங்கும் ஞாயிறு, சூரியன், கதிரவன், பகலவன் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. பூமியில் உள்ள இயற்கைச் சக்தியும் கதிரவனால் வளம் பெறுகிறது. உலக இயக்கத்திற்கு முதன்மையான சக்தியாகக் கருதப்படுகிறது. இத்தனைச் சிறப்பு வாய்ந்த கதிரவனை ஒப்பற்ற இறைவனை உணர்த்த உவமையாகக் கையாள்கிறார் பெரியாழ்வார்.

அவர் கழல் அணிந்த முடிமன்னர்கள் சூழ்ந்திருக்க சிம்மாசனத்தில் வீற்றிருந்து உலகைத் தர்மம் தவறாது இறைவன் ஆளும் திறத்தை, இவ்வுலகத்தை நடுநாயகமாகத் தலைமையேற்று ஒப்பந்த ஒளி விளக்காய் திகழும் கதிரவனுக்கு உவமையாக்குகிறார். இதைக்

"கழல் மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி
எழலுற்று மீண்டே யிருந்துன்னை நோக்கும்"
(பெரியாழ்வார் பாசுரம்)

என்று பாடுகிறார் பெரியாழ்வார். இறைவன் இவ்வுலகில் ஐம்பூதங்களாக விளக்குவதை நம்மாழ்வார், திருவாய்மொழியில் காட்சிப்படுத்துகின்றார்.

"திரியும் காற்றோடு அகல் விசும்பு
திரிந்த மண் இடந்த
எரியும் தீயோடு இருசுடர்
தெய்வம் மற்றும் முற்றும் முற்றுமாய்"
(திருவாய்மொழி 3-5-6)

என்ற பாசுரத்தின் மூலம் இதை அறியலாம். இவைத் தவிர பிறை, நிலவு, மேகம், மலை, அருவி, கடல் அனைத்துமே இறைவனோடு சார்த்தி பாடப்படும் நிலமையை ஆழ்வார்களின் பாடல் வலி அறியமுடிகிறது. இலக்கியங்களில் மிகப்பழங்காலம் தொட்டே திருப்பதி பற்றிய குறிப்புகள் உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களான தொல்காப்பியப் பாயிரம், அகநானூறு, சிலப்பதிகாரம் ஆகியவற்றிலும் புறப்பெபாருள் வெண்பாமாலையிலும், திருவேங்கடமும் அங்குக் குடிகொண்டுள்ள நெடியோனும் பலவாறு போற்றப்பட்டுள்ளனர். மேலும் திருவேங்கடத்தின் மீது எழுந்த உலா, கலம்பகம், அந்தாதி மலை, மான்மியம் ஆகிய பிரபந்த இலக்கியங்களிலும் இத்தலம் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார் ம.இராசகோபாலன். திருவேங்கடத்தின் இயற்கை எழிலைப் பற்றிப் பாடும் பொழுது பேயாழ்வார்.

''சார்ந்தகடு தேய்ப்பத் தடவிய கோட்டுச்சி வாய்
ஊர்ந்தியகு வண்மதியின் ஒண்முயலைச் சேர்ந்து
சின வேங்கை பார்க்கும் திருமலையே ஆயன்
புன வேங்கை நாறும் பொறுப்பு'' *(பேயாழ்வார் 3-75)*

என்று மாமாலையின் உயர்வான நிலைமையைத் தெரிவிப்பார். வேங்கை மரத்தின் உயர்வு நிலவில் உள்ள முகிலைப் பிடிக்கும் அளவுக்கு உயர்ந்தது என்று திருமலையின் இயற்கை எழிலை நம் முன் காட்டும் கவிஞரின் கற்பனைத் திறம் போற்றற்குரியது.

முடிவுரை

இயற்கையைப் பாடாதப் புலவர்களே இல்லை என்று எண்ணுமளவிற்கு தங்கள் படைப்புகளில் இயற்கையைக் கையாண்டுள்ளனர். புலவர் சைவ, வைணவ இலக்கியங்களில் இயற்கை புனையப்பட்டுள்ள விதத்தை இவ்வாய்வின் வழி அறிந்து கொள்ளமுடிகிறது. ஆய்வுச் சுருக்கம் கருதி கட்டுரை சுருக்கி வரையப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் தனி ஆய்வுக்குறியது.

65. இறை (வ) இணக்கமும் (முதநல்) இணக்கமும் ஒளிரும் திருவண்ணாமலையின் சிறப்புகள்



முனைவர் க.அல்தாசு பேகம்
உதவிப்பேராசிரியர்
சிறி பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

முன்னுரை

சைவத்திருத்தலங்களுள் சிறப்புப் பெற்ற திருவண்ணாமலை உலகின் மிகச்சிறந்த சிவத்தலங்களுள் ஒன்றாகும். தொன்மைக் காலத்தில் இம்மலைநாட்டுச் சாசனங்களில் அண்ணா நாடு எனவும் மலைக்குத் திருவண்ணாமலை என்றும் பெயர் வந்தது. அண்ணா என்பது அந்நகரின் பழமையான பெயர். அதைச் சுற்றியுள்ள பகுதியை அண்ணா நாடு என்றும் பிறகு திருவண்ணாமலை எனறும் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருவண்ணாமலையின் கார்த்திகை தீபவிழா, தேரோட்டம், கிரிவலம் முதலான வழிப்பாடுகள் மிகவும் சிறப்பு பெற்றவை என்பதால் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இன, மத, மொழி வேறுபாடின்றிப் பல்வகை மனிதர்களும் வந்து இச்சைவத் தலத்தைப் பக்திப் பரவசத்துடன் பார்த்து மகிழ்கின்றனர். ஒற்றுமையை உருவாக்கும் உயர்ந்த ஆலயமாகவும், சைவ பக்தர்களுக்கு மிகச்சிறந்த வழிப்பாட்டுத் தலமாகவும் விளங்கும். இப்புனித ஆலயத்தைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

திருவண்ணாமலையின் வேறு பெயர்கள்

முக்திபுரி, தலேச்சுரம், சிலோகம், கௌரிநகரம், சேணகிரி, அருணாசலம், அருணகிரி, அளற்கிரி, ஞானநகரம் என்னும் பெயர்கள் திருவண்ணாமலைக்கு வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை

புனித சிவமலை என்பதே திருவண்ணாமலை என

அழைக்கப்படுகின்றது. திருவண்ணாமலை 260 கோடி ஆண்டுகள் பழமையானது என்கிறார் விஞ்ஞானி டாக்டர் பீர்பால் சகானி. பால் பிரண்டன் எனும் ஆய்வாளர் "Message From Arunchala" என்ற தம் நூலில் லெமூரியா கண்டத்தின் எஞ்சிய பகுதியே திருவண்ணாமலை என்கிறார். இம்மாவட்டம் பிற்காலச் சோழப் பேரரசில் குறுநில மன்னராக இருந்த சம்புவராயகர்களால் ஆளப்பட்டு பின் விசயநகரச் சிற்றரசர்கள் ஆர்க்காடு நவாபுகளின் ஆட்சியின் கீழிருந்து பின் ஆங்கிலேயர்கள் வசம் வந்தது. முன்பு வேலூரும் திருவண்ணாமலையும் சேர்ந்தே வட ஆற்காடு மாவட்டம் என அழைக்கப்பட்டது. 1989 செப்டம்பர் 30-ம் தேதி இம்மாவட்டம் வடஆர்க்காடு மாவட்டத்திலிருந்து தனியே பிரிக்கப்பட்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிப் பின்னர் தலைநகரின் பெயரால் திருவண்ணாமலை என அழைக்கப்படுகின்றது.

எல்லைகள்

கிழக்கு - திருவள்ளூர், மேற்கு-தருமபுரி வடக்கு - வேலூர், தெற்கு-கடலூர் ஆகிய மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேலும் செய்யாறு, ஆரணி செங்கம், போளூர், வந்தவாசி, கலசபாக்கம், சேத்துபட்டு, தண்டராம்பட்டு, வெம்பாக்கம் முதலான 12 தாலூக்காக்களையும் கொண்டது. மக்கள் தொகை : 24,64,875 (2011) ஆண்கள் 1000; பெண்கள் 998, எழுத்தறிவு :79.33 சதவீதம்

மத நல்லிணக்கம் தரும் திருவண்ணாமலை

திருவண்ணாமலை கோயில் கண்ணப்ப உடையாரால் கட்டப்பட்டது. இதனைச் சுற்றி நான்கு மதிற்சுவர்கள். மண்டபங்கள் முதலியவற்றை ஆர்க்காடு நவாப் கட்டியுள்ளார். கோயிலுக்காகப் பல ஏக்கர் நிலத்தையும் வழங்கியுள்ளார். மேல்விசாரம் கல்லூரியின் சுதாபகர் அப்துல்கக்கீம் அவர்கள் இக்கோயிலுக்கு ஒரு யானையும் பரிசாக அளித்து அதன் பராமரிப்பு செலவையும் ஏற்றுக்கொண்டார். இன்னொருவர் சமால்பாய் அக்கோயில் தெப்பக்குளத்திற்கு ஆண்டுதோறும் தூர்வாரும் பணியை இலவசமாய் வழங்கி மதநல்லிணக்கத்திற்கு

பெருமை சேர்க்கிறார். அண்ணாமலையார் கோயிலின் அருகில் இசுலாமிய மகான் ஆதம் சபி அவர்களின் தர்க்கா உள்ளது. இதன் மூலம் இங்கே பெரியோர்களும் மகான்களும் அன்புடனும் மதநல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வந்தார்கள் என்பது தெளிவாகிறது. திருவண்ணாமலை என்றாலே, அண்ணாமலையார் கோயில், மலை, கார்த்திகை தீபம், இரமணமகரிசி ஆசிரமம், அருணகிரிநாதர் பிறந்த தலம், கிரிவலம் என்பது யாவரும் அறிந்ததே. பலரும் அறியாதது அங்குள்ள இந்துக்களும் இசுலாமியர்களும், கிறித்துவர்களும் மாமா, மச்சான் என அழைத்துக்கொண்டு சகோதரர்களாக வாழும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

தீர்த்தங்கள்

இந்திரன், தீர்த்தம், அக்னித் தீர்த்தம், மை தீர்த்தம், திருதித் தீர்த்தம், வருண தீர்த்தம், குபேரத்தீர்த்தம், சிவகங்கைத் தீர்த்தம், சிவதீர்த்தம், சக்கரத் தீர்த்தம், கடக தீர்த்தம் போன்ற முன்னூற்று அறுபது தீர்த்தங்கள் திருவண்ணாமலையில் காணப்படுகிறது. இதனை,

''இந்திரன் றீர்த்தமோ டக்கினித் தீர்த்தமோ
மெமதிர்த்த நிருதிதீர்த்த
மியல் வருண தீர்த்தமுயர் வாயுதீர்த் தம்வடக்''
(அண்ணாமலையார் சதகம், பாடல்5)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

மலையின் சிறப்புகள்

திருவண்ணாமலையில் சைவர்கள் மட்டுமின்றி சதகர்களும், வைணவரும், சமணரும் இன்ன பிற சமயத்தவரும் தத்தமது சாதனைகள் நிமித்தம் இம்மலைக் குகைகளில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. காந்தம் இரும்புத் துகள்களைக் கவர்வது போல் மகான்களைத் தன் வசம் கவருவதால் காந்தமலை என்றும் இது அழைக்கப்படுகிறது. மேலும் குகையானது நமசிவாயர், அர்த்தநாரீசுவரர், பாண்டவர், கன்னிமார், வேடியப்பன், தண்டபாணி, பாததீர்த்தம், அரவான்,

அம்மன் கோயில் முதலான கோயில்கள் மலையில் காணப்படுகிறது. அரணானது காவல் காடாக அமைந்த பாதுகாப்பு அரண், உயர்ந்த மதில் சுவர்களின் அரண், அகழியாய் அமைந்த நீர் அரண் என அமைகின்றது என்பதை,

''மலையரசண் காடரண் மதிலரணு நீரரன்
மருவுமிந் நான்கரணமும்
மந்திரிக டளகர்த்தர் குடிபடையுமுடையராய்''
(அண்ணாமலையார் சதகம், பாடல்-13)

இப்பாடல் மூலம் அறியலாம். ஆண்டுதோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் மலை உச்சியில் ஒரு சோதி காண்பதை யார் பார்க்கின்றாரோ அவர்களுக்கு இடையூறுக் வராது என்றும், அருணகிரி என்ற பெயரை ஒரு முறை உச்சரித்தால் மூன்று கோடி முறை உச்சரித்தத்றகுச் சமமாகும். இங்குள்ள முருகன் மீது அருணகிரிநாதர் பாடல்கள் பாடியுள்ளார். சைவத்தின் வேதங்களாய்க் கருதப்படுவது பன்னிருதிருமுறைகளாகும். இதில் முதல் மூன்றும் ஞானசம்மந்தரின் தேவாரம் அடங்கும். அவர்களில் அப்பர் திருவண்ணாமலை, தேவாரப்பதிகங்கள் நான்கிலும் அண்ணாமலையை நினைப்பதன்றி வேறொரு எண்ணமும் தமக்குள் இருப்பதில்லை என்று பாடுகிறார்.

''பவளக்குன்றே பரமனே அறை கழல்
அமரர் புகழும் அணி அண்ணாமலையானே''
(தி.மலை.ப.56)

என்றும் ஆதரிக்கிறார். சுந்தரர் பாடிய பதிகங்களில் திருவண்ணாமலையைப் பற்றிப்

''பண்டைமால் பரமன் பறந்தும், இடந்தும், அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல்
காண்பதரிதாய பிரான்'' (தி.மலை.ப.56)

என்று அண்ணாமலையாரைத் தொழுதேத்துகிறார். மாணிக்கவசாகர் தமது திருவாசகத்தின் முதற்கண் அமைந்த சிவபுராணத்தில்

''ஆராத இன்பம் அருளும் மலை போற்றி''

(கதிர்முருகு, திருவண்ணாமலை, ப.56)

என்று திருவண்ணாமலையைப் புகழ்கின்றார். சேக்கிழாரின் பெரிய புராணமும், காரைக்கால் அம்மையின் திருவந்தாதியும் அண்ணாமலையைப் போற்றுகின்றன.

ஆலய அமைப்பு

அண்ணாமலையார் கோயில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும். ஒன்பது உயர்ந்த கோபுரங்களையும், நீண்ட பிரகாரங்களையும், மதில்களையும், மலர்த்தோட்டங்களையும், கோபுர மாடங்களையும் கொண்டிருக்கும். ஆயிரங்கால், நூறுகால் மண்டபங்கள், வாகனக் கிடங்குகள், எல்லாவற்றுக்கும் மூலமாய் அண்ணாமலையாரின் லிங்க வடிவினைக் கொண்ட சந்நிதியும் பக்கத்தில் உண்ணாமலை சந்நிதியும் அமைந்துள்ளது.

லிங்கம்

ஆயிரத்தெட்டு லிங்கங்கள், நூற்று எட்டு லிங்கங்கள், சரேசுவரர் லிங்கம், பதஞ்சலீசுவரர் லிங்கம் என வகைவகையான லிங்கங்களும் பைரவர் சந்நிதி, பள்ளியறை, நடராசர் சந்நிதி போன்றவையும் அமைந்துள்ளன. ஆற்றுமணல் கொண்டு லிங்கம் செய்து பூசை செய்தால் செல்வமும், திருநீற்றால் பூசை செய்தால் வீடுபேறும், சந்தனத்தால் லிங்கம் செய்து பூசை செய்தால் குபேரனின் பாக்கியமும் கிடைக்கும் என்று,

“மாற்றருஞ் சந்தனச் சாந்த லிங்கம்
வகுத்து வழிபாடு செய்யும்
மானிடர் தமக்குக் குபேர பாக்கிமவனி”

(அண்ணாமலையார் சதகம், பா.49)

என்ற பாடலின் மூலம் காணலாம்.

ஒற்றுமைச்சுடர்

சந்தனத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் எனக் கார்த்திகை தீபத்தின் ஒவ்வொரு நாளும் நீண்ட உற்சாகத்துடன் கொண்டாடப்படுகின்றது. இந்து, இசுலாமியர், கிறித்துவர்

வெளிநாட்டினர், குழந்தைகள் எனப் பல்வேறு மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்து தீப விழாவினை மகிழ்ச்சியுடன் உற்சாகமாகப் பார்த்து ரசிக்கின்றனர். பல்வேறு மக்களின் பொருளாதாரச் சூழலும் வளர்ந்து வளம் செழிப்பதால் இப்பண்டிகைக் காலக் கொண்டாட்டங்களை இந்துக்கள் மட்டுமின்றி பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒற்றுடையுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடி மகிழ்வதால் திருவண்ணாமலையில் உள்ள இவ்வுயர்ந்த சைவத்தலம் ஒற்றுமைச் சுடராக ஒளிர்ந்து அனைத்து பக்தர்களையும், மற்றவர்களையும் பரவசமடையச் செய்கின்றது என்றால் அது மிகையாகாது எனலாம்.

கிரிவலம்

மலையை வலம் வருதலே கிரிவலம் எனப்படுகிறது. இத்தலத்தில் உள்ள மலை எல்லா யுகங்களிலும் அழியாமல் இருப்பதாகச் சைவர்கள் நம்புகின்றனர். இதனால் கிரிவலம் வருகின்றனர். முழுநிலவு நாளில் கிரிவலம் வருவதே சிறப்பாகக் கருதப்படுகிறது. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் அதிகாலை 3 மணிக்குத் தொடங்கி வலம் வந்தால் நினைத்த காரியம் நிறைவேறும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறாகத் திருவண்ணாமலையிலுள்ள இச்சிவதலம் சாதி, மத, இன பேதமின்றி அனைவருக்கும் நன்மை செய்யும் தலமாகச் சிறப்பு செய்து உலக அரங்கின் ஆன்மீகத் தலங்களில் உயர்ந்து, நிமிர்ந்து ஓங்கி வளர்ந்து ஆன்மீக, நல்லிணக்க ஒளியை உலகெங்கும் பரப்புகின்றது எனில் அது மிகையாகாது.

66. சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்கள் பற்றி ஒரு பார்வை

மோ.தேன்மொழி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

உயர்தனி செம்மொழியாகத் திகழும் தமிழ் மொழியின் கண் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம், மருத்துவம், சோதிடம், வானியல், சிற்பம் முதலான பல துறையைச் சார்ந்த நூல்கள் உள்ளன. மனிதரின் வாழ்வுக்கு வளமும், நலமும் சேர்க்கும் இத்தகைய துறைகளைச் சார்ந்த நூல்களை ஆய்வதால் வாழும் நெறியையும் வாழ்வின் பயனையும் உணரவும், உணர்த்தவும் இயலும். அவ்வகையில் தமிழின்கண் பண்டுதொட்டு இன்றுவரை தோன்றியுள்ள சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்களைப் பற்றி இக்கட்டுரை வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றது.

பன்னிரு திருமுறைகள்

தென்னாடுடைய சிவனை எந்நாட்டவர்க்கும் உரியவராக நாயன்மார்கள் கண்டனர் என்று கூறப்படுகின்றன.27 பெரியார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறையாகும். முதல் ஏழு திருமுறைகளில் முதல் மூன்று திருஞானசம்பந்தர், அடுத்த மூன்று திருநாவுக்கரசர், ஏழாவது சுந்தரர் பாடியவை. இம்மூவர் பாடியதைத் தேவாரம் என்பர். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாகும், ஒன்பதாம் திருமுறை திருமாளிகைத் தேவர் சேர்ந்தனர், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி காடவநம்பி திருவாலி அமுதனார் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். பத்தாம் திருமுறை திருமந்திரம் பாடியவர் திருமூலர். பதினோராம் திருமுறை திருவாலவாயுடையார்

காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம்பெருமானடிகள் அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவர் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.

பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம் பாடியவர் சேக்கிழார். பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவராவர். இவர் கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதலாம் இராசராச சோழனின் உதவியுடன் தில்லையம்பலத்தில் அடைந்து கிடந்த ஏடுகளை எடுத்து முறைப்படுத்தித் தொகுத்தார். சேக்கிழார் இவருக்குப்பின் வாழ்ந்தவர். எனவே பின் வந்தோர் சேக்கிழாரின் பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாக அமைத்துக் கொண்டனர்.

சைவ இலக்கியம்

சைவ சமயம் சிவபெருமானைப் போலவே பழமையானது. சிவமென்றால் செம்மை, நன்மை என்று பொருளாகும். சிவம் அன்பை வளர்த்தால் அன்பே சிவமாயிற்று. சங்க இலக்கியங்களும் சிவனைப் பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றது. சோழன் கோச்செங்கணான் சிவனுக்கு 78 மாடக் கோயில்கள் பாடியதாகத் திருநாவுக்கரச நாயனார் குறிப்பிடுகின்றார். முதலாம் மகேந்திவர்மப் பல்லவன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறும் வரை இந்நிலையிலே நீடித்தது எனலாம். அப்பர் அருளால் அரசன் சமயம் மாற, சைவம் தழைத்தோங்கத் தொடங்கியது. இருட்குகையில் மறைந்து கிடந்த சைவ விளக்கு திருநாவுக்கரசரால் ஆதவனாய் மாறித் தமிழகத்தைத் தன்வயமாக்கியது.

சைவப் பெரியார் திருநாவுக்கரசரும் முதலில் சமணராகவே இருந்தார். சைவத்திற்கு அருந்தொண்டாற்றிய மன்னர் மகேந்திரவர்மனும் முதலில் சமணரே சமயம் மாறிய மன்னன் திருப்பாதிரிப் புலியூரிலுள்ள சமணப் பள்ளிகளை இடித்து சைவ சமயக் கோயிலை உருவாக்கிச் சமண

சைவப்போருக்கு வித்திட்டார் என்று கூறப்படுகின்றது.

சம்பந்தர் தேவாரம்

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. சீர்காழிக் குளக்கரையில் மூன்று வயதில் உமா தேவியாருடன் காட்சி தர அக்காட்சியினைக் கண்ட வியந்து தோடுடைய செவியன் எனும் புகழ்பெற்ற முதல் பதிகத்தைப் பாடினார். தந்தையுடன் ஊர் ஊராகச் சென்று இசையோடு சைவத்தைப் பரப்பினார். எனவே நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்னும் பாராட்டினைச் சுந்தரர் வாயால் பெற்றவர். சைவம் தவிர பிற சமயங்களை வெறுத்தார். அப்பர், சுந்தரர் வாயால் பெற்றவர். அப்பர் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியது போலவே இவரும் சமண சமயத்திலிருந்து கூன்பாண்டியனை அவன் மனைவி மங்கையர்க்கரசி வேண்டுகோளுக்கேற்ப மதுரை சென்று சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார்.

திருநாவுக்கரசர்

4,5,6 திருமுறைகள் இவர் பாடியதாகும். இவற்றை முறையே திருநேரிசை திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்று வழங்குவர். இளமையில் சமணத்தை நாடி, தமக்கை திலகவதியின் அருளால் முதிய வயதில் சைவத்திற்கு மாறிவயவர். சமணத்திலிருந்த மன்னன் மகேந்திரவர்மனைச் சைவத்திற்கு மாற்றியவர். இவர் காலத்தில் தமிழகத்தில் சைவ சமயம் வேகமாக வளரத் தொடங்கியது.

''சாத்திரம் பேசும் கழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிந்தீரேல்
மாத்திரைக்குள் அருளுமாற்பேறரே''

மெய்ம்மையை உழவாகவும், விருப்பத்தை விதையாகவும், பொய்ம்மையைக் களையாகவும், பொறுமையை நீராகவும், தம்மையே தாம் ஆராய்ந்து நடுவுநிலைமை வேலியாகவும்

சான்றாண்மை எனும் பண்பு கொண்டு நின்றால் சிவகதி விளையும் எனக் கூறப்படுகின்றது.

சுந்தரர்

சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறை என்பதாகும். தன்னைத் தடுத்தவன் சிவன் என்று அறிந்தும் சிவன் கேட்டதற்கேற்ப பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா எனும் பதிகத்தைப் பாடினார். இவர் இறைவனை நோக்கிப் பாடிய பாடல்களில் தோழமை உணர்வு விஞ்சி நிற்கும். இவரை வன்தொண்டர் என்பர். இவர் நெறி யோகநெறி எனினும் ஞான நெறியிலும் ஈடுபாடு கொண்டவர்.

இவர் பாடிய பாடல்கள் வாழ்வின் நடைமுறை இயல்புகளை நன்கு எடுத்துரைக்கின்றன. சிவனை நாடி ஊர் ஊராகப் போனபோது மழபாடியுள் இருக்கும் சிவனை மறந்து சுந்தரர் சென்றுவிட சிவன் என்னை மறந்தனையோ என்று கேட்க அதனால் தமிழ் உலகிற்குக் கிடைத்த பாடல் என்றும் மறக்க இயலாததாக இன்றளவும் புகழப்படுகின்றன.

''பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னர் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மறுபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே''

மாணிக்கவாசகர்

இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி என்பர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். அமைச்சராக இருப்பினும் சினம் சிவனையே நாடியது. இறைவன் மாணிக்கவாசகருக்காக நரியைப் பரியாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் திருவிளையாடல் புரிந்தான். தேனூறும் திருவாசகம் சைவத் திருமுறையில் எட்டாவதாக அமைகிறது. இராமலிங்க அடிகள் கூறுவது போன்று உவட்டாமல் இனிப்பது திருவாசகம். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது மூதுரை. கருங்கல் மனமும் கசிந்துருகச்

செய்வது திருவாசகம். சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 659 பாடல்களைக் கொண்டது. இவர் வாசகங்கள் மாணிக்கம் போல் சிறப்பு பெற்றமையால் மாணிக்கவாசகர் எனப் போற்றப்பட்டார்.

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இவ்விரு நூல்களும் ஒன்பதாம் திருமுறை ஒன்பதின்மர் பாடிய பாடல்களைக் கொண்டது. இவற்றில் பூந்துருத்திகாட வநம்பி என்பவர் சைவ மரபு. சிதம்பரம், திருவாரூர் பற்றி இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார்.மேலும் சேந்தனார் என்பவரும் சிவபிரான் இவர் அன்பால் மகிழ்ந்து இவரிடம் கூழனையுண்டு மகிழ்ந்ததாகக் கூறுவர்.

பத்தாம் திருமுறை

திருமூலருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். திருமூலர் கூடுவிட்டுக் கூடுபாயும் வல்லமை பெற்றவர். பாடல்கள் பெரும்பாலும் உருவங்களாகவே அமைகின்றன. தத்துவக் கருத்துக் கொண்டு மிளிர்கின்றன. மந்திரம் போல் அமைவதால் திருமந்திரம் சொற்களில் எளிமை, கருத்துக்களில் அருமை என அமையும். இறைவன் இல்லாத இடமில்லை என்று கூறப்படுகின்றது.

''தேனுக்குள் இன்பம் சிவப்போ? கறுப்போ?
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே''

பதினோராந் திருமுறை

பன்னிருவர் பாடிய நாற்பது நூல்கள் 1401 பாடல்கள் பதினோராந் திருமுறையாக வழங்கப்படுகிறது. சைவ ஆலயங்களில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களில் 62 பேர் நின்ற கோலத்தில் இருக்க இவர் மட்டுமே அமர்ந்த கோலத்தில் இருக்கும் சிறப்பும் பெற்றவர். இவர் பாடல்களில் சிவனின் ஆடற்சிறப்பும் சிவன் ஆடும் சுடலையின் சிறப்பும்

இடம்பெறும். சிவன் வேண்டியார்க்கு வேண்டிய வடிவில் வருபவன் என்று ஆண்டாளால் கூறப்படுகின்றது. நக்கீரர் தேவநாயனார் என்பவர் சிவனின் திருமுடிகாணப் பிரமன் அன்னமாய்ச் சென்றதாக அனைத்துப் புராணமும் கூற இவர் அன்னமாகச் சென்றதாய்க் கூறுகின்றார்.

இளம் பெருமானடிகள் இவர் பாடியது சிவபெருமான் திருமும்மணிக்கோவை 30 பாடல்கள், இவரும் துறவியாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

பன்னிரண்டாம் திருமுறை

சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் 12ஆம் திருமுறையாகும். நம்பியாண்டார் நம்பி 11 ஆம் திருமுறை வரையில் தொகுத்தார். பின் வந்தோர் பெரிய புராணத்தையும் இணைத்துத் திருமுறைகள் பன்னிரண்டாகக் கண்டு கொள்ளப்பட்டு இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

முடிவுரை

சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்கள் என்பது பன்னிரு திருமுறைகள் என்பதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் சைவக் கடவுளாகச் சிவனை வழிபடும் விதமாக ஒவ்வொரு ஆசிரியரும் எடுத்துரைக்கின்றனர். மேலும் பக்தி இயக்கமாகக் கருதப்படும் சைவத்திற்கு நாயன்மார்கள் பக்தி பாடல்கள் இயற்றி பெருந்தொண்டு செய்ததாகக் கூறப்படுகின்றது. எனவே இக்கட்டுரை வாயிலாக நாம் சைவக் கடவுளையும் அவற்றின் புகழையும் பெருமிதத்தோடு போற்றுவோம்.

67. மாணிக்கவாசகரின் பக்திச் சிறப்பு



முனைவர் கே.எசு.பிரணதார்த்திகரன்
திருவரங்கம்

முன்னுரை

மானிடப்பிறவி என்பது அரிய நிகழ்வு ஆகும். மனித மனமானது அறிதல், உணர்தல், செய்தல் போன்ற செயல்களைச் செயல்படுத்தும் வல்லமை பெற்றது. இவற்றுள் அறிதலை இயற்றமிழாகவும் உணர்தலை இசைத்தமிழாகவும் செய்தலை நாடகத் தமிழாகவும் ஆன்றோர் பகர்வர். முத்தமிழ் வாயிலாக மனம் செம்மைப்படுத்தப்படுவதால் இம்மனச் செம்மையினை மெய்யுணர்வு எனக் கூறினர் எனலாம். பைந்தமிழில் செம்மை என்ற சொல்லிற்கு நேர்மை, தூய்மை, வாய்மை, அழகு, இணக்கம் போன்ற பல அர்த்தங்கள் இருப்பினும் அத்தனைக் குணங்களையும் கொண்ட செம்பொருளைச் சிவம் எனப் போற்றி வழிபட்டு ஆன்றோர் பரவசமானதாக வரலாறு பதிவு செய்கிறது. எல்லாம் வல்ல செம்பொருளாகத் திகழும் சிவனுடன் தொடர்பு கொண்டது சைவம் ஆகும். தமிழர்கள் சைவ சமயத்தினைப் போற்றினர்.

திருவாசகம் முத்தமிழிற்கு அன்பு முறையாகவும் புனித அருமறையாகவும் திகழ்கிறது. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல்கள் திருப்பெருந்துறையில் 329 பாடல்கள், திருவண்ணாமலையில் 40 பாடல்கள், திருக்கழுகுன்றத்தில் 07 பாடல்கள், தில்லையம்பலத்தில் 266 பாடல்கள், திருத்தோணிபுரத்தில் 10 பாடல்கள், திருவாரூரில் 103 பாடல்கள் ஆகியன ஆகும். திருவாசகமாகிய திருமறையில் அருள் திருவருள் இன்னருள் தந்தருள் நின்னருள் அருளமுதம் என 270 இடங்களில் போற்றி மணிவாசகர் வழிபட்டுள்ளார். சிவபிரான் அங்கிங்கு என்று எண்ணாதபடி எங்கும் நிறைந்து இருந்தாலும் சிவலிங்கத்தில் தயிரில் நெய் போல விளங்கியும், ஏனைய இடங்களில் பாலில் நெய் போல விளங்காமலும் இருப்பதாகப்

பகருகின்றனர்.

சிவன் என்ற சொல்லிற்கு மங்கலம், நன்மை, முக்தி எனப் பலவாறாகப் பொருள் கொள்ளலாம். பக்தி இலக்கியத்திற்கான உயர்தனிக் குறிக்கோள்கள் உள்ளன. இத்தனப் பெருமை மிக்க பக்தி இலக்கியம் இறை ஒன்றே என்ற கொள்கையது; பிறவிப் பேற்றையும் அதன்கண் மேற்கொள்ள வேண்டிய அறத்தையும் சொல்வது; வினை நீக்கத்திற்கு வழிகோலுவது; நமனை அஞ்சா நலம் தருவது, சமுதாயப் பார்வை கொண்டது; அடியாரைப் போற்றும் பக்தியையும் பணிவையும் சொல்வது நிலைத்த மகிழ்ச்சி கொள்ளும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவது ஆகிய முதன்மைக் குறிக்கோள்களைக் கொண்டு மனித வாழ்வின் நிறைவான பயனை எட்ட வழிவகுப்பதாக உள்ளது. அன்பே சிவம் என ஆன்றோர் கூறுவர். அன்பான அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்கிறது. அன்பு அனைத்தையும் தாங்கவல்லது. திருமூலர் கூறும் கருத்து யாதெனில்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாயதாகும் அறிகிலார் அன்பே சிவமாவதாகும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" திருமந்திரம்-257 ஆகும்.

மாணிக்கவாசகர், "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி ஆரூர் அமர்ந்த அரசே போற்றி சீரா திருவை யாறா போற்றி பாரத்துறை மேவிய பரனே போற்றி சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி" என்று பாடிப் பரவசமாகிறார். சிவபுராணத்தில் சிவபெருமான் அருளைப் பெற இறைவன் அருள வேண்டும் என்பதனை

"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி"

சிவபுராணம் அடிகள்:17-18

எனப் போற்றுகிறார். அன்பானது தவம், யோகம் முதலியவற்றைக் காட்டிலும் பெரிது. பக்தன் சிவபிரானை நினைந்து அன்பினால் உருகினால் சிவனை அடையலாம் என

ஆன்றோர் கூறுவர். சைவத்தைக் காட்டிலும் உயர்ந்த சமயம் இல்லை எனவும், சிவபிரான் தெய்வங்களில் மேன்மையான தெய்வம் எனக் கருதுவோர் உண்டு. இறைவன் ஐம்பெரும் பூதங்களாக வான், மண், காற்று, நெருப்பு நீராகத் திகழ்கிறான் என்பதனை மாணிக்கவாசகரின் பாடல்

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே?''
திருவாசகம், திருச்சதகம் பாடல்31

பதிவு செய்கிறது. மாணிக்கவாசகரால் படைக்கப்பட்ட திருவாசகம், சிவபிரானின் அருளைப் பக்தர்கள் பெறுவதற்குக் கிடைய அரிய கருவூலமாகக் கருதலாம். மேலும், ஒரு பொருளை நாம் நாமாக இருந்து அனுபவிப்பதை விட மாற்றுப் பொருளாக நின்று அனுபவிக்கும் போது அதன் சுவையே கூடுதலாகும். கண்ணபிரானை ஆயர்பாடியில் யசோதை தாலாட்டுவதினும் பெரியாழ்வார் தம்மை யசோதையாக ஏறிட்டுக்கொண்டு தாலாட்டியதைப் பெரிதும் போற்றுவர். இதனை வைணவப் பேருரையாளர் வேற்று வாயாலே அனுபவித்தல் என்பர். இவ்வாறே மாணிக்கவாசகரும் அடியார்கள் தங்களை மைப்புறு கண்ணியராய் ஏற்றிக் கொண்டதாகக் கூறியதால் மானுடம் என்பது தன் நிலை கடந்து இன்னொன்றாக மாறிக் கரைதல் (உருகுதல்) என்ற பொருளைத் தருவதாக உறுதிப்படுத்தினார் எனலாம். இந்த மாறிக்கரைதலாகிய ஒன்றுதான் வையத்தை வாழ்விக்கும் மருந்து எனலாம். இதுதான் பிரிதின் நோய் தன் நோய்ப்போல் போற்றும் நிலை ஆகும். இதில் தான் இன்னொன்றாக மாறி விடும்போது தான் முழுமையான ஈடுபாடான அந்நியப்படாத ஐக்கியம் மானுடத்தை வாழ்விக்கும் உருகார் என்ற கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் தேவரமானது. இசைத்தமிழில் இயற்றப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் எனும் தேன் இயற்றமிழில் அமைந்துள்ளது. திருவாசகமானது முழுமையாகக் கிடைக்கப்பெற்ற தமிழ் நூல் என்ற

பெருமையைப் பெற்றுள்ளது. விதியினை மதியால் வெல்லலாம் என்பதற்குத் திருமறைகள் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன. வடலூர் இராமலிங்க அடிகளார் திருவாசகத்தின் மேன்மையினை,

''வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பருசாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

என்ற பாடலில் பதிவு செய்து உள்ளார். தென்னிந்தியாவிலும், சோழவள நாட்டிலும், காசியில் நகரத்தார்கள் செய்து வரும் சைவப்பணி போற்றுதலுக்குரியது. ஊதுபத்தி தன்னை எரித்து, பிறருக்கு மணம் கொடுப்பது போல, நகரத்தார்கள் பல வேதனைகளையும், சோதனைகளையும் கடந்து பல சாதனைகளை அமைதியாகச் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு மானுடனுக்கும் அன்புடன் கூடிய உடலே உடலாகக் கருதப்படும். அன்புதேடல் உயிர் நிலைபெற்றுத் திகழும். அன்பின் அகலம் ஆனது ஆனந்தமாகக் கருதப்படுகின்றது. அன்பின் கரம் அறிவாக உருவெடுக்கிறது. தகைமை பெற்றிருக்கும் அன்பின் வாயிலாக அருளாசி பெறும் நிலையினை எய்தலாம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என மனிதன் உணர்ந்து செயல்படுதல் நலம் மனம் மொழி மெய் ஆகியவற்றால் இறைவனை வழிபடும் முறைகளைச் சைவம் நான்காக வகுத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நால்வகை மார்க்கங்கள் ஆகும்.

நால்வகை மார்க்கங்களும் சிவபெருமானுக்குச் செய்யும் பணியின் பொருட்டும் தொண்டின் மூலமும் குறிக்கக் கூடியவனாக உள்ளன. திருஞானசம்பந்தர் - கிரியை, திருநாவுக்கரசர் - சரியை, சுந்தரர்-யோகம், மாணிக்கவாசகர் - ஞானம் ஆகிய நெறிகளைப் பின்பற்றினர்.

மேலும் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த

சமயச் சான்றோர்களின் வாழ்க்கை, அவர்களின் அருளுரைகள் அனைத்தும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற ஒருமைபாட்டு உணர்வையே போதித்துச் செல்கின்றன. மேலும், ஒருவர் தோற்றுவித்த மதம் அவர் பெயரைக் கொண்டு விளங்கும். சைவம் இறைவன் பெயரைக் கொண்டு விளங்குகிறது. வள்ளலாரும் தமிழ் பாசையே அதிசுலபமாகச் சிவாநுபதியைக் கொடுக்கும் எனச் செப்பியுள்ளார்.

ஆன்றோர் கருத்து யாதெனில், கடவுளுக்குத் தமிழில் சிவம் என்று பெயர். சிவம் என்பது இயற்கைப் பொருள். எல்லா உலகங்களிலும், எல்லா உயிரிகளிலும் கலந்திருப்பது. தொடக்கமும் முடிவும் அற்றது. பூவில் மணம் போலும், பாலில் நெய் போலும் கலந்திருப்பது. எனவே, காற்றாகவும் மழையாகவும் புயலாகவும் சீறிப் பாயும் பேரலையாகவும் இருப்பவன் அவனே. அவனின்றி உலகில் ஓர் அசைவும் இல்லை. ஆக நாம் எங்கிருந்து அவனை நினைத்தாலும் துதித்தாலும் நம் மனம் அவனை மட்டுமே நினைக்க வேண்டும். ஆனால் ஆலயத்துக்குச் சென்று இறைவனைத் தரிசிக்கும் போது மக்கள் மனத்தே இயல்பு என்பதும், கோபுர தரிசனம் கோடி பாய நிவாரணம் எனவும் உணரலாம். மேலும் பல பொருட்களிலும் பிரம்மம் ஒன்றையே காண்பது அத்வைதம். ஒரே கடவுளைப் பல வகையாகக் காண்பது சைவம். இந்த இரண்டையும் ஒருங்கிணைத்தவர் சங்கரர் என வலாறு பதிவு செய்து உள்ளது.

பரம்பொருளாம் சிவபெருமானை நினைத்த காரணத்தினால் பெற்ற அன்பின் வெளியீடு காரணமாக அப்பரம்பொருளே உண்மையான மெய்ஞானத்தினை மணிவாசகப் பெருமானுக்கு ஊட்டினர் என ஆன்றோர் கூறுவர். பற்றற்ற நிலையில் மெய்யறிவு, வீடு பேறு பெறலாம் என்பதனை மணிவாசகப் பெருமான் ஞானநெறி மூலம் பறைசாற்றுகிறார். மெய்ஞானத் தேடல் பொருட்டு பயணிக்கும் மனிதனுக்குத் திருவாசகம் தோழனாக வருவது உண்மை.

68. சுந்தரரின் பக்திநெறி

முனைவர் க.சகாயகிரேசி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
செயராசு அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சி கல்லூரி
பெரியகுளம்

முன்னுரை

சைவ சமய ஆசிரியருள் மூன்றாமவர். சுந்தரம் தம்பிரான் தோழர், வன்தொண்டர் என்று புகழாரம் சூட்டுவதற்கு உரியவர். பெரியபுராணம் தோன்றக் காரணமாக அமைந்த திருத்தொண்டர் தொகையைப் பாடியவர் இவரே. இறைவன் இவரை தோழமை கொண்டதற்குக் காரணம். இவர்பால் அமைந்த கல்வி அறிவே ஆகும். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் தலத்தில் ஆதி சைவ அந்தணரான சடையனாருக்கும் இசைஞானியருக்கும் மகனாக அவதரித்தார். சிறுவயது முதலே இறைவனிடம் ஆறாத தீராத பற்றுடையவராக வளர்ந்தார். இறைவனால் தடுத்தாற் கொள்ளப் பெற்று தனது பக்திநெறியில் உச்சம் தொட்டவர்.

இறைவன் தடுத்தாட் கொள்ளுதல்

திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசராகிய நரசிங்க முனையர் என்பவர் சுந்தரர்பால் அன்புமிக்குத் தம் வளர்ப்புப் பிள்ளையாக வளர்த்து வந்தார். கல்வி கேள்விகளில் சிறந்தவரான சுந்தரர், சடங்கவி சிவாசாரியாருடைய மகளை மணம் செய்விக்க நிச்சயம் செய்யப்பட்டது. திருமணக் கோலத்தோடு நின்ற சுந்தரரைச் சிவபெருமான் தனக்கு தொண்டு செய்ய வேண்டும் என விருப்பம் கொண்டு, இந்த நம்பியாரூரான் என் அடிமை என்று விவாதித்து சுந்தரரைத் தனக்குரியவராகத் தடுத்தாட் கொண்டார். அன்றிலிருந்து சுந்தரர் இறைவன்பால் தீராத பற்றுக் கொண்டு செந்தமிழ்ப் பாக்களால் துதிபாடினார்.

பித்தன் மீது பித்தாதல்

உலகில் தாய் தந்தையர் அன்பிற்கு அடுத்ததாக நாம்

நண்பர்கள் மீது நட்பு கொள்வோம். எவ்வித கருத்துக்களாயினும், நண்பர்களிடமே பகிர்வோம். சுந்தரரும் அவ்வாறே வாழ்ந்தார். தோழமை பூண்டு, இறையைப் பித்தனே என்று திட்டினார். இறைவன் என்னைத் திட்டிய வார்த்தையால் பாமாலை பாடுக என்றதும்,

''பித்தா பிறை சூடி பெரு
மானேயரு ளாளா
எத்தால் மறவாதே நினைக்
கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி
அல்லேன் எனலாமே''

(திருவெண்ணெய் நல்லூர் ப.1)

பித்தனே பிறையைக் கண்ணியாகச் சூடியவனே பெருமை உடையவனே பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் வாழும் இறைவனை நெஞ்சத்துள் எங்கும் நிக்கமற நிறைத்து மனதார புகழ்ந்து தனது பக்திப் பயணத்தினைத் தொடங்கினார்.

இளமையில் இறைநாட்டம்

இளமையில் மனத்தில் தோன்றும் எண்ணங்களால் பல்வேறு தவறுகள் இழைக்கின்றோம். அதனால் இறையடியை அடைய முடியாமல் பல்வேறு இடர்பாடுகளுக்கு ஆளாகின்றோம். உலக இயல்புகளிலிருந்து நிலை தடுமாறித் தவறிழைக்கின்றோம். இதனைச் சுந்தரர்,

''நாயேன் பல நாளும் நினைப்
பின்றி மனத் துன்னைப்
பேயாடத் திரிந் தெய்த்தேன் பெற
லாகா அருள் பெற்றேன்''

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ஏழாம் திருமுறைப் பாடல்-2)

நாய்போலும் கீழ்மையுடையேனாடிய யான் எனது இளமைப் பருவத்தில் மனத்தால் நினைக்காமல் பேய் போல் அலைந்து இளைத்தேன். ஆயினும் இப்போது பெறுதற்கரிய உனது திருவருளைப் பெற்றேன் முன்பே நான் உனக்கு அடியவன் என தன் இளமையை வீணாகக் கழித்ததனை எண்ணி மனம் வருந்துகிறார். இளமையில் இறையைப் போற்றுவதும் பேணுவதும் உலக மாந்தர்களுக்கு கடினமே, ஆனால் சுந்தரர் மனமுவந்து எதிர் கொள்கிறார்.

இறையே துணையாதல்

"அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையும் என்று இருந்தேன்
என்னையும் ஒருவன் உளன் என்று கருதி
இறை இறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை அடிகள்
பின்னையே அடியார்க்கு அருள் செய்வதாகில்
இவரலாது இல்லையோ பிரனார்"
(திருப்பாச்சிலாச்சிரமம்-ப.2)

இறைவா பெற்ற தாயையும், தந்தையையும் துணையென்று நினைக்கவில்லை. என்னை ஆண்ட தலைவனே இறைவன் தான். எந்நாளும் காப்பவனும் அவரே எனக் கூறுகிறார். இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் காக்க வல்லவன். இம்மையிலும் நன்மையும் செய்யும் இறைவனையே நம்பியாரூரார் நம்பி வாழ்ந்தார். கீழான எண்ணங்களால் கட்டுண்டிருந்த என்னையும், உன் அடியவனாக ஏற்ற பெருமை பெரிது என வியக்கிறார்.

எத்தெய்வத்தையும் தொழாத தொண்டன்

"நானேல் உன்னடியே
நினைந்தேன் நினைதலுமே
ஊனேர் இவ்வுடலம்
புகுந்தாய் என் ஒண்சுடரே
தேனே இன்னமுதே
திருமேற் றளியுறையும்

கோனே உன்னை யல்லால்
குளிர்ந்தேத்த மாட்டேனே''
(திருக்கச்சி மேற்றளி ப.6)

உலகிற்கும் எனக்கும் விளக்குப் போன்றவனே தேனினும் இனியவனே. இனிய அமுதம் போன்றவனே. தலைவனே நான் உன் திருவடியை அடைய நினைத்ததும், உடலில் புகுந்து விட்டாய், பேரருளாளன் ஆகிய உன்னையல்லாது பிறரை அடியேன் புகழமாட்டேன் என்கிறார் சுந்தரர். தன் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றினையும் இறைக்கு சமர்ப்பணமாக்கி வாழ்ந்த தொண்டன் இயற்கையாகவும், உலகில் உள் அனைத்துப் பொருள்களிலும் மேலான நிறைவை சிவனிடம் பெற்றவர். சிவனடியைத் தவிர வேறொன்றையும் அறியாதவர் சுந்தரர். உடல் புகுந்து ஆட்டுவித்த நீரே எனக்கு துணை என்ற கொள்கையில் நின்ற பெருமை சுந்தரரைச் சாரும்.

நறுமணமுள்ள கொன்றை மாலையை அணிந்தவன் பால் தீராத பற்றுள்ளம் கொண்டவர். சிவனையல்லால், வேறு தெய்வத்தைச் சிந்தையிலும் நினைத்தவராய் இருந்தார். பிறரை உயர்ந்தவராக, மதித்துப் புகழவும் மாட்டேன் என்று அடிக்கடி தம் பாடல்களின் வழி அறிவுறுத்தியே செல்கிறார். வேதத்தின் பொருளாக இருப்பவனை, நீலகண்டனை, நீயின்றி துணை வேறு இல்லை என மனம் கசிந்தார்.

சுந்தரரின் அடிமைத் தன்மை

''பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆருரில் அம்மானுக்கு ஆளே''
(திருத்தொண்டத் தொகை ப.10)

இறைவனாகிய சிவனுக்குத் தொண்டு புரியும் அந்தணர்களுக்கெல்லாம் நான் அடிமை என்றும் பொய்யடிமை இல்லாத புலவர்களுக்கும் தான் அடிமை எனக் கூறுகிறார். மேலும் சிவபக்தர்களாய்ச் சிவபெருமானை வழிபடுவோர் எல்லார்க்கும் நான் அடியேன். சித்ததைச் சிவன்பால் வைத்தவர்களுக்கும், திருவாரூர்பட பிறந்த அனைவர்க்கும் முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கும், திருநீறு பூசிய முனிவர்களுக்கும், அடியவர்களுக்கு நான் அடிமை என தம் பாடலில் ஆணித்தரமாகப் பதிவு செய்கிறார். சிவனை மனத்தில் கொண்டு, பல அற்புதங்கள் செய்தார். பரவையார், சங்கிலியாரை மணந்ததும் சிவனை எண்ணி, நற்குணங்களோடு வாழ்ந்தும், சங்கிலியாருக்குக் கொடுத்த சபதம் மீறி கண்ணை இழந்ததும் தன் அறியாமைக்காகச் சிவனிடம் பிழைகள் பொறுக்க வேண்டிய போதும் தன் இறைபற்றில் இருந்து தளராது இருந்தார்.

இறைவனையே தன் காதலுக்குத் தூதாக அனுப்பிய பெருமை சுந்தரரைச் சாரும். வேறு சமயக் குரவர்களுக்கெல்லாம் இல்லாத பெருமை சுந்தரருக்குண்டு. இறைவனைத் திட்டுவதிலும், அணைப்பதிலும், தோழனாய்க் கட்டளையிடும் போதும், தந்தையாய் வாழ்ந்தவர், சுந்தரர் பக்தி நெறியையே, கைக்கோலாகக் கொண்டு வாழ்ந்த உறுதியைக் கண்டு வியக்காதவர் இல்லை எனலாம். முதலையுண்ட பாலகனை வளர்ச்சியடைந்த பிள்ளையாக மீட்டதும், பல்வேறு புண்ணியச் செயல்களைச் செய்ததும், பக்தி என்ற கருவியால் தான் என்பது புலப்படுத்துகிறது. சுந்தரர் சிவனிடம் தமக்கு வேண்டியவற்றை உரிமையோடு கேட்டு பெற்றார். இதே உத்வேகத்தோடு பல்வேறு தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடி மக்களுக்கு நல் உதாரணமாய் வாழ்ந்த சைவர்.

முடிவுரை

தனது பாடல்களால் அரசர்க்கும் மக்கட்கும் அறிவுரை பகர்ந்துள்ளார். மக்களிடையே இறை உணர்வை விதைத்துள்ளார். மேலும்,

"செத்தபோதில் ஆரும் இல்லை சிந்தையில்
வைம்மின்கள்
வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
தோற்றம் உண்டேன் மரணம் உண்டு"

போன்ற நல்லறிவு நல்கும் பொன்னுரைகளைச் சுந்தரரின் பாடல்களில் காணலாம். இறைவனும் தோழமை கொள்ளக்கூடிய ஆன்ற புலமை சான்றவர் சுந்தரர், உலகில் உள்ள அனைத்துப் பொருளிலும், இயக்கத்திலும் இறையைக் கண்டு உணர்ந்தவர். இறையோடு இரண்டறக் கலந்த தவநெறியாளர், இருவரை மணம் முடித்த போதும், இறைகொள்கையை விடாது உறுதியுடன் வாழ்ந்து, வேண்டிய யாவற்றையும் எளிதில் பெற்றார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

இறைவனின் மெய்ப்புகழை உணர்ந்தவர்க்கு அறியாமையால் வரும் நல்வினை தீவினை வந்து சேராது என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க சுந்தரர், இருவினைகளை வென்று பக்திநெறியில் தழைத்தோங்கினார். நாமும் சுந்தரரைப் போல பக்தியிலும், இறை கொள்கையிலும் ஆழ்ந்த பிடிப்புள்ளவராக வாழ்ந்து வாழும் மனிதர்களுக்கும், எதிர்நோக்கும் தலைமுறையினருக்கும் எடுத்துக்காட்டாய் வாழ்வோம். பக்திநெறி ஓங்க இவ்வையகம், தீமை விட்டகழும் நல்ல எண்ணங்களால் நல்ல செயல்களால் இவ்வுலகினை நிறைவு செய்வோம்.

69. மாணிக்கவாசகரின் இறைபக்தி

முனைவர் அ.சான்சிமேரி
உதவிப்பேராசிரியர்
செயராசு அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம்

முன்னுரை

பன்னிரு திருமுறைகளுள் ஒன்றானதும், சைவ சமயத்தின் உயிர்நாடி இலக்கியங்களுள் ஒன்றானதுமான திருவாசகம் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட நூலாகும். மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக இருந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியார் ஆவார். தன்னுடைய ஆன்ம வெளிப்பாடாகவும், ஆன்ம தேடலாகவும் அவர் உணர்ச்சி ததும்ப திருவாசகத்தை எழுதியுள்ளார்.

"சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே"

திருப்பூவல்லி

வல்லி என்பது கொடி, கொடியிலிருந்து பூப்பறிக்கும் போது மகளிர் பாடும் பாட்டு ஒரு காலத்தில் சிறுமியர்கள் கூடி ஒரு குடம் நீர்வார்த்து ஒரு பூப்பூத்தது. இரண்டு குடம் நீர் வார்த்து இரண்டு பூப்பூத்தது போன்று பாடி ஆடிய மரபும் இருந்தமை அறியத்தக்கது. இத்தலைப்பில் சிவபெருமான் புகழைப் பாடியவாறு பூக்களைக் கொய்தல் போன்று சாற்றப்படுதல் கூறப்பட்டுள்ளது. பூ என்பதற்குப் பூவுலகம் எனவும் அதன் மாயையிலிருந்து விடுபட்டு நீங்கும் தன்மையில் இப்பாடல்களின் கருத்து அமைந்துள்ளது.

அம்பலத்தே ஆடுகின்ற புணையாளன்

பெண்ணே சிவபெருமான் திருப்பாதம் என் தலைமீது

வைத்து அருள் புரிந்த நிலையில் எனக்குத் துணை போலும் சூழ்ந்திருந்த சுற்றங்கள் யாவற்றையும் துறந்து நீங்கினேன். மடைகளால் தடுக்கப்படும் நீர்வளம் விளங்கும் நிலையில் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் சிவபெருமான் பிறவியாகிய கடலைக் கடக்கும் அருமை விளங்கும் புனை போன்று விளங்குபவர். அவருடைய புகழைப்பாடிக் கொடிகளிலிருந்து பூக்கொய்வோமாக என்பதை,

''இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையார் சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
ஆணையார் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீரிபாடிச் புவல்லி கொய்யாமோ''

என்ற பாடல் அடி உணர்த்துகின்றது. மேலும் இத்திருப்பூவல்லிப் பாடல்கள் திருத்தில்லையில் அருளிச் செய்ததாக வரையறை செய்யப்பட்டுள்ளது. இத்தன்மையில் நகரைச் சுற்றி விளங்கிய நந்தவனப் பகுதியின் சிறப்பும் கருதத்தக்கது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையை நோக்கிச் செல்லும் போது அவர் கண்டுற்ற நந்தவனச் சிறப்பினைச் சேக்கிழார் பெருமான் தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 93-இல்,

''நாக சூதவகுளம் சரளம் சூழ்
நாளிகேரம் இல வங்கம் நரந்தம்
பூகம் ஞாளழ் குளிர் வா
பொதுளும் வஞ்சிபல எங்கும் நெருங்கி
மேகசாலம் மலி சோலைகள் ஆகி
மீது கோகிலம் மிடைந்து மிழற்றப்
போக பூமி யினும் மிக்கு விளங்கும்
பூம்புறம் பணை கடந்து புகுந்தார்''

என்ற பாடல் அருளிச் செய்த நந்தவனச் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

என்னை ஆட்கொண்ட பாண்டிப்பிரான்

பெண்களைச் சிவபெருமான் எனக்குத் தந்தை, தாய், சுற்றம் மற்றும் உள்ள யாவும் ஆகி என்னைச் சார்ந்த கட்டுகளை

அறுத்து ஆட்கொண்டவர். அவர் பாண்டிய நாட்டின் தலைவர். அவர் அழகிய இடைமருதில் ஆனந்தம் நல்கும் தேனாக விளங்குபவர். அவர் தோற்றம் பெறாது பரவிவிளங்கும் தன்மையுடையவர் அவருக்கு நாம் பூக்களைக் கொய்வோமாக.

எந்தையெந்தாய் சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்
அந்த இடை மருதில் ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாமட பூவல்லி கொய்யாமோ

மாணிக்கவாசகருக்குத் திருக்காட்சி நல்கிய தலத்தைக் குறிப்பாக உணர்த்திய செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

மாயப்பிறப்பு அறுத்து ஆன்டான்

நாயினும் கீழான தன்னையும் ஒருபொருளாகக் கொண்டு தாயினும் மேலாகக் கருணை செய்து ஆட்கொண்டவர் எனது கொடிய வினையை நீக்கி அதனைத் தோல்வியடைச் செய்தவர் எம்பெருமான். மாயத் தன்மையுடைய தளையை நீக்கி ஆட்கொண்டவர் என்பதை,

''நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத்து ஆண்டான் என் வல் வினையின்
வாயில் பொடி யட்டிப் பூவல்லி கொய்யாமோ''

என்று புகழ்ந்துப் பாடியுள்ளார்.

அம்பலத்தே ஆடுகின்ற குணம்

பெண்களே நாம் எல்லோரும் வணங்குவதற்குத் தலையை வைத்தவர் சிவபெருமான். அவர் தமது திருவடியை வாழ்த்திப் பாடுவதற்காக எமக்கு வாயை வைத்தார். கூடியிலிருந்து வழிபடுவதற்குச் சிறப்பின் மிக்க அடியவர் கூட்டத்தை உண்டாக்கினார். அத்தகைய சிவபெருமான் சிவகாமி அன்னையுடன் விளங்கித் தில்லை அம்பலத்தில்நடனம் புரிகின்றவர். அவருடைய அருள்தன்மையை மிக அதிகமாக நாம் பாடி பூக்களை பறிப்போம் என்பதை,

"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து

இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூரப்பாடி நாம் பூவல்லி கொய்யாமோ"

என்ற பாடல் அடியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் மனித உடம்பின் உறுப்புகளில் தலை என்பது இறைவனை வணங்குவதற்கும் வாய் என்பது வாழ்த்துவதற்கும் படைத்தமையமாகக் கூறப்பட்டதைத் திருநாவுக்கரசர் தேவாரம் 4 ஆம் திருமுறை திருஅங்கமாலையில்,

"தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனை
தலையே நீவணங்காய்"

எனவும் தாம் அருளியச் செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

திருநடனம் செய்யும் பேரானந்தம்

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம் பொலிக்கே
ஆர்ாத ஆசையை தாய் அடியேன் அகம்மகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம் செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ

மேற்கூறப்பட்டுள்ள திருப்பாட்டில் தேரோடும் பெருவீதிகளையுடைய திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநடனம் செய்யும் பேரானந்தத்தைப் பாடிப் பூக்கொய்வோமாக என எடுத்துரைக்கின்றார்.

முக்தி முழு முதல்

பெண்களே யானையின் தோலை உரித்து அதனைப் போர்த்தியருள் புரிந்தவர் சிவபெருமான். அவர் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ளார். பித்தர் கோலம் காட்டிய சிவபெருமான் இவ்வுலகில் குழந்தை வடிவம் காட்டியும் முத்தி தரும் முழு முதலாகவும் உத்தரகோசமங்கையில்

விளங்குபவர். அவர் சித்தத்தில் புகுந்த அருட்சிறப்பினைப் பாடிப் பூக்கொய்வோமா என்று கூறும் நிகழ்வை,

"அத்தி உரித்து அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்தவடிவு கொண்டு இவ்வுலகிற் பிள்ளையும் ஆம்
முத்தி மழுமுதல் உத்தரகோச மங்கை வள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ"

என்று பாடல் அடியின் மூலம் கூறியுள்ளார்.

குற்றேவல் கொண்டருளும் பூவார் கழல்

சிவபெருமான் குதிரையின் மீது ஏறிக் குதிரைச் சேவகனாகி மதுரை நகரை அடைந்து அழகியதொரு கோலத்தைக் காட்டியவர். அவர் திருப்பெருந்துறையில் விளங்கி எமக்குத் தலைவராகி குற்றேவல் புரியமாறு கொண்டவர்.

"கோவாகி வந்து எம்மைக் குறறேவல் கொண்டருளும்
பூவார் கழல் பரவிப் பூவல்லிப கொய்யாமோ"

என்று இறைவனைப் பாடிப்புகழ்கின்றார்.

முடிவுரை

சிவபெருமான் புகழைப் பாடியவாறு பூக்களைக் கொய்தலைப் பக்தி உணர்வோடு இயைந்த செய்தியை திருப்பூவல்லி என்ற தொகுப்பில் வெளிக்காட்டியுள்ளார். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என மேலோர்கள் சாற்றும் வண்ணம் திருவாசகம் சிறந்த பக்தி நூலாக விளங்கி வருகிறது. எளிமையும் இனிமையும் உடைய அருள் தோய்ந்த பாடல்கள் உள்ளத்தை உருகச் செய்வதோடு மக்களை புண்ணிய வழியில் நடத்திச் செல்கிறது.

70. அச்சு ஊடகத்தில் சைவத் தமிழ் வளர்ச்சி



சு.பிரியதர்சினி
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்

முன்னுரை

பல்லவர் காலத்தில் இறையருளை நாடிச் சென்றால் மட்டுமே மனநிம்மதி பெற முடியும் என்ற நிலையில் இருந்த மக்கள் இருபிரிவாகப் பிரிந்து சிவபெருமானையும், திருமாலையும் வழிபட்டனர். அவர்களுள் சிவனை வழிபடுவோர் சைவர்கள். திருமாலை வழிபடுவோர் வைணவர்கள் எனப்பட்டனர்.

சமயம்

சமயம் என்பதற்கு நெறி, கொள்கை எனப் பொருள் கொள்ளப்படுகின்றன. ஒருவர் அன்றாட வாழ்க்கையை ஒழுங்குபெற நடத்துவதற்குத் தேவையான நன்னெறி அல்லது நற்கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்களுடைய வாழ்க்கை முறையாக நடைபெறாது. இந்த நன்னெறிகளின் தொகுப்பே சமயம் எனப்படுகிறது.

சைவம்

சைவம் தெய்வீக வாழ்க்கையை ஒரு கோணத்திலிருந்து சிறப்பாக விளக்குவது இந்தியாவில் குமரி முனையிலிருந்து இமயம் வரை வாழும் வல மக்களின் வாழ்க்கை நெறியாக உள்ளது. தமிழகத்தில் மட்டுமல்லாது இலங்கையிலும் மலையகத்திலும் வாழும் தமிழர்களில் பெரும்பான்மையினர் சைவத்தையே தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள் திருமாலடியார்களை ஆழ்வார்கள் என்னும் சிவனடியார்களை நாயன்மார்கள் என்றும் கூறுவர். இவர்களுள் ஆழ்வார்கள் 12.

நாயன்மார்கள் 63 பேர் ஆவர்.

தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய பெரியோர்கள், பாடியருளியனவே திருமுறைகளும், சித்தாந்த சாத்திரங்களும் அன்று முதல் இன்று வரை சிவபெருமானை வழிபடும் பக்தர்கள் ஏராளம். சிவாலயங்களும் ஏராளம். தினத்தந்தி செய்தித்தாளுடன் வாரம் ஒரு முறை வெளியாகும் ஆன்மிகம் என்ற இதழ் சைவத்தமிழ் வளர்க்கும் சிறந்த அரசு ஊடகமாகும். சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் பன்னிரு திருமுறைகளும் 63 நாயன்மார்கள் வரலாறும், அதிசயங்களும் சிவாலய சிறப்புகளும் ஒவ்வொரு வாரமும் அச்சிடப்படுவதால் சைவசமயத்தைப் பெரிதும் பேணப்படுவது மட்டுமல்லாமல், தமிழ்மொழியை வளர்க்கவும் இது உதவுகிறது. கடந்த பிப்ரவரி மாதம் செவ்வாய்க்கிழமைகளில் வெளியான ஆன்மிக இதழ்களில் வெளிவந்துள்ள சைவநெறிக் கோட்பாடுகளும், சிவத்தலமான பேரூர் புராணமும் மற்றும் பல சைவ சமயம் சம்பந்தமான கட்டுரைகளையும் தொகுத்து சுருக்கி வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேண்டியதை வழங்கும் வைக்கத்தப்பர்

சிவபெருமானின் பக்தனான கரன் என்ற அசுரன் முக்தி வேண்டி கடுந்தவம் புரிந்தவன். அவனது தவத்தை விரும்பிய சிவபெருமான் அவனிடம் 3 சிவலிங்கங்களைக் கொடுத்து அவற்றை 3 இடங்களில் நிறுவினால் மட்டுமே முக்தி கிடைக்கும் என்றார். கரனும் அதே போல 3 சிவலிங்கங்களுள் ஒன்றை வலக்கையிலும், மற்றொன்றை இடக்கையிலும், மூன்றாவதை வாயிலும் எடுத்துச் சென்றான். கரனைப் பின்தொடர்ந்து புலிகால் முனிவரான வியாக்ரபாதரும் சென்றார். நெடுந்தூரம் சென்று களைப்படைந்த கரன் வலது கையிலுள்ள லிங்கத்தைக் கீழே வைத்தான். பின் அதை எடுக்க முயன்ற போது அவனால் எடுக்க முடியவில்லை. பின்னர் வியாக்ரபாதரை அழைத்து அந்த லிங்கத்துக்குப் பூசை செய்து வழிபடச் சொன்னார். அவரும் அதனை ஏற்று அங்கேயே தங்கினார் மற்ற இரண்டு லிங்கங்களையும் மேற்கு நோக்கியும், கடிந்துருத்தி என்ற இடத்தில் கிழக்கு நோக்கியும் நிறுவினான். பிற்காலத்தில்

பரசுராமர், வான்வழியில் வடதிசை நோக்கி பயணம் செய்யும்போது லிங்கத்தின் மேல் பகுதி நாவல்பழ நிறத்தில் நீரில் பாதியளவு மூழ்கியிருப்பதைக் கண்டு கீழே இறங்கி வந்து அந்த லிங்கத்துக்கு ஒரு பீடம் அமைத்து கருவறையுள் இருக்கும்படி ஒரு கோயில் அமைத்தார். கருவறையுள் மூலவரான சிவபெருமான் மகாதேவர் என்றழைக்கப்பட்டார். வியாக்ரபாதர் வழிபட்டதால் வியாக்ரபுரீசுவரர் என்றும் இத்தல அறைவனை அழைப்பதுண்டு. இருப்பினும் அனைவருக்கும் பரவலாக அறியப்பட்ட பெயர் வைக்கத்தப்பன் என்பதாகும்.

கார்த்திகை மாதம் தேய்பிறை அசுடமி நாளில் வைக்கதசுடமி என்ற விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தலம் கேரள மாநிலம் கோட்டயம் நகரிலிருந்து வடக்கே 40 கி.மீ தொலைவிலும், எர்ணாகுளம் நகரிலிருந்து 33 கி.மீ தொலைவிலும் வைக்கம் மகாதேவர் கோயில் அமைந்திருக்கிறது.

திருமணஞ்சேரியின் அற்புதம்

வைக்கத்தப்பர் பற்றிய செய்தியை அடுத்து தஞ்சாவூர் அருகேயுள்ள திருமணஞ்சேரியின் அற்புதத்தைக் காணலாம். சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலையில் அவருக்கு நிழல் தருவது உத்தால மரமாகும். இந்த மரத்தைப் பூலோகத்தில் தென்தமிழ் நாட்டின் ஒரு பகுதியில் தரிசிக்க முடிக்கும். அந்த இடம் நாகபட்டினம் மாவட்டம் குத்தாலத்திலுள்ள உத்தவேதீசுவரர் ஆலயம் ஆகும். சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் நடந்த இடம் தஞ்சாவூர் அருகேயுள்ள திருமணஞ்சேரி திருத்தலம். அந்தத் திருமணத்திற்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட இடமாக குத்தாலம் திருத்தலம் சொல்லப்படுகிறது. அந்த நிச்சயதார்த்த நிகழ்வுக்கு உத்தால மரம் வந்ததாக தலபுராணம் தெரிவிக்கிறது. இந்த ஆலயத்தில் உள்ள சனீசுவர பகவான் கல்யாண சனீசுவரராக வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். இத்தல இறைவனை வழிபட்டால் வெகுகாலங்களாகத் திருமணம் ஆகாதவர்க்கு விரைவில் திருமணம் நடந்துவிடும். மேலும் துன்பங்கள் எல்லாம் தீரும் என்பது ஐதீகம்.

கொங்கு நாட்டில் சைவ சமயம்

தினத்தந்தி நாளிதழில் ஆன்மிகம் இதழ் மட்டுமல்லாது வாரம் ஒருமுறை புதையல் என்ற ஒரு பகுதி வெளியாகிறது. அதில் வெளிவந்த கொங்குநாட்டில் சைவ சமயம் என்ற தொடரில் கொங்குநாட்டில் எந்தெந்த இடங்களில் சைவ சமயம் பரவியிருந்தது என்றும் மூவர் முதலிகள் பற்றிய தெளிவான, அழகான விளக்கத்தையும் அளித்துள்ளார் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் முனைவர் இரா.செகதீசன். சங்க காலத்தில் கொங்குநாட்டில் சைவசமயம் இருந்ததற்கான தொல்லியல் சான்றுகளோ, இலக்கிய சான்றுகளோ இல்லை என்கினறார். பிற்காலத்தில் சோழர்கள் ஆட்சகாலமான கி.பி. 4-கி.பி. 10 நூற்றாண்டு வரை அவர்கள் சைவ சமய பற்றாளர்களாக இருந்தனரென்றும் அதுவே பக்திக் காலமென்றும் குறிப்பிடுகிறார்.

மூவர் முதலிகள் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் கொங்குநாட்டிலும் தலப்பயணம் செய்துள்ளனர்.அதன்படி கொங்கேழ் தலங்கள் எனப் போற்றப்படும் 7 தலங்கள் பாடல் பெற்ற தலங்களாக விளங்குகின்றன. இவைத் தவிர வைப்புத்தலங்களாக 24 தலங்களைக் குறிப்பிடுகின்றனர். இந்த மூவர் முதலிகளில் சுந்தரர் மட்டும் 3 முறை கொங்கு நாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளார் என்ற செய்தி இங்கே தெரியவருகிறது. இவர் 4 தலங்கள் பற்றியும் அப்பர் கொடுமுடி தலம் பற்றியும், ஞானசம்பந்தர் திருநணா, திருச்செங்கோடு, கொடுமுடி, கரூர் ஆகிய தலங்கள் பற்றியும் பதிகங்கள் பாடியுள்ளார். தமிழகத்தில் பக்தி இயக்க காலத்தில் சைவ சமயம் எழுச்சி பெற்று கோயில்கள் உருவாகின. இது கொஙகுநாட்டில் ஓரளவே வெற்றி பெற்றது. இதில் பழங்குடியினர் வழிபாட்டு இடங்களும் நாட்டுப்புற மக்களிடையே இருந்த பழங்கதைகளும் தலங்களுடன் இணைந்து பாடப்பட்டன. இது பழங்குடியினரைச் சைவசமயத்தை இணைக்கும் போக்காகும்.

திருமுருகன் பூண்டி (திருமுருகநாதர்) திருச்செங்கோடு முதலிய தலங்கள் பழங்குடியினரின் முருகன் வழிபாட்டிடங்கள்.

இவை இக்காலக்கட்டத்தில் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டன என்ற அரிய கருத்தை முன்வைக்கிறார் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்.

முடிவுரை

ஆன்மிகம் இதழ் இத்தகு செய்தியை வெளிக்கொணருவதன் மூலம் சைவக் கடவுளான சிவபெருமானின் பல்வேறு தலங்களில் பல்வேறு அவதாரங்களாக அருள் தருகிறார் என்பதை உணரமுடிகிறது. மேலும் அந்த தலங்களுக்குச் சென்றால் அடையக்கூடிய பலன்களையும் அவ்விதழ் மட்டுமின்றி பல்வேறு அச்சு ஊடகங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதனால் செய்தித்தாள் வாசித்து அறிவு பெறும் பாமர மக்களுக்கும் பக்தி இலக்கியம் பற்றிய அறிவும் பெற உதவுகிறது.

71. திருமந்திரம் கூறும் தில்லைக் கூத்தின் திருக்கூத்துத் தரிசனம்



தேவந்தி திருநந்தன்
விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப் பல்கலைக்கழகம்
இலங்கை

முன்னுரை

சைவத் திருநெறிப் பன்னிரு திருமுறை வரிசையில் பத்தாம் திருமுறையாகத் திருமந்திரம் இடம்பெற்றுள்ளது. இந்நூலானது திருமந்தி மாலை சுந்தரனாகமம் தமிழ்மூவாயிரம் முதலிய பெயர்களால் வழங்கப்படுகின்ற சிறப்புமிக்கது. மூவாயிரம் பாடல்களைக் கொண்ட இந்நூல் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டு அவற்றின் ஊடே சிறந்த சித்தாந்தக் கருத்துக்கள் மற்றும் பண்பாட்டு விழுமியச் சிந்தனைகளும் விளக்கப்பட்டுள்ளது மந்திரம் ஒன்பது தந்திரங்களாக அமைந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் என்பதைத் தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம் சுந்தரன் ஆகமச்சொன் மொழிந்தானே என்பதால் அறியமுடிகின்றது. திருமந்திரம் தமிழில் உள்ள ஒப்பற்ற சாத்திர நூலாகவும் இலக்கியமாகவும் முக்திக்கு வழிகாட்டும் பெருஞானக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. எனவே தான் திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம் திருமந்திரமே சிவமாம் எனவும் பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தெப்பம் என்றெல்லாம் பலவாறாகப் போற்றப்படுகின்றது. இத்தகைய விவரங்களைத் திருமூலரும் பயன் கூறும் பகுதியில் மிக அழகாகப் பாடியுள்ளார்.

திருமந்திரம் கூறும் திருக்கூத்துத் தரிசனங்கள்

சிவாய என்பது தூல பஞ்சாக்கரம் என்றும் இவ்வைந்தெழுத்தை ஒளியோடு நினைந்து ஓதலே சூக்கும பஞ்சாக்கரம் என்றும் சிவாய சிவசிவ என்பது அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் திருமூலர் கூறுகிறார். இப்பஞ்சாக்கர

செபத்தால் அமைவது திருக்கூத்து. திருக்கூத்தாவது ஒளி அசைவு அவ்வொளியில் திளைத்திருத்தலே திருக்கூத்து தரிசனமாகும். சிவம் ஆன்மாக்களின் உய்தி பொருட்டுச் சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்தில்லைக்கூத்து, அற்புதக்கூத்து கூறிய ஐவகைக் கூத்தினை ஆடியருளுகிறான். சிவ நடனத்தால் தத்துவங்களெல்லாம் நீங்க நாதாந்தம் கிட்டும்.

அந்தவகையில் திருமந்திரத்திலே ஒன்பதாவது தந்திரமாக அமையப்பெற்றது திருக்கூத்துத் தரிசனமாகும். இறைவனின் திருக்கூத்தினை அகத்திலும் புறத்தலுமாகக் கண்டு அனுபவித்தர் திருமூலர் அவர் கண்டு அனுபவித்த திருக்கூத்தினை இறையன்பர்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்கள் தாம் அடைந்த இன்பத்தை அடைவார்கள் அதுமட்டுமன்றி வியமனதுடன் நன்நெறியையும் பின்பற்றுவார்கள் என்றும் நல்லெண்ணத்தில் இத்திருக்கூத்து தரிசனம் எழுதப்பட்டது அண்டம் பிண்டம் ஆகிய சராசரங்கள் அனைத்தும் சிவனது திருமேனி பார்க்கும் இடம் எல்லாம் அவன் ஆடுகின்ற சிதம்பரமே எங்கும் அவன் ஆடுகின்ற ஆட்டமே என்று சுருக்கமாகக் கூறும் இடத்து எங்கும் சிவம் விளங்குவதால் அவன் அருள் விளையாட்டாகிய நடனம் எல்லா இடமும் தோன்றுவதாகத் திருமூலர் காண்கிறார். இவ்வாறாக இத்திருக்கூத்துத் தரிசனமானது இறைவன் ஆடிய நடனத்தின் சிறப்புக்களையும் காட்சியையும் அடிப்படையாகக் கொண்டு சிவனாந்தக் கூத்து சுந்தரக் கூத்து பொற்பதி கூத்து பொற்றில்லைக்கூத்து அற்புதக்கூத்து என 5 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்கூத்து ஒளி அசைவு தரிசனமாவது அவ்வொளியில் திளைத்திருத்தல். இது பஞ்சாக்கர செபத்தால் அமைவது இவ்வொளி அசைவே எல்லா அசைவுக்கும் காரணமாகும்.

எங்கும் திருமேனி எங்குஞ் சிவசக்தி 2722 எங்கும் சிவன் அகண்ட வியாபகமாய் வியாபித்துள்ளமையால் எங்கெங்காம் தங்கும் சிவனருள் தன் விளையாட்டதே சிவன் யாவற்றிலும் பொருந்திச் சிருகுடியாகி ஐந்தொழிலைத் தனது சத்தியாலே செய்கிறான். இதனையே திருவாசக அடியில் காத்தும் படைத்தும் கரத்தும் விளையாடி என மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் இறைவன் நிகழ்த்தி நிற்கும் நனம் ஆனந்த தாண்டவம் அல்லது நாதாந்த நடனம் எனக் கூறப்படும். இந்நடன மூலம் உணர்த்தும் முடிந்த தத்துவ நிலையானது யோகசித்தர்கள் தமது அனுபவத்திற்கண்ட உண்மை என்பது, ''மாலாங்க னேயிங்கு யான் வந்த'' திருமந்திரம் 77 திருமூலர் திருவாக்கால் அறியப்படும். சிவபோக விளைவாம் திருக்கூத்தைக் கண்டு அனுபவித்த சித்தருள் ஒருவராகிய திருமூலர் நாயனார் தமது திருமந்திர நூலின் கண் இப்பேரின்பத்திருக்கூத்தின் இரகசியத்தைச் சாலச்சிறப்பித்துக் கூறியுள்ளார். அப்பெரியார் பரம்பொருளாகிய சிவம் ஆன்மாக்களின் பால் வைத்துள்ள கருணையே தமது உருவாகக் கொண்டு பராபரையின் திருமுன் ஆனந்தக் கூத்தை இயற்றுகின்றான். திருக்கூத்து தரிசனத்துள் முதலாவதாக அமையப்பெற்ற சிவனாந்தக் கூத்தானது உலகியல் அறிவும் விஞ்ஞான அறிவும் வேதாகம சாத்திரங்களைக் கற்று விளங்கிய பாச ஞானத்தையும் அவைகளை அறிவதற்கு உதவியாய் இருக்கின்ற பசு ஞானத்தையும் கடந்து ஞானானந்த நடனம் செய்கின்ற பரமசிவனின் ஆனந்தக்கூத்தானது விபரிக்கப்படுகிறது.

பாடல்கள், வாக்கியங்கள், இசைக்கருவிகள் என்பவற்றோடு ஆனந்தக் கூத்தாடும் போது அதைந் தரிசிக்கும் ஆன்மாக்களின் மனத்தில் ஒளியும் தெளிவும் உண்டாகின்றன. இவ்வாறு சிவனுடன் பராசக்தியும் இணைந்து ஞானாந்தத் தாண்டவம் செய்வர். இதனால் வேதங்கள் ஆகமங்கள் இணைந்து ஞானாந்தத் தாண்டவம் செய்வர். இதனால் வேதங்கள் ஆகமங்கள் இயங்குகின்றன. புவனங்களும் அவற்றின் கூட்டமாகிய ஆண்டங்களும் இயங்குகின்றன. இவ்வாறாகப் பூதங்கள் ஐந்திலும் பொறிகளிலும் புலன்களிலும் வேதங்களிலும் ஆகமங்களிலும் காலம் கலை முதலியவற்றிலும் ஊழியாகிய சங்காரத்திலும் கலந்து ஒன்றாக நின்று ஆடுகின்ற இறைவனின் நடனத்தைத் தேவர் சுரர் நரர் சித்தர் வித்யாதரன் பிரம்மா விட்ணு உருத்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும் தவசிகள் சப்த சாத்திரம் படிக்காதோர்

முதலானோரும் ஆடுகின்றனர். இவ்வண்ணம் ஞானவுலகையே நடிக்க வைக்கின்ற சிவனுடைய ஞானாநந்தகூத்தே சிவானந்த நடனமாகும். இது ஞானத்தால் பல நாள் தவமிருந்து அறிய வேண்டிய அனுபவ நடனம் இதனைக் கலை உணர்ச்சி மட்டுமே காண்போர் கண்டு அனுபவிக்க இயலாது இச்சிவனாந்தக் கூத்திலே சிவப்பரம் பொருளின் திருக்கூத்துத் தரிசனம் பற்றிக் கூறப்படும் விடயங்களை ஈண்டு நோக்குவோம். சிவப்பரம்பொருளில் நடனம் வெளிப்படுத்தும் ஆனந்தம் உணர்த்தப்படுகிறது. ஆனந்தம் என்பதற்கு எல்லையில்லாத பேரின்பம் தெவிட்டாத பெருமகிழ்ச்சி என்று பொருள் உண்டு சிவப்பரம் பொருளில் நடனம் வெளிப்படுத்தும் ஆனந்தம் உணர்த்தப்படுகிறது. சிவப்பரம் பொருள் நடனமாடுகின்ற ஆட்டம் ஆனந்தமயமானது அவன் ஆடும் நடனத்திற்கு ஏற்ப பாடப்படும் பாடல்களும், போற்றித்துதிகளும் கூட பரமானந்தமானவை இவற்றிற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகளும் வாத்தியங்களும் இன்ப ஆனந்தம் அளிப்பவை இவ்வாறு எல்லாம் இன்பமயமாக இருக்கும் போது அவனைச் சுற்றியுள்ள அசையும் அசையாப் பொருள்களும் எல்லாம் ஆனந்தம் பரமானந்தமே என அப்பாடல் உணர்த்தப்படுகின்றது. மொத்தத்தில் மானிடரின் இன்பநிலை ஆதாரமாகின்றது. அது மட்டுமன்றி சிவானந்தக் கூத்தானது மனிதருள் நேர்மையாக நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து வாழுகின்றவர்க்கு அளவிட முடியாத பேரின்பத்தை அள்ளி வழங்குகின்ற கூத்தாகும்.

சுந்தரக்கூத்துத் தரிசனத்தைக் கண்டு பயன் பெற்றவர்கள் தொகையில் சிறிதளவே கண்டு பயன்பெற்றவர்கள் தொகையில் சிறிதளவே இருப்பதால் அந்நிலையை உணரமுடியாத ஏனையவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத்தின் திருமேனியின் ஈசானாதி பஞ்சுமுகங்களோடு நின்று இறைவன் தனிப்பெறும் கூத்தாடுகின்றான். இக்கூத்தே பொற்பதிக்கூத்து என்றும் சிரசின் மேல் பொன்னொளியில் விளங்குவது பொற்பதிக்கூத்து என்றும் பொன்னம்பலமாகும். தெற்கு வடக்குக் கிழக்கு மேற்குச்சியில்

(2739)

எட்டு திசைகளிலும் 5 முகங்களையுடையவனான இறைவன் பொற்பதிக் கூத்தாடுகின்றான். இவனது பொற்பதிக்கூத்தின் திருவடியைப் போற்றியவர்கள் சிவானந்த நிலையை அடைந்தவர் சிவபெருமானது திருவடி இன்பத்தை எண்ணி இடையறாது சிந்தித்திருப்பவர் சிவனருள் பெற்ற சிலராக இருப்பர். இவர்களே பொன்னம் பலத்தில் ஆடும் திருநடனம் கண்டுகளிக்கும் பெரும்பேறு பெற்றவர் அடங்காத என்னை அடக்கி அடி வைத்து... 2741 என்ற பாடலை எடுத்து நோக்கில் அடங்காத மனத்தினை அடக்கும் வல்லமையுடையது புலனாகிறது. அதாவது மனித மனம் ஒரு கட்டுக்குள் அடங்காது. அவ்வாறான மனத்தை உடையவர்களை அடக்கியருள்வதற்கான இறைவன் தன் திருவடிகளை அவர்களின் தலைமேல் பதித்து பேரானந்தம் பெரும்பேறு அடையும் இடம் காட்டி ஆசிபெற்றவர்களின் நினைவில் நின்று படம் போல நடம் புரியும் வல்லமை மனிதர்களிடம் செலுத்தும் அபாரசக்தி இப்பொற்பதிக்கூத்திற்கு உண்டு. ஒவ்வொரு கூத்தும் ஒவ்வொரு வகையான தீர்வுகளை மானிடத்தில் நோக்கப்படும் அதன் தத்துவநிலையாகும்.

மண்டல உளியில் நடிக்கும் கூத்து

சிவானந்தக் கூத்து அளவில்லாத அறிவுப பேரொளியோடு நன்மைதரும் கூத்து ஆனிப்பொற்கூத்து பொன்னம்பலத்திலே நின்று உயிர்களைப் பேணி காக்கும் விருந்து. இப்பேற்பட்ட இறைவனுடைய திருக்கூத்தைக் கண்டவர்களது உள்ளத்தில் ஏற்படத்தக்க துள்ளும் இறையருள் கிட்டத்தான் தகுதியானவன் தானா? என சிந்திக்கும் (வெருவும்) உணர்ச்சி வசப்பட்டு விழுந்து புரண்டு மீண்டும் எழும் உடல் உருகி நிற்கும் தன் நினைப்பு இல்லாது தடுமாற்றம் உண்டாகும் எல்லாவற்றிற்கும் மேலாக தான் என்றும் பேரின்ப நிலையைப் பெறுவர் திருவம்பல நடனத்தைக் கண்டவர்க்கு உண்டாகும் மெய்ப்பாடுகளாகக் கூறியுள்ளார். இவர்களே ஞானிகளாக உருமாறுகின்ற நிலையினையும் காணமுடியும்.

திருக்கூத்து தரிசனத்திலே ஐந்தாவதாக அமையப்பெறும் கூத்து அற்புதக்கூத்து ஆகும். சிவன் தன் துணைவியாகிய பார்வதியுடன் ஒன்று சேர்ந்து நின்று ஆடிய திருநடனத்தைக் கூறுவதாக அமைவதால் இது இறைவனால் ஆடப்பட்ட கூத்துக்களில் அற்புதமானது எனும் நோக்கில் அற்புதக்கூத்து எனப்பெயர் பெற்றுள்ளது. சிற்றம்பலம் என்பது நெற்றிக்கு நேரே உள்ள உருவத்து இடைவெளி தான் அங்கே உற்றுப் பார்த்தால் சி என்னும் மந்திர ஒலிவீசத்தோன்றும் அது தான் கூத்தப்பெருமான் இருக்கும் இடம் ஆடுகின்ற அவனது உருவம். திருவைந்தெழுத்தாகிய நமசிவாய என்பதன் வடிவமே ஆகும். இவ்வண்ணம் சிவனது உருவையும் அவனது ஆட்டத்தையும் உணர்த்துவதே அற்புதக் கூத்து தரிசனம் ஆகும்.

முடிவுரை

இவ்வாறாக இப்பகுதியிலே சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்தில்லைக் கூத்து, அற்புதக் கூத்து ஆகிய இவ்வைந்து கூத்துக்களினூடாகவும் சிவனின் திருக்கூத்துத் தோற்றம் அதன் அழகு, பிரகாசம், அதன் அமைவிடம், அன்பர்களுக்கு அது ஏற்படுத்தவல்ல நன்மைகள் உலக இயக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. இறைவனின் ஆடல் திருக்கோலங்கள் போன்றவற்றைக் கொண்டு கொள்ளவும் முடிகிறது. இவ்வாறு உலகின் ஒவ்வொரு அணுவும் இறைவன் செயலினாலே இயங்குகின்றன என்ற உண்மையினை ஒவ்வொரு பாடல்கள் தோறும் எடுத்துணர்ச்சி அதற்கான தத்துவங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வுலகிலுள்ள ஆருயிர்கள் உயர்வடைய அருள் புரிந்தவனான சிவப்பரம்பொருளின் நடனமாடுகின்றார். அவர் ஆட அகில உலகங்கள் அனைத்தும் ஆகும். ஆன்மாக்களின் மனப்பக்குவத்தை அறிந்து அதற்கேற்ப ஆட்கொண்டு அருளத்தெரிந்த அவன் அடியவர்கள் மனத்துள்ளே அவர்களின் பரிபக்குவ நிலைக்கு ஏற்ப ஆடுவான். அன்பர்களின் வணங்குதலை விரும்பும் அப்பெருமான் ஆட பூதகணங்கள் பலவும் ஆடும். இப்படியாக முப்புரம் எரித்த பரம் பொருளின் திருநடனம் கண்டு எல்லா உயிரும் இன்புற்று இருக்கும்.

ஆதியாகிய சிவப்பரம் பொருள் நடனமாடினார் என்று சொல்பவர்கள் சிலர் அப்படிச் சொல்வார்கள். அறிவற்ற மூடர்கள், காரணம் ஆதியாகிய சிவம் எங்கே நடனமாடுகின்றார் என்று அறிந்து கொண்டால் அவன் அவரவர் உள்ளத்திலே தான் ஆடுகின்றான் என்பதும் அவன் உடலில் பாதியான அருட்சக்தியாக இருக்கின்றான் என்பதும் புரியவரும் இதனூடாகச் சிவனின் திருக்கூத்து தரிசனம் புறத்திலே அன்றி அகமாகிய அன்பர்கள் உள்ளத்திலே ஆடப்படுகிறது என்பதும் தெளிவாகிறது.

நாதத்தின் முடிவான நாதாந்தமும் அறம், பொருள், இன்பம், வீடு நான்கான ஞானமுடிவு வேதத்தின் முடிவும் மெஞ்ஞானமாகிய சிவானந்தமும் குறையற்ற நல்வழித் துணையாகிய சதாசிவானந்தத்தில் நாத வடிவமாக விளங்கும் சிவப்பரம் பொருள் நடனமாடுகின்றான். தோந்த சித்தாந்த விளக்கமாகச் சிவப்பரம் பொருளின் கூத்து விபரிக்கப்படுகிறது.

''தீத்திரள் சோதி திகழ ஒளி உள் ஒளி'' (2800) திருமந்திரம்

மேலும் இறைவனுடைய ஆடலில் ஆன்ம ஈடேற்றத்திற்கு மட்டுமல்லாது அழகியல் இன்பம் வெளிப்பட்டு நிற்பதையும் காணமுடிகிறது. இவ்வாறு இறைவனது திருக்கூத்து தரிசனச் சிறப்புக்களினூடாக மானிடர்கள் ஆன்மீக வழி நிற்க வேண்டிய தேவையினை வலியுறுத்தி நிற்பதனை அவதானிக்கமுடிகிறது.

72. சங்க இலக்கியப் பாடல்களில் சிவனின் சிறப்புகள்



முனைவர் **பூ.பூங்கோதை**
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
தமிழ் உயராய்வு மையம்
மதுரை

முன்னுரை

உலகில் தோன்றிய சமயங்களில் தொன்மையானது சைவசமயம் ஆகும். அதன் தொன்மை, சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் சமயம் சைவசமயமாகும். இச்சமயம் எந்தக் காலக்கட்டத்தில் தோன்றியது என்பது அரிதற்கரிதாய் உள்ளது. பழந்தமிழர்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் மூத்த இலக்கியங்களில் சிவன் பற்றிய குறிப்புகள் நிரம்ப உள்ளமை அறியமுடிகிறது. எனவே இக்கால மக்கள் சிவனைப் பற்றியும் சிவவழிபாடு பற்றியும் அறிந்திருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

சைவ இலக்கியத்தின் தோற்றம்

சைவம் தென்னிந்தியாவின் மிகப் பழைய வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வருகிறது என்று அறிஞர் சி.யு.போப் குறிப்பிடுகிறார். சைவ சமயம் மிகத் தொன்மையுடைய சமயம் என்று அறிஞர் சர் சான் மார்சல் கூறியுள்ளார். சிவபெருமான் மலைவாழ் கடவுள், யானைத்தோலையும், புலித்தோலையும் உடையவர் அவர் விலங்குகளுக்குத் தலைவர் என்றும் பொருள்பட பசுபதி என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார்.

சிவபெருமானின் நுதல் சிறப்புகள்

"பிறைநுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை
பதினென் கணனும் ஏத்தவும் படுமே
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல

பால்வுரைபிறை பொலிந்த சென்னி
மேவரும் பிறைநுதல்''

என்றும் சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாகச் சிவபெருமானின் சிறப்பு வண்ணமாகவும், கணங்களாகவும், பிறையாகவும் விளங்கினான் என்பதை அறியலாம்.

சிவனின் முக்கண் சிறப்புக்கள்

சிவபெருமானின் இமையாக முக்கண்ணை உடையவன் என்று முன்னோர்கள் சிவனைச் சிறப்பித்தனர்.

''முக்கட் செல்வன்
நூதலது இமையா நாட்டம்
பைங்கண் பார்ப்பான்
முக்கண்ணான்
இமையா முக்கண்''

என்று விளக்குவதிலிருந்து சிவபெருமானுக்கு முக்கண் இருந்ததைச் சங்ககால மக்கள் அறிந்திருந்தனர் என்று உணரலாம். இவ்வாறெல்லாம் சிவபெருமான் செய்திகள் பாடப்பெறுவன் கொண்டு சைவ இலக்கியங்கள் அக்காலத்தில் இருந்திருக்கலாம் என எண்ண இடமுள்ளது.

சிவனின் சடை

சிவபெருமானின் சடை நீண்டு நெருப்பு போல ஒளிவீசும் என்பதை,

''எரியகைந்தன்ன அவிர்ந்து விளக்கு புரிசடை
எரிமருளவிர் சடைமிக்கொளிர் தாழ்சடை''

என்னும் சங்க இலக்கியங்கள் சிறப்பித்தால் சிவனின் சடைமுடி சிறப்பு சங்ககாலத்தில் விளங்கிய சிறப்புகளை நாம் அறியலாம்.

உமையொருபாகமாகக் கொண்டான் சிவன்

''கறைமிடறணியலர் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே

பெண்ணுருவொருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்''

என்றும் சங்கப் பாடல்களின் வாயிலாகச் சிவபெருமான் உமையை இடப்பக்கத்தில் கொண்டவன் என்ற செய்தி கூறப்படுகின்றன.

''நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிறேகீழ்
மூவகை யுலகும் முகிழ்ந்தன முறையே''

என்னும் பாடல்களின் வாயிலாகச் சிவபெருமானைச் சங்ககால மக்கள் போற்றிய தன்மையையும் நாம் அறியலாம்.

சிவபெருமானின் அணிகலன் சிறப்புக்கள்

சிவபெருமான் கங்கை அணிந்தவன் என்பதனையும்,

''தேனுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமருந்து
இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்''

போன்ற அடிகளின் வாயிலாகச் சிவபெருமான் தன் நிலையில் கங்கையை அணிந்தவன் என்றும் அறியப்படுகிறது.

''பிறைநுதல் விளங்கு ஒருவன்
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
எரிதிகழ் கணிச்சியோன் சூடியபிறை
கோடுவாய் கூடாப்பிரை''

என்றும் சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாகச் சிவபெருமான் பிறை அணிந்தவன் என்ற செய்தி உணரப்படுகிறது.

முடிவுரை

வழிபாடு என்பது தமிழர்களிடம் நெடுங்காலமாக ஏற்பட்ட பழக்கமாகும். இவ்வழிப்பாட்டின் வாயிலாகத் தான் சிவனைப் பற்றிய சிறப்புக் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன என்பதை நாம் அறியக்கூடிய செய்திகளாகவே இக்கட்டுரை

விளக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானின் சிறப்புக்களையும், புராணங்களையும் கூறும் கதைகளை உள்ளடக்கிய கருத்துக்களையும், சிவவழிபாட்டின் அடிப்படையில் சைவ சமயமும்,, சைவ இலக்கியங்களும் தமிழர்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்து வந்ததை அறியமுடிகிறது. சிவனாலயங்களை மன்னர்கள் முதல் மக்கள் வரை வழிபட்டு வந்தமையைப் சங்க இலக்கிய பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

73. திருமூலரின் மானுட வாழ்வின் திருமந்திரம்



புலவர் ப.கனகரத்தினம்
த.ஆ. பணி நிறைவு
தலைமை ஆசிரியர்
மனனார்குடி

முன்னுரை

சிந்தையாலும், நற்செந்தமிழ் மொழியாலும் இறைவனை நாளும் எண்ணி எண்ணி ஊனுருக, உள்ளம் கசிந்துருக பாடிய பாடல்களை அள்ளித்தந்தது நமது பக்தி இலக்கியங்களாகும். பக்தி இலக்கிய வரலாற்றில் எண்ணற்ற ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், அருளாளர்களும் தோன்றிய புண்ணிய பூமி இது. பக்தி இலக்கியத்திற்கு என தமிழ் மொழிக்குத் தனியிடம் உண்டு. தனிநாயக அடிகளார் அவர்கள்,

''ஆங்கிலத்தை வாணிகத்தின் மொழி என்றும்
லத்தின் கூட்டத்தின் மொழி என்றும்
கிரேக்கம் இசையின் மொழி என்றும்
பிரெஞ்சு தூதின் மொழியென்றும்
இத்தாலி காதலின் மொழியென்றும் கூறுவது பொருந்தும் என்றால் தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவது பொருந்தும் என்பர்''

பக்தி என்ற சொல்லுக்கு நம்பிக்கை, பற்று, உயர்ந்தமதிப்பு என்பது பொருள். இடர்நிறைந்த வாழ்வை மனிதன் சுடராக்கிக் கொள்ள பக்தி இலக்கியங்கள் துணை செய்கின்றன. மனிதனை மனிதனாக்குவது அன்பு. மனிதன் மனிதனிடம் காட்டுவது அன்பு. மனிதன் இறைவனிடம் காட்டுவது பக்தி. பக்தி நிலையை ஒரு மனிதன் அடைதலும் இறைவனின் திருவருளைப் பெறுவதும் எளிதன்று. மாபெரும் இறைவனுக்கும், மனிதனுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்திடும் உபாயத்தினை உணர்த்திய பல சித்தர்களில் தலையாய சித்தராகக்

கருதப்படுபவர் திருமூலர். மானுட வாழ்வின் நிலையாமையைத் திருவருளின் ஆணைப்படித் தவமிருந்து மூவாயிரம் பாடல்களைப் பாடியுள்ளார். திருமந்திரம் எனும் சிறந்த தொகுப்பு சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக விளங்குகிறது. சைவ சித்தாந்தங்களைத் தம்முள்ளடக்கிய மாபெரும் நூலாகும். எளிய மக்களும் உய்வடைய அவர்தம் வாழ்வியலின் உண்மையை உணர்த்தும் திருமூலரின் திருமந்திரம் சிறு தொகுப்பே இக்கட்டுரையாகும்.

திருமூலரின் வரலாறு

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என துதிபாடி திருக்கயிலையில் சிவனருளும், நந்தியின் அருளும் பெற்று தென்திசை நோக்கி புறப்பட்ட சித்தர்களுள் ஒருவர் திருமூலர். அவர் பல்வேறு சிவனுருவை கேதாரம், காசி, காளத்தி, காஞ்சிபுரம், சிதம்பரம் என பலத் திருத்தலங்களில் கண்டு இன்புற்று இறுதியாகத் திருவாவடுதுறை ஈசனைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் புறப்பட்டு காவிரி கரையோரம் வந்தபொழுது பசுக்கூட்டம் ஒன்று தம் மேய்ப்பன் மூலனை இழந்து கதறி அழுதக் காட்சியினைக் கண்டு மனங்கலங்கினார். பசுக்களின் துயரினை நீக்க, இறைவனருளாலே தம் உடலை நீத்து, தம் உடலை பாதுகாப்பாக வைத்துவிட்டு, தம் உயிரினை கூடுவிட்டு கூடுபாயும் உபாயத்தால் மேய்ப்பன் மூலம் உடலில் புகுந்தார். மூலனைக் கண்ட பசுக்கள் எல்லாம் துயரம் நீங்கி தத்தம் வீடுகளில் சென்று சேர்ந்தன. திருமூலரோ, மூலரின் வீட்டினுள் புகாமல் நின்றதைக் கண்ட மூலன் மனைவி தன் கணவன் என எண்ணி அழைக்க - அதனை மறுத்து மடத்தினுள் புகுந்து யோகநிலையில் அமர்ந்துவிட்டார். யோக நிட்டை கலைந்து காவிரிக்கரை அடைந்தபோது பாதுகாப்பாக விட்டுச் சென்ற அவரின் பூதவுடலை காணாமல் திகைத்து நின்றார். இறைவன் திருவிளையாடலை எண்ணி, திருவாவடுதுறை ஆலயத்திலேயே ஓர் அரசமரத்தடியில் தங்கி மூவாயிரம் திருமந்திர மாலைப் பாடியருளினார். இம்மந்திரத்தினுள் உலகின் நிலையாமையைத் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்.

நிலைத்து இருப்பது என்பது ஒன்றுமில்லை என்பதனை உணர்ந்தால் ஈசனே நிலை என்ற பேரின்பத்தை உணரலாம் என விளக்குகிறார். இறுதியாகத் தம்பணி நிறைவுற்றபோது திருக்கயிலாயம் சென்று ஈசனடியைச் சேர்ந்தார்.

இவர்தம் வரலாற்றைச் சேக்கிழார் சுவாமிகளின் திருவாக்கால் இருபத்தெட்டு இனிய பாடல்களால் கூறப்பட்டுள்ளது சிறப்பாகும்.

மானுட வாழ்வின் மாண்பு

ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையே இவ்வுலகம். இதனை,

''மண்திணிந்த நிலனும் நிலம் ஏந்திய
விசும்பு தைவரு வளியும் வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை'' (புறம்-க.வா.)

என்ற புறநானூற்று பாடல்வரிகளின் மூலம் அறியலாம். இத்தன்மை கொண்டே நம்பூதவுடலும் தோன்றுகிறது.

''அண்டமாய்ஆதியாய் அருமறையோடு ஐம்பூதம்
பிண்டமாய் உலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகன்''

என்ற திருநாவுக்கரசரின் பாடல் வரிகளும்,

''கடலுடையான் மலையான் ஐந்து பூதத்து
உடலுடையான் பல ஊழி தோறு ஊழி'' (திரு.ம.299)

என்ற திருமூலரின் திருமந்திரத்தாலும் அறியலாம். நிலையானது என்றென்னும் பஞ்சபூத சேர்க்கையினாலான இப்பூதவுடன் ஒன்றன் நிலை குலைந்தாலும் நில்லாது சென்றுவிடும். மண்ணிலான பிண்டம் இப்பூத உடல், மழைநீரில் கரையும் மண்ணை ஒத்தது இப்பூதவுடல் யாக்கை நிலையில்லாதது. நாளும் வளர்வது போல நாளும் தேய்ந்த நில்லாது. மண்ணுக்கும் நெருப்புக்கும் இரையாகும் உடலைவிட்டு உயிர் நீங்கும் போது கூட வருவன மக்களும், செல்வங்களும் அல்ல. அவரவர் செய்கின்ற அறத்தின் பயன் மட்டுமே என்பதனைப்

''பண்டம் பெண் கூரையழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே'' (மந்திரம் 144)

என்று நிலையாமையினைக் கூறுகிறார். இருக்கும் வரை போற்றிப் புகழ்ந்த மானுடர் இறந்தபின் பிணம் என்று பெயரிட்டுக் கூடி அழுது சுடுகாட்டில் எரித்து நீரில் மூழ்கி நினைவின்றி வாழ்ந்திடவர் என்பதனை,

''ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டியரைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கிநினைப் பொழிந்தார்களே''

(மந்திரம்-145)

என்று கூறுவதுமட்டுமின்றி நேற்றிருந்தார் இன்றில்லை என்பதனைக் கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே மந்திரம் 148 என்றும் இவ்வூண்வுடம்பு சீவன் உள்ளவரை மட்டும். சீவனன்றி சிவனே கிடக்கும் கடலத்தைக் காக்கை கொதத்தித் தின்றால் என்ன? கண்டவர் பழித்தால் என்ன? போற்றினால் தான் என்ன? சீவனின்றி உடல் உணர்ச்சியற்றதே. இதனை

''காக்கை கவரிலென் கண்டார் பழிச்சிலென்
பாற்றுளி பொய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்கையுள் நின்று தொரிலறச் செய்தூட்டுங்
கூந்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே'' (மந்திர் - 167)

என்று கூறி நிலையில்லாத இப்பூதவுடல் - சீவன் இருக்கும் போதே சிவனை நினைத்து அறச்செயல் புரிந்தால், அறமே துணையாகும் என்பதனை வலியுறுத்தகிறார்.

சீவனுள்ள போதே சிவனை நாடு

ஒன்பது மந்திரமாகத் தொகுக்கப்பட்ட திருமந்திரத்தின் ஐந்தாம் திருமந்திரத்தில் சிவநெறிகளாகச் சரியை, கிரியை,

யோகம், ஞானம் எனும் நான்கு நெறிகளைக் குறிப்பிட்டுள்ளார் திருமூலர்.

''சலோக மாதி சலியாதி யிற்பெறுஞ்
சலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாளுஞ் சாரூபம்
பரலோகம் இல்லா பரனுரு வாமே'' (ம.1507)

சிவத்தைச் சீவனுக்கும் போதே நான்கு நெறிகளில் வணங்குதல் வேண்டும். சிவனை அறியவும், சிவனை அடையவும், சிவத்தைப் போற்றுங்கள். நான்கு நெறிகளைக் கடைப்பிடித்தால் அழியாதபேறு கிட்டும். இறைவனை எளிதில் அடையலாம்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா தாகும் அறிகிலார்'' (தி.ம.257)

என்று அன்பின் உருவே சிவம். இளமையில் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி முதுமையில் எடுத்தப் பிறவியைத் துன்பத்தில் ஆழ்த்திட வேண்டாம். அறச்சிந்தனை கொண்டு அன்பின் வடிவமாய் அகவாழ்வு வாழ்ந்திட வலியுறுத்துகின்றார். மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொரு மானுடரும் சிவனடி அடைந்து பிறவிப் பெருங்கடலைக் கடக்க வேண்டும் என்பதே திருமூலரின் திருமந்திரமாகும்.

74. அகநானூற்றில் சைவம்

ந.பத்மாவதி
கௌரவிரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரி
வியாசர்பாடி, சென்னை

முன்னுரை

மக்களை எல்லா நிலைகளிலும், எல்லா விதங்களிலும் பக்குவப்படுத்திச் சீர்ப்படுத்துவதே சமயம் என்று கூறலாம். இன்று உலகத்தில் சமயங்கள் பலவாக விரிந்து சென்றாலும் எல்லாச் சமயங்களுமே வாழ்வியல் மேம்பாடு குறித்த நல்லகுறிக்கோளையே நாடி செல்லுமாறு மக்களை ஆற்றுப்படுத்துகிறது. பழந்தமிழர் இடையே வழக்கில் இருந்த சமயங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று சைவம் மற்றொன்று வைணவம்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் அடியவர்கள் நாயன்மார்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் அறுபத்துமூவர் ஆவர். இந்நாயன்மார்கள் சிவபெருமானைப் போற்றி புகழ்ந்து பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சமயக்குரவர் நால்வர் ஆவர். சைவசமயம் தழைத்தோங்குவதற்கு இவர்கள் ஆற்றியதொண்டு மிகப்பெரியது.

சிவபெருமான்

சைவசமயம் குறித்தசெய்திகள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் காணப்படுகிறது. இதில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானின் தோற்றச் சிறப்பினை விளக்குவதாக அமைந்துள்ளது. செவ்வானம் போன்ற சிவந்த மேனியையும், அந்திப் பிறைபோன்ற பற்களையும், எரியும் நெருப்பு போன்ற சடையையும், தலையில் இளம்பிறையையும் சூடியவன் என்றும்,

''செவ்வான் அன்னமேனி அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வைஎயிற்று
எரிஅகைந் தன்ன அவிர்ந்து விளங்குபுரிசடை
முதிராத் திங்களொடுசுடரும் சென்னி''

(கடவுள் வாழ்த்து-பா.அடி.8-11)

தேவர்களும், முனிவர்களும் அறிய முடியாதவன், புலித்தோலை அணிந்தவன். யாழிசைப் போல வேதம் ஓதுபவன். நீலகண்டத்தை உடையவன் என்றும்,

''மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறைமரபின்
வரிகிளர் வயமான் உரிவைதைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்''

(கடவுள்வாழ்த்து - 12-15)

மார்பில் பூமாலையும், பூணூலையும் தாங்கியவனும், நெற்றியில் இமையாத கண்ணினை உடையவனும், கையில் மழுப்படை ஏந்தியவனும், காலையை வாகனமாக கொண்டவனும், உமாதேவியைதன் இடப்பாகத்தில் வைத்திருப்பவனுமான சிவபெருமானைப் போற்றி வணங்குவதால் இவ்வுலகம் துயர் இன்றி விளங்குகிறது.

''புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பினதே, மைஇல் நுண்ஞாண்
நுதலது இமையாநாட்டம் இகல் அட்டுக்
கையதுகணிச்சியொடு மழுவே, மூவாய்
வேலும் உண்டு அத்தோலாதோற்கே
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே''

(கடவுள் வாழ்த்து -பா.அடி.1-7)

என்றெல்லாம் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவபெருமானின் சிறப்புகள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் எல்லோராலும் வணங்கப்படுபவனும், நான்மறையை ஓதியவனும், முக்கண் உடையவனும் ஆகிய சிவபெருமான் ஆலமுற்றம் என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ளான்.

''ஞாலம் நாறும் நலம்கெழநல்இசை
நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்''
(அகம்-181:15-16)

உமையம்மைக்கு தன் உடலில் சரிபாதியைக் கொடுத்து அர்த்த நாரீசுவரராக நின்றவர் சிவபெருமான் என்னும் குறிப்புகள் அகநானூற்றில் இடம்பெறுகின்றன.

''வெருவருகடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம்'' (அகம் 360:6-7)

முருகப்பெருமான்

சூரனையும் அவன் சுற்றத்தையும் தன்னுடையவேல் படையால் வீழ்த்தியவனும், திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டிருப்பவனும், மரமாக உருமாறிய சூரபன்மாவின் கிளையை அறுத்து அவனை அழித்தவன் முருகப்பெருமான் என்பதை,

''சூர்மருங் கறுத்தசுடரிலை நெடுவேல்
சினமிகுமுருகன் தண்பரங் குன்றத்து'' (அகம் 59:10-11)

என்னும் அகநானூற்றுப் பாடல் தெளிவுப்படுத்துகிறது. இவ்வாறாக சிவபெருமானின் தோற்றம், அவர் அணிந்த ஆடை, கையில் ஏந்தியமழுப்படை, அவருடையவாகனம், உமாதேவிக்கு தன் உடலில் சரிபாதி வழங்கியமையும் முருகன் சூரபன்மாலை அழித்தமை முதலான செய்திகளும் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன.

75. அகநானூற்றில் சிவனின் பெருமை

ச.வசந்தி
உதவிப்பேராசிரியர்
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
சென்னை

முன்னுரை

சமுதாயமும், சமயமும் இணை பிரியாதவை. பின்னிப் பிணைந்தவை. அகத்தெழு தூய விழைவில் தோற்றுவிக்கப்பட்ட சமய நெறிகள் சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையாக எப்போதுமே உதவி வந்துள்ளன. காலம் தோறும் சமுதாயம் மாறி அமைந்து இயங்கி வரும்போது, சமுதாயம் வளர்ச்சி பெறுவதற்கு அவை உற்ற துணையாக உதவி வந்துள்ளன. வழிபடும் சமயமும் காலம் தோறும் வளர்ச்சியடைந்து வருகிறது. வழிபாட்டு வளர்ச்சிக்குத் தோன்றிய துணையாக அமைந்து செம்மை நலம் பயந்து வருகின்றன.

சமயம் என்னும் சொல்லை வடசொல்லாக வைத்து சொற்பொருள் கூறி வந்தனர். நம் முன்னோர்கள் அச்சொல்லை இக்காலத்தில் தமிழ்சொல்லாகவே வைத்துப் பொருள் கூறுகின்றனர் என்று கூறுகிறார். மகாவித்வான் அருணை வடிவேல் முதலியார். பக்குவப்படாத உணவுப் பொருளை உண்ணுவதற்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்துவது சமைத்தல். அதுபோல, பக்குவப்படாத உள்ளத்தைச் சித்தமும் செல்லாச் சேட்சியற் பால் உய்ப்பதற்கு ஏற்ற வண்ணம் பக்குவப்படுத்துவது சமயம்.

சிவபெருமானை முழுமுதற்கடவுளாக ஏற்றி போற்றி இயங்குவது சைவம். சிவலிங்க வழிபாடு இந்தியா முழுமையும் தொன்றுதொட்டே நடைபெற்று வருகிறது. இலங்கையில் கிழக்காசிய நாடுகளில் நடைபெற்று வருகிறது. தொல்லியல் ஆய்வின்படி உலகம் முழுவதுமே சிவலிங்க வழிபாடு நடைபெற்று வந்திருப்பது பல சான்றுகளால் தெரியவருகிறது. சிவபெருமானின் சிறப்பு, வடிவம் போன்றவற்றை,

''கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன்; மாலையன், மலைந்த கண்ணியன்
மார்பினஃதே மை இல் நுண் ஞான்
நுதலது இமையா நாட்டம், இகல் அட்டு
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டு அத்தோலா தோற்கே ;
ஊர்ந்து ஏறே ; சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்னமேனி, அவ்வான்
இலங்கு பிறை அன்ன விலங்கு வால்வை எயிற்று
எரி அகைந்தரன்ன அவிர்ந்து விளங்கு சரி சடை,
முதிராத் திங்களோடு சுடரும் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல் முறை மரபின்
வரி கிளர் வயமான் உரிவை தைஇய
யாழ் கெழு மணிமிடற்று, அந்தணன்
தாஇல் தாள் நிழல் தவிர்ந்தன்றால், உலகே''

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் எழுதிய கடவுள் வாழ்த்துப் பாடல் அகநானூற்றில் அமைந்துள்ளது. முக்கண்ணான் அந்தி வானத்தைப் போன்ற செந்நிறம் படைத்தவர் இதனை,

''வெருவரு கருந்திறல் இருபெருந் தெய்வத்து
உரு உடன் இயைந்த தோற்றம்போல
அந்தி வானமொடு கடல் அணி கொளாஅ
வந்த மாலை பெயரின்''

என்னும் வருணனைப் பகுதியால் அறியலாகும். செவ்வான் அன்னமேனி என்பது அகநானூற்றின் கடவுள் வாழ்த்து, குரால் ஏற்றின் நிறத்திற்கும் முக்கண்ணான் உரு ஒப்புக் காட்டப்பட்டிருக்கிறது. முக்கண்ணான் வண்ணம் அந்திவான் வண்ணமும் சண்பகம் போன்ற பொன்வண்ணமுமாக அன்பர்களுக்குக் காட்சி அளிக்கிறது. திருமேனி போன்றே சிவந்து காணப்படுவது இவன் திருமுடியில் இலங்கும் சடை. இவனது சடை மிகவும் நீண்டது. நீட்சியினால் தாழ்ந்து தொங்குகிறது. இச்சடையிலே நல்ல ஒளியை வீசும் நீரை மறைத்து வைத்துள்ளான்.

''பிறங்கு நீர் சடைக்கரந்தான்''

என்று சிவபெருமான் பற்றிய சிறப்புகள் கூறப்படுகின்றன. இங்கும் அவன் சடைமுடியை உடையன் என்று உணர்த்தப்படுகிறது. பெருமானது முக்கண்ணையும் கறைமிடற்றையும் சங்கப்புலவர்கள் ஒப்புமையாகவும் பிறவாறாகவும் எடுத்தாண்டுள்ளனர். இவை முறையே இவரது சினத்திற்கும் பேரருளுக்கும் சின்னமாக விளங்குகின்றன. முக்கட்செல்வன் என்று இவன் குறிக்கப்படுதலினாலே முக்கண்ணனின் சிறப்பும், மூர்த்தியின் பெருமையும் விளங்கும்.

மகரக்கொடியை உச்சியிற் கொண்ட வானைத் தீண்டும் மதிலையும், உச்சியைக் காணமுடியாதவாறு ஓங்கி உயர்ந்துள்ள மாடங்களையும் உடைய காவிரிப்பூம்பட்டினத்தை உடையது சோழநாடாகும். அந்நாட்டில் ஆலமுற்றம் என்னும் அழகிய இடம் புது வருவாயினை உடைய ஊர்களைக் கொண்டது. சோழமன்னர்களால் பாதுகாக்கப்படும் சிறப்பினை உடையது. பூக்கள் அகன்ற துறையினையுடைய காவிரி என்னும் பெரிய ஆற்றினை அதிவேகத்துடன் ஆழ்ந்து ஓடுகின்ற நீரானது நுண்மணலைக் கொண்டு வந்து குவித்து மேடாக்கிய மணற்குவியல்களை உடையது. உலகம் யாவும் போற்றும் நல்ல புகழையுடைய நான்கு வேதங்களைக் கொண்ட பழம்பெரு நூலைத் தந்தருளிய மூன்று கண்களையுடைய சிவபெருமான் எழுந்தருளிய சிறப்பினைக் கொண்டது தலைவியின் ஊர் என்று சிறப்பிக்கும் இடத்தில்,

''வம்பப் புள்ளியின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூரஆடி, மொசிந்து உடன்,
பூவிரி அகந்துறைக் கனைவிசைக் கடுநீர்க்
காவிரிப்பேர் யாற்று அயிர்கொண்டு ஈண்டி
எக்கர் இட்ட குப்பை பெண்மணல்
வைப்பின் யாணர் வளம்கெழு வேந்தர்
ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய''

என்று சிவபெருமான் எழுந்தருளிய சிறப்பினை எடுத்துக்கூறுகிறது.

76. திருநாவுக்கரசர் பாடல்களில் இசைக்கலை



முனைவர் வே.இராசா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முத்தாயம்மாள் கலை,
அறிவியல் கல்லூரி
இராசிபுரம்

முன்னுரை

மனித வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் நிகழ்வது இயற்கையாகும். இன்பமடைகிற பொழுது ஒருவகை ஒலியும் துன்பப்படுகிற பொழுது ஒரு வகையான ஒலியும் மனிதனிடமிருந்து தொடரொலியாக அமையும். உணர்ந்து அறியும் ஆற்றலுடையோர் அவ்வொலிகளின் பொருளை உணர்வர். அத்தகைய ஒலிச்சுவையுணர்வு நிலையில் இசைக் கலையின் தொடக்கத்தைக் காணமுடிகின்றது.

இசையைப் பெரும்பாலும் சமயங்கள் வளர்த்து வந்துள்ளன. இசையாற்றலால் மனித மனத்தை மாற்றி எளிதில் வயப்படுத்தி இறை உணர்விற்கு வழி செலுத்த முடியும் என்பதைச் சமயங்கள் உறுதியாக நம்புகின்றன. செவிவழிப் புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும் பொருந்தவும் வைக்கின்ற பொழுது இனிய ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறுகின்றன என்கிறார் ச.வே.சுப்பிரமணியன் (தமிழர் தோற்கருவிகள், முன்னுரை,ப.5) இவ்வொலிகள் செவியை மட்டும் எட்டி உள்ளத்தைக் கவராமல் நின்றுவிடின் அவை ஓசை என்று அழைக்கப்படும். இசை என்று பெயர் பெறுவதில்லை.

பண்பட்ட எல்லா இனங்களும் தத்தமக்குரிய இசை மரபுகளைக் கொண்டுள்ள காடுவாழ் மாந்தரும் நாடோடி இனங்களும் தமக்குரிய இசை மரபுகளைக் கொண்டுள்ளார். பழமை சிறப்புமிக்க தமிழினத்தின் இசை மரபும் பழமையுடையதாகும். அனைத்து உயிர்களையும் வயப்படுத்துவது

என்னும் பொருளில் இசை என்று பெயரிட்ட தமிழரின் நுண்ணிறிவைப் பாராட்ட வேண்டும் என்கிறார் அ.தட்சிணாமூர்த்தி. (இசைக் கலையின் வரலாறு, தமிழர் நாகரீகமும் பண்பாடும், வெற்றிச் செல்வி பதிப்பகம், தஞ்சாவூர், 1980, ப.179) பண்டைக் காலத்தில் புண்பட்ட வீரர்களை பேய்களிடமிருந்து காப்பாற்றக் காஞ்சிப் பண்ணையும் பாடினர் எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது. (புறம்.281) இசையின் இனிமைக்கும் இன்ப உணர்விற்கும் சிறப்புக் கொடுக்கப்பட்டுள்து. இசையால் மனிதன் மட்டுமின்றி அனைத்து உயிர்களும் மகிழ்வதைக் காணமுடிகிறது.

இசை என்றால் மக்கள் உள்ளத்தோடு பொருந்துதல் எனப் பொருள்படும். இசை இனிமையான ஒலிகளின் சேர்க்கையாகும். இது உயிர்களின் உள்ளத்தை உருவாக்கும் தன்மை வாய்ந்தாகும். இனிமை மிக்கது எழில் வாய்ந்தது. இது மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும், எழுச்சியூட்டும் வன்மையும் அமையப் பெற்றதாய் இருக்கிறது என்கிறார் சாத்தாங்குளம் அ.இராகவன் அவர்கள். (இசையும் யாழும், கலைநூல் பதிப்பகம், பாளையங்கோட்டை 1971, ப.42)

எளிய நிலையில் உயிர்களைத் தன்பால் இசைவிப்பதும் உயர்ந்த நிலையில் இறைவனைத் தன்பால் இசைவிப்பதும் இசையின் ஆற்றலாகும் என்று இசையின் பயனை இறைவனுடன் மனித மனம் ஒன்றுபடுவதற்குரிய உயர்நிலைக்கு உயர்த்திக்காட்ட முற்படுகிறார் செ.வைத்தியலிங்கம். (சேக்கிழாரும் நுண்கலைகளும், பெரியபுராணச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சென்னை, 1975, ப.135)

இசையால் விளையும் பயன்கள்

இசையால் விழாக்கள் சிறப்படைகின்றன. இன்பத் தருகின்றது. விளையாட்டு வீரர்களும் இசையை விரும்புகின்றனர். மக்களை இசை உற்சாகப்படுத்துகின்றன. இறை உணர்விற்குத் தூண்டுதலாக இருப்பதால் பல்வேறு சமயத்தினர் இசையைப் புனிதமாக மதிக்கின்றனர். இசை நோக்கம் நன்றாக அமைந்தால் இசைப்பயன் நன்றாக அமையும்.

இசை ஒரு பயனுள்ள கலையாகும்.

கலையின் நோக்கம்

உலக அனுபவங்களைக் கொண்டு மனிதன் தன்னுடைய அறிவின் ஆற்றலில் அழகானவற்றைச் சிறப்பாகப் படைப்பது கலையின் அடிப்படை நோக்கமாகும். மக்களின் வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி என்கிறார் டி.வி. நாராயணசுவாமி, மக்கள் வாழ, வளர சமுதாய நீதிகளையும், அறத்தத்துவங்களையும் படம்பிடித்துக் காட்டிட, இசையைப் போல் வேறு சாதனம் இல்லை. (கலையும், மொழியும், வெள்ளிவிழா மலர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை, *1980*,ப.*32*)

கலைகள் மக்களின் வாழ்வினைக் கொண்டு அமைக்கப்படுகின்றன. வாழ்வியல் கூறுகளை எடுத்துக்காட்டுகின்றன. நீதி, நியாயம், அறம், மறம் முதலானவற்றைக் கவினழகுடன் விளங்குகின்றன. சமூக உண்மைகள் உரைக்கப்படுகின்றன. இதற்கு கலைகளே வாழும் இயல்பு கொண்டவையாகும். நிலையான கருத்துக்களை முறையாகக் காட்டும் தன்மையுடையனவாகும்.

கலையின் பயன்கள்

கலைகள் மிகவும் ஆற்றல் உடையவையாகும். அவை மனித உள்ளத்தின் இயல்பினை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. கலையின் வாயிலாக மனிதன் வெளிப்படுத்திக் கொள்வது தன் செய்தியினையோ, நோக்கங்களையோ அல்ல. மனிதன் கலைகளின் வாயிலாகத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறான். மனித நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, சமுதாய உணர்வு, சமயக் கோட்பாடு, பழக்க வழக்கங்கள், சிந்தனைகள் ஆகியன கலைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன.

கட்டடம் கட்டுவது ஒரு கலைதான். எவ்வித மாற்றமுமின்றி அமைவதைக் கலையாகக் கருத முடியாது. மனிதன் கட்டடம் அமைப்பதில் மாற்றத்தையும், தோற்றப்

பொலிவையும் காட்டுகிறான். வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றவாறு கட்டட அமைப்பு முறைகளையும், வசதிகளையும் அமைத்துக் கட்டுகிறான். அந்த அமைப்பில் தன் ஆற்றலால் கலைத் தன்மைகளைக் கட்டுகிறான். அது கலையாகி விடுகின்றது.

எல்லாக் கலைகளும் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் விதத்தில் அமைய வேண்டும். சிற்பம், ஓவியம் போன்றவை கண்ணுக்கும், இசை காதுக்கும், நாடகம் முதலானவை கண், காது ஆகிய புலன்களுக்கும் இலக்கியம் மனத்திற்கும் இன்பம் அளிப்பதைக் காணமுடிகின்றது.

திருநாவுக்கரசர் பாடல்களில் இசை

சைவ சமய மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய தேவாரப் பாடல்கள் அனைத்தும் இசைக் களஞ்சியமாகக் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் சைவத்தின் பெருமைகளை உலகிற்கு உணர்த்தினர். இசை மக்களைக் கவரும் தன்மை உடையது என்பதனை அறிந்து, திருநாவுக்கரசர் அதற்கு ஏற்றவாறு பாடல்களைப் பாடியுள்ளார்.

இசைப் பண்கள்

திருநாவுக்கரசர் தம்முடைய பாடல்களில் பல்வேறு பண்களைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

பதிகங்கள்	பண்
முதல் பதிகம்	- கொல்லி
இரண்டு முதல் ஏழு பதிகங்கள்	- காந்தாரம்
ஒன்பதாவது பதிகம்	- சாதாரி
பத்து முதல் பதினொராவது பதிகம்	- காந்தார பஞ்சமம்
பன்னிரெண்டு முதல் பதின்மூன்றாவது பதிகம்	- பழந்தக்கராகம்
14-15 பதிகம்	- பழம்-பஞ்சுரம்
16-18 பதிகம்	- இந்தளம்
19-20 பதிகம்	- சீகா மரம்
21 பதிகம்	- குறிஞ்சி

22-23 பதிகம் - கொல்லி
80-81 பதிகம் - கொல்லி

திருநாவுக்கரசர் இசைப்பாடல்களைப் பாடி இறையருளைப் போற்றி வியக்கும் தன்மையுள்ளவர். இசையால் இறைவனைப் புகழ்வதைக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் சான்று.

> ''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
> தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

என்று தொடங்கும் பாடல். நீராலும் பூவாலும் தூபமிட்டு இறைவனை வழிபடுவது வழக்கமாகும். அவ்வாறு செய்வதைத் திருநாவுக்கரசர் மறக்கவில்லை. இறைவனின் புகழை இனிய தமிழிசைப் பாடல்களால் விளக்கி மனமுருகிப் பாடியுள்ளார். அதனை மற்ற வழிபாட்டு முறைகள் ஈடுஇணையாகக் கருதுகிறார். தமிழுக்கும் இசைக்கும் திருநாவுக்கரசர் கொடுத்துள்ள மதிப்பு இதனால் நன்கு விளங்கும்.

இசை இனிதாக இருக்க வேண்டும். கடுமையான ஒலி அல்லிசையாகிவிடும். இசை பற்றித் திருநாவுக்கரசர் கொண்டுள்ள கருத்து இதனால் புலனாகின்றது. இசைப் பாடல்களை இயற்றவும் இசையமைத்துப் பாடவும் திருநாவுக்கரசர் வல்லவர் என்பதை இவர் பாடல்கள் கொண்டு அறியமுடிகின்றது. திருநாவுக்கரசர் சிறப்பாக நேரிசை, விருத்தம், தாண்டகம் ஆகிய இசைப்பாடல் அமைப்புகளில் பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். இறைவனை நினைத்துப் பாடியமையால் இப்பாடல்கள் திரு என்ற சிறப்பு பெற்றுத் திகழ்கின்றன.

திருநேரிசைப் பாடல்

> ''ஒருடம் பிருவ ராகி ஒளிநிலா எறிக்குஞ் சென்னிப்
> பாரிடம் பாணி செய்ய பயின்றவெம் பரம மூர்த்தி
> காரிடந் தில்லை தன்னுள் கருதுசிற்றம்பலத்தே
> பேரிடம் பெருக நின்று பிறங்கெரி யாடு மாறே''

இப்பாடல் அடிகள் அறுசீர் விருத்த அமைப்பில் உள்ளன.

இப்பெயர் பாடலில் அமைப்பினைக் கருதாமல் இசையைக்கொண்டு கொடுக்கப்பட்டுள்ளது.

திருவிருத்தப்பாடல்

"கருநட்ட கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தை
செருநட்ட மும்மதில் எய்யவல் ரானைச் செந்தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச் சிற்றம்பலத்து
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று
வாழ்த்துவனே"

திருத்தாண்டகம்

ஆறாம் திருமுறையில் திருநாவுக்கரசர் கோயில் பற்றிப் பாடிய பாடலொன்று சான்றாக அமைகின்றது. இத்திருத்தாண்டகம் எண்சீர் விருத்தமாகும். இதனை நெடுந்தாண்டகம் என்றும் கூறுவர். சீரளவில் குறைந்த தாண்டக இசைப் பாடல்களும் உண்டு. அவற்றினைக் குறுந்தாண்டகம் என்றும் கூறுவர். தாண்டகம் இசையமைப்பில் சிறந்ததாகக் கருதப் பெறுகின்றது. இதனைப் பாடுவதில் திருநாவுக்கரசர் வல்லவராவர். ஆகவே அவரைத் தாண்டக வேந்தன் எனச் சிறப்பித்துக் கூறுவர். தாண்டகத்தைப் பின்னர் வந்த இறையடியார்கள் பலரும் பாடியுள்ளனர். சான்றாக,

அரியானை அந்தணர் தம்சிந்தையானை
அருமறையின் அகத்தானை அறுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கடைகடலைக்குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றிப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

என்ற பாடலைக் கூறலாம். இசையால் விளையும் பயன்கள், கலையின் நோக்கம், பயன்கள், திருநாவுக்கரசர் பாடல்களில் இசை, இசைப் பண்கள், திருநேரிசைப் பாடல், திருவிருத்தப்பாடல், திருத்தாண்டகம் ஆகியன குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

77. திருக்குறளும் - தேவாரமும்



முனைவர் க.முத்தழகி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
பான்செக்கர்சு மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

பக்தி இலக்கியக் காலத்தில் பக்தி சுவை நனி சொட்ட சொட்ட தேவார, திவ்ய பாசுரங்கள் பாடப்பெற்று தமிழ் சமய வளர்ச்சிக்கு வழி கோலின. இறைவனை சிவனடியார்கள் இனிய தமிழாக கண்டனர். இத்தகைய இனிமையான மொழியில் தான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியவர்கள் இறைவன் மீது கொண்ட பக்தியை பதிகங்களாக பாடியுள்ளனர். இம்மூவர் பாடிய பதிகங்களுக்கு தேவாரம் என்று பெயர். அவர்களைப் போலவே 'திருவள்ளுவரும்' இறையருள் பெற்று அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த திருக்குறளை அருளியுள்ளார். அதற்குத் தெய்வப்புலவர், நாயனார் என்ற அவரின் திருப்பெயர்களே சான்றாகும். உலக மக்கள் உய்வதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு நான்கு உறுதிப் பொருளையும் உலக வாழ்வினிலே பெறமுடியும் என்பதை திருவள்ளுவர், நாயனார் வழி ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமயங்கள்

மானுட வாழ்க்கை சிறக்க கடவுளின் துணை தேவைப்படுகிறது. தனித்துணை என்று இறைவனின் துணையைச் சிறப்பித்துக் கூறுவர் மாணிக்கவாசகர். அப்படிப்பட்ட இறைதுணையை நாடச் செய்வது சமயத்தின் நோக்கம். இதன் முக்கியத்துவத்தை வள்ளுவர்,

''கற்றதனால் ஆயபயன்என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' (குறள் :2)

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது'' (குறள்-7)

என்கிறார். உயிர்க்குலத்தை மானிடச் சாதியை, அன்பில் நினைத்து வளர்ப்பதற்கு சமயங்கள் தோன்றின. சமயங்கள் நம் நாட்டில் உயர்ந்து திகழ்ந்து ஒளி வீசிக்கொண்டிருந்தாலும், தமிழ் மக்களின் தனிப்பெரும் சமயங்களாகச் சைவமும், வைணவமும் திகழ்கின்றன. அந்த மாபெரும் இரு சமயங்களின் வளர்ச்சியே பக்தி இலக்கியங்களின் தொடக்கங்களாகும்.

திருஞானசம்பந்தர்

இந்த உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளிலும் முதல் எழுத்துக்கள் 'அ' என்ற ஒலியினையுடையது. இதைப் போன்று இந்த உலகம் ஆதி பகவானை முதன்மையாகக் கொண்டது என்பதனை வள்ளுவர்,

''அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' (குறள்-1)

என்கிறார். இதனையே ''தோடுடைய செவியன்'' என்று பாடத் தொடங்கியமையால் ''திராவிட சிசு'' என்று அழைக்கப்பட்ட திருஞானசம்பந்தர் திருவாரூர்ப் பெருமானைக் கண்டு வணங்கி அப்பெருமானையே அகர முல்வனாகப் போற்றி வணங்கினார். இப்பெருமானை போற்றி வாழ்த்துபவர் வினையில் இருந்து விடுபடுவர் என்பதை,

''அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரும் மனமுடையார் வினைபற்று அறுப்பாரே''

என்று பாடியுள்ளார். இவர்கள் இருவருமே இந்த உலகிற்கு முதன்மையானவன் இறைவனே என்பதை உணர்த்துகின்றனர்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் திருமுறையில் திருக்குறள் நிறைய இடம் பெற்றுள்ளன. இதனுள் ஒரு சிலவற்றை மட்டும் காணலாம். பிறருக்கு துன்பம் தரக்கூடியவர்கள் தன்னையே இழிவுப்படுத்திக் கொள்வதற்கு சிறிதும் தயங்கமாட்டார்கள். குறிக்கோளற்ற தன்மையினராகவும் பிறருக்கு அடிமையாகவும் வாழக்

கூடியவர்களாயிருப்பர். இப்பண்பினை உடையவர்களை வள்ளுவர்,

“எற்றிற்கு உரியர் கயவர் ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து” (குறள்-1080)

என்பர். இதனையே நாவுக்கரசர் தமது திருமுறையில் பாடுகையில், சமண சமயத்தில் இருந்த பொழுது தாம் வாழ்ந்த வாழ்க்கையினை எண்ணி வருத்தப்படுகிறார். அன்பே அருளே என்று இறைவனை போற்றி வாழாமல் அடிப்பட்டு, வருந்திய பின்பு உண்மையை உணர்ந்து கொண்டேன் என்கிறார். கடலூர் வீரட்டபெருமானே என்றழைத்து,

“கயவர் பட்டால் தான் உண்மையை அரிவர்”

என்ற பாடலில் உண்மையை உணர்கின்றார். மேலும்,

“பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீரிறைத்து
உற்றிலால் கயவர்தேரார் என்னுங் கட்டுரையோடு ஒத்தேன்
என்னுளேன் என்செய்வேனான், இடும்பையால் ஞானம்ஒன்றும்
கற்றிலேன் களைகணில்லேன் கடலூர் வீரட்டனீரே”

என்ற பாடல் வரிகளில் கயவர்களின் இயல்பை படம் பிடித்து காட்டுகிறார். இவ்வுலகில் இன்பம் தரக்கூடிய செயல்கள் எவ்வளவோ இருக்கையில் துன்பம் தரக்கூடிய செயல்களை ஏன் செய்ய வேண்டும் என்பதை இருவரும் அழகாக சுட்டிக்காட்டுகிறார்கள். அதனையே வள்ளுவர்,

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று” (குறள்-100)

என்கிறார் திருநாவுக்கரசரும் தமது திருமுறையில்

“மெய்யெலாம் வெண்ணீறு சண்ணீத்த மேனியான் தாள் தொழாதே
உய்யலாம் என்று எண்ணி உறுதூக்கி உழ்தந்து என்னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலை குயில்கூவ மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழதொழிந்து கனியருப்பக்காய் கவர்ந்த
கள்வனேனே”

என்று தன்னையே உணர்ந்து கொண்டதாகக் கூறியுள்ளார். மனித

வாழ்க்கை பண்படுத்தப் பட வேண்டும் என்பதை வள்ளுவர்

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (குறள்-1038)

என்ற குறளில் விவசாய நிலம் பண்படுத்தும் முறையினையும், பயிரிடுதல், பாதுகாத்தல், களையெடுத்து விவசாய நிலத்தை செம்மை படுத்துவதானல் விவசாயம் செழிக்கும் என்கிறார். இதனையே நாவுக்கரசரும் நிலம் போல, மனித மனமும் பக்குவப்படுத்தப்பட வேண்டும் என்பதை,

"மெய்ம்மையாம் முழுவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே"

என்பதில் உண்மை, அன்பு, பொய்யாமை, பொறை, தகவு போன்ற நற்குணங்கள் செம்மையாக அமைந்தால் மனித மனமும் செழிக்கும். மனித வாழ்வில் அன்பெனும் விதை விதைக்கப்பட வேண்டும். அவ்வப்போது முளைக்கும் பொய்யெனும் களைகள் அகற்றப்பட வேண்டும். அப்போது தான் அன்பெனும் விதை நன்றாக முளைக்கும். பொறுமை என்கின்ற நீர், அன்பெனும் விதையோடு சேர வேண்டும். குடும்பத்தில் நல்வாழ்வு என்னும் பயிர் செழிக்கும். நடுவுநிலைமை என்ற வேலியினை மனிதன் அமைத்துக் கொள்ள வேண்டும்.

சுந்தரர்

இறைவன் புகழே புகழ் அவன் புகழை உணர்ந்தவர்கள் மெய்க்கண்டவர்கள். உலகியலாளார் புகழ்கின்ற அனைத்தும் நிலையற்றது. இதனை திருவள்ளுவர் இருவினையும் சாரா புகழ் என்கிறார். இறைவன் புகழே பொருள் சேர் புகழ். இப்புகழை பெறுபவர்களுக்கு இறைவன் அருள் கிடைப்பதுடன் துன்பம் வந்தடையாது என்பதை வள்ளுவர்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்-5)

என்பர். இதனையே சுந்தரர் தமது தேவாரத்தில்

"திருத்தித்திருத்தித் வந்தென்சிந்தை யிடங்கொள கைலாயா
அருத்தித் துன்னை அடைந்தார் வின்னைகள் அகல அருளாயே"

என்று இறைவனை வேண்டி பாடக்கூடிய பாடலடிகள் நம் வினைகளை நீக்கக் கூடியவைகளாகும். திருவள்ளுவர் மெய்ப்பொருள் என்பதை ஆராய்ந்து அறியவேண்டும் என்பதை,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (திரு-356)

என்கிறார். மெய்ப்பொருள் என்பதை வள்ளுவர் கேட்டல், சிந்தித்தல் என்று இரண்டாக கூறுகிறார். சுந்தரர் அவை இரண்டுமே இறைவனாகிய மெய்ப்பொருள் என்கிறார். இறைவனுடைய பாதங்ளைப் பற்றுபவர்களை எவ்வித துன்பமும் அணுகாது என்பதை வள்ளுவர்,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்-3)

என்பர். மலர்களில் விற்றிருக்கும் இறைவனின் பாதத்தை அடையக் கூடியவர்கள் வீடுபேறு என்னும் முக்தி அடைவார்கள் என்கிறார் இதனை சுந்தரர்,

"சுந்தரர் சிவனின் திருவடி சிறப்பை
விரும்பி நின்மலர் பாதம் நினைந்தேன்
வினைகளும் விண்டன"

என உணர்த்துகிறார். இருவருமே இறைவனை வழிபட்டால் வீடுபேறு அடைய முடியும் என்கிறார்கள். முதல் மூவர் பாடியுள்ள தேவாரமும் திருவள்ளுவரின் திருக்குறளும் உலகியல் வாழ்வில் அனைத்தும் இறைவனே என்கிறது. இறைவனை அயைட நம் மனதை பக்குவப்படுத்தி, பாதங்களில் மலர்தூவி, பாடல் பாடி வழிபடுபவர்களை துன்பங்கள் வந்தடையாது என்றும், இவ்வாறு வழிபட்டால் வீடுபேற்றினை அடைய முடியும் என்பதை இவ்வாய்வு கட்டுரை வெளிப்படுத்துகிறது.

78. சைவம் வளர்த்த நாயன்மார்களின் பக்திநெறி



பா.அனுராதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பான்செக்கர்சு மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

ஆதிகாலத்தில் மக்கள் எல்லோருக்கும் பொதுவான கொள்கைகள் பல இருந்தன. அவைகளுள் சமயமும் ஒன்று. ஒன்றாக இருந்த சமயமே நாளடைவில் சிறிது சிறிதாக வேறுபட்டன. அத்தகைய சமயங்களில் ஒன்றான சைவம், சிவனின் நெறிமுறையை உலகிற்கு பன்னிரெண்டு திருமுறைகளின் வழியாக வெளிப்படுத்தியது. அவற்றுள் சேக்கிழார் படைத்த பெரியபுராணத்தின் வழி நாயன்மார்கள் சைவம் வளர்த்த முறையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. ஆய்வின் அளவு கருதி குறிப்பிட்ட நான்கு நாயன்மார்களின் பக்தி திறத்தையே இக்கட்டுரை ஆராய்கிறது.

சிவன் என்னும் சொற்பிறப்பு

சிவன் என்பதற்குச் சிவந்தவன் என்பது பொருள். ஞாயிற்றுக்குச் செங்கதிர் என்பதும் மற்றொரு பெயர். மொகஞ்சதாரோ முத்திரைகளின் ஆண் தலைமையான தெய்வம் எனக் கூறப்பட்டுள்ளது. சிவனைக் குறிக்கும் பசுபதிக் கடவுளும் ஆண் கடவுளரே ஆவர். பிலிப்பை தீவுகளில் சிலவற்றில் இன்றும் மக்கள் சிவனைச் சிவப்பன் என வழங்குவர். சிவன் என்னும் சொல்லின் உற்பத்தியைக் கூறவந்த ஆசிரியர்கள் எல்லோரும் சிவன் என்பதற்குச் சிவந்த கடவுள் என்னும் பொருளையே கூறியுள்ளார்கள்.

பழமையும், பெருமையும் கொண்ட உலகின் தொல்பெருஞ் சமயங்களுள் ஒன்று சைவசமயம். தொன்றுதொட்டு மனித வாழ்க்கையோடு சமயம்

பின்னிப்பிணைத்திருந்தது. மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புற்றிருக்கும் சமயங்கள் பல. அவற்றுள் சைவ சமயமும் ஒன்று. இது பல உயரிய கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பரந்த சமயமாகும். இது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது.

களப்பிரர் ஆட்சி

கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை தமிழர் அல்லாத வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்து வந்தனர் என்றும் அவர்கள் பண்டையத் தமிழ்நாட்டின் பண்பாட்டைச் சிதைத்தனர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இக்காலக் கட்டத்தை இருண்டகாலம் என்றும் கூறுகின்றனர். இக்காலக் கட்டத்தில் சைவம் தாழ்ந்து காணப்பட்டது. சமணசமயமும், பௌத்த சமயமும் வலுப் பெற்றிருந்தன.

சமயப் பூசல்கள்

சமுதாயத்தில் இடம் பெற்ற சமயங்கள் குறிப்பாகச் சைவம், வைணவம், சமணம், பௌத்த சமயங்கள் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகப் போராடின. சமணத்தைவென்று சைவத்தை நிலைநாட்டுவதற்காகச் சமயக்குரவர்கள் நாடாளும் மன்னர்களை எதிர்த்துப் போராடினர். மதுரையில் பெருந்திரளாக இருந்த சமணர்களை அனல்வாதம், புனல்வாதங்களில் சென்று மதுரையில் சமண மதத்தை அகற்றி மன்னனைச் (கூன்பாண்டியன்) சைவனாக்கினார்.

பல்வேறு காலங்களிலும் சிவன்

சங்க இலக்கியங்களில் பெரும்பாலான நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவப்பெருமானை பற்றியவையே. இராவணன் காலத்துக்கு முன்தொட்டு இலங்கைத் தீவில் பல சிவன் ஆலயங்கள் இருந்தன என்பது ஐதீகம். அசுரரும், இராக்கதரும் சிவனையே வழிபட்டார்கள். திருக்கோணமலையில் இராவணனைப் பற்றிச் சொல்லப்படும் ஐதீகங்களுக்கு அடையாளங்கள் காணப்படுகின்றன. விவிலிய

மறையின் பழைய ஏற்பாடு சிவன் என்னும் கடவுளைப் பற்றிக் கூறுகின்றது.

பல்வேறு இடங்களில் சிவன்

வட அமெரிக்காவில் சிவன் ஆலயம், கிரேத்தாவில் சிவன் நகர், ''சிவன்'' மாதப் பெயர். இலங்கையில் சிவன் மலை. வட இந்தியாவில் சிவபுரம், சின்ன ஆசியாவால் சிவாசு நகர், பின்லாந்து மக்களின் காத்தற் கடவுள் சிவன், அக்கேடிய மக்களின் விண்மீன் சிவன், பழங்காலத்தில் மக்கட் பெயர் சிவன். இவ்வாறு சிறப்பாக அழைக்கப்பட்டு வணங்கப்பட்ட கடவுளான சிவபெருமானை போற்றி துதித்த நாயன்மார்களின் பக்தி திறத்தை கீழ்வருமாறு அறியலாம்.

திருஞானசம்பந்தர்

சிவபாத இருதயர், பகவதி அம்மையாரின் மகனாக அந்தணர் குலத்தில் பிறந்தவர் சம்பந்தர். இவர் ஏழாம் நூற்றாண்டை சேர்ந்தவர். முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் ஆவார். தன் தந்தையோடு குளத்தங்கரைக்கு குளிக்கச் சென்றார். சம்பந்தரை குளத்தங்கரையில் அமர வைத்து விட்டு குளிக்க படிகளில் இறங்கினார். பெற்றோரை காணாமல் அழத் தொடங்கினான். குழந்தையின் அழுகுரலைக் கேட்ட சிவபெருமான் பார்வதி நம் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது என்றார். உடனே பார்வதி பாலூட்டினாள்.

இருதயர் குழந்தையின் வாயில் பால் வழிவதைக் கண்டு திடுக்கிட்டார். யார் உனக்கு பால் கொடுத்தது என்று கேட்டதும் சம்பந்தர் புன்னகையுடன்

''தோடுடைய செவியன் விடையேறி, ஓர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய

பெம்மான் இவனன்றே''

என்ற அரியதோர் பாடலைப் பாடியது குழந்தை. உமாதேவியின் அன்பு நெறியை வள்ளுவர்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும் (குறள் 71)

என்ற வள்ளுவரின் குறட்பா ஒப்பு நோக்குவதாகும். முத்துப் பல்லக்கு பெறல் ஒவ்வொரு சிவதலங்களையும் வழிப்பட்டு சென்றார். அந்தணர் கனவில் இறைவன் தோன்றி என் ஞானக்குழந்தை என்னைக் காண வருகிறான். அவனுக்கு முத்துப்பல்லக்கு, குடை, ஊது, கொம்பு முதலானவற்றைக் கொடுத்து வரவேற்பு கொடுங்கள் என்றார். அதே நேரம் சம்பந்தரின் கனவிலும் சென்று அந்தணர்கள் தரும் பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்.

ஓரிடத்தில் இல்லாமல் பல்வேறு ஊர்களுக்கும் சென்று சிவனின் பாடல்களைப் பாடி அற்புதங்களை நிகழ்த்தினார். ஓய்வின்றி சைவசமயம் தழைக்க இன்னிசை பண்களைப் பாடி சைவத்தை வளர்த்தார்.

திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாண் குடியில் புகழனார். மாதினியார் என்பவருக்கு மகனாக பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்டப் பெயர் மருள் நீக்கியார். இது மட்டுமல்லாது பல்வேறு பட்டங்களை வென்று பல சிறப்பு பெயருக்கு சொந்தக்காரர் ஆனார்.

உழவாரப்பணி

சிவனின் மீது கொண்ட பற்றின் காரணமாகவும் உண்மையான சமுதாய நலனும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்ததால் ஊர்கள் தோறும் சென்று அங்குள்ள கோவில்களிலும் வெளிப்புறங்களிலும் உழவாரப் பணியை செய்து வந்தார். இன்றும் இச்செயல் பள்ளி, கல்லூரியில் பயிலும் மாணவிகள் நாட்டுநலப் பணித் திட்டத்தின் வழி

இத்தகைய அரும்பெரும் பணியை செய்து வருகின்றனர்.

நாவுக்கரசரின் உடம்பில் சிவ சின்னங்கள்

குடும்பச் சூழலை கண்டு வருந்திய நாவுக்கரசர் சமண சமயத்திற்கு மாறினார். தனக்கு ஏற்பட்ட சூலை நோயை சிவபெருமான் குணமாக்கியதால் சைவத்தில் மூழ்கினார். பல்வேறு சிவதலங்களுக்குச் சென்று இறைபாடல்களைப் பாடியும் உழவார பணியை மேற்கொண்டும் வந்தார். பெண்ணாகடத்தில் கோவில் கொண்டிருக்கும் சிவனிடத்தில் என் மேனி மறையும் வரை தங்களை நினைத்துக் கொண்டிருக்க உமது சின்னங்களைத் தாரும் என வேண்டினார். சிவனும் நாவுக்கரசரின் வேண்டுகோளுக்கு இணங்க சூலம், காளை ஆகியவற்றை பதிக்கச் செய்தார்.

பொதிசோறும் இறைவனும்

''திருப்பைஞ்சல்'' என்னும் ஊரை வந்தடையும் போது மதிய நேரம். பசியையும் பொருட்படுத்தாமல் சிவனை நினைத்தபடியே நடக்கத்தொடங்கினார். தன் சீடன் தன்னை பார்க்க பசியோடு வருகிறான். அவன் பசியை போக்க இறைவனே நன்னீர் குளத்தை உருவாக்கினார். அதன் கரையில் பொதிசோறு (கட்டுச்சோறு) வைத்துக் கொண்டு அந்தணர் வடிவில் அமர்ந்திருந்தார். நாவுக்கரசரைக் கண்டதும் பசியோடு இருக்கிறாய். சாப்பிட்டு விட்டு செல்லுங்கள் என்று கூறவே சாப்பிட்டு களைப்பை போக்கிக் கொண்டார். இறைவனைக் காண ''திருப்பைஞ்சலீக்கு'' செல்கிறேன் என்றார். நானும் வருகிறேன் என்றார். இருவரும் சென்று கொண்டிருக்கும் போது பாதி தூரம் சென்றதும் அந்தணரைக் காணவில்லை. தன் பசியை போக்கியது அந்தணர் இல்லை. இறைவன் என்று புரிந்து கொண்டார்.

வீடுபேறு கொடுத்தல்

அப்பரின் பற்றற்ற நிலையை உலகம் அறிய வேண்டும் என்பதற்காக அவர் செல்லும் வழியில் பொன்னும், நவமணிகளும் காட்சி தரும்படி செய்தார். அவற்றையெல்லாம்

கற்களாக நினைத்து எடுத்து எரிந்தார். பொன்னுக்கும், பொருளுக்கும் ஆசைப்படாத ஒருவர் கட்டாயம் பெண்ணுக்கு ஆசைப்படுவார் என அழகிய அரம்பையர்களை அவர் முன் நடனமாட செய்தார். அவர்களையும் கண்டு கொள்ளாது சிவனை நினைத்து நடந்தார். அப்பரின் தூய பற்றற்ற தொண்டினை உணர்ந்த விண்ணவர்கள் அவருக்கு மலர்மாரி பொழிந்து வரவேற்பளித்தனர்.

கண்ணப்ப நாயனார்

உடும்பூர் என்ற சிற்றூரிலில் வேடனாகிய நாகனுக்கும், தத்தைக்கும் மகனாகப் பிறந்தவன் திண்ணன். திண்ணன் என்பவனே கண்ணப்பன். காட்டு வழியாக செல்லும் போது அழகிய சிவலிங்கம் ஒன்றைக் கண்டான். கோவில் இல்லாது தனியாக இருந்த இறைவன் அவன் மனதை கொள்ளைக் கொண்டது. இறைவனை கவனிக்க ஆளில்லையே என்று வருந்தினான். சுவர்ணமுகி ஆற்றில் இருந்து நீரை வாயில் முகர்ந்தான். வாயில் முகர்ந்த நீரை சிவலிங்கத்தின் மீது ஊற்றினான். காட்டில் இருக்கும் இலைகளை பறித்து தன் தலையில் சொறுகினான். தன் தலையில் சொறுகியவற்றறை சிவலிங்கத்தின் தலையில் வைத்தான். காட்டில் இருந்த பன்றியை வேட்டையாடி தீ மூட்டி வேக வைத்தான். அவை சுவையாக இருக்கிறதா என்று சுவைத்தும் பார்த்தான். பிறகு இலையில் இட்டு இறைவனை சாப்பிடுமாறு கண்ணீர் மல்க வேண்டினான். இது போன்று தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றது.

காளத்தியப்பரை சிவகோசாச்சாரியர் என்ற அந்தணர் பூசை செய்து வந்தார். ஒவ்வொரு நாளும் பூசைக்கு பிறகு மாமிசத் துண்டுகள் இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார். இவ்வாறு யார் செய்வது என்று புரியாமல் குழப்பத்தில் இருந்தார். இறைவன் அந்தணர் கனவில் தோன்றி அவன் செய்வது எனக்குப் பிடித்திருக்கிறது. நாளை நீ மறைந்திருந்து பார்க்குமாறு கூறினார். ஆறாவது நாள் அந்தணர் மரத்தின் அருகில் மறைந்திருந்து பார்த்தார். வழக்கம் போல் கண்ணப்பன் பூசை செய்தார். அப்போது இறைவனின் ஒரு கண்ணில் இருந்து இரத்தம் வடிந்தது. மூலிகைகளை அரைத்து ஊற்றினான்.

இரத்தம் நிற்கவே இல்லை. அவனது காலை தூக்கி கண்ணிற்கு பக்கத்தில் வைத்தான். அம்பால் தன்னுடைய கண்ணைத் தோண்டி இறைவனுக்கு வைத்தான். இரத்தம் வடிவது நின்றது. இன்னொரு கண்ணில் இருந்தும் இரத்தம் வடிந்தது. கவலைப்படவில்லை. இன்னொரு கண்ணைத் தோண்ட முற்பட்டான். இறைவன் நில் கண்ணப்பா என்று கூறி காட்சி கொடுத்தார். இது கண்ணப்ப நாயனாருடைய பக்தியின் உச்சத்தைக் காட்டுகிறது.

நாயனார் வாழ்வில் அறிவியல்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக மருத்துவத் துறையில் பல்வேறு முன்னேற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. ஆனால் நாயன்மார்கள் காலத்திலேயே அறுவை சிகிச்சைமுறை இருந்ததனை கண்ணப்ப நாயனார் வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. சிவனின் கண்ணில் இருந்து இரத்தம் வடிவதை பார்த்த கண்ணப்பன் சற்றும் யோசிக்காமல் தன்னுடைய கண்ணை அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்திலேயே சிவனுக்கு பொருத்தினார்.

இளையான்குடி மாறன் நாயனார்

சோழ நாட்டில் இளையான்குடி என்ற ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் மாறன். செல்வந்தராக இருந்த இவர் சிவனடியாருக்குத் தொண்டு செய்வதையே முதன்மை பணியாக கொண்டிருந்தார். எந்த நேரத்தில் சிவனடியார்கள் வந்தாலும் சிவனாக நினைத்து தொண்டு செய்து வந்தார். அவ்வூரில் உள்ளோர் செல்வந்தராக இருப்பதால் சிவனடியாருக்கு தொண்டு செய்கிறார். இல்லையெனில் செய்யமாட்டார் என்று மாறன் காதில் விழும்படி பேசினார்கள். நீங்கா பற்றோடு இருக்கும் பக்தனை இவ்வாறு ஏளனமாக பேசுபவர் மத்தியில் பக்தியை நிலை நிறுத்த வேண்டும் என்பதால் சிவன் அவரது செல்வம் கொஞ்சம் கொஞ்சமாக குறையச் செய்தார். மாறனின் வாழ்க்கை பசியும் பட்டினியுமாக கழிந்தது. வறுமை ஒருபக்கம் இருந்தாலும் தொண்டு செய்வதை விடவில்லை. வீடுவாசல் அனைத்தையும் இழந்து சிறு குடிலில் வாழ்ந்து வந்தார்.

நள்ளிரவில் இறைவன் சிவனடியார் வடிவில் ஆவணி மாதம் கொட்டும் மழையில் மாறன் இல்லத்திற்கு வந்தார். அவருக்கு மாற்று துணி கொடுத்தார். உணவு சமைக்க என்ன செய்வது என்று இருவரும் திகைத்தனர். காலையில் வயலில் விதைத்த விதைநெல் ஞாபகத்திற்கு வந்தது. கொட்டும் மழையில் தட்டுத்தடுமாறி வயலுக்குச் சென்று விதைநெல்லை கொண்டு வந்தார். வீட்டில் உள்ள இரண்டு கட்டைகளை உருவி அடுப்பை தீ மூட்டி உணவு சமைத்தார். கொல்லைப் புறத்துக்குச் சென்று சிறுகீரையை பறித்து கறி சமைத்தனர்.

சிவனடியார் வடிவில் வந்திருந்த சிவன் உறங்குவது போல் படுத்திருந்தார். ஐயா! எழுந்திருங்கள்! உணவு தயாராகி விட்டது. உண்டபின் உறங்கலாம் என்று எழுப்பினார். அடியவர் வேடத்தில் வந்த இறைவன் எழுந்து நின்றான். சோதி வடிவினன் ஆகினான். அந்த வடிவினைக் கண்ட நாயனாரும் அவரின் மனைவியும் திகைத்தனர்.

> ''செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு'' (குறள் 86)

என்ற குறட்பாவிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர் இளையான்குடி மாறனார் ஆவார். வறுமையில் வாழ்ந்த காலத்திலும் சிவபிரானின் சோதனையில் வெற்றி பெற்ற நாயனாரை சுந்தரர்,

> ''இளையான்குடி மாறன்
> அடியார்க்கும் அடியேன்''

என்று பாடி பரவசப்படுகிறார். எந்தவொரு நிலையிலும் இறைவனை மனமுருகி வணங்கினால் வாழ்வில் நாமும் வெற்றி பெறலாம். இறைவன் மகிமையையும் அனைவரும் உணரலாம். இவ்வாறு மேற்கண்ட நாயன்மார்களின் வழி சைவசமயத்தின் வளர்ச்சியையும் பக்தியின் மாண்பையும் இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது.

79. பழனி தலச்சிறப்பும் - முருகன் வழிபாடும்

த.செயந்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக் கழக கலை
அறிவியல் கல்லூரி
வால்பாறை

முன்னுரை

தமிழகத்தில் உள்ள புகழ் பெற்ற புண்ணிய மிகவும் கோவில்களில் பழனி முருகன் கோவிலும் ஒன்றாகும். நமது நாட்டுப் பண்பாட்டினை பாதுகாக்கும் முக்கிய அரண்களாக ஆலயங்கள் அமைந்துள்ளன. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பழனி முருகனை தரிசித்துச் செல்கின்றனர். இத்தகைய சிறப்புமிக்க முருக பெருமானின் வழிபாட்டு மதிப்புகளையும், சிறப்புகளையும் காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலச்சிறப்பு

மலையடி வாரத்தில் சற்றுமேல் புறத்தில் அமைந்திருக்கும் ஆலயம் திரு ஆவினன்குடி பழனி என்று இக்காலத்தில் புகழுடன் விளங்கும் தலம் இதுவேயாகும். திருஆவினன்குடி, ஆ-காமதேனு, இனை-சூரியன் கு-திருமகள் டி - மலைமகள் ஆகியோர் பூசித்த தலம். மலைக்கோயிலில் போகர் என்னும் சித்தர் சமாதி கொண்டிருக்கிறார். சித்தமருந்துகளைக் கொண்டு அந்தப் போகரால் நவபாசானம் சிலை உருவாக்கப்பட்டது. சித்திரை மாதம் அக்கினி நட்சத்திரத்தன்று போக முனிவர் இவ்விக்கிரகத்தைப் பிரதிகுடை செய்தார் என்பது வரலாறு. மலை மேல் செல்வதற்கு 750க்கும் மேற்பட்ட படிகள் உள்ளன. முருகப்பெருமானின் சந்நதிகளில் இங்குதான் மேற்கு பார்த்த மூர்த்தமாக அனைத்தையும் துறந்த திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர்.

பழனி தலச்சிறப்பு குறித்து அருணகிரிநாதன், கந்தர் கலிவெண்பாவிலும், திருப்புகழ்ப் பாடல்களிலும் கூறியுள்ளார்.

''காசியின் மீறிய பழனாபுரி
பதினாறுலகோர் புகழ் பழனி''

என்று பழனித்தலம் சிறப்பிக்கப்படுகிறது.

தலத்தின் வேறுபெயர்கள்

திருஆவினன்குடி, பழனி, பொதினி, சிவகிரி

திருவிழா

தைப்பூசம், பங்குனி உத்திரம் விசேசமானவை. வைகாசி விசாகத் திருவிழாவும் உண்டு. அக்கினி நட்சத்திர நாட்களில் கிரிவலம் பிரசித்தம். தைப்பூசத்தன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், சிங்கப்பூர், மலேசியா, மொரிசியசு போன்ற வெளிநாடுகளிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அலகு குத்தியும், காவடியெடுத்தல், தேரோட்டம், பாதயாத்திரையாகப் பல லட்சம் பக்தர்கள் வந்து வழிபட்டுப் பேறு பெறுகின்றனர்.

பக்தகோடிகள் அழைப்பது

குன்று என்றாலே குமரன் அமரும் இடம் என்று அறியலாம். வழிபடுகின்ற பக்தர்கள் முருகனை மதிப்பான பெயர்களால், மனம்கிழ அழைக்கின்றனர். மொட்டையாண்டி வடிவேலா, பழனி, முருகா, தென்பழனி வேலவா, சண்முகா, குமரா, தண்டாயுதபாணி இப்பெயர்களை பக்தகோடிகள் கோசமிடுவதால் பழனி முருகன் மேல் உள்ள மதிப்பை அறியமுடிகிறது.

வழிபாடு முறையும் பயனும்

கோவில்கள் அமைதி தவழும் இடமாக இருப்பதால் அனைவரும் மனம் மகிழ கோவிலை நாடிச் செல்வதால், கோவில்களின் மதிப்பு அதிகமாகின்றது. இங்கு முடி எடுக்கும் நேர்த்திக்கடன் பிரசித்தம் பெற்றது. பஞ்சாமிர்தமும் மிகவும் பிரபலமானது. முருகபெருமானுக்குப் பஞ்சாமிர்த அபிசேகம்

செய்து அதனையுண்டால் பிணியும் தீரும். முருகனின் மார்பில் இரவு பூசையில் சார்த்தப்பெற்ற சந்தனம் மிகவும் புனிதமானதாகும். இங்கு வந்து உண்மையுடன் வழிபட்டால் உடற்பிணியும் உள்ளப்பிணியும் நீங்கம் என்பர்.

வழிபட்ட அருளாளர்கள்

போகர் எனும் சித்தர், அருணகிரிநாதன், நக்கீரர், புலிப்பாணிச் சித்தர், நந்தியடிகள், சாது சுவாமிகள் போன்ற மகான்கள் வழிப்பட்டுப் பேறு பெற்றுள்ளனர். மதிப்புகளைத் தரும் மடங்களும் இங்குள்ளன.

தீர்த்தம்

சரவணப் பொய்கை
சண்முகநதி
வையாபுரிக்குளம்

பிள்ளைத் தமிழ்

சங்க இலக்கியங்கள் 96 வகையான சிற்றியலக்கியங்களைக் கொண்டுள்ளது. பிள்ளைத்தமிழ் என்பது இறைவனை குழந்தையாகப் பாவித்துப் பாடுவதாகும். இதனை இயற்றியவர் பழனி சமீன் விசயகிரி வேலச்சின்னோவையன் ஆவார்.

நவபாசணச் சிலை

அருள்மிகு, பழனிமுருகன் உருவத் திருமேனி கல்லால் செய்யப்படவில்லை. மூலிகைகள், நவபாசணத்தால் ஆக்கப்பட்டது. போகர் என்ற சித்தர் 4448 மூலிகைகள் கொண்டு நவபாசணத்தால் ஆன முருகன் சிலை அமைத்திருக்கிறார் (81 நவபாசணம்) இது சக்தி வாய்ந்த சிலையாக இருப்பதால் எல்லா சமுதாய மக்களும் பழனி முருகனை பயபக்தியோடு வழிபாடு நடத்தி கந்தனின் அருளைப் பெற்றுச் செல்லுகின்றனர்.

கொங்கு நாட்டில் முருக வழிபாடு

கொங்கு நாடுகளில் குன்றிலும், மலைகளிலும் முருக வழிபாடு செல்வாக்கும் புகழும் பெற்றுள்ளது.

திருச்செங்கோட்டுமலை அக்காலத்தில் முருகன் கோவிலுக்குப் புகழ் பெற்றிருந்ததை நன்கு அறியலாம்.

"சேரர் கொங்கு வைகவூர் நன்னாடகில்
ஆவினன் குழவாழ்வான் தேவர்கள் பெருமானே"

என்று அருணகிரிநாதர் ஆவினன் குடி முருகனைப் பாடுவதிலிருந்து கொங்கு நாட்டில் முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

முடிவுரை

புராண காலத்தோடு இன்றைய காலம் வரை பல அற்புதங்களையும், நன்மைகளையும் ஆலயங்களை வழிபடுவோர் பெரும் பலன்களையும், பழனி தலச் சிறப்புகளையும் குறித்து அறியமுடிகிறது.

௮0. மாணிக்கவாசகன் என்ற நாயகி

முனைவர் பா.வேலம்மாள்
முதல்வர்
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழக உறுப்பினர் அரசு கல்லூரி
கடையநல்லூர்

முன்னுரை

மாணிக்கவாசகர் மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். மாணிக்கவாசகரின் கல்வி கேள்வி ஒழுக்கம் அறிவு ஆற்றல் ஆகிய சிறப்புக்களைப் பற்றி கேள்விப்பட்ட பாண்டியமன்னன் அவரைத் தன் அமைச்சரில் ஒருவராக நியமித்துக் கொண்டான். மாணிக்கவாசகரின் திறமையை நன்கு அறிந்த பாண்டிய மன்னன் அவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தையும் வழங்கினான்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களைக் கொண்டது. மாணிக்கவாசகர் சொல் அழகு பொருளழகு ஆகிய இரண்டு அழகையும் சேர்த்து பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாக்கும் இடையே உள்ள தொடர்பை நாயகன் நாயகி மனநிலையிலிருந்து பாடியுள்ளார்.

பக்தி இலக்கியத்தில் இறையன்பர்கள் தம்மை நாயகியாகவும் கடவுளை நாயகனாகவும் கொண்டு பாடுவதை ஒரு மரபாகக் கொண்டனர். இறைவன் ஆன்மா என்பவற்றுக்கிடையிலான தெய்வீக உறவு தலைவன் தலைவியர்களுக்கிடையிலான உலகியல் உறவாகப் பாவனை செய்யப்படுதலையே நாயகன் நாயகி பாவம் என்ற தொடர் உணர்த்துகின்றது. மாணிக்கவாசகர் ஒரு பெண்ணாக தன்னை உருமாற்றி சிவனின் அருட்செயல்களைப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பாடியுள்ளார்.

திருவெம்பாவை

மார்கழி மாதத்தில் இளம்பெண்கள் அதிகாலைப்

பொழுதில் எழுந்து அருகிலுள்ள தங்கள் தோழியர்களை எழுப்பிக் கூட்டமாக ஆற்றுக்குச் சென்று நீராடி வந்து இறைவனை வழிபட்டால் இறையருள் பெண்களுக்கு நிரம்பக்கிட்டும் என்ற நோக்கத்தோடு பாடப்பட்டது திருவெம்பாவையாகும். ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதியாகிய சிவபெருமானின் புகழினை காதுகுளிரக் கேட்டுப் பரவசநிலை அடையாமல் படுக்கையின் மீது பற்று கொண்டு கிடக்காமல் சித்தத்தை சிவன்பால் வைத்து உயிரை அவனுக்குரிய தாக்கி, அவனுடைய மெய்யன்பர்களை மணந்து இறைவனின் பாதங்களைப் போற்றி மார்கழி நீராட அருள்புரிந்த இறைவனைப் போற்றுகின்ற தன்மையில்,

போற்றியாம் உய்ய ஆள் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர் சூடு ஏல் ஓர் எம்பாவாய்

என்று திருவெம்பாவையை அமைத்துள்ளார்.

திருவம்மானை

பெண்களுக்கே உரிய விளையாட்டுகளில் ஒன்று அம்மானை பெண்கள் அம்மாவை விளையாடும் போது ஏதாவது ஒன்றைப் பேசிக் கொண்டோ பாடிக் கொண்டோ விளையாடுவது மரபு. சிவன் மேல் மனம் வைத்த மாணிக்கவாசகர் ஞானிகளாலும், முனிவர்களாலும் காணமுடியாத சிவன் தாய் போல வலிய வந்து கல் போன்ற தன் மனதைப் பக்குவப்படுத்தி எனக்காகப் பாண்டிய மன்னனிடம் பிரம்படி வாங்கி என் பந்த பாசத்தை அறுத்த இறைவனே எனத் தோழிகளோடு அம்மானை ஆடிப் புகழ்கின்றார் மாணிக்கவாசகர்.

திருப்பொற் சுண்ணம்

பல்வகை மணப்பொருள்களை உரலில் இட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணம். இது பொன் போன்ற நிறமுடையது. சிறிது பொன்னும் இதில் சேர்க்கப்படுகிறது. இறைவன் திரு மஞ்சனத்துக்காகப் பொற்சுண்ணம்

பயன்படுத்தப்படும். இவ்வாறு பொற்சுண்ணம் இடிப்பது சங்க காலம் முதல் காணப்படுகிறது. நாட்டுப்புறத்தில் இவ்வாறு சுண்ணம் இடித்தல் பிள்ளைப்பாட்டு, உரல் பாட்டு, உலக்கைப் பாட்டு, அவலிடி போன்ற பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது. தலைவன் குளிப்பதற்கு வேண்டிய மணப்பொடியினைத் தலைவி தன் தோழியருடன் சேர்ந்து தலைவன் புகழ்பாடிக் குத்துதல் உண்டு. அதனைப் போற்ற மாணிக்கவாசக தலைவியும் தன் தலைவனான சிவன் பெருமையினைப் பொற்சுண்ணம் இடித்துப் பாடுகின்றார். அழகு பொருந்திய திருவையாறு கடவுளுக்கு நயமான கதம்பப் பொடி இடித்து, இடிக்கப்படும் இடத்தினை மெழுகி, நவதானியங்களைப் பரப்பி, தீபம் ஏற்றி, உலக்கைகளுக்கு மணிவடம் கட்டி, உரலுக்குப் பட்டாடை சுற்றி,

> ''ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
> ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் தாமே''

என்று வேதம், வேள்வி, மெய், பொய், சோதி, இருள், துன்பம் இன்பம், சக்தி, சிவசக்தி ஆகிய இத்தனையும் இருக்கும் சிவனைப் பற்றி நாத்தழும்பேற வாழ்த்தி, நாமங்கள் பாடிப்பாடி ஆடுவோம் என்கிறார்.

திருக்கோத்தும்பி

வண்டு வகைகளுள் மிகப்பெரியதாய் இருப்பது கோத்தும்பி. இது அரச வண்டு எனவும் அழைக்கப்படுகிறது. இத்தகைய தும்பிகள் தெருக்களில் இசைபாடிக் கொண்டு பறந்து போகும் போது, தலைவி தன் தலைவனுக்கு கோத்தும்பியைத் தூதுவிடுவாள். மாணிக்கவாசகர் ஒரு பெண்ணாய் மாறி கோத்தும்பியைத் தனக்காகச் சிவனிடம் தூதனுப்புகின்றார். பிரம்மனும், இந்திரனும், பிற தேவர்களும், தெய்வங்களும் அறிந்து கொள்ள முடியாதவனும் பிரம்மனின் தலையோட்டில் பிச்சை ஏற்பவனும், கண்ணப்பன் போன்ற அன்பில்லாத என்னையும் ஆட்கொண்டவனும், ஞான வடிவாகியவனும், சீர்மையில் பெரியவனும், மரணம், பிறப்பற்றவனும், தாயினும் கருணை கொண்டவனும், என்னைப் புறக்கணிக்காதவனும்,

''நாய் மேல் தவிசு இட்டு நன்றாய்ப் பொருட்படுத்தத்
தீ மேனியானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பி''

என்று கோத்தும்பியை இறைவன் புகழ்பாட ரீங்காரம் செய்யச் சொல்கிறார்.

திருத்தெள்ளேணம்

தெள்ளேணம் என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று விளையாடும் போது தெள்ளேணம் கொட்டாமோ என்று விண்ணபிப்பது போல மாணிக்கவாசகர் அமைத்துள்ளார். நாமம் உருவம் இல்லாத சிவனின் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி, பிறவிவேரறுத்தவனும், திருமாலும் பிரமனும் காணமுடியாதவனும், மாயையை அழிப்பவனும், மானுடவடிவெடுத்து மண்ணுலகுக்கு வந்தவனும், ஆடும் பாம்பைக் கச்சையாகக் கட்டியவனும், உலகத் துன்பங்களின்றும், காத்தவனும் ஆகிய சிவன் எனக்கருள் புரிந்தான். எனவே,

''குலம்பாடிக் கொக்கு இறகும்பாடிக்கோல் வளையாள்
நலம் பாடிநஞ்சு உண்டவாபாடி நாள்தோறும்
அலம்பு சூர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு ஆடல்பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ''
20

தெள்ளேணம் கொட்டி சிவன்புகழ் பாடுக என்கிறார்.

திருச்சாழல்

சாழல் என்பதும் ஒரு வகை மகளிர் விளையாட்டு இதனை வரிக்கூத்து வகைகளில் ஒன்று என்பர். இதில் தடையும் தனக்கு ஏற்ற விடையும் பாடுவது மரபு. மாணிக்கவாசகர் திருச்சாழரை தடைவிடை முறையில் அமைத்துள்ளார். முதல் இரண்டு வரியில் சிவன் பெருமைக் கூறும் முகமாகக் கேள்வியும், இறுதிச் சீரில் ஏடி என்றும் மூன்றாவது நான்காவதடி சிவன் பெருமை பேசி சாழலோ என்று முடிகிறது.

''மலைமகளை ஒரு பாகம் வைத்தலுமே மற்று ஒருத்தி
சலம் முகத்தால் அவன் சடையில் பாயும் அது என் ஏடி

சலம்முகத்தால் அவன் சடையில் பாய்த்திலனேல்
(தரணி எல்லாம்)
பல முகத்தே புகப்பாய்ந்து பெரும் கேடு ஆம் விழலோ''

என்று இறைவன் பெருமையினை சாழல் முறையில் பாடியுள்ளார்.

திருப்பூவல்லி

நீராடித் திரும்பும் போது பெண்கள் பூஞ்சோலைகளுக்குச் சென்று தங்களுக்கு தேவையான பூக்களைப் பறிக்கும் போது தங்கள் தலைவன் புகழ் பாடி பறிப்பதைப் போல மாணிக்கவாசகரும் இறைவனாகிய சிவபெருமானின் புகழைப்பாடி தோழியருடன் பூப்பறிக்கின்றார்.

''தேன் ஆடுகொன்றை சடைக்கு அணிந்த சிவபெருமான்
ஊன் நாடி நாடி வந்து உள்புகுந்தான் உலகர்முன்னே
நான் நாடி ஆடி நின்று ஓலம் இட நடம்பயிலும்
வான் நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ''

அன்று தெய்வத் தன்மை வாய்ந்த குதிரைத் தலைவனாக மதுரையில் தெய்வ எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட சிவனின் திருவடிப் பெருமைகளைப் போற்றி தோழிகளே நாம் பூப்பறித்து மகிழ்வோம் என்கிறார்.

திருவுந்தியார்

உந்திபறந்தல் என்பது மகளிர்க்கே உரிய ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டில் மகளிர் குறித்துப் பாடி விளையாடுவர். இந்தக் காலத்தில் விளையாடும் கயிற்றினைச் சுற்றி குதித்து விளையாடும் விளையாட்டைப் போன்றது. சிவன் அருள் என்னும் அருள் என்னும் ஞானவெளிச்சம் பெற பெண்ணே நீ உந்தி பறந்து விளையாடு என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

திருத்தோணோக்கம்

தோள் நோக்கம் என்பதும் ஒருவித மகளிர் விளையாட்டு, மகளிர் ஒருவர் தோளை ஒருவர் அன்போடு நோக்கித்

தொட்டுந்தட்டியும், அகமகிழ்ந்தும் ஆடும் விளையாட்டு,

விருப்பு உற்று வேடனார் சேடு
அறிய மெய் குளிர்ந்து அங்கு
அருள் பெற்று நின்றவா
தோள்நோக்கம் ஆடாமோ

என்று பதினான்குப் பாடல்களில் மாணிக்கவாசகர் சிவன் பெருமைகளை ஒரு பெண்ணாக தோழியருடன் மகிழ்ந்து விளையாடி எடுத்துரைக்கின்றார்.

திருப்பொன்னூசல்

பெண்கள் சோலைகளில் ஒன்று சேர்ந்து விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று பொன்னூசல்

''கொங்கு உலவு கொன்றைச்
சடையான் குணம் பரவிப்
பொங்கு உலவு பூண் முலையீர்
பொன் ஊசல் ஆடாமோ''

என்று மாணிக்கவாசகரும் தோழியருடன் ஊஞ்சல் விளையாடிக் கொண்டே சிவனின் அருள்செயல்களை ஒன்பது பாடல்களில் பாடுகின்றார்.

பக்தியிலே சிறந்த பக்தி மதுர பக்தி என்பார் விவேகானந்தர். மதுர பக்தி, தலைவன் மேல் தலைவிக்கான பக்தி, அழிவில்லாத, ஆழமான, அன்பான பக்தி, மதுர பக்தியிலே தன்னை இணைத்துத் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து பெண்களுக்கான மனநிலையினின்றும், அவர்கள் விளையாடும் விளையாட்டுகள் மூலமும் தன்னை ஆட்கொண்ட சிவனின் பெருமைகளையும், அருட் செயல்களையும் மாணிக்கவாசகர் வெளியிட்டார். எந்நிலையிலும் இறைவனை நினைக்க வேண்டும் இறைவன் திருநாமத்தைச் சொல்ல வேண்டும். பெண்களின் கூட்டு வழிப்பாட்டால் ஒற்றுமை நிலவும் என்ற உண்மையினைக் காட்டுகிறார்.

81. சிவந்தி ஆதித்தனாரின் திருக்கோயில் திருப்பணிகள்

முனைவர் அ.மரியசெசிலி
முதல்வர்
டாக்டர் சிவந்தி ஆதித்தனார்
ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
திருச்செந்தூர்

முன்னுரை

''சிவந்தி ஆதித்தர் என்னும்
சீர்கொண்ட மன்னர் ஏறே
உவந்து நீ செய்த கோயில் திருப்பணி
உன்பேர் சொல்லும்''

பேராசிரியர் பூ.சொல்விளங்கும் பேராசிரியர்

சின்னையயா சிவந்த ஆதித்தனாரின் திருப்பணிக்கெல்லாம் இமயமாக அமைந்ததே தென்காசி விசுவநாதர் கோவில். இக்கோயிலின் சிறப்பம்சங்களையும் சிவந்தி ஆதித்தனாரின் திருக்கோயிலின் திருப்பணிகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னொரு காலத்தில் செண்பகப் பொழிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த பராக்கிரம பாண்டிய மன்னனின் கனவில் சிவபெருமான் தோன்றி பாண்டியர்களின் முன்னோர்கள் வழிபட்ட லிங்கம் செண்பக வனத்தில் உள்ளதாகவும் கோட்டையிலிருந்து ஊர்ந்து செல்லும் எறும்புகளைத் தொடர்ந்து சென்றால் அங்கு ஒரு லிங்கத்தைக் காணலாம் என்று அதற்குக் கோயில் கட்டுமாறும் கூறினார்.

அதன் காரணம் என்னவெனில் தெற்கிலுள்ள சிவ பக்தர்கள் வடக்கிலுள்ள காசிக்கு பாதயாத்திரை செல்லும் போது காசியை வந்தடையும் முன்னரே இறந்து விடுகின்றனர். அதனால் அவர்கள் என் அருள் பெற தெற்கில் தென்காசி கோபுரத்தைக் கட்டு என்று ஆணையிட்டதே ஆகும். அதனை ஏற்று பராக்கிராம

பாண்டிய மன்னனால் தன் முன்னோர் வழிபட்ட லிங்கத்துக்கு கட்டப்பட்டது தான் தென்காசி கோபுரம். இந்த கோயிலின் பெயராலேயே அந்த ஊரும் தென்காசி என்று அழைக்கப்பெற்றது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலிருந்து வரும் காற்று கோவில் இராசகோபுரத்தின் நுழைவாயில் வழியாக உள்ளே வருவது இக்கோயில் கட்டிடக்கலையின் முக்கிய அம்சமாகும். இது போன்ற அமைப்பு எந்த கோயிலிலும் இல்லாத ஒரு சிறப்பம்சமாகும்.

இத்திருத்தலத்தில் உள்ள கோயில் 1429 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி 1446-ல் முடிக்கப்பட்டது. அதன் பிறகு 9 நிலைக்கொண்ட இராசகோபுரத்தை மன்னன் பராக்கிரம பாண்டியன் கட்ட விரும்பி 1456 ஆம் ஆண்டு அந்தப் பணியைத் தொடங்கினார். சுமார் 50 ஆண்டுகள் தொடர்ந்து இந்தப் பணி 1505 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. இருப்பினும் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தீக்கோளினால் சிதைந்து கல்காரத்திற்கு மேலுள்ள கோபுரம் இரண்டாகப் பிளந்து விட்டது. சிதைந்து பரிதாபமாக காட்சியளித்த பராக்கிர பாண்டியனின் கோபுரத்தை கட்டவும் கோவில் திருப்பணிகள் செய்யவும் மிகுந்த பொருளுடைய மேன்மக்கள் பலர் காலங்காலமாக முனைந்தனர். இருப்பினும் அந்த முயற்சி ஈடேறவில்லை. கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியன் குடமுழுக்கு விழா நடத்திய போது கீழ்க்கண்ட பாடலைப் பாடி அதனை கல்வெட்டாக அங்கே பதித்துள்ளார்.

தெய்வத் திருவாளர் சிவந்தி ஆதித்தனார்

பல முயற்சிகளுக்கு பிறகு 1981 ஆம் ஆண்டு இராசகோபுரத்தை கட்ட அன்றைய முதலமைச்சர் எம்.சி.ஆர் தலைமையில் அமைந்த தமிழக அரசு முயற்சி எடுத்தது. எம்.சி.ஆர்-ன் ஆலோசனையின் பெயரில் அந்தப் பொறுப்பு சின்னைய்யா டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரிடம் ஒப்புடைக்கப்பட்டது. கோயிலின் திருப்பணிக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் பா.சிவந்தி

ஆதித்தனார் அவர்கள் கோபுரம் கட்டிட கால்கோள் விழாவினை 2-2-1983 அன்று தொடங்கி வைத்தார்.

கோபுரப் பணியின் தொடக்கவிழா 28-11-1984ல் அன்றைய அறநிலையத்துறை ஆணையாளர் ஆவுடையாப்பிள்ளை தலைமையில் நடந்தது. திருப்பணிக்குழுத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் வானளாவிய இக்கோபுரத்தை கட்டி முடிப்போம் என்று சூளுரைத்தார்கள். இராசகோபுரத்தின் முதல் நிலை கட்டுமானத்திற்கு ஆகும் செலவினை திருப்பணிக்குழுத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் ஏற்றுக் கொண்டார். அடி அமைத்து கொடுத்தவரே முடியினையும் முடிக்க வேண்டும் என்ற தத்துவத்திற்கு ஏற்ப திருப்பணிக்குழுத் தலைவர் மருத்துவர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களே 9ஆம் நிலைக்கான செலவுகள் அனைத்தையுமே ஏற்றுக் கொண்டார்.

கோபுரத்தின் கொடு முடியில் (உச்சியில்) 11 செப்புக் கலசங்கள் வைக்கப்பட்டன. ஒவ்வொன்றும் 110 கிலோ எடையுள்ள கலசங்கள். இவற்றின் உயரம் முக்கால் அடி, விட்டம் இரண்டரை அடி. கலசத்திற்கு நடுவே ஒன்பதரை அடி நீளமுள்ள தேக்குத் தண்டுகள். இத்தண்டுகளின் நடுவில் கலசங்கள் ஒவ்வொன்றிலும் வரகு என்ற தானியம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. செப்புக் கலசமும் வரகும் மின்னல் போன்ற இயற்கையின் சீற்றத்திலிருந்து கோபுரத்தை காக்கும் ஆற்றல் உடையவை என்று ஆன்றோர்கள் கூறுவர். இந்த 11 கலசத்திற்கான செலவையும் சின்னய்யா டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரே ஏற்றுக் கொண்டார்.

11 கலசங்களும் கோபுரத்திற்கு முடி சூட்டி நிற்பது போல் பொலிவுடன் காட்சியளிக்கிறது. திருப்பணிகளும், கோபுர கட்டிடப் பணிகளும் நிறைவேறிய பின்னர் 25-06-1990ல் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

பராக்கிரம பாண்டியன் கோபுரம் கட்டி குடமுழுக்கு நடத்தியது ஆனி மாதத்தில் சிவந்தி ஆதித்தனாரும் 1990ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இக்கோவிலுக்கு குடமுழுக்கு

நடத்தினார். அன்று திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் "20ஆம் நூற்றாண்டின் இராசராச சோழன்" என்று பாராட்டி பட்டம் வழங்கினார்.

கவுமார மடத்தின் அதிபதி சுந்தர அடிகள் "திருப்பணி வேந்தன்" என்று சிறப்புப்பட்டம் அளித்தார். மதுரை ஆதீனம் "திருப்பணி மாமணி" என்று பட்டம் வழங்கியது. சங்கராச்சாரியார் "ஆசுதிக சிகாமணி" என்று பட்டம் சூட்டினார். குடமுழுக்கு விழா நடந்த போது, "இரண்டாவது பராக்கிரம பாண்டியன்" என்று பட்டம் அளித்து முடி சூட்டி பக்தர்கள் மகிழ்ந்தார்கள். சி.கே.மூப்பனார் அமைச்சர் கே.பி.கந்தசாமி தனுசுகோடி ஆதித்தன் எம்.பி.பீட்டர் அல்போன்சு சேர்ந்து இந்த பட்டத்தை வழங்கினார்கள். "சிவந்தி ஆதித்தன் மன்னாதி மன்னர்" அவரது பெயர் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்று வாரியார் மனமுருகி வாழ்த்தினார்.

1990-ல் தென்காசியில் கோயில் இராசகோபுரம் கட்டி குடமுழுக்கு நடத்திய டாக்டர் சிவந்தி ஆதித்தனாரே அதற்கு 16 ஆண்டுகள் கழித்து மீண்டும் தென்காசி கோயில் திருப்பணிகள் செய்து 17.03.2006-ல் குடமுழுக்கு நடத்தினார்.

முடிவுரை

"சிவந்தி ஆதித்தன் தெய்வத் திருவாளன்
தவத்திரு நற்குண நம்பி - உவந்தினிது
தேடித் தருமஞ்செய் செந்தமிழ்க் கோதனை
கோடிக் கொருவரெனக் கூறு
வாழிதென் காசிவளர்க திருக்கோபுரம்
வாழிவிசு வேசர் மணிக்கோயில் - வாழி
சிவந்தி ஆதித்தன் சிவநெறி வாழ
உவந்தினிது வாழி உலகு" - கிருபானந்த வாரியார்

178 அடி உயரமுள்ள 9 நிலை கொண்ட தென்காசி கோவில் இராசகோபுரம் உலகம் உள்ளளவும் என்றென்றும் "இரண்டாம் பராக்கிரம பாண்டியன்" எனப் போற்றப்படும் ஆன்மீக வள்ளல் பத்மசிறி டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் பெயரை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கும் என்பது வெள்ளிடை மலை.

82. பரத நாட்டிய நடராச திருவுருவத் தத்துவம் விளக்கம்

முனைவர் த.ஆனந்திசோதி
முதுநிலை விரிவுரையாளர்
நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

முன்னுரை

நடராசப் பெருமான் திருமேனி கொண்டருளிய அமைப்பு. புராண ஆசிரியர் புதிய கற்பனைப் படைப்பு அன்று. உயிர்களின் மீது வைத்த கருணையால் தாமே அவர் மேற்கொண்டவை. எல்லாவற்றையும் கடந்த சிவம், ''சிவனுரு அருவுமல்லன் சித்தினோடு அசித்துமல்லன். பவமுதல் தொழில்கள் ஒன்றும் பருவானும் அல்லன்'' என்ற நிலையினின்றும், கலந்த நிலையைக் கருதுகின்ற போது சத்தியம் இயற்கையோடு கூறுகிறார்.

அப்போதும் அறிவால் அறியப்பெறும் மந்திர வடிவை முதன் முதலில் தாங்குகிறார். மந்திரங்களின் ஒலி சக்தி, அதன் பொருள் சிவம், ஒலியும் பொருளும் கூடிய சொல் வடிவே சிவத் திருமேனி. ஒலியலைகள் வளைவுகளாகப் பரவுந்தன்மை உடையன. ஒலி வடிவான சிவகாமி சக்தி. மூன்று வளைவுகளுடனும், அவ்வளைவுகளில் இடைவளைவு மிக்கும் கழுத்து வளைவு முழங்கால் வளைவு சிறித்தாயுமிருப்பது ஊன்றியறியத்தக்கது. இவ்வொலி விரைந்து ஒலியும், பொருளும் பிரிக்க முடியாதவையன்றோ. சொல்லும் பொருளும் போலச் சிவ சந்திரன் பிரிக்க முடியாதவை என்று காளிதாசரும் கூறுகின்றார். அத்தகைய கலந்த நிலையிலுள்ள சிவன், கலையால் வளைத்து இருப்பத்தைந்து வடிவங்கள், அறுபத்து நான்கு வடிவங்கள், ஆயிரமாயிரம் ஒன்றே கூத்தன் திருவுருவம்.

முக்கண்

கண் ஒளிப் பொருள். ஒளியின்றிப் பொருளுணர்ச்சி

இல்லை. ஏன்? அறிவுணர்ச்சியும் இல்லை. உணர்ச்சியை ஊட்டவல்ல புறச் சோதிகளாகிய சூரியன், சந்திரன், தீயாகிய முச்சுடர்களை மூன்று கண்களாகக் கொண்டு இறைவன் விசுவரூபனாக விளங்குகின்றான். அன்றியும் இச்சா ஞானக் கரியைகளாக இறைவன் திருக்கண்கள் விளங்குகின்றன என்று காமிகம் கூறுகிறது.

குமின் சிரிப்பு

ஆனந்தக் கூத்தனுடைய திருமேனி அமைப்பில் அவர் முகத் தோற்றமே தனித்த சிறப்புடையது. அதிலும் புன்முறுவலுக்குரிய அழகு மிகமிக உயர்ந்தது. உள்ளதன் மலம் வாட்டி வினை கொடுத்து நிலையளிக்கும் புன்முறுவல் என்றது ஈண்டு நினைவு கூறத்தக்கது. ஆதலால் புன்முறுவல் உயிர்களுடைய இரு வினைகளைக் கெடுப்பது.

சடைமுடி

ஞானியர் அடையாளம் சடைமுடி. எல்லாவற்றையும் முற்ற உணரும் பெருஞானியாக விளங்குபவர் இறைவன். ஆதலால், ஆன்மாக்களுக்கு ஞானம் அருள் வேண்டியச் சடையைத் தரித்திருக்கிறார். பனித்தசடை, செஞ்சடை என்பன திருமுறைகளில் சடையைப் பற்றிய குறிப்புகள், இவற்றில் சடையின் நிறமும் தன்மையும் அறிவிக்கப்படுகின்றன.

பிறை

இறைவன் திருமுழக்கண் உள்ள பொருள்கள் பிறைமதி இறைவனுடைய அளவிலா ஞானத்தை அறிவிப்பது என்று காமிகாமம் கூறுகிறது.

கங்கை

கூப்பிய கரத்தோடு கங்கை கடைக்கண் சிக்கி விளங்குகின்றாள். இது இறைவனுடைய எண்குணங்களுள் அளவிலாற்றலை அறிவிப்பதாகும். கணந்தோறும் பெருகிக் கொண்டேயிருக்கும். கங்கையையும் ஓர் மயிர்க்காலில் கட்டவல்ல கணக்கற்ற ஆற்றலை உணர்த்துதல் காண்க.

ஊமத்த மலர்

இறைவன், திருமுடியில் ஊமத்தம்பூ எருக்கு, அறுகு இவற்றை அணிந்திருக்கின்றார். அங்கு அறிவின் நுணுக்கத்தையும், எருக்கு விளக்கத்தையும், ஊமத்தம்பூ விருப்பு வெறுப்பற்ற தன்மையையும், கபாலம் என்றும் மங்கள் சொருபி என்பதையும் குறிப்பன.

திருவெண்ணீறு

திருநீறு சாணத்திலிருந்து ஆக்கப்படுவது சாணம் கரிதாய், சார்பால் கெடுக்கும் தன்மையாய் இருப்பது. அதனை தீயால் சுழன் குற்றங்கள் அனைத்தும் நீங்கித் தூய வெண்ணீறு ஆகிறது. அது போல் ஆன்மாக்களும் தம் தன்மை கெடின். தூய பொருளாக விளங்கும் நிலையை அறிவிக்கிறது.

திருச்செவி

இறைவனுடைய திருச்செவிகள் பரநாதம் பரவும் பராகாச வடிவானவை. பரகாசம் எங்கும் பரவிய பிரணவ வடிவு. ஆதலால் உடுக்கையை ஒலித்து, அப்பரநாத ஒலியை வலச் செவியில் ஏற்று, ஒலி உலகை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறார். ஆகவே, இறைவன் திருச்செவிகள் பராகாச வடிவானவை.

தோடும் குழையும்

வலக்காதின் குழையும், இடக்காதில் தோடும் அணிந்திருக்கிறார். அதன் குறிப்பு ஆணொடு பெண்ணாய் அமைந்த கூத்த தன்னுரு என்பதையும் வையகம் முழுவதும் தன் வடிவு எனப்படுமே என்பதையும் உணர்த்தும் திருக்குறிப்பாம்.

நீலகண்டம்

இது இறைவனுடைய அருளாற்றலை விளக்குவது என்ற குறிப்பை

''கோலால மாகிக குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலேல் அன்றயன்மால்

உள்ளிட்ட மேலாய தேவரெல்லாம்
வீடுவர்காண் சாழலோ''

என்று மாணிக்கவாசகர் கூறும் திருச்சாழல் பகுதியில் அறியலாம். அன்றியும் அமரர் சாகும் நஞ்சை உண்டும் தான் சாவாமையால் அவருடைய நித்தியத் தன்மையை விளக்குவதும் ஆம்.

துடி

ஆனந்தக்கூத்தன் திருக்கரங்கள் நான்கினுள் பின்னதாகிய வலக்கரத்தில் துடி இருக்கிறது. இது அவனது படைத்தல் தொழிலை அறிவிப்பது என்று உண்மை விளக்கம் அறிவிக்கிறது.

தீயகல்

இறைவன் இடது கையில் தீயகலை ஏந்தி இருக்கிறார். இது அழிக்கும் செயலை அறிவிப்பது. அரன்அங்கிதனில் அறையில் சங்காரம் எனும் திருமந்திரமும், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் என்னும் உண்மை விளக்கமும் இந்த கருத்தை நன்கு விளக்குவன.

அபயம்

பிறவிச் சூழலில் அகப்பட்டு விருத்தி ஓடி வந்த உயிர்களுள் அளிக்கின்ற கை. இது வலக்கைகளுள் ஒன்று. இதனைத் தோயும் நிதி அமைப்பில் என்று உண்மை விளக்கம் காத்தல் தொழிலை உடையதாக குறிப்பிடப்படுகிறது.

கசஅசுதம்

இறைவனுடைய இடக்கைகளில் ஒன்று குறுக்காகத் தம் முத்திரையோடு தூக்கிய திரவடியைக் குறித்து நீண்டு நிற்கிறது. இதுவே ஆனந்த நடனத்தில் வரதஅசுதமுமாம். இது பரிபாகமுற்ற ஆன்மாக்களை நோக்கி இது தான் நீ அடையக்கூடிய இன்பமயமான இடம் என்று சுட்டும் குறிப்பினது.

பூணூல்

இது இறைவனுடைய திருமார்பில் குறுக்காக உந்திவரை

தொங்குவது. மூலாதாரத்திலிருந்து நாடிக்கு மேலாகக் கிளர்ந்து எழும் குண்டலினியைக் குறிப்பது. திருமந்திரம் "நூலது வேதாந்தம்'' எனக் கூறுவதால் வேதத்தின் முடியாகிய பிரணவ காயத்திரியைக் குறிப்பதுவும் ஆகும்.

கோவணம்

உலகிலுள்ள அறுபத்த நான்கு என்று அறிவிக்கப்படுகின்ற எல்லா வகைக் கலைகளாலும் அறியப்படும் பரஞானக் கலையை நான்கு வேதாங்களாகிற அரைஞானிற் கோத்து அணிந்திருக்கின்றார் என்று மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். ஆகவே, கோவணம் வேதமும் பரஞானமுமாம்.

சிலம்பும் கழலும்

இறைவன் திருவடிகளை அலங்கரிப்பன. இவை இரண்டும் மறைச் சிலம்பு ஆர்ப்ப எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதால் வேதங்களே சிலம்பாக விளங்குகின்றன என்பது அறியப்பெறும். அங்கனமே கள்ள வினை வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரர்கழலும் எனக் கழலைப் பற்றிக் கூறும் போற்றிப்பஃறொடை, நம்முடைய வினைப் படலத்தை வென்று பிறப்பு அறுப்பது கழல் என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

தூக்கிய திருவடி

இது உள் வளைந்து, அடிக்கீழிருக்கும் உயிர்களுக்கும் ஏற்ற முடிபோல விளங்கி முத்தியின் பத்தை அளிப்பது. திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே என்று திருவடியையே நெடுங்கரையாகச் சொல்லுகிறார் பட்டினத்துப் பிள்ளையார்.

ஊன்றிய திருவடி

ஒளி இருளில் தோயாது. அதன் வியாபகத்தை அடக்கி நிற்பது போல் மாயாதீதமாகிய ஊன்றிய திருவடி முயலகனைத் தீண்டியும், தீண்டாத நில ஒளியும் இருளும் ஒன்றினால் இப்படித்தான் இருக்கும் என்பதை காட்டுகின்றது.

முயலகன்

முயலகன் அபசுமாரக் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

அவன் ஆணவமலத்தின் அடையாளம் ஆணவமலம் தலையெடுப்பதனாலேயே உயிர்கள் அணு என்னும் பெயரைத் தாங்கி, வினைக்கீடாக அவதிப்படுகின்றன. அதனை வலியெடுக்க இறைவனாலன்றி ஆன்மாக்களால் முடியவே முடியாது. அதனை அடக்கினால் உயிர்கள் வீடுபெறும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன. ஊன்றிய திருவடியும் அதன் கீழ் விழி பிதுங்கி உடல் நெறியக் கிடக்கும் முயலகனும்.

திருவாசி

ஓங்காரமே நல் திருவாசி நல் திருவாசி என்பது உண்மை விளக்கம். கூத்தப்பெருமான் திரவுருவம் திருவைந் தெழுத்து வடிவு. எனவே பிரணவமாகிய வித்தெழுத்தினின்றி திருவைந்தெழுத்தை ஒலிப்பது கூடாது. அம்மரபினை அறிவிக்க ஓங்காரத்தின் இடையில் திருவைந்தெழுத்து வடிவமாகக் கூத்தப்பெருமான் திருவுருவத்தை தரிசித்தலும், வணங்குதலும், வாழ்த்துதலும் கூடாது என்பது மரபு. திருவாசியின் மேல் விளங்கும் சுடர்கள் இருபத்தொன்று. அவைகள் அத்தனையும் ஒளியின் உருவங்கள். ஒலிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதன. ஆதலால் ஒளியிடையில் காணப்படும் ஒலியிடையில் ஐந்தெழுத்து வடிவாகிய ஆனந்த கூத்தப் பெருமான் விளங்குகின்றார் என்பதை உணர்தல் வேண்டும்.

கபாலமாலை

இருபத்தொன்று பரமகபாலங்கள் இறைவனுடைய கழுத்தில் விளங்குகிற ஆதிவராகத்தின் கொம்பும், அதனோடு கலந்து விளங்குகின்றன. அவை இறைவன் எத்தனையோ பிரமகற்பங்களையும் ஆதிவராக கற்பங்களையும் கடந்து என்றும் நித்தியனாய் விளங்குபவன் என்பதை உணர்த்துகிறது.

பாம்பணி

சடை, மார்பு, வயிறு மணிக்கட்டுக்கள், அரை, கால் இவற்றில் பாம்பும் அணியாக அமைந்திருக்கின்றன. பாம்பு நோன்பிகளுக்கு எடுத்துக்காட்டு. காற்று உணவாக உட்கொண்டு

வேறொன்றையும் உண்ணாமல் ஐந்து பேரறிவும் கண்கள் கொள்ள இருக்கின்ற நிலையில் பாம்பு மிகச்சிறந்தது. அதனால் அதனை அணியாக ஏற்றுப் பெருமான், அன்பர்களுக்கு அளியன் எளியன் என்பதை உணர்த்துகிறார். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை நாகமாகக் காண்பது யோக ஆகமநூல்களின் மரபு. அவற்றை ஒட்டி காமிகம் இறைவன் அணிந்துள்ள நாகசக்தி அனைத்துலகையும் நியமிக்கிறது என்று கூறுகிறது. (காமிகம் - அர்ச்சனாவிதி படலம் 338)

பரதநாட்டிய அறிமுறை தரும் விளக்கம்

கலை, கலாசாரம் என்பன காலத்தைப் பிரதிபலிப்பனவாய் அமைகின்றன. ஒவ்வோர் நாட்டிலும் அவ்வவ் நாட்டு மக்களுக்கு ஏற்ற தனித்துவமான கலைகள் மக்களால் உருவாக்கப்படுகின்றன. அவ்வகையில் பரதக் கலையானது பிரம்மாவினால் கற்பனை செய்யப்பட்டு வடிவம் கொடுக்கப்பட்டது. ஆகவே பரதக்கலை படைத்தல் தெய்வமாகிய பிரமாவுடனும் அழித்தல் கடவுளான சிவபெருமானுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பரத நாட்டியத்தில் அறிமுறை விடயத்தை எடுத்து ஆராய்ந்தோமானல் ஆரம்பத்தில் சுலோகத்தில் த்யானசுலோகம் முதன்மை பெறுகிறது.

பரத நாட்டிய ஆற்றுகையில் செய்முறை வெளிப்படுத்தும் கச்சேரி அமைப்பு முறைகள்

இந்துக்களுக்குரிய பாரம்பரிய சம்பிரதாய நிகழ்வுகளிலும் எந்தவொரு அரங்க நிகழ்வுகள் அல்லது கச்சேரிகள் திருவிழாக் காலங்களிலும் இந்துக்களின் தொன்று தொட்ட மரபாக இறை அருள் வேண்டி அவனது புகழ்பாடியும் மங்களகரமான விளக்குகள் ஏற்றியும் அவ் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பது இந்துக்களின் மரபு. இவ்மரபினை பரத நாட்டிய சம்பிரதாய உருப்படிகளிலும் தனக்கென்று தனித்துவமானதும் மற்றும் ஒழுக்க கட்டமைப்பினை உடையதுமான பரத நாட்டிய உருப்படிகள் அமைவுகின்றன.

83. சைவமும் அது வளர்த்த, வளர்க்க மறந்த தமிழும்

பேரா. புலவர் பூவை சு.செயராமன்
மீனாட்சி இராமசாமி (மெரிட்டு)
கல்வியல் கல்லூரி
சமீன், தத்தனூர்
அரியனூர்

சைவம்

சைவம் என்ற சொல்லே ஆய்விற்கு உரிய சொல்லாகும். தமிழுள் ஐகார முதற் சொற்களும் அதன் இனச் சொற்களும், ஔகார முதற் சொற்களும் அதன் இனச் சொற்களும் மிக அருகியே உள்ளன. இன்று அகர முதலிகள் கூறும் சொற்களுள் பெரும்பாலும் தனித்தமிழின் சொற்களாக விளங்குவன இல்லை. சைவம் என்னும் சொல் சைகார மொழிச் சொற்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சைவம் என்ற சொல்லின் வேர், எது? என்று விளங்கிக் கொள்ளும் தெளிவு அடியேனுக்கு இல்லை; என்றாலும் இன்று சைவம் என்பது கொன்றுண்ணல் இல்லா அற உணவிற்கும்; அசைவம் என்பது கொன்று உண்ணும் ஊன் உணவிற்கும் சொல்லப்படும் சொல்லாக விளங்குகின்றன. கொல்லா நோன்புடையாரை சைவர் என்று சொல்லலாமோ? என்றால்; சிவனே பிள்ளைக் கறி கேட்ட வரலாறு ஒன்றும் இவண் உள்ளது. ஊன் உண்ணும் சைவரும் உண்டு என்பதால் சைவத்திற்கு மேற்கண்ட ஊன் உண்ணார் என்று கொள்ள முடியவில்லை என்றபோதும் சைவம் என்பது சிவனைத் தொழும் சமயம் என்று கொள்ளுதல் நலம்.

சைவத்தின் பிரிவுகள்

சைவத்துள் பல பிரிவுகள் கூறப்படுகின்றன. ஊர்த்துவ சைவம்; அநாதி சைவம்; ஆதிசைவம்; மகா சைவம்; பேத சைவம்; அபேத சைவம்; அந்தர சைவம்; குண சைவம்; நிர்க்குண சைவம்; அத்துவா சைவம்; யோக சைவம்; ஞான சைவம்; அணு சைவம்; கிரியா சைவம்; நாலுபாத சைவம்; வீர சைவம்; சுத்த சைவம்; காளாமுகச் சைவம்; காபாலச் சைவம்; சுத்தாவித்த சித்தாந்த சைவம் எனச் சைவசமயம் பலவகையானப் பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. இன்று மக்கள் நடுவே சித்தாந்த சைவமும், வீர

சைவமும் நின்று நிலவுகின்றன. அவற்றுள் வீர சைவம் கன்னடிய தாயகம் கொண்டு விளங்குவதால் சித்தாந்த சைவமே சைவ சித்தாந்த தமிழ்ச் சமயமாக விளங்குகிறது எனலாம்.

சைவம் வளர்த்த தமிழ்

பன்மதத் தாக்கத்தால் தமிழுக்கு உரிய கலைகள் பாழ்பட்டன. ஆடல் கூத்தன் முன்பு ஆடவும், பாடவும் அஞ்சினர். கூத்து ஒழிந்தது. பாட்டிசை பாழானது. அறம் மட்டுமே வாழத்தக்கது என்று இயல் தமிழ் போற்றப்பட்டு; இசையும் கூத்தும் புறவழிப்படுத்தும் என்று சில மதங்கள் தவிர்த்தன. ஆளுகை காரணமாக 'மன்னர் வழி மக்கள் அவ்வழி' என்று தமிழிசையும் கூத்தும் முடங்கின. அதுபோழ்து சைவத்துள் சமயக்குரவரும், வைணவத்துள் ஆழ்வாரும்; இசைக்கும், ஆட்டமாம் கூத்திற்கும், புத்துயிர் அளித்தனர். பாட்டும் பொருளுமாய் இருந்த இறைவனை கூத்தாட்டில் மகிழ்ந்த சிவனை ; பாடி ஆடி களித்து மகிழ்ந்தனர். இயலோடு நின்ற தமிழ், இசையும் கூத்தும் கொண்டு முத்தமிழாய் விளங்கிற்று. இதற்குச் சைவ வைணவப் பெரியோர் பாடுபட்டனர் என்பது மிகையில்லை.

சைவத்தால் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலான அரும் களஞ்சியங்கள் நமக்குக் கிடைக்கப்பெற்றன. இறைவனின் திருவிளையாடலும், திருத்தொண்டரின் வரலாறுகளும் கிடைக்கப் பெற்றமையால் கூத்தும் உயர்வைப் பெற்றன. அம்மானை, அந்தாதி, பாவை, கோவை, கலம்பகம், ஊசல், திருபள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ் போன்றவற்றால் தமிழில் சிற்றிலக்கியங்கள் விரிவடைந்தன.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நிலைபோல் பல்வேறு சைவத் திருமடங்கள் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கப் பாடுபட்டன. தேவாரம் ஓதுபயிற்சிப் பள்ளிகள் பலவும் திருமடங்களால் தோற்றப்பெற்றன. ஆலயங்கள் தோறும் தேவார ஓதுவார் அமைத்து சைவத் தமிழை நன்கு வளர்த்தனர். ஆம் சைவத் திருநெறியால் தமிழிசை பெருக்கம் கொண்டது எனலாம். சித்தாந்த நூல்கள் பதிப்பிக்கப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டன.

இயல் ஒன்றே அறநெறி என்று வலிமை காட்டிய வன்னெறிச் சமயங்களில் வேறுபட்டு; இசையோடு ஆடிமகிழ் பண்முறையைச் சைவம் தமிழுக்குத் தந்து முத்தமிழையும் காத்தது

எனலாம். அவை சைவத்தால் தமிழ் பெற்ற வளர்ச்சி எனலாம்.

சைவம் வளர்க்க மறந்த தமிழ்

சைவத் திருக்கோயில்கள், வைணவத் திருக்கோயில்களை விட தமிழை மறந்தே உள்ளன. ஆழ்வாரின் பாடல் பாடாமல் அவர்தம் வழிபாடு இல்லை என்றே கூறலாம். ஆனால் சைவத் திருக்கோயில்களில் தமிழ் ஒலிப்பது ஊறுகாயைப் போலக் கூட இல்லை என்றே கூறுதல் வேண்டும். ஆகமப் பெயரால் அருந்தமிழ் நெறிகள் விலக்கப்படுகின்றன. தமிழினினும் ஆரியமே ஆட்சி செய்கிறது. சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக என்ற திருமடங்களும் தமிழை முதன்மைப்படுத்தத் தவறிவிட்டன. தமிழை முதன்மைப் படுத்தும் திருமடங்கள் முதன்மைப் படுத்தப்படுவதில்லை.

ஊர்களின் பேர்தான் மாறின என்றால் திருக்கோயில் திருப்பெயர்களும் மாறக் காரணமாக இருந்து விட்டன. ஈச்சரம் என்னும் சைவத்திருக்கோயில்கள் ஈசு(சு)வரம் ஆயின. பழமலை நாதர் விருத்தகிரி ஆனார். ஐயாறப்பன் பஞ்சநதீச்சுவரன் ஆனான். குடங்கள் கலசங்கள் ஆயின ; தூண்கள் தூபிகள் ஆயின ; திருச்சுற்று பிரகாரம் ஆனது; திருக்கோட்டம் கோசு(ஷ்)டம் ஆனது. நன்னீர் தீர்த்தம் ஆனது; கோயில் மரம் தலவிருச்சம் ஆனது. என்ன காரணங்களால் இவற்றைச் சிவனியச் சால்பினர் ஏற்றுக் கொண்டனர்.

கருவறையில் ஒலித்த தமிழ் இன்று வடவையில் வாய்கூசாது உள்ளது. இறைவனும் இறைவியும் காது குளிறக் கேட்ட தேவாரத் திருவாசகத் தமிழ்; புறவெளியில் தள்ளப்பட்டு இறைகாதுகளுக்கு எட்டாமல் உள்ளன. வீர அறத்தமிழர் விழைந்து தன்னுழைப்பால் கட்டியத் திருக்கோயில்கள் ஒரு கல்லும் எடுத்தளிக்காத இனத்தார் கையில் சிக்கி சிதைந்து, வரலாறு அழிந்து வருகின்றன. அற மன்றங்கள் கூட ஆகமம் என்ற மாயையில் அகப்பட்டுக் கிடக்கின்றன.

பிறரின் ஆகமம் தேடியிருந்தால் இத்தனைக் கோயில்கள் தமிழகத்தில், ஏன் தென்னகத்தில் அமைந்திருக்குமா? ஆகமம் நிறைந்த கோயில்கள் வடக்கே ஆகம அழகுடனாத் திகழ்கின்றன? தமிழர் கலைகளைப் பிறர் கலை என்று சொல்லும் பேதைமையை என்னென்பது? தமிழர்க்கு உரிமையான தனிச்சீர் கற்றளிகளை

அயலற்கு உரிமையாக்கி தமிழர் உரிமையைத் தட்டிப் பறித்தார் யார்? உரியவனை உட்புக விடாது தடுப்பது எது?

நந்தனையும் குயவனையும் வணங்கி, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வாழ்ந்தவனை உட்புக விடாது தடுத்தவர் எவர்? ஈசனை வழிபடும் மக்களை நீசன் எனச் சொல்ல வைத்தது எது? தமிழரின் கோயிற்கு அளவு கோலாய்ப் பிறர்வழி ஆகமத்தை அளவுகோலாய் தந்தவர் எவர்? ஏற்றார் யார்? ஏற்றது எதனால்? கோயிலைக் கட்டிய உடையவனுக்கு இல்லாத உரிமை வந்தேறியானுக்கு வகையாய்த் தந்ததும் எவர்?

தமிழ் தழைக்க விரும்பு சைவக் கோயில்களுக்கு இப்புற நிலை வருமா? தமிழுக்கு எதிராக முடிவெடுக்க இயலுமா? இவை அனைத்தும் சைவத் திருக்கோயிலில் உள்ள ஆகமத்தாக்கம் என்றாலும்; சைவத் திருநூல்களில் கொண்டுள்ள தமிழல்லா நெறிகளைக் கொடுத்து, தமக்குத் தாமாகத் தமிழர் கொடுத்துக் கொள்வாரா? இல்லை இவையும் பிறரைப் போலச் செய்து கற்கும் போலச் செய்யும் மாயையா?

இறை, உயிர், தளை என விளங்கிய சைவத்தின் முடிந்த முடிபில் பதி, பசு, பாசம் புகுத்தியவர் யார்? தளைகளை மலங்கள் ஆக்கி தன்முனைப்பு, பழவினை, மயக்கத்தை மாற்றி, ஆணவம், கன்மம், மாயை ஆக்கியவர் யாவர்? அருட்பேர் ஒளியை, ஒளி ஒலி வேறுபட்டால் ஒழியுறாமல் சுடர் என்று சொல்லவேண்டி ஒள்றைச் சோதி என்று சொல்லியது எதனால்? சோதி என்ற எழுத்தொடு புணர்ந்த வடசொல்லை (சோதி என்று) மாற்றி மேலும் உரைத்தது எதனால்? தமிழை வளர்க்க வேண்டிய சமயம் சகலர் விஞ்ஞானகலர் என்று மக்களைப் பிரித்தது எதனால்? ஒப்பில்லா ஒருவனை-சிவனை - ஏகன், அனேகன் என்று அழைப்பது தமிழ்வழியோ? தொடக்கத்தை நிறைவை ஆதி அந்தம் என்று சாற்றுவது தமிழ்ச் சமயத்திற்கு முறையோ? தொல்காப்பியரின்

வடசொற் கிளவி வடவெழுத் தொல்இ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்ற தமிழ் அறம்-தமிழ்ச் சட்டம்-கடைப்பிடிக்கப்படாமை எதனாலோ? அருள்மிகு என்று மீட்கப்பட்ட தெய்வ அடைமொழிகள் சீ(சிறி)என்று மீட்டுக் கொணரப்பட்டு ஏற்கப்பட்டது எவரால்? தமிழ்த் தெய்வம் இந்திரனுக்கு உடற்புண்

கதை கட்டியதை ஏற்றது எதனால்? இவ்வேற்பா தமிழ்ச்சமயம்?

தமிழரின் வெற்றியின் தலைவி கொற்றவை ; அவளை துர்க்கை ஆக்கியான் யாவன்? நற்கையாளைத் துர்க்கை ஆக்கியர் பின்னே சமயத்தைக் கொண்டு செல்லல் சரியா? சைவத் திருக்கோயிலில் விளங்கும் கொற்றவைக்கே இக்கதி என்றால் பிறர்க்கு என்ன ஆகும் என்பதை விளங்கிக் கொள்ளாமை நலம் தருமா? தமிழின் முருகன் அழகனுக்குப் பன்னூறு பெயர்கள் தமிழில் இருந்தும் சுப்பிரமணியன் என்று அழைக்கப்படுவது எதனால்? அவன் திருக்கோயில் சுப்பிரமணியர் தேவ(ஸ்)த்தானம் என்று அழைக்கப்படுவதும் எற்றுக்கு?

கல்லால் நிழற்கீழ் விளங்கிடும் தென்முகக் கடவுளைத் தெட்சனாமூர்த்தி என்று செப்புவதும் தமிழாறோ? குடநீராட்டு கும்பாபிசேகமென்றும்; எண்ம மருந்தை அட்டபந்தனம் என்றும், வேள்வியை யாகமென்றும் தமிழை மாற்றி உரைத்துவிட்டால், மாற்று மொழி இறைமொழியோ? தமிழுக்கு ஆற்றலில்லை என்றால், தமிழ்ச் சங்கம் இருந்து தமிழ் ஆய்ந்த இறைவனுக்கும் இங்கு ஆற்றல் இருக்க இயலுமா? தமிழில் கூறிய உள்ளங் கவர் கள்வன் (திருஞானசம்பந்தர்) பித்தா (சுந்தரர்) எனக் கூறிய முரண் மொழிகளே ; இறைவன் தான் விரும்பிக் கேட்கும் மொழியாகத் தமிழ் இருக்கும் போது; தமிழிலே கூறாமை சைவத்திற்கு அழகாமோ?

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்னும் வள்ளுவர் வாய்மொழி மறந்ததால் தான் இந்த இழிநிலைகள் வந்தன போலும். தமிழ் வளர்த்த சைவம் இன்று தமிழ் வளர்க்க மறந்துள்ளது என்பது உளதாம் மெய்களுள் உளமெய்யே அயல்மை நம்பி அன்னையைப் பழிக்கும் செயல்; கயமைச் செயலுக்கு ஒப்பாகும். தாயினும் சாலப்பரியும் இறைசிவனை வணங்கும் தனிச்சீர் சமயம் திருமூலரின்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யும் ஆறே

என்னும் பொன்மொழி உணர்ந்து போற்றும் நிலை ஒவ்வொரு சிவனிய சைவ சமயத்தார்க்கும் வேண்டும். தமிழைப் போற்றிய சைவம், தமிழைக் காத்த சைவம்; தமிழை என்றும் போற்றிக் காக்க வேண்டுமாய் வேண்டி நிறைக்கின்றேன். வாழ்க வையகம்.